# மனித நேய விழுமியங்கள்

எஸ். ஜெபநேசன்

DIGITIZED

13 SEP 1912

# மானிட

# ஜீவிய சிந்தாமணி

அல்லது

## ஆண்மையின் அழிவும் அதனை யகற்றும் விதமும்.

இஃது

சுதேச வைத்திய ரத்தினம், மகாமக மகாவைபவம்,
கம்பன் கலைமகள், முதலிய பல சிறந்த கிரந்தங்களின்
ஆசிரியரும், "வைத்திய போதினி" பத்திராதிபருமான
டாக்டர், S. சந்திர சேகர் அவர்களால்
இயற்றப்பட்டது.

சென்னை
"கார்டியன்" அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

*Registered copy-Right and Right of Translation Reserved.*

1912

இதன் விலை ரூபா 1-8] [தபால்சார்ஜ் அணா 3.

MADRAS: G. C. LOGANADHAM BROS.
THE GUARDIAN PRESS, MOUNT ROAD.

68927

L.B
N12



**Dr. S. CHANDRA SEKHAR**

MEDICAL PRACTITIONER

EDITOR OF

VAIDHIA BODHINI

*Author of The Swadesa Vythia Ratnam, Komban Kalaimagal, Manida Jeevia Chinthamani, Mahamaha Mahavybhavam, etc., etc.*

AND

**Recipient of GOLD MEDALS**

THE GUARDIAN PRESS MOUNT ROAD, MADRAS

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 18 SEP 1912 ... MADRAS

# நூலாசிரியரின் நூன்முகம்.

அருந்தமிழறிந்த அன்பர்களே !

நம்மிந்து தேசமானது பூர்வ காலத்திலே கல்வி, அறிவு, ஒழுக்கம், மதம், கிருஷி, வாணிபம், கைத்தொழில், வீரம் முதலியவைகளில் மிக மேம்பாடெய்தி இருந்ததுபோலவே, மானிட வாழ்க்கைக்கு இன்றியமையாத ஆயுர்வேதமும் மிகவும் சிறப்படைந்திருந்தது. இந்திய ஆயுர்வேத முறையானது ஔஷதப் பிரயோகம், தந்திரம் இவற்றில் தற்காலத்தார்கூட பிரமிக்கும்படியான அவ்வளவு தேர்ச்சிபெற்றிருந்தது. அப்போது சிறந்த வைத்தியர்களும் ஜீவித்திருந்தனர். இந்தத் திவ்விய வித்தையை அக்காலத்தில், அரேபியர், யூதேயர், கிரேக்கர், எகிப்து, ஜினோவா, வெனிஸ் முதலான தேசத்தார் கற்றுத் தெளிந்ததாகச் சில சரித்திரக்காரர்கள் வரைந்திருப்பது மன்றிச் சாலோமோன் அரசன் முதல் இயேசு கிறிஸ்துநாதர் முதலானவர்களும், இந்து வைத்தியத்தைக் கற்றவரென்றும் ஒரு அமெரிக்க சாஸ்திரி எழுதியிருக்கின்றனர். நம் சென்னை கவர்ணராக விருந்த "ஆம்தில் பிரபு" அவர்கள் 1904-ம் வருஷத்தில் வைத்திய சாலை ஒன்றைத் திறக்க நேர்ந்தபோது "ஆதியில் அரேபியாவிலும், அங்கு நின்று ஐரோப்பா கண்டத்திலும் பரவிய வைத்திய முறை யெல்லாம், பழங்காலத்தில் இந்தியாவினின்று பெற்ற பெருஞ் செல்வங்களே, என்று கூறிய விஷயம் பலருடைய மனதிலும் பதிந்திருக்கலாம். இன்னும் எடின்பர்க்கில் ஏற்பட்டுள்ள யுஷர் சுகாதாரச் சாலையில் 1912-ம் வருஷம் மே மாதம், டாக்டர் ஜான் D. கோமார் அவர்கள் M, A, B, Ge, M, D, F, R, C, P, E பூர்வீகஹிந்து வைத்தியசாஸ்திரத்தைப்பற்றி செய்த உபந்யாசமாவது.

பூர்வீக ஆர்ய வைத்ய சாஸ்திரம் வேதத்திற் கூறியுளது என்றும்

வேத பாராயண காலமாகிய, கி. மு. 1200-ம் வருஷத்தில், மந்திரம், ஜெபம் முதலிய அற்புதச் சக்திப் பிரயோகத்தினால் வியாதிகளைச் சௌக்கியப் படுத்திக்கொண்டிருந்தார்கள் என்றும், அந்த முறை வெகு பிரபலமாக இருந்து வந்ததென்றும், அதன் பிறகு பிராம்மண காலம் ஆரம்பித்து அது கி. பி. 1000-வரையிலும் நடந்து வந்ததென்றும் அந்த கி.பி.1000-தில் தான் ஆரப்ஜாதியார் இந்தியாவின்மீது படையெடுத்து இந்தியாவை ஜெயித்தார்கள் என்றும், கி. மு. ஐந்தாவது நூற்றாண்டில் சுஸ்ருத என்பவர் இரணவைத்திய சாஸ்திர நூலை இயற்றினார் என்றும் அவர் இயற்றிய நூலை அரபிகள் கற்று நிபுணர்கள் ஆயினரென்றும், நானூறு வருஷங்களுக்கு முந்திதான் மேனாட்டார்கள் அரபிகளிடமிருந்து இரணவைத்திய சாஸ்திர நூலைக் கற்றுக்கொண்டார்களென்றும் வியாதியினால் மூக்கு அழுங்கிப்போனால் கன்னத்திலிருந்து சதையையெடுத்து மூக்கு ஸ்தானத்தில் வைத்துத் தைத்து விடும்படியான இரணவைத்திய ஸாமர்த்தியம் அக்காலத்தில் இருந்ததென்றும், தேக உறுப்புகளை வைத்து சிகிச்சை செய்யும் முறையைக் கையாடுவது சாஸ்திர சம்மதம் அல்லவென்று கண்டிப்பாய் விதிகள் ஏற்பட்டு விட்டதினால், அன்றுமுதல் வைத்திய சாஸ்திரமும் இரணவைத்தியமும், இந்தியாவில் குறைவு அடைந்து வந்தனவென்றும், அதன் பிறகு இந்திய வைத்தியர்கள் அதிக சிரமப்பட்டு புதிய மூலிகைகளைக் கண்டுபிடித்து அவைகளைப் பிரயோகஞ் செய்து வந்தார்கள் என்றும், இங்கிலாந்தில் நமக்கு வேண்டிய மூலிகைகள் யாவும் இந்தியாவிலிருந்துதான் வந்துகொண்டிருக்கின்றனவென்றும், அவைகளின் குண இலட்சணங்களை இந்திய வைத்தியர்கள் நன்றாய் அறிவார்களென்றும் கி.மு.327-ல் மகா அலெக்ஸாண்டர் இந்தியாவின்மீது படையெடுத்துச் சென்றபொழுது அவர் தம்முடன் பல மேதாவிகளையும் வைத்தியர்களையும் கூட்டிக்கொண்டு போனாரென்றும் அவர்கள் கிரேக் (Greek) தேசத்துக்குத் திரும்பி வரும்பொழுது பல புதிய பிராணிகளையும் மூலிகைகளையும் கொண்டுவந்தார்களென்றும் மகம்மதியர்கள் இந்தியாவின்மீது படையெடுத்து ஜெயித்து அதை ஆண்டுவந்த பொழுது ஐரோப்பிய, இந்தியவைத்திய சாஸ்திர முறைகள் கலந்து போயினவென்றும்,

# INTRODUCTION.

BY MR. K. S. PATRACHARI, M.A., L.T.
*Lecturer, Presidency College, Madras.*

A good Elementary Medical Treatise in Tamil which will be useful in the hands of people of intelligence who know only to read and write, has long been a desideratiom. An elementary knowledge of anatomy and physiology and the fundamental principles of hygiene will go a great way towards helping the man in the street in the matter of avoiding the contraction of most diseases, or of fighting them when contracted. It is this knowledge which is sought to be supplied by the author in his present work. He has already produced a little compendium in which the chief diseases are simply mentioned and cheap and popular remedies are given. The present book is more ambitious in its aim, purposing as it does, to impart to all an elementary knowledge of the mechanism of the human body, and of the diagnosis and treatment of the most important diseases. As a layman, I cannot presume to give my opinions on the portion relating to diseases, their causes, symptoms and treatment, but from what I have seen of the book, the book seems to supply a long felt want. The exposition is clear, and the book is illustrated with numerous woodcuts. The author seems to have taken great pains to cull out the best from both the western and Ayurvedic systems of medicine, and has presented his matter in a very attractive way. If the book is used by the class of persons for whom it is intended, and what is more important, if it helps, even to the slightest extent, in preventing the contraction of minor ailments which can be possibly avoided but for complete ignorance of the human body and the functions of its various parts, the author will feel amply rewarded for his labours.

*27th June* 1912. K. S. PATRACHARI.

# NOTICE

இதனுல் யாவருக்தும் அறிவிப்பது யாதெனில், 1867-வது வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவிலுள்ள 6-வது விதியின் பிரகாரம் இப் புஸ்தகமானது, பர்மா, இந்தியா முதலிய பிரிட்டிஷ் கவர்மெண்டுகளிலும், புதுச்சேரி, காரைக்கால் முதலிய பிரஞ்சு கவர்மெண்டுகளிலும் காப்பிரைட் ரிஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றது. ஆகையால் இதனுசிரியனுகிய எனது அனுமதியின்றி இதை இதரபாஷைகளில் மொழிபெயர்க்கக் கூடாது. மேலும் இதில் கண்டிருக்கிற ஏதேனும் பாகத்தையாவது, பாகங்களையாவது ஒருவரும் அச்சிடலாகாது. அப்படி அச்சிட்டால் மேற்கண்ட ஆக்டில் சொல்லியிருக்கிறபடி அதனுலுண்டாகும் சர்வ நஷ்டமும் கோர்ட்டின் மூலமாய் வசூல் செய்யப்படும்.

இங்ஙனம்,

டாக்டர். S. சந்திரசேகர்.



இந்துதேச வைத்திய சாஸ்திரம் குறைவடையத் தொடங்கிற்றென்றும், டாக்டர் ஜான் D. கோமரீ சொல்லி முடித்தார்.

இங்ஙனம் மகா மேன்மையுற்றிருந்த ஆயுர்வேதமானது காலகெதியால் நம்நாட்டின் சகல தொழில்களும், சாஸ்திரங்களும் க்ஷீணமடைந்தது போலவே க்ஷீணித்து வருகின்றது. இதன் காரணம், ஆங்கிலேய வைத்திய சாஸ்திரத்தைக் கற்கவும், கற்பிக்கவும் அநேக கலாசாலைகள் ஏற்பட்டிருப்பதுபோல ஆயுர்வேத சாஸ்திரத்தைக் கசடறக் கற்பதற்குரிய கலாசாலைகளில்லாமையே காரணமாகும். நம் ஆதி ஆயுர்வேத முறைகளெல்லாம் பல இருடிகளால் பல பரிபாஷைகளுடன் அநேகம் லட்க்ஷம் செய்யுட்களாகப் பாடப்பட்டிருக்கிறது. ஆயுர்வேத வைத்தியம் மிகவும் க்ஷீணித்து ஆங்கிலேய வைத்திய முறைகள் மிக்க மேம்பாடடைந்து வருவதும் தவிர, தமிழே மணமற்றுப்போகும் இக்காலத்தில் பரிபாஷையையுடைய பாடல்களைப் படித்தறிவதென்ருல் ஊமையன் கண்ட கனவுபோலாகும். கற்றவர்களுக்கு அர்த்தமாகாத பரிபாஷை சங்கேத பதங்களால் கூறியுள்ள ஆயுர்வேத சாஸ்திரத்தினின்று என்னதான் தெரிந்துகொள்ளக்கூடும். ஆகவே நமது நாட்டு வைத்தியர்களுக்கும், வைத்தியரல்லாதவர்களுக்கும், கல்வி கற்ற சிறுவர் சிறுமியர்களுக்கும் பொருள்படக்கூடிய ஸ்பஷ்டமான வசன நடையில் வரையவேண்டியது நிரம்ப அவசிய மென்றெண்ணி நம் நாட்டிலுள்ள ஒப்புயர்வில்லாத அரிய பூண்டுகளையும், வேர்வகைகளையும் உலோக வகைகளையும் ஒவ்வொரு தாதுகளுக்குள்ள குணங்களையும், அவற்றை அவிழ்தங்களாகச் செய்ய வேண்டிய விதத்தையும் ஒருங்கே திரட்டி "சுதேச வைத்திய ரத்தினம்" எனப்பேர் புனைந்த புத்தகமொன்றை அச்சிட்டு 1906-ம் வருஷம் யாம் வெளியிட்டதும், மீண்டும் அதனை 1909-ம் வருஷத்தில் முன்பதிப்பிலில்லாத அநேக அரிய விஷயங்களோடும் இனிய செந்தமிழ் நடையில் மேற்படி புத்தகத்தின் இரண்டாம் பதிப்பை ஹைகோர்ட் வக்கீலும், தேசாபிமானியுமான ஸ்ரீமத், N. K. ராமஸ்வாமி ஐயரவர்களின் முகவுரையுடன் யாம் வெளிப்படுத்தி யிருப்பதும் தமிழுலகமறிந்த விஷயமேயாம். செடி கொடிகள், காய் கனிகள், கடை

மருந்துகள் முதலியவற்றின், குணம் செய்கை உபயோகம் உபயோகிக்கும் விதம் முதலியவைகளைப்பற்றி நாம் விபரமாய் முன்னர்வரைந்து வெளியிட்டிருப்பினும், உடற்கூற்றிலக்கணமும், ரோக உற்பத்தி விபரமும், ரோக லக்ஷணங்களையும், அவற்றின் காரணங்களையும், பால்ய விவாகத்தினு லுண்டாகும், பல கஷ்ட நஷ்டங்களையும், தாதுவின் தத்துவங்களையும், தாதுநஷ்டத்தின் காரணங்களையும், அவற்றைப் பரிகரிக்கும் மார்க்கங்களையும், சிகிச்சை முறைகளையும் யாவரும் இலகுவில் கண்டறியக்கூடிய விதமாய் ஆங்கில பாஷையில் அநேக புத்தகங்களிருப்பதுபோலத் தமிழ்ப்பாஷையிலும் வசன நடையில் ஓர் சிறிய புத்தகம் வரையப்பட்டால் அதனால் தற்காலம் நம் தமிழ் நாட்டில் மிகுதியாக நடைபெற்று வரும் பாலிய விவாகத்தின் பயனாக நம்மிந்திய சிறுவர் சிறுமியர்கள், தேகபலம், மனோபலம், வீரியபலம், ஞானபலம் முதலியன குறைந்து இருபது வயதிற்குள் ஐந்தாறு குழந்தைகளுக்குப் பெற்றோர்களாகி, முப்பது வயதிற்குள் முதுமைப் பருவம் அடைந்து, ஒட்டின கன்னமும், உட்குழிந்த கண்ணும், தேவாங்கைப்போன்ற தேகமுடையவர்களாய், தாதுநஷ்டமடைந்து, போகசக்தி குறைந்து, செப்பவொண்ணாத பல ஆபாஸ ரோகங்களுக்குள்ளாகி அவதிப்படும், பால்ய தம்பதிகள் அவ்வித வியாதிகளுக்குள்ளாகாது தடுத்துக்கொள்ளவும். அவைகளைத் தாங்களே யூகித்தறிந்து சிகிச்சை செய்து, தேக ஆரோக்யமடையவும் மிகவும் அனுகூலமா யிருக்குமென்றெண்ணி "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையினானே" எனப் பவணந்தியார் தமது நன்னூலிற் கூறியுள்ளபடி, மேனாட்டு வைத்திய புத்தகங்களில் காட்டி இருப்பதுபோலப் பல படங்களுடனும், அநேக ஆங்கிலேய கிரந்தங்களிற் கண்டிருக்கிற பல சிறந்த விஷயங்களை ஒருங்கு சேர்த்து இங்கிலீஷ் நூற்களையொப்ப இந்நூலையும் இயற்றியிருக்கிறோம். இப்புத்தகத்தை எழுதுவதற்கு எமக்கனுகூலமாயிருந்த கிரந்தங்கள் அனந்தமாயினும் அவற்றுள் சிலவற்றை மாத்திரம் இங்கு கூறுவாம்.

Cotterelt's The Pocket grey, Gray's Anatomy, Foster's Physiology for Beginners, Starling's Elements of Human

Dedicated

By Kind Permission to

J. JOHN, ESQR.

Gouravilla, Norwood.

In grateful appreciation of his vast and wholly disinterested labours in the Cause of Ayurvedic,

And

As a humble tribute to those Rare qualities of head and heart which have made him highly esteemed.

## WORKS BY THE SAME AUTHOR:

### சுதேசவைத்திய ரத்தினம்

(இரண்டாம் பதிப்பு) விலை ரூபா. **1-0-0.**

---

### கம்பனும் கவிமகளும்

(இரண்டாம் பதிப்பு) விலை ரூபா. **0-4-0.**

விலாசம்,

**டாக்டர்-S. சந்திரசேகர்,**

கும்பகோணம்.



Physiology, Walter's Practitioner's Guide, Forel's Sexual questions, Porter's School Hygiene and the lows of Health, Wilson's new Hygiene, Barrett's Family doctor, The Young Wifes Advice Book, The Household doctor, Black's long life, Moore's family Medicines, The Sexual Science, The Private Counsellor, The Marriage and Parantage, The Perfect Manhood, The Perfect Womanhood, Jockson's Hints on the Reproductive organs, Trall's Home treatment for Sexual abuses, Foot's Private words for men, Foot's Private words for woman, Sturg's Sexual debility in man, What a young man ought to know, Veck's Sexual impotance, Holbrook's Marriage and Parantage, Fowler's Infant feeding, Ponder and Hooper's Materia Medica, Squire's Pharmacopœia, Andrew's Midwifery, conquest's Midwifery, Jellett's Manual of Midwifery, Allchin's Manual of medicines, Marshall's Manual of Prescribing, Husband's Practice of medicines, Newman's Bacteriology and the Public health, Bloch's Sexual life of our times, Corner's Male diseases in general practice. Jockson's diseases of the skin, Power's System of Syphilis, பைஷஜ கல்பம், இங்கிலீஷ் வைத்திய சங்கிரகம், மானிட மர்ம சாஸ்திரம், சந்தான சிந்தாமணி, யுனானி தாதுவிர்த்தி போதினி, வைத்தியசார சங்கிரகம், ஜீவாக்ஷாமிர்தம் முதலிய புத்தகங்களின்றி, சாகம், சுஸ்ருதம் முதலிய ஏட்டுப்பிரதிகளுமாழ்.

– மேற்கண்ட விதேச, சுதேச, வைத்திய கிரந்தங்களை ஆக்கிய நூலாசிரியர்களுக்கும், நமது "வைத்திய போதினி" பத்திரிகைக்கும் நாம் இப்புத்தகத்தை இயற்றுவதற்கும் வேண்டிய உதவிகளைச் செய்து ஆதரித்து வருபவரும் "கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டென் ஹற்றுங்கொல்லோ வுலகு" என்னும்பொய்யாமொழிக்கு ஓரிலக்கியமாக விளங்கு பவரும், கொடைவள்ளலும், கருணைக்கடலும், தாயினுமிக்க

அன்பாளரும், அறப்பயிர் வளர்க்கும் அருமையாளருமான, கைலாச பரம்பரை திருவாவடுதுறை யாதீனம் மகா சன்னிதானம், ஸ்ரீலஸ்ரீ, அம்பலவாண தேசிக பண்டார சன்னதியவர்களுக்கும், யாம் இந்நூலை ஒரு சிறிய கையுரையாக அர்ப்பணஞ்செய்ய அதனை அன்புடன் அங்கீகரித்துக்கொண்டவரும், சத்தியவாசக சாந்த நற்குண சர்வஜன கிருபா பூஷணரும், பொதுநலப்பிரியரும், செந்தமிழபிமானியும், "அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு" என்னும் வசனத்துக்கோர் உதாரணமாக விளங்குபவருமான, இலங்கைத் தீவைச் சேர்ந்த நார்வூட் (Norwood) கோராவில்லா எஸ்டேட் ], ஜான் துரையவர்களுக்கும் நமது மனப்பூர்வமான நன்றி யறிதலைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம்.

ஆயுள்விருத்தி, சந்தானவிருத்தி, தேகபலம், காந்தி, ஊக்கம், மனோனந்தம் முதலியவைகளை விரும்பும் சதிபுருஷர்கள் யாவரும் இதனைச் சற்றும் அலக்ஷியம் செய்யாது, தங்கள் தங்கள் ஜீவனுக்குற்ற துணையென நம்பி ஆதியோடந்தமாக ஆராய்ச்சி செய்து, இந்நூலிற் கண்டிருக்கிறபடி நடந்து அதன்பயனாக போகசக்தியும், சந்தான சித்தியும், திடதேகமும், தீர்க்க ஆயுளுமுள்ளவர்களாய் நீடூழி காலம் வாழ வேண்டுமென்பதே எமது விருப்பம்.

எமக்குண்டாயிருக்கும் கல்வியின் அற்ப கியானமும், வைத்திய சாஸ்திரத்தின் சொற்ப கியானமும் கொண்டு "நெஞ்சை யொழித்தொரு வஞ்சகமில்லை" என்பதுபோல எமது சிற்றறிவிற் கெட்டிய வரையில் இப்புத்தகத்தை லோகோபகாரத்தின் பொருட்டு வரையத் துணிந்ததானது, மின்மினியானது உலகிற்கு ஒளிகொடுக்க எண்ணுதல் போலாம். இந்நூலைக் கண்ணுறும் புத்திமான்கள் இதிற் குற்றங் குறைகள் மலிந்திருப்பினும் குற்றங்களை மறந்து குணங்களைமட்டுங் கைக்கொண்டு, பண்டித ரத்னங்கள் களைப்படுத்த வேண்டுமென்று பன்முறையும் வினயமாய் வேண்டிக்கொள்ளுகிறோம்.

N. R. டிஸ்பேன்சரி,
கும்பகோணம்.


இங்ஙனம்.
டாக்டர், S. சந்திரசேகர்.

மானிட

# ஜீவிய சிந்தாமணி.

கடலாடை சூழ்ந்த காசினியின்கண் உற்பவித்துலவும் சகல ஜீவ சராசரப் பொருள்களிலும், மேலானதாய் மனிதப்பிறவி ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. "அரிதரிது மானிடராதலரிது" எனும் முதுமொழியை எவர்தாமுணரார். இத்தகைய மனுக்குலத்திற்கு அரிய சக்தியாய் விளங்கி அனவரதமும் அற்புதம் நிறைந்த தற்பர வஸ்துவாய் விளங்குவது சுக்கில ஸ்ரோணிதமேயாம். அச்சுக்கில ஸ்ரோணிதத்தின் மாண்பையும், ஆத்ம இல்லமாகிய இம்மானிட சரீரத்தில் ஐக்கப்பட்டிருக்கும், அஸ்தி, அஸ்திபந்தனம், மாமிசம், நாடி, நாளம், நிணநரம்பு, மூளை, முள்ளந்தண்டு, நரம்பு மண்டலம், நாசி, நேத்திரம், செவி, நாக்கு, சருமம், கண்டம், தமரகம், புப்புசம், இருதயம், தொண்டை, அன்னவாகி, அன்னாசயம், சிறுகுடல், பெருங்குடல், யகுர்த கண்டம், பித்தாசயம், கணையம், பீலிகம், குண்டிக்காய், ஜலாசயம், இந்திரியகமலம், கோசம், பீஜம், கருப்பாசயம், நாதாசயம், குய்யம், ஸ்தனம் முதலிய உறுப்புகள் எந்தெந்த ஸ்தானங்களில் எவ்வெவ்விதமாய் எவ்வளவு நிறை பரிமாணங்களோடு சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறதென்பதையும், தேக காங்கை, இரத்தம், இரத்தச்சுழல், பஞ்சேந்திரிய உணர்ச்சி, நாதம், பால், ஆகாரஜீரண முதலியவைகள் எந்தெந்த ஸ்தானங்களிலிருந்து எவ்வெவ்விதமா யுண்டாகின்றனவென்பதையும் நாம் முன்னதாகவே தெரிந்துகொள்ளாவிட்டால், அவைகளைப் பற்றிய ரோகமும் அதற்குப் பரிகாரமும் அவைகளைப் பாதுகாக்குங் கிரமமும், நமக்கு விளங்காதாகையால் அவைகளைப்பற்றிச் சிறிது சங்கிரகமாகக் கூறுவாம்.

## அஸ்திவிவரணம் (THE SKELETON—ஸ்கேலிடன்)




A. The Frontal bone
A. The Protuberances formed by the frontal Sinuses
B. Parietal bone
C. Temporal Bone
D. Superior Maxillary bones
E. The Lower Jaw bone
F. The Seven Vertebræ of the Neck
G. The Vertebral Column
H. The Seven true and five false Ribs
I. The Sacrum
K. The Ilium
L. The Pubis
M. The Ischium
N. The Sternum or Breast bone
O. Clavicula—Collar bone
P. Scapula—Shoulder blade
Q. Humerus or brachum—upper arm bone
R. Radius
S. Ulna
T. Bones of the carpus—wrist bones
V. Bones of the Metacarpus
U. Bones of the fingers
W. Femur—Thigh bone
W. W. The Patella
X. Tibia
Y. Fibula
Z. Bones of the tarsus
A. A. Bones of the Metatarsus
B. B. Bones of the toes
C. C. Os Calcis, or bone of the heel
D. D. Trochanter Major



மானிட சரீரத்திலுள்ள தாதுக்கள் உறுப்புகள் முதலியவற்றின் அமைப்பையும் அவற்றின் தொழில்களையும்பற்றி அறிவிக்கிற நூலிற்கு அங்கவிபாகம், அங்காதிபாதம், அங்கசோதனை வித்தை, உடற்கூற்றிலக்கணம், உடற்கூறு தத்துவம், உடற்கூறு சாஸ்திரம், சாரீரம் அல்லது சரீரக் கூறுபாடு என்றும், ஆங்கிலத்தில் அநாடமி (Anatomy) என்றும், மானிட சரீரத்திலிருக்கிற உறுப்புகளின் சுகஸ்திதித் தொழிலைக் குறித்து விவரிக்கிற நூலிற்குச் சாரீர வியாபார சாஸ்திரம், அல்லது பிராணி தர்மகுணவித்தை என்றும், ஆங்கிலத்தில் பிசியாலோஜி (Physiology) என்றும் பெயர். அங்கவுறுப்புகளின் அமைப்பைப்பற்றி அறிவித்த பிறகே அவ்வுறுப்புகளின் சுகஸ்திதிகளையும், அவற்றைப் பேணும் முறைகளைப்பற்றியும் விவரிக்கவேண்டி இருப்பதால் முன்னதாக அங்கவிபாகம் என்னும் சரீரக்கூறுபாடுகளைக் கூறி அதன்பிறகு சாரீர வியாபார சாஸ்திரத்தைச் சாற்றுவோமாக.

நமது சரீரத்தை ஒரு வீட்டுக்குச் சமானமாகச் சொல்லலாம். வீட்டை எப்படித் தூண்களும் உத்திரங்களும் தாங்கிக்கொண்டிருக்கின்றதோ அதுபோலவே நமது சரீரமாகிய வீட்டையும் சுமைதாங்கி போன்ற இரண்டுகால்கள் தாங்கிக்கொண்டிருக்கிறது.

### கால் (LOWER EXTREMITY—லோயர் எக்ஸ்டிரிமிடி)

காலில் ஆறு பிரிவுகளுண்டு, 1. தொடை, 2. முழங்கால், 3. கால், 4. கணுக்கால், 5. பாதம், 6. விரல்கள் ஆகிய இவைகளாம். தொடை எலும்பானது (Femur-பீமர்) சரீரத்திலுள்ள எலும்புகளிலெல்லாம் மிக்க பெரிது. அங்கதிலுள்ள அஸ்திகளுக்கெல்லாம் தொடைஎலும்புகள் பெரிதாயிருப்பதின் காரணம் யாதெனில் முழு அங்கத்தையும் தாங்கி நடப்பதற்குக் கால்கள் உறுதியாயும் கனமுள்ளவையாயும் இருக்கவேண்டுமென்பதேஇவ்விதஅற்புத அமைப்பாம்.தொடையைக் கீழ்காலுடன் சேர்க்கும் முழங்காலில் முழங்கால்சிப்பி(Patella-பெடெல்லா) என்னும் ஓர் எலும்பானது வேறெலும்புகளோடு சேராமல் தனியாய் இருக்கிறது. நளகம் இதுவே குதிரைமுகஎலும்பு (Tibia-டிபிய) இது இரண்டு எலும்புகளாய் இருக்கின்றன.. கணுக்கால் எலும்பு

(Febula-பிபியுலா) இது சன்னமாய் நீண்டிருக்கும், இதன் கீழ் முனை நீண்டு தட்டையாயிருக்கும், இதனைக் கணுக்கால் வெளிமுழி (External Malleolus-எக்ஸ்டர்னல் மாலியோலஸ்) என்று சொல்லப்படும். பாதத்தின் எலும்புகள், ஒவ்வொரு பாதத்திலும் 26 எலும்புகளுண்டு. குதிகாலில் 7-ம், உள்ளங்காலில் 5-ம், கால் விரல்களில் 14-ம், ஆம். பாதத்தினால் நாம் நடக்கவேண்டியிருப்பதால், பளுவைச் சுமப்பதற்கும், நடப்பதற்கும், ஓடுவதற்கும் சுலபமாய் இருக்கவேண்டியதற்காகவே, கெட்டியான ஓர் எலும்பால் செய்திருந்தால் குதிக்கிறபோது வளைந்து கொடாமல் ஒடிந்துபோகுமென்றே மேற்கூறிய 26-சிறிய எலும்புகளைக் கொண்டு உண்மைப் பண்டிதராகிய கடவுள் இவ்வாறு சிருஷ்டித்திருக்கிறார். ஒவ்வொரு காலிலும் மொத்த எலும்புகள் 31-ஆம்.

## கூபகம் (PELVIS—பேல்விஸ்)

கூபகத்தில் 4 எலும்புகளுண்டு. இடுப்பெலும்புகள் 2, திரிகஸ்தான எலும்பு-1, குயில் மூக்கெலும்பு-1 ஆகிய இவைகளாம். கூபகத்திலிருக்கிற குழிக்கு இடைகுழி என்று பேர். அந்த இடைக்குழியில்; மூத்திரப் பையும், மலக்குடலும் ஸ்திரீகளில் கர்ப்பாஸயமும் அடங்கியிருக்கின்றன. இடுப்பெலும்பு (Os innominatam-ஆஸ் இன்னுமிநேடம்) இது சிறு வயதில் 3-துண்டுகளாயிருந்து, பிறகு ஒரே எலும்பாகி விடுகின்றன. ஆகையால் அந்த எலும்பு திரிகஸ்தான எலும்புடன் சேர்ந்திருக்கிற பாகத்திற்கு (Ilium-இலியம்) என்றும், இடுப்பெலும்புக்கடியில் உறுதியாயிருக்கும் பாகத்திற்கு (Ischium-இஸ்கியம்) என்று பேர். நாம் உட்கார்ந்திருக்கும்போது இந்த எலும்பு நமது சரீரத்தைத் தாங்கிக்கொண்டிருக்கும். மர்மஸ்தான எலும்பு (Pubis-பியுபிஸ்)என்றும் பேர். இதில் அல்குல், ஆண்குறி முதலிய அவயவங்கள் ஒட்டிக்கொண்டிருக்கும். மேலே சொல்லியிருக்கும் ஆஸ் இன்னுமிநேடம் என்னும் ஒழுங்கில்லாத எலும்புதான் தொடை எலும்பின் சிகரத்தை உடனுடன் சேர்க்கின்றன. இடைக்குழி (Pelvic Cavity-பேல்விக் காவிடி) இடைக்குழியில் சில வித்தியாஸங்களுண்டு. புருஷர்களில்



எலும்புகள் தளமாயும், உறுதியாயும், ஆழமாயும், குறுகலாயும் இருக்கும். ஸ்திரீகளில் எலும்புகள் இலேசாயும், மிருதுவாயும், அகலமாயும், அதிக ஆழமில்லாமலுமிருக்கும். மருத்துவத்தொழில் செய்வோர் இடைக்குழியின் குறிக்கு அளவுகள் நன்றாய்த் தெரிந்திருக்க வேண்டியது. இதில் இரண்டு குழிகளுண்டு. அதாவது பொய்க்குழி (False Pelvis-பால்ஸ் பேல்விஸ்) என்றும், மற்றொன்று மெய்க்குழி (True Pelvis-ட்ரு பேல்விஸ்) என்றும் பெயர்.

## கை (UPPER EXTREMITY—அப்பர் எக்ஸ்டிரிமிடி)

தோள்பட்டைஎலும்பு (Scapula-ஸ்காபியுலா) இது தோளின் பின்புறமாய் இருக்கின்றது, கை நான்கு பிரிவுகளுள்ளது. அவையாவன 1.தோள்பட்டை முதல் முழங்கை வரையிலுள்ள புஜஎலும்பு (Humerus-ஹுமர்ஸ்) 2. முழங்கை முதல் மணிக்கட்டு வரையிலுள்ள இரத்தினி எலும்பு (Ulna-அல்னு) ஆரைஎலும்பு (Radius-ரேடியஸ்) களும், 3. உள்ளங்கை எலும்புகள் (Metacarpus-மிடகார்ப்ஸ்) உள்ளங்கையில் ஆறு எலும்புகளுண்டு. விரல் எலும்புகள் (Phalanges-பேலாஞ்ஜிஸ்) ஒவ்வொரு விரலிலும் 3 எலும்புகளிருக்கின்றன. ஆனால் கட்டவிரலில் (அங்குஷ்டம்) மாத்திரம் இரண்டு எலும்புகள் தானிருக்கின்றன. மணிக்கட்டில் எட்டு எலும்புகள் இருக்கின்றன. அதாவது—மணிக்கட்டு அல்லது கை தளசு, (Corpus—கார்பஸ்) மணிக்கட்டில் 8 எலும்புகளுண்டு; அவைகள் வரிசைக்கு 4-ஆக இரண்டு வரிசைகளாக இருக்கும். முதல் வரிசையின் பெயர்களாவன:—(Schaphoid-ஸ்கேபாயிட்), (Semilunar-ஸெமிலூனர்), (Cuneiform - கியுனிபாரம்,) (Pisiform-பிஸிபாரம்) என்றும், இரண்டாவது வரிசைக்கு (Trapezium-ட்ரேபீஜியம்), (Trapezoides - ட்ரேபிஜாய்டியஸ்), (Os Magnum - ஆஸ்மாக்னம்), (Unciforme-அன்ஸிபாரம்) என்றும் பேர். ஆகமொத்தம் ஒரு கையில் முப்பத்திரண்டு எலும்புகள் இருக்கின்றன.

## சிரசு அல்லது கபாலம் (SKULL—ஸ்கல்)

சிரசு அல்லது கபாலம், முகம் என இரண்டு பிரிவுகள் உள்ளது. இவற்றில் கபாலத்தில் எட்டு எலும்புகளும், முகத்திற் பதினான்கு

எலும்புகளும் இருக்கின்றது. கபால எலும்புகளாவன:— 1. (Occipital Bone-ஆக்ஸிபிடல் போன்) இதுவே பிடரி எலும்பு; 2. (Parietal Bone - பேரைடல் போன்) இதுவே பித்திகை எலும்பு; 3. (Frontal Bone-பிரன்டல் போன்) இதுவே நெற்றி எலும்பு; 4. (Temporal Bone-டேம்பிரல் போன்) இதுவே காதெலும்பு; 5. (Spehenoid Bone - ஸ்பிநாயிட் போன்) இதுவே வவ்வாலெலும்பு; 6. (Ethmoid Bone - எத்மாயிட் போன்) இந்த எலும்பு செல்லரித்ததுபோல் நேத்திரக்குழிகளிரண்டுக்கும் மத்தியஸ்தானத்தில், மூக்கின் மேற்புறத்தில் அமைத்திருக்கிறது. 7. & 8. (Turbinated Bones-டர்பிநேடேட் போன்ஸ்). என்னும் எலும்புகள் இரண்டு, ஆக மொத்தம் காபால எலும்புகள் எட்டு. முகத்தெலும்புகளாவன:— 1. & 2. (Nasal Bones-நேஸல் போன்ஸ்) இதுவே மூக்கெலும்புகள். இதில் 2 எலும்புகளும்; 3. & 4. (Superior Mexillary Bones-சுபீரியர் மாக்ஸிலேரி போன்ஸ்) இதுவே மேல்தாடை எலும்புகள். இதில் 2 எலும்புகளும்; 5. & 6. (Lachrymal Bones-லாக்கிரமல் போன்ஸ்) இவ்விரண்டெலும்புகளும் கண்குழிக்கு அகத்தில் முன்பாக இருக்கின்றன; 7. & 8. (Malar Bones-மேலார் போன்ஸ்) இதுவே கன்னத்தெலும்புகள். இதில் 2 எலும்புகளும்; 9. & 10. (Palate Bones-பாலேட் போன்ஸ்) இதுவே அண்ணத்தெலும்புகள். இதில் இரண்டு எலும்புகளும்; 11 & 12. இன்பீரியர்டர்த்னேடேட் போன்ஸ், இதுவும் இரண்டு எலும்புகளாகவே இருக்கின்றன; 13. (Vomer-ஓமர்) இதுவே நாசியின் மத்தியில் சன்னமாய் தட்டையாய் நாற்சதுரமாய் நாவித் துவாரங்கள் இரண்டிற்கும் மத்தியில் இருக்கும் ஓர் எலும்பு; 14. (Lower jaw Bone-லோயர் ஜா போன்) இதுவே கீழ்தாடை எலும்பு. ஆகமொத்தம் முக எலும்புகள் பதினன்கு.

## பற்கள் (TEETH—டீத்)

மேற்சொன்ன கபால எலும்புகளைத்தவிர ஒவ்வொருவருக்கும் முப்பத்திரண்டு பற்களிருக்கின்றன. முதல் முதல் முளைக்கிற பற்



களுக்குப் பால் பற்கள் (Milk teeth - மில்க் டீத்) என்றும், அவைகள் விழுந்து இரண்டாந்தரம் முளைக்கின்றவைகளுக்கு ஸ்திர பற்கள் (Permanent teeth - பெர்மெநென்ட் டீத்) என்றும் சொல்லப்படும். குழந்தைகளுக்கு 20 பற்களுண்டு. அவைகளாவன:— முன் பற்கள் 8, கோரைப்பற்கள் 4, கடைவாய்ப்பற்கள் 8, ஆக இருபதாம். ஸ்திரப்பற்கள் 32. அவைகளாவன:—முன் பற்கள் 8, கோரைப் பற்கள் 4, கடைவாய்ச்சிறிய பற்கள் 8, கடைவாய்ப் பெரியபற்கள் 12, ஆக முப்பத்திரண்டாம். பல்லில் முக்கியமாய் இரண்டுவித பதார்த்தங்களுண்டு. பற்சிகரத்தை மேலாகச் சுற்றிக்கொண்டு வெள்ளையாயும் உறுதியாயுமிருக்கிற பதார்த்தத்துக்கு ஆங்கிலத்தில் இனுமேல் (Enamel) என்று சொல்லப்படும். பல்லின் சிகரத்துக்குள் ஓர் பள்ளமுண்டு. அதில் சவ்வு (Pulp-பல்ப்)பரவியிருக்கும், அந்தச் சவ்வானது வேரின் துவாரத்திலிறங்கி வேரின் வெளிப்புறமாய் இருக்கிற சவ்வுடன் கலந்துவிடும்.

குழந்தைகளுக்குப் பல் முளைக்கிற காலக்கிரமமாவது:—7-ம் மாதம், மத்திய முன்பற்கள் 2 (Middle incisors) முளைக்கும், 9-ம் மாதம், பக்கத்து முன் பற்கள் 2 (Lateral incisors) முளைக்கும், 12-ம் மாதம், கடைவாய்ச்சிறிய முன்பற்கள் (First Molars) முளைக்கும், 18-ம் மாதம், கோரைப்பற்கள் (Canine) முளைக்கும், 24-ம் மாதம், கடைவாய்ச் சிறிய பின்பற்கள் (Last Molars) முளைக்கும், ஆனால் மேற்சொன்ன காலக்கிரமப்படி குழந்தைகளுக்குப் பற்கள் ஒரேநிதானமாய் முளைக்கிறதில்லை; சிலருக்குச் சீக்கிரத்திலும், சிலருக்குத் தாமசப்பட்டும் முளைக்கும். ஸ்திரப்பற்கள் முளைக்குங் காலக்கிரமங்களாவன.— 6½ வயதில், கடைவாய்ப் பெரிய முதற்பற்கள் முளைக்கும். இதை (First Molars - பஸ்ட் மோலேர்ஸ்) என்று சொல்லப்படும். 7-ம் வயதில், மத்திய முன்பற்கள் 2-முளைக்கும். இதை (Middle incisors - மிடில் இன்ஸைஸர்ஸ்) என்று சொல்லப்படும். 8-ம் வயதில் பக்கத்து முன்பற்கள் 2 முளைக்கும். இதை (Lateral incisors-லாடிரல் இன்ஸைஸர்ஸ்) என்று சொல்லப்படும். 9-ம் வயதில் கடைவாய்ச் சிறிய முதற்பற்கள் முளைக்

கும். இதை (First Bicuspides - பஸ்ட் பைகஸ்பிடஸ்) என்று சொல்லப்படும். 10-ம் வயதில் கடைவாய்ச் சிறிய இரண்டாவது பற்கள் முளைக்கும். இதை (Second Bicuspides-ஸெகன்ட் பைகஸ்பிடஸ்) என்று சொல்லப்படும். 11 முதல் 12-ம் வயதில் 9 கோரைப் பற்கள் முளைக்கும். இதை (Canine-கேனைன்) என்று சொல்லப்படும். 12 முதல் 13-ம் வயதில் 9 கடைவாயில் பெரிய இரண்டாவது பற்கள் முளைக்கும். இதை (Second Molars - ஸெகன்ட் மோலேர்ஸ்) என்று சொல்லப்படும். 17 முதல் 21-ம் வயதில் கடைவாயில் கடைப்பற்கள் அதாவது ஞானப்பற்கள் (Last Molars - லாஸ்ட் மோலேர்ஸ்) அல்லது (Wisdom Teeth - விஜ்டம் டீத்) என்னும் பற்கள் முளைக்கும்.

### நாக்கெலும்பு (HYOID BONE—ஹையாட்போன்)

சிவந்த சிறிய மாமிசத்துண்டாகிய நாக்கு நாம் பேசுவதற்கும், ருசியை அறிவதற்கும் புசிப்பதற்கும் உபயோகப்படுகிறது. நாக்கில் நரம்புகள் கணக்கிட முடியாதவிதமாய் ஒன்றோடொன்று பின்னிக்கொண்டிருக்கிறது. அப்படிக்கிருந்தும் அது எவ்வளவு விரைவாய் புரண்டு கொடுக்கிறது. நாக்கினடியில் ஓரெலும்புண்டு. அதற்கு நாக்கெலும்பென்று பேர், அதன் மத்தியில் தட்டையாய் இருக்கிற பாகத்திற்கு உடல் என்றும், பிதுக்கங்களுக்குக் கொம்புகள் என்றும் பேர். நாக்கெலும்புக்கும் குரல்வளைக்கும் மத்தியில் ஓர் சவ்வுண்டு. அதற்கு (Thyro hyoidean membrane - தைரோ ஹையாய்டியன் மெம்பிரேன்) என்று பேர். நாக்கின் கீழ்பாகத்தில் சிறிய முனைகள் போன்ற சில பாகங்கள் இருக்கிறது. அவைகளிலிருந்து நரம்புகள் மூளைக்கு ஓடி அறுசுவைகளைப் பகுத்தறியும்படியான உணர்வை உண்டாக்குகின்றன. ஆகாரத்தைப் பரிக்ஷித்துப் பார்ப்பதற்குக் கண், மூக்கு, வாய் என்னும் மூன்று விசாரணைக்காரர் இருக்கிறார்கள். அவைகளில் கண்ணானது பொருளின் மேல் பார்வையையும், மூக்கானது போஜனபதார்த்தங்களின் பரிமளத்தையும், வாயானது பதார்த்தங்களின் உருசி பாகத்தையும் அறியும் சக்தியுடையதாம். நாம் ஆகாரத்தை மெல்லும்போது அந்தந்தப் பற்களுக்குத் தகுந்த பதார்த்தங்களை நாக்கானது அததின் கீழ் தள்ளிக்கொடுத்து



உதவி செய்து, மிருது பதார்த்தங்களை அன்னத்தின்மேல் வைத்து நசுக்கி வாயிலூறுகின்ற உமிழ் நீரோடு (Saliva) செவ்வையாய்க் கலக்கும்படி செய்கின்றது. புசிப்புக்கு நாக்கின் உதவி இல்லாவிடின் நாம் பசியடங்கப் புசிப்பதற்குமுன் மேல்தாடைகள் மிகவும் நோவெடுக்கும். போஜனங்களை விழுங்குவதும் அசாத்தியமாய்விடும். மென்றபிறகு வாயிலுள்ள உணவையெல்லாம் நாக்குத்தான் ஒன்றாய்ச் சேர்த்துத் தொண்டைக்குள் தள்ளுகின்றது. நாக்குக்கு ருசியறியும் உணர்ச்சி இருக்கின்றமையால் வயிற்றுக்காகாததும், விஷத்தன்மையுள்ளனவும், புராதனமுமான உணவுகளை உண்ணவொட்டாமல் தடுக்கின்றது. ஆரோக்யமான உணவு இன்னதென்று நாம் கண்டறிந்து புசிக்கும்படிக்கும், வாசனை அறியும் சக்தியையொத்த ருசி அறியும் சக்தியும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நாக்குக்கு மற்றொரு சக்தி உண்டு. அதாவது பேசும் தன்மையேயாம். சைகைகளினாலும், முகக்குறிப்புகளினாலும் நாம் நம்முடைய எண்ணங்களை மற்றவர்களுக்கு ஏறத்தாழ அறிவிக்கக்கூடும். நாய் தான் சந்தோஷமாயிருப்பதைக் காட்டுவதற்கு வாலை ஆட்டும். பிராணிகள் சப்தம் போட்டுக் கத்தும், பக்ஷிகள் பாடும், ஆனால் மனிதன் ஒருவனே வாய்விட்டுப் பேசும் வரத்தைப் பெற்றவன். நாம் பேசும் தொனியானது கண்டத்தில் பிறக்கின்றது. கண்டத்தில் தொனியுண்டாகிற விதமாவது, சுவாசப்பையிலிருக்கிற வாயுவானது ஊர்த்தமுகமாய் வெளிப்படுகிறபோது, தொனித்தந்திகள் அதிர்ந்து தொனி பிறக்கின்றது. அந்தத் தொனியாகிய வாயு, வாய்க்குள் வந்து, நாக்கு, பற்கள், உதடுகள், நாசி இவைகளுடைய சகாயத்தால், விகற்பப்பட்டு, எழுத்து, அசை, சொல் முதலியவைகளை உண்டாக்குகின்றது. குழந்தைகளுக்கும், ஸ்திரீகளுக்கும் கண்டம் சிறுத்திருப்பதால் அவர்களுடைய தொனி அதிகரித்திருக்கும், சங்கீதத்திலும் ஸ்திரீ கண்டத்தை விசேஷமாய்ச் சொல்வதும் இதன் கருத்தேயன்றி வேறல்ல. ஆதலால் இவ்வளவு உபயோகமுள்ள இவ்வருமையான நாக்குக்கு நேரிடும் ஊமை, திக்குவாய், குளறிப்பேசுதல், இன்னும் கை கால் அசைவற்றுப் போகிற ஓர் ஜாதி வாதரோகம் ,Paralysis-பொரலி

ஸஸ்) பாரிசவாதம் அதாவது அர்த்தாங்கவாதம்(Hemiplegia-ஹெமிபிளீஜியா) அர்த்திதவாத ரோகம் அதாவது அர்த்தமுகவாதம் (Paralysis of the face) முதலிய நோய்களில் நாக்கின் நரம்புகள் உள்ளுக்கு இழுத்துக்கொள்ளுவதினால் நாக்குக்குச் சப்திக்கும் சக்தியற்றுப் போகிறது.

## கண் குழிகள் (ORBITS—ஆர்பிட்ஸ்.)

கண் கூடுகள், 7-எலும்புகள் சேர்ந்து உண்டாகின்றன, கண்



குழியில், விழி, அதற்குடைய சதைகள், ரத்த நரம்புகள், ஸ்பரிச நரம்புகள், கண்ணீர்க்கோளங்கள், கொழுப்புகள் ஆகிய இவைக ளடங்கியிருக்கும்.


## மூக்கு (NASAL FOSSÆ—நேஸல் பாஸி)

நாஸித்துவாரத்தில் ஸம்பந்தப்பட்ட எலும்புகள் 8. நாஸி மத்தியமாயிருக்கிறதற்கு, நண்டு (Septum-செப்டம்) என்று பேர். நாஸித்துவாரத்துக்கும், கண்கூட்டுக்கும் சம்பந்தமாய்த் துவாரமுண்டு.

## முள்ளந்தண்டு (VERTEBRAL COLUMN—வர்டிபிரல் காலம்)

சிரசையும் கைகால்களையும் சொல்லிய பிறகு பாக்கியாயிருக்கும் மார்பு, வயிறு உட்பட்ட நடுமுண்டத்திற்கு உடல் என்று பெயர்; இந்த உடலின் பின்பாகத்திலுள்ள முதுகெலும்பு முழு சரீரத்தையும் தாங்கக்கூடிய ஓர் தூணாகிறது. சிரசுக்கடியிலிருந்து, கீழுக்கிறங்குகிற துண்டெலும்புகளின் கோர்வைக்கு முள்ளந்தண்டு என்றுபேர். இது ஒரே எலும்பல்ல, முப்பத்திரண்டு தனித்தனி முள்ளெலும்புகள் (Vertebra-வர்டிபிர) ஒன்றோடொன்று சங்கிலித்தொடர்போல் சேர்ந்து உண்டாவதால் இதைத் தூண் என்பார்கள். முள்ளெலும்பு மத்தியமாய்க்குருத்தெலும்புண்டு. (Intervertebral Substance-இன்டர்வர்டிபிரல் ஸப்ஸ்டான்ஸ்) என்று சொல்லப்படும். இது முள்ளெலும்புகளை ஒன்றோடொன்று பொருந்தும்படிச் சேர்த்து, நாலு பக்கங்களிலும் சுலபமாய் அசையும்படிச் செய்கின்றது. ஒவ்வொரு முள்ளெலும்பிலும் ஒரு பெரிய துவாரமுண்டு; அந்தத் துவாரங்கள் சேர்ந்து, முள்ளந்தண்டில் நெடிய துவாரமொன்றேற்படும். அதில் மூளைக்கொடி (Spinal Marrow-ஸ்பைனல் மாரோ) பிரவேசித்திருக்கும், மேற்சொன்ன முப்பத்து மூன்று முள்ளெலும்புகளும் மூன்று பாகமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதாவது கழுத்து, முதுகு, இடுப்பு ஆகிய இவைகளாம். கழுத்து முள்ளெலும்புகள் 7 (Cervical, ஸர்வைகல் 7) முதுகு முள்ளெலும்புகள் 12 (Dorsal-டார்ஸல் 12) இடுப்பு முள்ளெலும்புகள் 5 (Lumbar-லம்பார் 5) இவைகளில் முற்சொன்ன ஏழும், சிரசைத் தாங்கிக்கொண் டிருக்கிறபடியால் இதை (Atlas-அட்லாஸ்)என்றும், அதன் கீழிருக்கிற எலும்புகளுக்கு (Axis-ஆக்ஸிஸ்) என்றும் பேர். முதுகுமுள்ளெலும்புகளாகிய 12-ம் மார்போடு சம்பந்தப்படும். (Ribs - ரிப்ஸ்) என்னும் விலா எலும்புகள், சுவாஸாசயம் இரைப்பை, ஈரல் முதலிய நுட்பமான உறுப்புகளைப் பாதுகாப்பதற்கு இப்பழுவெலும்புகள் இன்றியமையாதனவாய் இருக்கிறது. விலாவில் ஒவ்வொரு பக்கத்திலும் அப்படிப்பட்ட பழுவெலும்புகள் பன்னிரண்டுண்டு. அவைகளில் 7 மார்க்கண்ட எலும்புடன் சேர்ந்திருக்கும் (True Ribs - ட்ரு ரிப்ஸ்) 3—ஒன்றின்மேலொன்று படிந்திருக்கும் (False Ribs - பால்ஸ் ரிப்ஸ்) அடியிலிருக்கிற மற்ற இரண்டின் முனைகளும் அந்தரமாயிருக்கும். இவ்விதமாய் விலா எலும்புகள் அமைந்திருப்பதினால் சுவாசம் விடும்போது

எலும்புக்கூடு.




(a) முதுகுவர்க்க எலும்புகள்-
(b) மார்பெலும்பு
1, 2, 7, 8, 9, 10 விலா வெலும்புகள்.
11, 12 (False Ribs-பால்ஸ் ரிப்ஸ்) அதாவது நீசவெலும்புகள்.

அதிக தாராளமாயிருக்கும். இவற்றிற்கடுத்த 5-அள்ளை எலும்புகள் இருக்கின்றன. இதன் கீழுள்ள 5 எலும்புகளுக்குத் திரிகஸ்தான எலும்பு (Sacrum-சேக்கிரம்) அல்லது குண்டி எலும்பு என்றும் சொல்வதுண்டு. அதின் கீழுள்ள மீதி நான்குக்கு, குயில்மூக்கெலும்பு அல்லது புச்சஎலும்பு (Coc-cix காக் ஸிக்ஸ்) திரிகஸ்தான எலும்புக்கடியில், இவ்வெலும்பானது குயில் மூக்கைப்போல் வளைந்திருப்பதினால், இதைக் குயில் மூக்கெலும்பென்று சொல்லப்படும். மேற்சொன்ன திரிகஸ்தான எலும்பும், குயில் மூக்கெலும்பும், குழந்தையில் முறையே 4 துண்டுகளாயிருக்கும். ஸ்திரீகளுக்குத் திரிகஸ்தான எலும்பு அதிகமாய்ப் பிதுங்கியிருந்தாலும், குயில் மூக்கெலும்பானது ஆட்டமில்லாமல் உறுதிப்பட்டிருந்தாலும் பிரஸவ காலத்தில் சிசுவின் தலை கீழுக்கிறங்க இடமில்லாமல் தலை சிக்கிக்கொண்டு, தாயாருக்கு அதிக வேதனையை யுண்டாக்கும். மருத்துவத்தொழில் செய்வோர் இதைக் கவனிக்கவேண்டியது நிரம்ப அவசியமென்பதை முன்னதாகவே சொல்லியிருக்கிறோம். மேற்சொன்ன கடைசி எலும்பாகிய (Coc cix-காக் ஸிக்ஸ்) என்னும் எலும்பையே * மனிதனது வாலுக்கு ஒப்பிடலாம்.

சரீரத்திலுள்ள எலும்பை மற்றொரு எலும்போடு சேர்த்துக் கட்டுவதற்குப் பலமான சவ்வுகள் ஏற்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு எலும்புக்கும் துவாரங்கள் உண்டு. அத்துவாரங்களில் இரத்த நாடிகள் புகுந்து செல்லும். எந்த எலும்பினதும் வெளிப்பகுதி வைரமுடையது. நீண்ட எலும்புகளுக்குள்ளே மூளை என்னும் மிருதுவான பதார்த்தம் நிறைந்திருக்கும். சரீரத்தைஅடுத்த மற்றப் பாகங்களுக்கு இரத்தம்அத்தனை அவஸ்யமில்லாவிட்டாலும், எலும்புகளுக்கு இரத்தபோஷணை அதிகமாய்வேண்டியது. இரத்த நரம்புகள் ஓடுவதற்குக் கண்ணிற்குத் தெரியாத சிறிய துவாரங்கள் அநேக எலும்புகளில் உண்டு. இன்னும் எலும்பில் முக்கியமான இரண்டுவித பதார்த்தங்களுண்டு(Phosphate

* குரங்கை (வால்-நரன்) வானரனென்றும், மனிதனை வாலில்லாத நரனென்றும் ஸ்பென்ஸர் டார்வின் என்னும் தத்துவ சாஸ்திரியின் ஜீவப்பரிணாம கொள்கைப் (Evolution) படி மனிதருக்கு வாலெலும்பு இருந்தும் வாலில்லாமலிருக்கிறது.



of lime-பாஸ்பேட் ஆவ் லைம்) என்னும் சுண்ணாம்பும், (Gelatine-ஜிலடீன்) என்னும் பசையும் ஆம். பெருத்த கட்டிடங்களையும் நீண்டநாள் இருக்க வேண்டியதுமான தேவாலயங்களையும், எங்ஙனம் சுண்ணாம்பினால் கட்டப்பட்டிருக்கிறதோ அதுபோலவே, மனித சரீரத்திலுள்ள அஸ்தி பந்தனங்களிலும் சுண்ணாம்பு ஐக்கப்பட்டிருக்கின்றது. சுண்ணாம்பால் எலும்புக்கு உறுதியும் பலமும் உண்டாகின்றன. வச்சிரத்தைப்போலொத்த மேற்சொன்ன பசையால் நயப்புண்டாகின்றது. கருப்பிண்டத்தில் எலும்புகள் இளசாயிருக்கும், அப்போது அதை முருந்து அல்லது குருத்தெலும்பு என்று சொல்லப்படும். பிறகு வயது விர்த்தியில் சுண்ணாம்பு படிப்படியாய் அதிகரித்து அந்த முருந்துக்கு வைரமேறி எலும்பாகிவிடும். எலும்புகளைத் திராவகத்தில் போட்டு வைத்தால் அதிலிருக்கிற சுண்ணாம்பு நீங்கிப் பசை மாத்திரம் நிற்கும். அதை மனதுக்கேற்றபடி இலேசாய் வளைக்கலாம். பால்லியத்தில் எலும்புகள் குருத்தாயிருப்பதினால் வளைந்து கொடுக்கும். முறிய மாட்டாது. ஒருவேளை முறிந்தபோதிலும் கூடிவிடும். வயது சென்றவர்களின் எலும்பு எளிதில் ஒடியும். ஒடிந்த *எலும்பு சீக்கிரம் கூடாது. நாய்களுக்கும் மாமிச பக்ஷிணியாகிய மனிதர்களுக்கும், காட்டு மிருகங்களுக்கும் எலும்பின்பேரில் அதிக பிரியம். ஏனென்றால் எலும்புக்குள் இருக்கும் மூளையில், சர்க்கரை, உப்பு முதலிய இனிப்பாகிய வஸ்துக்கள் அதிகம் இருக்கிறது. இரத்த நரம்புகள் ஓடுவதற்குக் கண்ணிற்குத் தெரியாத சிறிய துவாரங்கள் அநேக எலும்புகளில் உண்டு. எலும்புகள் உலர்ந்துபோனால் நமது சரீரத்தின் பலமும் க்ஷீணித்துப்போம். மனித தேகத்தில் சுமார் 246-எலும்புகளிருக்கின்றன. அவைகளாவன:—சிரசில் 8, காதுக்குள் 6, முகத்தில் 14, பற்கள் 32, முள்ளந்தண்டில் 26, நாக்கில் 1, மார்பில் 1, விலாவில் 24, கைகளில் 64, கால்களில் 62, கைகால் பெருவிரல் குளசுகளில் இருக்கிற சிறிய எலும்புகள் 8, இவ்வகையான எலும்புக் கூடானது, நமது சரீரத்துள் இருக்கும் அதிநுட்பமான உறுப்புகளுக்கு யாதொரு தீங்கும் நேராதபடிக்கு அவைகளைப் பத்திரமாய்க் காத்து இரக்ஷிக்கின்றது. இப்பேர்ப்பட்ட முக்கிய தூண்களை நாம்

கவனிக்காமல் அனேக குற்றங்களுக்குள்ளாகின்றோம். நீரிழிவு, மதுமேகம் முதலிய நோயுற்றோர்களுக்கு எலும்பில் பெரிய துவாரங்கள் ஏற்பட்டு மூளைக்குள்ளிருந்து தித்திப்பு நீர் வருகிறது. இந்நீர்களை நிறுத்தித் துவாரங்களை அடைத்துப் புஷ்டியான ஆகாரங்களைக்கொடுத்து போஷித்து வரவேண்டியது. அநேகருக்கு நீரைப்பற்றிய வியாதி வெளிப்படையாகத் தெரியாமலிருக்கும். எலும்புகளின் பலஹீனத்தினால் அறிந்துகொள்ளவேண்டும். இன்னும் எலும்புகளுக்குக் காணும் முக்கிய ரோகங்களாவன:—ஹஸ்திசோபா ரோகம், (Hypertrophy of the bone) ஹஸ்தி உக்கிர தாப ரோகம் (Acute inflamation of the bone) ஹஸ்தி சாத்மீக தாப ரோகம். (Chronic inflamation of the bone) எலும்பு படல் படலாய் உதிர்ந்துபோகும் ஒருவித ரோகம் (Exfoliation) ஹஸ்திவிரணம் (Caries) ஹஸ்தி நமன ரோகம், அதாவது எலும்புகள் மிருதுவாகி ஒடியாமல் வளைகிற ஓர் ஜாதி ரோகம் (Rickets) முதலியவைகளாம். நமது சரீரத்திலிருக்கும் மேற்சொன்ன 246-எலும்புகளும் சற்றேறக் குறைய 12-13 பவுண்டு பளு இருக்கும்.

## மாமிசம் (MUSCLES—மஸில்ஸ்)

மாமிசம், சதை, இறைச்சி, புலால், ஊன், தசை அல்லது பேசி என்று சொல்லப்படுகிற மனித தேகத்திலிருக்கிற சிவந்த மாமிசங்கள் அடுக்கடுக்காய் அமைந்திருக்கும். சில அகலமாயும், சில நீண்டுமிருக்கும். அநேக சிறிய இழைகள் சேர்ந்து ஒவ்வொரு மாமிசம் ஏற்படுகின்றது, இழைகளையும் மாமிசங்களையும் ஒன்றோடொன்று இணையும்படி வலைபோலொத்த சவ்வால் கட்டியிருக்கும். (Cellular tissue-ஸெல்லுலர் டிஷ்யு) எலும்போடு ஒட்டிக்கொண்டிருக்கிற மாமிச முனைகள் வெளுத்துப் பல ரூபங்களாயிருக்கும். சில நரம்புகளைப்போல் நீண்டும் சில அகலமாயும் இருக்கும். அதற்கு மாமிசத்தந்தி உள் நாணி, தசை நார், அல்லது வன்னசை என்றும், ஆங்கிலத்தில் (Tendon—டென்டன்) என்று பேர், அகலமாய் விரிந்திருக்கிற மாமிசத்தந்திக்கு (Aponeurosis-அப்பனியுரோஸிஸ்)என்று பேர். மாமிசத்தின் துவக்



கத்துக்கு, ஆரம்பமுனை (Origin-ஆரிஜன்) என்றும், இணைந்துபோகிற முனை) Insertion-இன்ஸர்ஷன்)என்றுஞ் சொல்லப்படும். சதையின் மத்திய பாகத்திற்கு உடல் என்று பேர்.


நமது சரீரத்தில் இரண்டு ஜாதி சதைகளுண்டு, ஒருஜாதி மனதுக்கேற்றபடி அசையும், அவைகளுக்கு மனதுக்கு ஐக்கியசதைகள் என்றும், ஆங்கிலத்தில் (Voluntary Muscles-வாலென்டரி மஸில்ஸ்) என்றும் சொல்லப்படும். மற்றொரு ஜாதி தற்செயலாய் அசையும், மனதுக்கயிக்கமிராது, அவைகளுக்கு மனதுக்கயிக்கமில்லாத சதைகள் ஆங்கிலத்தில் (Involuntary Muscles-இன்வாலென்டரி மஸில்ஸ்) என்று பேர். இரைப்பை, குடல், இருதயம் ஆகிய இவைகளிலிருக்கிற சதைகளுக்குத் தற்செயலாய் நடக்கிற குணமுண்டு. ஆனால் மனதுக்கு வசப்படாது. நமது சுவாதீனத்திற்கு உட்படாதிருக்கிறபடியால், அவைகள் மனதுக்கயிக்கமில்லாத சதைகள், மற்றவைகள் மனதுக்கயிக்கப்பட்டவைகளாம்.

மனித தேகத்தில் சுமார் 4126 சதைகள் உண்டு. மாமிச சலனத்தால் தேகத்தினுடைய வியாபாரங்கள் நடக்கின்றன. கண் சிமிட்டுதல், நாக்கை நீட்டுதல், கைகால்களை அசைக்குதல், தம்புரு, வீணை முதலிய வாத்தியங்கள் மீட்டுதல், அபிநயம் செய்தல்,சம்மட்டி யடிக்குதல் இவை முதலிய சலனங்கள் மாமிசங்களால் உண்டாகின்றன.

## நாடிகள் (ARTERIES—ஆர்ட்ரீஸ்)

இருதயத்திலிருந்து இரத்தத்தைச் சரீரமுழுதும் கொண்டுபோகிற குழல்களுக்கு நாடிகள் என்று சொல்லப்படும். நாடிகளுக்குள் ஓடுகிற ரத்தம் சிவந்திருக்கும். நாடிகள் போகப் போகச் சன்னமாகி நாளங்களில் முடிகிறது. இருதயத்தின் இடதுபக்கத்திலிருந்து பெருநாடி (Aorta-ஏயோர்டா) உற்பத்தியாகி மேல்நோக்கிச் சென்று பிறகு இடதுபக்கம் வளைந்து முள்ளந்தண்டு ஓரமாய் இறங்கி 4-வீது இடுப்பு முள்ளெலும்பு ஸ்தானத்தில் இரண்டாய்ப் பிரிந்து இரண்டு கால்களுக்கும் போகின்றன. இதன் ஆரம்பத்தில் 3-கபாடங்களுண்டு. அவைகள் பெருநாடியிலோடுகிற இரத்தத்தைப் பின்னிட்டு வரவொட்டாமல் தடுப்பதற்கும் இரத்தம் பின்னிடுகிற காலங்

களில் அக்கபாடங்கள் விரிந்து துவாரத்தை அடைத்துக் கொள்ளுவதற்கும் ஏற்பட்டிருக்கிறது. பெருநாடிவளைவில் மூன்று கிளைகளுண்டு. முதல் கிளைக்கு நாமசூன்ய நாடி (Arteria innominata-ஆர்டீரிய இந்நாமிநேடா) என்று பெயர். இதில் இரண்டு கிளைகளுண்டு, அதில் ஒரு கிளை கழுத்து வலப் பக்கமாக மேலுக்கேறும், மற்றொன்று வலதுதோள் மார்க்கமாய் வந்து வலது கையில் இறங்கிவிடும். கழுத்து வலப்பக்கத்திலிருக்கிறநாடிக்கு-வலதுகண்ட நாடி (Right common carotid-ரயிட் காமன் கேரோடிட்) என்று பேர். இது சுவாசக்குழல் ஓரமாய் மேலுக்குச் சென்று குரல்வளையின் மேல்புறத்தில் இரண்டு கிளைகளாய்ப் பிரிந்து, ஒன்று வலது பக்கத்துக் கழுத்து, பிடரி, முகம், நாக்கு, காது, கன்னம், சிரசு ஆகிய இவைகளுச்குப் போய் வியாபிக்கின்றன. இதனை பஹிர்க்கதகண்ட நாடி (External carotid-எக்ஸ்டர்னல் கேரோடிட்) என்று பெயர். மற்றொன்று தொண்டையோடு சம்பந்தமாகச் சென்று, காதெலும்பின் பிரிவிலிருக்கிற துவாரத்துட்



இந்தப் படத்தில் தேகத்திலுள்ள முக்யமான இரத்த நாடிகள் காட்டப்பட்டிருக்கிறது.



பிரவேசித்துச் சிரசுக்குட் சென்று அநேக கிளைகளாக பிரிந்துமூளையைப் போஷிக்கின்றன. இதனை அந்தர்க்கதகண்ட நாடி (Internal Carotid-இன்டர்னல் கேரோடிட்) என்றும் சொல்லப்படும்.

பெருநாடி வளைவிலிருக்கிற மற்றொரு நாடிக்கு இடதுகண்ட நாடி(Left Common Carotid-லெப்ட்காமன்கேரோடிட்) என்று பெயர். இது மேல் விவரித்த பிரகாரம் அநேக கிளைகளாகப் பிரிந்து இடது பக்கத்திலிருக்கிற ஸ்தானங்களுக்குப்போய் போஷிக்கின்றன.

பெருநாடி வளைவிலிருக்கிற மூன்றாவது நாடிக்கு இடது தோள் நாடி (Left Subclavian—லெப்ட் ஸப்கிளேவியன்) இது இடது கைக்கிறங்கிப் பாவி விடுகின்றது.

மேற்சொல்லிய மூன்று நாடிகளிலிருந்து கிளைக்கிற கிளைகள் எங்கெந்த ஸ்தானங்களில் ஓடுகின்றதோ அந்தந்த ஸ்தானங்களின் பெயரே அவைகளுக்குக்கொடுக்கப்பட்டிருக்கின்றது. அவைகளாவன, கன்னப்பொறிநாடி (Temporal Artery-டெம்போரல் ஆர்ட்ரி) இது கன்னப்பொறி மார்க்கமாய் மேலுக்குச் சென்று நெற்றி, உச்சந்தலை இவைகளுக்குப் போய்ப் பாவுகின்றது. முகந்துநாடி (Facial Artery-பேஷியல் ஆர்ட்ரி) இது கீழ்த்தாடை எலும்பின்மேல் ஓடி கன்னத்தில் பாவுகின்றது. தோள்நாடி (Subclavian Artery-ஸப்கிளேவியன்ஆர்ட்ரி) இது தோள்மார்க்கமாய்ச்சென்று அக்குளுக்குப் போகின்றது. கைமூலநாடி (Axillary Artery-அக்ஜிலெரி ஆர்ட்ரி) இது தோள் நாடியின் தொடர்ச்சி அக்குளிலிருக்கின்றது. புஜநாடி (Brachial Artery-பிரேகியல் ஆர்ட்ரி) இது புஜத்திலிருந்து கீழுக்கிறங்கி முழங்கையில் இரண்டாய்ப் பிரிந்து ஒன்று பெருவிரலிலும் மற்றொன்று சுண்டுவிரலிலும் வியாபிக்கின்றது. அங்குஷ்டநாடி அல்லது பெருவிரல்நாடி (Radial Artery-ரேடியல் ஆர்ட்ரி) இது முழங்கையிலிருந்து ஆரை எலும்புமேல் பெரு விரலில் பக்கமாயோடி பெருவிரலைச் சுற்றிக்கொண்டு, உள்ளங்கையில் வியாபித்துக் கடைசியாகச் சுண்டுவிரல் நாடியோடு சம்பந்தப்பட்டுவிடும், நாம் கைபார்க்கிறநாடி இதுதான். சுண்டுவிரல் நாடி (Ulnar Artery-அல்னர் ஆர்ட்ரி) இது முழங்கையிலிருந்து இரத்தினி எலும்புமேல் சுண்டுவிரல் பக்கமா

யோடி உள்ளுக்கு வளைந்து உள்ளங்கையில் பெருவிரல் நாடியுடன் பொருந்தி விடுகிறது. **புப்புஸ நாடி** (Pulmonary Artery-பல்மோனேரி ஆர்ட்ரி) இருதயத்தின் வலப்பக்கத்திலிருந்து நுரையீரலுக்குப் போகிற இந்த நாடியானது இரண்டாகப் பிரிந்து ஒன்று வலது புப்புஸத்திலும், ஒன்று இடது புப்புஸத்திலும் போய்ப் பரவுகின்றது. இதில் கெட்ட ரத்தமே ஓடினபோதிலும் நாடி என்றே சொல்லப்படுகிறது. **வயிற்றுப் பெருநாடி** (Abdominal Aorta-அப்டாமீனல் ஏயார்ட) வயிற்றுக்குள்ளிருக்கிற பெருநாடியிலிருந்து பல கிளைகள் பிரிந்து, ஈரல், இரைப்பை, யகிர்த கண்டம், பீளிகம், குடல்கள், பீஜம், இடுப்பு முதலிய உறுப்புகளைப் போஷிக்கின்றது. இன்னும் வயிற்றுப் பெருநாடியிலிருந்து இரண்டு கிளைகள் பிரிந்து தொடையில் இரங்கி கால்களிலுள்ள உறுப்புகளைப் போஷிக்கின்றன.

தமிழ் நூல்களில் நாடியைப்பற்றி சொல்லுகிறதாவது மானிட தேகத்தில் 72,000 நாடி நரம்புகள் உந்தியிலிருந்து உற்பத்தியாகிக் கீழ்மேலாய் பேய்ப்பீர்க்கங் கூடுபோல் சரீரமெங்கும் வியாபிக்கும். இவைகளில் இடகலை, பிங்கலை, சுழிமுனை, அலம்புடை, காந்தாரி, அத்தி, சிகுவை, சங்கினி, இயல்புருடன், குருவென்ற தசநாடிகள் 10. இடகலை வலதுகாற் பெருவிரலிலிருந்து இடது நாசிவரையிலும், பிங்கலை இடதுகாற் பெருவிரலிலிருந்து வலது நாசிவரையிலும் கத்திரிக்கோல் மாறலாக ஓடிநிற்கும். சுழிமுனை மூலாதாரத்திலிருந்து ஆக்கினைவரையோடியுச்சியில் அச்சுருவாணியாய் நிற்கும். அலம்புடையும் இயல்புருடனும் இரு செவிகளையும் பற்றி நிற்கும். அத்தியுஞ் சிகுவையும் இருகண்களையும் பற்றிநிற்கும். காந்தாரி நாபியிற்றோன்றிச் சுரமேழிற்கும் எழுநாடியாய்க் கண்டத்துற்றிருக்கும். சங்கினி, குரு இவ்விரண்டும் குய்யத்தைப்பற்றி நிற்கும். தேகத்தில் பிராணன், அபானன், உதானன், சமானன், வியானன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயனென்ற பத்துவாயுவும் இயங்கும். மேற்கண்ட தசநாடி 10-ல் எழுநீக்கி இடகலை, பிங்கலை, சுழிமுனை, என்ற மூன்று நாடியும் ஒரே நாடியாயமைந்து, இடகலை வாதநாடியாக



வும், பிங்கலை பித்தநாடியாகவும், சுழிமுனை சிலேத்தும நாடியாகவும் நடக்கும். வாதம் மலத்திலும், பித்தம் மூத்திரத்திலும், சிலேத்துமம் விந்திலும் அடங்கும். தசவாயு பத்தில், அபானன் வாதத்திலும், பிராணன் பித்தத்திலும், சமானன் சிலேத்துமத்திலுமிருக்கும்.)

## நாளங்கள், (VEINS—வேயின்ஸ்)

இந்திரகோபம்போல் சிவந்த இரத்தமானது, உடலெங்கும் பரவிக் கருத்துக்கெட்டுப்போன பிறகுஅதைத் திரும்பவும் இருதயத்தின் வலப்பக்கத்துக்குக் கொண்டுபோகிற குழல்களை நாளங்கள் என்று சொல்லப்படும். இதன் புரைகள் மெத்த சன்னமாயும் பிகுவில்லாமலுமிருக்கும். நாளங்கள் தந்துகிகளிலிருந்து (Capillaries) ஆரம்பித்து ஒன்றோடொன்று சேர்ந்து பெருத்து முடிவில் இரண்டு நாளங்களாகி ஒன்று மேலாகவும் மற்றொன்று கீழாகவும் இருதயத்தின் வலது சிரவத்தில் முடிகின்றன. நாடிகளானது நமது சரீரத்தின் ஒவ்வொரு உறுப்புகளிலும் வியாபித்திருப்பதுபோலவே நாளங்களும் ஒவ்வொரு உறுப்புகளிலும் பரவி இருக்கின்றது. சுருங்கச்சொல்லில் இருதயமாகிய ஏரியிலிருக்கும் பரிசுத்த இரத்தம் தேகத்தின் பல பாகங்களுக்கும் பரவவேண்டியதற்கு கால்வாய்களாகிய பல நாடிகள் ஏற்பட்டிருப்பது போலவே, அங்க முழுதிலுமுள்ள அசுத்த இரத்தத்தை இருதயமாகிய ஏரிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும்படி பல நாளங்களைச் சிருஷ்டித்திருக்கும் கடவுளின் கருணைக்கு நாம் செய்யும் கைம்மாறு என்ன இருக்கிறது!

" கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு "—குறள்

## நிணநரம்புகள், (LYMPHATIC VESSELS-லிம்பாடிக் வேஸல்ஸ்)

அங்கமுழுதிலுமுள்ள அசுத்த நீர்களைக் கிரகித்து நாளங்களுக்குக் கொண்டுபோகிற குழல்களுக்கு நிணநரம்புகள் என்று சொல்லப்படும். தேக போஷணைக்கு வேண்டிய அன்னரசம் குறையும்போது மேற்படி நரம்புகள் கொழுப்பைக் கிரகித்துச் சரீரபோஷணைக்குக் கொண்டு போகும். கொழுப்புக் குறையும்போது சரீர மிளைக்கும், அதிசீதளப்

பிரதேசங்களிலுள்ள மிருகங்கள் மழைகாலத்தில் வெளியில் சஞ்சரிக்க முடியாமலிருக்கும்போது கொழுப்பே தேகத்தைப் போஷிக்கின்றது. தேகத்தின்மேல் தடவுகிற தைலங்களையும், பற்றுகளையும், ஒத்தடங்களையும் உள்ளுக்குக் கொண்டு போகிறதும் இந்த நரம்புகள்தான். மூளை தவிர மற்ற உருப்புகளிலெல்லாம் நிணநரம்புகள் வியாபித்திருக்கும். ஏயார்டா (Aorta) என்னும் பெருநாடியின் ஆரம்பத்தில் கபாடங்கள் ஏற்பட்டிருப்பது போலவே நிணநாம்புகளிலும் கபாடங்களுண்டு. நாடிகள், நாளங்கள், நிணநரம்புகள் முதலியன சரீரமுழுதும் வியாபித்திருப்பது போலவே மூளையோடு சம்பந்தப்பட்டு பல நரம்புகள் பரவியிருக்கிறது. இந்நரம்புகளின் பிரயோஜனமாவது, அங்க அமைப்பிலுள்ள அதிநுட்பமான மூளையை முள்ளந்தண்டுடனும், உடலுடனும் பொருந்த வைப்பதுவேயாம். நமது தேகத்தில் மூன்றுவித நரம்புகளுண்டு. 1—இந்திரிய நரம்புகள் அவைகள் மெய், வாய், கண், நாசி, செவி முதலிய பஞ்சேந்திரியங்களுக்குப் போய், ஸ்பரிஸ, ரஸ, ரூப, கந்த, ஸப்தமாகிய ஐம்புலன்களைத் தெரிவிக்கின்றன. 2—சலனநரம்புகள் அவைகள் தேகத்திலுள்ள மாமிசத்தை (சதையை) மனதுக்கேற்றபடி ஆட்டுவிக்கும். 3—ஓற்றுணர்வுள்ள நரம்புகள் அவைகள் சரீரத்தின் உறுப்புகளை ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்தி வைக்கும். முள்ளந்தண்டுக்கொடியிலிருந்து உற்பத்தியாகிற நரம்புகள் 31. மேற்கண்ட 31–நரம்புகளையும் 5 வகுப்புகளாக வகுக்கப்பட்டிருக்கிறது. அவைகளாவன.—கழுத்து நரம்புகள் 8. முதுகு நரம்புகள் 12. இடுப்புநரம்புகள் 5. திரிகஸ்தான நரம்புகள் 5. காக்ஸிஜியல் நர்வ் 1 (Coccygeal nerve) உடலெங்கும் ஓடியிருக்கிற நரம்புகளுக்கு ஸ்பரிசமும், சலனமும் கொடுக்கிற குணங்களுண்டு. ஓற்றுணர்ச்சியுள்ள நரம்புகள் முள்ளந்தண்டில் இருபுறத்திலும், மணிக்கோர்வைபோல் சிரசிலிருந்து ஆஸனம் வரையில் நீண்டு சரீர நரம்புகளோடு சம்பந்தப்பட்டிருக்கும். இவைகளுக்குப் பிரதானஸ்தானம் இரைப்பை (Stomach) யாகையால் வயிறுநிறைய போஜனம் செய்திருக்கும்போது ஈரக்குழி இரப்பை முதலியவுறுப்புகளில் அடிபட்டால், அபாயம் நேரிடும். இதனால் அநேகர் இறந்து போனதுண்டு.



## மூளை, (CEREBRUM—ஸிரிபிரம்)

ஒரு தொழிற்சாலையின் சகல வேலைகளையும் சரியாய் நடத்துவதற்கும் அவைகளைப்பற்றி மேல் விசாரணை செய்வதற்கும் ஓர் மேலதிகாரி ஏற்பட்டிருப்பது போலவே, நமது சரீரத்திலுள்ள ஒவ்வொரு அவயவங்களும் அதனதன் வேலையைச் சரியாய் செய்கிறதாவென்று விஜாரித்து வரவேண்டியதற்கும் ஓர் மேலதிகாரியை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுவே மூளையாம். இது சிரசிலுள்ள உறுதியான கபால எலும்புகளாலும், மூன்று ஜவ்வுகளாலும் மூடப்பட்டிருக்கிறது. மூளை மூன்று பிரிவுகளுள்ளது. அவைகளாவன.—பெரிய மூளை, சிறிய மூளை, முகுளம் முதலியவைகளாம். இவற்றுள் பெரிய மூளையானது சிரசின் மேற்பாகத்தில் நமது புருவமுதல் நேராகச் சிரசின் பின்பாகம் வரையில் செல்லுகிறது. அதன் மேல்பாகம் சுருண்டிருக்கும். மூளை மத்தியில் ஓர் பிளப்பினால் இரண்டாகப் பிளந்திருக்கும் அதனை நீக்கிப் பார்த்தால் மத்தியில் வெள்ளையாய் இருக்கும். அதன்மேல் அநேக ரேகைகள் (Raphe—ராபி) காணப்படும்.

சிறிய மூளை.—இரண்டாவது பிரிவாகிய சிறிய மூளை சிரசின் பின்பாகத்தில் பெரிய மூளைக்குக் கீழ் அமைந்திருக்கிறது. பெரிய மூளைக்கு இது 7 பங்கு சிறிது. இதுவும் இரண்டாகப் பிளவுபட்டிருக்கும், அதை அறுத்துப் பார்த்தால் கிளைகளுடைய செடியைப்போல் காணப்படும். அதற்குப் பிராண விருக்ஷம் (Tree of iife of the brain) என்று பேர்.

முகுளம்.—மூன்றாவது பிரிவாகிய முகுளம் இதுவே முள்ளந்தண்டுக்கொடியின் சிகரம். (Medulla oblangata) முகுளமானது ஒரு அங்குல நீளமுள்ளதாய் ரேகைகளுள்ளதாய் மொக்குள் போலிருக்கும். இது மூளையின் அடியில் சிரசின் மத்தியிலிருந்து ஆரம்பமாகி முதுகில் அமர்ந்துள்ள முள்ளந்தண்டுக் கொடியுடன் சம்பந்தமாகிறது. மூளையின் மூன்றுபிரிவுகளுக்குள் இப்பாகம் மிகவும் சிறந்தது. இதற்கு ஏதேனும் கெடுதி நேரிட்டால் உடனே மரணம் நேரிடும். ஆயுர் வேதமறிந்தோர் ஒரு மனுஷ்யனுக்கு விஷம் தீண்டியாவது அல்லது

மற்றெவ்வகைக் காரணத்திலாவது கைநாடிகள் நடக்காவிட்டாலும் அவனுக்கு இன்னும் உயிர் இருக்கிறதோ இல்லையோ என்பதை அறியும்பொருட்டு மிடருக்கும் (தொண்டை) பிடரிக்கும் நடுவிலுள்ள நாடியைத் தொட்டுப்பார்த்து நாடி நடந்தால் மருந்து கொடுத்து உயிர் பிழைக்கும்படி செய்கிறார்கள். பிடரி நாண்டுபோனால் பிழைக்கமாட்டான் என்று சொல்வதை நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். மூளையில் சலனநரம்பு, இந்திரியநரம்பு, உணர்ச்சி நரம்பு முதலிய மூன்றுவகைப்பட்ட நரம்புக் கூட்டங்கள் இருக்கின்றன. விஷயங்களை நினைக்கிற சக்தியும், உணருகிற சக்தியும் மூளையைச் சேர்ந்தவை இன்னும் மூளையே சர்வேந்திரியத்திற்கும் இருப்பிடமாம்.

மூளையானது தேகத்தின் மற்ற உறுப்புகளோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறது என்பதைப்பற்றி இதுவரையில் கூறினோம். இனி மூளையானது ஆண்குறியோடு எவ்விதம் சம்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறதென்பதைப்பற்றி சிறிதளவு கூறுவாம். புத்தி, நுட்பம், ஞாபகசக்தி, சந்தோஷம் முதலியவைகட்கெல்லாம் மூளையே இருப்பிடமாதலால் ஆண்குறியை விம்மலுண்டாக்கிப் போகத்தினாலுண்டாகும் இன்பம், ஆனந்தம் முதலியவைகளை மனதிற்குத் தெரியப்படுத்தும் கருவிகளில் மூளையே பிரதானமானது. தேகத்திலுள்ள எல்லா நரம்புக் கூட்டங்களுக்கும் மூளையே மூலஸ்தானமென்பதை நாம் முன்னதாகவே தெரிவித்திருக்கிறோம். மூளைக்கும் காமத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. எப்படியெனில் மூளையானது ஐம்புலன்களுக்கும் ஆதாரமாயும், சுக்கில உற்பத்திக்குப் பிரதானமாயும் இருக்கிறது. உதாரணமாக.—ஒரு ஸ்திரியையாவது அல்லது காமத்தை உண்டுபண்ணத்தக்கவைகளையாவது பார்த்தமாத்திரத்தில் கண்ணிலுள்ள பார்வை நரம்புகள் மூலமாய் மூளையறிந்து உடனே இருதயத்திற்குத் தெரிவிக்க அதை இருதயம் கவனித்த தக்ஷணம் மூளையும் மற்ற அவையவங்களும் அதற்குடன்பட்டு, ஆவி, ஆத்மசக்தி, இரத்தம் முதலியவைகளைக் கோசத்திற்குச் செலுத்த, கோசம் விம்மி உடனே காம இச்சை உண்டாகும். இப்படியே இன்பமான தொனி, சங்கீதம், புணர்ச்சியைப்பற்றின சம்பாஷணை முதலியவைகளைக் கேட்பதினால் காதுகளிலுள்ள சுரோத்திர நரம்புகள் மூலமாகவும், இன்பமான வஸ்துக்களை முகர்வதினால் ஆக்கிராண நரம்புகள் மூலமாகவும், அதரபான முதலிய இன்பத்தைத் தரத்தக்கவைகளைப் பருகுவதினால் இரசினை நரம்புகள் மூலமாகவும், இன்பத்தைத் தரத்தக்கவைகளைப் பரிசிப்பதினால் பரிச நரம்புகள் மூலமாகவும் மூளையறிந்து முன் கூறியபடி இருதய முதலிய உறுப்புகளைத் தூண்டி கோசத்தை விம்மச் செய்கின்றது. இவ்வித விம்மலினால் போக விச்சையும் போக சக்தியும் உண்டாகின்றன. இது சர்வ ஜீவான்மாக்களுக்கும் பொதுவாக இயற்கையாய் அமைக்கப்பட்டிருக்கின்றது.



இவ்வித அற்புத சக்தியோடு அமைக்கப்பட்டிருக்கும் மூளைக்கு ஏதேனும் கெடுதி நேரிடில், மறதி, மயக்கம், பயித்தியம், நித்திரையின்மை, அபஸ்மாரக ரோகம், அபதானகவாதம் முதலிய ரோகங்கள் உண்டாகும். இன்னும் மூளையின் பலஹீனத்தினால் தாது நஷ்டமும் உண்டாகிறது. ஆண்குறியில் உணர்ச்சி குறைந்து தாமதமாகவும் பிரயாசத்தோடும் இயக்கமுண்டாகுதல், புணர்ச்சியில் வெறுப்பு, சிலவேளை விருப்பமிருந்தாலும், அதிசீக்கிரத்தில் விந்து வெளிப்படுதல், சிலருக்கு ஆண்குறி விம்மல் உண்டாகாது தளர்ந்தே இருக்குதல், ஆகிய இவ்வகையான குறிகளில் ஒன்றேனும் பலவேனும் இருக்குமானால் அது மூளையின் பலஹீனத்தினாலுண்டான ஆண்மையின் அழிவென்றே அறியவேண்டியது. மூளை பலஹீனமுண்டாவதின் காரணங்கள்,—அதிக புணர்ச்சி, அதிக விசனம், இராக்காலங்களில் நித்திரையின்றி அதிகநேரம் விழித்திருக்குதல், வாசித்தல், சிந்தித்தல் முதலாகிய மனப்பயிற்சி அதிகமாய்ச் செய்தல், ஒரு விஷயத்தைப்பற்றி சற்றும் ஓயாது ஒரே கவலையாயிருத்தல், கடுமையான வெயிலில் அதிகமாய்த் திரிதல் இன்னும் இவைபோன்ற பலவகைக்காரணங்களினாலும், சூடு, குளிர்ச்சி, கொழுமை, வறட்சி முதலியவைகள் அதிகப்படுவதினாலும், மூளை துர்ப்பலப்படும். அதனால் நரம்பு முதலியவைகளின் தொழிலில் வித்தியாச முண்டாகும். இவ்வித்தியாசத்தால் விந்துக் கருவிகளின் சலனங்குறையும். அந்தச் சலனங்குறைவதினால், காமத்திற்குக் காரணமாகிய இந்திரியத்தினின்றெழும் ஆவியும், விந்துக்குள்ள

ஓர்வித உற்சாகத்தன்மையும் குறைந்துபோய் தாது நஷ்டமுண்டாகும். குளிர்ச்சி, கொழுமை, சூடு, வறட்சி ஆகியவைகள் அதிகரித்து மூளை பலஹீனப்பட்டிருந்தால் அவற்றிற்கெதிரான பதார்த்தங்களினால் நன்மையுண்டாகும். எப்படியெனில் குளிர்ச்சி அதிகரித்திருந்தால் சூடான வஸ்துவினால் நன்மையும், சூடு அதிகரித்திருந்தால் குளிர்ச்சியான பதார்த்தங்களினால் நன்மையுமுண்டாகும். மூளையைப் பலப்படுத்தித் தாதுவிர்த்தியைக் கொடுக்கக்கூடிய பதார்த்தங்களையும் அவுஷதங்களையும் அவுஷதபாக அட்டவணையில் பார்த்துக்கொள்ளவும்.

## பஞ்சேந்திரியங்கள்.

## (ORGANS OF SENSES—ஆர்கன்ஸ் ஆப் ஸென்ஸஸ்)

பஞ்சேந்திரியங்கள், ஐம்புலன்கள், அறிவுக்கருவிகள் அல்லது ஞானேந்திரியங்கள் எனப்பெயர் பெறும். புலன் என்பது பொறிகளின் வழியாய் மனதிலுண்டாகும் உணர்ச்சியாம். புலன் ஐந்து, அவைகளாவன—பரிசம், இரசம், கந்தம், உருவம், சத்தம் என்பவைகளாம்.

மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய இவைகளுக்குப் பஞ்சேந்திரியங்கள் என்று பேர். இவைகளில் பரிசம் அல்லது ஊறு என்பது நாம் தொடும் அல்லது நம்மேலே படும் பொருள்கள் இன்னதெனப் பகுத்தறியப்பண்ணும் புலனாம். (The Sense of Touch—தி ஸென்ஸ் ஆவ் டச்) நம் உள் தோலில், அளவு சங்கையின்றி வலை போல் பின்னப்பட்டிருக்கும் ஸ்பரிச நரம்புகளே இப்புலனுக்கு ஆதாரமாகும். அந்த நரம்புகள் மூளையில் ஆரம்பமாகி முள்ளந்தண்டுக்கொடி நெடுக அதன் பிற்பாதியிலிருந்து கிளம்புகின்றன. உணர்ச்சி எந்த விடத்தில் அதிகமாக இருக்கின்றதோ அவ்விடத்தில் மற்ற இடங்களைப் பார்க்க ஏராளமான நரம்புக் கூந்தல்கள் ஓடி இருக்கின்றன. உதாரணமாக, விரல்களின் நுனிகளிலும், உதடுகளிலும், நரம்புக் கூந்தல்கள் அதிகமாகவும், உணர்ச்சி கூர்மையாகவும் இருக்கின்றன. இரசம் அல்லது சுவை என்பது பதார்த்தங்களின் அறுசுவையை அறியப்பண்ணும் புலனாம். நாக்கே அதற்குப் பிரதான உறுப்பாம். (The Sense of Taste—தி ஸென்ஸ் ஆவ் டேஸ்ட்) நாக்கிற்குப்



பதார்த்தங்களைப் பகுத்தறிந்து சுவை தெரிகிற விதமெப்படியெனில், பதார்த்தங்களை வாயிலிட்டால் நாக்கின்மேலிருக்கிற நாக்கடுவென்னும் சிறு முள்ளுகள் மலர்ந்து அவைகளில் வியாபித்திருக்கிற இரசினை நரம்புக் கூந்தல் வழியாய் மூளைக்கோட, மனது தெரிந்துகொள்ளுகின்றது. வாயிலிடுகிற பதார்த்தம் சீக்கிரத்தில் கரைந்தால், ருசி அதி சீக்கிரத்தில் தெரியும். மெதுவுற்றால் தாமசப்படும். கந்தம் அதாவது வாசனை யுணர்தல், பதார்த்தங்களுடைய வாசனையணுக்களை ஆக்ராணிக்கும்போது, சளி யூறுஞ் சவ்வின் மேல் பரவியிருக்கிற ஆக்கிராணேந்திரிய நரம்புக் கூந்தல்களின் மேல் உறுத்தும். அந்த உணர்ச்சியை ஆக்கிராண நரம்புகள் மூளைக்குக் கொண்டுபோகும். மூளை புத்திக்குத் தெரிவிக்கும். அப்போது பதார்த்தங்களுடைய கந்தம் உணரப்படுகிறது. கந்தம் அதாவது வாசனையை யறிவதற்கு (The Sense of Smell—தி ஸென்ஸ் ஆப் ஸ்மெல்). நாஸித்துவாரத்தின் மேற்புறமாய் வாசனை நரம்புகள் இருப்பதால் பதார்த்தங்களை முகரும்போது மூச்சை மேலுக்கிழுத்தால் வாசனை செவ்வையாய்த் தெரியும். நாசிக்கு வாசனையைத் தெரிவிக்கிற குணமன்றியில், தொனியையும் மனதுக்கேற்றபடி இணையச் செய்கின்ற சக்தியுண்டு. சளி யூறுஞ் சவ்வானது வியாதிகொள்ள அதிலிருந்து அதிக ஜலம் சுரந்து வடிவதற்கு ஜலதோஷம் என்று பேர். சிரசுக்குள் நீர்கோத்து ஜலதோஷம் காண்கிறதென்று சொல்வது வழக்கம். வாசனையறியும் சக்தி பழக்கத்தினால் அதிகப்படுகிறது. சிலதேசத்து ஜனங்களுக்கு ஜாதியையும், மனுஷரையும் முகர்ந்து தெரிந்துகொள்ளுகிற கியானம் உண்டு. மூக்குத்தூள் போடுவதினால் சுகமில்லை, அதனால் சளியூறுஞ் ஜவ்வு தடித்து நரம்புகளுடைய உணர்ச்சி மந்தப்படும். வாசனை செவ்வையாகத் தெரியாது. அடிக்கடி மூக்கடைப்புக் கண்டு சுவாசம் வாயால் பரியும். நாஸியானது வாய்க்கு மேல் இருக்கவேண்டிய பிரயோஜனம் யாதெனில், பதார்த்தங்களை வாயிலிடுவதற்கு முன்னதாய் அவைகளுடைய வாசனையைத் தெரிந்துகொள்ளும் பொருட்டுச் சர்வவல்லமையுள்ள கடவுள் அவ்விடத்தில் சிருஷ்டித்திருக்கிறார். நாசிக்குள்ளிருக்கும் ரோமங்கள் (Vibrissoe—

வைப்பிரிஸி) தூசு, கிருமி முதலியவைகள் உள்ளே பிரவேசிக்காமல் தடுக்கின்றதற்காகவே உண்டாக்கப்பட்டிருக்கிறது.

உருவம், ரூபம் அல்லது பார்வை தெரிதல், நாம் பார்க்கிற வஸ்துக்களின் பிரமையானது, கண்ணின் சுக்கிலமண்டலத்தை (Cornea-கார்னிய) உருவி கிருஷ்ண மண்டலத்துவாரம் வழியாய் (Pupil-பியுபில்) பிரவேசித்துக் கண்மணியையும்(Lens-லென்ஸ்) உருவி ரூப உற்பத்திச் சவ்வுமேல் விழும். ஆங்கிலத்தில் (The Sense of Sight-தி ஸென்ஸ் ஆவ் ஸைட்) அந்த உணர்ச்சியானது பார்வைநரம்புவழியாய் மூளைக்குப்போக மனது தெரிந்துகொள்ளுகிறது. கிருஷ்ண மண்டலத்தில் ஜோதிக்குத்தக்கபடி சலனமுண்டாகும். அதிக வெளிச்சத்தில், துவாரம் சுருங்கும், குறைந்திருந்தால் விரியும். இத்தன்மையால் பார்வைக்குத் தேவையான வெளிச்சம் விழிக்குள் பிரவேசிக்கும். அதிகமாகிய வெளிச்சக்கிரணங்களைக் கறுத்த பசையானது கிரகித்துக்கொள்ளும். வெள்ளைக்குஷ்டரோகிக்கு (Albinoes-ஆல்பினோஸ்) கண்களில் இந்தக் கறுத்த மைப்பசை குறைந்திருப்பதால் அவர்கள் வெளிச்சத்தைச் செவ்வையாய்ப் பார்க்கமாட்டார்கள். பார்வை சிதறும், கண் கூசும், பூனை முதலிய ஜெந்துக்களுக்குப் பகலைப்பார்க்கிலும் இரவில் செவ்வையாய்க் கண் தெரியும். ஏனெனில் இவைகளின் விழிகளிலிருக்கிற கருத்தமைப்பசையானது கொஞ்சம் வெளுத்திருப்பதால் பகல் வெளிச்சம் கண்களைக் கூசும். தளர்ந்த வயதில் வெள்ளெழுத்து உண்டாவதற்குக் காரணம் என்னவெனில் விழிக்குள்ளிருக்கிற நீர்கள் குறைந்து போவதால் ரூப உற்பத்திச் சவ்வின்மேல் உறுத்தவேண்டிய விம்பமானது சவ்வைத் தாண்டிப் பின்னுக்கு போகும். ஆகையால் எழுத்துக்களைத் தூரவைத்துப் பார்த்தால் தெரியும். இதற்குத் தூரப்பார்வையென்று பேர், கண்ணின் முன்புறம் அதிகமாய் முன்னுக்கு வளைந்திருந்தால், விம்பமானது மேற்சொன்ன சவ்வுவரையில் அதற்கு முன்னாகவே நின்றுவிடும். ஆகையால் எழுத்துக்களைக் கிட்டவைத்துப் பார்க்கவேண்டியதாகும். இதற்குக் குறுகிய பார்வையென்று பேர். கண்ணுக்குக் காண்கிற இவ்வித விகற்பங்கள், மூக்குக்கண்ணாடியால் நீக்கப்படும். தூரப்



பார்வைக்கு, இருபுறமும் மேடாயிருக்கிற கண்ணாடியையும் (Double Convex Glass) குறுகிய பார்வைக்கு இருபுறமும் பள்ளமாயிருக்கிற கண்ணாடியையும் (Double Concave Glass) உபயோகித்துக்கொள்ள வேண்டியது. சத்தம் அல்லது ஓசையாவது மன ஆறுதலுக்கும், சந்தோஷத்துக்கும் அறிவுத்தோற்றத்துக்கும் உதவியாயிருப்பதாம். (The sense of hearing-தி ஸென்ஸ் ஆவ் ஹியரிங்) அவ்வோசைகளைக்கேட்கும் கருவி காது. அது வெளிக்காது, நடுக்காது, உட்காது என மூன்று வகுப்பாயிருக்கின்றது. இவற்றில் வெளிக்காது தலைக்குப் புறம்பே சில புருவங்களையுடையதாய் சற்று வளைவு உள்ளதாய் துவாரமுள்ளதாய், தோலினால் மூடப்பட்டதாயிருக்கிறது. அத்துவாரத்துக்குள்ளே இருக்கும் குரும்பியும் மயிர்களும், பூச்சி, புழு, தூசு முதலியன செவிக்குள் செல்லாமல் தடுக்கும். காதின் வெளித்துவாரத்தின் உள்ளூறுதியில், வெளிக்காதுக்கும் இடையில் அரைதிட்டமளவுக்கு உருவெளியான ஒரு சவ்வு இருக்கிறது. மகா நுண்ணிய நாலு எலும்புகள் ஒரே கோவையாய் நடுக்காதில் கிடக்கின்றன. அக்கோவையின் ஒரு தலைப்பு தம்பட்டத்திலும் (Ear Drum) மற்றொரு தலைப்பு வெளிக்காதிலும் தொடுத்திருக்கின்றன. உட்காது எலும்பினாலாகிய மூன்று அறைகளுள்ளதாயும், சிக்கும் முக்கும் சுத்தும் சுழற்றலுமுள்ள குடைவாயுமிருக்கிறது. ஷை காதின் பகுதி மூன்றில் கேள்விக்கு வேண்டியது உட்காது பகுதிமட்டுந்தான். கேள்வி யுண்டாகிறவிதமெப்படியெனில் அசைவுண்ட வாய்வுக்குச் சப்தம் என்று பேர், அந்தச் சப்தமானது காதுக்குள் சென்று, காது உட்சவ்வின்மேல் பட அது அசையும், அந்த அதிர்ச்சியானது எலும்புக்கோவையின் மார்க்கமாகச் சென்று, உட்காதின் ஜலத்தின்மேல் மிதந்து கொண்டிருக்கிற கேழ்வி நரம்புகளின் இழைகளுக்குக் குறுத்தும். கேள்வி நரம்பானது மூளையிலிருந்து கிளம்பி, உட்காதுக்கு உள்ளுறையாயிருக்கும் சவ்வுக்குள்ளிருக்கும் நீரிலே மிதந்து கொண்டிருக்கும். இந்தச் சவ்வே காதுத்தம்பட்டமாம். மேற்சொன்னபடி வந்த ஒலியின் அதிர்ச்சி கேள்வி நரம்பின் கூந்தலில் பட்டு அந்த நரம்பின் வழியாய் மூளைக்குச் செல்ல மனது தெரிந்துகொள்ளுகிறது. பழக்கத்தினாலே பொருள்களிலிருந்து உண்டாகும் சத்


தங்களை இன்ன இன்னதென்றும், அது இவ்வளவு தூரத்திலிருந்து வருகிறதென்றும் நிதானிக்கலாம். காதின் ஜவ்வுதடித்தல், வெடித்தல், காது நரம்புத்தடைபடுதல், அது சும்புதல், மூளை வியாதிப்படுதல் முதலிய காரணங்களால் காது மந்தம், செவிட்டுமை, பிறவிச்செவிடு முதலிய விகாரங்கள் ஏற்படுகின்றன. காதில் குரும்பி அதிகமாயிருந்தாலும், பூச்சி, புழு முதலிய ஜெந்துக்கள் சென்றிருந்தாலும், நல்லெண்ணெயைச் சற்று வெதுப்பியாகிலும் அல்லது 7—8 துளி கிளிஸிரீனை (Glycerine) காதில்விட்டு, பருத்திப் பஞ்சினால் அடைத்து வைத்திருந்து அப்பால் சௌக்காரம் (Soap) கூட்டிய தண்ணீரைப் பீச்சாங்குழலால் அடித்து சுத்தப்படுத்த வேண்டியது.

## இருதயம், (HEART—ஹார்ட்)

இருதயம், இதயம் அல்லது ரத்தாசயம் எனப் பலநாமம் பெறும். இருதயமானது அடி விரிந்து, நுனி குவிந்து மாம்பழ வடிவங் கொண்டதாய், மார்புக்குள் இரண்டு நுரையீரல்களுக்கு நடுவில் ஒரு சவ்வுப்பைக்குள் அமைந்திருக்கும் அந்தப் பைக்கு இருதயகோசம் என்று பேர். இருதயத்தின் உள்ளே 4-அறைகளுண்டு. 2-மேலும் 2-கீழுமாக இருக்கும். இவ்வறைகள் எப்போதும் குவிந்தும், விரிந்தும் இருக்கும். மேற்புறத்திலுள்ள 2-அறைகளுக்கு சிரவங்கள் என்றும், கீழறைகளுக்கு ஜடரங்கள் என்றும் பேர். வலது பக்கத்தில் கருத்த இரத்தமும், இடது பக்கத்தில் சிவந்த ரத்தமும் இருக்கும். மேலறைக்கும் கீழறைக்கும் சம்பந்தப்படுத்தும் கதவுள்ள துவாரமுண்டு அதற்கு வால்வ்ஸ் (Valves) என்று பேர். அந்தக் கதவுகள் முன்னுக்குப் போகிற ரத்தத்தைப் பின்னுக்குவரவொட்டாமல் தடுக்கும். வலது ஜடரத்திலிருக்கிற கவாடம் மூன்று பிரிவுகளுடையதாய் திரிகோண ரூபமாய் இருக்கும். அவைகளுக்கு Tricuspid Valves, என்று பேர். அவைகள் வலது ஜடரத்திலிருக்கிற ரத்தம் சிரவத்துக்கேறாமல் தடுக்கும். இடது ஜடரத்தில் இரண்டு கவாடங்களுண்டு. அவைகளுக்கு Mitral Valves, என்று பேர். இருதயத்தின் இடது ஜடரத்திலிருந்து ஒரு பெரிய குழல் உற்பத்தியாகி அந்த நாடியானது



அநேக கிளைகளாய்ப் பிரிந்து தேகமெங்கும் பரவி விடுகின்றன. வலது ஜடரத்திலிருந்து வேறொரு குழல் உற்பத்தியாகி, நுரையீரலுக்குப் (Lungs)போகும். அதற்குப் புப்புஸநாடி (Pulmonary artery) என்று பேர். இருதயமானது சற்றேறக்குறைய 5-அங்குல நீளமும் 3½-அங்குல அகலமும், 2½-அங்குல கனமும் உடையதாய் புருஷர்களுக்கு 11-அவுன்ஸும், ஸ்திரீகளுக்கு 9 அவுன்ஸ் நிறையுள்ளதாயும் இருக்கும்.




இந்தப் படத்தில் இருதயத்திலுள்ள முக்கிய வுறுப்புகளைக் காட்டப்பட்டிருக்கிறது.

தேகத்திலுள்ள உறுப்புகளிலெல்லாம் முக்கியமானவை, மூளை, இருதயம், ஈரல், குண்டிக்காய் (Kidney) முதலியவைகளாம். இவ்வுறுப்புகளில் மிக்க சிரேஷ்டமானது இருதயமேயாம். இருதயத்தைச் சூரியனுக்கு ஒப்பிடலாம். எப்படியெனில் உலகத்திற்கெல்லாம்ஒளியைக்கொடுக்கும் சூரியனானது எல்லாச் சிகரங்களுக்கும் மத்தியிலிருந்துகொண்டு ஒளியைக் கொடுக்கிறதுபோல, இருதயமானது தேகத்தின் மத்தியிலிருந்துகொண்டு எல்லா உறுப்புகளுக்கும் ஆத்மசக்தியைச் செலுத்தி உயிர்ப்பிக்கிறது. தேகத்திலுள்ள மற்றெல்லா உறுப்புகளைப் பார்க்கிலும் முதல் முதல் இருதயத்திற்றான் உயிர் உண்டாகிறது. ஆனால் எல்லா உறுப்புகளைப் பார்க்கிலும் பின்னால் இருதயத்திலிருந்து உயிர் நீங்குகிறது. இதற்குத் திருஷ்டாந்தம் தலையறுப்புண்ட கோழிகள், ஆடுகள் அல்லது சில பக்ஷிகளைப் பார்வையிட்டால் விளங்கும். எவர்களுக்கு இருதயமானது உருவத்தில் பெரி

தாகவும் அதிக சூடாகவுமிருக்கிறதோ அவர்களுக்குத்தான், தைரியமும் அதிக பலமும், அதிக போகசக்தியு முண்டாயிருக்கும். இத்தகைய பெருமை பொருந்திய இருதயமானது ஆண்குறியோடும் மூளையோடும் அதிக சம்பந்தப்பட்டிருப்பதாலும், ஆத்மசவுக்கியத்திற்காக இவ்வுறுப்பை அதிக ஜாக்கிரதையாகக் காப்பாற்ற வேண்டுமென்பதைப் பற்றி நாம் அதிகம் எழுத வேண்டியதில்லை.

இருதயம் பலஹீன முண்டாவதின் காரணங்கள்:—லாகிரி வஸ்துக்களை அருந்துவதினாலும், திடீரென்றுண்டான அதிக கவலையினாலும், அதிக சந்தோஷத்தினாலும், போகத்திலுண்டாகும் அதிக இன்பத்தினாலும், இருதயமானது மலர்ந்து போவதினாலும், அதிக மனோ முயற்சியாலும், நாட்பட்ட வியாதியினாலும், அதிகமாகப் பசித்திருப்பதினாலும், அதிக வாந்தியினாலும், அதிக போகத்தினாலும், இருதயத்திலுள்ள மெல்லிய துவாரங்கள் அடைபட்டுப்போவதினாலும் ஆத்ம சக்தி குறைந்து இருதயம் பலஹீனப்படும்.

நாடி நடை துர்ப்பலப்பட்டிருத்தல், புணர்ச்சிக்கு எத்தனித்து ஆண் குறியும் பெண் குறியும் ஒன்றோடொன்று சம்பந்தப்படும் போதே விந்து ஸ்கலிதமாகுதல், நீண்ட நேரஞ்சென்று ஆண் குறி விம்மலுண்டாகுதல், போகத்தில் இன்பமில்லாதிருத்தல், புணர்ச்சிக்குப் பின் மயக்கங்காணுதல், அல்லது இருதயம் படபடவென்று அடித்துக்கொள்ளுதல், அல்லது இருதயத்தில் சப்தவேணுவை (Stethoscope) வைத்து உற்றுக் கேட்போமானால் புஸ்புஸ் என்று துருத்தியின் சப்தம்போல் கேட்குதல் ஆகிய இவையெல்லாம் இருதயத்தின் பலஹீனத்தினாலுண்டான ஆண்மையின் அழிவென்று அறிய வேண்டியது. இருதயத்தைப் பலப்படுத்தி தாது விர்த்தியைக் கொடுக்கக் கூடிய பதார்த்தங்களையும், அவுஷதங்களையும் அவுஷதபாக அட்டவணையிற் பார்த்துக்கொள்ளவும்.

## நுரையீரல், (LUNGS—லங்ஸ்)

நுரையீரல், வெள்ளீரல், புப்புஸம். அல்லது சுவாசப்பை எனப் பல நாமம் பெறும். நுரையீரலானது மார்பிற்குக் கீழாக வயிற்றின்



வலதுபக்கமாக இருக்கும். ஓர் உறுப்பு. இது இரண்டு பிரிவாய் நெஞ்சறைக்குள் இருதயத்தைத் தழுவிக் கொண்டிருக்கும். அவைகளின் வெளிப்புறம் உப்பலாயும், உட்புறம் குடவாயும் அடிசிறுத்து குவிந்தும் அடியகன்று ஈரல் தாங்கியின்மேல் படிந்துமிருக்கும். வலப்புறமுள்ள ஈரலானது 3-பிள்ப்பாகவும், இடப்புறமுள்ள ஈரல் 2-பிளப்பாகவும் வகிர்ந்திருக்கும். நிறத்தில் கருஞ்சிகப்பு, அல்லது குசும்பா நிறமாய், மேலே புள்ளிகளுடையதாய் 40-அவுன்ஸ் நிறையுடையதாயும் இருக்கும். நுரையீரல்களுக்குள் சுவாஸக்குழல்களும், புப்புஸ நாடிகளும் பிரவேசித்திருக்கும். நுரையீரல்களுக் குள்ளிருக்கிற கண்ணறைகளை ரத்தநரம்புகள் பற்றி சுற்றிக்கொண்டிருக்கும். நுரையீரலில் சுமார் 60-இலட்சம் காற்றுக் குழாய்கள் (Air Cells) இருப்பதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. தேகத்திலுள்ள உறுப்புகளிலெல்லாம் இதுவே பெரிதாகும். நமது இரைப்பையில் (Stomach) ஜீரணித்த அன்னரசத்தைச் சுத்த இரத்தமாக்கித் தேகபோஷணைக்காதாரமாகச் செய்யும், நுரையீரலுக்கும் குண்டிக்காய்களுக்கும் நரம்புகளினாற் சம்பந்தமுண்டு. இவ்விதமே இதற்கும் இருதயத்திற்கும் ஓர் நரம்பினால் சம்பந்தமுண்டு. தேகான்மாவிற்கு இவ்வுறுப்பே உற்பத்தி ஸ்தானமாயும், துடிநரம்புகளுக்குப் பிறப்பிடமாயும் இருக்கிறது. இப்படியாகத் தேகத்தைத் தேகான்மாவினால் சமரசப்படுத்திப் போக இச்சையை உண்டாக்கி ஆண்குறியை விம்மச்செய்யுஞ் சக்தியும் வாய்ந்தது.

ஈரலின் பலஹீனத்தினா லுண்டாகும் ரோகங்களாவன:—ஈரற்குலையில் வலி, வயிற்றுப்பிசம், புளித்த ஏப்பம், வாந்தி, மந்தப்பசி அல்லது பசிதீபனம் சிறிதுமில்லாதிருத்தல், மல ஜலங்களில் கெட்ட நாற்றம் அல்லது மலமும் ஜலமும், மாமிசம் கழுவின நீர் போலிருத்தல், போஜனத்திற்குப் பிறகு வலது விலாப்பக்கத்தில் வலி அல்லது இசிவு உண்டாகுதல், தேகம் வெண்மை அல்லது மஞ்சள் நிறமாகுதல், புணர்ச்சியில் வெறுப்பு, அல்லது அற்ப விருப்பம், இந்திரியம் இரண்டொரு நிமிஷங்களுக்குள் வெளிப்படுதல் இப்பேர்ப்பட்ட குக்குடப் குக்குடம்—(கோழி) புணர்ச்சிக்குப் பின் அதிக ஆயாசமும் களைப்பு

முண்டாகுதல், இருந்த விடத்தை விட்டு எழுந்திருக்கவும் சக்தியில்லாதிருத்தல், மனிதர்களிடத்தில் வெறுப்பு, நித்திரையின்மை முதலியவைகளாம்.

இரைப்பைக்கும் ஈரலுக்கும் நெருங்கிய சம்பந்தமிருப்பதால் இரைப்பையின் பலஹீனத்தினுலாவது அல்லது இரைப்பைக்குக் காணும் வியாதியினுலாவது மேற்கண்ட துர்க்குணங்கள் உண்டாகும். ஆகையால் சிகிச்சை செய்பவர் நிதானித்து இன்ன உறுப்பினுல் உற்பவித்த உபாதி என்பதைக் கண்டறிய வேண்டியது முக்கிய கடமையாம்.

## ஜீரணமும் ஜீரண உறுப்புகளும்.

நமது வயிறு இரண்டு துவாரங்கள் பொருந்திய ஓர் தோல் பை போல் தோன்றுகிறது. அதில் ஒரு துவாரத்தின் வழியாய் ஆகாரம் உட்சென்று, மற்றொரு துவாரத்தின் வழியாய் வெளிப்படும்.

தேகபோஷணைக்காகப் புசிக்கப்பட்ட பதார்த்தங்களைப் பக்குவப்படுத்தி, அதிலிருக்கிற ரஸம் ரத்தத்திற் போய்ச்சேரும்படி செய்கிற தொழிலுக்கு ஜீரணம் என்று பேர். ஜீரண உறுப்புகளாவன:—வாய், பல், உமிழ்நீர்க்கோளம், மிடறு, இரைக்குழல், இரப்பை, துணைக்குக்ஷி, குடல்கள், இரசாயனி, இரசதாரை, ஈரல், கணையம், பீலிகம் இவைகள் ஜீரண உறுப்புகளாம். இவைகளில் வாய் என்பது பற்களும் சுவைக்குரிய கருவிகளுமிருக்கும் ஓர் உறுப்பாம். நாவுக்கு அடியிலும் தாடையுள்ளும் காதுக்கு அடுக்கவும் பக்கத்துக்கு மூன்றாக இருக்கும் உமிழ்நீர்க்கோளங்கள் 6-ஆம். மிடறு என்பது அடிநாவிலிருந்து இரைக்குழல் மட்டும் ஓடியிருக்கிற ஓர் குழல். அது சவ்வு இலைகளாலுண்டாக்கப்பட்டதாய் மூன்று அங்குல நீளமுள்ளதாய் விசாலமுள்ளதாயிருக்கிறது. இரைக்குழல் என்பது ஒரு அடி நீளமுள்ள தடித்த ஜவ்வுக்குழலாம். அதன் வழியாய்ப் போஜனபானங்கள் இரைப்பையினுட் செல்லும். இரைப்பை (Stomach–ஸ்டமக்) யென்பது மெல்லிய இசிவுள்ள மூன்று சவ்வுப்படலங்களால் ஆகியது. அது நெஞ்சுக்குக் கீழே அடி வயிற்றிலே உடம்புக்கு நடுவாய்ச் சற்று இடப்பாகத்திலிருக்கிறது. அம்மூன்று படலங்களில் வெளிப்படலம் சம



முள்ளதாய் மிகவும் அழுத்தமுள்ளதாயிருக்கிறது. நடுப்படலம் நுண்ணிய இழைகளால் ஆகிய இரண்டு அடுக்குள்ளது. உட்படலம் அதிக விசாலமுள்ளதாய் மெதுவானதாய் அதிக மடிப்புகளுள்ளதாய் இருக்கிறது. அம்மடிப்புகளில் சளி பாவியிருக்கிறது. அந்த மடிப்பு சிறுகுடல் பெருங்குடல்களுக்கு உள்ளுறையாய் அவைகளின் தொடர் முழுதும் ஏகமாய்ப் பரந்திருக்கிறது. மற்றொரு ஜலப்பை குண்டிக்காய் முதலியவைகளுக்கு உள்ளுறையாயிருக்கிறது.

**இரசாயனி.**—என்பது சிறுகுடலின் உள்பக்கத்திலிருந்து கிளம்பிய சிறுகுழல்களாம். அவைகள் மணிக்குடலுக்கு ஊடாகச்சென்று இரச்தாரையிலே பொருந்துகின்றது.

**குடல்கள்.**—சிறுகுடல், பெருங்குடல் என இருவகைப்படும். அவைகள் துவாரமுள்ளது சிறுகுடல் (Small Intestines–ஸ்மால் இன்டெஸ்டைன்ஸ்) ஏறக்குறைய 25-அடி நீளமுள்ளதாய் தேகத்துக்கு 6-பங்கு நீண்டிருக்கும். இதில் 3-பிரிவுகளுண்டு, அவைகளாவன:—டியோடினம், ஜிஜூனம், இலியம். டியோடினம் (Duodenum) இதுவே துணைக்குக்ஷி. இது இரைப்பையைத் தொடர்ந்திருக்கும். 8 - அல்லது 10 - அங்குல நீளமுள்ளது; தீனிப்பைக்குப் பின்னுக இருக்கும்; இதில் ஏகோபித்த பித்தப்பைக்குழலும் (Common bile duct–காமன் பயில் டக்ட்) கணையக்குழலும் (Pancreatic duct–பான்கிரியாடிக் டக்ட்)சேர்ந்து முடிகின்றன. ஜிஜூனக்குடல்(Jejunum). இது துணைக்குக்ஷியைத் தொடர்ந்திருக்கும்; பிரேதங்களில் எப்போதுமிதில் ஒன்றுமிராது. இலியக்குடல் (Ileum) இதுஜிஜூனக்குடலைத் தொடர்ந்து பெருங் குடலில் போய் முடியும். உந்திஸ்தானத்திலும், அடிவயிற்றிலும், இடைக்குழியிலும் நிறைந்திருக்கும். சிறுகுடல்களுக்குள் விருத்தமாகவும் பிறைபோலவும் இருக்கிற ஜவ்வுமடிப்புகளுக்கு (Valvulæ Conniventes–வால்வியுலி கானிவேன்டிஸ்), அவைகளில் ரசாயனிகள் (Lacteals–லாக்டியலீஸ்) பாவி யிருக்கும்.

**பெருங்குடல்.**—(Large intestines—லார்ஜ் இன்டெஸ்டைன்ஸ்) இது நீளத்தில் 5–6 அடி நீளமுள்ளதாயிருக்கும். அடிவயிறு வலது பக்கத்துப் பள்ளத்திலிருந்து (Right Iliacfossa–

ரயிட் இல்லியக்பாஸா) ஆரம்பித்து (Cæcum–ஸீக்கம்,) மேலுக்கேறி உந்தி ஸ்தானத்தில் குறுக்காய்ச் சென்று, பிறகு இடது பக்கமாய்க் கீழ்க்கிறங்கி, இடது அடிவயிற்றுப் பள்ளத்தில் வளைந்து, திரிகஸ்தான எலும்புக்கு முன்பாகக் கீழ்க்கிறங்கி, குதத்தில் போய் முடிகின்றது. வலது பக்கம் ஊர்த்த முகமாய்ப் போவதற்கு(Ascending colon–அஸ்ஸெண்டிங் கோலன்) என்றும், குறுக்காக ஓடுகிறதற்கு (Transverse colon–ட்ரான்ஸ்வர்ஸ் கோலன்) என்றும், கீழ்க்கிறங்குகிற பாகத்திற்கு (Descending colon–டிஸெண்டிங் கோலன்) என்றும், வளைவிற்கு (Sigmoid flexure–ஸிக்மாயிட் பிளக்ச்சர்) என்றும், திரிகஸ்தான எலும்புக்கு முன் இருப்பதற்கு மலக்குடல் (Rectum–ரெக்டம்) என்றும், முடிவுக்குக் குதம், மலத்துவாரம், புவனவாய், ஆஸனம் அல்லது அபானம் என்றும், ஆங்கிலத்தில் (Anus–எனஸ்) என்றும் பேர். சிறுகுடலும் பெருங்குடலும் சேருகிறவிடத்தில் இரண்டு கவாடங்களுண்டு. அவைகளுக்கு (Ileocæcal Valves–இலியோ ஸீக்கல் வால்வ்ஸ்) என்றும், ஸீக்கத்தில் நாக்குப் பூச்சிபோல் சுருண்டிருப்பதற்கு (Appendix Vermiformis–அப்பெண்டிக்ஸ் வெர்மிபார்மிஸ்) என்றும் பேர்.

கல்லீரல்–மேல்வயிற்றில் வலது பக்கத்திலிருக்கிற உறுப்புக்குக் கல்லீரல் என்றும், ஆங்கிலத்தில் லிவர் (Liver) என்றும் பேர். இது ஈரல்குழியிலும் சென்றிருக்கும். தேகத்திலுள்ள உறுப்புகளுக்குள் இது பெரிது. மேற்புறம் உப்பலாயும், அடி குடைவாயுமிருக்கும். ஏறக்குறைய 6–சேர் நிறையுண்டு. நீளத்தில் 12–அங்குலமிருக்கும். முன் ஓரம் கூர்மையாயும் பின் உருண்டுமிருக்கும். இது பக்கத்து உறுப்புகளோடு ஜவ்வால் கட்டப்பட்டிருக்கும். ஈரலுக்கடியில் பார்வையிட்டால் 5-வெடிப்புகள் காணப்படும். (Fissures–பிஷ்ஷர்ஸ்) ஒன்றில் பித்தப்பை (Gall bladder–கால் பிளாடர்) ஒட்டிக்கொண்டிருக்கும். ஈரலுக்குப் பித்தநீரைச் சுரப்பிக்கிற குணமும் கெட்ட ரத்தங்களிலிருக்கிற தோஷங்களை நீக்குகிற சக்தியும் இருக்கின்றன. பித்த நீரைக்கொண்டு போகிற குழலுக்கு யகிர்தகண்டக்குழல் (Hepatic duct–ஹிப்பாடிக் டக்ட்) என்று பேர்.



கணையம்.—ஆங்கிலத்தில் (Pancreas–பான்கிரியஸ்) என்று பேர். இது தட்டையாய் 6-அங்குல நீளமுள்ளதாய் ஏறக்குறைய 4-அவுன்ஸ் பளுவுள்ளதாய் அன்னாசயத்திற்குப் பின்புறத்தில் குறுக்காக அமைந்திருக்கும். இதன் குழல் பித்தக் குழலுடன் தொடர்ந்து, துணைக்குக்ஷியில் முடியும். இந்த உறுப்பானது உமிழ்நீரைப்போன்ற ஓர் பதார்த்தத்தைச் சுரப்பிக்கின்றது. இதிலிருந்து சுரக்கப்படுகிற நீரே கொழுப்பாக மாறுகிறதென்று சிலருடைய சித்தாந்தம்.


பீலிகம்.—செவுரொட்டி, அல்லது மண்ணீரல் என்றும் ஆங்கிலத்தில் (Spleen–ஸ்பிளின்) என்று பேர். இந்த உறுப்பானது சிவப்பும் நீலமும் கலந்த நிறமாய் 5-அங்குல நீளமுள்ளதாய் 6-அவுன்ஸ் பளுவுள்ளதாய் பீலிகஸ்தானத்திலிருக்கும் ஓர் உறுப்பு. இந்த உறுப்பானது ரத்த நரம்புகளால் ஏற்பட்டு, கடற் பாசியைப்போல் மிருதுவாயிருக்கும்; அழுத்தித் தொட்டால் உடைந்துபோகும்; வெளிப்புறம் உப்பலாயும், உட்புறம் கொஞ்சம் குடைவாயும் தீனிப்பையோடிணைந்திருக்கும். இதின் பிரயோஜனம் இன்னும் செவ்வையாகத் தெரியவில்லை. இதிலிருந்து ஓர்வித நீரும் சுரக்கிறதில்லை. தேகம் குளிர்ந்திருக்கும்போது சருமத்திலிருக்கிற இரத்தம் இவ்வுறுப்பில் தங்கியிருக்குமென்று எண்ணப்படுகிறது. சீதஜுரத்தில் பீலிகம் பருத்துப் போனால் அதற்கு ஜுரக்கட்டி என்று சொல்வது வழக்கம்.

மேலே சொல்லிய ஜீரண உறுப்புகளின் தொழிலாவது, உடலை வளர்ப்பதற்குப் புசிக்கப்படும் போஜன பதார்த்தங்கள் பல்லுகளால் மெல்லப்பட்டு உமிழ்நீருடன் கலந்து விழுங்க அப்போது மிடற்றுக் குழல் வழியாய் இரைப்பைக்குட் செல்லும். அந்தப் பையில் அவைகள் நசுக்கப்பட்டு திரண்டு வரவர அந்தப் பையின் உட்பக்கத்திலிருந்துண்டாகும், புளிப்புள்ள நீருடன்கலந்து, நரைநிறமான பாகமாகச் சமைந்து, துணைக்குச்சிக்குட் சென்று, பித்தநீருடனேயும் கணையநீருடனேயும் கலந்து, பால்நிறமாகவும் மலமாகவும் மாறுதல் அடைந்து சிறு குடலுக்குள் செல்லும். அதிலுண்டாகின்ற சிறுகுழல்கள் அந்த ரசத்தை மட்டும் உறிஞ்சி, இதைக் காறை என்புக்குப் பின்னாலிருக்கிற ஒரு நாளத்துட் செலுத்தும். அந்த நாளத்தின் வழி சுவாசப்பை நாளத்துட் செல்லும். இங்ஙனம் சுவாசக்காற்றுப் பட்டு இரத்தமாக மாறிவிடும். மலமானது பெருங்குடலுக்குட் சென்று மலவாயில் வழியாக வெளியிற்

கழிந்துவிடும். நாம் உண்ட உணவானது மேற்கூறியபடி அநேகவித மான மாறுதல்கள் அடையவேண்டியிருப்பதால், போஜனம் இரைப் பையிற் போய்ச்சேர்ந்தவுடனே, நரம்புகளுடைய சக்தி ஜீரணஉறுப்பு களுக்குச் செல்லும், அப்பொழுது நமது தேகத்தின் தசைகளிலுள்ள பலங்குறைந்து தேகத்திற்கு ஆயாசமுண்டாகும். (போஜனம் செய் தவுடன் ஆயாசம் உண்டாகிறதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் அறிந்துகொண்டிருப்பார்கள்.) ஆகையால் உண்டவுடன் ஒவ்வொரு வரும் சிறிது நேரம் அமைதியாய் இருக்கவேண்டியது. அப்படிச் செய்வதினால் ஆகாரம் இலகுவில் ஜீரணமாவதுடன் நமது தேகத் திற்காதாரமான சுத்த இரத்தமும் உண்டாக ஏதுவாகிறது.

இன்னும் போஜனம் செய்தவுடன், கடினமான மனோமுயற்சி, தேகமுயற்சி, வாசித்தல் அல்லது சிந்தித்தல் முதலியன செய்யலாகாது. அப்படிச் செய்வதினால், நரம்புக்கூட்டத்தின் சக்திகள் யாவும் ஜீரண உறுப்புகளுக்குச் செல்ல, இயற்கைக்கு விரோதமாய் நாம் வேறு முயற்சியில் பிரவேசிப்பதினால் அவைகள் துர்ப்பலமடையும். இன் னும் சாப்பிட்டவுடன் சம்போகம் ஒருபோதும் செய்யலாகாது. அப் படிச் செய்வதினால், மூளை, இருதயம், இரைப்பை, பீஜம், குண்டிக்காய் முதலியவைகளும், துர்ப்பலப்பட்டு அதனதன் சக்தியை இழந்துபோவ துடன், அக்கினிமந்தம், வயிற்றுப்பிசம், வயிற்றுப்போக்கு, வயிற்று வலி, கால் மூட்டுகளில் வலி அல்லது இசிவு, அதிசாரம் அபதானகவாதம் முதலிய கொடிய நோய்கள் உண்டாகும். இதுபோலவே ஆகாரமெல் லாம் இரைப்பையிற் சென்று ஜீரணமாகி, இரைப்பை சும்மா இருக்கும் போதும் போகிக்கலாகாது. ஏனெனில் சம்போகத்தினால், ஆவி, ஆத்ம சக்தி, இரத்தம் முதலியன வெளிப்படுகின்றன வென்றும், இரைப்பை யில் ஆகார மின்றி வெறுமையாய் இருக்கும்போது உண்டாகும் புணர்ச் சியினால் நமது ஜீவனுக்கு ஆதாரமாகிய ஜீவாக்கினி அதிகமாய்க் குறை ந்து தேகபலமும் க்ஷீணித்துப்போம். இதனாலும் பல ரோகங்களுக் கிடமாகையால், போஜனஞ்செய்து மூன்று மணிக்குப்பின் புணர்ச்சி செய்வதே மிதம், இதுவே எல்லாத் தேகிகளுக்கும் இதம். இரைப் பையைப் பலப்படுத்தி தாதுவிர்த்தியையும், போகசக்தியையும் உண்டு பண்ணும் பதார்த்தங்களையும் அவுஷதங்களையும், அவுஷதபாக அட்ட வணையிற் பார்த்துக்கொள்ளவும்.






(சித்திரவிளக்கம்)

A. பெரியமூளை—Cerebrum. B. சிறியமூளை—cerebellum. C. முள்ளந் தண்டுக் கொடியின் சிகரம் –Medella oblongata. D. முள்ளந் தண்டுக் கொடி—Spinal Marrow. E. கண்ணு – Eye Ball. 1. மேல்வாய் – Upper jaw. 2. கீழ்வாய்–Lower jaw. 3. நாக்கு–Tongue. 4. மூக்குத்துவாரங்கள்–Nostrils. 5. அன்னவாகி, தொண்டைக் கடியிலிருந்து இரைப் பைக்குப் போகிற குழல்–œsephagus. 6. குரல் வளை–The Larynx. இதற்கு அடியிலிருப்பது சுவாஸக்குழல்–Wind pipe. 7. உமிழ்நீர்க் கோளம்–Parotid gland. 8. நாக்குக்கடியிலிருக்கிற உமிழ் நீர்க்கோளம் –Sublingual gland. 9. அன்னாசயம், இதுவே ஆமாசயம், தீனிப் பை, இரைப்பை-The Stomach. இதில் உண்ணுகிற பதார்த்தங்கள் வந்து விழுகின்றது. 10. யகிர்த கண்டம், இதுவே ஈரல் அல்லது கல்லீரல்–liver. பித்தத்தைச் சுரப்பிக்கிற ஓர் ஊறுப்பு. 11. பித்தாசயம் இதுவே பித்தப்பை—The gall bladder. இதில் பித்தநீர் இருக்கும். 13. அக்கினியாசயம் இதுவே–

துணைக்குக்ஷி – Duodenum. 14. கணையம்–Pan creas. 15, 15, 15, 15, மலாசயம், பெருங்குடல்–The large intestines இந்தக் குடல் மத்தியில் பாம்பு போல் வளைந்திருக்கிறது சிறுகுடல், இதுவே பக்குவாஸயம், பாகாஸயம்— The small intestines. 16. சிறு குடல் பெருங்குடலோடு சேருமிடம்–Gæcum. 17. பெருங்குடல் ஊர்த்த முகம்–Ascending colon. 18. பெருங்குடல் குறுக்கு–Transverse colon. 19. பெருங்குடல் அதோமுகம்–Descending colon. 20. குதம்–Rectum. 21. பீலிகம், இதுவே மண்ணீரல், கறுப்பீரல், செவிரொட்டி–Spleen. 22. கழுத்து முள்ளெலும்புகள்–Cervical Vertebræ.

குண்டிக்காய்.—மூத்திரக் குண்டிக்காய்கள், மூத்திர பிண்டங்கள் அல்லது பிருக்கங்கள். (Kidneys–கிட்னீஸ்) குண்டிக்காய் என்பது முள்ளந்தண்டுக்கருகே இருபக்கத்திலும் 4—5 அங்குல நீளமுள்ளதாயும், 1-அங்குலம் தளமுள்ளதாயுமிருக்கும். இதில் எப்போதும் கொழுப்பு ஒட்டிக்கொண்டிருக்கும். இது பார்வைக்கு மாம்பருப்பைப்போல் இருக்கும். 3-முதல் 5-அவுன்ஸ் எடையிருக்கும். இதை அறுத்துப் பார்த்தால் உட்பக்கத்தில் இரண்டுவித பதார்த்தங்கள் காணப்படும். ஒன்று இரத்த நரம்புகளால் ஏற்பட்டு சிவந்தும், மற்றொன்று குழல்களால் ஏற்பட்டு மொக்குகள்போலவுமிருக்கும். அந்த மொக்குள் முனைகள் உள்நோக்கி, சிறிய பள்ளங்களில் பிதுங்கி யிருக்கும். அம்மொக்குள்களுக்கு ஆங்கிலத்தில் (Cones–கோன்ஸ்) என்றும், முனைகளுக்கு (Papillæ–பாபில்லி) என்றும் பேர். இம்முனைகளில் சிறிய துவாரங்கள் காணப்படும். அத்துவாரங்களிலிருந்து சதா மூத்திரம் சுரந்துகொண்டே யிருக்கும். இப்படியாக ஏற்பட்டுள்ள குண்டிக்காயானது மூத்திரத்திலுள்ள அமுரியைப் பிரித்து விடுவதினாலே இரத்தம் சுத்தியாகின்றது. இன்னும் ஒவ்வொரு குண்டிக்காயினின்றும் ஒவ்வொரு குழலாய் இரண்டு குழல்கள் கிளம்பி அடிவயிற்றின் நடுவே கிடக்கும் ஜலப்பையை நாடியோடி அதினுடனே பொருந்துகின்றன. அக்குழல்களின் வழியாய் அமுரி சொட்டுச் சொட்டாய் இறங்கி ஜலப்பையை நிரப்பும், அதற்கு மூத்-



திரகுண்டிக்காய்க் குழல் (Ureter–யூரிடர்) என்று பேர். இது சற்றேறக்குறைய 11-அடி நீளமுள்ளது. இன்னும் மூத்திரக் குண்டிக்காய்களுக்கும் மூளைக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. இதுவுமன்றி அவை பீஜங்களோடு, விந்துவாகிகளினாலும் சம்பந்தப்பட்டிருக்கிறது. சுக்கிலத்திற் காதாரமான சுத்த இரத்தமானது குண்டிக்காய்களில் வந்து சிறிது சிகப்பு மாறி சற்று வெண்மையாகி பிறகு பீஜங்களிற் சென்று முழுவதும் பக்குவமாகி சுயமான சுக்கிலமாகிறது. இது காரணம் பற்றியே குண்டிக்காய்களுக்கும் பீஜங்களுக்கும் ஏகோபித்த சூடாக இருக்கப் பெற்றவர்களுக்கு விந்து விளைவு அதிகமாவதுந் தவிர போகசக்தியும் அதிகமாகிறது. இன்னும் குண்டிக்காய்க்கும் நமது மேற்போர்வையாகிய தோலிற்கும் நெருங்கிய சம்பந்தமிருப்பதாக யூகிக்கவேண்டி இருக்கிறது. அது எப்படியெனில் மூத்திரம் அதிகமாக இறங்கும்போது வியர்வை குறைவதும், வியர்வை அதிகமாகும்போது மூத்திரம் குறைவாக இறங்குவதுமாம்.

மூத்திரவர்த்தனகாரி அதாவது நீர் பேதிக்கு அடிக்கடி சாப்பிடுவதினாலும், அதிகமான புணர்ச்சியினாலும், குண்டிக்காய்களில் அடிபடுவதினாலும், துப்பாக்கிக்குண்டு அல்லது கத்தி முதலிய ஆயுதங்களினால் உண்டான காயங்களினாலும், அதிக தூரமான விடங்களுக்குப் பிரயாணஞ் செய்ததினால் உண்டான வருத்தத்தினாலும், நெடுந்தூரம் நடப்பதினாலும், குதிரை, துவிச்சக்கர வண்டி (Bicycle) முதலிய வாகனங்களில் தாறுமாறாய் ஏறிச்சவாரி செய்வதினாலும், இரத்தக் குறைவினாலும், உஷ்ணாதிக்கத்தினாலும், அதிகமான வாந்தி, அல்லது அதிகமான பேதி யாகுதல் முதலிய இன்னும் இவை போன்ற பல காரணங்களினாலும் குண்டிக்காய்கள் மெலிந்துபோம்.

குண்டிக்காய் துர்ப்பலப்பட்டிருந்தால் சாதாரணமாய் உண்டாகும் போக இச்சை குறைதல், விந்துவிற்குண்டான சுபாவமான வெண்மை நிறமில்லாதிருத்தல், புணர்ச்சிக்கு எத்தனிக்கும்போது மனம் திகில் அடைதல், அல்லது பயங்கரமான தொனி கேட்பது போல் தோன்றுதல், ஆண்குறி சோர்வடைதல், நீர் வெண்மை நிறமாயிறங்குதல், நீருக்கிருக்குஞ் சக்தி குறைதல், மாமிசத்தைக் கழுவின நீரைப்போன்ற


நீர் இறங்குதல், நீரில் வண்டல் படிதல், நீரின்மேல் நுரையுண்டாகுதல், தேகசக்தி குறைதல், இடுப்பின் பின்பக்கத்தில் இடைவிடாது நச்சு வலிமுதலிய குறிகளில் சிலவேனும்பலவேனும் காணும், அப்படியானால் அவை குண்டிக்காயின் பலஹீனத்தினாலுண்டான ரோகமென்றே அறிய வேண்டியது. குண்டிக்காயைப் பலப்படுத்தித் தாதுவிர்த்தியையும், போகசக்தியையும் உண்டுபண்ணும் பதார்த்தங்களையும் அவுஷதங்களையும் அவுஷத பாக அட்டவணையிற் பார்த்துக்கொள்ளவும்.

## இரத்தம் அல்லது உதிரம். (BLOOD.—பிளட்.)

கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எண்ணரிய சராசரங்களும் ஓர் வகைத் திரவத்தைக்கொண்டே இந்நிலவுலகில் உயிர்வாழ்கின்றன. அவற்றுள் புற்பூண்டு மரம் முதலிய தாவரங்கள் சிலதில் ஓர்வகை திரவமும், மற்றும் சிலதில் பால்போன்ற வெண்ணிறமான திரவமும் இருந்து அவற்றைப் போஷித்து வருகின்றன. அதுபோலவே, மனித சரீரத்திலும் மற்றுமுள்ள ஜீவப்பிராணிகளிலும் ஓர்வகை சிவந்த திரவம் ஐக்கப்பட்டிருக்கிறது. அத்திரவமே இரத்தமாம். இரத்தமானது சரீரத்திற்கு நூதன சம்பவமும் (Development) சரீரம் வளர்ச்சியடையவும், நமது தேகத்திலுள்ள பிரதி உறுப்புகளும் அதனதன் வேலையைக் கிரமமாய்ச் செய்வதற்கும் ஜீவன் நிலை நிற்பதற்கும் பிரதானமாம். இரத்தமானது நமது தேகத்தில் சுற்றிக்கொண்டிருக்கும்போது திரவ ரூபமாயிருக்கும். அதைத் தேகத்தினின்று வெளிப்படுத்தினால் துவைந்துவிடும். இரத்தத்தில் ஜலமும் அணுக்களுமுண்டு, இரத்த நீரில் சீரம் (Serum) என்கிற ஜலமும், பைபிரின் (Fibrin) லிம்ப் (Lymph) என்கிற இழைகளை யொத்த பதார்த்தங்களும் ஐக்கப்பட்டிருக்கிறது. இரத்தம் உறையும்போது பசையானது ரத்த அணுக்களைச் (Globules) சேர்த்து இறுக்கிக்கொள்ளும். அதற்குக் கிளாட் (Clot) என்று பேர். சீரமென்னும் ஜலத்தில் அல்பியூமன் (Albumen) என்னும் பதார்த்தமும், சில உப்புகளும், கொஞ்சம் கொழுப்பும் இருக்கின்றன. கிளாட் என்னும் உறைந்த ரத்தத்தில் பைபிரின் (Fibrin) என்னும் பசையான பதார்த்



தமும் ரத்த அணுக்களும் அடங்கியிருக்கின்றன. நமது இரத்தத்தில்



இந்தப்படம் ரத்தத்திலுள்ள சிவந்த அணுக்களைக் காண்பிக்கிறது.

2-விதமான அணுக்களுண்டு. அவ்வணுக்களை அணுதரிசனி, அதாவது தூரதிருஷ்டிக் கண்ணாடியினால் (Microscope) பார்வையிட்டால் அவைகளில் ஒன்று சிறுத்து சிவப்பாய், பக்கங்கள் அழுந்தி விஸ்தாரமாய் இருக்கும். மற்றொன்று பெருத்துவெள்ளையாய் குறைந்திருக்கும். சிவந்தஅணுக்களே ரத்தத்துக்கு நிறத்தைக்கொடுக்கின்றன. அவைகளில் அயம் உண்டு. அந்த அயம் குறைவதே பாண்டு ரோகம். அயம் குறைந்தால் ரத்தத்திலுள்ள பரமாணுச் சிற்றுயிர்களின் அளவு குறையும். பாண்டு ரோகத்தையுடைய ஒரு ஸ்திரீயின் ரத்தத்தைப் பரீக்ஷித்தபோது அதில் ரத்த அணுக்கள் 100-க்கு 46-பங்கு இருந்தபோது, அயஞ்சேர்ந்த அவுஷதங்களை அவளுக்குக்கொடுத்து மறுபடியும் ரத்தத்தைப் பரீக்ஷித்தபோது ரத்தஅணுக்கள் 100-க்கு 96-பங்காகத் தொகையில் அதிகப்பட்டு அவளுடைய வெளுத்த தேகமும் உதடுகளும் மாறி அவள் முகத்தில் வசீகரமுண்டானதாய்த் தெரிகிறது. இது பற்றியே சாதாரண ஜனங்களும் "இளைத்தவன் இரும்பைத்தின்பான்" என்று சொல்லுகிறார்



இந்தப்படம் ரத்தத்திலுள்ள வெண்ணிறமான அணுக்களைக்காண்பிக்கிறது.

கள். இரும்பு பலவகையிலும் மனிதர்கட்குப் பயன் படுகிறது. இரும்புச் சத்தாகிய மருந்துகள் சரீரத்துக்கு எவ்வளவோ நன்மையைப் பெருக்குவிக்கின்றன. அயம் ஜீரணசக்தியை அதிகப்படுத்துகிறது. ஜீரணக்கினி அவியாதிருக்கப்பண்ணுகிறது. ஆகவே மனுஷிய சரீரத்துள்ளே இவ்விதமாக அதிகமுக்கியமாயுள்ள இரும்புச் சத்தைச் சேகரித்து வைத்துக்கொள்ள ஒரு அவயவம் பிரத்தியேகமாக இருக்கிறதுபோற் காணுகிறது. இந்தத் தொழிலை மண்ணீரலுக்குக் கடவுள் அமைத்திருப்பதாகத் தெரிகிறது. ஒரு நாய் சாதாரணமாய் இருக்கும் பொழுது எவ்வளவு இரும்பை மலமூத்திரங்களின் வழியாய்க் கழிக்கிறதோ அதை விட இரண்டு பங்கு இரும்பை அதன் மண்ணீரலைப் பிடுங்கி எறிந்துவிட்டால் கழிக்கிறதென்றும், ஆகவே மண்ணீரல் இரும்பைச் சேகரித்து வைக்கும் தன்மையுள்ளது என்று ஜர்மனி தேசத்து டாக்டர் ஒருவர் அபிப்பிராயப்படுகின்றார். அறிவு வரும்

போது அபிப்பிராய பேதங்கள் வளருவதும், அதற்கேற்றவாறு கற்பனைகள் தோன்றுவதும் உலகத்திலே சகஜமாயிருக்கின்றது. ஜலத்தைப்பார்க்கிலும் ரத்தம் அதிக கனமுடையது. புருஷரைவிட ஸ்திரீகளுக்கு ரத்தம் கனத்தில் குறைந்திருக்கும். ரத்தத்திலிருக்கிற ஜலமானது, சீதோஷ்ணத்தினாலும், அலைச்சலினாலும், போஜனத்தினாலும், காற்றினாலும் அதன் அளவு பேதப்படும். ரத்தத்தின் பிரயோஜனமாவது சர்வாங்கத்தையும் போஷித்து ஆதரிப்பதேயாம். தேகபோஷணைக்குரிய பதார்த்தங்களெல்லாம் ரத்தத்திலிருப்பதால் அது தேகத்தில் வியாபிக்கும்போது அந்தந்த உறுப்புகள் தங்களுக்கு வேண்டிய பொருள்களைக் கிரகித்துக்கொள்ளும். அல்லது அந்தந்த உறுப்புகளுக்கு வேண்டிய பதார்த்தங்களை ரத்தம் கொண்டுபோய்க் கொடுக்கிறதென்றும் சொல்லலாம். அப்படிக்கு ரத்தமானது சர்வாங்கங்களிலும் பரவி, ஒவ்வொரு உறுப்புகளும் அதனதன் தொழிலைக் கிரமமாய்ச் செய்யும்படி செய்வதினால்தான் மூளையானது புத்தியைத் தருகின்றது. இருதயமானது ரத்தத்தைத் தேகமெங்கும் பரவச்செய்கின்றது. நுரையீரலானது கெட்ட ரத்தத்தைப் பரிசுத்தப்படுத்துகின்றது. இரைப்பையானது நாம் புசிக்கிற அன்னபானாதிகளை ஜீரணிக்கச் செய்கின்றது. யகிர்த கண்டமானது பித்த நீரைச் சுரப்பிக்கின்றது. சிறு குடலானது அன்ன ரசத்தைக் கிரகித்து அதை ரத்தத்தில் சேர்க்கின்றது. மூத்திரக்குண்டிக்காய்களும், சருமமும் ரத்தத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்களை மூத்திரம் வியர்வை ஆகிய இவைகளின் வழியாக வெளிப்படுத்திவிடுகின்றன. பீஜங்கள் இந்திரியத்தைச் சுரப்பிக்கின்றன. கருப்பையானது கருவை வளர்க்கின்றது. இவ்விதமாக ரத்தமானது சர்வாங்கத்தையும், அதனதன் தொழிலை அட்டியில்லாது செய்யும்படித் தூண்டுகிறது. இரத்த ஓட்டம் நின்றுவிட்டால் பிராணன் போய்விடும். இன்னும் இரத்தமானது தேகத்திலிருக்கிற பிரயோஜனமில்லாத பதார்த்தங்களைக் கிரகித்துக்கொண்டு இரத்த பரிசுத்த ஸ்தானமாகிய நுரையீரலுக்குக் (Lungs) கொண்டுபோகின்றது. நாடியிலிருக்கிற இரத்தம் சிவந்த நிறமானதென்றும், அதுவே பரிசுத்த இரத்தமென்றும், நாளத்தி



லிருக்கிற இரத்தம் கருத்திருக்குமென்றும், அதுவே அசுத்த இரத்தமென்றும் முன்னதாகவே தெரிவித்திருக்கிறோமாதலால் மீண்டும் அதைப்பற்றி இவ்விடத்தில் விவரிப்பது அனாவசியம். நாடி அறுபட்டால் பீச்சாங்குழலிலிருந்து பீரிடுவதுபோல் இரத்தம் பீரிட்டோடும். நாளம் அறுபட்டால் இரத்தம் கசியும். நமது தேகத்தில் சற்றேறக்குறைய 30-பவுண்டு இரத்தமிருக்கும்.

இருதயத்தினுடைய ஒவ்வொரு அறைகளும் சுமார் 4-அவுன்ஸ் இரத்தம் கொள்ளும். சுகஸ்திதியிலிருக்கிற ஒருபுருஷனுடைய இருதயத்தில் சப்த வேணுவைக் (Stethoscope) காதில் வைத்து உற்றுக்கேட்டால் ஒரு மினிட்டுக்குச் சராசரி 70-முதல் 80-ஆவர்த்தி அடித்துக்கொள்ளும். அதற்குக் கிரமநாடி (Regular pulse-ரெகுலர் பல்ஸ்) என்று பேர். இந்த அளவுக்கு அதிகமாய் அடித்துக்கொண்டால், படபடத்தநாடி (Frequent pulse-ப்ரீகுவண்ட் பல்ஸ்) என்று பேர். குறைந்து அடித்துக்கொண்டால் மந்தநாடி (Slow pulse-ஸ்லோ பல்ஸ்) என்று பேர்; நாடியின் விசை சுருக்காயிருந்தால் அதற்குத் தீவிரநாடி (Quick pulse-குவிக் பல்ஸ்) என்று பேர்; இருதயத்தின் அறைகளில் இரத்தம் குறைந்திருந்தால் நாடி நடை சுஷ்கித்திருக்கும். அதற்கு சுஷ்கநாடி (Small pulse-ஸ்மால் பல்ஸ்) என்று பெயர்; தீக்ஷிணவியாதிகளில் தீவிரமாயும், ரத்தக்ஷீண ரோகங்களில் மந்தமாயும் இருதயத்தின் நடை நடப்பது வழக்கம். ஆனால் குழந்தைகளுக்கு நாடி அதிக தீவிரமாக இருக்கும். அதாவது ஒரு மினிட்டுக்கு 120-முதல் 140-ஆவர்த்தி அடித்துக்கொள்ளும். ஸ்திரீகளுக்கு இருதய நடை அதிகமாயிருக்கும். நடக்கும்போதும், நிற்கும் போதும் இருதயம் சீக்கிரமாயும்; படுத்துக்கொண்டிருக்கும்போதும் நித்திரை செய்யும்போதும் மெதுவாயும் நடக்கும். இருதயத்திற்குக் கமலம் என்று ஒருபெயர் உண்டு. அதாவது கமலமாகிய தாமரை புஷ்பமானது சூரியனைக் கண்ட மாத்திரத்தில் விரிந்தும், சூரியனைக் காணாதபோது குவிந்தும் போவதுபோல், இருதயத்திலுள்ள மேல் அறைகள் இரண்டும் ஏககாலத்தில் குவியும், கீழறைகளும் அவ்விதமாகவே விரிந்து குவிவது பற்றியே, இருதயத்

தையும் "இருதய கமலமென்று" சொல்லப்படுகிறதுபோலும்.

இரத்த ஓட்டம் (Circulation of the blood—ஸிர்குலேஷன், ஆவ் தீ பிளட்) இருதயத்தின் இடது பக்கமிருக்கிற சிவந்த ரத்தமானது தேகமெங்கும் பரவி உறுப்புகளைப் போஷிக்கும். தேகத்திலிருக்கிற அப்பிரயோஜன பதார்த்தங்கள் ரத்தத்திற் கலந்து ரத்தம் கறுத்துவிடும். இவ்விதமாய்க் கறுத்துக் கெட்டுப்போன ரத்தமானது இரண்டு பெரு நாளங்கள் (Venæ cavæ—வீனிகேவி) வழியாய் இருதயத்தின் வலது சிரவத்திற்கு (Right Auricle—ரயிட் ஆரிகில்) வருகின்றது. அதிலிருந்து வலது சடாத்திற்கு (Right ventricle—ரயிட்வேன்டிரிகல்) இறங்கும். பிறகு அதிலிருந்து புப்புஸ நாடி வழியாய்ச் சுவாஸப்பைகுட் செல்லும். சுவாசப்பையில் இந்தக் கெட்ட ரத்தமானது, காற்று வாடைப்பட்டு தோஷம் நீங்கிச் சிவந்து நல்ல ரத்தமாகிவிடும். இவ்வாறு பரிசுத்தப்பட்ட ரத்தமானது பிறகு புப்புஸ நாளங்கள் (Pulmonary veins—பல்மோனேரி வெயின்ஸ்) வழியாய் இடது சிரவத்திற்கு (Left Auricle—லெப்ட் ஆரிகல்) வரும். அதிலிருந்து இடது சடாத்திலிறங்கும், பிறகு அதிலிருந்து பெருநாடி (Aorta—எயார்ட) வழியாகச் சென்று தேகமெங்கும் வியாபித்துக் கெட்டு மறுபடியும் இருதயத்திற்கு வருகின்றது. உதாரணமாக இரத்தத்திற்கிருப்பிடமாகிய நமது இருதயத்தை ஓர் ஏரியாகவும், அந்த ஏரியிலிருந்து கிளம்பும் பெரிய குழாயைப் பெருநாடி (Aorta) யாகவும், அதிலிருந்து ஒரு நகரத்தின் பலபாகங்களுக்கும் போகும் குழாய்களை ஆர்ட்டரி (Arteries) களாகவும், ஒவ்வொரு பிரிவிலுள்ள வீதிகள் ஒவ்வொன்றிற்கும் செல்லும் குழாய்களைச் சிறிய ஆர்ட்டரிகளாகவும், பிறகு ஒரு வீதிக்குச்செல்லும் ஓர் குழாயிலிருந்து அவ்வீதியிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் கிளைகளாகப்பிரிந்து செல்லும் மிகச்சிறிய குழாய்களைக் காப்பில்லரிஸ் (Capillaries) களுக்கும் சமானமாய்ச் சொல்லலாம். இவ்விதமாக இருதயத்தின் இடது பக்கமிருந்து உற்பத்தியாகும் எயார்டாவில் இரத்தம் அதிக வேகமாயும், பெரிய ஆர்ட்டரிகளில் இரத்தம் அதிலும் குறைந்த வேகத்துடனும், சிறிய ஆர்ட்டரிகளில் இரத்தம் அதைவிடக் குறைவான வேகத்துடனும்



காப்பில்லரிஸ்களில் இரத்தம் மிகமெதுவாகவும் ஓடுகிறது. இவ்விதமாக இரத்தமானது நமது சரீரத்தைச் சதா சுற்றிக்கொண்டே இருக்கிறதுடன், அவ்வவ்விடங்களிலுள்ள அழுக்குகளையும் கெட்ட பொருள்களையும் வெயின்ஸ் (Veins) என்னும் நாளங்கள் வழியாய்க் கிரகித்துக் கொண்டு, சிறந்த பண்டிதர்கள் கணித்திருக்கிறபடி அறுபதுகோடி யந்திரங்களுடைய நுரையீரலில் பிரவேசித்து நாம் சுவாசிக்கும் பிராணவாயுவினால் அங்கு பரிசுத்த இரத்தமாகித் திரும்பவும் இருதயத்திற்குச் சென்று அங்கிருந்து நாடிகள் வழியாய்த் திரேகத்தின் ஒவ்வொரு உறுப்புகளுக்கும் சென்று போஷிக்கும். இவ்விதமாக இரத்தம் இருதயத்திலிருந்து வெளியில் புறப்பட்டுச் சுற்றி வரும்போது நிமிஷ மொன்றுக்கு 207-கஜம் பிரயாணஞ் செய்கிறது. அதாவது, மணி யொன்றுக்கு 9-மைலும், தின மொன்றுக்கு 220-மைலும், வருஷமொன்றுக்கு 80,000-மைலுமாகிறது. ஓர்மனுஷியன் 84-வயதுடையவனா யிருக்கிறானென்று வைத்துக் கொள்வோம். அவனுடைய தேகத்திலுள்ள இரத்த அணு (Globule) அவன் ஜனித்த கால முதற்கொண்டு அவன் இரத்தத்திலேயே யிருந்திருந்தால் இதுவரையில் அந்த அணு 7000,000 மைல் யாத்திரை செய்திருக்கிறது. ஆ! என்ன வியக்கத்தக்க பிரயாணமிது!

நாம் உட்கொள்ளும் உணவானது இரைப்பைக்குட் சென்று ஜாடராக்கினியால் தகிக்கப்பட்டுச் சுத்தசத்து, அசுத்தசத்து என இருவகையாய்ப் பிரிந்து முற்கூறிய சுத்தசத்தே இரத்தமாயும், பிற்கூறிய அசுத்தசத்தே மலமாயும் கழிகிறது. கடிகாரத்திற்குக் (Time piee) குறித்த காலங்களில் சாவி (Key) கொடுக்கவேண்டியது நிரம்ப அவசியமாயிருப்பதுபோலவே நமது தேகமாகிய ஜீவயந்திரத்திற்கும், உண்டி என்னும் சாவி கொடுக்கவேண்டியிருக்கிறது, அப்படிக்கின்றேல் சாவி கொடுக்கப்படாத கெடியாரமானது எப்படி நடைபெறாதோ அதுபோலவே நமது தேகமும் நடைபெறாதொழியும். இதுபற்றியே, "அன்னம் ஒடுங்கினால் ஐந்தும் ஒடுங்கும்" "அன்னமயம் பிராணமயம்" "ஊணற்றபோதே உடலற்றுப்போம்" "உண்டவன் உரஞ் செய்வான்" "உண்டார்மேனி கண்டால் தெரியும்" "ஊணினால் யுத்தி பூணினால் ஜாதி" எனப் பலவாறாகப் பெரியோர் கூறி

யிருக்கிறார்கள். ஆகையால் உணவு குறைந்தால் உதிரங்குறையும், உதிரங்குறைந்தால் தேகத்தின் சக்தி குறைந்து, ஒவ்வொரு உறுப்புகளிலும் பலக்குறைவு உண்டாகும். இரத்தக்ஷீணத்தினால், அஜீரணம், சோகை, காமாலை, பாண்டு, மகோதரம், பக்ஷவாதம், சர்மரோகம் முதலிய இவைபோன்ற இன்னும் பல வியாதிகளும் உண்டாகும், இன்னும் இரத்தக்குறைவினால் இரத்தத்தின் சாரமாகிய சுக்கிலம் குறைந்து, ஆண்குறி தளர்ந்து, ஆண்மை அழிந்து போகசக்தி குறைந்துபோம், நம்மில் அநேகர் "திரைகடலோடியுந் திரவியந்தேடு" என்னும் பொய்யா மொழியைப் பின்பற்றி பல்லாயிர மைல்களுக்கப்பாலுள்ள அன்னிய நாட்டிற்குக் கப்பல் ஏறி, கடல்யாத்திரை செய்து தீவாந்திரங்களை அடைந்து அங்கு அடிமைத்தொழில் செய்து செப்பவொண்ணாத சிரமப்பட்டுப் பணம் சம்பாதிக்கிறோம். இதற்காக உயிரை முதலாய் அத்தீவில் இழக்கிறோம். ஆனால் மதிப்பறியா மாணிக்கம் போன்ற இரத்தத்தைத் தமது சரீரமாகிய பொக்கிஷத்தில் சிறிது சிறிதாய்ச் சேர்த்துவைக்க முயற்சியற்றவர்களாய் இருக்கிறோம். கொஞ்சகொஞ்சமாய்ப் பணம் சேர்க்க எவ்வளவு காலம் முயற்சி எடுக்கிறோம். அதுபோலவே இந்த இரத்தமாகிய இரத்தினத்தைப்பாதுகாத்து நோய் என்னும் கள்வர் கையில் சிக்கிக் கஷ்டமடையாதிருக்க முயற்சி எடுக்கிறோமில்லை. தாவரங்களிலுள்ள திரவப்பசை வறண்டு போனவுடன் அம்மரஞ் செடிகொடிகள் எங்ஙனம் பட்டுப்போகிறதோ அதுபோலவே இரத்த ஓட்டம் இருக்கிறவரையில் பிராணனிருக்கும். அது நின்றுவிட்டால் பிராணன் போய்விடும். உற்றுப்பார்த்தால் உதிரமே உயிர். இங்ஙனம் உயிருக் குயிராயுள்ள உதிரத்தைக் கண்ணைக்காத்து வரும் கண்ணிமைகளைப்போல் ஒவ்வொருவரும் பாதுகார்த்து வரவேண்டியது நிரம்ப அவஸ்யம். இரத்தத்தை விருத்திசெய்யக்கூடிய பதார்த்தங்களையும், அவுஷதங்களையும், அவுஷதபாக அட்டவணையிற் பார்த்துக் கொள்ளவும்

"That Blood is life is true and Sure
Therefore, O Man ! Preserve it Pure."



## சருமம் (SKIN—ஸ்கின்)

சருமம், தோல் அல்லது தோலி எனப்பல நாமம் பெறும். மனித சரீரத்தின் தூண்களும், உத்திரங்களுமான அஸ்திகள், அஸ்திபந்தனங்கள், தேகத்திலுள்ள உறுப்புகள், அவ்வுறுப்புகளின் தொழில்கள் முதலியவைகளைப்பற்றி இதுவரையில் சிறிதளவு கூறினோம். இப்போது அவ்வுறுப்புகளின் மேல் போர்வையாகிய சருமத்தின் சுபாவத்தையும் அதன் பிரயோஜனத்தையும் பற்றிச் சிறிதளவு இதனடியில் கூறுவோம். நமது கண்ணுக்குப் புலப்படும் சரீரத்தின் மேல் பாகத்திலிருக்கும் ஸ்பரிச இந்திரியத்திற்குச் சருமம் அல்லது தோல் என்று பேர். இது சரீரத்துக்குள்ளிருக்கும், எலும்பு, தசை நார், நரம்பு, இர்த்தாசயம், இரைப்பை, குடல், நுரையீரல் முதலிய உறுப்புகளைப்பாதுகாக்கும் ஒருவிதப் பைபோன்ற கவசமாயிருப்பதோடு, மழை, பனி, வெயில் முதலியவற்றால் சரீரத்துக்குள்ளிருக்கும் மிக்க நுட்பமான உறுப்புகளுக்கு யாதொரு கெடுதியும் உண்டாகா வண்ணம், பாதுகாக்கும் ஓர் போர்வையாகவுமிருக்கிறது. இது மேல்தோல் என்றும், உட்தோல் என்றும் இருவகைப்பட்டது. உட்தோலில் இரத்தக் குழாய்கள், ஸ்பிரிச நரம்புகள் முதலியன நவிலக் கூடாதவண்ணமாய் அடர்ந்து படர்ந்திருக்கின்றன, உட்தோல் மேல்தோலைவிட அதிக கனமுள்ளது. மேல்தோலை அம்பட்டன் கத்தியால் வழிக்கும்போதும், கைகளால் சொரிந்துகொள்ளும்போதும், யாதொருவிதமான வலியாவது உபத்திரவமாவது உண்டாகாமல் மேற்சொன்ன கத்தி அல்லது ஊசி உட்தோலில் படும்போது சகிக்க முடியாத வலியும், துன்பமும் உண்டாவதற்குக் காரணம் அதில் அடர்ந்து படர்ந்திருக்கும் இரத்தக் குழாய்களும் ஸ்பரிச நரம்புகளுமேயாம். மேல் தோலுக்கும் உட்தோலுக்கும் மத்தியில் ஒருவித பசையுள்ள பதார்த்தமிருக்கிறது. அதற்குச் சருமமத்திய பதார்த்தம் (Retemucosum) என்று பேர். இது சருமத்திற்கு நிறத்தைக் கொடுக்கிறது. உஷ்ணப்பிரதேசத்தவர்களுக்கு இந்தப் பதார்த்தம் கருத்தும், சீதளப் பிரதேசத்தவர்களுக்கு வெளுத்தும், அமெரிக்காகண்டத்தவர்களுக்குத் தாம்பிரநிறமாயுமிருக்கும். இக்காரணத்தினாலேயே சீதோஷ்ணங்களுக்குத் தக்கபடி தேச

வாசிகளின் தேகம் கருத்தும், வெளுத்தும், சிவந்துமிருக்கிறது. சருமமானது, தண்ணீர், எண்ணெய் முதலிய திரவபதார்த்தங்களை, உள்ளுக்குள் உறிஞ்சிக்கொள்ளும் சக்தியுடையது. அது எவ்விதமெனில் தாகவிடாயால் வருந்துகிறவர்கள் சுத்த ஜலம் கிடைக்காதபோது உப்புத் தண்ணீரில் ஸ்நானம் செய்வதால் தாகசாந்தி யடைகிறார்கள். இன்னும் அருந்துவதற்கு அருவருப்பான அவுஷதங்களைச் சருமத்தின் மேல் தேய்ப்பதை உங்களில் அநேகர் கண்டும் கேட்டுமிருக்கலாம். இவ்வாறு மேலே தேய்க்கப்படும் வஸ்துக்கள் தேகத்துக்குட் செல்வதற்கு அநேக நுண்ணிய சிறு துவாரங்கள் அளவு சங்கையின்றி அமைந்திருக்கின்றன. உட்தோலுக்கடியில் கொழுப்புண்டு, அதில் ஸ்வேதகோளங்கள்(Sweat Glands–ஸ்வேட் கிளாண்ஸ்)அமைந்திருக்கும். அவைகளில் உண்டாகிற வேர்வையானது சருமத்தின் மேலிருக்கும் நீர்க்கால்களின் வழியாய் வெளியாகின்றன. நமது தேகத்தில் சில பாகங்களில் ஒரு ரூபாய் அளவுள்ள பாகத்தில் அவ்வகையான நீர்க்கால்கள் 3000-இருக்கும். தேகத்தின் அசுத்தங்களை வெளிப்படுத்தும் பொருட்டு அந்நீர்க்கால்களின் மூலமாக எந்நேரமும் நீர்ப்பாய்ந்துகொண்டே இருக்கின்றது. தேகம் அதிக உஷ்ணங் கொண்டிருந்தால் அந்நீர் அதிக அளவாக வெளிப்பட்டுச் சருமத்தின் மீது துளி துளியாகக் காணப்படும். இன்னும் சருமத்துக்குள் சுவேத கோளங்கள் இருப்பதுபோலவே நிணக்கோளங்களுமுண்டு (Sebiparous Glands–ஸெபிபேரஸ் கிளாண்ட்ஸ்) அவைகள் ரோமக்கால்களிலொட்டிக்கொண்டிருக்கும். அவைகளுக்குப் போஷணை அக்கோளங்களைச் சுற்றிலும் ஓடும் இரத்தக் குழாய்களின் வழியாய்க் கிடைக்கிறது. இக்கோளங்களிலிருந்துண்டாகும் ஒருவகை எண்ணெய்தான் சருமத்துக்கு மிருதுவையும், மினுமினுப்பையும், தளுக்கையும் தருகிறது. இக்காரணம்பற்றியே, முன்சீப், ஸ்ரீமான்-வேதநாயகம் பிள்ளையவர்கள்,

“மேனிமுழுதும் வெளி வேஷத்தின் தளுக்கு
மினுக்கெண்ணெய் பூசியே காட்டுவார் தளுக்கு
ஈனமறவே தினந்தினந் தண்ணீர் முழுக்கு
இல்லாவிடிலோ கப்பல் ஏற்றலா மழுக்கு.”



எனக் கூறியிருக்கிறார்கள். மேற்கூறிய நிணக் கோளங்களிலிருந்துண்டாகும் மினுக்கெண்ணெய் குறைந்தால் நமதுதேகம் வறண்டு, சொறி, தினவு முதலியவைகளுண்டாகும். ஆகையினாலே பரமபதியாகிய பண்டிதர் அவ்வகைக் கோளங்களைச் சிருஷ்டித்திருக்கிறார். வயது சென்றவர்களுக்கும், இரத்தக்ஷீண முடையவர்களுக்கும் மேற்கூறிய கோளங்களில் போதிய இரத்தபோஷணை யில்லாததினால் அக்கோளங்களிலுள்ள மினுக்கெண்ணெய் குறையும்.அந்த எண்ணெய் குறையவே சருமம் தளர்ந்து திரைந்து சுருங்கிப்போம். சருமமானது மேற்கூறியபடி சிருஷ்டிக்கப்பட்டிருப்பினும், அது ஒரே தன்மையுடையதாயிராமல் சில விடங்களில் கனமாயும், சிலவிடங்களில் நுண்மையுடையதாயுமிருக்கிறது. உதாரணமாகத் தேகத்திலுள்ள மூட்டுகள் மனதுக்கிசைந்தபடி இயங்கவேண்டி யிருப்பதினால் அவ்விடங்களிலுள்ள வெளித்தோல் தளர்ச்சியும், சுருக்கமுமாயிருக்கின்றது. நாம் ஓடித்திரிவதற்கு உதவியாயிருக்கும் உள்ளங்காலும், பதார்த்தங்களை எடுத்து ஆள்வதற்கு அனுகுணமாக உண்டாக்கப்பட்டிருக்கும் உள்ளங்கைத்தோலும் காய்த்து மரத்துத் திமிர்த்துப்போய் இருக்கிறது. கண்ரெப்பை, ஆண்குறி, பீஜம் முதலிய ஸ்தானங்களில் சருமம் மிகவும் மிருதுவாயிருக்கிறது. ஆண்குறியின் சருமமானது மற்ற (பீஜப்பை தவிர) பாகங்களிலுள்ள சருமங்களைக்காட்டிலும் ஓர் அரிய சக்தியோடு கூடியதாய் அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது சீதோஷ்ண வேறு பாட்டினால் ஆண்குறியானது சம்போக காலங்களில் நீள்வதும், மற்ற காலங்களில் சுருங்கிப்போவதுமாம். இதுயாவருக்கும் அனுபவத்தில் தெரிந்த விஷயமே .ஆனால் இதரவிடங்களிலுள்ள சருமமானது இதைப்போல் நீளவும் சுருங்கவும் சக்தியுடையதாய்இருக்கவில்லை. இக்காரணத்தினால் தேகத்திலுள்ள சருமங்களைக் காட்டிலும் ஆண் குறியின்மீது அமைக்கப்பட்டிருக்கும் சருமமானது ஓர்வித அரிய பெரிய சக்தியோடு அமைக்கப்பட்டிருக்கிறதென்பது யாவரும் மறுக்கக்கூடாத விஷயமேயாகும்.


சருமத்தின்மீது உஷ்ணமளக்குங்கருவியை (Thermometer) வைத்துப் பார்த்தால் 98-முதல் 100-டிக்கிரி அளவுள்ளதாய் இருக்கும். மனிதன் எந்தத் தேசத்திற்குப் போனபோதிலும், எவ்விடத்தி

விருந்தபோதிலும் இந்தக் கிரமத்திற்கு விகற்பம் ஏற்படாது. இரத்த உஷ்ணம், (Blood Heat) சுமார் 98-முதல் 100-டிக்கிரி அளவுள்ள தாய் இருக்கும். தேக உஷ்ணம் நிசேஷமாய்க் குறைந்துபோனால் பிராணன் போய்விடும். தேக உஷ்ணம் அளவுக்கு மீறி அதிகமானால் அதுவே ஜுரமாம். ஆகையால் மிதமான தேக உஷ்ணம் பிராணாதாரத்திற்கு இன்றியமையாத அடையாளமாம். மேற்கூறிய சமஅளவினதாகிய தேகோஷ்ணத்திற்கு இரத்தமே இன்றியமையாதது. ஆகையால் தேகத்தில் இரத்தம் குறைந்தாலும், அல்லது இரத்தம் அசுத்தமானாலும், அளவுக்கு மிஞ்சிய போகத்தாலும், ரோகஸ்திரீகளின் சம்போகத்தாலும், தேகத்திலுள்ள பிரதி உறுப்புகளும்கெட்டுத் தத்தம் தொழிலை இழந்து பலரோகங்களுக்கும் இடமாவதுந் தவிர சருமத்தின் மீது, வெள்ளை, சிவப்பு, கறுப்பு நிறமுள்ள மேகப்படைகளும், சொறி, பருவுபோன்ற உஷ்ணரோகங்களும், சருமத்தில் சுரணையற்று, திமிர்த்து வெடித்துப் புண்புரை முதலியவைகளும் காணுவதுண்டு. ஆகையால் ஒவ்வொருவரும் பிரதிதினமும் சுத்த ஜலத்தில் ஸ்நானம்செய்து வரவேண்டும். சுத்த ஜலத்தில் ஸ்நானம் செய்யப் பழக்கமில்லாதவர்களும், வியாதியால் உடல் மெலிந்திருப்பவர்களும், பாலர்களும் விருத்தர்களும் வெந்நீரில் ஸ்நானம் செய்யவேண்டும். ஸ்நானம் என்பது விருதாவாய் ஜலத்தில் முழுகி எழுந்திருப்பதல்ல. பின் என்னவென்றால் நமது சருமமுழுதும் அளவு சங்கையின்றி அமைக்கப்பட்டிருக்கும் ஸ்வேதக்கோளங்கள், நிணக்கோளங்கள் முதலியவைகளினின்று சதா வெளிப்பட்டுக்கொண்டிருக்கும் அசுத்தமும் விஷத்தன்மையுமுள்ள பதார்த்தங்கள் கிரமேணாய் வெளிப்படும்படியாகச் சருமத்தில் படிந்திருக்கும் அழுக்கு முதலியவைகளைப் போக்கவேண்டியது நிரம்ப அவசியமாம். அப்படிச் செய்யாவிட்டால் சருமத்தின்மேல் படிந்திருக்கும் அழுக்கும் விஷத்தன்மையுமான பதார்த்தங்களும் திரும்பவும் தேகத்துக்குள் பிரவேசிக்கிறதற்கும், மேற்சொன்ன கோளங்களின் துவாரங்கள் அழுக்கினால் அடைபட்டுப்போய் அநேக வியாதிகளுண்டாவதற்கும் அதுவே மூலமாகும். தேகத்தின் சாமான்யபாகங்களுக்கே இப்படியானால் நவிலமுடியாத நரம்புகளாலும், அதிநுட்பமான சருமத்



தாலும் அமைக்கப்பட்டிருக்கும் ஆண்குறி முதலியவைகளைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! அநேகர் அவகாசமின்மை, அறியாமை, சங்கோஜம் அல்லது சோம்பல்முதலிய இவைபோன்ற இன்னும்பலவகைக் காரணங்களினால் ஸ்நானஞ்செய்யும்போது அப்பாகத்தைத் தேய்த்து சுத்தம்செய்யாது விட்டு விடுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நாளடைவில் நீர் அண்டம், விரைவாதம் முதலிய வியாதிகளுண்டாவதுந் தவிர, ஆண்குறி தளர்ந்து மெலிந்து ஆண்மையழிந்து போக சக்திகுறைந்துபோம். ஆகையால் மேற்கண்டபடி மர்மஸ்தானங்களைத் தேய்த்துச் சுத்தஞ்செய்துகொண்டு வருவதினால் அப்பாகங்களில் இரத்தம் அதிவேகமாயோடி ஆண்குறி முதலியன வலுத்துப் பெருத்துப் போகசக்தி யதிகரிக்கும்.

## புருஷஜனனேந்திரியங்கள், (MALE ORGANS OF GENERATION—மேல் ஆர்கன்ஸ் ஆவ் ஜனரேஷன்)




இந்தப்படம் இடைக்குழியிலிருக்கிற புருஷர்களின் ஜனனேந்திரிய உருப்புகளைக் காண்பிக்கிறது.

2. திரிகஸ்தான எலும்பு. 3—4. மூத்திரப்பை 6. மூத்திரக் குண்டிக்காயின் குழல். 13—14. மூத்திரதாரை 19. இந்திரிய கமலம். 16-18 24. குதம். 20. இந்திரிய கமலக்குழல். A. ஆண்குறி B. விருஷணம்.

இடைக்குழியைப்பற்றி நாம் முன்னதாகவே, 4-வது பக்கத்தில வரைந்திருக்கிறோமாதலால் இப்போது அவ்விடைக்குழியிலமைக்கப்பட்டுள்ள புருஷர்களின் ஜனனேந்திரியங்களைக் குறித்து யோசிக்க வேண்டியிருக்கிறது. இடைக்குழியில் மலக்குடல், மூத்திரப்பை

மூத்திரதாரை, இந்திரிய கமலம், இந்திரிய கமலக்குழல், குதம், ஆண்குறி, விருஷணம் ஆகிய இவைகளிருக்கின்றன.

ஆண்குறியானது, கோசம், சிஸனம் அல்லது வீணாதண்டு (Penis-பீனிஸ்) எனப் பல நாமம் பெறும், இது துடிநரம்பு, வெண்ணரம்பு, புழை நரம்பு, ஸ்பரிச நரம்பு ஆகிய இவைகள் சேர்ந்தமைக்கப்பட்டிருக்கிறது. இதில் நரம்புகள் அதிகமாகவும் மாமிசம் குறைவாகவுமிருக்கின்றன. ஆண்குறியை 3-பாகமாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. ஆண்குறியின் அடிப்பாகம் அதாவது எலும்போடு ஒட்டிக் கொண்டிருப்பதற்கு அடி (Root-ரூட்) என்றும், மத்தியபாகத்திற்கு தண்டு (Body-பாடி) என்றும், முனைக்கு லிங்கம், மணி, பூ அல்லது மொட்டு (Glans Penis-கிளான்ஸ் பீனிஸ்) என்றும் பேர். லிங்கத்தை மூடிக்கொண்டிருக்கிற மிருதுவான தோலுக்கு லிங்ககவசம் (Prepuce-ப்ரிப்யூஸ்) என்றும் பேர். லிங்கத்தின் முனையிலிருக்கிற வெடிப்பே நீர்த்தாரையின் வாய், சிரசின் முனையிலிருந்துண்டாகி முள்ளந்தண்டு வழியாய் கீழுக்கிறங்கி வந்திருக்கிற நான்கு வெண்ணரம்புகளினால் கோசமானது இடுப்பெலும்போடு சம்பந்தப் பட்டிருக்கின்றது. இந்த நரம்புகளினாற்றான் ஆண்குறிக்கு அசைதல் முதலாகிய கிரியையுண்டாகிறது. அவற்றில் இரண்டு நரம்புகள் ஆண்குறியின் இருபக்கத்திலும் பக்கத்திற்கொன்றா யிருக்கின்றன. சம்போக காலத்தில் அந்நரம்புகள் பருத்து விரைத்துக் கொள்ளும். அப்போது ஸ்கலிதக்குழல் நீர்த்தாரை முதலியவைகள் விசாலமாகி இந்திரியம் இலகுவாய் வெளிப்பட இடமாகிறது. மற்ற இரண்டு நரம்புகளும் ஆண்குறியின் அடியில் வளைவாய் சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கின்றது. அந்நரம்புகளிரண்டும் பிகுவடையும் போது ஆண்குறி விம்மலுண்டாகும். ஆண்குறியில் ஓடுகிற இரத்த நரம்புகளில் இரத்தம் குறைந்திருந்தால் ஆண்குறியின் எழுச்சி குறைந்து துவண்டுபோம். அதிக இரத்தம் நிறைந்தோடும்போது மலர்ந்துவிடும். சந்தானவிருத்திக்கு சுக்கிலமானது கருப்பையிற் செல்லவேண்டியது அவசியம். அப்படிச் செல்வதற்கு ஆண்குறி எழுச்சியடையவேண்டியது நிரம்ப அவஸ்யம். ஆண்குறியானது சுபாவமாய் எழுச்சியடைவதற்கு ஆவி, ஆத்மசக்தி, இரத்தம் ஆகிய இம்மூன்றும் இன்றியமையாதனவாம். முற்கூறிய மூன்றும் ஆண்குறியிற்



செல்லாவிட்டால் ஆண்குறி பருத்து போகசக்தி யுண்டாகாது. ஒரு வேளை வாயுவினாலாவது, நீர்ப்பையில் நீர் நிறைந்திருப்பதினாலாவது ஆண்குறி பருத்திருப்பினும் சம்போகம் செய்ய சாத்தியப்படாது.

எப்படியெனில் இரத்தத்தில் வாய்வு அதிகரிப்பதனாலும் நீர்ப்பையின் வாய்க்கருகிலுள்ள இரண்டு கோளங்களிலுள்ள, சுகநீர் முதலியன மிகுதியாய் உண்டாவதினாலும் ஆண்குறி விம்மலுண்டாகும். இன்னும் காலை நேரத்தில் நித்திரைவிட்டெழுந்திருக்குமுன், 51-வது பக்கத்தின்படத்தில் காட்டப்பட்டிருக்கிறபடி, 3-4, மூத்திரப்பையில் மூத்திரமும், 16-18, மலக்குடலில் மலமும் நிறைந்திருக்கும்பொழுது அவற்றின்நடுவிலுள்ள, 19-இந்திரியகமலத்தை நெருக்குவதினால் ஆண்குறி நரம்புகளுக்குக் கிளர்ச்சியுண்டாகி, ஆண்குறி விம்மலடைகிறது. இன்னும் மல்லாந்து படுத்துக்கொள்ளும் பொழுதும், மூத்திரப்பை இந்திரியகமலத்தை அழுத்துவதால் ஆண்குறி விம்மலுண்டாகும். இவ்வித காரணங்களினால் எழுச்சியுண்டாவதெல்லாம் அசுபாவமானதேயாம். ஏனெனில், இவ்விதக் கிளர்ச்சிகளினால் ஆண்குறியின் நரம்புகளில் போதுமான இரத்த ஓட்டமில்லாமையால் ஆண்குறி நீண்டு, மொத்தமாகி, கெட்டியாய்ப் புணர்ச்சிக்கு உபயோகப்படுவதில்லை. முற்கூறியபடி ஆவி ஆத்மசக்தி இரத்தம் ஆகிய இம்மூன்றும் கூடினாற்றான் ஆண்குறி சுபாவமாய்க் கிளர்ச்சியடைந்து போகத்திற்குபயோகமாகும். கோசமானது விம்மும்போது பருமனாகுங்குணம் ஈரல், (Liver) இரைப்பை, (Stomach) குண்டிக்காய், (Kidney) முதலியவைகளிலிருந்தும், எழுச்சியாகும் குணம் மூளை (Brain) முள்ளந்தண்டுக் கொடி நரம்புகளில் (Spinal cord) இருந்தும், கெட்டியாகுங்குணம் இருதயத்திலிருந்தும் உண்டாகின்றன. முக்கியமாய் ஆண்குறியின் பிரயோஜனமாவது யாதெனில் ஈரல், நரம்புகள், குண்டிக்காய்கள், பீஜங்கள், விந்து வாகிகள் ஆகிய இவைகளிலுள்ள மிச்சமாகிய கழிவுகளை வெளிப்படுத்துவதும் விந்துவைக்கருப்பையிற் சேர்ப்பதுவுமேயாம்.

## நீர்த்தாரை, (URETHRA—யூரித்திரா)

நீர்த்தாரை, ஜலத்துவாரம், அல்லது மூத்திரதுவாரம் எனப் பல நாமம் பெறும். லிங்கத்தின்மேல் மத்தியிலிருக்கிற நீண்ட வெடிப்புக்கு

அல்லது துவாரத்திற்கு நீர்த்தாரை என்றும் அதன் பக்கங்களுக்கு உதடுகளென்றும் பெயர். நீர்த்தாரையானது சுமார் 8 அங்குலம் நீள முடையதாய், மியுகஸ் மெம்பிரேன் என்னும் ஜவ்வால் ஏற்பட்டு, மார்க்கம்வளைந்து மூத்திரப்பையோடு (Bladder) சேர்ந்திருக்கும். அந்த ஸ்தானத்தில் இந்திரிய கமலக்குழல்கள் வந்து முடிந்திருக்கும். மூத்திர தாரையானது ஏக சமனுயிராது ஓரிடத்தில் சிறுத்தும் ஓரிடத்தில் விரிந்தும் வாய் மெத்த சிறுத்துமிருக்கும். துவாரத்தின் வாயில் இருந்து சுமார் ஒன்றரை அங்குலத்திற்கு அகத்தில் சிறிய கோளங்களுண்டு. அதுவே சுகநீர்க்கோளங்களாம்.

சுகநீர்க் கோளங்களிலிருந்தே சம்போகத்திற்கு முன் பிசுபிசுப் புள்ளதும், தடிப்புள்ளதும் வெண்மையுமான ஓர்வித நீர் வெளிப்படும் அதனையே சுகநீர் என்று சொல்லப்படும். பிரமேகவியாதி (Gonorrhœa) களில் அக்கோளங்களிலிருந்துதான் சீழ் (வெள்ளை) வடியும்.

## பீஜம், (TESTICLE—டேஸ்டிகில்)

பீஜம், அண்டம், வித்து, விதை அல்லது விருஷணம் என்று பலநாமம் பெறும். பீஜமானது பக்கத்துக் கொன்றாய் நாடிகள், நாளங்கள், நரம்புகள் விந்துவாகி ஆகிய இவைகள் சேர்ந்து உண்டான பீஜக் கொடியானது இதைத் தொங்கவைத்துக் கொண்டிருக்கும். இந்தக் கொடியானது பீஜத்திலிருந்து மேலுக்கேறிப் பீஜக்கொடி துவாரவழி யாகச் (Spermatic Canal) சென்று வயிற்றுக்குள் இறங்கிவிடும். இதை ஜவ்வு சுற்றிக்கொண்டிருக்கும், இடது பக்கத்துக்கொடி கொஞ்சம் நீண்டிருக்கும். பீஜத்தை மூடிக்கொண்டிருக்கிற தோலுக் குப் பீஜப்பை, பீஜகவசம் அல்லது அண்டகவசம் என்று பேர். நமது தேகத்தின் மற்றெல்லா பாகங்களிலுமுள்ள சருமங்களைக் காட்டிலும், பீஜப்பையாகிய சருமத்திற்குக் கருணைக்கடலாகிய கடவுள் ஓர் அரிய சக்தியை ஏற்படுத்தியிருக்கிறார். அது என்னவெனில், பீஜப்பையானது சில சமயங்களில் சுருங்கியும் சில சமயங்களில் தளர்ந்து போவதுமாம். இதைப்பற்றி சந்தேகிப்போர்; குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யும்போது பீஜப்பைகளைப் பார்வையிட்



டால் ஸ்பஷ்டமாய்த் தெரியும். பீஜமானது சிறிது உருண்டு நீண்டு சற்றேறக்குறைய ஒன்றரை அங்குல நீளமுள்ளதாய் பக்கங்களுள்ளடங்கி இருக்கும். மெத்த மெலிதான இந்திரியக் குழாய்களால் பீஜம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த இந்திரியக் குழல்களை நீட்டினால் சுமார் முன்னூறு கஜம் நீளும், இந்திரியக் குழல்கள் ஒன்றோடொன்று சேர்ந்து பின்னிக்கொண்டு முடிவில் ஒரே குழலாய் ஏற்படும். அந்தக்குழலுக்கு விந்துவாகி அல்லது இந்திரியதாரை என்று பெயர். விந்துவாகியானது இரண்டு அடி நிகளமும், அரைக்கால் அங்குல அகலமும் உள்ளது. இது பீஜக்கொடியின் பின்புறமாக மேலுக்குச்சென்று, பிறகு பீஜக்கொடியின் ரந்திர வழியாக வயிற்றுக்குட் சென்று மூத்திரப்பைக்குப் பின்புறமாக, அதின் அடிக்கிறங்கி அவ்விடத்திலிருக்கிற குழலோடு சேர்ந்து ஒரே குழலாகி ஸ்கலிதக்குழலோடு சேர்த்து நீர்த்தாரையில் முடிந்துவிடும். சுக்கிலமானது பீஜத்தில் உற்பத்தியாகி விந்துவாகி வழியாக வயிற்றுக் குட்சென்று நீர்ப்பைக்குக் கீழிறங்கி இந்திரிய கமலங்களில் தங்கி இருக்கும். ஸம்போக காலங்களில் அது வெளிப்பட்டு நீர்த்தாரை வழியாக ஸ்கலிதமாகிவிடுகிறது. பீஜத்திற்கு விந்துவை வெண்மையாக்குங் குணமிருக்கின்றது. அதனால்தான் பீஜத்தின் தொழில் பேதமடைந்தவர்களுக்கு வெளிப்படும் இந்திரியத்தில் இரத்தம் கலந்திருக்கின்றது.

## இந்திரிய கமலம், (VESICULÆ SEMINALES—வெஸிக்கியுலி ஸெமிநேலிஸ்.)

இந்திரிய கமலம், இந்திரியபாத்திரம், சுக்கிலாசயம் அல்லது விந்துக்களஞ்சியம் எனப் பலநாமம் பெறும். ஒவ்வொருவருக்கும் இந்திரிய கமலங்கள் இரண்டுண்டு. இவைகள் உரத்த ஜவ்வினால் உண்டாக்கப் பட்டு மூத்திரப்பைக்கு அடியில் மலக்குடலோடு சேர்ந்திருக்கின்றன. ஒவ்வொரு இந்திரிய கமலமும் மடங்கி யிருக்கும்பொழுது இரண்டங்குல நிகளமும், அரை அங்குல அகலமும் இருக்கும், மடங்கியிருப்பதைநீட்டினால் சற்றேறக்குறைய 5–6, அங்குல நீளமுள்ளதாய் இறகு பேனாவைப்போன்ற கனதியுடையதாய் இருக்கும். இந்திரிய கமலங்க,

ளானது அவரவர்களின் தேகங்களுக்கேற்றவிதமாய் வித்தியாசமாய் இருக்கும். பீஜங்களிலிருந்து இந்திரியத்தைச் சுக்கிலாசயங்களுக்குக் கொண்டுபோகிற குழலுக்கு, விந்துவாகி (Spematic cord) என்று பெயர். இது இரண்டடி நீளமும் அரைக்கால் அங்குல அகலமுமுடையது. இந்திரிய கமலங்களிலிருந்து இந்திரியத்தை நீர்த்தாரைக்குக் கொண்டுபோகுங் குழலுக்கு ஸ்கலிதக்குழல் என்று பெயர். இது சுமார் முக்கால் அங்குல நீளமுடையது.

## சுக்கிலம், (SEMEN—ஸீமேன்)

சுக்கிலம், தாது, இரேதஸ், காமநீர், மதஜலம், விந்து அல்லது வீரியம் எனப் பல நாமம் பெறும். சுக்கில உற்பத்தியாகும் விதமானது ஓர் நதியின் உற்பத்திக்குச் சமானமாய்ச் சொல்லலாம். எப்படியெனில் ஓர் நதியானது ஏதேனும் ஓர் மலைத்துடரிலிருந்து உற்பத்தியாகி வரும் மார்க்கங்களின் அநேக சிற்றாறுகளைச் சேர்த்துக்கொண்டு முடிவில் ஒரே நதியாகிச் சமுத்திரத்திற் சங்கமமாகின்றதோ, அது போலவே சுக்கில நதியானது, சிரசின் மூளையாகிய பர்வதத்திலிருந்து உற்பத்தியாகி இரண்டு காதுகளுக்கும் பின்பக்கத்திலிருக்கிற சுக்கில நரம்புகள் வழியாகக் கீழுக்கிறங்கி முள்ளந்தண்டு சார்பாக வரும்போது சரீரத்திலுள்ள சர்வ உறுப்புகளிலிருந்தும் வரும் உபநதிகளாகிய சுக்கிலச் சிற்றாறுகளையும் சேர்த்துக்கொண்டு, குண்டிக்காய்களின் வழியாய் பீஜப் பிரதேசத்திற் சென்று, ஸ்திரீகளின் ஸ்னத்திற் சென்ற இரத்தமானது வெண்மையாக மாறிப் பாலாகிறதுபோல், சுக்கிலமும் அங்குப் பக்குவப்பட்டு விந்துவாகி வழியாய் வயிற்றுக்குட் சென்று, பின் மூத்திரப்பைக்கு அடியிலிறங்கி இந்திரிய கமலமாகிய சமுத்திரத்தில் சங்கமாகி அங்கே தங்கியிருக்கும்.பிறகு ஆண்குறி இயக்கத்தினாலாவது, மனோவியாபாரத்தினாலாவது அல்லது வேறுகாரணங்களாலாவது ஸ்கலிதக்குழலிலிறங்கி நீர்த்தாரை மார்க்கமாக வெளிப்பட்டுவிடும்.

சுக்கில உற்பத்தியைப்பற்றி அநேகர் அநேகவிதமாய்ச் சொல்லிக் கொள்ளுகிறார்கள். அவைகளாவன நாம் உண்ணும் உணவின் சத்தா



னது நமது இருதயத்திற் சென்று சுத்த இரத்தமாக மாறி, நமது தேக முழுதும் பரவி இருக்கும் பல்லாயிரம் நரம்புகளிலும் இரத்தஓட்டமுண்டாகி, அவயவங்களுக்குப் புஷ்டியைத் தருகின்றதென்பது சாஸ்திர சம்மதம். இங்ஙனம் பரவியோடும் உதிரம் அதிகரித்துத் தசையை உண்டாக்குகின்றது. இவ்விதமாக உண்டாகும் தசையினின்று கொழுப்பும், கொழுப்பினின்று எலும்பும், எலும்புகளிலிருந்து மஜ்ஜா அதாவது எலும்புகளுக்குள்ளிருக்கும் மூளையும் உண்டாகிறது. இத்தகைய மூளையிலிருந்தே சுக்கில ஸ்ரோணித முண்டாகிறதென்பது சிலர்களுடைய கொள்கையாம். முக்கியமாய்ச் சுக்கிலமானது சிரசின் மூளையிலிருந்து உற்பத்தியாகிறதென்பதற்குப் பல திருஷ்டாந்தங்களிருக்கின்றன. அதாவது கபாலலக்ஷணசாஸ்திரக்ஞர்கள், (Phrenologists) பலர் காமமானது சிரசின் சின்ன மூளையிலிருக்கிறதாய் பலவிதப் பரிக்ஷைகளினால் நிரூபித்திருக்கிறார்கள். இரண்டாவது காமநோயுற்றோர்களுக்குக் காணும், சோம்பல், விசனம், மனத்தடுமாற்றம், ரோதனம், மனிதர்களிடத்தில் வெறுப்பு, உலகவாழ்க்கையில் அருவருப்பு, தலைநோய், தலைபாரம், ஞாபகமறதி, பயித்தியம் முதலிய வியாதிகள் முக்கியமாய் மூளையைப் பற்றின ரோகங்களாகவே யிருப்பதும், இவ்வகை ரோகங்கள் எவ்வகை மருந்தினாலும் தீராது ஸ்திரி போகத்தினால் சுவஸ்தமாவதுமேயாம். மூன்றாவது, சிரசின் சின்ன மூளைக்குக் காணும் சில வியாதிகளினால் சிலர்களுக்கு அதிக போக சக்தியும்,சிலர்களுக்குப் போகசக்தியில்லாமலே க்ஷீணித்தும் போகிறதுமாம். இன்னும் இருகாதுகளுக்கும் 'பின்புறமாக இருக்கிற சுக்கில நரம்புகள் வழியாய் மூளையில் உற்பத்தியாகிற சுக்கிலம் செல்லுகிறதென்பதற்கு ஆதாரம் யாதெனில், தூக்குண்டிறந்தவர்களின் வஸ்திரங்களில் இந்திரியம் ஸ்கலிதமாகி இருப்பதைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். அதனால் காதுகளுக்குப் பின்புறமாக இருக்கிற நரம்புக்கும் சுக்கிலத்திற்கும் அதிக சம்பந்தமிருப்பதாகத் தெரிகிறது. இதல்லாமல் செவிகளுக்குப் பின்புறமாகச் செல்கின்ற சுக்கில நரம்புகளைச் சோதித்து அவைகளினின்று வெளிப்படும் திரவத்தைப் பக்குவப்படுத்தினால் பால் போன்ற வெண்ணிறமுடைய நீராகும். மற்ற பாகங்


களில் அப்படிக்கு ஆகிறதில்லை. இன்னும், கத்தி வெட்டு, துப்பாக்கிக் குண்டு அல்லது வேறு எவ்வகைக் காரணங்களினாலாவது மேற்படி சுக்கில நரம்புகள் துண்டிக்கப்பட்டவர்களுக்கு, அதற்கு முன் புத்திர சம்பத் துண்டாயிருந்தும், துண்டிக்கப்பட்ட பின் சந்தான மற்றுப் போனதாய் பல பண்டிதர்கள் பலமுறை பரிக்ஷித்து நிச்சயத்திருக்கிறார்கள்.

ஏறக்குறைய எண்பது துளி ரத்தத்தினின்று ஒரு துளி இந்திரியம் உண்டாகின்றது. திடதேகமுள்ள ஒரு புருஷனுக்கு வெளிப்படும் இந்திரியமானது சுமார் அரை அவுன்ஸ் இடையுள்ளதாய் இருக்கும். சரீர சௌக்கிய முள்ளவர்களின் புதிதான இந்திரியமானது சிறிது காந்தியோடு தடித்த திரவரூபமுடையதாயும், சிலேத்தும நீர்போன்றதாயும், கொஞ்சம் வழுவழுப்புள்ளதாயும், வருணத்தில் வெண்சாயல் அல்லது பாலைப்போலவும் மணிபோன்ற சிறு கட்டிகள் செறிந்ததாகவும் அதற்குரிய ஓர் வாசனையுடையதாகவும் இருக்கும். விந்து வெளியாகி அதிக நேரமாய்விட்டால் நீர்த்துப்போம். அதன் உஷ்ணம் நீங்கி குளிர்ச்சியடைந்தால் அதிலுள்ள ஓர்வகை சத்தி உறைந்துபோகும். அது உலர்ந்துவிட்டால் சிறிது மஞ்சள் நிறமாய், பிரகாசமாய் கெட்டியாக இருக்கிறதாகத் தோன்றும், சுக்கிலத்தைத் துணியில் நனைத்துலர்த்தினால் கித்தான் துணியைப் (Canvass,) போல் கெட்டியா யிருக்கும். அத்துணியை நெருப்பில் வாட்டினால் மண்வருணமாய் விடும், அல்லது மேற்படி துணியை வெடியுப்புத்திராவகத்தில் (Acid nitricum) நனைத்தால் அது அதிக மஞ்சள் நிறமாகி விடும். பிறகு எப்போதும் வெண்ணிறமாகாது, இன்னும் டாக்டர், கார்பென்டர் (Dr. Carpentar) சொல்லுகிறதாவது நீலவருணக் கம்பளி அல்லது மஞ்சள் வர்ணக் காகிதத்தைச் சுக்கிலத்தில் தோய்த்தால் யாதொருவித மாறுதலும் அடையாதென்பதுவேயாம்.

இன்னும் இந்திரியத்தை அணுதரிசினி என்கிற பூததிருஷ்டிக் கண்ணாடியினால் (Microscope) பார்வையிட்டால், அதில் கோழிமுட்டையிலிருக்கிற வெள்ளைக்கருவைப்போன்ற ஓர்விதப் பதார்த்தத்தையும் முட்டை வடிவமான பருத்த தலையும் நீண்டவாலோடுமிருக்கிற




நூற்றுக்கணக்கான ஓர்விதக் கிருமிகளையுங் காணலாம். முந்தியதற்குக் கருநீரென்றும், பிந்தியதற்குக் கருப்பூச்சி அல்லது விந்துக்கிருமிகளென்றும் பெயர். அவற்றுள் கருநீரானது விந்துக்கிருமிகளை கருப்பைக்குட் செலுத்திக் கருப்பற்றச் செய்யத் துணைக்கருவியாயிருக்கின்றது. விந்துக்கிருமிகளானவை பரமாணுச்சிற்றுயிர்களாய் வேகமாய் தங்கள் வால்களை ஆட்டிக்கொண்டு எப்போதும் முன்னோக்கியே ஊர்ந்துபோகும். எதிரில் ஏதேனும் தடையாயிருந்தால் அவ்வழியைவிட்டு மாறி முன்னோக்கியே போகுமேயன்றிப் பின்னோக்கிப் போகிறதில்லை. சற்றேறக்குறைய ஆறு நிமி



மனிதர்களின் சுக்கிலத்தில் காணப்படும் சுக்கிலக்கிருமிகள். (Spermatozoa)

கடந்துசெல்லும். வெளிப்
ஷத்தில் அரை அங்குல தூரத்தைக்
பட்ட விந்துவிலிருக்கும் விந்துக்கிருமிகள் பரிசுத்த ஆகாயத்தில் சுமார்
ஐந்து முதல் பத்து நிமிஷங்களுக்குமேல் உயிரோடிருப்பதில்லை. விந்
துக்கிருமிகளானது ஸ்திரீகளின் ஸ்ரோணிதத்தோடு சேர்ந்து கருப்பற்
றும்படி செய்யும்; பிரமேகரோகம், மேகம், ரத்தக்ஷீணத்தினால் காணும்
பாண்டு, காமாலை, மகோதரம் முதலிய வியாதியஸ்தர்களுடைய விந்து
வில் இருக்கும் விந்துக்கிருமிகளானது க்ஷீணித்து நகர்வதற்குச் சக்தி
யற்றதாயும், தொகையில் குறைந்துமிருக்கும். ஆகையால் சுக்கிலமா
னது மனோபலத்திற்கும், சரீரபலத்திற்கும், சந்தான விருத்திக்கும்
மூலாதாரமானது. மேற்சொன்ன விந்துக்கிருமிகள் உயிருடன் வாழ்வ
தற்குச் சமதியான சீதோஷ்ண மிருக்கவேண்டும். மிதமிஞ்சின உஷ்
ணத்தினால் மேற்படிக் கிருமிகள் தீய்ந்து மடிந்துபோம், இதுபோலவே
அளவுக்கு மிஞ்சின குளிர்ச்சியினாலும் நசித்துப்போம். இன்னும்
குளிர்ந்த தண்ணீர் அல்லது துவர்ப்பான கஷாயங்கள் பட்டால் உடனே
மரித்துப்போம். ஆகையால் சம்போகம் செய்தவுடன் சில ஸ்திரீகள்
அறியாமையினால் குளிர்ந்த ஜலத்தைக்கொண்டு மர்மஸ்தானத்தைச்
சுத்தி செய்வதினாலேயே விந்துக்கிருமிகள் விரயமாகி கருப்பற்று
தொழிகிறது. இதனை ஒவ்வொருவரும் ஞாபகத்தில் வைத்துக்
கொண்டிருக்க வேண்டியது நிரம்ப அவசியம்.

## ஸ்திரீயின் ஜனனேந்திரியங்கள் (FEMALE ORGANS OF GENERATION— ஃபீமேல் ஆர்கன்ஸ் ஆவ் ஜெனரேஷன்)



இந்தப் படம் ஸ்திரீயின் ஜனனேந்திரிய உறுப்புகளைக் காட்டுகிறது.
1. எலும்பு, 3. கடிதடம், 4. மூத்திரப்பை, 6. மூத்திரதாரை, 7. யோனிலிங்கம், 11. யோனிவாய், 12. யோனித்துவாரம், 13. மூத்திரப்பைக்கும் யோனிக்கும் மத்தியிலிருக்கிற ஜவ்வு, 15. பகம், 16-17-18 கருப்பை, 16. குதம், 20. குதத்துவாரம்.

ஸ்திரீயின் ஜனனேந்திரியங்கள் கடிதடம் (Mons veneris) நிதம்பம் அல்லது உதடு, (labia Majora) பூநரம்பு, (Clitoris) யோனித்துவாரம், (Orifice of the Vagina) கருப்பை, (Uterus) சினைப்பை (Ovaries) சினைப்பாதை (Fallopian tubes என்று பல பிரிவுகளுடையது. மனிததேகத்தில் அனேக அவயவங்களிருப்பினும், எண்சாணுடம்பிற்குச் சிரசேபிரதானமாய் இருப்பதுபோல மேற்கூறியபடி ஸ்திரீயின் ஜனனேந்திரியங்கள் அநேகமிருப்பினும் அவற்றுள் யோனித்துவாரமே முதன்மையானது. ஏனெனில் யோனித்துவாரமே சம்போகத்திற்காதாரமாயும், சுக்கிலத்தைக் கருப்பைக்குட் செலுத்திக் கருப்பற்றச் செய்வதற்கும் சிசு ஜனனமாவதற்கும், மாதாந்தரருது வெளிப்படுவதற்கும் இன்றியமையாத ஓர் உறுப்பாயிருக்கிறது. இத்தகைய சக்திவாய்ந்த உறுப்பைப்பற்றி ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ளவேண்டியது நிரம்ப அவஸ்யமாதலால் அதைப்பற்றிச் சிறிது யோஜிக்கவேண்டியிருக்கிறது. யோனித்



துவாரமானது, குய்யம், அல்குல், பெண்குறி, அல்லது உபஸ்தம் எனப் பல நாமம் பெறும். இவ்வுறுப்பானது ரப்பர் (Rubber)போன்ற சுபாவமுடைய விரிந்து சுருங்கத் தக்கதான ஓர்வகை நரம்புகளால் அமைக்கப்பட்டிருக்கிறது. பிரசவகாலத்தில் சிசு வெளிப்படும்போது விரிந்து கொடுக்கும், மற்றக் காலங்களில் சுருங்கியுமிருக்கும். ஒருபொழுதும் சம்போகமின்றி இருக்கும் ஸ்திரீகளுக்கு, யோனிக்கும் கருப்பைக்கும் நடுவில் மிக நுட்பமான ஓர் ஜவ்வு (Hymen) மூடிக் கொண்டிருக்கும். அந்த ஜவ்வில் ஓர் சிறிய துவாரமுண்டு அதன் வழியாகச் சூதகம் வெளிப்படும். துவாரமில்லாவிட்டால் சூதம் வெளிப்படாது மெத்த உபத்திரவங் காணும். மேற்படி ஜவ்வு சிலருக்குக் கடினமாயும், சிலருக்கு மெல்லியதாயுமிருக்கும். அப்படிக்கு இருப்பதனால் சம்போகத்திற்கும் சந்தான விருத்திக்கும் இடையூறுரும். சிலருக்கு இந்த ஜவ்வு இயற்கையாயும், சில வியாதியினாலும் இல்லாமலிருக்கும். இவ்வகைக் காரணங்களால் ஜவ்வு இல்லாத ஸ்திரீகளைக் கன்னியழிந்தவளென்று சொல்லுவது தப்பிதமாகும். கன்னியழியாத ஸ்திரீகள் முதல் முதல் சம்போகஞ் செய்யும்பொழுது அந்த ஜவ்வு கிழிந்துபோவதுவே அந்த ஸ்திரீக்கு அப்போதுண்டாகும் நோவுக்குக் காரணமாகும். சாதாரணமாய் யோனித்துவாரமானது சரீரத்திற்குத் தக்கபடி நீண்டும் குறுகியுமிருக்கும், இப்பாகத்தைப் புழக்கையென்று சொல்லப்படும். புழக்கையின் முன்பக்கத்திலிருந்து கருப்பையின் கடைசிவரையில் சுமார் ஆறு அங்குலத்திற்குக் குறைந்தும் பன்னிரண்டு அங்குலத்திற்கு அதிகமாகவும் ஒருவருக்கு மிராது.

### கடிதடம், (MONS VENERIS—மான்ஸ் வினரிஸ்)

ஸ்திரீயின் அடிவயிற்றின் கீழ் மேடாய் உரோமங்களுடையதாய் இருக்கும் மேடான பாகத்திற்குக் கடிதடமென்று பெயர். கடிதடமானது, கடிதடஸ்தான எலும்பின்மேற் படிந்து கொழுப்படைந்து எடுப்பாக இருக்கும். வயது சென்றவர்களுக்கும், மெலிந்த தேகமுடையவர்களுக்கும், கடிதட ஸ்தானத்தில் கொழுப்புக் குறைந்திருப்பதால் எலும்பின் மேல் தோல் ஒட்டிக்கொண்டிருப்பதைப் போல் தோன்றும்.

## நிதம்பங்கள் அல்லது உதடுகள், (LABIA MAJORA—லேபியு மேஜோர)

கடிதடத்திற்குக் கீழ்ப்பிளவு பட்டுச் சருமமானது மடிந்து நீண்டு மேலெழும்பி பக்கத்திற்கொன்ருக இருக்கிற உறுப்புகளுக்கு உதடுகள் அல்லது நிதம்பங்களென்று பெயர். இவைகளிலும் கொழுப்படைந்து உரோமங்கள் முளைத்திருக்கும். இவற்றின் மத்தியில் இருக்கிற பிளப்பே அல்குல் பிளவு என்று சொல்லப்படும். இவ்வுதடுகளானவை கீழுக்கிறங்கி ஒன்ருேடொன்று கூடியிருக்கும் ஸ்தானத்திற்கு போர் ஸெட் (Fourchette) என்று பேர். அது பிரசவகாலங்களில் சிசு வெளிப்படும்போது கிழிந்துபோவதுமுண்டு. ஆகையால் இதை மருத்து வத்தொழில் செய்வோர் கவனிக்கவேண்டியது நிரம்ப அவஸ்யம்.

இந்நிதம்பங்களுக்கு ஓர் அரிய சக்தி ஏற்பட்டிருக்கிறது. அதாவது சம்போக காலத்தில் ஸ்கலிதமான விந்துவானது கருப்பைக்குட் செல்லாமல் நிதம்பங்களின் மத்தியில் அல்லது முன்பக்கத்தில் விழுந்து விட்டாலும், அவ்விந்துவைக் கருப்பைக்குட் கொண்டுபோய்ச் சேர்ப் பதுவேயாம், ஆனல் இதைப்பற்றி சில ஆங்கிலேய டாக்டர்மார்கள் வேறுவிதமாய் அபிப்பிராயப்படுகிருர்கள். அதென்னவெனில் நிதம் பங்களுக்கு அப்படிப்பட்ட சக்தியில்லையென்றும், நிதம்பங்களின் பக் கத்தில் விழுந்த விந்துவிலிருக்கும் விந்துக்கிருமிகள் முன்னேக்கிச் சென்று தாங்களடையவேண்டிய ஸ்தலமாகிய கருப்பையிற் சேர்ந்து விடுகிறது என்பதே. இன்னும் வேறு சில ஆங்கிலேய டாக்டர்மார் களின் அபிப்பிராயமாவது சுக்கிலக் கிருமிகளுக்கு நிதம்பங்களிலிருந்து கருப்பைவரையில் கடந்துபோகும் சக்தியில்லையென்றும், நிதம்பங்க ளுக்கருகில் விந்து விழுந்தவுடன் ஆகர்ஷண நரம்புகளால் கிரகிக்கப் பட்டு கருப்பையிற் சென்று கருப்பற்றுகிறது என்பதுவேயாம். முற் கூறிய விஷயங்கள் எங்ஙனமிருப்பினும் சம்போக காலத்தில் விந்து வானது நேராகவே கருப்பைக்குட்செல்லாது உதடுகளின் ஓரத்தில் விழுந்தபோதிலும் கருப்பற்ற இடமுண்டென்பதற்குச் சந்தேகமில்லை.



## யோனிலிங்கம், (CLITORIS—கிளிடோரிஸ்)

யோனிலிங்கம் இதுவே மணிமூக்கு, கிளிமூக்கு, நுனி, சுழி முனை, மொக்குள், மன்மதன் வெற்றிக்குடை, மன்மதபீடம், காமத்வ ஜம் அல்லது மன்மதன் அரசிருக்கை மண்டபம் என பலநாமம்பெறும். இது கடிதடத்திற்குக் கீழாக நிதம்பங்களுக்கு மேலாக கூர்மையாக இருக்கிற ஓர் உறுப்பாம். ஆண்குறியில் நவில முடியாத நரம்புக் கூட் டங்கள்ஒடிக் கூடியிருப்பதுபோலவே இதிலும் ஏராளமான நரம்புகள் சேர்ந்திருப்பதால், ஸ்திரீகளுக்கு இதுவே சுரதவின்பத்திற்கு இருப் பிடமாகும். இதற்கேதேனும் கெடுதி நேரிட்டால், ஸ்திரீகளுக்கு சம் போகத்தில் இன்பமுண்டாகாது.


## மூத்திரதாரை, (URETHRA—யூரித்ரா)

மூத்திரதாரை யோனிலிங்கத்திற்குக் கீழும், யோனிக்கு மேலு மாக இருக்கிற பள்ளத்தில் மூத்திரதாரையின் துவாரம் காணப்படும். இதன் வழியாகவே மூத்திரம் வெளிப்படும் அநேகர் அறியாமையினல் மூத்திரம் யோனித்துவாரத்தின் வழியாக வருகிறதென்று வழங்கு கிருர்கள்.

## கருப்பை, (UTERUS—யூடிரஸ்.)

கருப்பை, கருக்குழி, கர்ப்பாஸயம் அல்லது கர்ப்பக்கோளரை, எனப் பலநாமம் பெறும். இது ஜவ்வுகள் நரம்புகள் ஆகிய இவைகளால் அமைக்கப்பெற்றுள்ள ஓர் உறுப்பாம். இவ்வுறுப்பானது அடிவயிற்றுக் குள் மலக்குடலுக்கும் மூத்திரப்பைக்கும் இடையில் தொங்கிக்கொண் டிருக்கும். இவ்வாறு மலக்குடலுக்கும் மூத்திரப்பைக்குமிடையில் இவ்வுறுப்பை அமைக்கப்பட்டிருப்பதின் காரணமாவது, கருப்பையா னது சந்தான உற்பத்திக்குப் பிரதான உறுப்பாகையால் கர்ப்பகாலத் தில், கருப்பையின்மேல் அடி, குத்து முதலிய அபாயங்கள் நேரிடு மானல் அக்காலத்தில் கருப்பையிலிருக்கும் சிசுவிற்குப் பங்கம் வாராது பாதுகாப்பதற்காகவேயாம். இன்னும் கருப்பையானது ரப்பர் (Rub- ber) போன்ற ஓர்வகை மிக நுட்பமான ஜவ்வுகளாலும், நரம்புகள

னும் அமைக்கப்பட்டிருப்பதேனெனில், கருப்பத்தில் இருக்கும் பிண்டமானது பெருக்கப் பெருக்கத் தானும் பெருத்து அது பூரணமானபின்பு அதை வெளிப்படுத்திவிட்டுத் தான் தனது பூர்வஸ்திதிபோலவே சுருங்கிவிடுதற்காகவேயாம். அது எப்படியெனில் துருத்தியானது காற்றைத் தன்னுள் அடக்கிக்கொண் டிருக்கும்போது பெருத்தும் காற்றை வெளிவிட்டவுடன் சுருங்கியும் போவது போலாம். கருப்பையானது செய்கையில் மாத்திரம் துருத்திக்குச் சமானமுடையதாயிராமல் உருவத்திலும் துருத்தியைப்போலவே இருப்பதானது ஒரு பெரும் ஆச்சரியமேயாம். கருப்பையானது மேற்புறம் அகன்று விரிந்தும், கீழ்புறமானது உருண்டு சிறுத்து மிருக்கிறது. இதன் அகன்ற இடத்துக்கு அடி (Fundus) யென்றும் மத்தியபாகத்திற்கு உடல் (Body) என்றும், சிறுத்திருக்கிற இடத்திற்குக் கழுத்து (Neck) என்றும், துவாரத்துக்கு வாய் (Osuteri) என்றும் பேர். பிரசவித்த ஸ்திரிகளுக்குக் கருப்பையின்வாயானது நீண்ட விடைவாயும், பிரசவிக்காதவளுக்கு விருத்தமாயும் இருக்கும். வாய்க்கு இருபுறமாயிருக்கிற மேடுகளுக்கு உதடுகள் என்று பேர். கருப்பையைப் பிளந்து பார்வையிட்டால், உள்ளே முக்கோண ரூபமுடைய ஒரு பள்ளங் காணப்படும். அதற்குக் கருக்குழி என்று பெயர். கருக்குழியின் ஒரு முனையானது கருப்பையின் வாயோடும், மற்ற இரண்டு முனைகள் சினைப்பாதைகளோடும் சம்பந்தப்பட்டிருக்கும். சுவாபீக ஸ்திதியில் கருப்பையானது ஏறக்குறைய மூன்று அங்குல நிளமும், இரண்டங்குல அகலமும், ஓரங்குல கனமுமுள்ளதாய் இருக்கும். கருப்பையின் எடை ஒன்றரை அவுன்ஸ் ஆகவும், சந்ததியுடையவளுக்கு இரண்டு அல்லது மூன்று அவுன்ஸ் ஆகவும் பூரண கர்ப்பமுடையவளுக்குச் சுமார் நான்கு அவுன்ஸ் ஆகவுமிருக்கும்.



கருப்பை.
1. அடி (Fundus)
2. உடல் (Body)
3. கழுத்து (Neek)

கருப்பைக்கும் இரைப்பைக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. அது எவ்விதமெனில், ஸ்திரீகளுக்குக் கர்ப்பந்தரித்தவுடன், காலைவாந்தி, அன்னத்துவேஷம், ஒக்காளம், பசிமந்தம் முதலிய குறிகளுண்டாவதே




போதிய காரணமாம். கருப்பையின் முக்கியமான தொழிலாவது யாதெனில், மாதாந்தா ருதுவைச் சுரப்பிக்கின்றதும், கருத்தரித்தபிறகு அதை வைத்துக்கொண்டு வளர்த்து ரக்ஷித்துப் பக்குவகாலத்தில் வெளிப்படுத்துவதுமேயாம். இன்னும் கருப்பையானது பிரஜாவிருத்தியை யுண்டுபண்ணும் ஒரு நிலத்துக்குச் சமானமாகவுஞ் சொல்லலாம், எங்ஙனமெனில் செய்நேர்த்தி செய்யப்படாத ஒரு பூமியில் நல்ல வித்தை விதைக்கினும் அது பயிராகிப் பயனைத்தராது, அது போலவே கருப்பைக்கு ஏதேனும் வியாதி நேரிட்டிருக்குமானால் கருப்பைக்குச் சுவாபீகமாய் ஏற்பட்டுள்ளதான விந்துவைக் கிரகித்துக் கர்ப்பத்தை வளர்க்கும் சக்தியற்றுப் புத்திர சம்பத்துண்டாக ஹேதுவில்லாமற் போம். அப்படிக்கின்றி ஒரு வேளை கர்ப்பமுண்டானபோதிலுங்கூட அது சுகமாய் வளர்ந்து சுகப்பிரசவமாகாமல் அகாலப் பிரசவமாகும். இன்னும் ஒரு நஞ்செய் நிலத்திற்கு வடிகால் வசதி எப்படி நிரம்ப அவசியமோ, அதுபோலவே கருப்பையாகிய நிலத்திற்கும் அசுத்த இரத்தமாகிய சூதகம் கிரமமாய் வெளிப்பட வேண்டியதற்காகவே மாதவிடாய் என்னும் வடிகால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. வடிகால் வசதியில்லாத நஞ்சை நிலமானது எப்படிப் பயிரிடுவோனுக்குப் பலனைத் தராதோ அது போலவே சூதகக்கிரமமில்லாத ஸ்திரீகளும் சந்தான உற்பத்திக் கிடமின்றித் தாங்களும் பலவித வியாதிகளுக்குள்ளாவார்கள். ஆகையால் கருப்பையானது பூரண சௌக்கியத்துட னிருந்தால்தான், சரீரத்திலுண்டாகும் அசுத்தநீர் முதலியதை வெளிப்படுத்தவும், சரீரத்தினின்று கிரமமாக வெளிப்பட வேண்டிய சூதகத்தை மாதமொரு முறை வெளிப்படுத்தவும், சம்போக காலத்தில் விந்துவைக் கிரகித்துக் கருவை யுண்டாக்கி வளர்த்துப் பக்குவகாலத்தில் வெளிப்படுத்தவும் ஏதுவாகும். ஆகையால் கருப்பைக்கு எவ்வித மான கெடுதலும் நேரிடாதபடி சிரத்தை வகிக்கவேண்டியது நிரம்ப அவசியமென்பதைப்பற்றி நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை.

## நாதாசயங்கள், (OVARIES—ஓவேரீஸ்)

நாதாசயங்கள், கருக்கூடுகள், முட்டைப்பைகள், சினைப்பைகள் அல்லது ஸ்திரீபீஜங்கள் எனப் பல நாமம் பெறும். புருஷர்களுக்குச் சுக

கிலஉற்பத்திசெய்ய பீஜமானது பிரயோஜனமாய் இருப்பதுபோலவே, ஸ்திரீகளுக்கும் சுரோணிதத்தை உற்பத்திசெய்ய இரண்டு பீஜங்களுண்டு. ஆனால் ஸ்திரீபீஜங்கள் புருஷர்களுடையதைப்போலல்லாமல் இலுப்பைக் கொட்டையைப்போல் உருண்டு, வெள்ளைநிறமாய் வெவ்வேறு பையினுள் பொதியப்பட்டுக் கருப்பையின் இரண்டு பக்கத்திலும் பக்கத்திற் கொன்றாய் அமைக்கப்பட்டிருக்கிறது. சினைப்பைக்குள் பார்வையிட்டால் சிறிய அணுக்கள் காணப்படும். ஒவ்வொரு சினைப்பையிலும் சுமார் 50,000-சினை அம்சங்களிருக்கும்; அவைகளுக்கு நாதக்குமிழ்கள் (Graaflan Vesicles) என்று பேர். அவற்றில் சுமார் பத்துமுதல் முப்பதுவரையில் நன்றாய்ப் பக்குவப்பட்ட முட்டைகளிருக்கும். அவைகள் ஜலப்பைகள் போல் காணப்படும். நாதக்குமிழிலொன்றை பூததிருஷ்டிக் கண்ணாடியால் (Microscope) பார்வையிட்டால், அகத்தில் சிறிய குமிழ் ஒன்று காணப்படும். அதற்கு நாதம் (Ovum—ஓவம்) என்று பேர். அந்த நாதத்துக்குள் மங்கலான சிறிய புள்ளியிருக்கும் அதற்குக் கரு என்று பேர். நாதத்தோடு விந்துக்கிருமிகள் சேர்ந்தால் கருத்தரிக்கும். ஸ்திரீகளுக்கு மாதாந்த ருதுகாலங்களில் ஒவ்வொரு சினைப்பையிலிருந்தும், ஒவ்வொரு நாதக்குமிழ் பெருத்து முற்றி வெடிக்கும். அப்போது சினைப்பாதையின் குஞ்சமுனையானது சினைப்பையைக் கவ்விக்கொள்ளும். அப்போது நாதக்குமிழ்களிலிருந்து வெளிப்படுகிற நாதமானது சினைப்பாதையிலிறங்கி அந்த வழியாகச் சென்று கருக்குழியில் விழுந்து ஸ்தோணிதத்தோடு கலந்து அல்குல் மார்க்கமாக ஸ்கலிதமாகி விடும். நாதம் வெளிப்படுகிற காலங்களில் சம்போகஞ் செய்தால் கருத்தரிக்குமென்பது சாஸ்திர சம்மதம்.




இந்தப் படம் சினைப்பைகளுக்குள்ளிருக்கும் நாதக்குமிழ்களைக் காட்டுகின்றது.

## நாதவாகி, (FALLOPIAN TUBE—பெலோபியன், டியூப்)

நாதவாகி; நாதக்குழல் அல்லது சினைப்பாதை எனப் பல நாமம் பெறும். இது கருப்பையின் பக்கத்திற் கொன்றாகத் தாரையைப்போல் நீண்டு ஒருமுனை கருப்பையின்மேல் முனையோடு கூடியும், மற்றொன்று குஞ்சம்போல் விரிந்து அந்தரமாயும் நாலைந்து அங்குல நீளமுள்ளதாய் உட்த்வாரம் மெத்த சன்னமுள்ளதாய்க் கருக்குழியோடு சம்பந்தப்பட்டு



மிருக்கும். குஞ்சமுனையானது சினைப்பையோடு ஓர் நரம்பினால் சம்பந்தப்பட்டிருக்கின்றன. சினைப்பைகளிலுள்ள சினைகளிலொன்று முற்றி வெடித்து வெளிப்புறப்படுஞ்சமயத்தில் நாதவாகிகள் அதைக் கிரகித்துக்கொண்டுபோய்க்கருப்பையில் சேர்க்கின்றன. மேற்சொன்னபடி நாதக் குழல்களின் துவாரங்கள் மிகவும் சிறுத்திருப்பதால் புருஷர்களுக்கு ஒரே ஆவர்த்தியில் அதிக அளவாக விந்து ஸ்கலிதமாவதுபோல், ஸ்திரீகளுக்கு நாதம் ஸ்கலிதமாகாமல் கொஞ்சங் கொஞ்சமாயிறங்கும். இக்காரணத்தினால்தான் ஏக காலத்தில் ஐந்தாறு ஆவர்த்தி அடுத்தடுத்து சம்போகஞ் செய்தபோதிலும் புருஷர்கள் சோர்ந்து களைப்படைவதைபோல் ஸ்திரீகள் சோர்வடைகிறதில்லை.



இந்தப்படம், சினைப்பையிலிருந்து நாதக்கருவாகிய முட்டை குஞ்சமுனைவழியாய் சினைப்பாதைக்குள் சென்று அங்கிருந்து கருப்பைக்குள் சேர்வதைக் காட்டுகிறது.
1. சினைப்பைகள். 2. குஞ்சமுனைகள். 3. நாதவாகிகள்.

## சூதகம், (MENSES—மேன்ஸேஸ்)

சூதகம். மாதாந்தாருது, மாதவிடாய், வீட்டுதூரம், வீட்டுவிலக்கம், தலை முழுக்கு அல்லது பிரஷ்டை எனப் பல நாமம் பெறும். சூதகமானது ஸ்திரீகளின் சரீர சௌகர்யத்திற்காகச் சர்வ வல்லமையுள்ள கடவுளால் உண்டாக்கப்பட்ட ஓர் அரிய பெரிய அடையாளமாம். இப்பூவுலகில் பெண்கள் ருதுவாகும் வயதானது, சீதோஷ்ணத்தினாலும், தேக திடத்தினாலும், ஆகார பேதத்தினாலும் வித்தியாசப்படும். சுமார் பத்துமுதல் இருபது வயதிற்குள் பெண்கள் புஷ்பவதியாவார்களென்று ஒருவிதமாய் நிதானிக்கலாம். அதாவது இந்தியாவிலும், ஆப்பிரிகாபோன்ற உஷ்ணப்பிரதேசங்களிலும் ஒன்பது முதல் பன்னிரண்டு வயதிற்குள்ளும், சீதோஷ்ண சம அளவினதா யிருக்கிற தேசங்களில் பன்னிரண்டு முதல் பதினாறு வயதிற்குள்ளும், சீதள தேசங்களாகிய மேனாடுகளில் சுமார் பதினாறு முதல் இருபது வயதிற்குள்ளும் பெண்கள் ருதுவாவார்கள். மேற்கண்ட வயதுக்குக் குறைந்தும், சில வேளை அதிகப்பட்டும் பிரவிடையாகிறார்கள். தென்னிந்தியாவில்

பத்து வயதிற்குள் சில ஸ்திரீகள் பிரசவித்து மிருக்கிறார்கள். ஸ்திரீகளுக்கு முதன் முதல் சூதகம் கண்டதிலிருந்து சற்றேறக் குறைய முப்பது வருஷம் வரையில் சூதகம் வெளிப்படும். சூதகம் எப்போது காணுகிறதோ அதிலிருந்தே கரு உற்பத்தியாகுந் தன்மை யுண்டாகிறது. அது முற்றும் நின்ற பிறகு, கரு உற்பத்தியாகுந் தன்மையும் நின்று போகிறது. ஆனால் முதல் முதலாகச் சூதகம் கண்டதிலிருந்து முப்பது வருஷங்களுக்குப் பிறகுதான் சூதகம் நிற்கும். அல்லது நாற்பது முதல் ஐம்பதாவது வயதிற்குள் சூதகம் நின்றுவிடுமென்று பொதுவாகச் சொல்லலாம். உஷ்ணப்பிரதேசங்களிலுள்ளவர்களுக்குச் சீதளதேசத்திலுள்ள ஸ்திரீகளைப் பார்க்கிலும் சீக்கிரமாயும் சூதகம் நின்றுவிடும்.

மாதவிடாயானது கிரமமாய் இருபத்தெட்டு தினங்களுக்கோர் முறை உண்டாகும் ஓர்வித உதிரக்கழிவாம். ஆனால் தேகஸ்திதிக்கும், தேசத்திற்கும் தக்கபடி முற்கூறிய இருபத்தெட்டு தினக்கிரமமில்லாது சில தினங்கள் முன்னதாகவேனும், சில தினங்கள் பின்னதாகவேனும் காணுமென்றாலும் மாத்விடாய் கண்டு கட்டோடு நின்ற இரண்டு வாரத்திற்குள் சூதகம் உண்டாகுமானால் அதனை வியாதி என்றே அறியவேண்டியது. மாதவிடாயில் வெளிப்படும் இரத்தமானது பார்வைக்குச் சுத்த இரத்தமாகத் தோன்றினாலும், அது அசுத்த இரத்தமேயாம். தேகத்திலுள்ள சுத்த இரத்தமானது வெளிப்பட்டவுடன் உறைந்து போவதுபோல் சூதகமானது உறையமாட்டாது. சரீரசௌக்கியமுள்ள ஸ்திரீகளுக்கு வெளிப்படும் சூதகமானது, சிவப்புநிறம் அல்லது மஞ்சள் நிறமாயாவது இருக்கும். சிலருக்கு சாம்பல் வர்ணம் அல்லது மண் வர்ணமாயும் இருப்பதுண்டு. சூதகம் சிலருக்கு மூன்று தினங்களுக்குள்ளும், சிலருக்கு மூன்று தினங்களுக்கதிகமாகவுமிருந்து நின்று விடும். சூதகத்தின் அளவானது சரீரத்திற்குத் தக்கபடி வித்தியாசப்படும். ஆனால் சற்றேறக்குறைய மூன்று அல்லது நான்கு பல எடையுள்ளதாக வெளிப்படுவது கிரமம்.

சூதகமே ஸ்திரீகளின் சரீர சௌக்கியத்திற்கு மிகவும் பிரதானமானது. அது கிரமமாக இருந்தால்தான் தேகத்திலுள்ள பிரதி உறுப்பு



களும் அதனதன் தொழிலைக் கிரமமாகச் செய்யும். ஸ்திரீகளுக்குண்டாகிற ரோகங்களிற் பெரும்பான்மை சூதக அக்கிரமத்தினாலேயாம். அது பிரதி மாதமும் கிரமப்படி வெளிப்பட்டு விடுவதினால் தேகத்தின் சீதோஷ்ணம் சம அளவினதாவதுடன் ஸ்திரீகளுக்குப் புருஷர்களைக் காட்டிலும் எண் மடங்கு அதிகமாய் ஏற்பட்டிருக்கும் காமத்தையும் தனிக்கிறது. இதைப்பற்றி டாக்டர், அட்சிஸன் (Dr. Aschison) என்னும் ஓர் ஐரோப்பிய டாக்டர் சொல்லுகிறதாவது:—மாதவிடாயானது மாதர்களின் கருப்பையிலுள்ள அதியுஷ்ணத்தை அகற்றிச்சரீர சுகத்தை யுண்டாக்குவதுந்தவிர மாதர்களுக்கு இயற்கையாய் ஏற்பட்டிருக்கும் அபரிமிதமான சம்போக இச்சையையும் சமானப்படுத்துகிறது என்பதேயாம். இன்னும் மாதாமாதம் கிரமமாக வெளிப்படும் சூதகத்தினால் கர்ப்போற்பத்தி செய்கையும், கர்ப்பகாலத்தில் கருவைவளர்க்குந் தன்மையும், பிரஸவித்த பிறகு பாலாக மாறி சிசுவைப் போஷிக்கும்படியான செய்கையுமுண்டாகின்றன.

## முப்பது வயதுவரையில் ருதுவாகாத ஸ்திரீகள்.

சிசுவானது கெர்ப்பவாசத்திலிருந்து வெளிப்படும்போதே ஆணோ பெண்ணோ வென்று அறிவதற் கறிகுறியாகவும், சந்தானோற்பத்திக் காதரமாயு முள்ள ஜனனேந்திரியங்களுடன் ஜனிக்கிறது. ஆனால் போதியவயதாகுமட்டும் அவைகள் தத்தம் தொழிலைச்செய்யச் சக்தியற்றிருக்கிறது. வயது ஆக ஆக தேகம் வளர்ச்சியடைவது போலவே ஜனனேந்திரியங்களும் உறுதியாகி அதனதன் தொழிலைச் செய்ய சக்தியுடையதாகிறது. அப்படிக்கு ஜனனேந்திரியங்கள் சக்தியடைய வேண்டியதற்கு, ஸ்திரீகளுக்குச் சற்றேறக்குறைய 16-வயதும், புருஷர்களுக்கு 20-வயதும் செல்லவேண்டும். அப்படிப் போதிய வயதான பிறகும் ஸ்திரீகள் புஷ்பவதியாகாம லிருப்பதுவுமுண்டு. அதற்குக் காரணங்களாவது:—கருப்பையில் அளவுக்கு மிஞ்சின உஷ்ணம் அல்லது குளிர்ச்சி அதிகரித்து விடுவதாலும், அடிக்கடி நித்திரையின்றி விழித்திருக்கும்படி நேரிடுவதாலும், அளவுக்கு மிஞ்சின உழைப்பினாலும், ஆகார பேதங்களினாலும், சந்திரநாடி (Hymen) தடித்திருப்பதினாலும், (60-வது பக்கத்தில் பெண் குறியின் லக்ஷணத்தைப் பார்க்கவும்)

அடிக்கடி பட்டினி இருப்பதினாலும், எவ்வகைக் காரணத்தினாலாவது அடிக்கடி இரத்தம் வெளிப்படுவதினாலும், தேகத்திற்குத் துர்ப்பலத்தை யுண்டுபண்ணும் பலவித ரோகங்களினாலும், அளவுக்கு மிஞ்சின மலஜலப்போக்கினாலும் பிரவிடையாகிற வயதில் காணுகிற ஓர் வித பாண்டு ரோகத்தினாலும், (Chlorosis) இன்னும் இவைபோன்ற பலவகைக் காரணங்களினாலும் சில ஸ்திரீகளுக்கு முப்பது வயதுவரையில் சூதகம் வெளிப்படாது சூதகபந்தமுண்டாகும்.

இப்படிப்பட்ட ஸ்திரீகளுக்குத் தேகம் ஸ்தூலித்து ஆயாசமும் அசதியுமுண்டா யிருத்தல், பெண்குறி, முள்ளந்தண்டு முதலிய பாகங்களில் வலி, பசியின்மை, மனிதர்களிடத்தில் துவேஷம், முக்கியமாய் புருஷர்களிடத்திலும் கல்யாண விஷயத்திலும் அசிகை முதலிய குறிகள் காணப்படும். இந்த நோய் நாட்சென்று விட்டால் சிகிச்சைக்கு வசப்படாதாகையால் காலஹரணமின்றிச் சரீரபுஷ்டியையும் இரத்த விருத்தியையும் கொடுக்கக்கூடிய அயசம்பந்தமான மருந்துகளைக் கொடுத்து வருவதுடன், காலை மாலை இரண்டு வேளையும் சுத்த ஆயாயத்தை சுவாசிக்கச் செய்துவருவதுடன் கருப்பையிருக்கும் ஸ்தானமாகிய, அடிவயிறு, மார்பு, இடுப்பு, தொடை முதலிய பாகங்களைப் பிரதிதினமும் ஒருவர் நன்றாய்ப் பிசைந்து விடவேண்டும்.

## சூதகபந்த ரோகங்கள்.

சூதக அக்கிரமத்தினால் சந்தானோற்பத்திக்குத் தடையாய் இருப்பதாலும், ஸ்திரீகளுக்குக் காணும் அநேக வியாதிகளுக்கும் இதுவே வித்தாயிருப்பதாலும், அதனைப்பற்றி ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாயிருப்பதாலும் அதைப்பற்றிச் சிறிதளவு கூறுவாம். மாதமாதம் ஸ்திரீகளுக்கு வெளிப்படும் உதிரமானது முற்றிலுமாவது அல்லது அளவிற் குறைந்தாவது வெளிப்படாமற் போவதற்குச் சூதகபந்தம், சூதகக்கட்டு, சூதகவாயு அல்லது ரத்தகுன்மசூலை எனப் பலவிதமாகக் கூறப்படும். சூதகபந்தரோக உற்பத்திக்குப் பலவகைக் காரணங்களுண்டு. அவைகளாவன.—மாதாந்தருது பெண்கள் கர்ப்பமாய் இருக்கும்போதும் பிள்ளைக்குப் பால் கொடுக்கும்போது நின்றுபோவது இயற்கையாயிருப்பினுங்கூட சிலருக்கு இயற்கைக்கு



விரோதமாய் இவ்விரு சமயங்களிலுங்கூட சூதகம் வெளிப்படுவதுண்டு. ஆனால் கர்ப்பகாலத்தில் காணும் சூதகமானது, கருப்பையினுள்ளிருந்து வெளிப்படுவதில்லை. ஏனெனில் அக்காலத்தில் கருப்பையின் வாய் அடைபட்டிருப்பதால் யோனியிலிருந்து மாத்திரமே வரும். சில ஸ்திரீகளுக்குக் கருப்பையில் துர்மாமிசம் அல்லது விப்புருதி, பிளவை, ரணம் முதலியவை யுண்டாயிருத்தல், கருப்பையின் இயற்கைக்கு மாறுதலான சூடு, குளிர்ச்சி, வாதசத்து, பித்தசத்து, சிலேஷ்மசத்து முதலியவைகள் அதிகரிப்பதினாலும், அளவுக்கு மிஞ்சின தேகப் பருமத்தினாலும் இரத்தக்குறைவினாலும் இன்னும் இவைபோன்ற பலவகைக் காரணங்களினாலும் சூதகபந்தமுண்டாகும்.

**கருப்பையில் வீக்கமுண்டாவதினால் காணும் சூதக பந்தத்தின் லக்ஷணமாவது.**—மல ஜலங்கள் அதிகப் பிரயாசையோடுவெளிப்படுதல், ஜீரண சக்தி குறைதல், வாந்தி, கிறுகிறுப்பு, மயக்கம் தலைநோய், ஜுரம், அடிவயிறு, துடை, கணுக்கால் முதலிய விடங்களில் வேதனை தீவிரமான சுவாசம், படபடப்பான நாடி முதலிய குறிகள் காணப்படும்.

சிகிச்சை.—இதற்கு முதலில் கருப்பையின் வீக்கம் தணிய வேண்டியதற்காக அடிவயிற்றின்மேல் போஸ்தகாய் ஒற்றிடம் கொடுத்தல் அல்லது எக்ஸ்டிராக்ட் பெல்லடோனா (Extract Belladona) என்ற மருந்தைப் பூசுதல் அல்லது ஒரு புட்டி சுத்த ஜலத்தில் மூன்று விராகனிடை நவக்ஷாரத்தைக் (Ammonia) கரைத்து அதில் வெள்ளைத் துணியை நனைத்து அடி வயிற்றின்மேல் ஈரம் உலராமல் போட்டுக்கொண்டிருத்தல் ஷை ஜலத்தையேனும், துவர்ப்பான கஷாயங்களையேனும் பீச்சாங்குழலால் மர்மஸ்தானத்துக்குள் அடித்தல், அதோடு க்ளிஸிரீன் ஆவ் டானிக் ஆஸிட் (Glycerin of Tannic Acid) என்னும் மருந்தில் ஒரு சிறிய பஞ்சு உருண்டையை நனைத்து ஒரு நூலினால் கட்டி மர்மஸ்தானத்துக்குள் செலுத்தி வைத்திருந்து மறுநாள் நூலைப் பிடித்திழுத்தால் பஞ்சு வந்துவிடும். திரும்பவும் வேறு பஞ்சை இவ்விதமாகவே பக்குவம் செய்து வைத்து வருவதோடுங்கூட, எட்டு அவுன்ஸ் நன்னாரி வேர்க் கஷாயத்தில் பொட்டாஷ் ஐயோடைட் என்

னும் உப்பு 32-கிரேன்ஸ் கூட்டி வேளையொன்றுக்கு ஒரு அவுன்ஸ் வீதம் தினம் 2-வேளை கொடுத்து வரவேண்டும். (Potash Iodid Gr 32, Infusion Sarsaparilla oz 8, one oz to be taken 2 times a day.)

கருப்பையில் விப்புருதி விரணம் முதலியவை உண்டாகி உலர்ந்து போனபிறகு,அதனுல் சூதகம் வெளிப்படும் நாடிகளின் வாய் அடைபட்டுப் போவதினுல் உண்டாகும் சூதகபந்த ரோகமானது சிகிச்சைக்கு வசப்படாது என்றாலும் கூடியவரையில் முயற்சி எடுக்க வேண்டியது நிரம்ப அவசியம்.

கருப்பையில் சூடு அதிகரிப்பதினுலுண்டாகும் சூதக பந்தத்தின் லக்ஷணமாவது.—சூதகம் கறுத்துக் கலங்கலாயிருத்தல், தேகம் மெலிந்துபோகுதல், பெண்குறி, கருப்பை, நாசி முதலியவைகள் வறண்டு போகுதல், கண்ணெரிவு, நாவு சுரசுரப்பாயிருத்தல், கிறு கிறுப்பு, அரோசகம், தாகம், கண், நாக்கு, சிருநீர், தேக முதலிய வைகள் மஞ்சள் நிறமாயிருத்தல் முதலியவைகளாம்.

சிகிச்சை.—இவ்வகைக் குணங்களோடு கஷ்டப்படும் ஸ்திரீகள் குளிர்ச்சியான ஆகாரங்களை உட்கொண்டு வருதல், குளிர்ச்சியான மலைப்பிரதேசங்களுக்குச் சென்று வசித்தலோடுங் கூட சிற்று மணக்கெண்ணெய், கையாந்தகரை, கருநொச்சி, இவற்றின் சார் வகைக்குப் படி ½- நல்லெண்ணெய், பசுவின்நெய்,எலுமிச்சம்பழ ரசம் வகைக்குப் படி ¼, சீரகம், நெருஞ்சிவிதை, தண்ணீர் விட்டான் கிழங்கு, வாய்விளங்கம் வகைக்குப் பலம் ½, இவைகளை அரைத் துப் போட்டுக் காய்ச்சி வடித்துக் காலையில் மட்டும் தேகத்திற்குத் தக்கபடி ஒரு கரண்டி வீதம் புளி நீக்கிச் சாப்பிட்டுவரத் தீரும். அல்லது பெர்ரி ஐயோடைடம் 15 கிரேன்ஸ், டிஞ்சர் கலம்பா 1 அவுன்ஸ், சுத்த ஜலம் 7 அவுன்ஸ் இவைகளை ஒன்றாய்க் கூட்டி வேளைக்கு 1 அவுன்ஸ் வீதம் தினம் 3 தடவை கொடுத்துவரவும். (Ferri Iodidum Gr 15,Tincture of Calumbæ Oz. 1, Aqua Distillata Oz 7, Dose, one Oz to be taken 3 times a day.)

கருப்பையில் குளிர்ச்சி யதிகரித்துண்டாகும் சூதகபந்தத்தின்



லக்ஷணமாவது.—மாதாந்தர ருதுவானது இயற்கைக் குணம் மாறி சிவந்து தெளிவாயிருத்தல், தேகம் வெண்மைநிறமடைதல், நீர் அளவிற் கதிகமாயிறங்குதல், பசியின்மை, சோம்பல், நித்திரையி லிருந்தெழுந்தவுடன் தேகங் கனமாயிருத்தல் முதலியவைகளாம்.

சிகிச்சை.—இந்த ரோகமுள்ள ஸ்திரீகள் உஷ்ணமாகிய பதார்த் தங்களையும் ஆகாரங்களையும் உட்கொண்டு வருவதுடன், அரைப்படிப் பேய்க்குமட்டிக்காய்ச் சாற்றைக் கெட்டியான குழம்பாய்க் காய்ச்சிக் கல்வத்திலிட்டு அதில் ½-பலம் பெருங்காயத் தூளும், வெங்காரம், இந்துப்பு, கடுகு ரோகிணி, கருஞ்சீரகம், வால்மிளகு இவை வகைக்கு ⅛-பலமாகப் பொடித்துப் போட்டு ஆறுமணி நேரம் அரைத்து வைத் துக்கொண்டு சரீரப்பிரகிருதிக்குத் தக்கபடி வீட்டு விலக்கமானது முதல் மூன்று தினத்திற்குக் காலையில் மட்டும் குன்றிமணிப் பிர மாணம் பனைவெல்லத்தில் வைத்து சாப்பிடவும். பேதி அதிகமானுல் மறுநாள் மருந்தைக் குறைத்துக் கொள்ள வேண்டியது. அல்லது, ப்ளாக் ஹெலிபோர் 39 கிரேன்ஸ், பல்விஸ் ஸின்னமோமி 30 கிரேன்ஸ்,இவைகளைச் சர்க்கரையில் கூட்டி மூன்று பங்கு செய்து மூன்று நாள் உட்கொண்டாலும் பேதியாகி துர்நீர் கழிந்து சூதகம் கிரமப்படும். (Black Hellebore Gr 39, pulvis Cinnamomi Gr 30, with sugar mix carefully and make into 3 parts once a day.)

கருப்பையில் வாதசந்து அதிகரித்துண்டாகும் சூதகபந்தத்தின் லக்ஷணமாவது.—சூதகமானது கருமை நிறமாயிருத்தல், தேகம் மெலிந்து கருமை நிறமடைதல், பாதாதி கேச முதல் வலி, தேக முழு திலும் ஓர்வித நடுக்கம், துர்ப்பலம், நித்திரையின்மை, அதைரியம், பிதற்றல், மாரடைப்பு, இசிவு, பஞ்சேந்திரிய உணர்ச்சிக்குறைவு, மூட்டுகளில் வேதனை, வாந்தி, இடைவிடாத விக்கல், சிலசமயங்களில் ஸ்மாரகமில்லாது அயர்ந்து விழுந்து விடுதல் முதலியவைகளாம்.

சிகிச்சை.—கருப்பையில் குளிர்ச்சி யதிகரிப்பதினுலுண்டாகும் சூதகபந்தத்திற்குச் சொல்லியிருக்கும் அவுஷதங்களையே இதற்கும் கொடுத்து வருவதினுல் சௌக்கியமுண்டாகும்.

**கருப்பையில் பித்தசத்து அதிகருத்துண்டாகும் சூதக பந்தத்தின் லக்ஷணமாவது.**—சூதகம் மஞ்சள் அல்லது நீலநிறமாயிருத்தல், சரீரம் மெலிந்து போகுதல், அகோரமான பசி, தேகம், கைகால் முதலியவைகாந்தல், அல்ப நித்திரை, அதிதாகம், அரோசகம், தலை சுழற்றல், வாய் உலர்தல், வாய் கசப்பு, கண், நாக்கு, சர்மம், மலமூத்திரம் முதலியவைகள் மஞ்சணிற மாயிருத்தல் முதலியவைகளாம்.

**சிகிச்சை.**—இந்த ரோகமுடையவர்கள், பித்த சமனத்தையும், குளிர்ச்சியையும், இரத்த விருத்தியையும் கொடுக்கும்படியான பதார்த்தங்களையும், ஆகாரங்களையும் உட்கொண்டு வருவதோடு இரவு படுக்கைக்குப் போகுமுன் ஒரு தொட்டியில் வெந்நீர்விட்டு இடுப்பு வரையும் படியாய் பிரதி தினமும் 15-நிமிஷத்திற்குக் குறையாது உட்கார்ந்திருக்கவேண்டும். வெந்நீர் குளிர்ந்து விடாதபடிக்கும் குளிர்ந்த காற்று தேகத்தில் படாதபடிக்கும் தேகத்தையும், தொட்டியையும் ஒரு பெரிய கம்பளியினால் மூடிக்கொள்ளவேண்டும். பிறகு தேகத்தினின்று வெளிப்படும் வியர்வையைத் துணியால் துடைத்துவிட்டுச் சிறிது நேரம் இளைப்பாறிப் பிறகு நித்திரை போகவேண்டும். அவுஷதம் அவசியமாயிருந்தால், மரமஞ்சள், கருஞ்சீரகம், சதகுப்பை, இம்மூன்றும் சமன் சேர்த்து சூரணித்து அவற்றிற்கு 3-பங்கு பனைவெல்லம் சேர்த்து வேளை ஒன்றுக்கு 2-விராகனிடை வீதம் சோம்புக்கஷாயத்தில் கலந்து ருதுதினத்திற்குமுன் மூன்று தினத்திலிருந்து சாப்பிட்டுவரச் சௌக்கியமுண்டாகும்.

**கருப்பையில் சிலேஷ்மசத்து அதிகரித்துண்டாகும், சூதகபந்தத்தின் லக்ஷணமாவது:**—சூதகம் வெண்மை நிறமாயிருத்தல், தேக பாரிப்பு, தேகமுற்றிலும் வேதனை, கஷ்டசுவாசம், இறைப்பு, வாயில் தித்தித்த நீரூறல், குளிர், இரைப்பு, இருமல் முதலியவைகளாம்.

**சிகிச்சை,**—இந்த ரோகமுடைய ஸ்திரீகள் குளிர்ச்சியானஆகாரங்கள், பானங்கள் முதலியவைகளைப்பற்றற நீக்கி, கருப்பையில் வாதசத்து அதிகரித்துண்டாகும் சூதகபந்தத்திற்குச் சொல்லியிருக்கும் அவுஷதங்களைச் சாப்பிட்டு வருவார்களானால் சௌக்கியமுண்டாகும்.



## சூதகஜன்னி, (HYSTERIA—ஹிஸ்டீரியா.)

ஸ்திரீகளுக்கு சூதகபந்தத்தினால் முன்கூறிய ரோகங்கள் உண்டாவதுமன்றி, மிக பயங்கரமான சூதகஜன்னி என்னும் மஹாகொடிய ரோகமும் காணுவதுண்டு. சரீரத்தினின்று கழியவேண்டிய அசுத்த இரத்தமாகிய சூதகமானது கிரமமாய் வெளிப்படாது, இரத்தநாடிகளிற் றங்குவதினால் இந்த ரோகம் பிறக்கிறதென்பது சிலர்களுடைய அபிப்பிராயம். இந்த நோய் நரம்புகளைப்பற்றியே உண்டாவதால் கைகால்களில் இசிவு கைகால்களைமுடக்கிக்கொண்டு மார்பில் அடித்துக்கொள்ளுதல், சிரசிலுள்ள ரோமங்களையும் தேகத்திலுள்ள ஆபரணங்களையும் பிய்த்துக்கொள்ளுதல், மார்பில் உருண்டையாய் மேலுக்கேறிக் தொண்டையை அடைப்பதுபோல் தோற்றுதல், (Globus hystericus) வலிப்பு நிற்கும்போது கண்ணீர் வடிதல், அழுதல் அல்லது நகைக்குதல், அடிவயிற்றின் இடது பக்கத்தில் வேதனையும் இரைச்சலும் காணுதல், வாதரோகம்போல் கைகால்களுக்குப் பிடிப்பு கண்டு அசைக்கக்கூடாமலிருத்தல் சிலருக்குப் பசி அதிகமாயும் சிலருக்குக் குறைந்துமிருத்தல். இந்தரோகத்தில் வலிப்பு விட்டு விட்டு வரும், சிறிது நேரம் சென்றபிறகு தெளிவுண்டாகும், உபத்திரவம் தணிந்தவுடன் நீர் தெளிவாயும் அதிகமாயும் இறங்கும். சிலருக்கு வலிப்பு வரும்போது தெரியாமல் நீர் இறங்குவதுமுண்டு.

வேசியர்களுக்கு இந்த வியாதி விசேஷமாய்க் காணுகிறதில்லை. ஆகையால் அதிகப் புணர்ச்சியால் இந்த ரோகம் உண்டாகிறதென்று சொல்வதற்கும் ஆதாரமில்லை. இந்த வியாதி ஒவ்வொருவருக்கு வெகு விசித்திரமாய்க்காணும். படுத்தபடுக்கையைவிட்டு எழுந்திருப்பதே இல்லை. புரளுகிறதுமில்லை. கைலாகு கொடுத்து எழுப்பப்பிரயத்தினப்பட்டால் ஐயையோ நோகிறதென்று முறையிடுவார்கள். மலஜலபாதைகளுக்கு எழுந்துபோக எவ்வளவும் மனமிராது.

இத்தியாதி குணங்களோடு கூடியிருக்கப்பட்ட ரோக ஸ்திரீயை, பேய், பிசாசு, ஏவல், சேஷ்டை என்று நினைத்து மந்திர தந்திர பூஜை முதலியவைகளைச் செய்து, அவளை வீணில் உபத்திரவப்படுத்துவது நம் நாட்டில் வழக்கமாய்விட்டது. இவ்வித உபத்திரவத்தால்

ஒருவேளை மனதுக்கு உத்ஸாகம் உண்டாகி வியாதி படிமானமாவதும் உண்டு. ஆனால் தரித்திராம்ஸையிலிருக்கிற சில ஸ்திரீகள் மனமிரக்கமில்லாத பூசாரிகள் கையில் அகப்பட்டுக்கொண்டு படும் ஹிம்சைகள் செப்பத்தரமன்று.

சிகிச்சை.—சூதகஜந்நி கண்டிருக்கும் ஸ்திரீகளின் வஸ்திரங்களையும், ஆபரணங்களையும் தளர்ச்சிசெய்து, காயம் படாமல் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டிருக்க வேண்டியது. ஆக்ராண உப்பு (Ammonia-Carb) அல்லது புகைத்துணியை முகரவைக்கலாம். குளிர்ந்த ஜலத்தை மார்பிலும் சிரசிலும் ஊற்ற வேண்டியது. மருந்து உட்கொள்ளும்படி பிரக்ஞை யிருந்தால், பெருங்காயம், ஜடாமாஞ்சி இவைகளின் பாவனத்திரவத்தில் எதையாவது கொடுக்கலாம். நோய் சௌக்கியமடைந்தபிறகு, திரும்பவும் வராமல் தடுப்பதற்கு, மலச்சிக்கலை நீக்கி தேகதாருட்டியத்தை உண்டுபண்ணக்கூடிய அவுஷதங்களைக் கொடுக்க வேண்டியது. இரத்தக்ஷீண முள்ளவர்களுக்கு அயசம்பந்தமான மருந்துகளைக் கொடுக்கவேண்டியது. சூதகம் கிரமமில்லாவிட்டால், அயம்கூட்டிய மூஷாம்பர மாத்திரை கொடுக்க வேண்டியது. ஸ்திரீயை நிர்விசாரமாய் வைப்பதே எல்லாவற்றையும்விட மேலானது.

Remedies.—Cool air, Ammonia carb to nostrils; Tincture Assafœtidæ—Tincture Valerian, Cold water; Aperients; Shawer bath; Iron, Aloes.

## குத்துவலியோடு கூடிய சூதகம்.

## (DYSMENORRHŒA—டிஸ்மனோரியா)

குத்துவலியோடு கூடிய சூதகரோகமானது சூதக வயிற்றுவலி, தூரசூலை ரோகம், சூதகச்சூலை, ரத்தவாத பித்தகுன்மம், முட்டுகுட்டு, சூசிசாசூலை அல்லது சூசிகாவாயு எனப் பல நாமம் பெறும். அல்குல், கருப்பை, சினைப்பைகள் முதலிய ஜனேந்திரியங்களின் பலக்குறைவு அல்லது அவற்றிற்குக் காணும் வியாதிகள், கருப்பையின் வாய் அடைபடுதல், குளிர், முரட்டுத்தனமான சம்போகம், சம்போக காலத்தில் ஆண்குறியின் முனையானது கருப்பையின் முனை



யோடு அடிக்கடி அழுத்தமாய்ப் படுதல், கருப்பையின் வாய் ஓர் பக்கமாய்த் திரும்பிப் போகுதல் ஆகிய இவ்வகைக் காரணங்களினால் குத்துவலியோடுகூடிய சூதகமுண்டாகும். அந்தக் குத்து வலியானது முக்கியமாய் முதுகு முள்ளந்தண்டு, சிரசு முதலிய இடங்களிலிருந்தே உண்டாகும். குத்து, வலியோடு கூடி வெளிப்படும் சூதகமானது கட்டி முட்டி யாகவும் வெளிப்படுவதுண்டு. இன்னும் சூதகம் தடைபட்டுக் கொஞ்சமாகவேனும், சிறிதுநாட் சென்றபிறகு விட்டு விட்டேனும், சில சமயம் கொஞ்சமாகவும், சிலசமயம் அதிகமாகவும் வெளிப்பட்டுக் கொண்டேயிருந்து உபத்திரவிக்கும். புத்தியறிகிற காலமுதல் வீடுதூரம் நிற்கிறவரையில் வருத்தமடைந்து கொண்டே யிருப்பார்கள். சிலருக்கு அடிவயிற்றில் வேதனை, இடது பக்கத்து வயிற்றைப் பிகுவாய் இழுத்துக்கொள்ளுதல், சகிக்கமுடியாத வயிற்றுவலி, ஓக்காளம், வாந்தி, வயிற்றுப்போக்கு முதலியவைகளும் காண்பதுண்டு. இந்த ரோகம் மூன்றுவகைப்படும், 1-வது நரம்புகளைப் பற்றியது. 2-வது கருப்பையில் இரத்தம் அதிகமாகிப் பிறக்கிறது. 3-வது சூதகம் வருகிற வழி மூடிக்கொள்வதினால் உண்டாவது.

சிகிச்சை.—இதில் 1-வது ஜாதியைச் சுவஸ்தம் செய்வது கஷ்டம். ஆனபோதிலும், வெந்நீரில் உட்காரவைப்பதிலும், கற்பூரம், மார்பியா, (Morphia) அபினி முதலிய வேதனசாந்தி மருந்துகளை, யோனிக்குள் வைப்பதிலும், கஞ்சாவை உள்ளுக்குக் கொடுப்பதிலும் வேதனை நிற்கும். மீன் எண்ணெய், வேப்பம் பட்டைக் கஷாயம் இவைகளில் ஒன்றைக் கொடுத்து உடம்பைத் தேற்றுவதுடன் அந்த ஸ்திரீயைப் புருஷனிடத்திலிருந்து வேறுபடுத்தி வைப்பதினாலும், பெரீ ஸல்பாஸ் 20-கிரேன்ஸ், எக்ஸ்ட்ராக்ட்டம் ஆலோஸ் 15-கிரேன்ஸ், பௌடர் ரூபர்ப் 20-கிரேன்ஸ், இவைகளை ஒன்ருய்க்கூட்டி 12-மாத்திரைகள் செய்து வேளையொன்று 2-மாத்திரைவீதம், தினம் 1-க்கு 2-வேளை சாப்பிட்டு வருவதினாலும் நன்மையுண்டாகும். (Sulphate of iron Gr 20, Extract Alœs Gr 15, Powder Rhubarb Gr 20, mix well, and make 12 Pills, Two for a dose. Two times a day.)

2-வது ஜாதி ரோகத்தை வசப்படுத்துவதும் மிகவும் கஷ்டம், 1-வது ஜாதி ரோகத்திற்குச் சொல்லியிருக்கும் சிகிச்சைகளை இதற்கும் செய்யவேண்டியது.

3-வது ஜாதி ரோகத்தை ஸஸ்திரப் பிரயோகத்தினால் (Surgery) சௌகர்யப் படுத்தவேண்டியது. ஔஷதத்தால் சௌக்யப்படுத்த முயற்சிப்பதானது கடலைக் கையினால் நீந்திக் கரையேறுவது போலாம். இதற்கு இங்கிலீஷ் வைத்திய ஸஸ்திர முறையில் தேர்ந்தவரிடத்தில் (Surgeon) சிகிச்சைசெய்து கொள்ள வேண்டியது.

## விகாரமான சூதகம்.

## VICARIOUS MENSTRUATION

## —வைகேரியஸ் மென்ஸ்ட்ருஏஷன்.

சில மாதர்களுக்கு மாதாந்தருது வெளிப்படுவதற்குரிய குறிகளெல்லாந் தோன்றின போதிலும், சூதகம் வெளிப்படுவதில்லை, ஒருக்கால் வெளிப்படினும் மிகச் சொற்பமாய் இயற்கைக்குவிரோதமாக நாசியிலிருந்தாவது, அபானத்திலிருந்தாவது உதிரம் வெளிப்படும். சிலருக்கு வாயிலிருந்து எச்சில் உமிழும்போது இரத்தமும் சேர்ந்து வெளிப்படுவதுண்டு. சிலர் இரத்தமாகவே வாந்தி எடுப்பார்கள், சிலருக்கு, கை, கால், கண், காது, நாசி, நுரையீரல், வயிறு, மார்பு, தொப்புள் முதலிய இடங்களி லிருந்தேனும், புண், கட்டி முதலிய இரணங்களின் வழியாயாவது இரத்தம் வெளிப்படும்.

சிகிச்சை.—இந்நோயினால் பீடிக்கப்பட்டிருக்கும் ஸ்திரீகள் அவமே மரணத்தை யடைவார்களேயன்றி, சுவஸ்தமடைவது மிகவும் துர்லபம். அப்படிக்கிருப்பினும் "முயற்சி தன் மெய்வருந்தக் கூலி தரும்" என்னும் பொய்யாமொழியைப் பின்பற்றி நாம் நடக்கவேண்டியது மிக்க அவசியமாதலால் அடியில் கண்டபடி சிலசிகிச்சைகளைக் கையாடிவருவது நிரம்ப அவஸ்யமாகும். அதாவது வெந்நீர் நிரப்பிய தொட்டியில் இடுப்பு நனையும்படிக்கேனும் (Hip Bath) அல்லது இருபாதங்கள் நனையும்படிக்கேனும் (Foot Bath), 15—20 நிமிஷம் உட்கார்ந்து கொண்டிருத்தல், வியர்வையை உண்டாக்கும்படியான கிரியைகளைச் செய்தல், சரீரத்திற்குப் புஷ்டியைக் கொடுக்கக்கூடிய



ஆகாரங்களைப் புசித்து வருதல், இயற்கைக்கு விரோதமாக வெளிப்படும் இரத்தத்தை நிறுத்தும் படியான அவுஷதங்களைப் பிரயோகம் செய்தல் முதலியவைகளாம்.

## சூதகப் பெருக்கு.

## MENORRHAGIA OR EXCESSIVE MENSTRUATION

## —மேனோர் ஹேஜியா, ஆர் எக்சிஸிவ் மென்ஸ்ட்ருஏஷன்.

மாதமொருமுறை மாதர்களுக்கு வெளிப்படும் உதிரமானது, அளவிலும், காலத்திலும், மிகுதியாயிருப்பதற்குப் பெரும்பாடு, அஸ்ருக்தர ரோகம், ரக்த ஸ்ராவ ரோகம், பிரதரரோகம், அல்லது சூதகப் பெருக்கு எனப் பலவிதமாய்ச் சொல்லப்படும். சூதக பந்தத்தினால் பெண்களுக்குப் பல ரோகங்கள், உண்டாவதுபோலவே, சூதகப் பெருக்கினாலும் பல ரோகங்கள் உண்டாகி, மாதர்களுக்குச் சரீர அசௌகர்யத்தையும் சஞ்சலத்தையும் உண்டுபண்ணக்கூடிய கொடிய ரோகமாய் இருக்கிறது.

வாதபித்த சிலேஷ்ம விகற்பத்தினால் சூதக பந்த ரோகங்கள் உண்டாவதுபோலவே, கருப்பையில் வாதபித்த சிலேஷ்ம சத்துக்கள் அதிகரிப்பதினாலும், சூதகப்பெருக்கு உண்டாகும். சிலருக்கு அபரிமிதமான இரத்தம் விளைவதினால் இவ்வித ரோகம் உண்டாகிறதென்றும், தேக சுபாவமே தனக்கு வேண்டாத மிச்சத்தை வெளிப்படுத்துகிறபடியால், இதனால் சரீரத்தில் யாதொரு சவுக்கியஹீனமுண்டானாலொழிய யாதொரு சிகிச்சையும் செய்யப்படாதென்பது சிலர்களுடைய கொள்கை, ஏனெனில் சரீரப் பிரகிருதியே தன் மேன்மிச்சத்தை வெளிப்படுத்துகிற படியினாலேதான். இன்னும் கண்டமாலை, குண்டிக்காய் ரோகம், பீலிகரோகம், நாள்பட பால் சுரப்பதினால் காணுகிற பாண்டு இவைகளால் பிறக்கிற ரத்ததோஷம், சினைப்பைக்கும் கருப்பைக்கும் அதிக ரத்தம் ஏறுதல், சூதகம் வெளிப்படும் காலங்களில் கருப்பை அழலைகொள்ளுதல், அளவுக்கு மிஞ்சின சம்போகம், அதிககவலை, கருவழிவு, கருப்பையில் கட்டி அல்லது விரணம்முதலியன

உண்டாகுதல் ஆகிய இவ்வகைக் காரணங்களினாலும் சூதகப்பெருக்கென்னும் மகாகொடிய ரோகம் உண்டாகலாம்.

சிகிச்சை.—பிரதமத்தில் ஜ்வரத்தையும், ஜ்வரக்குறிகளையும் பற்றற நீக்கவேண்டியது. கருப்பையில் அதிக ரத்தம் செல்லாமல் செய்யவேண்டியது. கைகால்கள் ஜில்லிட்டுப்போனால் சூடத்தைலம் அல்லது டர்பன்டைனை (Turpentine) உள்ளங்கால் உள்ளங்கை முதலிய விடங்களில் தேய்த்துச் சூடுண்டாகச் செய்யவேண்டியது, ரத்தஸ்தம்பன காரிகளாகிய துவர்ப்பு மருந்துகளைக் கொடுக்க வேண்டியது. சுத்தி செய்த 15-கிரேன்ஸ் பொட்டிலுப்பை 3-அவுன்ஸ் கஞ்சி அல்லது சுத்த ஜலத்துடன் கூட்டித் தினம் 3-4-தரம் கொடுக்கலாம். சுத்திசெய்த 2-டிராம் நவக்ஷாரத்தை 1-பைன்ட் கஞ்சித் தண்ணீரில் கரைத்து 1-ஒயின்கிளாஸ் பிரமாணம் 2-3-தரம் மணிக்கொரு முறையாகக் கொடுத்து நோயாளியைக் குளிர்ச்சியான இடத்தில் சயனிக்கச் செய்யவேண்டியது. அத்திப்பாலைச் சர்க்கரையுடன் கூட்டிக்கொடுக்கலாம். அத்திப்பட்டை அல்லது நாவற்பட்டையுடன் எருமை மோர்விட்டு இடித்துப் பிழிந்த ரசத்தில் $\frac{1}{4}$-ஆளாக்கு வீதம் கொடுக்கலாம். மாங்கொட்டைப் பருப்பைப் பொடித்துத் தேனில் கலந்து கொடுக்கலாம். மாசிக்காய்ப் பொடி 15-கிரேன்ஸ், சன்னலவங்கப்பட்டைத்தூள், 10-கிரேன்ஸ் இரண்டையும் ஒன்றாய்க்கூட்டித் தேனில் குழைத்துக் கொடுக்கலாம். அல்லது மாசிக்காய்த் தூளுடன் $\frac{1}{2}$-கிரேன்ஸ் அபின் கூட்டியும் கொடுக்கலாம், அல்லது பருத்தியிலைச் சாருடன் $\frac{1}{2}$-ஆழாக்கு நல்லெண்ணெயைக் கூட்டிக் கொடுக்கலாம். மாசிக்காயைச் சுத்த ஜலத்தில் இடித்துப்போட்டுக் காய்ச்சி மர்மஸ்தானத்தில் பீச்சலாம், அல்லது துணியை நனைத்து யோனிக்குள் வைக்கலாம். 2-அவுன்ஸ் காடியுடன் 1-பைன்ட் சுத்த ஜலம் கூட்டிச் சிறிது சர்க்கரையும் சேர்த்து $1\frac{1}{2}$-2-அவுன்ஸ் வீதம் தினம் 3-4, தரமாகிலும் அல்லது அடிக்கடியாவது கொடுக்கலாம். காடியில் கந்தைத் துணி அல்லது கடற்பஞ்சை (Sponge) நனைத்து யோனிக்குள் வைக்கலாம். பாண்டுரோகக் குறிகள் இருந்தால் அயஞ்சேர்ந்த அவுஷதங்கள் கொடுக்கலாம். மாசிக்காய் உப்பு, எர்கட் ஆவ்ரை முதலியவைகளும் கொடுக்கலாம். இன்னும் ஆஸிடேட் ஆவ் லெட் 3-கிரேன்ஸ், எக்ஸ்ட்ராக்ட் ஆவ் ஒபியம் $\frac{1}{2}$-கிரேன்ஸ் இவ்விரண்டையும் ஒன்றாய்க் கூட்டித் தினம் 1-க்கு 3-தரம் கொடுக்கலாம். (Remedies—Galls, Gallic acid, Opium, Iron, Vinegar, Injections,—Take of Acetate of lead Gr. 3. Extract of Opium Gr. $\frac{1}{4}$. Mix well and make a pill one to be taken 3 times a day.)



## கர்ப்பமேகம். (LEUCORRHŒA—லியூகோரியா.)

மாதர்களின் மர்மஸ்தானத்திலிருந்து வெண்ணிறமாய் வெளிப்படுகிற திரவத்திற்குக் கர்ப்பமேகம், கர்ப்பப்பிரமேகம், கர்ப்பஸ்ராவம், அஸ்திஸ்ராவம், எலும்புருக்கி ரோகம், வெள்ளை குசுமரோகம், அல்லது யோனிஸ்ராவம் என்று சொல்லப்படும். இது கருப்பையிலிருந்தாவது, பெண்குறியிலிருந்தாவது வெளிப்படும். துர்ப்பலம், சஞ்சலம், கருவழிவு, கடினமான வேலை, ஆகாரக்குறைவு, வயிற்றுப்போக்கு, சூதகபந்தம், சூதகப்பெருக்கு, அளவுக்கு மிஞ்சின சம்போகம், பிரமேக ரோகமுள்ள புருஷர்களுடன் சம்போகஞ் செய்தல், அடிக்கடி பிரஸவித்தல், குழந்தைக்கு நீண்ட காலம் பால் கொடுத்தல், அளவுக்கு மிஞ்சின சூடு அல்லது குளிர்ச்சி ஆகிய இவ்வகைக் காரணங்களால் இந்த வியாதி உண்டாகிறது.

ரோக ஆரம்பத்தில் வெளிப்படும் திரவம் நீர்போலாவது, வெள்ளையாயாவது, மஞ்சளாயாவது, பச்சையாயாவது வெளிப்படும். நாட்சென்ற பிறகு வெளிப்படும் திரவம் தடித்து, சீழ்போலாகிவிடும். அடிவயிறு, பெண்குறி, முதுகு முதலியவிடங்களில் வேதனை இருக்கும். அடிவயிறு கல்லுப்போல் கனமாய் இருக்கும். தினேதினே தேகம் மெலிந்து, கைகால் ஓய்ந்துபோகும். சில ஸ்திரீகள் தேகம் வெளுத்துப் பருத்துக் கொழுத்துச் சோம்பலுடனிருப்பார்கள்.

சிகிச்சை.—2-விராகனிடை படிக்காரத்தை 1-படி வெந்நீர் அல்லது கருவேலம்பட்டைக் கஷாயத்தோடாவது, மாதளம்பழத்தோல் கஷாயத்தோடாவது கலந்து, காலை மாலை இருவேளையும் யோனிக்குள் அடித்துவர வேண்டியது. அப்படிக்கடித்தவுடன் ஸ்திரீயைச் சற்று

நேரம் நித்திரைபோகச் செய்யவேண்டியது. சம்போகம் நீக்கவேண்டியது, குளிர்ந்த ஜல ஸ்நானம் செய்துகொண்டு வந்தால் ரோகத்தின் வீரியம் குறையும். 10-பலம் ஆவாரம்பூவை 20-பலம் பசுவின்நெய்யில் விட்டு, 3-நாள் ஊறினபிறகு காய்ச்சி, வடிகட்டின நெய்யில் 10-பலம் கற்கண்டும், ஏலம், சீரகம், லவங்கப்பட்டை, சடாமாஞ்சி, சந்தனம் இவைகளின் தூள்வகைக்கு விராகனிறை 1-வீதம் சேர்த்துக் கலந்துகொண்டு, காலை மாலை இருவேளையும் ஒரு தோலாவீதம் சாப்பிட்டுவர சௌக்கியமாகும். தேகம் வெளுத்து ரத்தக்குறைவா யிருப்பவர்களுக்கு அயசம்பந்தமான அவுஷதங்கள் கொடுக்கவேண்டியது.

## கர்ப்பப்பிரம்ஸம். (Falling of the Womb.)

கருப்பையானது தன் இயற்கை ஸ்தானத்தை விட்டுக் கீழே இறங்கிவிடுவதற்கு, கருப்பை அடியிறங்கிப்போகுதல்அல்லது கர்ப்பப்பிரம்ஸம் என்று பேர். சிலர்களுக்குக்கருப்பை உள்ளேயிருக்கும். சிலருக்கு வெளிக்கு வந்து விடும். கருப்பையில் ஐக்கப்பட்டிருக்கும் சவ்வுகளும் நரம்புகளும் தளர்ந்து இந்த ரோகம் உண்டாகிறது.

சிகிச்சை.—ரோகஸ்திரியை இடதுபக்கமாய்ப் படுக்கவைத்து முழங்கால்களை முடக்கி வயிற்றோடணையும்படி செய்து, வெளிக்கு வந்திருக்கும் கருப்பைக்குமேல் ஆமணக்கெண்ணெ தடவி, மெதுவாய் உள்ளுக்குத் தள்ளிவிட வேண்டியது. திரும்பவும் இறங்கிவிடாமல் கடற்பாசியைப் (Sponge) படிக்கார ஜலம் அல்லது கருவேலன் பட்டைக்கஷாயத்தில் நனைத்துப் பெண்குறிக்குள் வைக்கவேண்டியது. மேற்படி கடற்பாசியை அடிக்கடி எடுத்துச் சுத்த ஜலத்தில் அலம்பிவிட்டுத் திரும்பவும் முன்போல் வைத்துக்கொண்டு வந்தால் சுகுணமாகும்.

## சுக்கில நஷ்டம். (SPERMATORRHŒA—ஸ்பர்மடோரியா.)

சுக்கிலநஷ்ட ரோகமானது, சுக்கிலக்ஷீணம், சுவப்பனஸ்கலிதம், இந்திரியநஷ்டம், தாதுநஷ்டம், தாதுக்ஷீணம், விந்து நஷ்டம் அல்லது வீரியநஷ்டம் எனப் பல நாமம் பெறும். இந்த ரோகம் சிலருக்கு ஜனனேந்திரியங்கள் அதிக உஷ்ண மடைந்திருக்கும்போது, ஸ்திரீ கியாபகம் வந்த உடனேயாவது, ஆண்குறியின்மேல் வஸ்திரம் பட்டவுடனே



யாவது அது கொஞ்சம் மலரும். தக்ஷணமே இந்திரியம் தண்ணீராய் வடிந்துவிடும்; உடனே சிசனமும் சுருங்கி போகத்துற் குதவாது போம். சிலரில் பிரகிருதி வித்தியாசத்தினால் * ஆண்குறி பெண்குறிக்குள் பிரவேசித்த தக்ஷணமே இந்திரியம் ஸ்கலிதமாகி விடும். இவ்வித மிருக்கிற பிரகிருதியை மாற்றுவது கஷ்டம், மூத்திரதாரையிலாவது மூத்திரப் பையிலாவது, குண்டிக்காயிலாவது, இந்திரிய கமலத்திலாவது, குதத்திலாவது உஷ்ணமிருந்தால் சுக்கிலம் சுருக்காய் ஸ்கலிதமாகி விடும். இந்திரிய நஷ்டம் காணுகிறவர்களுக்கு வியசனம் மேலிட்டு சரீரம் சௌக்கிய ஸ்திதியிலிராது. சுவப்பனம் அடிக்கடி காணும், ஸ்வப்பனம் காணும்போது இந்திரியம் ஸ்கலிதமாய் விடுவதுமுண்டு. இந்திரிய நஷ்டம் காணுகிறவர்களுக்கு, வேலை செய்ய மனமிராது; அஜீரண உபத்திரவம் நேரிடும்; கேள்வியும் பார்வையும் மந்தப்படும், ஞாபகசக்தி குறையும். மனதை ஒரு விஷயத்தில் வைப்பது அசாத்தியமாகும். இருதயத்துடிப்பு, மயக்கம், தலைவலி, சூலைரோகம் முதலியவைகள் காண்பதுமுண்டு. இவ்விதக் குறிகள் கண்டு, காக்கைவலி, க்ஷயம், உன்மாதம், பயித்தியம் முதலிய வியாதிகளாய் முடியும். கடைசியில் நபும்சகத்தன்மை காண்பது முண்டு. இந்திரியந் தங்கியிருக்கிற இந்திரிய கமலங்களுக்கு வியாதிகண்டு, அவைகளுக் கருகிலிருக்கிற உறுப்புகளுக்கும் வியாதி கண்டால், இந்திரியம் அடிக்கடித் தற்செயலாய் ஸ்கலித மாகுவதுமுண்டு. இதில் இந்திரியம் மூத்திரத்தோடு கலந்தாவது முக்கும்போதாவது விழும். ஒருமுறை வெளியேறின இந்திரியமானது எப்போதும் வெளிப்படுவதிலேயே திருஷ்டியாயிருக்கும், ஆகையால் பிரதமத்திலேயே அதிக எச்சரிக்கையாயிருக்க வேண்டும். அப்படி வெளிப்படாவிட்டால், சுக்கிலமானது, சுக்கிலாசயத்திலுள்ள இரத்ததாரைகளின் வழியாய்

* அவுஷதங்களினாலும் ஆகாரங்களினாலும், தாதுவிருத்தியும் தாதுநஷ்டமும் உண்டாவதுபோலவே பெண்குறியின் பேதத்தினாலும், தாதுவிருத்தியும் தாதுநஷ்டமும் உண்டாகும், அதெப்படியெனில் சிலர் சில ஸ்திரீகளுடன் சம்போகஞ் செய்தால் சம்போக சக்தி யதிகமாயிருப்பதுடன், சம்போக இன்பமும் அதிகமாயிருக்கிறது, அன்னவர்களே வேறு ஸ்திரீகளுடன் சம்போகஞ்செய்தால் போகசக்தி குறைந்து, சம்போக இன்பம் சற்றுமில்லாது துரிதஸ்கலித முண்டாகிறது.

இரத்தத்தோடு கலந்து தேகதிடத்தையும், வீரிய விருத்தியையும், நாடிகள் நாளங்கள் முதலியவைகளுக்கு வலிவையும் உண்டுபண்ணும், ஆனால் இத்தகைய சரீரப்பிரகிருதிகள் இப்பூவுலகில் இப்போது இருப்பது மிகவும் அபூர்வம்.

இதைச் சாமான்யரோகமென்று எண்ணலாகாது. மனதிற்குத் தன்னிடத்தில் நம்பிக்கை யிருக்கும்படியாய்ச் செய்துகொள்ளவேண்டியது. தன் சொற்படி நடந்தால் வியாதி நீங்குமென்று மனதைத் தேற்றவேண்டியது. தனக்கிருக்கும் வியாதியைப்பற்றி வாசிக்கலாகாது. கவலை யடைந்திருக்கும் மனதை உத்சாகப் படுத்துவதே முக்கிய சிகிச்சை, குருத்துவ போஜனம், கடினமான உழைப்பு, அதிகமான மனோமுயற்சி முதலியவைகள் கூடாது. புகையிலை, மதுபானம் முதலிய அப்பியாசங்களை நிசேஷமாய் நீக்கவேண்டியது. ஸ்திரீவிஷயத்தில் மனதைச் செலுத்தலாகாது. சிற்றின்பத்தை விர்த்தி செய்யக்கூடிய சிருங்காரரசமான கதைகளை (Novels) வாசித்தல் அல்லது கேட்குதல் நாடகங்களைப் பார்க்குதல் முதலியவைகளை முற்றிலும் நீக்கவேண்டியது. இரவில் ஈரத்துணியை கௌபீனம் கட்டிக்கொண்டு நித்திரை போவதினால் சிசினத்திலுள்ள உஷ்ண சமனமடைந்து வியாதியின் வீரியம் குறையும். இன்னும் இவ்வியாதியுள்ளவர்கள் பிரதினம் மாலையில் ஆசனஸ்நானம் செய்து வருவதினாலும் சுகுணமுண்டு.

சுக்கிலக் கருவிகளில் குளிர்ச்சி யதிகரித்து விடுவதால் சுக்கிலம் அதிக நேரஞ் சென்ற பிறகு அதிக வருத்தத்தோடு குறைந்த அளவாக வெளிப்படும், சுக்கிலம் தடித்து உறைந்து போயிருக்கும், போகமும் போக சத்தியும் சிலருக்கு அதிகமாயும் சிலருக்குக் குறைவாயுமிருக்கும், மூத்திரம் அதிக வெண்மையாயும் தடிப்பாயுமிறங்கும், இத்தகைய குறிகள் காணுமாயின் உஷ்ணத்தை அதிகரிக்கும்படியான பதார்த்தங்களையும், கிரியைகளையும் கையாடி வருவதினால் சுக்கிலக் கருவிகள் போதிய சூடடைந்து சுவாபீக ஸ்திதிக்கு வரும். ஆயுர்வேத சாஸ்திரப்படி இந்திரிய ஒழுக்கு மூன்றுவகைப்படும். அவைகளாவன—வாத இந்திரிய ஒழுக்கு, பித்த இந்திரிய ஒழுக்கு, சிலேஷ்ம இந்திரிய ஒழுக்கு என்பவைகளாம். நீரில் ஈ மொய்க்கு



தல், சிலருக்கு நீர் எண்ணெயைப்போலும், கொழுப்பை உருக்கினதுபோலுமிறங்குதல் அல்லது எலும்புருக்கியைப்போல் இறங்குதல் இவ்வகைக் குறிகளெல்லாம் கூடியிருக்குமானால் அதனை வாத இந்திரிய ஒழுக்கென்று சொல்லப்படும்.

நீர் குசும்பாவருணம் அல்லது கறுமை நிறமாயிறங்குதல், சிலருக்கு நீர் மஞ்சள் நிறமாயும் சிலருக்கு எண்ணெயைப் போலுமிறங்குதல், சிலருக்கு நீருடன் இந்திரியம் நீர்த்து வெளுத்து வெளிப்படுதல் இவ்வகைக் குறிகளில் ஒன்றேனும் பலவேனும் கூடியிருக்குமானால் பித்த இந்திரிய ஒழுக்கென்று சொல்லப்படும்.

நீர் கள்ளு அல்லது கரும்புரசம் இவைகளைப்போலிறங்குதல், சிலருக்கு நீருடன் மணல்களும், சிலருக்கு நீர் மாவைப்போல் உறைந்து போகுதல், சிலருக்கு நீர் வெண்மையாய்த் தெளிந்து இந்திரியம் கம்பி கம்பியாக ஸ்கலிதமாகுதல் இவ்வகைக் குறிகளில் ஒன்றேனும் பலவேனும் கூடியிருக்குமானால் சிலேஷ்ம இந்திரிய ஒழுக்கென்று சொல்லப்படும். மேற்கூறிய ரோகலக்ஷணமுள்ளவர்கள் அவுஷதபாக அட்டவணையிற் கூறியிருக்கும் அவுஷதங்களில் ரோகத்திற்குத் தகுதியானதொன்றைச்செய்து சாப்பிட்டுவரச் சௌக்யமுண்டாகும்.

மேற்கண்ட காரணங்களினால் சுக்கில நஷ்டரோகம் உண்டாவதுமன்றி, நமது தேகத்திலுள்ள, முக்கிய வுறுப்புகளாகிய தலைமூளை (22-வது பக்கம் பார்க்கவும்.) ஈரல் (31-வது பக்கம் பார்க்கவும்.) இரைப்பை (32-வது பக்கம் பார்க்கவும்.) இருதயம் (28-வது பக்கம் பார்க்கவும்.) குண்டிக்காய்(38 வது பக்கத்தில் பார்க்கவும்)முதலியவைகள் பலஹீனப்படுவதினாலும் அல்லது அவைகளுக்கு ஏதேனும் வியாதி நேரிடுவதினாலும் இரத்தக் குறைவினாலும் வீரிய விருத்திகுறைந்து போகசக்தி குறையும். ஆகையால் முதலில் வியாதி இன்னவுறுப்பின் அசௌகர்யத்தால் விளைந்ததென்பதைக் கண்டறிந்து அவ்வுறுப்பிற்குச் சிகிச்சைசெய்து அதன்பிறகு சுக்கில விருத்திக்கு வேண்டிய அவுஷதப் பிரயோகஞ் செய்யவேண்டியது.

## பிதாமார்களுக்கோர் விண்ணப்பம்.

ஓ!. பிள்ளைகளைப் பெற்ற புண்ணியவான்களே! தாங்கள் பூர்வ

புண்ணியவசத்தால் பெற்ற பிள்ளைகள் உண்மையிலேயே யோக்கியர்களென்று நினைத்திருக்கிறீர்களோ! நித்திரை போகாதீர்கள். உங்கள் மக்கள்மேலேயே கவனமா யிருங்கள்! உங்கள் பிள்ளைகளுடன் பழகும் ஸ்நேகிதர்களைக் கவனியுங்கள்! துஷ்டர்களுடன் பழகாது பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் புத்திரர்களுக்கு உயிருக்கு ஊன்றுகோலாகிய கல்வியைக் கற்றுக்கொடுங்கள்! அக்கல்விக்கேற்ற நல்லொழுக்கங்களிலும் நடைபெறச் செய்யுங்கள்! உங்கள் பிள்ளைகளின் நடையுடை பாவனைகளின் மேல் கவனமா யிருங்கள்! சற்று நித்திரை போவீர்களானால் தாங்கள் தவமிருந்து பெற்ற பிள்ளைகள் கூற்றினும் கொடிய கொலை பாதகர்களுடன் கூடி அக்கிரம வழியிற் புகுந்து தங்கள் சொந்தக் கரங்களினாலேயே தங்களைத் தாங்களே கெடுத்துக் கொள்ளுவார்கள்! பெற்றோர்களும் உபாத்தியாயரும் கவனிக்காமையினாலன்றோ பல்லாயிரம் பள்ளிப்பிள்ளைகள் இப்பாழும் படுகுழியில் விழுந்து பரிதவிக்கிறார்கள். ஓ! பெற்றோர்களே! இனிமேலாகிலும் சற்று எச்சரிக்கையா யிருங்கள்! கூர்மம் குட்டிபோட்டது போல் பிள்ளைகளைப் பெற்றுவிட்டு கவலையற்று இருப்பீர்களானால் கடவுளின் கோபத்திற்கும் பாபத்திற்கும் பாத்திரமாவீர்கள். கடவுள் பக்தியும் நல்ல புத்தியும் போதியுங்கள், அப்படிக்கின்றிக் கல்வியைக் கற்றுக் கொடுக்காது, பாலையும் பழத்தையு மூட்டி, ஆபரணாதிகளைப் பூட்டி, புஷ்ப மாலைகளைச் சூட்டி, பற்பல வேடிக்கை விநோதங்களைக் காட்டி, காம வலைக்குள் மாட்டி, அவர்களின் அழகிய வடிவத்தை வாட்டி, வதைப்பீர்களானால் உலகநிந்தனைக்கும் ஆளாகி மறு உலகத்திலும் நரகத்தை யடைவீர்கள். சொன்னேன்! சொன்னேன்! சொன்னேன்! முக்காலும் சொன்னேன்.

## உபாத்தியாயர்களுக்கோர் உபதேசம்.

ஓ! உபாத்தியாயர்களே! போதனாசிரியர்களே! உங்கள் பள்ளியிற் படிக்கும் பையன்களின்மீது சற்று எச்சரிக்கையாயிருங்கள். கொஞ்சம் பாராமுகமாயிருப்பீர்களானால் உங்கள் பள்ளிச்சிறார்கள் பொல்லாத சிநேகிதர்களின் போதனைக்குள் சிக்கி, தமது வாணாளை



வீணாளாக்கிக் கொள்ளுவார்கள். பள்ளியில் படிக்கும் சிறுவர்களுக்கு வித்தையைக் கற்றுக்கொடுப்பதுதான் தங்கள் கடமை, மற்ற விஷயத்தில் அவர்கள் எப்படிப் போனால்தான் நமக்கென்னவென்று எண்ணுகிறீர்களோ! அப்படிக்கெண்ணாது கடவுள் பக்தியும், நல்ல புத்தியும் போதிக்கவேண்டியது உங்கள் கடமையாகும். இதற்கு உதாரணமாக Practical life, என்னும் பத்திரிகையின் 3-வது வால்யம், 12-வது சஞ்சிகையின் 660-வது பக்கத்தில் வரைந்திருந்திருக்கும் ஓர் விஷயத்தை உபாத்தியாயர்கள் அறியவேண்டியது நிரம்ப அவஸ்யமாதலால் அதனைச் சற்று வரைவோமாக—அதாவது இங்கிலாந்தில் சிறுவர் பள்ளிக்கூடம் ஒன்றைச் செப்பனிடுவதற்காகப் பள்ளிக்கூடத்திற்குப் பக்கத்தில் கண்ட்ராக்டர், (Contractor) சுண்ணாம்பும் மணலும் குவியலாகக் கொட்டியிருந்தார். இந்தக் குவியலைப் பார்த்தால் சிறு பிள்ளைகள் துஷ்டத்தனம் செய்வார்களென்று, ஹெட்மாஸ்டர் (Head Master) நினைத்து அதை வேறிடத்தில் கொண்டுபோய்க் கொட்டி வைக்கும்படி சொல்லியும் கண்ட்ராக்டர் பாராமுகமாயிருந்துவிட்டார். பள்ளிக்கூடம் விட்டவுடன் பையன்கள் வெளியே வந்து ஒருவர்மேலொருவர் மண்ணையும் சுண்ணாம்பையும் கையால் அள்ளி வீசி நிர்த்தாளி செய்ததில் வழிப்போக்கர் ஒருவர்மேற் பட்டு சேதமுண்டாயிற்று. இவ்வழிப்போக்கர் வாத்தியார்மேல் நஷ்ட ஈட்டுக்காக வியாஜ்யம் செய்து ஜெயம் பெற்றதாகத் தெரிகிறது. பிரஸ்தாப கேசில் வாத்தியாரின் பொறுப்பு இன்னதாகுமென்று எடுத்துச் சொல்லப்பட்டது. தகப்பன் குழந்தைகளை எவ்வளவு ஜாக்கிரதையாகப் பார்ப்பானோ, அவ்வளவு ஜாக்கிரதையாய் வாத்தியார் பிள்ளைகளைப் பார்க்கவேண்டும். பிள்ளைகளின் சாதாரண ஸ்வபாவத்தை யறிந்து, துஷ்டச்செயல்கள் செய்வது அவர்களுக்கு இயற்கையென்றும் அவர்கள் எது கண்ணிற்பட்டாலும் அதைத் தீண்டி விஷமம் செய்வார்களென்றும் மனதிற் கொண்டு அதற்கொத்தபடி முன் எச்சரிக்கையுடன் வாத்தியார்கள் நடக்கவேண்டும். சுண்ணாம்பு மணலை எடுக்கச்சொன்னமாத்திரத்தில் வாத்தியார் பொறுப்பு தீர்ந்துவிடவில்லை. அதை அவர் எடுப்பித்தே யிருக்கவேண்டும் என்பதே இக்கேஸின் தீர்மானமாம். மேற்கண்ட உதாரணத்தி

னால் உபாத்தியாயர்கள் அறியவேண்டியது யாதெனில் பள்ளிச்சிறுவர்களுக்கு வித்தையை கற்பிப்பதுடன், மார்க்க விதிகளையும், சன்மார்க்க நடவடிக்கைகளையும் போதிக்க வேண்டுமென்பதாம்.

## முஷ்டிமைதுனம். (MASTURBATION—மாஸ்டர்பேஷன்.)

ஹஸ்தத்தினால் கோசத்தை இயக்கி இந்திரியத்தை வெளிப்படுத்தி ஆனந்திக்கும் கிரியைக்கு ஹஸ்தப்பிரயோகம்,முஷ்டிமைதுனம், கரசுகதம் அல்லது கைமுஷ்டி எனப் பலநாமம் பெறும். பிரபஞ்சசிருஷ்டியில் ஆணுக்குப்பெண்ணும்,பெண்ணுக்கு ஆணும் ஆதாரவாகச் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதேனெனில் மனிதர்களுக்கு இயற்கையான மாம்ச இச்சையை நிறைவேற்றிக் கொள்ளவும், அதனால் சந்தானோற்பத்தியுண்டாகி உலகம் பெருகுவதற்காகவுமேயாம். அப்படிக் கிருக்க அறியாமையினாலும், அற்ப சகவாசத்தாலும், அநேகர் யானை தன் தலைமேல் தானே மண்ணைப் போட்டுக்கொள்வது போலவும்,விட்டில் பூச்சியானது விளக்கொளியில் பாய்ந்து மாய்வது போலவும்,மச்சமானது தூண்டியிலுள்ள ஆகாரத்திற் காசைப்பட்டு அத்தூண்டியிலேயே மாழ்வதுபோலவும், வனவிலங்குகள் தாமாகவே வலைக்குள் சென்று வலிய மடிவது போலவும், காமவிகாரம் அதிகரித்திருக்கும் அநேகம் ஏழைகளும், சந்நியாசிகளும், விவாகமில்லாதவர்களும், துஷ்டசாகவாசமுள்ள அநேகம் பள்ளிச்சிறுவர்களும், தங்களது சொந்தக் கரங்களினால் தங்களுடைய வாழ்நாளைத் தாங்களே கெடுத்துக்கொள்ளுகிறார்கள், ஆனதுபற்றியே, இக்கொடிய கிரியைக்கு,ஆங்கிலத்திலும் Sulf pollution, எனப் பேர் கொடுத்திருக்கிறார்கள். ஆ! ஆ! என்னபரிதாபம் ! நன்மை தீமை எனப் பகுத்தறியும் சக்தியில்லாத மிருகங்களுங்கூட ஆணானது பெண்ணைத் தேடுமேயொழிய இத்தகாத கிரியையை மனதிலும் ஸ்மரிப்பதில்லை. மானிட இயற்கைக்கு விரோதமாய் இக்கொடிய பழக்கத்தைக் கையாடிவருபவர்கள் மிருகங்களிலும் இழிவானவர்களென யாவராலும் மதிக்கப்பட்டு முடிவில் பலவிதத் துன்பங்களுக்கும் ஆளாகாதிரார்கள்.

இக்கொடிய பழக்கமுள்ளவர்கள் கடவுள் கட்டளையை மீறி கரத்தினால் கோசத்தை இயக்கி இந்திரியத்தை வெளிப்படுத்துவதினால்



இரத்தத்தின் சாரமாகிய இந்திரியம் அளவிற்கதிகமாய் வெளிப்பட்டு தேகம் வறண்டுபோய் 3—4 பேர் அருந்தக்கூடிய ஆகாரத்தை தாம் ஒருவராகவே ஒரே ஆவர்த்தியில் அருந்துகிறார்கள். அப்படிப் புசித்த சிறிது நேரத்திற்கெல்லாம் முன்போலவே ஆகாரம் உட்கொள்ளுகிறார்கள். இப்படிக்கு அபரிமிதமான ஆகாரத்தை அருந்தினாலும் கூட அவர்கள் சரீரம் நாளுக்கு நாள் துர்ப்பலப்பட்டு தேவாங்குபோல் தேகம் மெலிந்து, பார்த்தோர் நகைக்கும்படியாய் முடிவில் ஓய்ந்து மாய்ந்து போவார்கள். இதைப்பற்றி டாக்டர், டேவிஸ் (Dr. Davis) என்பவர் சொல்லுகிறதாவது.—ஆண்குறியில் நவில முடியாத நரம்புகள் அடர்ந்திருப்பதினால் இயற்கைக்கு விரோதமான இக்கொடிய பாதக கிரியையினால்ஆண்குறியிலுள்ள நரம்புகள் அதிவேகமாய் இயக்கப்பட்டு ஆண்குறி தளர்ந்து,அடி சிறுத்து,நுனிபெருத்து, விம்மும் சக்தியற்று, போகவிச்சை, சம்போகசக்தி, விந்து விளைவு, ஆன்மசக்தி முதலியவைகள் முற்றும் குறைந்து முடிவில் போகவிச்சை யற்றுப்போகும் என்பதுவேயாம்.

இன்னும் டாக்டர், கோப்லாண்ட் (Dr. Copland) என்பவர் சொல்லுகிறதாவது. மதுபானம் செய்யப் பழக்கப்பட்ட ஒருவனுக்குப் பிரதமத்தில் மிதமாய் இருந்து வரவரக் குடி அதிகரித்து விடுவது போலவும், நற்குலத்தில் பிறந்த நங்கையருட் சிலர் காமவிகாரத்தினால் சோர புருஷனிடத்தில் தன் மனதைப் பறிகொடுத்துத் தான் பிறந்த குடிக்கும் புகுந்த குடிக்கும் வசைதேடி; முடிவில் பழிக்கும் பாபத்திற்கும் பாத்திரமாவதுபோலவும், கொலைசெய்த ஒருவனுக்குப்பிரமஹத்தி உண்டாகி கொலைசெய்வதிலேயே திருஷ்டியாய் இருப்பதுபோலவும், வேசையர் வீட்டை தேடிச்செல்லும் விடபுருஷர்கள்அதே தொழிலாய் இருப்பதுபோலவும், புகையிலை, காப்பி (Coffee), மூக்குப்பொடி முதலாகிய அப்பியாச முள்ளவர்கள் அதே கவனமாய் இருப்பதுபோலவும், இப்பாதகத்தொழிலைக் கைப்பற்றியிருப்பவர்களும்,தங்கள் சித்தத்தைச் சிதற விட்டு அதற்கு அடிமையாகி அதை யெவ்விதத்திலும் அடக்க முடியாது அவமே அதற்காளாய்விடுவார்கள் என்பதுவேயாம்.

இன்னும் இது விஷயமாய் டாக்டர், கோனன்ட் (Dr. Conant)

என்பவர் சொல்லுகிறதாவது, தேக சுகத்திற்கும், சந்தானோற்பத்திக்
கும், மனோவுற்சாகத்திற்கும் அதிமுக்கியமாயுள்ள விந்துவை இயற்
கைக்கு விரோதமாகக் கரத்தினால் இயக்கி வெளிப்படுத்துபவர்
களுக்கு, போகவிச்சை யற்றுப்போய் ஆண்குறி எழுச்சியின்றியே
விந்து வெளிப்பட ஆரம்பிக்கும். இதனால் சுக்கில நஷ்டமும்,
சம்போக இன்பமும் சற்று மில்லாது முடிவில் இல்லற சுகத்தை
இழந்து சஞ்சலப்படுவார்கள் என்பதுவேயாம்.

இன்னும் இம்மகாக்கொடிய செய்கையினால் ஆண்குறியின்
எழுச்சிக்கு ஆதாரமான இரத்தத்தை அவ்விடத்திலேயே நிறுத்துவ
தற்குச் சக்தியற்றுப் போய் ஆண்குறி, பீஜம், ஸ்கலிதக்குழல், இந்
திரியகமலம், விந்துவாகி, குண்டிக்காய், ஈரல், இரைப்பை, இருதயம்,
மூளை முதலிய உறுப்புகளுக்கும் பல பேதங்களுண்டாகி அதனால்
பலவிதத் துன்பங்க ளுண்டாகின்றன. இப்படிப்பட்டவர்களுக்கு,
சதா தலைவலி, மறதி, மயக்கம், மனக்கவலை, சந்தோஷமின்மை,
புத்தியுத்திக் குறைவு, நீரடைப்பு, க்ஷயம், துர்சொப்பனம், அஜீ
ரணம், வயிற்றுவலி, புளியேப்பம், கண்டமாலை, காக்காய் வலிப்பு,
இசிவு, திமிர்மேகம், மேகம், பாண்டு, காமாலை, மலபந்தம்,
நெஞ்செரிவு, பயித்தியம் முதலியவைகளும் உண்டாவதுடன், விப
ரீத எண்ணங்களும், சந்தேகங்களு முண்டாகும். இன்னும் தன்
திருஷ்டிக்குப் படுவதெல்லாம் வெறுப்பாகவும், எப்போதும்
ஏகாந்தமாய் இருக்கப் பிரியமும், மனிதர்களிடத்தில் வெறுப்பு
முண்டாகி மூளைவறண்டு ஆயுள்விருத்தி, மனோபலம், தைரியம்
முதலியவைகளை இழந்து பித்தன் போலாய்த் தானிருப்பதே தனக்குப்
பாரமாய்த் தோன்றி, முடிவில் தன்னுயிரைத் தானே போக்கிக்
கொள்ளவும் நேரிடும். இனி இக்கொடிய பழக்கமுள்ளவர்கள் தாங்
களே இதன் கெடுதியை விரிவாய்த் தெரிந்து விலக்குவார்களென்
றெண்ணி விரிவஞ்சி விடுத்தோம்.

இப்பாழும் பழக்கமுள்ளவர்கள் தங்கள் மனைவியர்களுக்குச் சாஷ்
டாங்க நமஸ்காரம் செய்து, அம்மா! தாயே! அம்மணி! என்னைக்
காப்பாற்று! என் மானத்தை வெளியில் விடாதே என்று, கொல்லைக்



காட்டு நரியைப்போல் பல்லைக் காட்டிப் பரிதவிப்பார்கள். இவர்
களுக்கு ஸ்திரீ என்றால் மெய் நடுங்கி, தேகமொடுங்கி, மெல்லெனப்
பின் செல்வார்கள். சிலர் தம் வாழ்நாள்முழுதும் மருந்தும் கையுமாய்
இருந்து முடிவில் மண்ணுலகைவிட்டு விண்ணுலகம் சென்றோரு
முண்டு. இப்படிப்பட்டவர்களை உங்களில் அநேகர் பார்த்தும் கேட்டு
மிருக்கலாம். இக்கொடிய துஷ்டநோய் நீங்குவது கஷ்டமென அநேக
ஆயுர்வேத பண்டிதர்களும், ஆங்கிலோ டாக்டர்மார்களும் அறிவித்
திருந்தபோதிலும், சில பெரியோர்கள் அனுபோகத்தால் கண்டுபிடித்
திருக்கும் சில அவுஷதங்களையும், மேற்பூச்சுத் தைல வகைகளையும்
அவுஷதபாக அட்டவணையில் வரைந்திருக்கிறோமாகையால் அவை
களை அவுஷதபாக அட்டவணையிற் பார்த்துக்கொள்ளவும்.

## ஆண் மலடு. (STERILITY IN MAN—ஸ்டரிலிடி இன் மான்.)

முக்கியமாய் சம்போகமானது என்ன காரணத்தை முன்னிட்டு
ஏற்பட்டிருக்கிறதெனில், எல்லா அறங்களிலும் நல்லறமாகிய இல்லறம்
வழுவாது நடந்தேறி வரவும், சந்தான உற்பத்தி உண்டாவதற்காக
வுமே. சந்தானோற்பத்தி உண்டாவதற்குச் சுக்கிலஸ்ரோணிதமே மூலா
தாரமாயிருப்பதால் அச்சுக்கிலஸ்ரோணிதங்களில் எதற்கேனுமோர்
கெடுதி நேரிடில் கருப்பற்றுதொழியும். அது சுக்கிலத்தைப் பற்றிய
தானால் ஆண்மலடு என்றும், சுரோணிதத்தைப்பற்றியதானால் பெண்
மலடு என்றும் பேர். மலடு என்பது சுபாவமலடு, அசுபாவமலடு என
இருவகைப்படும். அவற்றுள் சுபாவமலடானது சில செடி கொடிகள்
புற்பூண்டுகள், விருக்ஷங்கள் முதலியன யாதொரு காய் கனிகளைத்
தராது வெறுமையே நின்று உயிர்வாழ்வது போலச் சிலருக்கு இயற்கை
யிலேயே புத்திரோற்பத்திக்கு யோக்கியதையில்லாமற் போய் விடுத
லாம். அசுபாவ மலடானது கருப்பாசயம், ஆண்குறி முதலிய ஜனனேந்
திரியங்களினாலும், சுக்கிலஸ்ரோணிதங்களினாலும், வாதபித்த சிலேஷ்
மாதிகளின் தோஷங்களினாலும், செய்கைப் பிசகுகளினாலும், கருப்
பற்றும் சக்தி இழந்துபோய் விடுதலாம். மலடானது சுபாவீகத்தில்
ஆண் பெண் இருவருக்கும் ஏற்படக்கூடியதானாலும், விசேஷமாய்
ஸ்திரீயின் சுரோணிதத்திலேயே அநேகவித தோஷங்கள் தொடாக்

கூடுமாதலால் பெண்மலடே, மலடென்று சொல்லப்படும். ஏனெனில் நரைதிரை மூப்புவாய்ந்த 90-வயது சென்ற புருஷர்களின் சுக்கிலத்தை அணுதரிசனியை (Microscope)வைத்துப் பார்த்தால் அதில் சுக்கிலக்கிருமிகள் தென்படுவதால் ஆண்மலடென்பது அபூர்வம். இதற்கு உதாரணமாக நெடுநாள்வரையில் சில ஸ்திரீகளுக்கு சந்தானோற்பத்தி ஏற்படாது போவதினால் அவளது புருஷன் மற்றொரு ஸ்திரீயை மணம் புரிந்துகொள்ள அம்மாதுக்குக் குழந்தை பிறப்பதை அநேகர் கண்டும் கேட்டுமிருக்கலாம்.

## நபும்ஸகம்.(IMPOTENCE—இம்போட்டன்ஸ்.)

நபும்ஸகமானது, காமத்துவஜபங்கம், ஆண்மலடு, ஆண்மைகுறைந்து போகுதல், அல்லது பேடித்தன்மை எனப் பல நாமம் பெறும். மனுஷனுடைய மனோவுற்சாகத்திற்கும், சரீர சௌகர்யத்திற்கும், திடகாத்திரத்திற்கும், வீரிய விர்த்திக்கும், விவேக தீக்ஷண்யத்திற்கும், சந்தானோற்பத்திக்கும் மூலாதாரமானது சுக்கிலமே, அச்சுக்கிலமானது மதிப்பரிய மாணிக்கமென்றும், இரத்தத்தின் சாரமென்றும், அங்கமுழுதும் அடர்ந்து படர்ந்திருக்கும் நவில முடியாத நரம்புக் கூட்டங்களுக்கும் ஐம்புலனுக்கும் ஆதாரமாகிய மூளையும் சுக்கிலத்தோடு சம்மந்தப்பட்டிருக்கிறதென்றும், முன்னதாகவே இப்புத்தகத்தின் 22-வது பக்கத்தில் சொல்லியிருக்கிறோமாதலால் இத்தகைய, அருமை பொருந்திய, பெருமைதங்கிய சுக்கிலத்திற்குண்டாகும் நோய்களையும், அந்நோய்களை நீக்கும் மார்க்கங்களையும் பற்றிச் சிறிதளவு இதனடியிற் கூறுவாம்.

இந்த ரோகமானது பலவகைக்காரணங்களால் பிறந்தபோதிலும், விசேஷமாய் அடியிற் கண்ட எட்டுவித ரோகங்களே சந்தான மில்லாது மலடாகும்படிச் செய்கின்றது. அவைகளாவன :

(1) சிலர்களுக்கு அதிக வயதானதால் தேகத்தில் போதிய இரத்தமின்றி, நரம்புகள் தளர்ச்சியடைந்து, ஜனனேந்திரியங்கள் பலங்குன்றிப் போகசக்தி யற்றுப்போம்.

(2) சிலருக்கு ஜனனேந்திரியங்கள் செவ்வையாய் ஏற்படாமல் போவதினாலும், அல்லது பிறவியிலிருந்தே அவைகள் துர்ப்பலமாய் இருப்பதினாலும் நபும்ஸகத்தன்மை யுண்டாகும். இவ்வித ஜென்ம நபும்ஸகனுக்கு அவுஷதப் பிரயோகமில்லை.



(3) சிரசு, முதுகு, செவிகளுக்குப் பக்கத்திலுள்ள சுக்கில நரம்புகள் ஆகிய இவைகளின்மேல் அடிபடுவதினாலும், முள்ளந்தண்டெலும்புகளின்மத்தியமாய்ச் செல்லும் நரம்புகள் வியாதிப் படுவதினாலும், விந்துக் கமலங்கள் வியாதிப்படுவதினாலும் அல்லது நசுங்கிப் போவதினாலும் நபும்ஸகத் தன்மை யுண்டாகலாம்.

(4) அளவுக்கு மிஞ்சிய சம்போகத்தால் ஆத்மசக்தி, ஜீவாக்கினி முதலியன குறையும், அப்படிக் குறையவே சுக்கிலத்திலுள்ள ஜீவோற்பத்திக்குரிய சக்தி குறைந்து ஒருவன் ஆண்தன்மை இழக்கலாம். இப்படிப்பட்டவன் சம்போக இச்சையை ஒழித்துச் சிறிது காலத்திற்கு ஸ்திரீயை விட்டுப் பிரிந்திருப்பதால், ஆண்குறி வலுத்துச் சுக்கிலம் சுரந்து, சம்போகத்திற்குரிய சக்தி உண்டாகும்.

(5) சரீரம் நல்ல புஷ்டியாயிருந்தும் நெடுநாள் ஸ்திரீ போகத்தை நீக்கிவிட்டதினால், ஜனனேந்திரியங்களில் உஷ்ணம் குறைந்து, ரத்த ஓட்டம் தடைப்பட்டு அதனால் சுக்கிலச்சுரப்பு குறைந்து, கோசம் தளர்ந்து போக சக்தியற்று தாதுநஷ்ட முண்டாகும். இப்படிப்பட்டவர்கள் ஆண்குறி பீஜம் முதலியவைகளைத் தினமும் வெந்நீரினால் கழுவி சுத்தஞ்செய்தல், சிற்றின்பக்கதைகளை வாசித்தல், அழகிய ஸ்திரீகளின் உருவங்கள், உருவப்படங்கள் முதலியவைகளை அடிக்கடி பார்த்தல் முதலிய கிரியைகளை அனுசரித்து வருவதினால் சுக்கிலம் சுரந்து போகசக்தி உண்டாகும்.

(6) சிலருக்குத் தேகத்தில் அளவுக்கு மிஞ்சின கொழுப்பு அதிகரிப்பதினாலும், நபும்ஸகத்தன்மை உண்டாகும். இப்படிப்பட்டவர்கள் புஷ்டியான ஆகாரங்களை விலக்கி, மிதமானஉணவுகளைப் புசிப்பதுடன் தேகாப்பியாசமும் செய்துவரின், தேகத்தில் கொழுப்புக்குறைந்து போகசக்தி யுண்டாகும்.

(7) மேகரோகம், கண்டமாலை, பாண்டு, காமாலை முதலிய கொடிய வியாதிகளினாலும், மனோமுயற்சி, தேகமுயற்சி முதலியன அதிகம் செய்வதினாலும், முஷ்டிமைதுனம், ஆசனப்புணர்ச்சிபோன்ற

அக்கிரமக் கிருத்தியங்களைக் கையாடி வருவதினாலும், ஆண்குறியின் நரம்புகள் தளர்ச்சியடைந்து ஆண்குறி சிறுத்து வளைந்து பலனற்றுப் போவதினாலும் போகசக்தி யற்றுப்போம்.

(8) சிலருக்குத் தேகசக்தி, போகசக்தி முதலியவைகளில் யாதொரு குறைவில்லாதிருந்தும், மனோவிகற்பத்தினால் இந்த விபத்து விளைகின்றது. உதாரணமாக, முதல் முதல் ஸ்திரீயோடு கூடும் போது வெட்கத்தினாலும், ஒவ்வொருவருக்கு மூத்திரக் குழியைப் பார்த்து அசங்கியம் பிறப்பதினாலும், ஆண்குறி எழுச்சி யடைவதில்லை. அதன்மேல் அவாள் தங்களுக்கு வீரியசக்தி இருக்கோ இல்லையோ என்று சமாசாரப் பத்திரிகைகளில் (News Paper) பிரசுரிக்கப்பட்டிருக்கும் சில போலி மருந்துகளைப்பற்றி அடிக்கடி வாசிப்பதினாலும், மனோசக்தி குறைந்து சம்போக சக்தியற்றுப்போம்.

இன்னும் ஒரு ஸ்திரீயைப் பார்த்தவுடன் அவள் பராக்கிரமசாலி யாயிற்றே, காமகலாவல்லவளாயிற்றே, மகாரூபவதி யாயிற்றே, இவளோடு நாம் போகிப்பதெப்படி என்றுநினைப்பதினால் தாது நஷ்டமுண்டாகும். மேலும் இவள் விகாரரூபமாய் இருக்கின்றாளே! அசுசியான ஆடையாபரணங்கள் அணிந்தவளா யிருக்கின்றாளே! இவள் தேகத்தில் துர்நாற்றம் வீசுகிறதே! இவள் நீசஜாதிப் பெண்ணாயிற்றே! கெட்ட நக்ஷத்திரத்தில் புஷ்பவதியானவளென்று சொல்கிறார்களே! இவளைப் பேய் பிசாசுகள் பிடித்திருக்கிறதாமே! இவளோடு சம்போகித்தால் என்ன விளையுமோ! இந்த இடத்தில் யாரேனும் வந்துவிடுவார்களோ! இந்த வீட்டில் குலதெய்வம் குடிகொண்டிருக்கிறதாமே! இதில் சம்போகம் செய்யலாமோ அப்படிக்குச் செய்தால் என்ன சம்பவிக்குமோ என்ற எண்ணங்களில் ஒன்றேனும், பலவேனும் அல்லது இன்னும் இவைபோன்ற எண்ணங்கள் எவ்வளவுக்கெவ்வளவு மனதில் உதிக்குமோ அவ்வளவாய் போக இச்சை குறைவதும் அல்லது சுத்தமாய் இல்லாமற் போவதுமுண்டு.

மனமானது ஆழியின் அலைபோல் அலைவதுபற்றியே "மனம் போன போக்கெல்லாம் போகவேண்டாம்" என ஔவைப்பிராட்டியாரும் திருவாய்மலர்ந்தருளி யிருக்கிறார்கள். இதற்குத்தான் மனோவியா



பக சக்தியெனவும் கூறுவர். இம்மனத்தின் சக்திப்பிரயோகத்தினால், பலிஷ்டனான ஒரு மனிதனைத் துர்பலமுள்ளவனாகவும், துர்ப்பலமுள்ளவனைப் பலிஷ்டனாகவும், ஆழ்ந்த துக்கத்திலிருப்பவனை மிக்கக் களிப்புடையவனாகவும், களிப்புடையவனைக் கவலையாளனாகவும், வியாதிகளை மருந்தின்றி யகற்றவும், கெட்ட நடவடிக்கைகளைப்பற்றறத் தொலைவிக்கவும் இன்னும் எண்ணிறந்த நன்மையான காரியங்களை நடத்தவுங்கூடும். உதாரணமாக ஒரு வியாதியஸ்தனை நோக்கி உனக்கு ரசத்தில் மருந்து கொடுக்கிறேன், உன் வாய் ரணமாய் விடுமெனச் சொல்லி, சாதாரணமாகிய வெண்ணை, ரொட்டி முதலாகிய உணவுகளில் யாதொருமருந்தையும்சேர்க்காது அரைத்துஉருட்டிச்சாப்பிடக்கொடுக்க வாய் ரணமாய்விடும். மருந்து ரவை முதலிய யாதொன்று மில்லாத வெறும்துப்பாக்கியை ஒருவனுக்கெதிரில்பிடித்து உன்னைச் சுடுகிறேன் பார் என்று சொல்லி வெறும் வேட்டுக் கிளப்பின மாத்திரத்திலேயே சிலர் மனோபீதியால் உயிர் துறந்ததுமுண்டு. சிலர்களுக்கு இன்ன வருஷம், இன்னமாதம், இத்தனையாவது தேதி, இன்ன கிழமை, இத்தனை மணிக்கு நீ இறந்துபோவாய் என்று ஒரு ஜோதிஷன் சொல்ல அவன் சொன்னதையே மனதில் நினைத்துக் கொண்டு பீதியடைந்து, மேற்கூறிய வருஷம் மாதம் தேதி தினம் முதலியவைகள் சிறிதும் தவறாது ஜோதிஷன் சொற்படியே உயிர் துறந்தவர்களுமுண்டு. பட்டணத்துச் சிப்பாயொருவன் சண்டை நடந்துவரும் காலத்தில் தண்டு இறங்கியிருக்கும் டேராவைச் சுற்றிலும் பாராக் கொடுத்துக் கொண்டிருந்தான். மற்றும் அநேக சிப்பாய்களும் சுற்றிலும் பாராக்கொடுத்துக்கொண்டிருந்தனர். மணி 12 அடித்தது. நடுநிசி, கன்னிருள். அப்போது வசந்தகாலமானதால் குன்றிடைப்பிறந்த தென்றல் குளிர்ந்து வீசிக்கொண்டிருந்தது. குளிர்ந்து இனிமையாய் வீசும் காற்றின் சுகத்தால் தன்னைமறந்து கையில் துப்பாக்கியுடன் நின்ற நிலையிலேயே தூங்கிவிட்டான். கைதனிலிருந்த துப்பாக்கியும் மெல்லெனக்கைநழுவிக் கீழ்வீழ்ந்தது. பக்கத்தில் பெரிய பீரங்கியொன்றும் கிடந்தது, பாராக் கொடுக்கும்போது சண்டை நடக்கும் ஸ்தலங்களில் தூங்கவும் கூடாது. கையில் துப்பாக்கியின்றி யிருத்

தனுமாகாது ; இங்ஙனமாகப் பாராவைப் பார்வையிடுவதற்காக மேலதிகாரி குதிரைமீதேறி வெகு வேகமாய் சப்தத்துடன் வரவே, சிப்பாய் விழித்துக்கொண்டு தூக்க மயக்கத்தினாலும், திடீரென்று விழித்த கலக்கத்தாலும், துப்பாக்கி கையிலில்லை யென்பதுணர்ந்து, பக்கத்தில் கிடந்த நாலாள் சேர்ந்து தூக்கும் வலிமையுள்ள பீரங்கியைத் தூக்கிக்கொண்டு நின்றான். இதைப் பார்த்த கர்னல்துரை ஆச்சரியமடைந்து ஒன்றும் பேசாமல் சென்றான். அவன் சிறிது தூரம் சென்றதும் சிப்பாய் தன் கையிலுள்ளது துப்பாக்கியல்ல வென்றும், பீரங்கி யென்றுமுணர்ந்து நின்ற விடத்திலேயே போட்டுவிட்டான். அப்புறம் அதை அசைக்கக்கூட அவனால் இயலவில்லை. நாலாள் தூக்கும் பீரங்கியை இவன் ஒருவன் எப்படித் தூக்கினான்? மனதின் திகிலினாலன்றோ? இங்ஙனமே தான் செய்யக்கூடாத காரியங்களும் அதி அற்புதமான செயல்களும், மனத்தின் தன்மையால் சித்திக்கின்றன. அந்தோ! மனத்தின் கூறு இங்ஙனமிருப்பதால் இம்மனத்தை எங்ஙனம் அடக்கியாளலா மென்பதைப்பற்றி ஒவ்வொருவரும் தெரிந்துகொள்ள வேண்டியது மிகவும் அவசியமாம். இன்னும் கொக்கோக சாஸ்திரியாரும் சொல்லுகிறதாவது, ஸ்திரீக்கு முன் புருஷனுக்கு இந்திரிய ஸ்கலிதமானால் அதைத் தடுப்பதற்காக, சம்போக காலங்களில் தன்மனதை வேறு விஷயத்தில் செலுத்தி போகத்தி லில்லாதது போல் பாவித்திருப்பதினால் ஸ்திரீக்கு முன்னதாக புருஷனுக்கு சுக்கில ஸ்கலிதம் ஆகாதென்று சொல்லியிருக்கிறார். இன்னும் இம்மனதின் மகிமையைப்பற்றி விரிவாய் அறிய விரும்புவோர் "ஆத்மதத்துவ நூல்" (Psychology) என்னும் ஆங்கில புத்தகத்தில் நன்கறியலாம்.

மேற்கூறியபடி மனோவிகற்ப முடையவர்களுக்கு வீர்யவிர்த்தி அதிகமாயும், ஆண்குறிமுதலிய போகத்திற்குரிய கருவிகளில் யாதொரு விகற்பமு மில்லாதிருந்தும், மேற்கண்ட மனோவிகற்பத்தினால் ஆத்மசக்தி குறைந்து தாதுநஷ்டமுண்டாகும். மனோதிடமற்று ஆத்மசக்தி குறைவதினாலுண்டாகும் தாது நஷ்டமே, மற்றெல்லாவிதமான தாது நஷ்டங்களிலும் பெரிதாகையால் இப்படிப்பட்ட விஷயங்களால்



னதை அதைரியப்படுத்தாது, பூரணமகிழ்ச்சியோடும், தீரத்வத்தோடும் ருவர்மனமும் ஒரு மனதாகி, அன்பு பெருகி ஆனந்த மீறி பரவசமாகிப் லபல லீலைகள் புரிந்து, புளஹாங்கித இருதயத்தோடு இருவரும் மனமாத்துச் சம்போகஞ் செய்தால் காமாக்கினி தணிந்து போகசக்தி விர்த்தியாகிச் சந்தான விர்த்தியுண்டாகும். ஆகையால் சம்போகத்திற்கு முன் ஸ்திரீ புருஷர்களிருவரும், சந்தனம், ஜவ்வாது, புனுகு, அத்தர், பன்னீர் முதலிய பரிமளாதிகளைப் பூசிக்கொள்வதினாலும், நறுமணமிகுந்த புஷ்பாதிகளைச் சூடிக்கொள்வதினாலும், வாசனை வஸ்துக்களையும், தாம்பூலாதிகளையும் வாயிலிட்டுக்கொள்வதினாலும், நல்ல வாசனையுள்ள வர்த்திகள், தூபங்கள் முதலியவைகளைப் புகைப்பதினாலும், மனதிற்கு வெறுப்பைத் தரத்தக்க வாய் நாற்றம், வியர்வை நாற்றம், கற்றாழை நாற்றம் முதலியவைகள் நீங்கி மனதிற்கு ஆனந்தமுண்டாகும்.

இன்னும் மனதில் கெட்ட எண்ணங்களும் விபரீத யோசனைகளும் உண்டாகாதபடி அதை வேறு வழியில் செலுத்துவதினாலும், புஜபராக்கிரம வீரதத்துவம் பொருந்தியவர்களின் சரித்திரத்தை வாசிப்பதினாலும், நல்ல வேடிக்கை விநோதங்களைப் பார்ப்பதினாலும், குஸ்தி, மல்லயுத்தம் பார்த்தல், வேட்டையாடுதல் முதலியவைகளினாலும் நீக்கவேண்டியது. பின்பு மூளைக்கும், இருதயத்திற்கும் பலத்தைக் கொடுக்கும் அவுஷதங்களை உபயோகித்து அவைகளைப் பலப்படுத்த வேண்டியது. ஆனால் ரத்தக்ஷீணத்தினாலும், மேகரோகத்தினாலும், விருத்தாப்பியத்தினாலும், சுக்கிலவிளைவு குறைவதினாலும், சுக்கிலக் கிருமிகளின் விர்த்தி குறைவதோடு அவற்றின் வால்களின் நீளமும் குறுகிப்போவதால் சம்போககாலத்தில் கருப்பைக்கு ஊர்ந்துபோகும் சக்தி குறைந்து போகின்றன. இத்தகைய காரணங்களினால் சந்தான சக்தியற்றுப் போவதே ஆண்மலடு என்று சொல்லப்படும்.

## பெண்மலடு. (STRILITY IN WOMAN-ஸ்டிரிலிடி இன் உமன்.)

பெண்மலடு இருவகைப்படும்: அதாவது ஆயுள் முழுதும் சந்தானோற்பத்தி இல்லாமலிருப்பதும், பால்யத்தில் விவாகமானவுடன் இரண்டொரு குழந்தைகளைப் பெற்றுவிட்டுப் பிறகு தன் ஜீவபரியந்தம் கருப்பற்றிருப்பதுமாம். ஆனால் இதில் முற்கூறிய மலடா

ன்து ஜனனேந்திரியங்களின் பலஹீனத்தாலும், அவ்வுறுப்புகளின்
இயற்கையாயமைந்த அங்கவீனத்தாலும் ஏற்படுவதால் இதனை எவ்
வகையாலும் நிவர்த்திப்பது அசாத்தியமாகும், இன்னும் மற்ற கார
ணங்களால் உண்டாகும் எவ்வகை மலடும் சிகிச்சைக்குச் சாத்தியமாகும்.

ஸ்திரீகளுக்கும் புருஷர்களுக்கும் ஜனனேந்திரியங்களிலும், சுக்
கில ஸ்ரோணிதங்களிலும் யாதொரு விகர்ப்பமில்லாதிருந்த போதி
லும் அடியிற்காணும் சில அறியாமையான அகக்கிரியை புறக்கிரியை
களினால் கருப்பற்று தொழியும். அவைகளாவன—சம்போகம் செய்த
வுடன் ஸ்திரீயானவள் எழுந்து நிற்பதாலும், நடப்பதாலும் சுக்கில
ஸ்ரோணிதங்க ளிரண்டும் கூடியும் கூடாமலிருக்குஞ் சமயத்தில்
அவை வெளிப்பட்டு விடுதல்,(சம்போகத்திற்குப்பின் 15-நிமிஷம்வரை
யில் படுத்திருக்க வேண்டும்) சம்போகத்திற்குப்பின் ஸ்திரீயான
வள் கடினமான உழைப்பு, கடும்பசி, மனோவியாகூலம் முதலியவை
களுக்கு இடங்கொடுப்பதினால், விந்துவானது கருப்பையிற் றங்காது
வெளிப்பட்டு விடுதல், சம்போகத்திற்குப் பின், வாளம், மூஷாம்
பரம் முதலிய அதிக வெப்பமுள்ள பேதி மருந்துகளை உட்கொள்ளு
வதினால், குடல்களும், கருப்பையும் பலஹீனப்பட்டு உடனே
விந்துவை வெளியில் விட்டுவிடுதல், சில சதிபுருஷர்கள் காமவிகாரத்தி
னால் விவாகமான துவக்கத்தில் மிதமிஞ்சி அடிக்கடி சம்போகம் செய்
வதினால் சுக்கில சுரோணிதத்திற்கு மூலகாரணமாகிய உதிரங்குறை
ந்து தேகம் மெலிந்துபோகுதல் அல்லது அடிக்கடி போகிப்பதினால்
கருப்பை சலனப்பட்டு கருப்பையில் பற்றியிருக்கும் கருவிற்குச்
சலனமுண்டாகி வெளிப்பட்டுவிடுதல், * அளவுக்கு மிஞ்சி சம்போ
கஞ்செய்யும் தம்பதிகள் தங்கள் தேகபலத்தையும் மனோதிடத்தையும்,
புத்திரபாக்கியத்தையுமிழந்து அகாலமரணத்திற்கும் ஆளாவார்கள்.

இன்னும் கருப்பையில் அளவுக்கு மிஞ்சின அழற்சியுண்டாகி
கருப்பையின் வாய் நெருங்கி சுருங்கிவிடுவதினாலும் அல்லது

* "வேசிக்குக் காசுமேலாசை விளையாட்டுப் பிள்ளைக்கு மண்ணுமேலாசை" என்னும்
பழமொழிக்கிணங்க, காசுக்கு ஆசைப்பட்டு சதாகாலமும் தங்கள் சரீரத்தை விலைப்படுத்
தும் வேசியர்களுக்கு விசேஷமாய் சந்தானோற்பத்தி இல்லாமலிருப்பதும் அளவுக்கு மிஞ்சிய
சம்போகமே போதிய காரணமாகும்.



கருப்பையின் வாய் அல்குலின்வாய்க்கு நேரேயிராமல் பிறழ்ந்து போவ
தினாலும் கருப்பைக்குள் சுக்கிலமும் சுக்கிலக்கிருமிகளும் உட்செல்ல
ஹேதுவில்லாமற் போகுதல், சிலர் வயிற்றின்மேல் உடைகளையும் ஒட்
டியாணத்தையும் பிகுவாய் அணிந்துகொள்வதினால் இரத்த ஓட்டம்
தடைப்படுதல், மேகம், பிரமேகம் முதலிய வியாதிகளினால் கருப்பை
யில் விரணம் அல்லது வீக்கமுண்டாகுதல், கருப்பைக்கு முன்பக்கத்தி
லுள்ள ஜவ்வும்(Hyman)கிழிபடாதிருத்தல், சினைப்பை, சினைக்குழல்
முதலியன கிழிந்துபோகுதல் அல்லது இரத்தக்ஷீணம், மேகவியாதி
முதலியகாரணங்களால் மேற்கண்ட உறுப்புகள் தனதியற்கைக்
குணத்தை இழந்துபோகுதல், சிலருக்குச் சுவாபீகத்திலேயே கருப்பை
சினைப்பை முதலியன முற்றும் இல்லாதிருத்தல், சூதகப்பந்தம், சூதகப்
பெருக்கு, கருப்பையில் இயற்கைக்கு அதிகமான சூடு, குளிர்ச்சி, வாத
பித்த சிலேஷ்மம் முதலியன அதிகரித்தல், கருப்பையின் உட்பாகம்
வீங்கியிருத்தல், கருப்பையின் உறுப்புத் தள்ளுதல், கருப்பையின்
அழற்சி முதலியவைகளினாலும் இன்னும் இவைபோன்ற பலவகைக்
காரணங்களினாலும் ஸ்திரீகளுக்குக் கருப்பற்றத் தடையுண்டாகும்.

மேற்கண்ட பலவகைக் காரணங்களினால் ஸ்திரீகளுக்குச் சிசுவுற்
பத்தி யுண்டாகாதெனக் கூறியிருப்பினும் அவ்வகைக் காரணங்களினால்
காணும் ரோகலக்ஷணங்களைத் தெரிந்துகொள்ளாவிடில் இன்ன கார
ணத்தினால் ஏற்பட்ட பெண்மலடு என்று தெரிந்துகொள்வதும், அதற்
குப் பரிகாரமான அவுஷதப் பிரயோகம் செய்வதும் மிகவும் சிரம
சாத்தியமாகையால் அவ்வியாதியின் லக்ஷணம் பரிகாரம் முதலியவை
களைப்பற்றிச் சிறிதளவு கூறுவாம்.

**கருப்பையில் சூடதிகரிப்பதினா லுண்டாகும் பெண்மலடு:—**
கருப்பையில் இயற்கைக்கதிகமாகச் சூடதிகரிப்பதினால் ஸ்ரோணிதமும்
சூடடைந்து அச்சுரோணிதத்தோடு சேரும் சுக்கிலமும் தீய்ந்து அச்
சுக்கிலத்திலுள்ள சுக்கிலக் கிருமிகளும் மாய்ந்து கருப்பற்றும் சக்தியற்
றுப் போகும். இப்படிப்பட்டவர்களுக்குப் படபடப்பான நாடி, திமிர்
முறித்தல், கண்ணெரிவு, அல்குல் வாக்ஷி, தேகம் இளைத்தல், அதிக
தாகம், வாயுலர்தல், கண்ணெரிவு, மாதாந்திரத்தில் வெளிப்படும் சூதக

மானது சூள்ளதாகவும் கறுத்துக் கலங்கல் நிறமாகவுமிருத்தல், அடிக்கடி கொட்டாவி விடுதல், சொப்பனம் காணுதல் இவை முதலிய குறிகள் காணும்.

சிகிச்சை.—இவ்வகை ரோகமுள்ளவர்களுக்குப் பூசணிப் பழத்தைத் தலையிற்றேய்த்து மூன்று தினத்திற்கு ஸ்நானம் செய்விப்பதுடன், ¼-படி பசும்பாலிற் எலுமிச்சம்பழரசம் பிழிந்து, அம்மான் பச்சரிசிச் சமூலத்தை அரைத்துக் கொட்டைப்பாக்குப் பிரமாணம் ஷை பாலிற் கூட்டி 3-தினம் கொடுக்கச் சுகமுண்டாகும். இன்னும் கருப்பையில் சூடதிகரித்துண்டான சூதகபந்தரோகத்திற்குச் சொல்லியிருக்கும் அவுஷதங்களைக் கொடுப்பதினாலும் சௌக்கியமுண்டாகும்.

**கருப்பையில் குளிர்ச்சி யதிகரிப்பதினா லுண்டாகும் பெண் மலடு.**—கருப்பையில் குளிர்ச்சி யதிகரிப்பதினால், சுக்கில ஸ்ரோணிதங்கள் உணர்ந்து சுக்கிலக்கிருமிகள் கடுங்குளிர்ச்சிக் காற்றானது மரித்துப்போம்.—மலம், ஜலம், கண், நாக்கு, சருமம் முதலியன கருமை நிறமடைதல், மாதாந்திரத்தில் வெளிப்படும் சூதகமானது தாமதமாகவும், அளவிற் குறைவாகவும், இயற்கைக் கதிகமான சிவப்பு நிறமாகவும், தெளிவாகவும் வெளிப்படுதல், அசதி, அஜீரணம், அதிக நித்திரை, மலபந்தம் அல்லது மலப்போக்கு முதலிய குறிகள் காணும்.

சிகிச்சை.—இதற்குக் கருப்பையில் குளிர்ச்சி யதிகரிப்பதினாலுண்டாகும் சூதகபந்த ரோகத்திற்குச் சொல்லியிருக்கும் அவுஷதங்களிலொன்றைக் கொடுக்கக் குணமுண்டாகும்.

**கருப்பையில் வாதமதிகரிப்பதினாலுண்டாகும் பெண்மலடு.**—கருப்பையில் வாதசத்து அதிகரிப்பதினால் கருப்பை விந்துவை கிரகிக்கும் சக்தியை இழந்துபோம். இப்படிப்பட்டவர்களுக்கு, நித்திரையின்மை, தைரியமின்மை, பலமின்மை, வயிற்றுப்பிசம் முதலிய குறிகளுடன் கருப்பையில் வாதமதிகரித்துண்டாகும் சூதகபந்தரோகத்திற் குண்டான குறிகளும் காணப்படும்.

சிகிச்சை.—பேய்க்குமட்டிக்காய்ச்சாறு, பசும்பால் வகைக்குப் படி 2, தேங்காய்ப்பால் படி ½, ஆமணக்கெண்ணெய், வெங்காயச்சாறு வகைக்குப் படி 1½, கடுகு, வெள்ளைப்பூண்டு, மஞ்சள், இந்துப்பு, கடுக்



காய், கடுகுரோகிணி, அதிமதுரம், சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம், வாய்விளங்கம், சீரகம், அரத்தை கோஷ்டம், சிறுநாகப்பூ, சன்னலவங்கப்பட்டை வகைக்கு விராகனிடை 2½-வீதம், ஷை எண்ணெயிற் கூட்டிக் கரைத்துக் காய்ச்சி, காலை மாலை இருவேளையும் 2-விராகனிடை வீதம் உட்கொள்ள சௌக்கியமுண்டாகும். இந்துப்பு, பெருங்காயம், புளியம்பட்டை இவைகளைக் கற்றாழைச் சாற்றால் அரைத்துப் புன்னைக் காய்போலுருட்டி மாதாந்திர ஸ்நானம் செய்ததிலிருந்து மூன்று நாளுண்ணத் தீரும். இன்னும் கருப்பையில் குளிர்ச்சி யதிகரித்துண்டாகும் சூதகபந்த ரோகத்திற்குச் சொல்லியிருக்கும் அவுஷதங்களிலொன்றைச் சாப்பிட்டு வருவதினாலும் சௌக்யமுண்டாகும்.

**கருப்பையில் பித்தமதிகரிப்பதினாலுண்டாகும் பெண்மலடு.**—கருப்பையில் பித்தமதிகரிப்பதினால் அளவுக்கு மிஞ்சின சூடு அதிகரிக்கும், சூடு அதிகரிக்கவே, சுக்கிலஸ்ரோணிதங்கள் தீய்ந்து, சுக்கிலக் கிருமிகள் மாய்ந்துபோம், இப்படிப்பட்டவர்களுக்கு மாதாந்திரத்தில் வெளிப்படும் சூதகமானது மஞ்சள் நிறமாயும், நீலநிறமாயுமிருத்தல், அகோரமான பசி, கைகால், அல்குல் முதலியன காந்தல், அதிகதாகம், வாய்க்கசப்பு, வாயுலர்தல், கிறுகிறுப்பு, அரோசகம், வாந்தி, நாடி படபடத்திருத்தல் முதலிய குறிகள் காணப்படும்.

சிகிச்சை.—மந்திஷ்டிவேர், ஆடாதோடை, சீந்திக்கொடி, தூதுளை, பிரமி, வேப்பிலை, சிவதைவேர், சிறுகுறிஞ்சா, சுக்கு இவைகளை ஓர் நிறையாய் எடுத்துப் பசு நெய்யிலிட்டு வேகவைத்து, மாதாந்திர ஸ்நானம் செய்ததிலிருந்து மூன்று நாள் இருவேளையும் வேளையொன்றுக்கு 1½-விராகனிடை வீதம் உட்கொள்ளுவதினாலும், அல்லது வேப்பஈர்க்கு, சீந்திக்கொடி, கோரைக்கிழங்கு இவற்றை ஓர் நிறையாய் இடித்துப் பிழிந்த சாறு படி ½, பசு நெய் படி ¼-இவற்றை ஒன்றாய்க் காய்ச்சி, மாதாந்திர ஸ்நானம் செய்ததிலிருந்து மூன்று நாள் இருவேளையும் வேளையொன்றுக்கு 2-கரண்டிவீதம் சாப்பிட்டு உப்பில்லாபத்திய மிருப்பதினாலும், கருப்பையில் பித்தமதிகரித்துண்டாகும் சூதக பந்தரோகத்திற்குச் சொல்லியிருக்கும் அவுஷதத்தைச் சாப்பிட்டு வருவதினாலும் சௌக்கிய முண்டாகும்.

68927

**கருப்பையில் சிலேஷ்ம மதிகரிப்பதினாலுண்டாகும் பெண் மலடு.**—கருப்பையில் சிலேஷ்ம மதிகரிப்பதினால், கருப்பையானது விந்துவையும் விந்துக்கிருமிகளையும் ஏந்திக்கொள்ளும் சக்தியை இழந்துபோம். இப்படிப்பட்டவர்களுக்கு, தேகம் குளிர்ச்சி யடைந்திருத்தல், இருமல், கபம், பசிமந்தம், உமிழ்நீர் இனித்தல், சூதகம் சீழைப்போல் வெளிப்படுதல், தேகபாரிப்பு, தேகாதியந்தமும் நச்சு வலி, இரைப்பு, அதிக நித்திரை முதலிய குறிகள் காணப்படும்.

**சிகிச்சை.**—இதற்குக் கருப்பையில் குளிர்ச்சி அதிகரிப்பதினாலுண்டாகும் சூதகபந்தரோகத்திற்குச் சொல்லியிருக்கும் அவுஷதங்களைக் கொடுக்கச் சுகுணமுண்டாகும்.

**கருப்பையில் கொழுப்பு அதிகரிப்பதினாலுண்டாகும் பெண் மலடு.**—கருப்பையிலேனும் தேகத்திலேனும் அளவிற்கதிகமாய் கொழுப்பு அதிகரிப்பதினால், கருப்பையில் கருத்தரிக்க இடமிராது. ஒருகால் கருத்தரித்தாலும் அங்கு அது வளர இடமில்லாதபடியால் சிறிது நாட்களுக்குப் பிறகு கருவழிவு உண்டாகும். இப்படிப்பட்டவர்களுக்கு வயிற்றில் வேதனை, கஷ்டசுவாசம், மலபந்தம், இடைக்குழியில் வேதனை முதலிய குறிகள் காணப்படும்.

**கருப்பையில் விஷக்காற்று உண்டாவதினாலுண்டாகும் பெண்மலடு.**—கருப்பையில்விஷக்காற்று உண்டாவதினால் கருப்பைக்குட் செல்லும் விந்துவை அங்கு தங்கவிடாது தள்ளிவிடுவதினால் கருப்பற்ருது. ஒரு வேளை கருத்தரித்தாலும் கருவையும் தங்கவிடாது. இப்படிப்பட்டவர்களுக்கு, அடிவயிற்றில் உப்பிசம், தேகாதியந்தமும் வாதநோய்,சம்போக காலத்தில் அபானவாயுவைப்போல் பெண்குறியிலிருந்து காற்றுப்பரிதல் முதலிய குறிகள் காணப்படும். முக்கியமாய் மாதர்களுக் குண்டாகும், பெரும்பாடு, சூதகபந்தம், மேகரோகம், கருப்பை ஸ்தம்பித்தல் அல்லது கருப்பைக்குக் காணும் பலவித ரோகங்களே பெண்மலட்டுக்குக் காரணமாகும்.

### பெண்மலடு ரோகலக்ஷணத்தைப்பற்றி ஆயுர்வேத சாஸ்திரங்களில் சொல்லியிருப்பதாவது.

கெர்ப்பப் புழுவாலும், சூலையாலும் கலவியிற் பூவொதுங்கிப்போவ



தாலும், கருக்குழியில் பாசி பற்றியிருப்பதாலும், தேகம் மதர்த்துக் கொழுத்திருப்பதாலும், கருப்பையிற் சதைவளர்ந் திருப்பதாலும், கருப்பையில் சோரி (இரத்தம்) கட்டியிருப்பதாலும், பேயாலும், பித்தத்தாலும், வாயுவாலும், மேகத்தாலும், வைசூரியாலும், மற்றப் பிணிகளாலும், பெண்கள் மலடாகிறார்கள். கருக்குழியிற் கிருமி நின்றால் கருப்பைக்குட் செல்லும், விந்துவையுண்ணும், கருப்பையைச் சதை மூடியிருந்தால், விந்து உட்செல்லாது, கருப்பையிற் கனலேறி (உஷ்ணம் மிகுந்து) யிருந்தாலும், வாயுசேர்ந்திருந்தாலும், பாசி பற்றி யிருந்தாலும் அதிற் சேரும் விந்து விரையமாகும்.

**மேற்கூறிய ரோக லக்ஷணங்களாவது.**—ஸ்திரீ புருஷர்கள் சம்போகஞ்செய்யும்போது ஸ்திரீக்குத் தலைவலி கண்டால் கருப்பையில் பாசிபற்றியிருப்பதினால் கருத்தரிக்கவில்லை யென்றும், சம்போகஞ் செய்யும்போது நாயகிக்குத் தேகமுழுதும் வலியிருக்குமானால்,கருப்பையில் வாயு நிறைந்திருப்பதினால் கருப்பற்றவில்லை யென்றும்,கலவியில் நாயகிக்கு மார்புவலி காணுமானால், கருப்பையில் மாம்சம் மூடியிருப்பதினால் கருத்தரிக்கவில்லையென்றும், சம்போககாலத்தில் ஸ்திரீக்கு முதுகு நோயுண்டாகுமானால் கருப்பையில் கிருமிகள் நிறைந்திருப்பதினால் கருத்தரிக்கவில்லையென்றும், சுரதகாலத்தில் நாயகிக்குக் கெண்டைச்சதையில் நோயிருக்குமானால் கருப்பையில் அசுத்த உதிரம் தங்கியிருப்பதினால் கருத்தரிக்கவில்லை யென்றும், சையோகத்தில் நாயகிக்கு எப்பமுண்டானால் கருப்பையில் கொழுப்படைந்திருப்பதினால் கருப்பற்றவில்லை யென்றும் தெரிந்துகொள்ளவேண்டியது.

**சிகிச்சை:**—கோழிப்பித்தும் பருத்தி விரைப்பருப்பும் சமன் கூட்டி யரைத்து மாதாந்திர ஸ்நானம் செய்ததிலிருந்து மூன்று தினத்திற்கு, ஆண் பெண் இருவர் அந்தரங்க ஸ்நானங்களிலும் பூசி உலர்ந்தபின் புணர்ந்தால், கருப்பையிற் பற்றி யிருக்கும் பாசி நீங்கி கருப்பற்றும். பெருங்காயத்தை நல்லெண்ணெய் வார்த்தரைத்து முன்போல் பூசிப்புணர, கருப்பையைப்பற்றி யிருக்கும் வாயு நீங்கிக் கருப்பற்றும். திப்பிலி, சூடன், கோழிப்பித்து இம்மூன்றுஞ் சேர்த்தரைத்து முன்போல் பூசிப்புணர்ந்தால் கருப்பையைப் பற்றியிருக்கும்

மாம்சம் கரைந்து கருப்பற்றும். இந்துப்பு, அரிதாரம், பெருங்காயம்
இம்மூன்றும் ஓர் இடையாய்க் கூட்டி வெந்நீர் விட்டரைத்து முன்
போற் பூசிப் புணர (எரிந்தால் நெய் தடவவும்) கருப்பையிற் பற்றி
யிருக்கும் கிருமி விலகிக் கருப்பற்றும். கடுக்காய், சர்க்கரை, பச்சைக்
கற்பூரம்,புனுகு இவை நான்குஞ் சமனாய்க்கூட்டி வெந்நீர் விட்டரைத்து
முன்போற் பூசிப் புணரக் கருப்பையில் தங்கியிருக்கும் அசுத்த உதிரம்
நீங்கி கருப்பற்றும். குங்குமப்பூ, அதிமதுரம், சீரகம் இம்மூன்றும்
வெந்நீர் விட்டரைத்து முன்போற் பூசிப்புணரக் கருப்பையைப் பற்றி
யிருக்கும் கொழுப்புக் கரைந்து கருப்பற்றும். மேற்கண்ட விதமாய்
சிகிச்சை செய்வதோடுங்கூட, சூதகபந்தரோகங்களுக்குச் சொல்லி
யிருக்கும் அவுஷதங்களும் பெண்மலடுரோகங்களுக்குக் கொடுக்க வுதவு
மானதால் அறிவாளிகள் சமயோசிதம்போல் சிகிச்சை செய்துகொள்
வார்களாக.

## மலட்டுப் பரிக்ஷை.

(1) மேற்கூறிய விதமான ரோகலக்ஷணங்களைக்கொண்டு ஆண்
மலடு, பெண்மலடு என ஒருவாறு கண்டறியலாமெனக் கூறியிருப்பி
னும், அடியிற் சொல்லியிருக்கும் சில சாதாரணமான பரிக்ஷைகளினா
லும், சுலபமாய் அறிந்துகொள்ளலாம். புருஷர்களின் விந்துவை வெந்
நீரில் விட்டால் அது கரைந்து மிதந்தாலும்,விந்துவைப் பூத திருஷ்டிக்
கண்ணாடியினால் (Microscope)பார்வையிட்டால் அதில் விந்துக்கிருமி
கள் காணப்படாவிடினும், ஆண்மலடு என்று அறியவேண்டியது.

(2) வெவ்வேறு பாண்டத்தில் கொஞ்சம் மொச்சைக்கொட்டை
யிட்டு அதில் ஆண் பெண்களின் சிறுநீரை 5—6 தினம் விட்டுவர
எவர்கள் நீரினால் அவை முளைக்கவில்லையோ அவர்களிடத்திலேயே
தோஷமிருக்கிறதென்று அறியவேண்டியது.

(3) வெவ்வேறு சுரைக்கொடிகளில் ஆண் பெண்களின் சிறுநீரை
5—6 தினத்திற்கு முன்போல் விட்டுவர எவர்களின் நீர்விட்ட செடி
காய்ந்துபோகிறதோ அவர்களிடத்திலேயே தோஷமிருக்கிறதென்று
அறியவேண்டியது.



## விவாகம்.

விவாகமென்பது, திருவிவாகம், திருக்கல்யாணம், கலியாணம்,
வேட்டல், சுபம், மணம், மங்களம் அல்லது மன்றல் எனப் பலநாமம்
பெறும். விவாகமானது ஸ்திரீ புருஷர்கள் ஒருவரை யொருவர் அன்
பாய் நேசிக்கவும், சாப்பாடு முதலிய குடித்தன விஷயங்கள் ஒழுங்காய்
நடைபெறவும், நன்மை தீமை சுகதுக்கம் முதலியவைகளை இருவரும்
சமமாய் அனுபவிக்கவும், ஒருவருக்கொருவர் உதவியாகவும் சந்தான
விருத்தியுண்டாய் உலகம் பெருகவும் உண்டாக்கப்பட்ட ஓர்வித
பகிரங்கக் கட்டுப்பாடாகும். விவாகமானது குடித்தன விஷயத்திற்
காகவும், ஒருவருக்கொருவர் உதவியாகவும் ஏற்படுத்தப்பட்ட ஓர்வித
பகிரங்கக் கட்டுப்பாடு என்று சொல்லப்பட்டிருந்தாலுங்கூட, உண்மை
யாக யோசிக்கும்போது அவைகள் உண்மையல்ல. அன்பு குடித்தனவிஷ
யம் முதலியவைகளெல்லாம் ஒருவிதக் கட்டுப்பாடேயாகும். உண்மை
யில் மானிடர்களுக்கு இயற்கையான மாம்ஸ இச்சையை நிறைவேற்
றிக்கொள்ளவும் அதனால் சந்தானோற்பத்தி யுண்டாய் உலகம் பெருகு
வதற்காகவுமேயாம். உதாரணமாக ஊர்வன, பறப்பன, நடப்பன முத
லிய எண்ணரிய ஜீவராசிகளிருப்பினும் அவைகள் தத்தம் பெண்வர்க்
கங்களைக்கொண்டு, குடித்தன முறை நடப்பித்துக்கொள்ள யாதொரு
வித நிமித்தமு மில்லாதிருந்தும் அத்தகைய ஜீவராசிகளிலும் ஆண்,
பெண் என இருவகை சிருஷ்டிகளைக் கடவுள் சிருஷ்டித்திருப்பதை
நோக்கும்போது பிரதி ஜீவாத்மாக்களுக்கும் இயற்கையான சுகமனுப
வித்துக்கொள்ளவும், அதனால் அந்தந்த ஜீவராசிகள் பலுகிப் பெருகு
வதற்காகவுமே என்று எண்ணுவதற்குப் போதிய ஆதாரமாகிறது.
இன்னும் ஆவ்பிரிகா (Africa) அந்தமான் (Andaman) முதலிய
தேசத்திலுள்ள காட்டுமனிதர்களுக்குள் விவாகம், வீடு வாசல்முதலிய
யாதொன்றுமில்லாது வனவிலங்குகளையொத்திருந்தும், இயற்கையா
யுண்டாக்கப்பட்ட இக்காமக்கிரியையை அநுஷ்டித்து வருகிறார்கள்.
ஆகையால் சதிபுருஷர்களுக்குள் புருஷனுக்குப் போகசக்தியில்லாவிட்
டாலும்,ஸ்திரீக்கு ஸ்திரீதன்மை இல்லாவிட்டாலும் இருவருக்குமுள்ள
மனச்சம்பந்தத்தைப் பிரித்து விடும்படியாகப் பல சமய சாஸ்திரங்களி

ஆம் சொல்லப்பட்டிருக்கின்றது. குடித்தனவிஷயமே பிரதானமானால் அப்படிப் பிரிக்க யாதொரு நிமித்தமுமில்லை. ஆகையால், சுக்கில ஸ்ரோணிதத்தினாலுண்டாகும் சம்போக இச்சையானது சர்வ ஜீவான்மாக்களிடத்தும் கடவுளால் சுபாவமாய் உண்டாக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் விவாகமென்பது என்ன காரணத்தை முன்னிட்டு ஏற்பட்டிருக்கிறதெனில் இகபர சாதனங்கட்குரிய இல்லறம் வழுவாது நடந்தேறி வரவும் சுபுத்திரோற்பத்தி யுண்டாவதற்காகவுமே. எப்படியெனில் சர்வாத்மாக்களுக்கும் காமத்தினால் உண்டாகும் ஒத்துமைக்கிணையானது வேறொன்றுமில்லை. இது யாவருக்கும் ஸ்பஷ்டமாய்த் தெரிந்த விஷயமே, ஆகையால் நாயகனும் நாயகியும் மனமொத்து வாழாவிடில் அவ்வில்லம் இடுகாட்டிற்குச் சமானமாகும். சில அறிவீனர்கள் ஊரறிய நாடறியத் தாலிகட்டிய தங்கள் நாயகியை மிருகம்போல் நினைத்து வதைக்கிறார்கள். ஆ! ஆ! இதென்ன பரிதாபம்! இல்லறவொழுக்க மறிந்தவர்களும், விவேகிகளும் உலகானுபவமுள்ள உத்தம புருஷர்களும் இப்படிச் செய்வார்களா! இல்லறமல்லது நல்லறமன்று, என்பதை நம்போன்றவர்களுக்கு அறிவிக்கவேண்டி, இல்லறம் வழுவாது நடத்திய நம் திருவள்ளுவநாயனார் அவர்களும், அவர்கள் பத்தினியாரும் மனமொருமித்து மிகவும் அன்யோன்யமாய் இருந்ததினாலன்றோ தம் அருமை மனைவியார் உயிர் துறந்தபோது அவரது பிரிவாற்றாமையினால்,

அடிசிற் கினியாளே யன்புடை யாளே
படிசொற் றவறாத பாவாய்—அடிவருடிப்
பின்றூங்கி முன்னெழூஉம் பேதையே போதியோ
வென்றூங்கு மென்க ணிரா.

என்று சொல்லிப் புலம்பினாரென்று சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைக்குச் சற்றேறக்குறைய இருநூறு வருஷங்களுக்கு முன் இந்தியாவை அரசாண்ட ஷாஜிகான் அவர்களுக்குத் தன் மனைவியிடமிருந்த அளவற்ற காதலே "டாஜ்மஹால்" என்னும் சிறந்த கட்டிடத்தைக் கட்டுவதற்கு முக்கிய ஹேதுவாயிற்று. இந்த மாளிகையை மேனாட்டார் "ஸலவைக் கற்களால்" இப்படியும் கட்ட முடியுமோ? என்று



வர்ணித்திருக்கிறார்கள். தன்னுடைய அருமை மனைவியாகிய "மம்டாஜ்மஹால்" இறந்தபின் ஒருவாரம் வரையில் ஷாஜிஹான் ஒருவரையும் பார்க்கவில்லை, ராஜ்ய விஷயங்களைக் கவனிக்கவில்லை, நல்ல உடுப்புகள் உடுத்திக் கொள்வதையும், வாஸனைகள் பூசிக்கொள்வதையும், ஆபரணங்கள் அணிந்து கொள்வதையும் அவர் அடியோடு அகற்றி விட்டார். பிறந்த நாள் கொண்டாட்டம் (Kings Birthday) முதலிய விசேஷ தினங்களில் வாத்தியங்கள் வாசிப்பதையும் ஸங்கீதங்கள் பாடுவதையும் நிறுத்தி விட்டார். மனைவி இறந்த துக்கத்தினால் அவருடைய தலைமயிர் நரைத்துப் போயிற்று, கண்ணீர் காவேரி போல் பெருகிக்கொண்டே யிருந்தது. "ராஜ்யமும் எனக்கு இன்பத்தைத் தரவில்லை,......எவருடைய முகமும் இனி எனக்குச் சந்தோஷத்தைக் கொடுக்காது" என்று அவர் தாமே வருத்தப்பட்டு சொல்லியிருக்கிறார். மம்டாஜ்மஹால் தன்னுடைய காதலனின் முழு மனதையும் வசப்படுத்தி விட்டபடியால் அவருடைய மனதில் வேறு விஷயங்கள் இருப்பதற்கு இடம் சிறிதுமில்லை. எங்கே இருந்த போதிலும் ஸரியே; எங்கே போனபோதிலும் ஸரியே; ஷாஜிஹான் அவளைத் தன்னுடன் வைத்துக் கொண்டிருப்பாரே தவிர, அவளை விட்டுப் பிரிந்து அரை நிமிஷமும் இருக்கமாட்டார். ஆகவே அப்படிப்பட்ட அருமை மனைவி இறந்த பிறகு, அவளுடைய ஞாபகார்த்தமாய் அறுநூறுகோடி ரூபாய் செலவுசெய்து அவளுடைய பெயராலேயே "டாஜ்மஹால்" என்னும் உன்னத மாளிகையை ஆக்ரா பட்டணத்தில் ஷாஜிஹான் வெள்ளை சலவைக்கற்களால் கட்டினது ஒரு ஆச்சரியமல்ல: "இந்தியாவின் பெருமையையும், உலகத்தின் புகழ்ச்சியும்" என்று அந்தக் கட்டிடத்தைப் பலரும் புகழ்வதே பெரிய ஆச்சரியமாகும். ஷாஜிஹான் அவர்கள் தமது அருமை மனைவியாகிய மம்டாஜ்மஹால் அவர்களிடம் வைத்திருந்த மதிப்பையும் பிரீதியையும் பார்த்தீர்களா! இன்னும் ஸ்திரீயானவள், தன் நாயகனுக்குப் பிரியாச் சிநேகியாகவும், அவனுக்கு ஆபத்துக்காலத்தில் ஆபத்து பந்துவாகவும், காந்தமும் இரும்பும் ஒன்றையொன்று பற்றிக்கொள்வது போல இருவர் மனமும்

ஒருமனதாகி, அன்பு பெருகி ஆனந்தம் நிறைந்தவர்களாய் இல்லறம் நடத்தவேண்டுமென்பதே கடவுளின் கட்டளை. இதனாலன்றோ ஸ்திரீயானவள் பர்த்தாவின் பாதி சரீரமென்று நம் சமய சாஸ்திரங்களும் முறையிடுகின்றன. அதனை நம்போன்ற அறிவிலிகளுக்கு அறிவிக்க வேண்டியதற்காகவே, பரமசிவனும் பார்வதியைத் தன் இடப்பாகத்தில் வைத்துக்கொண்டிருக்கிறார் போலும். அதனாலன்றோ அவருக்கு அர்த்தநாரீஸ்வரர் என்ற பேர் உண்டாயிற்று. மாணிக்கவாசகப்பெருமானவர்களும் தாமியற்றிய திருவாசகத்தில், "சுரிகுழற் பணை முலைமடந்தை பாதியே பரனே" என்று திருவாய்மலர்ந்தருளியிருக்கிறார்கள். இன்னும் பார்வதி பங்கனாகிய பரமசிவன் மற்றொரு மங்கையாகிய கங்கையையும், தன் சிரசில் வகித்திருப்பதனாலேயே, கங்காதரனென்னும் மற்றொரு பெயருண்டாயிற்று. இது போலவே பாற்கடல் துயின்றோனாகிய பரமாத்மா, ஸ்ரீ மகாவிஷ்ணுவானவர் தன் பாரியாளாகிய இலக்ஷ்மியை மார்பிலும், நான்முகனோ வென்றால் தன் பத்தினியாகிய * நாமகளை நாவிலும் வைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

† கடிகமழ் துளவமாயன் கமலையை மார்பிற்கொண்டான்
மடவனம் பாகம்பூண்டான் வன்னியைக் கரத்தினேற்றான்
துடியிடை நின்னை நாவிற் றொருமறைக் கிழவன் வைத்தான்
படிபுகழ் மாதாருட் பாரதி மேன்மை யென்னே.

* சரஸ்வதியானவள் வெள்ளைக்கலையுடுத்து வெள்ளிய வாபரணங்களைப்பூண்டு, ஸத்திய லோகத்தில் வெண்தாமரை மலரில் அங்குள்ளாரனைவருக்கும் கட்புலனாகும்படி திருவுருக்கொண்டு வீற்றிருப்பினும், ஸகல லோகங்களிலும் ஆங்காங்குள்ள ஸமஸ்த ஜீவகோடிகளின் வாக்கின் கண்ணும் எழுந்தருளியிருந்து பேசுதல் முதலிய பற்பல ஒலி பற்றிய செயல்களைச் செய்வித்தலாலும், நான்முகன் நாவில் வசிப்பதாலும், நாமகள், வாக்தேவி, வாணி எனவும், உலகத்திற்கு இன்றியமையாத கலைகள் பலவற்றிற்கும் அதிதேவதையாய் விளங்குகிறபடியால் கலைமகள், பனுவலாட்டி எனவும், இன்னும் இவைபோன்ற பலவித காரணங்களால் பற்பல பெயர்களும் வழங்குவதுண்டு. (இன்னும் இதைப்பற்றிய இதர விபரங்களை விரிவாய் அறிய விரும்புவோர் நம்மால் இயற்றப்பட்டுள்ள கம்பனும் கலைமகளும் என்னும் புத்தகத்தைப் பார்வையிடவும்.)

† இப்பாடலானது நம்மால் இயற்றப்பட்டுள்ள "கம்பனும் கலைமகளும்" என்னும் புத்தகத்திலிருந்து எடுத்தாளப்பட்டது.



இங்ஙனமாக தேவர்களெல்லாம் தங்கள் மனைவியரைத் தங்களது அங்கத்தில் பாதியென மதித்து நடத்தி வந்திருக்க, அறிவிலிகளாகிய சிலர் அவர்களை அவமரியாதையாய் நடத்துவதற்குக் காரணம் அவர்களின் அறியாமையே காரணமாகும்.

புருஷர்கள் தங்கள் நாயகிகளை கௌரவமாயும், ப்ரீதியாயும் நடத்தவேண்டுவது நிரம்பவும் அவசியமாயிருப்பது போலவே, நாயகியும் நாயகனிடத்து உள்ளன்புடையவளாய், புருஷ பக்தி, தெய்வபக்தி, சற்குணம், பொறுமை, கற்பு, விருந்தோம்பல் முதலிய விசேஷ குணங்களை வகித்திருக்கவேண்டும். புருஷன் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து நடக்கவேண்டும். பர்த்தாவுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து அவன் மனம் குளிரும்படிச் செய்யவேண்டும். இருவரும் பூவும் மணமும், மங்குலும் மயிலும், * பேடும் அன்றிலும் போலவுமிருந்து இல்லறம் வழுவாது நடக்கவேண்டும். இங்ஙனம் சதிபுருஷர்கள் மனதொருமித்து, இல்லறம் நடத்துவார்களானால், பொன்மலர் நாற்றமுடைத்து என்பதுபோல இம்மையில் புகழும், மறுமையில் மோக்ஷமும் அடைவார்களென்பது திண்ணம்.

## விவாகமும் தேசாச்சாரமும்.

விவாகம் செய்விப்பதானது அவரவர்களின் மதாச்சார தேசாச்சாரம் முதலியவைகளை அனுசரித்து செய்யப்பட்டு வருகிறது. அதாவது, ஐரோப்பா, ஆஸ்டேரியா முதலிய தேசங்களில் 20 - வயதிற்குக் குறைந்த புருஷராவது பெண்களாவது விவாகம் செய்துகொள்வதில்லை. ஜெர்மனி தேசத்தில் 18-வயதிற்குட்பட்ட ஸ்திரீபுருஷர்கள் விவாகம் செய்துகொள்ளக் கூடாதென்று சட்டம் ஏற்பட்டிருக்கிறது. பிரான்ஸ், பெல்ஜியம் முதலிய தேசங்களில் புருஷர்கள்

* அன்றில்பறவைகள் ஒன்றை ஒன்று அதிக அன்புடன் காதலிக்கும், பேடையை விட்டு இரை தேடப்போன ஆண் அன்றில் அந்தி நேரத்தில் திரும்பி வாராவிடில், பேடை அன்பால் உருகிப் பிரிவாற்றாமையினால் வருந்தி ஒருதாம் கூவித் தன் உயிரைவிடும். இச்காரணம் பற்றியே ஸ்திரீ புருஷர்களது பிரேமையை அன்றிற் புள்ளின் அன்பிற்கு உவமிப்பதும், "சோடுபிரிந்த அன்றில் போல்" என வசனிப்பதும் வழக்கம், அன்றில் பக்ஷிகளுக்கிருக்கும் அன்யோன்யத்தையும் பரஸ்பர பக்ஷத்தையும் என்னென்று சொல்லலாம்.

18 - வயதிற்கு மேல்பட்டும், பெண்கள் 15 - வயதிற்கு மேற்பட்டும் மணஞ்சூட்டிக் கொள்ளுகிறார்கள். ஹாங்கேறியா தேசத்திலும் மேற்கண்டவிதமாகவே நடைபெற்றுவருகிறது. துருக்கி ஜாதியாரில் (Turkish) சதிபுருஷர்கள் தங்கள் வேத சாஸ்திரக்கொள்கைகளை யறிந்தபின்பே விவாகம் செய்துகொள்கிறார்கள். ஆகையால் விவாகம் செய்விப்பதானது அவரவர்களின் தேசாச்சாரத்திற்கும் தேசத்தின் சீதோஷ்ணத்திற்கும் ஏற்ற விதமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உஷ்ணப்பிரதேசமாகிய நம்மிந்திய நாட்டிலோ பெண்களுக்கு 12 - வயதிற்குள் விவாகம் செய்யவேணுமென்று விதி ஏற்பட்டிருப்பினும் தென்னிந்தியவாசிகள் அதனைச் சிறிதும் சிந்தித்துணராது பால்மணம் மாறாத சிசுக்களுக்கும் விவாகம் செய்விப்பதானது விந்தையினும் விந்தையே. கல்வியிலும் உலகானுபவத்திலும் மிகச் சிறந்தவரும் இந்திய மன்னர்களுள் ஒருவருமான, பரோடா மகாராஜா ஹிஸ் ஹைனஸ், கைக்வார் அவர்கள் தம் ராஜ்யத்தில் பால்யவிவாகம் நடவாதிருக்கும்படி ஓர் சட்ட மேற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தியாவிலுள்ள இதர மன்னர்களும் தத்தம் ராஜ்யங்களில் அப்படிப்பட்ட ஓர் சட்ட மேற்படுத்தி அதனை அனுஷ்டானத்திற்குக் கொண்டுவரவேண்டியது நிரம்ப அவஸ்யமாகும். இது போலவே நம் பிரிட்டிஷ் இந்தியாவிலும் பால்ய விவாகச் சட்டமொன்று விரைவில் ஏற்படுத்த வேணுமென்று, தேசாபிமானிகள் சிறிதுமுயற்சி எடுப்பார்களானால் நமது காருண்ய இந்திய கவர்ன்மெண்டாரவர்கள் அதன்படி செய்விப்பார்களென்பது திண்ணம்.

விவாகம் செய்விப்பதானது மேற்கண்ட விதமாய் தேசாச்சாரம் சீதோஷ்ணம் முதலியவைகளுக்கு ஏற்ற விதமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றாலும், இதுவிஷயமாய் நம் நாட்டிலுள்ள ஒரு பெரும் கெட்ட வழக்கத்தைப்பற்றிச் சிறிதளவு கூறவேண்டியது மிகவும் அவஸ்யமாய் இருக்கிறது. அதாவது, சிலர் தம்பிள்ளைகளுக்கு விவாகம் செய்ய வேண்டில் தம்பதிகளின் சம்மதமன்னியில் அவர்களின் ஜாதகக்குறிப்புகளைக்கொண்டும் இன்னும் இதர சௌகர்யங்களைக் கொண்டும், ஓர் மூடஜோதிஷன் தசப்பொருத்தமும் சரியாய் இருக்கிற



தெனக்கூற, அதுவே தேவவாக்கென்று சிரமேற்கொண்டு சரீரப் பொருத்தம், தரப்பொருத்தம், மனப்பொருத்தம் முதலியவைகளைச் சிறிதும் கவனியாமல், "அம்மா குதிர்போல் ஐயா கதிர்போல்" என்னும் பழமொழிக்கிணங்க ஒருதிடகாத்திர சரீரமுடைய பெண்ணை ஓர் துர்பலமுடைய புருஷனுக்கும், சரீரபலமுடைய ஒரு புருஷனுக்கு மெலிந்த சரீரமுடைய ஓர் பெண்ணையும், சிலசமயங்களில் பல பெண்களையும் சேர்த்து விவாகம் செய்து விடுகிறார்கள். இதுவுமன்றிப் "பணமென்றால் பிணமும் வாய்திறக்கும்" என்பதையொப்ப பணத்தாசையால் ஓர் வயோதிகனுக்குத் தங்கள் அருமை மிகுந்த ஐந்து வயதிற்குள்பட்ட பெண்ணையும் கொடுத்துவிடுகிறார்கள். ஆ! ஆ! இதென்ன பரிதாபம்! இவ்வித பாதகச் செயல்கள் நம்மிந்திய நாட்டைவிட்டு எப்போது தொலையுமோ! அப்போதே நம்மவர்கள் நம்முன்னோர்களைப்போல் ஆயுள் விருத்தி, தேகபலம், மனோபலம், வித்தியா பலம், ஞானபலம் முதலியவைகளுடையவர்களாய் சுகஜீவிகளாய் வாழ்வார்களென்பது திண்ணம்.

மேற்கூறியபடி பொருளாசைகொண்டு அதிபால்ய வயதுள்ள பெண்களை வயோதிகர்களுக்கும், வியாதியஸ்தர்களுக்கும் விவாகம் செய்துகொடுப்பதானது புருஷன்பெண்ஜாதி என்னும்பெயருக்காகவேயன்றி வேறு பிரயோஜனமில்லை. அவர்களின் வாழ்நாளெல்லாம் ஒற்றுமையின்றி "ஒணானும் தவளையும் ஒன்றுகூடினாற்போல" (ஒணான் வேலிக்கும் தவளையையும் ஒன்றாய்ப்பிணைத்து விட்டால், ஒணான் வேலிக்கிழுக்கும், தவளை தண்ணீர்க்கிழுக்கும்) அப்பெண் சதா சஞ்சலமுற்று விபசார தோஷத்திற்குமாளாவாள். அப்போது அவளுடைய வயோதிக புருஷன் வழியொன்றுந் தெரியாது மயங்கி, அவனுக்குண்டான கீர்த்திநஷ்டம், பொருள்நஷ்டம் முதலியவைகளையும் மனதில் நினைத்து, எண்ணாததெல்லாம் எண்ணி, நெஞ்சம் புண்ணாகி, தன் பெண்ஜாதியின் துர்நடத்தையை வெளியில் சொல்லவும் வெட்கப்பட்டு இல்லறம் துறந்து துறவறம் பூண்போர் சிலர். தமதுயிரைத் தாமாகவே மாய்த்துக்கொள்வோர் பலர். இதுபோலவே தனக்கிஷ்டமில்லாத ஆடவர்க்கு பெண்ணைப் பெற்றோர்களால் மணம் செய்துவைக்கப்பட்ட

ளும், தங்கள் சொந்தமனையாளைச் சோற்றுக்கலையவிட்டு தங்கள்மனைவி யர்களுக்குத்தீராத் துயரத்தை உண்டுபண்ணி, தங்கள் மனதுக்கிசைந்த மங்கையருடன் கூடி, தாசிகள் வீட்டிற்குத் தாசராயிருந்து, பொருளை யும் புகழையுமிழந்து, செப்பவொண்ணாத பல ஆபாச ரோகங்களுக்கும் ஆளாகி அவதிப்படுவார்கள். அப்போது அவர்களுக்கு வாழ்க்கைப் பட்ட பெண்ணும் தன் தலைவிதியை யுன்னி தனக்கு நேர்ந்திருக்கும் கஷ்டத்தை எண்ணி, மனம் குன்றி, தன் வாழ்நாளை வீண் நாளாக் கின பெற்றோர்களை நிந்தித்து, தன்னுயுள் முழுதும் கண்ணும் கண் ணீருமாயிருந்து காலத்தைக் கழிக்கவும் நேரிடும். இன்னும் தற்கொலை முதலிய துர்கிரியைகளைச் செய்துகொள்வோருமுண்டு. தேசாபி மானிகளும், ஆசார சீர்திருத்தக்காரர்களும் இவ்வித விவாகங்கள் நம் நாட்டில் நடவாதிருக்கும்படி முயற்சி எடுப்பார்களானால் தற்காலம் நம் நாட்டில் தினே தினே விருத்தியாகிவரும் பால்ய விதவைகளின் சங்கைகள் ஒருவாறு குறையும். அப்போது அவ்வித விதவைகளின் விகாரமும் தொலையும்.

இவ்வித விதவைகளின் விகாரத்தையும் பரிதாபத்தையும் பற்றி ஹிதகாரிணி என்னும் பத்திரிகையில், விதவைகளின் விகாரம் என்னும் தலையங்கத்தின் கீழ் வரையப்பட்டிருக்கும் வியாசமானது சற்று விரிவாயிருப்பினும், இப்புத்தகத்தை வாசிக்கும் நண்பர்களும் அவ் வியாசத்தை வாசித்துச் சீர்திருத்த மடையவேண்டுமென்ற விருப்பத்தி னால் அதனை அதிலுள்ளபடியே இவ்விடத்தில் வரைய வேண்டியது நிரம்பவும் அவஸ்யமாயிற்று. அதாவது.—

மாதர்களின் மனக்குறையை மானவர்கள் அறிந்திலார்போலும். புருஷர்களின் பணிவிடைகளைச் செய்யவே பெண்மக்கள் பிறந்திருக் கிறார்களென்று ஸாமான்ய ஜனங்கள் கூறுவது வழக்கம். அவர் சொல் வதுபோலவே ஒப்புக்கொண்டாலும், பதியில்லாத பரதேசிகள் யாருக் காக ஜீவித்திருக்கவேண்டும். அவர்களுக்கு நித்ய கருமங்கள் தேவை யில்லையா ? உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் மானிடர்களின் வழக்கமாயிருக்கின்றன. ஆடிப்பாடி, ஓடி, நாடிச்செல்வதெல்லாம் பொருளைத் தேடி வைக்கவே என்று சிலர் கூறுவார்கள். பொருளைச்



சேகரித்தவர்களெல்லாம் அதை விநியோகப்படுத்தும் வழியைத்
தெரிந்துகொள்ளாதிருக்க நியாயமென்ன ? அறிந்திருந்தும் மௌன
மாயிருப்பர் அனேகர். ஆண்மக்களுக்கே ஸுகசந்தோஷாதிகள்
சொந்தமாய்விட்டன. புருஷனில்லாப்பெண்கள் ஆநந்த விநோதாதிகளை
அகத்திலும் ஸ்மரிக்கலாகாதென்று ஜாதிப்பிரியர்கள் உத்தரவிட்டிருக்
கிறார்கள். விப்ரகுல வநிதையர் விதவைகளானால் முண்டனம் செய்து
கொண்டு "சிவ, சிவ, சிவ" "ராம், ராம், ராம்" "கிருஷ்ண, கிருஷ்ண,
கிருஷ்ண" என்ற தெய்வ நாமங்களை எந்நேரமும் சொல்லிக்கொண்ட
லறவேண்டும், அவைகளை உச்சரிப்பதால் உண்டாகும் நன்மை என்ன
வென்று வினவினாலோ வால்மீகி, கபீர், துளசிதாஸ், கிராதகன்,
குஷ்டரோகி முதலியவர்கள் நாமோச்சாரணைகளாலடைந்த நன்மை
களை உதாரணமாய்க் காட்டுகிறார்கள். மேற்கண்டவர்களைத் தவிர
வேறு மனிதர் பகவந்நாமஸ்மரணைகளால் புனிதராகவில்லைபோலும்,
இருந்திருந்தால் அவர்களின் பெயர்களும், மேற்படியாரின் பட்டியில்
சேர்ந்திருக்கு மல்லவா? ஈஸ்வர நாமத்தைச் சொல்வதால் தப்பொன்று
மில்லை. சாகப்போகும் கிழவர்கள் தம்பதிகளா யிருப்பாராயின்
அவர்கள் தெய்வத்தியானம், ஸ்நானாதிகளைச் செய்யவேண்டிய அவ
சியமில்லையாம். தேகஸுகத்தைத் தரும் மருந்து, லேகியம், ஷர்பத்,
முரபாக்களை யுண்டு உலகத்தில் வாழ அபேக்ஷிக்கலாம். மூன்று
வயதில் மணவாளனை இழந்த மூடப்பெண்களை அவகோலம் செய்து
முண்டை என்ற பட்டத்தையும் கொடுத்து வெள்ளையுடுத்த உத்தர
விட்டு, வெண்ணீறு பூசும்படிக்கூறி, விதியே, விதியே, என்று முக்கா
டணியச்செய்து உலகத்தைக் கண்திறந்து பாராவண்ணம் திட்ட
மேற்படுத்தி அந்தகாரத்தில் அடைப்பார்கள். இது என்ன தர்மமோ?
இது யாரிட்ட கட்டளையோ. அறியோம் ! பெண்பாவத்தைக் கட்டிக்
கொண்ட புண்ணியவானின் பெயரைக் கேட்டால் சொல்வோர்
கிடையாது. எதற்காக மாதர்களை இவ்விதம் செய்கிறீர்களென்று
வாதித்தால் நாங்களென்ன செய்வோம், ஜாதிக்காரர்களின் ஸம்பிர
தாயமென்கிறார்கள். ஸம்பிரதாய விரோதம் செய்தால் தெய்வ
தண்டனை ஏற்படுமாம். தெய்வத்தின் தலையில் இல்லாத

பழிகளைச் சுமத்தும் சில ஸாமர்த்தியசாலிகள் ஆங்காங்குளர். ஒருமுறை தென்னாட்டிலுள்ள நகரம், கிராமங்களைச் சுற்றி வந்தால் மாதர்களின் பரிதாப நிலைமை தெரியும். காவேரி, ஏரி, ஆறு, குளங்களுக்கு வரும் விதவைகளைக் கணக்கிட்டு முடியாது. 13-வயது உள்ள பெண்கள் முண்டனம் செய்துகொண்டு அலங்கோல உடையுடுத்தித் திரிகிறார்கள். அந்தோ! என்ன பரிதாபம். இவர்களைத் தொட்டுத் தாலிகட்டின பாபிகள் எமனுலகடைந்தார்கள். இறந்தவர்களின் பாடு சுகமாய் முடிந்தது. இந்தப் பரதேசிகளின் கெதியை யார் விவரிப்பது. எங்கே சென்றாலும், மொட்டை, கைம்பெண், அமங்கலி, அறுதலி, என்ற சொற்களைக் கேட்கவேண்டும். இன்றைய தினம் வாழ்பவரெல்லாம் நாளையதினம் தங்களுக்கு வரும் நிலைமையை ஆலோசியாமல் விதவைகளைப் பற்பலவிதமாய் ஹேளனம் செய்து ஆநந்திக்கின்றனர். உலகத்தில் பிறந்த ஆண்பெண்கள் அனைவரும் இறப்பவர்களே. "இருப்பதுபொய் இறப்பது மெய்" என்பதை யாரும் மறக்கலாகாது. பசி, வியாதி, துன்பம், துக்கம், முதலியவைகள் எல்லோருக்குமுண்டு. பரதேசி படுக்க பாய்கிடையாதே என்றழுதால் பணக்காரன் சயனிக்க பஞ்சணை மஞ்சங்களில்லையே என்று பரிதபிக்கிறான். இதிலென்ன வித்தியாஸம். வார்த்தை பேதமேயொழிய துக்கவித்தியாஸமில்லை. இதை விவேகிகள் நன்றாய் யோசிப்பார்களாகில் விதவைகளின் கெதி வெளியாகும். பால்ய விவாகம் ஒரு புறம் விதவைகளை அதிகரிக்கச் செய்கிறது. 'விருத்தஸ்யதருணீ விழயம்' என்ற வாக்கியத்தைப் பொய்யாக்கிக் கடையேறவிருக்கும் சில கிழங்கள் காமத்தால் காமினிகளிடம் ஆசைகொண்டு காசைக்கொடுத்துக் கலியாணம் செய்து அனுபவிக்கச் சக்தியில்லாமல் உயிருடனிழந்தோ அல்லது உயிர் துறந்தோ பிரிந்து செல்லுகின்றனர். எல்லா விளையாடல்களும் நமது நாட்டில் நடந்து வருகின்றன. நமது தேசாபிமானிகளும், விவேக, வித்யா, விசார சகோதரர்களும் இத்தகைய காரியாதிகளைப்பார்த்தும் கேட்டும் வருகிறார்கள். ஆனால் எதற்காக மௌனவிரதம் பூண்டிருக்கிறார்களோ தெரியவில்லை. தங்கள் ஸ்வானுபோகத்தில் அறியாமை



யால் பிறருடைய கஷ்டநிஷ்டங்கள் மனதில் பதியவில்லை என்றெண்ணலாமோ. அவ்விதம் நினைப்பதும் தவறாகும். பிரபஞ்சவர்த்தமானங்களை க்ஷணத்தில் கிரகிக்கும் மதியூகிகள் தங்கள் ஸகோதர ஸகோதரிகளின் ஸுகதுக்கவிஷயங்களைத் தெரிந்துகொள்வது கடினமா. முற்காலத்துமுதியோர்கள் செய்த வழக்கமென்று முணுமுணுப்பார்களாகில் தற்காலத்து ஸ்திரீ புருஷர்கள் பெரியோர்கள் விதித்துள்ளபடி நித்யகர்மாதிகளை செய்து வருகின்றனரா என்பதை யோசிக்கவேண்டும். அக்நிஹோத்திரம், ஔபாசனம், வானப்பிரஸ்தம், தர்மம், தானம், ஈச்வராராதனைகள் எங்கே சென்றன? முன் உடுத்தியிருந்த உடைகள் எங்கே பறந்தன? முகக்ஷவரம், முழங்கால்கட்டு, சட்டைபட்டைகளெல்லாம் நமது முதியோர்கள் நம்மை யணிந்துகொள்ளுமாறு வாழ்த்திக்கொடுத்தார்களா? இவைகளெல்லாம் புதிதாய்த் தோன்றி நமது வீட்டில் உறவாடுகையில் நமது விதவா சகோதிரிகளுக்கு நூதன சகாயம் செய்வது தவறாகுமா? ஒருநாளுமில்லை. மறுமணம் செய்யும் வார்த்தையைப்பற்றி பிறகு பேசலாம். ஐந்தில் முண்டையானாலும், ஐம்பதில் விதவையானாலும், அம்பட்டனிடம் ஒப்புக்கொடுக்காதிருக்கும் மார்க்கத்தை கையாளும்படி விவேகிகள் போதிப்பார்களாக. இந்த துர்வழக்கத்தை அடியோடு தொலைத்தாலன்றி நாட்டுக்கும், வீட்டுக்கும் க்ஷேமமேற்படாது. விதவைகளின் மனத்துயரத்தை அகற்றும் மேதாவிகள் நமது நாட்டில் அநேகரிருக்கின்றனர். விவேகிகள் ஒன்றுகூடி நன்மை செய்தாலல்லவோ ஏழை விதவைகளின் கஷ்டம் நீங்கும். விளையாடும் குழந்தைகளுக்குப் பெற்றோர்கள் மணம் செய்துவைப்பதும் தெய்வீகமாய் மணமகன் மாண்டால் மகளைத்தூறி சரீரதண்டனை, சிரமுண்டனங்களைச் செய்து நீசர்களைப்போல் நடத்துவதும் வழக்கமாயிருக்கின்றன. அறிவில்லாத பாலிகைகளை என்ன குற்றத்துக்காகத் தண்டிக்கவேண்டும். சுபகாரியங்களுக்கு அருகரில்லையென்று அவமதிப்பாய் திருட்டு, துரோகம், விபசாரம், களவு முதலிய பாதகச் செய்கைகளைச் செய்தவர்களுக்குக்கூட சிலதினங்கள்வரை தண்டனை விதிக்கப்படுகிறது. ஒரு குற்றமும் செய்யாத கன்யாமணிகளை உயிருள்ளவரையில் ஸந்தோஷத்

தில் சேராவண்ணம் விலக்குவது நியாயமா ? கீழ்அதிகாரிகள் தண்டனை விதித்தால் மேல்அதிகாரியிடம் நியாயம் கோருகிறார்கள். கவர்ன்மெண்டார் ஜனோபகாரமான நன்மைகளைச்செய்திருக்கின்றனர். நமது ஸகோதரி, சகோதரர்கள், தாங்கள் பெற்ற பாலிகைகளின் விஷயத்தில் மனம் உருகாமலும், அவர்களின் துயரம், துன்பங்களை அகற்றாமலும் இருக்க நியாயமென்ன ? இனியாவது சிரத்தை கொள்வார்களென்று நம்புகிறோம். நாகரீகமறிந்த ஸ்ரீமான், ஸ்ரீமதிகள் நன்றாய் ஆலோசிக்கவேண்டுகிறோம். சாஸ்திரத்தைப் பரிசோதித்துப் பார்க்கட்டும். எத்தனை ரிஷிகள் விதவைகளின் விஷயத்தில் இரக்கம், தண்டனைகளைக் காட்டியிருக்கிறார்களென்பது விளங்கும்.

மேற்கண்ட வியாசத்தை வாசித்தபிறகாவது நம்மவர்கள் பால்ய விவாக மென்னும் பாசத்தில் சிக்குண்டு, தாங்கள் தவமிருந்துபெற்ற அறியாச் சிறுமிகளை அவமங்கிலியாக்கி,அவர்களின் இல்லறசுகத்தைப் போக்கி, தாங்களும் மனம் எங்கித் தவியாதிருப்பார்களென்றெண்ணுகிறோம்.

ஆகையால் சரீரபேதத்தையும் சதிபுருஷர்களின் சம்மதத்தையும் அறிந்துகொண்ட பிறகே, விவாகம் செய்விப்பது விவேகிகளுக்கழகாகும். முற்காலத்தில் நம்மவர்களுக்குள் காந்தர்வ விவாகம் ஏற்பட்டிருந்ததுபோலவே, ஸ்திரீகளுக்குச் சுயாதீனம் கிடைத்திருக்கிற ஐரோப்பா, அமெரிக்கா முதலிய மேனாடுகளில் பெண்ணும் மாப்பிள்ளையும் அதமபக்ஷம் ஆறுமாதகாலமாவது ஒருவரோடொருவர் பேசிப் பழகி, அவரவர் குணாகுணங்களையும் குடும்ப நிர்வாகத்தையும் அறிந்து இருவர் மனமும் ஒருமனதாகி, ஒற்றுமையுண்டான பிறகே விவாகஞ் செய்துகொள்ள சம்மதிப்பது வழக்கம். நம்மிந்திய நாட்டிலோ பெற்றோர்களே எல்லாவற்றையும் பேசி முடித்துவிடுகிறார்கள். திருமங்கிலியதாரணம் செய்யப்போகும்போதுதான், பெண்ணுக்கு மாப்பிள்ளை யின்னாரென்று தெரியும். அப்போது பகுத்தறிவுள்ள சில பெண்கள், மாபபிள்ளை தம்மனதுக்குப் பிடிக்காவிட்டால் இந்த மாப்பிள்ளைக்கு நான் வாழ்க்கைப்படமாட்டேன். நான் குளங்குட்டைகளில் விழுந்து விடுகிறேன் என்று சொல்வதுமுண்டு. இதுபோலவே தன் மன



துக்குப் பிடிக்காத பெண்ணை விவாகம் செய்துவைக்கப் பெற்றோர் முயற்சிக்கும்போது மணமகனும் இப்பெண் எனக்கு வேண்டியதில்லை, விவாகமும் வேண்டாம். நான் பரதேசம் போகிறேன் என்று பலரறியச் சொல்வதுமுண்டு. அப்போது பெண் வீட்டாருக்கும் மாப்பிள்ளை வீட்டாருக்கும் பெரிய அவமானமுண்டாவதுந் தவிர, விவாகத்திற்கென்று வந்திருக்கும் உறன் முறையார்களுக்கும் மனவருத்தம் உண்டாகிறது. சிலர் அப்படிப்பட்ட சமயங்களில், பெண்ணையும், மாப்பிள்ளையும் கோபித்து அடித்து, கட்டாயஞ் செய்து தாலி கட்டுவிக்கிறார்கள். சிலர் பெண்களுக்குப் போதிய வயதாய்விட்டதென்றும், இரண்டொரு வருஷத்திற்குள் புஷ்பவதியாகி விடுவாளென்றும், ஆகையால் அதற்குள் விவாகம் செய்துகொடுத்துவிடவேண்டுமென்றும், அவசரப்பட்டு தாங்கள் அருமையாகப் பெற்று வளர்த்த பெண்ணைச் சற்றேனுமிரக்கமில்லாத, தடியனோ,மூடனோ, மூர்க்கனோ, குரூபியோ, அறிவிருந்த ஊரிற் குடியிருந்துமறியாத மட்டியோ, மடையனோ, சூதாடியோ, யாராயிருந்தாலும் தாங்கள் விரும்பிய பொருளைத் தருவானாயின் அதைப் பெற்றுக்கொண்டு அந்தக் கிடங்கிற் றள்ளிவிடுகிறார்கள். இதைப்பற்றி மனுஸ்மிருதி 9-வது அத்தியாயம் 89-வது ஸ்லோகம் சொல்லுகிறதாவது :

काममामरणात्तिष्टेत्गृहे कन्यर्तुमत्यपि ।
नचैवैनांत्रुयच्छेत्त गुणहीनायकर्हिचित् ॥

மேற்கண்ட ஸ்லோகத்திற்குப் பொருள் யாதெனில், தகுந்த வரன் அதாவது குலம், கோத்திரம், அத்தியாயனம், ஆசாரம், வயதுக்கிரமம் முதலிய லக்ஷணங்களோடு கூடிய மணமகன் கிடைக்காத வரையில் பெற்றோர்கள் தங்கள் பெண்ணைச் சாகும் வரையில் வீட்டிலாவது வைத்திருக்க வேண்டுமேயல்லாது, வயது ஆகிவிட்டதேயென்று வீணர்கட்கு விவாகம்செய்து கொடுக்கக் கூடாது என்பதாம். மேற்கண்ட ஸ்லோகத்தை ஆதாரமாகக்கொண்டு நம்பூரிகள் (மலையாள ராஜ்யத்திலுள்ள பிராமணர்கள்) தங்கள் பெண்களுக்கு எந்த வயதில் வேண்டுமானாலும் தக்க வரன் கிடைத்தபோது விவாகம் செய்து கொடுக்கிறார்கள். இந்தியாவிலுள்ள இதர பிராம்மணர்களும் இதனைக்

கவனிக்க வேணுமாய் வேண்டிக் கொள்ளுகிறோம். அதாவது பெண்களை விவாகம் செய்து கொடுக்காது சாகும்வரையில் வீட்டிலேயே வைத்திருக்க வேணுமென்று நாம் சொல்வதாக ஒருவரும் நினைக்கக் கூடாது. பின்னர் யாதெனில் * பெண்களுக்குப் போதிய வயதான பிறகு எவ்விதத்திலும் தக்க வரனைத் தேடி விவாகம் செய்து கொடுக்க வேணுமென்பதே எமது அபிப்பிராயம். விருக்கிற் பெருகுமென்றஞ்சி இவ்வளவோடு நிறுத்தலானோம்.

## விவாகஞ்செய்யத் தகாத குடும்பங்கள்.

சொந்தக் குடும்பத்திலும், நீரிழிவு, காசம், க்ஷயம், காக்கைவலி, அபஸ்மாரகரோகம், குஷ்டம், மூலரோகம், பௌத்திரம், பைத்தியம், கண்டமாலை, கிரந்தி, மேகம் முதலிய நோய்களுள்ள குடும்பங்களில் விவாகம் செய்யக்கூடாது. ஏனெனில் அவ்விதக் குடும்பங்களில் பரம்பரையாயுள்ள மேற்கண்ட கொடிய நோய்களானது அக்குடும்பங்களில் சம்பந்தப்படுவோர்களையும், அவர்களுக்குப் பிறக்கும் சந்ததிகளையும் சங்கிலித்தொடர்போல் தொடர்ந்து பலவித இடையூறுகளை யுண்டாக்குமென்பது திண்ணம்.

“புற்றீசல்போலப் புலபுலெனக் கலகலெனப் புதல்வர்களைப் பெறுவீர் காப்பதற்கும் வகையறியீர் கைவிடவுமாட்டீர்” என பட்டினத்தடிகள் திருவாய் மலர்ந்தருளியபடி, குடும்பபாரத்தை வகிக்க சக்தியில்லாதவர்களும், குடிவெறி, சூதாட்டம் முதலிய துஷ்ட நடவடிக்கையுள்ளவர்களும், விவாகம் செய்துகொள்வது தகுதியன்று. பித்தசரீரமுடைய புருஷன், பித்தசரீரமுள்ள பெண்ணை மணம் புரிவானாகில் அவர்களுக்குண்டாகும் குழந்தைகள் சரீர சக்தி குறைந்து மெலிந்த

* மைசூர் சமஸ்தானத்திலுள்ள இரண்டு விவேகிகள் நம்மவர்கள் செய்யும், விவாக வியாபாரங்களைக்கண்டு வருத்தமுற்று சாஸ்திர பரிசோதனைசெய்து அநேக ஆதாரங்களோடும், வேதப்பிரமாணங்களுடனும் “ருதுமதிவிவாகம்” “ஸ்திரீஸம்ஸ்காரப்பிரகாசிகை” என்ற இருபுஸ்தகங்களைக் கன்னடத்தில் வரைந்துளர். அவைகளைப்படித்து அந்தத்தேசவாசிகளில் அறிவாளிகளான குடும்பத்தார் பூர்வாசாரவிதிப்படி தங்கள் தங்கள் மக்களுக்கு மணம்செய்வதாய்த் தீர்மானித்திருக்கிறார்கள். நமது தமிழபிமானிகளான பூஸுரர்களும் இந்தவிஷயத்தில் சிரத்தை கொண்டு சீர்திருத்தம் செய்துகொள்வது அவஸ்யம். (The Hithakarini Vol. 3-No. 10, Page 293)



சரீரமுடையவர்களாகவுமிருப்பார்கள். பித்த சரீரமுள்ள ஸ்திரீயை வாதசரீரமுள்ள புருஷன் விவாகம் செய்து கொள்வானாகில், அவர்களுக்குண்டாகும் சந்ததிகள் பூரண சக்தியுடையோராயிருப்பார்கள். ஆகையால் சதிபுருஷர்களின் தேகக் கூறுகளையும் தீர்க்கமாய் யோஜித்துப் பின் விவாகம் செய்விப்பது விவேகிகளின் கடமையாகும்.

## போகத்தின் பிரயோஜனம்.

போகமானது, சம்போகம், சங்காதம், சையோகம், புணர்ச்சி, கலவி அல்லது சுரத மெனப் பல நாமம் பெறும். போகமென்பது மிகவும் ரகசியமா யிருப்பதாலும், அதைப்பற்றிய விபரங்களை ஒருவருக்கொருவர் கேட்டுத் தெளிவதும் தெரிந்துகொள்வதும் மிகவும் சங்கடமாயிருப்பதாலும், சம்போகமென்பது யாவருக்கும் இயல்பாகவே தெரிந்து கொள்ளக்கூடிய ஓர் அரிய பெரிய சக்தியோடு ஜீவாத்மாக்களைச் சிருஷ்டித்திருக்கும் கடவுளின் கருணையை நாம் என்னென்று சொல்லலாம். இக்காரணம் பற்றியே இதனைக் குருவில்லாத வித்தையென்றும் சொல்லப்படுகிறது.

இப்பூவுலகில் மனிதர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் சிற்றின்ப சிந்தனையின்றி இருக்கமுடியாது, இச்சிற்றின்பத்தை மகா வலிமை பொருந்திய மின்சார சக்திக்கு (Electricity) ஒப்பிடலாம். மனித சமூகத்தவர்களுக்கு இச்சிற்றின்பப் பிரியமில்லாதிருக்குமானால் ஜனவிருத்தித் தடையுண்டாகும். ஆதலால் உலக அபிவிருத்தியின் பொருட்டு நம்மைப் போன்ற பல ஆத்மாக்களைச் சிருஷ்டிக்கவேண்டியிருப்பதினாலேயே, உலகத்தின் மற்ற எல்லா இன்பங்களைப் பார்க்கிலும் மனிதர்களுக்குப் போகத்தில்மேலான இன்பத்தை உண்மைப் பண்டிதராகிய கடவுள் உண்டுபண்ணி யிருக்கிறார். நமக்குப் பசி, தாகம், நித்திரை முதலிய உணர்ச்சிகளை எப்படி மனோ உணர்ச்சியால் அறிந்து கொள்ளுகிறோமோ, அதுபோலவே ஒருவனுக்கு யாதொரு ஸ்திரீயின் ஆலிங்கனம் லீலை முதலியன வின்றிக் காமக்குறிகள் கண்டு சம்போக இச்சை யுண்டாவதே, தேகசுபாவத்திற்குத் தகுதியான போகத்திற்குரிய காலமாம். பசி வந்தபோது புசிப்பதும், தாகமுண்டானபோது

தண்ணீர் குடிப்பதும், நித்திரை வரும்போது உறங்குவதும் ஜீவாத்மாக்களுக்கு இயற்கையா யிருப்பதுபோலவே, மேற்கூறியபடி சம்போகயிச்சை உண்டானவுடன் தத்தமக்குரிய நாயகிகளோடு மிதமாய் போகிக்கவேண்டியதும் நிரம்ப அவஸ்யமாம். இவ்விதமான காலகிரமத்திற்கொத்த மிதமான புணர்ச்சியினால் தேகசுபாவத்திற்கு வேண்மிச்சக் கழிவாகிய விந்துக் கழிவுண்டாகும்.

மகா வல்லமை பொருந்திய மின்சார சக்தியானது பல்லாயிரமயில்களுக்கப்பாலுள்ள பல அரிய விஷயங்களை அப்போதைக்கப்போது அறிவிக்கவும், பங்கா (Fan) இழுக்கவும், வண்டிகளை இழுத்துச் செல்லவும், கப்பல்களை ஓட்டவும், இயந்திரங்களை இயக்கவும், அநேகம் கொடிய நோய்களை நொடிப்பொழுதில் அகற்றவும், இன்னும் இவை போன்ற பல அரிய பெரிய காரியங்களைச் செய்யவும் சக்தியுடையதாயிருப்பது போலவே, சிற்றின்பமாகிய மின்சாரமும் ஸ்திரீ புருஷர்களிருவர்களுக்கும் சம்போக விச்சையை யுண்டுபண்ணவும், அப்படிப்பட்ட சம்போகத்தினால் தேகசுகம் நிலைபெற்றிருக்கவும், அநேக வியாதிகளுண்டாகா திருக்கவும், தேகபுஷ்டி, தேகபலம், காந்தி, ஊக்கம், மனானந்தம் முதலியன வுண்டாகவும், கோபம், அகங்கரிரம், காமவிகாரம் முதலியவைகளைப்போக்கவும், தேகத்தின்சூடு, குளிர்ச்சி, சொழுமை, வறட்சி ஆகியவைகள் சமப்பட்டுச் சீராகவும், ஆயுள்விருத்தி, சந்தான விருத்தி முதலியவைகட்கிடமாகவும், புத்தி தெளிவும், கண்ணிற்கொளியுமுண்டுபண்ணும் சக்தியுடையதாகவு மிருக்கிறது.

மின்சாரசக்தியானது மேற்கூறியபடி மனித சமுகத்திற்குப் பல அரிய விஷயங்களைச் செய்து உதவி புரிகின்றதெனினும், அனுபோகமற்ற ஒருவன் மின்சார சூஸ்திரத்தை முறைதப்பிப் பிரயோகிக்கினும், அல்லது மின்சாரமேற்றிய கம்பியைத் தொட்டாலும், அல்லது அது இயல்பாகவே அறுந்து மனிதர்கள்மேல் விழுந்தாலும், பேராபத்து விளைந்து அநேக ஜீவன்களைப் பரலோகத்திற் கனுப்பிவிடுகிறது. அதுபோலவே சிற்றின்பமாகிய மின்சாரமும் மனிதர்களுக்குப் பல அரிய நன்மைகளைச் செய்வதுடன் சந்தானோற்பத்திக்கும் ஆஸ்பதமாய் இருக்கிறதெனினும் அளவுக்கு மிஞ்சிய அக்கிரம போகமே முறைதப்



பிப் பிரயோகிக்கப்படும் மின்சாரமானது பலபேராபத்துகள் விளைவது போலவே பல ரோகங்களை விளைவிக்கும் வித்தாயிருக்கிறது. ஆகையால் சங்கரதக்கிரமத்தை அறிந்து அதன்படி நடப்பதே அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்குவித புருஷார்த்தங்களையும் அளிக்க வல்லதாயும், இக்கிரமத்தை அறிந்து ஒழுகுவதினால் ஸ்திரீ புருஷர்களிருவருக்கும் மனவொத்துமையுண்டாய் எல்லா அறங்களினும் நல்லறமாகிய இல்லறம் வழுவாது நடைபெறுவதற்கு ஆஸ்பதமாயும் இருப்பதால் இச்சுரதக்கிரமத்தைப்பற்றி சிறிதளவு கூறுவாம்.

## போகத்திற்குப் போதிய பருவம்.

புருஷர்கள் இருபத்திரண்டு வயதிற்கு மேற்பட்டும் ஸ்திரீகள் பதினாறுவயதிற்கு மேற்பட்டும் சம்போகம் செய்யச் சக்தியுடையவர்களாவார்களென்பது சாஸ்திர சம்மதம், ஏனெனில் ஸ்திரீ புருஷர்கள் மேற்கூறிய வயதிற்குட்பட்டுச் செய்யும் சம்போகத்தால் கர்ப்பம் தரிக்கமாட்டாது. அப்படிக்கின்றிக் கர்ப்பம் தரித்தாலும் அகாலப்பிரசவமாய் (Abortion) முடியும். சில சமயம் கருநிலை பெற்றுச் சந்தானமுண்டானாலும் * எலிக்குஞ்சுகளையும், மூஞ்சூறுகளையும்போலப் பிறந்து சொற்ப நாளிருந்து அற்பாயுளாய் முடியும்.

அப்படிக்கின்றி உயிருடனிருந்து பாலியத்தில் சுகமடைந்திருந்தாலும் காலஞ் செல்லச்செல்ல, தேகபலம், மனோபலம், வீரியபலம், ஞானபலம் முதலியன குறைந்து கண்ணொளி மழுங்கி 15-வயதிற்குள் மூக்குக் கண்ணாடி தரித்து வீரிய விருத்தி லேகியங்களையும், தங்க பஸ்பங்களையும், டானிக் (Tonic) வகைகளையும் தேடித்திரிவார்கள். இன்னும் தற்காலத்தவர்கள் முப்பது வயதிற்குள் முதுமைப்பருவமடைந்து ஒட்டின கன்னமும், உட்குழிந்த கண்ணும், எலும்புபோன்ற இளைத்த தேகமுடையவர்களாய் இருப்பதின் காரணம் நம் நாட்டில் நடக்கும் —

* இதற்குதாரணமாகத் தற்காலத்து சிறுவர் சிறுமிகளுக்குப் பிறக்கும் ஜீவப்பொம்மைகளிற் பெரும் பாகம், அஜீரணம், அஸ்திஜுரம், இருமல், கக்குவான், கணை, இழுப்பு, இரைப்பு, ஜுரக் கட்டி, கொலைக்கட்டி என பல ரோகங்களால் பீடிக்கப்பட்டு பிரதி தினமும் வைத்தியர் வீடுகளுக்கும், ஆஸ்பத்திரிகளுக்கும் தாய்மார்கள் எடுத்துக்கொண்டு போவதை நாம் கண்ணூடாகப் பார்த்து வருவதே போதிய சாக்ஷியாகும்.

பால்ய விவாகமே காரணமாகும். தேசாபிமானிகள் இது விஷயமாய் முயற்சி எடுக்காவிட்டால் இன்னும் 500-வருஷங்களுக்குள் இந்தியர்கள் * மரப்பாவை போன்ற மனித சமுகத்தவர்களாய் க்ஷீணித்து விடுவார்க ளென்பது திண்ணம். அதன் பிறகு பரதகண்டமே பாழடைந்து இந்தியர்களாகிய நாம் இருந்தவிடமே தெரியாமற்போம். அதற்கப்புறமுள்ள அன்னியர்கள் இமயத்திற்கும், குமரிக்கும் இடையில் இந்தியர்களென ஓர் வகை ஜாதியார் இருந்தார்களாம் ! என எழுதவும் நேரிடும். ஓ ! நாகரீகமறிந்த ஸ்ரீமான் ஸ்ரீமதிகளே ! இதை நன்றாய் யோசியுங்கள் ! பால்ய விவாக மென்னும் பைசாசத்தை நம் பரத கண்டத்தைவிட்டு விலக்க, வழிதேடுங்கள் ! " ஒன்றே செய்யவும் வேண்டும், ஒன்றும் இன்றே செய்யவும் வேண்டும், இன்றும் இன்னே செய்யவும் வேண்டும் " எனக் கபிலர் கூறியபடி அவ்வொன்றையும் இன்றே செய்ய முயற்சி எடுங்கள்.

ஏனெனில் இருபத்திரண்டு வயதிற்குக் குறைந்த புருஷர்களுக்கும் பதினாறு வயதிற்குட்பட்ட பாலிகைகளுக்கும் தேகதிடமின்றியும் ஜனனேந்திரியங்களில் போதிய சக்தியில்லாமலும், சரீரம்மெத்த மிருதுவாயிருப்பதே போதிய காரணமாம். ஆகையினால் மேற்கண்டபடி புருஷர்கள் இருபத்திரண்டு வயதிற்குப் பின்னும், பெண்கள் பதினாறு வயதிற்குப் பின்னும் சம்போகத்திற் காரம்பிக்கவேண்டியது. மேற்கண்ட உதாரணங்களைக் கொண்டு புருஷர்கள் 22-வயதிற்கு மேற்பட்டே தைரியமும் வீரியமும் சரீரதார்ஷ்டிகமு மடைந்து மார்பகன்று புஜபல பராக்கிரம மடைகிறார்கள். இக்காலத்திலேயே உலக நடவடிக்கையையும், நன்மை தீமைகளையும் பகுத்தறியும் சக்தியுடையவராகிறார்கள். இதுபோலவே ஸ்திரீகளும் மேற்கண்ட 16-வயதிற்கு மேற்பட்டே பகுத்தறியும் புத்தியை வகித்துக் கருக்குழி முதலிய உட்கருவிகள் யாவும் வளர்ந்து வலிவடைந்து, கருத்தரித்தாலும் லக்ஷியம்

* நிகழும் கலியுக அந்தியத்தில் மனிதர்கள் தும்பைசசெடிக்கு ஏணிவைத்தேறி புஷ்பம் பறிப்பார்களென்று பலர் சொல்வதுண்டு. கலியுகமோ சென்றதுபோக இன்னும் 4,26,987 வருஷங்களிருக்கின்றது. ஆனால் இந்திய ஜனசமுகமோ இன்னும் சொற்பகாலங்களுக்குள்ளகவே மேற்கூறியபடி தும்பைசசெடிக்கு ஏணிவைத்து ஏறவேண்டியவர்களாய் விடுவார்களென்று எண்ணவேண்டியதாய் இருக்கிறது.



பண்ணாமற் பிரசவகாலத்தி லுண்டாகும், பிரசவ வேதனையையும் தாங்கக்கூடிய சக்தியுடையவ ராகிறார்கள். இக்காரணம் பற்றியே "பருவத்தே பயிர்செய்" என்று ஔவைப் பிராட்டியாரும் திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள். அப்படிக்கின்றிப் பருவமடையாத இளம்பிராயத்தில் சம்போகஞ் செய்வதானது விவசாய முறைப்படி பண்படுத்தாத நிலத்தில், முதிர்ச்சியில்லாத வித்துக்களை விதைக்கின் எப்படி வியர்த்தமாகுமோ அத்தன்மையாகவே முடியும். முற் கூறியபடி போதிய வயதிற்குப்பின் சம்போகத்திற் காரம்பித்தாலுங் கூட, இருவருக்கும் அல்லது இருவரில் ஒருவருக்குச் சரீரபலம், மனோபலம் முதலியவைகள் பேதப்பட்டாலும், போகத்திற்குப்பின் தலைவலி கண்டாலும், இருதயத்தில் திடுக்கம் அல்லது அதிர்ச்சி யுண்டானாலும், தேகம் மஞ்சள் வருணமானாலும், கண்ணில் வறக்ஷியுண்டானாலும் உடனே புணர்ச்சியை சிலநாள்வரையில் நிறுத்திவைக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

## சம்போகத்தை முற்றிலும் விலக்குவதினாலுண்டாகும் தீங்கு.

ஸர்வவல்லமையுள்ள கடவுளால் சிருஷ்டிக்கப்பட்டுள்ள எண்ணரிய ஜீவாத்மாக்களுக்கும், சுக்கில ஸ்ரோணிதமே பிரதானமென்றும் சம்போகத்தை முன்னிட்டே குடித்தனமுறை முதலிய விஷயங்களும் ஏற்படுத்தப்பட்டிருக்கிறதென்றும் முன்னதாகவே கூறியிருக்கிறோம். சம்போகமானது கனவானுக்கும் தனவானுக்கும் ஏழைகள் முதலாகிய எத்திறத்தார்க்கும் இன்றியமையாதது. சரீர சுபாவக் காமத்தூண்டுதலாகிய காலங்களில் சம்போகத்தில் இச்சை யிருந்தும், சம்போகிக்காமல் முற்றிலும் ஸம்போகத்தை விலக்கியிருப்பவர்களுக்கும், அதிக மோகத்தினால் தன்னிருப்பிடத்தை விட்டு நழுவிய இந்திரியத்தை உள்ளடக்குகிறவர்களுக்கும் இரத்தினமாகிய இந்திரியமே விஷமாக மாறிப் பல வித ரோகங்களை விளைவிக்குமென்பது திண்ணம்.

ஆரோக்கியமுள்ள ஆடவர்களின் தேகசுகம் நிலைபெற்றிருக்க சம்போகமே பிரதானமானது. சீதோஷ்ணம் தேகக்கூறு முதலியவை

களுக்கேற்றவிதமாய், அனுபவிக்கும் மிதமான சம்போகத்தினால் சரீரத்தினின்று கழிய வேண்டியனவாகிய சுக்கிலம் வெளிப்படும். அப்படி வெளிப்படுவதினால் தேகம் திடமாகி, ஜீவாக்கினி அதிகரித்துச் சரீரத்திற்கு இன்றியமையாத பல பிரயோஜனங்களுமுண்டாகும்.

ஒருவனுக்குச் சுக்கிலம் அதிகமாய்ச் சுரந்தும் சம்போகிக்காதிருந்தால், தலைநோய், தலைபாரம், மயக்கம், கிறுகிறுப்பு, அன்னத்துவேஷம், பசியின்மை, வயிற்றுவலி, வயிற்றுப்பிசம் முதலியவைகள் அவசியமாயுண்டாகும். இதைப்பற்றி **ஜாலிநுயூஸ்** என்பவர் தமது யூநாநி நூலில் கூறுகிறதாவது— தமது மாணாக்கர்களிற் சிலர் சம்போகத்தை நிசேஷமாய் நீக்கிவிட்டதினிமித்தமே தேக திடங்குன்றி மனக்கலக்கமுற்று சித்த ஸ்வாதீனமின்றிப் பயித்திய ரோகத்திற்குச் சமீபித்துவிட்டார்களென்றும், அதற்கு உடனே அவர்களுக்குச் சம்போகம் செய்வித்தபின் எல்லாத் துர்க்குணங்களும் நீங்கி சரீராரோக்கியமடைந்து முன்னிலும் பதின்மடங்கு புத்தி கூர்மையுடையவர்களானார்கள் என்பதேயாம். இன்னும் இதைப்பற்றி பிரெஞ்சு டாக்டராகிய, **பர்ட்லீன்** துரையவர்கள் அடியில்வருமாறு எழுதுகிறார். அதாவது, விவாகமுடையோர் விவாகமின்றி ஏகாங்கியாயிருப்பவர்களைக் காட்டிலும் நீண்டகாலம் ஜீவிக்கிறார்களென்றும், விவாகமில்லாதவர்கள் பலர் அடிக்கடி அபாயகரமான பல கொடிய வியாதிகளுக்குள்ளாகிறார்களென்றும், தற்கொலை முதலிய துர்க்கிரியைகளைச் செய்வதும் அவர்களுட் பலரே என்றும், மற்றவர்களுக்கிப்படிச் சம்பவிக்கிறதில்லையென்றும், அதவாசம்பவித்தாலும் குறைந்த அளவாகவே இருக்குமென்றும் எழுதுகிறார். அத்துடன், தன் ஜென்மதேசத்தின் மரண அறிக்கைக் கணக்கின் (Register of deaths) சராசரிக் கணக்கையும் எடுத்துக் காண்பிக்கிறார். அதாவது விவாகமானவர்களில் வருஷமொன்றிற்கு ஆயிரத்திற்கு 7-அல்லது 8-பெயர்கள் விகிதமாகவும், ஏகாங்கிகளில் 16-அல்லது 19-பெயர்கள் விகிதமாகவும் மரணமடைகிறார்கள் என்பதே.

இப்படியாக இதுவரையில் கூறிக்கொண்டு வந்ததின் கருத்தாவது யாதெனின் ஒருவன் சதா சம்போகத்திலேயே மூழ்கியிருக்க வேண்டுமென்பதல்ல, பின் யாதெனில் இரத்த விருத்தியுடையவர்க



ளின் தேகசுகம் நிலைபெற்றிருக்க மிதமான சம்போகமே இன்றியமையாதனவாம். இரத்த விருத்தியுடைய அனேகம் பெரியோர்கள் தங்கள் ஆயுள் முழுவதும் ஸம்போகத்தைத் தவிர்த்திருக்கவில்லையா என்றும், அவர்கள் சரீராரோக்கியத்துடனிருந்து பலர்களுக்கும் பயன்படுமாறு அனேகம் அரியபெரிய கிரந்தங்களை இயற்றவில்லையாவென்றும் சிலர் கேட்கக்கூடும். உண்மையில் அவை நிஜமே. இவ்வகையான பெரியோர்கள் எம்மதத்திலும் எத்தேசத்திலு மிருக்கிறார்கள். பெரும்பாலும் இத்தகையினர்களே, தத்துவம், புராணம், ஞான முதலிய சாஸ்திரங்களை இயற்றி மனித சமூகத்தை நல்வழிக்குள்ளாக்கி, சீர்ப்படுத்தியிருக்கிறார்கள். ஆனால் மேற்கூறியபடி இல்லறம் துறந்து துறவறம் பூணுவது யாவர்க்கும் எளிதன்று. மனதை ஒடுக்கி ஐம்புலனை அடக்கி, உண்மையான துறவியாய்க் காலத்தைக் கழிப்பது கடலைக் கையினால் நீந்திக் கரையேறுதல் போலாம்.

துறவறமென்பது இத்தகையதென்பதைக் கூட சிறிதும் தெரிந்து கொள்ளாத சிலர், துறவியாய் விடின் சாமான்யர்களுக்கு எட்டாத பல அரிய பெரிய காரியங்களைச் சாதிக்கலா மென்றெண்ணிச் சில அற்பச் சுவடிகளைப் படித்துவிட்டுச் சாமிகளெனப் பேர்பூண்டு, தங்கள் அருமை மனைவியை அலையவிட்டு, மோக்ஷ பதந்தேடுவதாகப் பொய்வேடந்தரித்துச் சிலநாள் திரிந்து, அதில் நிலைக்கமாட்டாதவர்களாய், குளிக்கப்போய் சேற்றைப் பூசிக்கொள்வாரைப்போல, இரகசியமாய்ப் பெண்போகத்தில் விழுந்து இருவழியிலும் பயனடையாத உபய பிரஷ்டர்களாய் விடுகிறார்கள். அப்படிக் கெடுவதிலும் இல்லறம் பூணுவது உத்தமம், இது யாவர்க்கும் சகஜமார்க்கம்.

ஆனால் சமுசார சகிதமாய் இருந்தவர்களுள்ளும் அனேகர் கல்வியறிவு, மூளைபலம், தேகபலம், நுண்ணியபுத்தி, விற்பனசக்தி, ஞாபகசக்தி, வைராக்கியம்,ஞான முதலியன உடையவர்களாகி, காவியங்கள், புராணங்கள்,ஞான நூல்கள் முதலியவைகளை இயற்றி மனிதசமூகத்தை நன்மார்க்கத்திற்குள்ளாக்கி இருக்கிறார்களென, பல சரித்திரங்கள் மூலமாய் நாம் தெரிந்து கொள்வதுமன்றித் திராவிடவேதம் இயற்றியவராகிய **திருவள்ளுவநாயனார்** அவர்களையே அதற்கு உவமையாகக்

கொள்ளலாம். இன்னும் சமுசார சகிதமாயுள்ள ஆங்கிலேயர்கள், அமெரிக்கர்கள், ஜப்பானியர்கள் முதலியவர்களினால், அநேக அரிய பெரிய காரியங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதுமன்றி, இற்றைக்கும் வியக்கத்தக்கதான பல இயந்திரங்கள் இயற்றப்பட்டும், அநேக நவீன விஷயங்கள் கண்டுபிடிக்கப்பட்டும் வருகின்றன. இத்தியாதி காரணங்களை நன்றாய் யோசிக்கும்போது, ஆயுள் முழுதும் விவாகமில்லாது ஏகாங்கியாயிருக்க வேண்டுமென்பதாய்த் தோற்றவில்லை. ஆகையால் லௌகிகர்களாகிய நாம் ஏற்ற காலங்களில் விவாகம் செய்வது அவசியமாம். விதிப்படியும், காலம், தேசம் முதலியவைகளுக்கிணங்க முறைப்படி போகிப்பதினால் பல நன்மைகள் உண்டாகுமென்பது ஆயுர்வேத பண்டிதர்களுடையவும், ஆங்கிலோ டாக்டர்மார்களுடையவும் அபிப்பிராயம்.

## அளவுக்குமிஞ்சின சம்போகத்தினால் விளையுங்கேடு.

சரீராரோக்கியமுடைய ஒவ்வொருவருக்கும் சம்போகம் இன்றியமையாததெனக் கூறியிருப்பினும் மிதமாகவே இருக்கவேண்டுமெனக் கூறியிருப்பதை ஒவ்வொருவரும் மறக்கலாகாது. அப்படிக்கின்றி அளவுக்குமிஞ்சி சம்போகம் செய்வார்களானால் தேகத்தினின்று இயற்கையாகக் கழியவேண்டிய இந்திரியத்தைக் காட்டிலும், அதிகமான இந்திரியம் ஸ்கலிதமாகும். இயற்கைக்கதிகமான இந்திரியம் வெளிப்படவே, இந்திரியத்திற் காதாரமான இரத்தம் குறையும். இரத்தம் குறையவே, இரத்தத்தினின்றுற்பத்தியாகும் ஆன்மாவும், ஜீவாக்கினியும் குறையும். ஜீவாக்கினி குறையவே சரீரவுறுப்புகளின் சுகஸ்திதி கெட்டு, அவற்றின் சுபாவத்தொழில் மட்டுபட்டு, தேகம் கட்டுவிட்டு, கட்டுமுட்டாகிய பலம் மட்டுப்பட்டு யாதொரு அட்டியில்லாமல் மட்டில்லாத பல துஷ்டரோகங்களுக்குட்பட்டு கஷ்டமடைய நேரிடுமென்பது ஸ்பஷ்டமான விஷயமாம்.

உலகத்தின் மற்றெல்லா இன்பங்களைப்பார்க்கிலும் சம்போகத்தில் அதிகமான இன்பமிருப்பதால் ஆத்மாவின் தத்துவமும் சம்போகத்தில் அதிகமாய் வெளிப்படும். இக்காரணத்தினாற்றான் சம்போகத்திற்குப் பின்பு பலஹீனமும் சோர்வுமுண்டாகிறது. ஆகையால் அள-



வுக்கு மிஞ்சின சம்போகத்தினால் ஆத்மாவின் தத்துவம் அதிகமாய் வெளிப்படும். இதனால் சரீரம் வற்றி, சக்தி குறைந்து, தேகந்தளர்ந்து முடிவில் அகாலமரணத்திற்கும் ஆளாக நேரிடும். இன்னும் அளவுக்குமிஞ்சின சம்போகத்தினால் உண்டாகும் ரோகங்களாவன:—பாண்டு, காமாலை, நித்திரையின்மை, பசியின்மை, யஞ்சேந்திரிய உணர்ச்சிக்குறைவு, நீரிழிவு, பிரமேகம், (Gonarrhœa) கல்லடைப்பு, சதையடைப்பு, நடுக்குவாதம், முகவாதம், பக்ஷவாதம், இருதயரோகம், க்ஷயரோகம், காசரோகம், சருமத்திமிர், (Anæsthesia or Numbness) சித்தப்பிரமை முதலிய நோய்களே பெரும்பான்மையுமுண்டாகும். இன்னும் அளவுக்குமிஞ்சிய சம்போகம் செய்பவர்களின் சுக்கிலத்தின் தத்துவம் குறைந்து, ஜலமாய் நீர்த்துப்போய் தாதுநஷ்டமும், பலக்குறைவுமுண்டாகி கருத்தரிக்கவேமாட்டாது. ஒருவேளை யுண்டானபோதிலும் கருவழிவுண்டாகும். அப்படிக்கின்றிச் சிசு ஜனித்தாலுங்கூட எலிக்குஞ்சுகளைப்போலவும், தேரைகளைப்போலவும், தேவாங்குகளைப்போலவும் இருக்கும். ஆகையினால் ஒவ்வொருவரும், காலம், தேசம், தேகம் முதலியவைகளுக்கிணங்கத் தத்தம் நாயகிகளோடு போகிக்கவேண்டியது. அப்படிக்கின்றிச் சம்போகமே சாயுச்சியமென்றும், கடிதடமே கைலாசமென்றும், அல்குலே அமுர்தமென்றும் நினைத்துச் சதாகாலமும் சம்போகம் செய்யும் சதிபுருஷர்களின் சரித்திரத்தைக் குறித்து எழுதுவதற்கு இப்புத்தகம் இடம்பெறாதென்றெண்ணி இம்மட்டோடு நிறுத்தலானோம். இன்னும் இதைப்பற்றி, வேதநாயகம் பிள்ளையவர்கள் சொல்லியிருக்கிறதாவது:

மறுத்திசை மாதர்கள் சுகம் அரைக்ஷணமே
மறு நிமிஷத்தி லுண்டாம் துன்பரணமே
பிடித்திடில் மலஜலம் எலும்புதோல் ரணமே
பிராணன் போனால் நரி நாய் பிடுங்குமே.

## விந்துவை அடக்குவதினாலுண்டாகும் அபாயங்கள்.

சம்போககாலங்களிலும் மற்ற காலங்களிலும் தன்னிருப்பிடத்தை விட்டுவந்து இறங்கும்போது அதனை அடக்குவதற்காக நாயகியை விட்-

டெப்பிரிந்து இந்திரியத்தை இறங்கவிடாமல் மேலுக்கேற்றுகிற பழக்கம் சிலர்களுக்குண்டு. இது கொடிதினும் கொடிது. ஏனெனில் வெளிப் பட்ட விந்துவைத் தடுப்பதினுல் அதன் உஷ்ணம், இந்திரிய கமலம், பீஜம் முதலிய நுண்ணிய வுறுப்புகளிற்ருக்கும். அதனுல், விந்துக்களஞ் சியத்தில் வீக்கமும், நீர்ப்பையில் ரணமும் கண்டு நீரடைப்பு, சதை யடைப்பு, கல்லடைப்பு, பிரமேக முதலிய மகா கொடிய ரோகங்களுண் டாகுமாகையால் இவ்வித பழக்க முடையவர்கள் இதனை இன்றேடே நீக்கி இனிச் சுகமடைவார்களாக. இன்னும் இவ்வித கொடிய பழக்கத் தைப்பற்றி தேரையர் சொல்லுகிறதாவது:

வெண்பா

விந்துவை மறிக்குங்கால் வீக்கம் பிரமேக
முந்துவளி கல்லடைப்பு மூடுசூரஞ்—சந்து கைகா
லாசன நாபக்கமிடுப் பவ்வுழி நோய் மார்புவலி
விசனனீர்க் கட்டிவை யாமே.

## சம்போகத்திற்கிடையில் வேண்டிய காலத்தின் அளவு.

ஆயுர்வேத சாஸ்திரக்ஞர்களுள் சிலர் சம்போகத்திற்கிடையில் ஒரு வருஷம் செல்லவேண்டு மென்றும், சிலர் ஆறுமாதங்கள் செல்ல வேண்டும், சிலர் மூன்றுமாதங்கள் செல்லவேண்டுமென்றும், சிலர் ஒருமாதம் செல்லவேண்டும், சிலர் இரண்டுவாரஞ் செல்ல வேண்டும், மற்ருெருவகுப்பார் ஒருவாரஞ் செல்ல வேண்டுமென் றும், வேறு ஒரு கூட்டத்தார் மூன்று தினம் செல்லவேண்டுமென்றும், சிலர் வயதுக்குத்தக்கபடி அனுபவிக்கவேண்டுமென்றும், இப்படியாக ஒருவருக்கொருவர் மாறுதலாகக் கூறியிருக்கின்ருர்கள். தேரையர் நோயாணுகாவிதியில், "பெண்கடமைத்திங்களுக்கோர் காலன்றி மரு வோம்" என்று கூறியிருக்கிருர்கள். பத்துமாதத்திற் கொருமுறை சம்போகஞ் செய்யும் சதிபுருஷர்கள் நூறுவயதிற்கு மேற்பட்டு இருப் பார்களென்று ஓர் ஆயுர்வேத சாஸ்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

இவ்விதமாக ஆயுர்வேத ஸாஸ்திரக்ஞர்களின் கருத்து விகற்ப பட்டிருந்த போதிலும், சில பலாட்டிய சரீரப்பிரகிருதிகள் ஓர் இர



வில் ஐந்தாறு ஆவர்த்தி சம்போகம் செய்தும், அவர்களுக்குச் சிறி தும் தூர்ப்பலமும் சோர்வு முண்டாகாதிருக்கின்றன. மற்றுஞ் சிலர் களேவெனில் சம்போகஞ் செய்து ஆறேழுமாதங்கள் ஆனுலுங்கூட சம்போகமென்ருல் பயப்படுகிருர்கள். ஆகையால் இத்தியாதி விஷயங் களைக் குறித்து ஆழ்ந்து ஆலோசிக்கும்போது சம்போகத்திற்கிடை யில் வேண்டிய கால அளவானது அவரவர்களின் தேகதிடத்திற்குத் தக்கபடி நிச்சயிக்கவேண்டியதாய் இருக்கிறது.

ஆயுர்வேத பண்டிதர்களுட் சிலர் அறியாமையினுல் தேகத்தில் மேகத்தைப்போன்ற பல ரோகங்கள் விளைவதற்குச் சம்போகமே முக் கிய காரணமென்று சாதிக்கிருர்கள். இப்படிச் சாதிப்பதானது சாஸ் திரத்தின் கருத்திற்கும் யுக்திக்கும் சற்றும் பொருந்தவில்லை. இதைப் பற்றி ஓர் சிறந்த யுநாநி வைத்தியரும் மிகுந்த அனுபோகஸ்தருமான அ. இ. சுலைமான் பாக்ஷா என்பவர் கூறுகிருர்.—நூறு வயதிற்குச் சமீ பித்த சில வயோதிகர்களைப் பரீக்ஷித்திருக்கிறேன். அவ்வயோதிகர்கள் தங்கள் வாழ்நாட்களில் ஒரு நாளேனும் சம்போகமின்றி இருந்தவர்க ளல்லர். அவர்கள் அப்படியிருந்தும் அவர்களுக்குக் கொஞ்சமும், மெய், வாய், கண், மூக்கு, செவி முதலிய பஞ்சேந்திரியங்களிலும், மற்றும் யாதொரு வுறுப்புகளிலும் சற்றும் குறைவுண்டாகவில்லை, மேலும் அவர்களுக்கிருந்த, தேகபலம், மனேபலம், வீரிய பலம், ஞானபலம் முதலியவைகள் நல்ல வாலிபர்களிடத்தும் இருக்கவில்லை. இன்னும் சம்போகத்தை முற்றும் விலக்கியிருந்த மற்ருெரு வகுப் பாரையும் பரீக்ஷித்திருக்கிறேன். அவர்களில் அநேகர் மகா கொடிய ரோகங்களுக்குட்பட்டவர்களாகவே இருந்தார்கள். அநேகர் சம்போ கத்தை அடியோடு விலக்கின காரணத்தினுல் அவர்களின் விந்தே விஷமாக மாறி பல வியாதிகளுக்குள்ளாகி பரமபதமடைந்தார்கள் என் பதே. இதனுல் ரோகத்திற்குக் காரணம் சம்போகமல்ல வென்பதாகத் தெரிந்துகொண்டோமாயினும், ஆனுல் ஸம்போகத்தினுலேயே அநேகர் பல ஆபாச வியாதிகளுக்குள்ளாகி அவதிப்படுவதை நாம் பிரத்தி யக்ஷமாகப் பார்க்கிருேமே என்று சிலர் கேட்கக்கூடும். அது வாஸ்த வமே, அதற்குக் காரணமென்னவெனில் சம்போகத்தை அனுபவிக்

கும். காலபேதமும் தேகவமைப்பின் வேறுபாடுகளுமேயாம். ஆனால் நுரையீரல் துர்ப்பலப்பட்டிருப்பவர்கள், கபத்துடன் இரத்தம் விழப் பெற்றவர்கள், மந்தாக்கினி, வயிற்றுவலி, பார்வைக் குறைவு, காக்கை வலி, பைத்தியம், மூர்ச்சை, இந்திரியஸ்கலிதம், லேபனக் குறைவு முதலிய ரோகங்களுக்குள்ளானவர்கள், மாணாக்கர்கள், வக்கீல்கள், போதனாசிரியர்கள் இன்னும் மனோ முயற்சி யதிகமுடையவர்களுக்கும் சம்போகத்திற் கிடையில் வேண்டிய கால அளவானது அதிகம் வேண்டும். அடுத்தடுத்துச் செய்யும் சம்போகமானது பொதுவாக எத்திறத்தார்க்கும் பல இடையூறு விளைவிப்பதாயிருப்பினும் முக்கியமாய் மேற்கண்ட ரோகங்களுடையவர்களுக்கே பல தீங்கை விளைவிக்குமென்பது ஒருவரும் மறுக்கக்கூடாத விஷயமாகும்.

### சம்போகம் ஒருபோதும் கூடாதவர்கள்.

பிரமேகம், நீரிழிவு, சொட்டுமூத்திரம், மூளை, இருதயம், ஈரல், இரைப்பை, குண்டிக்காய் முதலிய வுறுப்புகளிலுள்ள நாட்பட்ட ரோகிகளுக்கும், குன்மம், புச்சாவர்த்தவாதம், சூலை முதலிய ரோகங்களுள்ளவர்களுக்கும், எந்த வயதிலும், எவ்வித காரணத்தாலாகிலும் சரீரசக்தி குறைந்தவர்களுக்கும், விருத்தர்களுக்கும் சம்போகம் ஒருபோதும் கூடாது. மேற்கண்ட ரோகமுடையவர்கள் சம்போகம் செய்வார்களானால், உள்ள ரோகங்கள் உபரியாகி உபத்திரவிப்பதுடன் இன்னும் பல ரோகங்கள் உற்பத்தியாவதற்கும் ஏதுவுண்டாகும்.

### சம்போகஞ் செய்யத்தகாத காலங்கள்.

அஜீரணமாயிருக்கும்போதும், போஜனம் செய்தவுடனும், (36-வது பக்கம் பார்க்கவும்) நித்திராபங்கம் அடைந்திருக்கும்போதும், பேதியாகும் போதும், மலஜலங்கள் கட்டியிருக்கும்போதும், மனோவியாகூலமாயிருக்கும்போதும், மதுபானங்கள் அருந்தியிருக்கும்போதும், பசி அல்லது தாகமாயிருக்கும்போதும், சரீரம் அதிக சீதளம் அல்லது உஷ்ணமாயிருக்கும்போதும், க்ஷவரம்செய்து கொண்டிருக்கும்போதும், தைலஸ்நானம் செய்திருக்கும்போதும், நித்திரையிலிருந்து விழித்தவுடனேயும், கடுமையான சரீரப் பிரயாசைக்குப் பிறகும், அதிக மழையாயிருக்கும்போதும், பகற்காலங்களிலும், விஷபேதி, வைசூரி, முதலிய



விஷுசிரோகங்கள் வியாபித்திருக்கும்போதும், தலைநோய், ஜுரம், சூலைவாயு, வித்திருதிக்கட்டி, மூட்டுவீக்கம் முதலிய ரோகங்கள் உண்டாயிருக்கும்போதும், அமாவாசை, பௌர்ணமி முதலிய திதிகளிலும், கிரகண காலங்களிலும், தேவாலயங்களிலும், ஜலக்கரைகளிலும், அன்னியர்வீட்டிலும், யாத்திரை காலங்களிலும் சம்போகம் செய்யலாகாது. மேற்கண்ட சமயங்களில் சம்போகம் செய்வதால் சரீர சுபாவம் விகற்பமடைந்து, தேகத்தின் தத்துவம் குறைந்து நவிலமுடியாத நரம்புத் தளர்ச்சியையும், செப்பமுடியாத சிரமத்தையும் உண்டுபண்ணுவதுடன் மட்டில்லாத பல துஷ்டரோகங்கள் உண்டாகு மென்பது திண்ணம். இன்னும் இவ்வித சந்தர்ப்பங்களில் சம்போகஞ் செய்வதால் கரு நிலைக்காது அகாலப்பிரசவமுண்டாகும். அப்படிக்கின்றிச் சுகப் பிரசவமானாலும், அப்பிள்ளை பலவித பிணிக்கும் பங்காகும். பகுத்தறிவில்லாத விலங்கினங்கள்கூட, பெண் விலங்குகள் கருப்பமாயிருப்பதை மோப்பத்தால் அறிந்துகொண்டு அதன்பிறகு அத்துடன் சம்போகம் செய்வதில்லை. இவ்விலங்கினங்களைக்காட்டிலும் மனிதர்கள் இவ்விஷயத்தில் இழிவானவர்களேயாவர்.

### சம்போகம் செய்யத்தகாத ஸ்திரீகள்.

சூதகத்தினாலும், பிரஸவத்தினாலும், சூதகம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கும்போது சம்போகிப்பதினால், அக்கெட்ட உதிரத்தின் உஷ்ணம், இருதயம், மூளை முதலிய வுறுப்புகளில் தாக்கும். அதனால் நேத்திரரோகம், கபாலநோய், மதிமயக்கம், புத்திக்குறைவு, பைத்தியம், மூர்ச்சை முதலிய கொடிய ரோகங்களிற் சிலவேனும் பலவேனும் உண்டாகுமென்பது திண்ணம். இன்னும் எவ்வகை சிகிச்சையாலும் தீராத மேகரோகங்களும் உண்டாவதுண்டு. உதாரணமாக வீட்டு விலக்கமான ஸ்திரீகளின் அசுத்த உதிரமானது பசுமையான செடி கொடிகள், புற்பூண்டுகள், மரம் முதலியவைகளின் மேற்பட்டால் அவை உலர்ந்துபோம். இன்னும் சில செடிகொடிகள் பிரஷ்டையான ஸ்திரீகளின் காற்றுவாடை பட்டாலுங்கூட பட்டுப்போகிறது. வீட்டு விலக்கமான ஸ்திரீகளின் காற்றுவாடையினாலேயே பசுமையான செடி கொடிகள் பட்டுப்போகிற தென்றால்,

அச்சமயத்தில் அவர்களுடன் சம்போகஞ் செய்யும் புருஷர்களுக் குண்டாகும் ரோகத்திற்கு அளவுதானுண்டோ! கெர்ப்ப ஸ்திரீகளோடுசம்போகஞ் செய்யலாகாது. அப்படிச் செய்வதினால் கருவழிவுண்டாகும். அப்படிக்கின்றிக் குழந்தை பிறந்தாலும் பலவித பிணிக்கு இடமாகும்.

விலைமாதர், விபசாரிகள், கபடஸ்திரீகள் முதலியவர்களுடன் சம்போகம் ஒருபோதும் கூடாது. ஏனெனில் இவர்கள் தங்கள் ஆசைநாயகர்களைத் தவிர, மற்ற புருஷர்களிடத்தில் மனமொத்துப் புணரமாட்டார்கள். வஞ்சனை, சூது முதலியவைகளினால் காமத்தீயை மூட்டி காசைப்பறிப்பதே இவர்களின் கருத்தாகையால் இவர்களுடன் போகிப்பதினால் காமாக்கினியானது தணியும் விதமாய்த் தணியாமல், சரீரத்திலுள்ள அதிநுட்பமான உள்ளுறுப்புகளிற் றாக்கிப் பலவித ரோகங்களுண்டாகு மென்பது திண்ணம். விதவைகள், விவாகமாகாத பெண்கள் முதலானவர்களுடன் சம்போகஞ் செய்வதினால் அந்த ஸ்திரீகளின் ஜனனேந்திரியத்தில் நீண்ட நாளாகக் குடிகொண்டிருந்த உஷ்ணமானது ஏககாலத்தில் வெளிப்படுவதினால் சில உஷ்ண வியாதிகளை உண்டாக்குவதுந் தவிர, இவ்வித கன்னிகைகளுடன் சம்போகஞ் செய்வதானது கொடிதினுங்கொடிது. ஏனெனில் இவர்களுடன் சோரப்புணர்ச்சி செய்வதினால் கர்ப்பம் தரித்துவிட்டால் மானபங்கத்திற் காளாகவேண்டுமே யென்கிற வெண்ணத்தினாலும், தாம் செய்யும் சோரசம்போகத்தை யாராவது பார்த்துவிடுவார்களோ வென்கிற பயத்தினாலும், சம்போக காலத்தில் புருஷனுக்கு இந்திரியம் ஸ்கலிதமாகும்போது, ஆடவரைவிட்டு அகன்று விடுவார்கள். அப்போது புருஷர்களுக்கு வெளிப்பட்ட விந்துவானது கிரமமாய் வெளிப்படாமல் நீர்த்துவாரத்திற்றங்கி, உஷ்ணமீறி, கீழ்மேகம், நீர்க்கடுப்பு, நீரெரிச்சல், நீரடைப்பு, அரையாப்பு, அண்டவாதம் முதலிய ரோகங்களுண்டாகும்.

அன்னிய ஸ்திரீகளுடன் சம்போகஞ் செய்யலாகாது. அப்படிச் செய்தால் சம்போக சமயத்தில் யாராவது வந்துவிடுவார்களோ, யாராவது பார்த்துவிடுவார்களோ, என்ற பயமே குடிகொண்டிருப்பதினாலும், அவசரத்தினாலும், அச்சத்தினாலும் மூளை பலஹீனப்பட்டு பல



வித ரோகங்களுண்டாகுமென்பது திண்ணம். இதுபோலவே சமபோக காலங்களில் எந்தக் காரணத்தினாலாவது, பயம், துக்கம், சந்தேகம் முதலியன வுண்டாயிருக்கிற பாவையர்களோடும் பரபுருஷர்மேல், பாசம்வைத்துத் தன்னுடன் மனமொத்துப் புணராத பூவையரோடும் புணரலாகாது. வயதில் முதிர்ந்த ஸ்திரீகளுடனும், கிழவிகளுடனும் சம்போகஞ் செய்யலாகாது, அப்படிக்குச் செய்தால் காந்தம் இரும்பை இழுப்பதுபோலப் புருஷனின் இந்திரிய முழுதையும் இழுத்துக்கொள்ளும் சக்தி இவர்களுக்குண்டு. இன்னும் சில ஸ்திரீகள், புருஷனுக்கு இந்திரிய ஸ்கலிதமாகுஞ் சமயத்தில், தங்கள் கரத்தால் கட்டியணைத்துப் பிடித்துக்கொள்ளுவார்கள், அப்போது எப்படிப்பட்ட பலிஷ்டனும் யானையைக் கண்ட பூனைபோலாவான். ஆகையால் இப்படிப்பட்ட ஸ்திரீகளுடன் சம்போகஞ் செய்வதினால் இவ்வித வியாதி யுண்டாகுமென்று நாம் விவரிக்கவேண்டியதில்லை, அனுபோகஸ்தர்கள் தாங்களாகவே அதனை அறிந்து அகற்றுவார்களாகவும்.

இன்னும் குருபத்தினி, சிஷ்யி, மித்திரி புத்திரி, சத்துருணி, அசுத்தமுள்ளவள், ரோகமுள்ளவள் முதலிய ஸ்திரீகளுடனும் சம்போகஞ் செய்யலாகாது. இன்னும் சதாகாலமும் சம்போகம் செய்வதிலேயே பிரியம், எப்பொழுதும் உண்டி உண்பதிலேயே எண்ணம், எந்தப் புருஷர்களிடத்திலும் சங்கோஜமின்றிச் சம்பாஷித்தல், குறுகிய நெற்றி, குறுகிய பிடரி, கொரேமான பார்வை, கடினமாகிய கூந்தல், சரீரமுழுதும் ரோமம் நிறைந்திருத்தல், அளவுக்கு மிஞ்சி தேகம் ஸ்தூலித்திருத்தல், இத்தகைய லக்ஷணங்களுடைய ஸ்திரீகளுடன் ஒருபோதும் சம்போகஞ் செய்யலாகாது. இன்னும் இதைப்பற்றித் தேரையர் சொல்லியிருக்கிறதாவது.

## கலித்துறை.

துக்கம் பயமங்க கேசந்திரிமலந் துஞ்சல்வலி
வெட்கம் பசிகருப் பந்தாகமூப்பு வெறுப்பசுபஞ்
சுட்க மலட்சியங் கோபமரூபமெய்த் தூர்க்கந்தங்கோண்
மிக்கதிதால முடைமாதர் போகம் விலக்கு வித்தே.

## ஆண் பெண் சிசுவுற்பத்தி விபரம்.

ஆண் பெண் சிசுவுற்பத்தி விபரங்களைப்பற்றி நம் முன்னோர்கள்,—எவ்வளவோ அருமையான அநேக அரிய விஷயங்களை அறிவித்திருந்தாலுங்கூட தற்காலத்து நவீன நாகரீகமுள்ள சில மேதாவிகள் அவைகளை அலக்ஷியமாய் எண்ணுகிறார்கள். ஆனால் அன்னிய நாட்டிலுள்ள ஓர் ஐரோப்பிய அமெரிக்க டாக்டர்கள் சொல்வார்களாயின் அதனை முழுமனதுடன் ஏற்று ஒப்புக்கொள்ளுவார்கள். இவ்விதமாக நம் பூர்வீக சாஸ்திரங்களிடத்தில் தற்கால நாகரிகமுடைய நம்மவர்களுக்கு நம்பிக்கையில்லாமல் போனதற்குக் காரணம் நமது பூர்வீக ஆயுர்வேத சாஸ்திரத்தின் அறியாமையல்ல, அச்சாஸ்திரத்தை விருத்திக்கு கொண்டுவரவும் ஒழுங்காய்க் கற்கவும், கற்பித்துக் கொடுக்கவும் வழிகளில்லாமற் போனதே முக்கிய காரணமாகும். உதாரணமாக நம்முன்னோர்கள் முற்காலத்தில் ஆகாயத்தில் பிரயாணம் செய்தார்களென்றும், ஆகாயத்தில் யுத்தங்கள்கூடச் செய்தார்களென்றும், ஸ்ரீராமசந்திர மூர்த்தியானவர் இலங்கையில் ராவணஸம்ஹாரம் செய்த பிறகு புஷ்பவிமானத்தின் மீதேறி அயோத்திக்குச் சென்றாரென்றும், நம்முன்னோர்கள் பரகாயப் பிரவேசம் (The art of transmigrating from one body into another being alive) முதலிய கலைக்கியானங்களையும் கற்றிருந்தார்களென்றும் நம் பூர்வீக சாஸ்திரங்களில் எழுதியிருப்பதைத் தற்கால நவீன நாகரீகமுள்ளவர்கள் அவைகளை நம்பாது, ஆகாயத்தில் பிரயாணமாவது செய்யவாவது, பரகாயமாவது பிரவேசமாவது என்று பரிகாசம் செய்து வந்தார்கள், ஆனால் தற்காலம் மேனாட்டார்கள், ஆகாயவிமானங்களைக் (Aeroplane) கண்டுபிடித்து அவற்றின் மூலமாய்த் தபாற் கடிதங்களைக் கொண்டுபோகவும், பிரயாணிகள் ஓர் ஊரிலிருந்து மற்றொரு ஊருக்குப் போகவும், யுத்த வீரர்கள் அதன்மேலேறி யுத்தங்கள் நடத்துவதற்கும் உபயோகித்த பிறகே நம்மவர்களுக்கு நம்பூர்வீக சாஸ்திரங்களிடத்தில் சிறிது நம்பிக்கை யுண்டாயிற்று. இன்னும் இது போலவே தாது நஷ்டமடைந்தவர்களுக்குப் பூமிக்குள்ளிருக்கும்



பூநாகத்தை (நாகப்பூச்சி) பஸ்பம் செய்து கொடுக்கலாமென்று நமது
இந்துவைத்திய சாஸ்திரத்தில் சொல்லியிருப்பதை நம் நாட்டி
லுள்ள சில போலிவைத்தியர்கள் நம்பாமலே இருந்தார்கள். அதன்
பிறகு நாகப்பூச்சியிலும் நண்டிலும், பாஸ்பரஸ் (Phosphorus)
என்னும் ஓர் வகை பாஷாணச்சத்து இருப்பதால் அவைகளைப்
பக்குவம் செய்து, ரக்தக்ஷீணம், நரம்புத்தளர்ச்சி, தாது நஷ்டம்
முதலிய ரோகங்களுக்குக் கொடுக்க உதவுமென்று அன்னியர்களாகிய
ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் அறிவித்த பிறகே நம்மவர்
களுக்கு அதில் நம்பிக்கையுண்டாயிற்று. இது மாத்திரமா ! பிரான்ஸ்
தேசத்திற் பிரசுரமாகும் ஒரு வைத்தியப் பத்திரிகை.—ரோகி
களுக்கு ஆகாரத்தில் உப்பைக் குறைத்துச் சிகிச்சை செய்வதால்
சீக்கிரம் அனுகூலம் கிடைக்குமென்று சில வைத்தியர்கள் அபிப்பிரா
யப்படுவதாகச் சொல்லுகின்றது 'இந்த அபிப்பிராயத்தை ஜெர்மானிய
வைத்தியர்களும் அங்கீகரிக்கத் தலைப்பட்டிருக்கிறார்கள். கரப்பான்
(Tinea) வந்து அவஸ்தைப்படும் குழந்தைகளுக்கு உப்பை நாலிலொரு
பாகமாகக் குறைத்து ஆகாரங்கொடுத்து வந்தால் ஒரு மாதத்திற்குள்
குணமாகிவிடும் என்று கண்டுகொண்டிருக்கிறார்கள். கரப்பான், சர்ம
ரோகம், வாதரோகம் முதலிய வியாதிகளுக்கு நம் ஆயுர்வேத வைத்திய
முறைப்படி உப்பில்லாத பத்தியம் வைப்பது பண்டைநாள் பழக்க
மென்பது பலரும் அறிந்த விஷயமாகும். இப்பொழுதுங் கூட இம்
முறையை இந்தியாவில் கையாளப்பட்டு வருவது ஒவ்வொருவரும்
அறிந்த விஷயமேயாகும். தற்காலத்தில் மேனாட்டுவைத்தியர்கள் நவீன
மாகக் கண்டுபிடித்ததாகச் சொல்லும் ஒவ்வொரு சங்கதியும் நம்மிந்திய
நாட்டில் பழமையான விஷயமாகவே இருந்துவருகிறது. அறிவின்மை
யால் நம்மிந்திய ஆயுர்வேதத்தைத் தூஷித்துப் பரிகசிக்கும் அறிவிலி
களுக்கு இதைவிட வேறு அத்தாக்ஷியும் வேண்டுமோ ! இன்னும்
ஜீவசக்தி, (Mesmerism) சாமுத்திரிகா சாஸ்திரம், (Physiog-
nomy) யோகசாஸ்திரம், (Yoga) முதலிய சாஸ்திரங்களைப் பற்றி
எவ்வளவோ சுலபமான மார்க்கங்களையும் பல அருமையான விஷயங்
களையும் நம் முன்னோர்கள் நமக்காக எழுதிவைத்திருந்தும் நம்மவர்கள்

அவற்றை எட்டுச் சுரைக்காயாக எண்ணியிருந்தார்கள். இப்பொழுது அமெரிக்கர்களுட் பெரும்பாலார் இவ்வகை சாஸ்திரங்களை அப்பியாசித்துச் சித்தியடைந்த பிறகே இவ்விஷயங்களில் நம்மவர்களுக்கு நம்பிக்கையுண்டாயிற்று. மேற்கண்ட விஷயங்களைப்பற்றி இவ்வளவு விரிவாக எழுதினதற்குக் காரணம், தற்கால நவீன நாகரீகமுள்ள (New fashion) நந்துரைமார்கள் நம்முன்னோர்களையும், அவர்களால் இயற்றப்பட்டுள்ள சாஸ்திரங்களையும் இகழாது அவற்றின் நுட்பங்களை அறிந்து அதன்படி ஒழுகவேண்டுமென்பதேயன்றி, வேறல்ல! இன்னும் இவைபோன்ற உதாரணங்கள் பலவிருப்பினும் விரிவிஞ்சி இதனை இவ்வளவோடு நிறுத்தலானோம்.

ஆண் பெண் சிசுவுற்பத்தியைப்பற்றி நம்முன்னோர்கள் சொல்லியிருக்கிறதாவது, ஸ்திரீகள் மாதவிடாயான மூன்றுநாள் முதல் பதின்மூன்றுநாள் வரையில் கருப்பற்றுங் காலமென்றும், அக்காலங்களில் ஒற்றித்த (ஒத்தப்படையான)தினங்களில் ஸ்திரீகளோடு கூடிக் கருப்பற்றினால் பெண்ணாகுமென்றும், இரட்டித்த (இரட்டைப்படை) தினங்களில் கூடிக்கருப்பற்றுமானால் ஆணாகுமென்றும், இன்னும் ஆடவருக்கு * சூரியகலைநடக்கும்போது சுக்கில ஸ்கலிதமாகிக் கருப்பற்றுமானால் ஆணாகுமென்றும், † சந்திரகலை நடக்கும்போது சுக்கிலஸ்கலிதமாகிக் கருப்பற்றுமானால் பெண்ணாகுமென்றும், ‡ சுழிமுனை நடக்கும்போது சுக்கில ஸ்கலிதமாகிக் கருப்பற்றுமானால் அலியாகுமென்றும், ஆடவருக்கு வலது நாசியிலும், ஸ்திரீக்கு இடது நாசியிலும் சுவாசம் பரியும்போது சுக்கில சுரோணிதங்கள் ஸ்கலிதமாகிக் கருப்பற்றுமானால் ஆணாகுமென்றும், ஆடவருக்கு இடதுநாசியிலும் ஸ்திரீக்கு வலது நாசியிலும் சுவாசம் பரியும்போது சுக்கில ஸ்ரோணிதங்கள் ஸ்கலிதமாகிக் கருப்பற்றுமானால் பெண்ணாகுமென்றும், சதிபுருஷர்களிருவருக்கும் இடதுநாசியிற் சுவாசம் பரியும்போது கருப்பற்றுமானால் சிகண்டியாகுமென்றும், (சிகண்டி-அலி) புருஷன் சுவாசத்தை

* வலது நாசியின் வழியாய்ச் சுவாசம் நடக்குதல். † இடது நாசியின் வழியாய்ச் சுவாசம் நடக்குதல், ‡ நாசித்துவாரங்கள் இரண்டிலும் சுவாசம் சமமாய் நடக்குதல்.



உள்ளே இழுக்கும்போது சுக்கில ஸ்கலிதமாகிக் கருப்பற்றுமானால் அக்குழந்தை நீடிய ஆயுளுடையதாமென்றும், சுவாசத்தை வெளியே விடும்போது சுக்கில ஸ்கலிதமானால் கருத்தரிக்கமாட்டாதென்றும், சுவாசமானது ஐந்து நாழிகைக் கொருமுறை வலது நாசியிலும் இடதுநாசியிலுமாக மாறிமாறி ஓடுந்தன்மையானதால் சம்போக காலத்தில் சுவாசம் நடக்கிற நாசித்துவாரத்திற்குச் சுவாசம் வந்து எத்தனை நாழிகை யாகிறதென்பதை யறிந்து, மனிதர்களுக்கு இயற்கையாய் ஏற்பட்டுள்ள நூறு வயதை மேற்படி ஐந்துநாழிகைக்குப் பகுந்து (பங்கிட்டு) சென்ற காலத்திற்குரியதை நீக்கி, நின்ற நாழிகைக்குரியது எத்தனை வருஷம் மாதம் நாள் நாழிகையாகிறதோ, அதுவே அப்பொழுது தரிக்கும் பிண்டத்திற்கும் வயதாகுமென்றும், இன்னும் இதைப்பற்றி ஓர் ஆயுர்வேத புத்தகத்தில் சொல்லியிருப்பதாவது சுரோணிதத்தைக் காட்டிலும் சுக்கிலத்தின் அளவு அதிகமானாலும் அல்லது சுக்கிலத்தின் சக்தியானது சுரோணிதத்தின் சக்தியைவிட அதிகமாயிருந்தாலும் ஆண்குழந்தையே பிறக்குமென்றும், அப்படிக்குப் பிறக்கும் புருஷப்பிரஜையானது, தேகதிடம், மனோதைர்யம், கல்வி, ஞானம் முதலியன வுடையதாயிருக்குமென்றும், சுக்கிலமானது அளவில் அதிகரித்திருந்து, அதன் சக்தி குறைந்து சுரோணிதமானது அளவிற் குறைவாயிருந்தபோதிலும் அதன் சக்தி அதிகரித்திருக்குமானால் ஜனிக்கும் குழந்தை ஆணானாலுங் கூட * பெண்ணிற்குடைய தன்மைகளே பொருந்தியிருக்கு மென்றும், இதுபோலவே சுக்கிலத்தைக் காட்டிலும் சுரோணிதமானது அளவிலும் சக்தியிலும் அதிகரித்திருக்குமானால் ஜனிக்கும் குழந்தை பெண்ணாகுமென்றும், அப்படிப் பிறக்கும் பெண்ணானது பெண்களுக்குரிய பூரண லக்ஷணத்தோடிருக்குமென்றும், சுரோணிதமானது அளவில் அதிகமாயிருந்து அதன் சக்தி குறைந்து சுக்கிலத்தின் பிரமாணம் குறைந்திருந்தாலும், அதன் சக்தி

* சில புருஷர்கள் நடையுடை பாவனை முதலியவைகளில் ஸ்திரீஜாதிகளை யொத்திருப்பதும், சில ஸ்திரீகள் புருஷர்களைப்போல் குடும்பபாரம் விவகாரம் விவேகதீக்ஷண்ய முதலிய விஷயங்களில் விசேஷ சாமர்த்தியமுடையவர்களாய் இருப்பதும் அவர்களுடைய மாதாபிதாக்களின் சுக்கில ஸ்ரோணிதங்களின் சக்தியே காரணமாகும்.

மாத்திரம் அதிகரித்திருந்தால் ஜனிக்கின்ற குழந்தை பெண்ணாயிருந்த போதிலும் புருஷர்களுக்குடைய தன்மையே மிகுதியா யிருக்குமென்றும், சுக்கில ஸ்ரோணிதங்களிரண்டும் அளவிலும் தன்மையிலும் சமமா யிருக்குமானால் ஆணும் பெண்ணுமல்லாத அலியாய்ப் பிறக்குமென்றும் அறிவித்திருக்கிறார்கள்.

இன்னும் இதுவிஷயமாய் ஓர் வடமொழி கிரந்தத்தில் வரைந்திருப்பதாவது கருப்பாசயம் சங்குபோன்ற வடிவுடையது. சங்கு எவ்வித சுளிகளை யுடையதோ அவ்விதமே கருப்பாசயமும் மூன்று சுளிகளை யுடையதாய் இருக்கின்றது. கெர்ப்பாசயத்தின் உட்பக்கத்திலுள்ள மூன்றாவது சுளிச்சுற்றில்தான் கெர்ப்பம் தங்கி நிற்கும் ஸ்தானம். கெர்ப்பாசயத்தில், கௌரி, சந்திரமாசி, சமிரன் என்னும் பெயருடைய மூன்று கெர்ப்பநாடிகள் உண்டு. இவைகளின் விசேஷங்களாவன:— (1) சம்போக சமயத்தில் ஸ்திரீகள் அதிக நேரம் விரும்புவாளாகில் புருஷ சுக்கிலம் அதிகமா யிருக்குமானால் கௌரி நாடியின் வழியாய்ச் சென்று தரிக்கும் கெர்ப்பம் ஆணாகுமென்றும், (2) சம்போக சமயத்தில் ஸ்திரீயானவள் சொற்ப நேரம் விரும்புவாளாகில் ஸ்ரோணிதம் அதிகப்படுமானால் புருஷ சுக்கிலம் சந்திரமாசி நாடி வழியாய்ப் பிரவேசித்துத் தரிக்கும் கெர்ப்பம் பெண்ணாகுமென்றும், (3) சம்போக சமயத்தில் ஸ்திரீகளுக்குச் சமிரன் என்னும் நாடி வழியாய்ப் புருஷ சுக்கிலம் பிரவேசிக்குமானால் அது கருப்பற்று தொழியுமென்றும் வரையப்பட்டிருக்கிறது.

ஆண் பெண் சிசு உற்பத்தி விபரங்களைப்பற்றி நம்மிந்து சாஸ்திரங்களில் மேற்கூறியபடி வரையப்பட்டிருப்பினும், ஆங்கிலேய டாக்டர்மார்களிற் சிலர் தற்கால அனுபவத்தில் கண்டு பிடித்திருக்கும் சில அருமையான விஷயங்களையும் இதனடியில் வரையவேண்டியது நிரம்ப அவஸ்யமாய் இருக்கிறது. அதாவது அமெரிக்கா ஐக்ய மாகாணத்திலுள்ள, டாக்டர் டிரால் (Tiral) என்பவர், புருஷர்களுக்கு வலது பீஜமும், ஸ்திரீகளுக்கு வலது நாதாசயமும் புருஷப்பிரஜை உண்டுபண்ணுவதற்கும், புருஷர்களின் இடது பீஜமும் ஸ்திரீகளின்



இடது நாதாசயமும் பெண்குழந்தை யுற்பத்தியாவதற்குக் காரணமா யிருக்கிறதெனக் கூறுகிறார். அதெப்படியெனில், நாய், நரி, பூனை, குதிரை, ஆடு, மாடு முதலிய பல மிருகங்களின், ஆணின் இடது பீஜத்தைச் சுக்கில உற்பத்தி அதனாலுண்டாக எதுவில்லாது செய்து கெடுத்துவிட்டு அப்படிப்பட்ட மிருகங்களை எந்தப் பெண் மிருகங்களோடு புணர்ச்சிக்கு விட்டாலும், அதற்குப் பிறக்கும் குட்டிகள் ஆணாகவே இருக்கின்றனவாம். இதுபோலவே வலது பீஜத்தைக் கெடுத்துப் பின் புணரவிடப் பெண் குட்டியே போடுகின்றனவாம். இன்னும் மேற்கூறியபடி பக்குவப்படுத்தப்பட்ட ஆண்மிருகங்களோடுகலக்கவிடும் பெண் மிருகங்களைச் சாதாரணமான வேறு ஆண்மிருகங்களோடு கலக்கவிட்டால் ஆண் பெண் முதலிய கலப்புக் குட்டிகளையே போடுவதாகப் பலவித பரீக்ஷைகள் செய்து நிரூபித்திருக்கிறார். இத்தகைய பரீக்ஷைகளினால் டாக்டர் டிரால் என்பவர் கண்டு பிடித்ததானது புருஷர்களின் வலது பீஜத்திலிருந்து செல்லும் சுக்கிலக் கிருமியானது (55-வது பக்கம் பார்க்கவும்) ஸ்திரீகளின் வலது நாதாசயத்திலிருந்து வந்த நாத அணுக்களோடுதான் சம்பந்தப்படுமென்றும், அப்படிச் சம்பந்தப் படுவதினாலுண்டாகும் பிள்ளைகள் முழுதும் புருஷப்பிரஜைகளே யாகுமென்றும், புருஷர்களின் இடது பீஜத்திலிருந்து வெளியேறின சுக்கிலக் கிருமியானது ஸ்திரீகளின் இடது நாதாசயத்திலிருந்து வெளிப்பட்ட நாதஅணுக்களோடுதான் சேருமென்றும், அப்படிச் சேருவதினாலுண்டாகும் பிள்ளைகள் முழுவதும் பெண்ணேதானாகுமென்றும், வலதுபீஜத்திலுள்ள சுக்கிலக்கிருமியானது இடதுபுறத்து நாத அணுவோடும், இடதுபீஜத்திலுள்ள சுக்கிலக் கிருமியானது வலதுபுறத்து நாதஅணுவோடும் சம்பந்தப்படுமானால் கர்ப்பமில்லையென்றும், அப்படிக்கின்றி ஒருவேளை கருப்பற்றினாலுங்கூட ஜனிக்கும் குழந்தை அலியாகுமென்றும் கண்டு கொண்டார். இப்படியாகப் பலவிதப் பரீக்ஷைகளினால் கண்டுகொண்ட பிறகு தனது மனதை மனிதர்களிடத்திற் செலுத்தி மனிதர்களின் வலது பீஜத்தைச் சம்போககாலங்களில் வஸ்திரத்தினாலாவது, வில்லினாலாவது மேலே ஏற்றிக் கட்டிக்கொண்டு போகித்தால் பிறக்கும் குழந்தை

யானது ஆணாகுமென்றும், அவ்விதமே இடதுபீஜத்தை மேலேற்றிக் கொண்டு போகித்தால் ஜனிக்கும் குழந்தையானது பெண்ணாகுமென்றும் கண்டு அப்படியாகவே தம்மித்திரர்களில் அநேகர்களுக்குச் சொல்லி அவர்கள் மூலமாய்ப் பரீக்ஷை கண்டது அநேகமென்றும் அறிவித்திருக்கிறார்.

மேற்கூறிய விஷயங்களைத் தீர்க்கமாய் யோஜிக்கும்போது புருஷப் பிரஜையை விரும்புகிறவர்கள், பிரதமத்தில் இரண்டு மூன்று ஆவர்த்தி சேர்ந்தாப்போல் புணர்வதால், இந்திரிய கமலங்களிலுள்ள இந்திரிய முழுதும் ஸ்கலிதமாகிவிடும். பிறகு வலது பீஜத்தை மேலே தூக்கிக் கட்டிக்கொண்டு சிலநாளிருந்தால், வலதுபீஜத்திலுள்ள சுக்கிலக் கிருமிகளே இந்திரிய கமலத்திற் றங்கும்,பின் வலதுநாசியில் சுவாசம் நடக்க ஆரம்பித்தவுடன் சம்போகஞ் செய்தால் தீர்க்க ஆயுளும் திடசரீரத்துடனும் கூடிய புருஷக்குழந்தையே பிறக்குமென்றும், இவ்விதமாகவே இடது பீஜத்தை மேலேற்றிவைத்திருந்து பின் புணர்வதால் பெண் குழந்தையே பிறக்கு மென்றும் தோன்றுகிறது. ஆனால் ஆண்மலடு பெண்மலடு என்னும் ரோகமில்லாத சதிபுருஷர்களுக்கே மேற்கூறிய விஷயங்கள் யாவும் சித்திக்குமேயன்றி, சுக்கிலக்கருவிகள் ஜனனேந்திரியங்கள் முதலிய வுறுப்புகளில் விகர்ப்பமுடையவர்களுக்கும், மற்றும் தேகத்தில் வியாதியுடையவர்களுக்கும், மேற்கூறிய பரீக்ஷைகள் யாவும் பயனளிக்காதாகையால், அப்படிப்பட்டவர்கள் பிரதமத்தில் தங்களுடைய சுக்கிலத்திலும் நாதத்திலுமிருக்கிற தோஷங்களைப் போக்கிக்கொண்டு பின் மேற்கூறிய வண்ணம் நடத்துவார்களானால் தங்கள் மனதுக்கிசைந்த மக்களை யடைவார்களென்பது திண்ணம். இதுவே ஆயுர்வேதியர்களுடையவும், ஆங்கிலோ டாக்டர்மார்களுடையவும் எண்ணம்.

## அழகும், ஆயுளும், பலமுமுள்ள பாலகர்களை அடையும் வழிகள்.

ஆண் பெண் சிசு வுற்பத்தியைப்பற்றி நம் முன்னோர்களும் மேனாட்டு ஆங்கிலேய ஆயுர்வேத பண்டிதர்களும் பல பரீக்ஷைகள்



செய்து சித்தி யடைந்திருப்பதுபோலவே, அழகும், பலமும், ஆயுளும் நன்னடக்கையுமுள்ள குழந்தைகளை நம்போன்றவர்கள் அடைவதற்காகவும், அதனை நாம் அறிந்து நடத்துவதற்காகவும் நம்முன்னோர்கள் பல வழிகளையும் விதிகளையும் விதித்திருக்கிறார்கள்.

சிருஷ்டி ஸ்திதி சம்ஹாரம் முதலிய முத்தொழில்களும், சகல அண்ட சராசரங்களிலும் எள்ளுக்குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்தவராகிய சாக்ஷாத் கடவுளுக்கே உரிய தானாலும், மனித முயற்சியால் முடியக்கூடிய சிலசக்திப் பிரயோகங்களையும் நமக்களித்திருக்கிறார். அதெப்படியெனில் சிசுவை உற்பத்தி செய்வதற்கும், சிசுக்களின் அவயவங்களை எத்தன்மையதாய் அமைக்கவேண்டுமோ அத்தன்மையதாய் அமைக்கக்கூடிய சக்தி நமக்கில்லா விடினும் அழகும் பலமும் ஆயுளும் நற்குணமும் நன்னடக்கையுமுள்ள சந்ததிகளை யடைவதற்குச் சதிபுருஷர்களுக்கே சக்தி யேற்பட்டிருக்கிறது. அதெப்படியெனில் ஸ்பதியானவன் தான் நினைத்த வண்ணம், அம்மனோ, ஸ்வாமியோ, பிள்ளையாரோ, காளியோ, காட்டேரியோ, வீட்டேரியோ எத்தகையதான விக்கிரகங்களையும் அங்க ஆகம அடையாளங்களுடன் உண்டாக்குவது போலவும், குயவன் தன் கையிலுள்ள மண்ணைக் கொண்டு தன் மனதிற்கிசைந்த குடம் சட்டி பானை முதலியன எது வேண்டுமானாலும் செய்து முடிப்பதுபோலவும், ஸ்திரீ புருஷர்கள் தங்கள் மனதுக்கிசைந்த மக்களை அடையும் சிலமார்க்கங்களையும் மர்மங்களையும் மஹாவல்லமையுள்ள கடவுள் நமக்களித்திருக்கிறார்.

இதுவிஷயமாய் நம்முன்னோர்கள் அனுபவத்தில் கண்டறிந்த பல அருமையிலு மருமையான விஷயங்களையும், அத்தாக்ஷிகளையும் எவ்வளவோ எழுதிவைத்திருந்தாலுங்கூட, அதனை அறிந்து நடப்பவர்களும், அங்ஙனம் நடப்பவர்களைப் பின்பற்றிச் செல்வோரும் அரிதாய் விட்டது, நமது பரதகண்ட மென்னும் இப்புண்ணிய பூமியானது முன் போலவே மேன்மையடையவேண்டுமானால் ஸ்திரீ புருஷர்கள் இதனடியிற் கூறும் ஒவ்வொரு விஷயங்களையும் கவனித்து அதன்படி ஒழுக வேண்டுவது மிக்க அவஸ்யமாகும். அதாவது—மாதர்கள் மாதாந்திர

ஸ்நானம் செய்ததற்குப் பின்னும், கர்ப்பவதியாய் இருக்கும் காலங்களிலும், சம்போக காலங்களிலும் சதிபுருஷர்களிருவரும் தங்கள் தங்கள் மனம் மதி முதலியவைகளைப் பரிசுத்தமுள்ளதாய் வைத்திருப்பதோடுங்கூட, கடவுளிடத்தில், பயபக்தி விஸ்வாசமுடையவர்களாயும் இருப்பதுடன் சற்குணமுள்ள புத்திரர்களைத் தந்தருளும்படி கடவுளைப் பிரார்த்தித்தவர்களாயும் இருக்கவேண்டும். அப்படியிருப்பதினால் அதிரூபமும் அதிக ஆயுளும், நன்னடக்கையுமுள்ள புத்திரர்களை அடைவார்களென்பது திண்ணம். அப்படியின்றி விபரீத எண்ணமுடையவர்களாயும், விகாரரூப முதலியவைகளைச் சிந்தித்தவர்களாயுமிருந்தால் அவர்கள் எண்ணப்படியே, குரூபமும், பலஹீனமும், அற்பாயுளுமுள்ள சந்ததியே யுண்டாகுமென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை.

இது விஷயமாய் நம் முன்னோர்கள் சொல்லியிருப்பதுபோலவே மேனாட்டுச் சாஸ்திரக்ஞர்களும் அபிப்பிராயப் படுகிறார்கள். இன்னும் அமெரிக்கா ஐக்ய மாகாணத்தைச் சேர்ந்த ரீ என்னும் பட்டணத்தில் பூதேடாட்ஸ் (Bootheduts) துரையவர்கள் ஸ்திரீகளின் சங்கத்தில் செய்த பிரசங்கத்தின் சாராம்சத்தைச் சற்று சங்கிரகமாகக் கூறுவாம். அதாவது ஸ்திரீகள் கர்ப்பவதிகளாவதற்கு முன் நிர்மலமான மனதோடு கூடியவர்களாய் தம் புருஷர்களுடைய ரூபத்தை மனதில் ஸ்மரித்துத் தமக்கு உண்டாகும் சந்ததியும் அங்ஙனமே உண்டாகும்படிக்குக் கடவுளைப் பிரார்த்தித்தவர்களாய் இருக்கவேண்டும். இன்னும் ஸ்திரீகள் கர்ப்பந் தரித்தது முதல் சிசு ஜனனமாகிற வரையில் தங்களுடைய இருதயத்தை அலையவிடாமல் அமைதியாய் வைத்திருக்கவேண்டும். விபரீத எண்ணங்களுக்கு இடங்கொடாது பரிசுத்தமான மனதுடையவர்களாய் இருக்கவேண்டும். இப்படிச் செய்வதினால் அழகும், திடதேகமும், தீர்க்க ஆயுளுமுள்ள சந்ததி யுண்டாகுமென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை.

இன்னும் திருதராஷ்டிரன் தாய் வியாசருடன் சம்போகஞ் செய்யும்போது சற்று சங்கோஜமுற்று தன் இரு கண்களையும் இறுக மூடிக்கொண்டதால் திருஷ்டியில்லாத திருதராஷ்டிரன் பிறந்தானென்



றும், பாண்டுவின் தாயானவள் சம்போக காலத்தில் அச்சத்தால் மனம் வேறுபட்டு அலைந்ததினால் வெண்குஷ்டம்போன்ற வெண்ணிறமுடைய குழந்தை பிறப்பதற்குக் காரணமாயிற்று என்றும் பாரதத்தில் கண்டிருக்கிறது.

இன்னும் மேற்கண்ட விஷயங்களுக்கிணங்க தற்காலத்தில் அரேபியா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய தேசங்களிலும், இந்தியாவிற் சிலவிடங்களிலும் குதிரைகள் புணரும்போது, அதற்கெதிரில் நல்ல பலமும் அழகும் பொருந்திய குதிரையை நிறுத்திவைப்பது வழக்கமாய் இருக்கிறது. அப்படிச் செய்வதினால் அப்பொழுது தரித்துப் பிறக்கும் குதிரைக் குட்டிகளும் முன் எதிரில் நின்ற குதிரையின் அங்க அடையாளங்களை ஒத்திருக்கின்றன.

முன்னொருகாலத்தில் மூவாசையை முற்றுமொழித்து இல்லறம் துறந்து துறவறம் பூண்ட பெரியவர் ஒருவர், ஓர் சிற்றூரடைந்து அவ்வூர் குளக்கரையிலுள்ள ஓரழகிய ஆலமரத்தடியில் வசித்து வந்தார். அவ்வூரிலுள்ள ஸ்திரீகள் மாதாந்திரஸ்நானம் செய்வதற்காக வேண்டி அக்குளக்கரைக்குச்சென்று ஸ்நானம் செய்துவருவது வழக்கம். மேற்கூறிய ஸ்திரீகளிற் சிலர் சிறிது நாட்களுக்கெல்லாம் கர்ப்பவதிகளாகி வழக்கப்படி பத்தாம்மாதம் பிரசவித்தார்கள். ஆனால் அப்படிப் பிரசவிக்கப்பட்ட குழந்தைகள்யாவும் குளக்கரையின் ஆலமரத்தடியிலுள்ள பெரியவரின் உருவத்தையே ஒத்திருந்ததாம். இதனைக்கண்ட அவ்வூரிலுள்ள சில பேதையர் அப்பெரியவர் தங்கள் ஸ்திரீகளின் கற்பையழித்துக் கருத்தரிக்கச் செய்தாரெனக் கருதி கடுஞ்சினங்கொண்டு அவருடன் கடும்போர் விளைவித்தார்கள். இவ்விஷயங்களனைத்தையும் ஆதியோடந்தமாகக் கேள்விப்பட்ட, அவ்வூர் நியாயாதிபதி அந்த ஸ்திரீகளைக் கூப்பிட்டு நடந்த விஷயங்களை நடந்தவாறாகவே நவிலும்படி கேட்க, அப்பெண்மணிகள் தாங்கள் மாதாந்திரஸ்நானம்செய்து மீளும்போது அப்பெரியோர் தங்கள் திருஷ்டியில் பட்டாரே தவிர, வேறொரு பாப புண்யங்களையும் அறியோமென்று அறிவித்தார்கள். அதைக்கேட்ட அந்நியாயாதிபதி பல சாஸ்திரங்களிலும் பாண்டித்தியமுடையவராகையால் அதன் நுட்பங்களை யறிந்து, அவ்வாடவர்களுக்

குப் புத்தி புகற்றி அன்னவர்களின் அறியாமையை அகற்றி அவரவர்களின் அகத்துக்கு அனுப்பினாரென்று ஓர் கதையும் வழங்குகிறது.

இன்னும் இது விஷயமாய் நம்முன்னோர்கள் சொல்லியிருக்கிறதாவது, ஸ்திரீகள் சங்கமத்திலிருக்கும்போதும் கருப்பவதிகளாயிருக்கும்போதும், அவர்களுக்குண்டாகும் நல்ல எண்ணம் கெட்ட எண்ணங்களுக்குத் தகுந்தாப்போலவே அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுமிருக்கு மென்பதுவாம். இதற்கு உதாரணங்கள் எவ்வளவோ இருப்பினும் அமெரிக்காவில் ஓர் தோல் உரியும் மனிதன் இருப்பதாகச் சிறிது நாட்களுக்குமுன் சிலபத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அந்நவீனமனிதனைப்பற்றி நம்மால் பிரசுரஞ் செய்யப்படும் **வைத்தியபோதினிப் பத்திரிகையின்** 1-வது வால்யம் 8-வது சஞ்சிகையின் 153-வது பக்கத்தில் ஒரு தோல் உரியும் மனிதன் என்னும் தலையங்கத்தின் கீழ் நாம் வரைந்திருக்கும் உதாரணங்களே மேற்கூறிய விஷயங்களுக்குப் போதிய ஆதாரமா யிருப்பதால் அதனை அப்பத்திரிகையிலுள்ளபடியே இதனடியில் வரையவேண்டியது நிரம்ப அவஸ்யமாயிருக்கிறது. அதாவது,—சர்ப்பங்கள், நண்டுகள் முதலான ஜீவஜெந்துக்களுக்கு மாதாமாதம் தோலுரிந்து வேறு தோலுண்டாகிறதென்று நாமறிவோம். இலைகளுள்ள மரங்களெல்லாம் வருஷத்தில் ஒரு முறை தங்கள் இலைகள் உதிர வேறு புது இலைகள் துளிர்க்கப் பெறுகின்றன. சில மரங்களில் வருஷத்தில் இரண்டுமுறை புது இலைகள் உண்டாகின்றன. ஆனால் மனிதன் வருஷாவருஷம் தன் பழைய தோலை யிழந்து புதுத்தோலை யடைகிறானென்று இதுவரையில் எவரும் கேள்விப்பட்டதில்லை. இப்போது அமெரிக்காவின் ஐக்கிய நாடுகளில் இண்டியனாபோலிஸ் என்ற பட்டணத்தில் ஒருவன் தன்குழந்தைப் பருவமுதற்கொண்டு ஒவ்வொரு வருஷமும் தவறாமல் பாம்பைப்போல் தோலுரியப்பெற்று அதற்குப் பதிலாய்ப் புதுத்தோல் அடைந்துகொண்டு வருகிறான், அத்துடன் அவன் கால்விரல்களிலும், கை விரல்களிலுமுள்ள நகங்களும் கழன்றுபோய் வேறு நகங்கள் வளருகின்றன. அவனுக்குத் தோலுரியும்போதும், நகங்கள் கழலும்போதும் யாதொரு உபத்திரவமுமில்லை



யாம். ஆனால் அந்தக் காலத்தில் லேசாய் ஜுரம் மாத்திரம் அடிக்கிறதாம். பழைய தோல் போய் புதிதாய் உண்டான தோல் தடித்து உறுதிப்பட மூன்று வாரம் பிடிக்கிறதாம். டாக்டர்கள் இந்த அதிசயமான மனிதனைப் பலதடவையும் பரிசோதனை பண்ணிப் பார்த்தார்கள். ஒன்றும் கண்டுபிடிக்க வில்லை என்றும், பாம்பாய்ப் பிறக்கவேண்டியவன் பிசகி மனுஷனாய்ப் பிறந்தானென்றும் சொல்லிக்கொள்ளப்படுகிறது. இவ்விதமான வினோதப் பிறவியைப்பற்றி யாமறிந்தமட்டில் சில அத்தாக்ஷிகள் கூறுவோம்.

(1) **லியாவுல் அப்ஸார்** என்னும் கிரந்த கர்த்தாவானவர் தன்னுடைய கிரந்தத்தில் எழுதுகிறார்: துருக்கி (Turkey) பட்டணத்தில் உள்ளவரும் மகாத்மாவுமான ஜமாலுந்தீன் சாகிபு சொல்லுகிறார். ஓர் ஸ்திரீக்கு ஒரு குழந்தை பிறந்தது. அதன் தலை மனுஷத்தலையும் மற்றத்தேகம் பாம்பின் தேகமுமாயிருந்தது. ஆனால் எப்பொழுதும் அது வோர் பள்ளத்திலிருக்கிறதும், பசிவந்தபோது தன் தாயிடம் வந்து பால் குடிக்கிறதும், பால் குடித்துவிட்டு மறுபடியும் அப்பள்ளத்திற் போய்ப் படுத்துகொள்ளுகிறதுமாயிருந்தது. அது துஷ்ட ஜந்துவின் இனத்திற் சேர்ந்ததாகையால் சட்டப்படி அது கொல்லப்பட்டது. அக்காலத்திலுள்ள அறிவாளிகள் அப்பிள்ளை பிறந்த காரணத்தைத் தெரிந்துகொள்ள முயன்றபோது அக்குழந்தையின் தாய் சொன்னதாவது—சம்போக காலத்தில் ஒரு பாம்பைப் பார்த்துத் தான் பயந்து, தான் சம்சர்க்கத்திலிருந்தாலும், தன் திடுக்கம், பயம் தன் மனதை விட்டகலாது அப்பாம்பின் ஞாபகமே குடிகொண்டிருந்தது என்பதே.

(2) பேரியாவைச் சேர்ந்த டோலக் என்ற ஊரில் ஒரு பார்மிய மாது; 1911-ம் ௵ ஆகஸ்டு ௴ 2௳ புதன்கிழமை பகல் சுமார் 11-மணிக்கு ஒரு ஆண் குழந்தை பெற்றாளாம். அக்குழந்தையின் தலை நாய்த்தலையைப் போலவும், உடம்பெல்லாம் உரோமம் நிறைந்துமிருந்ததாம். அழுகுரல் நாய் குலைத்தலைப் போலுமிருந்ததாம். அது அடுத்த நாள்காலை சுமார் ஒன்பதரை மணிக்கு இறந்துவிட்டதாம். தாயும் மரணமாய்விட்டாள். இக்குழந்தை யுண்டானதற்குக் காரணம் அவள் சம்போகஞ் செய்யும்போது அவளுடைய நாய் அவளுக்கெதிரில்...

இருந்ததாகவும் தன் மனம் ஞாபகம் முதலியன அந்நாயின் மேலேயே பதிந்திருந்ததாகவும் கூறினாள்.

(3) கர்ப்பவதியாயிருந்த ஒரு ஸ்திரீ, கையும் காலும் இல்லாது ஊனமாயிருந்த ஓர் குழந்தையைப் பார்த்து மிகவும் பரிதாபப்பட்டு, தனக்குப் பிறக்கும் குழந்தையும் இப்படிக்கு ஊனமாய்விட்டால் என்ன செய்வோமென்ற ஏக்கமே அவள் மனதில் குடிகொண்டிருந்ததால், ஆறுமாதஞ்சென்று அவளுக்குப் பிறந்த ஆண் குழந்தைக்கும் அவ்வங்கங்களே ஊனமாயிருந்தனவாம்.

(4) சற்றேறக்குறைய 360-வருஷங்களுக்கு முன் நம் இந்தியாவை அரசாண்ட ஆக்பர் சக்ரவர்த்தியின் அரசாட்சியில் ஓர் போர் வீரன் யுத்தத்திற்குச்சென்று யுத்தகளத்தில் வெட்டப்பட்டு விண்ணுலகடைந்தான். அப்போது அவனுடைய மனைவி கர்ப்பவதியாயிருந்ததால் அவள் தன் நாயகன் யுத்தத்திற்குச் சென்று இன்னவுறுப்பில்வெட்டுப்பட்டு உயிர் துறந்தானே என்று ஏக்கமுற்றவளாயிருந்ததினால், பின்பு அவளுக்குப்பிறந்த குழந்தைக்கும் அவ்வுறுப்பிலேயே வெட்டுப்பட்ட குறிகளிருந்தனவாம்.

(5) அமெரிக்கா ஐக்யமாகாணத்திலுள்ள டாக்டர் பூதேடாட்ஸ் துரையவர்கள் சொல்லுகிறதாவது.—ஒரு பெண்மணிக்கு 11-பிள்ளைகள் நல்ல விவேக விற்பன்னர்களாகப் பிறந்தார்கள். 12-வது பிள்ளையானது மிகவும் மெலிந்த தேகத்துடனும் கரடியின் சுபாவகுணமுள்ளதாகவும் பிறந்தது. இதன் காரணத்தை விசாரித்தபோது தெரியவந்ததாவது, அந்த ஸ்திரீயானவள் 12-வது குழநதை யுண்டாயிருந்த மூன்றாவது மாதத்தால் ஓர் கரடிக்குட்டியினால் பயமுறுத்தப்பட்டு அந்தப்பயமே அவள் மனதில் குடிகொண்டிருந்தது என்பதேயாம்.

(6) ஒரு கர்ப்ப ஸ்திரீயானவள் ஓர் சிறிய சிருத்தைக்குட்டியின் சிரசை நசுக்கிக் கொன்றுவிட்டு பிறகு அதே ஞாபகமாய் இருந்தாள். அதன் பிறகு ஆறுமாதஞ் சென்று ஓர் புருஷக் குழந்தையைப் பெற்றாள். அக்குழந்தையின் சிரசானது அவள் முன் நசுக்கப்பட்ட சிறுத்தைக்குட்டியின் சிரசைப்போலவே நசுக்கப்பட்டிருந்தது. இதற்குக் காரணம் மேற்கண்ட சம்பவமேயாம்.



(7) ஐரோப்பா கண்டத்திலுள்ள யூஸ்டின் என்னும் பட்டணத்தில் ஓர் கர்ப்ப ஸ்திரீ கிளிப்பிள்ளையினால் துரத்தப்பட்டு பயமுறுத்தப்பட்டாள். அந்தப் பயமே அவளை விட்டு நீங்காமையினால் பிறகு அவளுக்குப் பிறந்த குழந்தையும் அக்கிளிப்பிள்ளையின் குரலையும் நடவடிக்கைகளையும் ஒத்திருந்ததாம்.

(8) ஆக்பர் சக்ரவர்த்தியை அவர் தாய் கர்ப்பமாய் இருக்கும்போது, அந்த அம்மாள் தன் இருபாதங்களிலும் ஊசியினால் தாமரைப் புஷ்பங்கள் செதுக்கிக்கொண்டிருந்தார்களாம். இதனை ஆக்பரின் தந்தையாராகிய ஹுமாயூன் கண்ணுற்று இப்படிச்செய்வதின் காரணமென்னவென்று சொல்லக் கேட்க, அப்போது அந்த அம்மாள் தனக்குப் பிறக்கும் குழந்தையின் இரு பாதங்களிலும் இதுபோன்ற தாமரைப் புஷ்பங்களிருக்கவேணுமாய் விரும்புகிறேன் என்று விடை பகர்ந்தார்களாம். சிசு ஜனித்தபிறகு அதுபோலவே இரு பாதங்களிலும் இருக்கப்பார்த்து ஆச்சர்யப்பட்டார்களாம்.

(9) இன்னும் இந்தியாவிலுள்ள சாதாரண ஜனங்களிற்ச் சிலர் சூரிய சந்திர கிரகண காலங்களில் கர்ப்ப ஸ்திரீகளை வீட்டைவிட்டு வெளியில் அனுப்பாமல் சில வேடிக்கை விநோதங்களைக் காட்டி, பாட்டு முதலியவைகளைப் பாடி, அவர்களின் மனது சூரிய சந்திரர்கள் குறைவதில் செல்லாவண்ணமாய்ச் செய்துவருவதும் காண்க. இன்னும் சிலர் இப்படிச் செய்வதற்குப் பதிலாய் கிரகண காலங்களில் கர்ப்ப ஸ்திரீகளைப் படுக்கவைத்து உலக்கையையும் அம்மிக்குழவியையும் அவளருகில் போட்டு வைத்திருக்கிறார்கள். இப்படிச் செய்வதினால் அவளெண்ணம் முழுதும் அவற்றின் மேற் செல்லுமென்பதே யன்றிப் பிரிதொன்றுமில்லை. இவைகள் யாவும் அறிந்தமையோ அறியாமையோ!

மேற்கண்ட உதாரணங்களினால் கர்ப்ப ஸ்திரீகளானவர்கள் மிருகம், ஊர்வன, பறவை முதலியவைகளால் பயமுறுத்தப் படுவார்களானால், அநேகமாய் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளும் தாங்கள் பயமுறுத்தப்பட்ட பிராணிகளின் ரூபம் நடவடிக்கை முதலியவைகளையே ஒத்திருக்குமென்பது நிச்சயம். ஆகையால் கர்ப்ப ஸ்திரீகளின் மனவிகற்பமே சற்புத்திரோற்பத்திக்கும், அலி, அங்கஹீனம்,

குருடு, செவிடு, ஊமை முதலிய இதுபோன்ற இன்னும் பலவிக பிறவிகளுக்கும் ஆதாரமாயிருக்கிறதென்று அறிந்து கொண்டோம். இதுபோலவே இவ்வியாஸத்திற்குத் தலையங்கமாயுள்ள "தோல் உரியும் மனிதனுக்கும்" அவன் மாதாவின் மனவிகற்பமே காரணமென்று சொல்லி இவ்வியாசத்தை இவ்வளவோடு முடிப்போமாகவும்.

கர்ப்ப ஸ்திரீகளின் மனோவிகற்பமே, அலி, குருடு, செவிடு, ஊமை, அங்கஹீனம் முதலிய விகாரப் பிறவிகளுக்குக் காரணமாயிருப்பதுபோலவே அன்னோர்களின் நடையுடை பாவனைகளும் தன்மைகளும் அவர்களின் சந்ததிகளையும் சங்கிலித்தொடர்போலத் தொடருகிறதென்பதற்கும் அநேக அத்தாக்ஷிகளிருக்கின்றன. அவைகளாவன: பிரபஞ்ச சிருஷ்டியில் மனிதர்களை ரக்ஷிக்கவும், அழிக்கவும் அரசாக்ஷி செய்யவும் அவர்களுக்கு வேண்டிய அன்ன வஸ்திரங்கள் வீடு முதலியவைகளை உண்டுபண்ணுவதற்குரிய வழிகளை நவநவமாய் கண்டுபிடிக்கவும், மனிதருடைய மனம் அறிவு முதலியவைகள் எவ்வளவோ அபார சக்தியுள்ளதாய் இருக்கின்றன. ஆனால் பிரபஞ்சத்திலுள்ள மனிதர்களுடைய மனமானது ஒரே தன்மையுடையதாய் இராமல் பற்பலவிதமாய் விளங்குகிறது. ஒரே பள்ளியிற்படிக்கும் மாணவர்களுக்குள், சிலர் வானசாஸ்திரத்திலும், சிலர் பூமிசாஸ்திரத்திலும், சிலர் தத்துவத்திலும், சிலர் கணித சாஸ்திரத்திலும், சிலர் வைத்திய சாஸ்திரத்திலும், இன்னும் சிலர் இதுபோன்ற பலவகை சாஸ்திரங்களிலும் பாண்டித்திய முடையவர்களாய் பிரகாசிக்கிறார்கள். ஒரே தாய்வயிற்றில் பிறந்த இருவருள் ஒருவன் வியாபாரத்திலும், மற்றொருவன் விவசாயத்திலும் சித்தியடைகிறான். இப்படியாக மனிதர்களுடைய மனமானது பலவித மாறுதலுடையதாகவும், வெவ்வேறு விஷயங்களை நோக்குவதாகவுமிருக்கிறது. இதற்குக் காரணம் என்ன! சிலர் அவரவர்கள் செய்த பூர்வபுண்ணியமென்றும், சிலர் பூர்வ ஜென்மத்தில் அவரவர்கள் செய்த பாபபுண்யங்களுக்குத் தக்கவாறு பிரம்மதேவன் அவரவர்கள் தலையில் எழுதிய தலைவிதியென்றும், சிலர் ஊழ்வினை யென்றும் பலரும் பலவிதமாய்ப் பகருவார்கள்.

ஆனால் மாதாவானவள் மக்களை யுண்டாயிருக்கும்போதே தனது



ஆத்மாவின் அரிய சக்தியை அக்குழந்தைகளுக்கும் புகட்டுவதே இதன் காரணம். பத்து வயதுடைய அம்மணி என்னும் ஒரு பெண்மணி தன் சொந்தக் கிரகத்தில் சற்று நேரங்கூட இராமல் சதாகாலமும் அக்கம் பக்கங்களிலுள்ள அயலார் வீடுகளுக்குப் போவதும், அவ்விடங்களிலுள்ள தன் தோழியர்களுடன் கூடி விளையாடுவதுமாயிருந்தாள். அதவா சற்றுநேரம் வீட்டிலிருக்கும்படி செய்தால் குருவியைக் கூட்டிலடைத்தால் அது வெளியேறும் வழியைப் பார்ப்பதுபோல அவளும் துடிப்பாள். இதைப்பற்றி அவள் தாயிடத்தில் இந்தப் பெண் வயிற்றிலிருக்கும்போது நீ எவ்விதமாக நடந்துகொண்டாய் என்று கேட்டபோது, தன் புருஷன் ஓர் குரூரமுள்ள குடிகாரனாய் இருந்ததினால் அவன் அடிதடிக்குப் பயந்து கர்ப்பமாய் இருக்கும்பொழுது வீடு வீடாய்ப்போய்த் தன் கஷ்டநிஷ்டூரங்களைச் சொல்லி ஆறுதலடைந்ததாகவும், இங்ஙனமாகத் தன் காலத்தை அயலார் வீடுகளிலேயே போக்கினதாகவும் புகன்றாள். தாயானவள் அன்னியர்கள் வீடுகளுக்குப் போகும்படி தனக்கிருந்த விருப்பத்தைத் தன் மகளுடைய மனதிலும் பதித்தனள். இன்னும் இது விஷயமாய் இதுபோன்ற அநேகம் அத்தாக்ஷிகளிருப்பினும், அவற்றை இவ்விடத்தில் வரைந்தால் விரிவாகுமென்றெண்ணி இவ்வளவோடு நிறுத்தலானோம்.

இன்னும் நம் முன்னோர்கள் எழுதியிருக்கிறதாவது தாய்தந்தையர்கள் சன்மார்க்கமுடையவர்களாய் இருப்பார்களானால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தையும் சன்மார்க்கமுடையதாய் இருக்குமென்றும், கர்ப்ப ஸ்திரீ சக்கிரவர்த்தியைப் பார்க்கவேணுமென்று பிரியப்படுவாளாகில் அவளுக்குப் பிறக்கும் குழந்தை நல்ல அதிர்ஷ்டமுடையதாகவும் செல்வமுடையதாகவு மிருக்குமென்றும், சுற்றத்தார், உபாத்தியாயர் வைத்தியர், குரு முதலியவர்களின் மரியாதை கருப்பவதியின் மனதில் அதிகமா யிருக்குமானால் அவர்களைப் போன்ற பிள்ளையே பிறக்குமென்றும், உயர்ந்த ரத்தினங்களையும் பட்டுப் பட்டாடைகளையும் அணிந்து கொள்ள அபேக்ஷிப்பாளாகில் அவளுக்குப் பிறக்கும் குழந்தைக்கும் அவ்விச்சையே அதிகமா யிருக்குமென்றும், கரடி, புலி, சிங்கம் முதலிய துஷ்ட மிருகங்களைப்பற்றி மனதில் நினைத்துக் கொண்டிருப்பவளாகில்

அவளுக்குப் பிறக்கும் பிள்ளைகள் துஷ்ட நடவடிக்கை யுள்ளவர்களும் பிறருக்குத் துன்பமுண்டு பண்ணுகிறவர்களாகவும் இருப்பார்கள். இதனால் நாம் அறிந்துகொள்ள வேண்டியதென்னவெனில், தாய் தந்தையர்களுடைய, மனம், செய்கை, நடையுடை பாவனைகளே குழந்தைகளுக்கும் சித்தமாகிறதானாலும், பெரும்பாலும் மாதாவின் சிந்தையே மக்களுக்கும் தொடரக் கூடுமாகையால், ஸ்திரீகள் மாதாந்திர ஸ்நானம் செய்ததிலிருந்து பிரசவகாலபரியந்தம் பரிசுத்தமான சிந்தையுடையவர்களாயும், மனானந்தம் நற்குணம், நற்செய்கை முதலியனவுடையவர்களாகவும், அழகிய ஸ்திரீகளோடு ஸ்நேகமுள்ளவர்களாகவும், குரோதம், பகை, பொறாமை முதலியவைகளுக்குச் சற்றும் இடங்கொடுக்காதவர்களாயும் இருக்கவேண்டியது. இன்னும் சிசுவானது சுக்கிலஸ்ரோணிதங்களின் கூட்டுறவால் உண்டாகிறதெனினும், சிசுவின் அவயவங்களிற்பெரும்பாகம் ஸ்ரோணிதத்தினாலுண்டாக்கப்படுகிற படியினாற்றான் பிள்ளைகளிற்ப் பெரும்பாலார் தாய்ச்சாயலாகவே இருக்கிறார்கள். இக்காரணம் பற்றியே கூடியவரையில் நல்ல ரூபவதிகளான கன்னிகைகளையே வரிக்கவேண்டுமென்று சர்வசமயசாஸ்திரங்களும் வற்புறுத்துகின்றன.

## தாயும் பிள்ளையும்.

கிரமாக்கிரமங்களைப் பகுத்தறியும் சக்தியை நமது சரீரத்தில் புகட்டியது யார்? நாம் மாதாவின் உதரத்திலிருக்கும்போது உருக்கமான அன்பினாலும் இடையறாத சிந்தனையினாலும் நமது வாழ்வையும் சௌக்கியத்தையும் தன் மனதிலேயே ஸ்மரித்துக்கொண்டிருந்தவளாகிய நமது அன்னையே. நமது உயிருக்கு ஊன்றுகோலாகிய இவ்வரிய கட்டளைகளை அவள் நமது ஆத்மாவிலும், ஆத்மாவினது கிரியைகளை வெளிப்படுத்தும் சரீரத்திலும் பதித்திருக்கின்றாள். அங்ஙனம் பதிக்கப்பட்டுள்ளதானது, நமது ஈரல், இருதயம், மூளைமுதலிய உறுப்புகளிலும் தேகத்தின் ஒவ்வொரு பாகத்திலும் சிலையிலெழுத்துப் போலிருக்கின்றன. நமது தேகமும் ஆத்மாவும் அடியோடு அழிந்து போகுமளவும் அப்பிரமாணங்களை அகற்றவாவது, மாற்றவாவது நமக்குச் சக்தியில்லை. அப்பிரமாணங்கள் பிச்சைக்காரனுக்கும் பிரபுவுக்கும் யாதொரு வித்தியாசமுங் காட்டாமல் எக்காலமும் நிலைத்திருக்கும். இத்தகைய



காரணங்களினாலன்றோ, மாதாவே மக்களுக்கு அரிய தெய்வமென்று சர்வ சமய சாஸ்திரங்களும் முறையிடுகின்றன. இக்காரணம்பற்றியே நமது ஔவைப்பிராட்டியாரும் "மாதாவை யொருநாளும் மறக்கவேண்டாம்" எனக்கூறி யிருக்கிறார்கள். நாம் மதலைப் பருவமுடையவர்களாய் இருக்கும்போது நம்மைக் கண்டு மனமகிழ்ந்து "கோமலமே! குலவிளக்கே! குழந்தையே! கற்கண்டே! கண்ணே! கனியே" என்று கொஞ்சி மகிழ்ந்து அழகிய ஆடையாபரணங்களையணிந்து, அன்புடன் பாராட்டி, தாலாட்டி, சீராட்டி, தொட்டிலாட்டி, துரைமகனே என்று வாயார வாழ்த்தி வளர்த்த மாதாவின் மாக்ஷிமை தானென்னே! அன்னையின் அன்பிற்கு உபமானம் உலகத்திலுளதோ! பிரபஞ்ச ஆசையைப் பற்றறவொழித்து இல்லறம் துறந்து துறவறம் பூண்ட பட்டினத்தடிகளுங்கூட தமது அருமைமிகுந்த அன்னையார் உயிர்துறந்தபோது அவரின் பிரிவாற்றாமையினால் "முந்தித் தவங்கிடந்து முந்நூறுநாள் சுமந்து அந்திப்பலாய்ச் சிவனை ஆதரித்துத் தொந்திச்சரிய பெற்றதாயார்" என்று புலம்பி யழுதாரென்றால், நம்போன்றவர்கள் மாதாவை மறக்கப்போமோ. இத்தகைய அருமை மிகுந்த பெருமை பொருந்திய அன்னையாரைச் சில அறிவிலிகள் அன்னவஸ்திரங்களுக்கு அலையவிட்டுத் தாமும் தமது இல்லாளும் விலாப்புடைக்க உண்டு உடுத்தி உல்லாசமாய்க் காலங் கழிக்கிறார்கள். இத்தகைய பேதையர்களுக்கு யாரே அறிவு புகட்டவல்லார்.

## சம்போக சங்கிரகம்.

சம்போகமென்பது இன்னதென்றும் அதனால் உண்டாகும் பிரயோஜனங்களும் அது இன்னின்ன காலங்களில் கூடுமென்றும், இன்னின்ன காலங்களில் கூடாதென்றும், அது அளவு கடப்பதினால் உண்டாகும் கேடுகளையும், இன்னும் இதைப்பற்றிய இதர விபரங்களையும் இதற்கு முன்னதாகவே சொல்லியிருக்கிறோமாயினும், இப்போது இன்னின்ன காலக்களில் செய்யும் சம்போகத்தினால் கர்ப்போற்பத்தியுண்டாகுமென்பதைப்பற்றிச் சிறிதளவு கூறவேண்டியதாய் இருக்கிறது. அதாவது வித்துக்களிலிருந்து முளைகிளம்பி விருக்ஷங்கள் செடி கொடிகள் உண்டாவதுபோலவும், அண்டங்களிலிருந்து பறவை

கள் வெளியாவதுபோலவும்,மனித உற்பத்தியானது சுக்கிலஸ்ரோணிதங்கள் ஒன்றுகூடி அணுவினும் அணுவாய் அங்க அவயவங்களைப்பெற்றுப் பிண்டமாகிப் பிறகு பிறப்புண்டாகிறது.வித்துக்குள்ளிருந்து முளை கிளம்புவதற்கு முன்னும், முட்டைக்குள்ளிருந்து பறவை வெளியாவதற்கு முன்னும், எப்படி அவைகளுக்குள் ஜீவன் ஐக்கியமாகி இருப்பதாக அறியக் கிடக்கிறதோ, அதுபோலவே ஸ்திரி புருஷர்களிடத்தும் மானிடப்பிறப்புக்குரிய ஜீவன் ஐக்கியப்பட்டிருக்கிறது. வித்துக்குள் ஜீவனிருப்பது உண்மையேயாயினும் அதனைப் பருவமறிந்து பயிர் செய்யாவிடில் எப்படி அவ்வித்தானது பயிராகிப் பயனைத் தராதோ அதுபோலவே ஸ்திரீபுருஷர்களிடத்தில் மானிடப் பிறப்பிற்குரிய ஜீவசக்தி இருப்பினுங்கூட காலமறிந்து சம்போகஞ்செய்தாலொழிய சந்தானோற்பத்தி யுண்டாகாதென்பது ஒருவரும் மறுக்கக்கூடாத விஷயமேயாகும். சதிபுருஷர்கள் அவரவர்களுடைய மாம்ஸ இச்சையை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே, பிரபஞ்ச சிருஷ்டியில் கடவுள் ஸ்திரீ புருஷர்களைச் சிருஷ்டித்திருக்கிறாரென்றெண்ணி, அவரவர்களிஷ்டப்படி அனுபவிப்பார்களானால் தங்களிடத்திலுள்ள ஜீவனானது சிருஷ்டிக்கு ஹேதுவில்லாமற் போவதுடன், அப்படிப்பட்ட சதி புருஷர்கள் சம்போகத்தினாலுண்டாகும் சந்தானோற்பத்தியையும் இழந்து விடுகிறார்கள். அதனால் ஜனாபிவிருத்தி தடையுமுண்டாகிறது. ஆகையால் சதிபுருஷர்கள் அடியிற்காணும் சில விதிகளை அனுசரித்து ஒழுகுவார்களாயின், இகபர சாதகத்திற்கேதுவாகிய சந்தான சித்தியை அடைவார்களென்பது திண்ணம்.

மானிட ஜனனத்தைப் பற்றிய விபரங்களைத் தெரிந்துகொள்ள வேண்டுமானால் முதன்முதல் கருப்பையைப்பற்றிய விபரங்களை அறிந்துகொள்ளவேண்டியது அத்யாவசியமாகையால் அதைப்பற்றி 63-வது பக்கத்தில் அறிவித்திருக்கிறோம். பிண்டோற்பத்தி யுண்டாவதற்குச் சுக்கிலமானது கருப்பைக்குள்ளிருக்கும்,கருக்குழிக்குள் செல்ல வேண்டியிருப்பதால் ஸ்திரீகள் மாதவிடாயான இரண்டாம் நாள் சம்போகஞ் செய்தால் அப்போது கருப்பையின் வாய் திறந்திருப்பதால் சுக்கிலம் தாராளமாய் உட்சென்று நாதத்தோடு கலந்து கருப்பற்று



மென்று ஓர் ஆங்கிலேய டாக்டர் அபிப்பிராயப்படுகிறார். இவர் சொல்லுவதானது ஊமையன்கண்ட சொப்பனம்போலிருக்கிறது. ஸ்திரீகளுக்கு உதிரம் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும்போது சம்போகஞ்செய்தால் சுக்கிலமும் அவ்வுதிரத்தோடு கலந்து வெளியாய் விடுமேயன்றிக் கருக்குழியிற்றங்கி கருப்பற்ற ஹேதுவில்லாமற்போம். ஒரு வேளை கருத்தரித்தபோதிலும் அப்பிள்ளை பிழைக்கவுமாட்டாது. மேலும் மாதவிடாயானது ஸ்திரீகளின் சரீரத்தினின்று கழியவேண்டிய உதிரக்கழிவாகும், இன்னும் மாதவிடாயானது மெல்லிய இரத்த திரவம், அதற்கு ஒருவித நாற்றமுமிருக்கின்றது. அது கருப்பை யோனி இவைகளில் சிலேஷ்மமும், பரிஸ்தாபிதமும், இரத்தமும் கலந்திருக்கிறது மல்லாமல் நிணநீரும் சில சவ்வினழிவு பதார்த்தங்களும் கலந்து காணுகின்றது. கருப்பையிலுள்ள சிலேஷ்மம் முதிர்த்து உண்டாகும் சவ்வாகையால் மாதாவிடாய்தோறும் இது அழிந்து வெளிவருகின்றதென்று தெரிகின்றது. கர்ப்பம் தரித்தால் அச்சாவானது பிண்டத்தைச்சுற்றிக் கொள்ளுகிறது. (இதுவே பனிக்குடம்)கர்ப்பந்தரியாவிட்டால் சீக்கிரத்தில் அழுகி மாதவிடாயில் வெளியாகி விடுகின்றது. இவ்விதமான மகா ஆபாஸ வஸ்துக்களுடன் கூடிய உதிரம் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும்போது சம்போகம் செய்வதானது, கசுமாலம் நிறைந்த கக்கூஸ்க்குள் உட்கார்ந்துகொண்டு போஜனம் செய்தால் மனதிற்கு எவ்வளவு அசங்கியம் உண்டாகுமோ அதைவிட பதின்மடங்கு அதிகமாகும். ஸம்போகத்திற்கு முன் சதி புருஷர்கள் மனானந்த முடையவர்களாய், நறுமண மிகுந்த மல்லிகை முல்லை முதலிய புஷ்பாதிகளைச் சூடிக்கொண்டு, சந்தனம், சவ்வாது, புனுகு, அத்தர், பன்னீர் முதலிய பரிமளாதிகளைப் பூசிக்கொண்டு, தாம்பூலந் தரித்துக்கொண்டு, மனதிற்கு வெறுப்பை யுண்டுபண்ணுவதான வாய் நாற்றம், வியர்வை நாற்றம், கற்றாழை நாற்றம் முதலிய துர்நாற்றங்களைப் போக்கவேண்டுமென்று முன்னதாகவே சொல்லி யிருக்கிறோம். சாதாரணமான ஸ்திரீகளுடன் சம்போகம் செய்வதற்கே மேற்கூறிய நறுமணம் மிகுந்த பரிமள வஸ்துக்களை உபயோகிக்க வேண்டுமென்று சொல்லி யிருக்கும்போது ரஜஸ்வலாயான ஸ்திரீகளு

டன் ரமிப்பதற்கு எத்தகைய வாசனை வஸ்துக்களை அணிந்துகொள்ள வேண்டியிருக்குமோ அதனை அவ்வாங்கிலேய டாக்டரவர்களே அறிவிக்க வேண்டுகிறோம். இன்னும் வீட்டுவிலக்கமான ஸ்திரீகளின் காற்றுவாடைபட்டாலும், அல்லது அவர்கள் தொட்டாலும் பச்சை மரங்களும் பட்டுப்போகிறது. அவர்களின் வாடைபட்ட புற்பூண்டு முதலிய தாவரங்களே தீய்ந்து மாய்ந்துபோகுமானால், அப்போது அவர்களுடன் சம்போகம் செய்யும் ஆடவர்களின் கெதி எத்தன்மைய தாகுமோ அதைப்பற்றி அறிவாளிகளே ஆலோசிக்கவேண்டும்.

அவ்வாங்கிலேய டாக்டர் அப்படிக்கு அறிவிக்கவேண்டியதற்கு ஆதாரமென்னவென்று ஆராய்ந்து பார்க்கும்போது நமக்குத் தோன்றுகிறதாவதென்னவெனில், ஸ்திரீகளுக்கு நாதக்குழலானது மெத்த சன்னமாயிருப்பதால் (நாதக்குழலின்லக்ஷணத்தை 66-வது பக்கத்தில் பார்வையிடவும்) சம்போக காலங்களில் நாதம் சன்னஞ்சன்னமாய் வெளிப்படுகிறது, ஆனால் மாதர்களுக்கு மாதாந்திரஸ்நானத்தின்போது நாதம் அளவிலதிகமாய் வெளிப்படுமாகையால் அக்காலங்களில் சம்போகம் செய்தாற் சுக்கிலம் ஸ்ரோணிதத்தோடு இலகுவாய்க் கூடிக் கருப்பற்றுமென்பது அவ்வாங்கிலேயரின் அபிப்பிராயம்போலும். அவ்வாங்கிலேயர் அப்படிச் சொல்வது ஒருவிதத்தில் நியாயமாயிருந்தாலும் மாதர்கள் வீட்டு விலக்கமாயிருக்கும்போது சம்போகஞ்செய்வது எத்தன்மைபோலாகுமென்றால் விஷத்தை உட்கொண்டால் பிராணபயமுண்டாகுமென்று தெரிந்துகொண்டிருந்தும், அறிவீனத்தால் அவ்விஷத்தை அருந்துவதுபோலாகும். ஆனால் விஷத்தை உட்கொண்டாலும், சிறிதுநேரத்திற்கெல்லாம் நமனுலகடையச் செய்கிறது. இவ்விதமாதர்களுடன் மருவினாலோ, நடைப்பிணத்திலும் கடைப்பிணமாய் செப்பவொண்ணாத பல ஆபாசரோகங்களுக்கு ஆளாகி, ஆத்மாவுள்ளவரையில் அவனியில் அவதிப்படவும் நேரிடுமென்பதை அறிவாளிகள் அறிந்தே இருப்பார்களாகையால் அதிகம் எழுதவேண்டியதில்லை.

இதைப்பற்றி அமெரிக்கா கண்டத்திலுள்ள ஓர் சாஸ்திரியார் அறிவிப்பதாவது. மாதர்களுக்கு மாதவிடாய் கண்டு அது நிற்கிற தருணத்தில் ஸ்ரோணிதம் வெளிப்படுகிறதென்றும், அது சினைப்பாட



விட்டால், சினைப்பாதையடியாலாவது அல்லது கருக்குழியிலாவது க்ஷீணித்து விடுகிறதென்றும் அறிவிக்கிறார். மாதர்களுக்கு மாதவிடாய் காலத்தில் சினைப்பையிலிருக்கிற கிராபியன் (Graafian) என்னும் முட்டையிலிருந்து வெளிப்படுகிற ஸ்ரோணிதமானது சினைப்பாதையின் வழியாகச்சென்று கருக்குழியை யடையும். பிறகு அது அவ்விடத்திலேயே ஜீரணித்துப்போகும். இங்ஙனமாகச் சினைப்பாதை வழியாக ஸ்ரோணிதம் சென்று கருப்பையை யடைவதற்குச் சற்றேறக்குறைய 10-நாள் செல்லுமென்பதே அநேகம் ஆயுர்வேத பண்டிதர்களுடையவும் ஆங்கிலோ டாக்டர்மார்களுடையவும் அபிப்பிராயமாகும். இது மேற்கூறிய அமெரிக்காக் கண்டத்துச் சாஸ்திரியாரவர்களின் அபிப்பிராயத்திற்குச்சற்றேறக்குறைய சரியாக இருக்கிறது. இத்தியாதி விஷயங்களைத் தீர்க்கமாய் ஆலோசிக்கும்போது சதி புருஷர்கள் சந்தானோற்பத்தியை யடையவேண்டுமானால் மாதர்கள் மாதாந்திர ஸ்நானம் செய்ததிலிருந்து பத்து தினங்களுக்குள்ளாகச் சம்போகம் செய்யவேண்டும், மேற்கூறியபடி ஸ்ரோணிதமானது கருக்குழிக்குள் விழுந்து வியர்த்தமாய் விடுவதற்குக் காரணம் யாதென்று ஆலோசிப்போமானால் கரதலாமலம்போல் நன்கு விளங்கும். அதாவது சுக்கில ஸ்ரோணிதங்கள் ஒன்று கூடினாலல்லவோ கருப்பற்றும், ஸ்ரோணிதம் மாத்திரம் கருக்குழிக்குள் சென்றால் கருப்பற்றுவதெங்ஙனம்,அதனால்தான் கருக்குழிக்குள் விழுந்த ஸ்ரோணிதம் வியர்த்தமாய் விடுகிறது. ஆகையால் மாதர்கள் மாதாந்திர ஸ்நானம் செய்து வீடுகூடின பத்து தினங்களுக்குள் சதி புருஷர்கள் சம்போகஞ் செய்வார்களானால் அப்போது பாலுக்கு மோர் புரை குத்துவதுபோலச் சுக்கில ஸ்ரோணிதங்களிரண்டும் ஒன்றுகூடி பிண்டமாகும். இதுவே சாஸ்திர சம்மதமாகும்.

ஆகையால் சம்போககாலங்களில் ஸ்திரீகளுக்கு ஸ்ரோணிதம் வெளிப்படுமாறு போகிக்கவேண்டியது புருஷர்களின் கடமையாகும். ஏனெனில், "ஸ்திரீணாம் காமம் அஷ்டகுணம் பவேத்" என்னும்வாக்கியத்தினால் ஸ்திரீகளுக்கு இயற்கையிலேயே புருஷர்களைவிட காமம் எண்மடங்கு அதிகமென அறியக்கிடக்கிறது. இப்படியாக ஆடவர்களைக் காட்டிலும் ஸ்திரீகள் அதிக காமினிகளாயிருப்பதுடன், நாதக்குழலும்

மெத்த சன்னமாயிருப்பதால் சம்போக காலத்தில் புருஷர்களுக்கு ஒரே ஆவர்த்தியில் சுக்கிலம் ஸ்கலிதமாவதுபோல் ஸ்திரீகளுக்கு ஸ்ரோணிதம் ஸ்கலிதமாகாமல் சிறிது சிறிதாயிறங்கும். ஆகையால் ஸ்திரீகள் நீடித்த சம்போக சக்தியுள்ள ஆடவர்களையே அணைவதற்கு ஆசையுள்ளவர்களா யிருப்பார்கள். இங்ஙனமாக மாதர்களின் மனது வேறுபட்டிருப்பதினால் ஆடவர்கள் ஒவ்வொருவரும் அவரவர் நாயகிகளுக்கு நீடித்த போகங்கொடுத்து அவர்களின் ஸ்ரோணிதத்தை வெளிப்படுத்தி அதனால் சந்தான சித்தியை யடைந்து சந்தோஷிப்பதற்காகவே, சுரதநூலில், சாதிபேதம், அமுர்தநிலை, ஆலிங்கனம், தாடனம், நகக்குறி, தந்தக்குறி, அங்குலியோகம், ஊடல், கரணம், உபசர்ப்பனம், உபரிசுரதம் முதலிய வகுப்புகள் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அவ்விஷயங்களைப்பற்றி இங்கு விரிவாய்க் கூறுவதும், அப்படிக் கூறினும் அவற்றை அறிந்து நடத்துவதும் மிகவும் சிரமசாத்தியமாயிருப்பதால், விவேகிகள் சமயோஜிதம்போல் நடந்துகொள்வார்களென்றெண்ணி இதனை இவ்வளவோடு நிறுத்தலானோம். ஆனால் ஸ்திரீகளுக்கு ஸ்ரோணிதம் ஸ்கலிதமாகும்படியாக ஆடவர்கள் நீடித்த போக சக்தியுடையவர்களாய் இருக்கவேணுமென்று நாம் முன்னதாகவே எழுதியிருந்தாலுங்கூட, சில ஸ்திரீகளுக்கு எவ்விதமான நீடித்த போகமிருப்பினும் ஸ்ரோணிதம் வெளிப்படாது. அப்படிக்கு ஸ்ரோணிதம் வெளிப்படாத ஸ்திரீகள் யாவரெனில், அதிக தூரம் நடந்து அலுப்புற்றவளுக்கும்; மதுபானம் முதலிய லாகிரி வஸ்துக்களை அருந்தினவளுக்கும், நாட்டியமாடினவளுக்கும், கர்ப்பிணியாயிருப்பவளுக்கும், தனக்கிச்சையின்றி நாயகன் இஷ்டத்திற்காகக் கூடுபவளுக்கும், பேதியுற்றவளுக்கும், நவீன புருஷனோடு பிரதமத்தில் புணருபவளுக்கும் அளவிற்கதிகமாய் ஆகாரம் அருந்தினவளுக்கும், தன்னுடைய நாயகனல்லாது மற்றவர்களோடு கூடுபவளுக்கும், வியாதியினால் தேகம் மெலிந்திருப்பவளுக்கும், கலவியில் காமநீராகிய ஸ்ரோணிதம் வெளிப்படாது.

சதிபதிகள் சம்போகஞ் செய்தபின் குளிர்ந்த தண்ணீர் குடிப்பது எவ்விதத்தானுங் கூடாது. ஏனெனில் சம்போகத்தினால் நமது தேகத்தின் உள்ளுறுப்புகள் கனலேறி காந்தம் இரும்பை இழுப்பதுபோல



வும், பழுக்கக் காய்ந்த இரும்பு ஜலத்தை இழுப்பதுபோலவும் அவ்வகை குளிர்ந்த பானங்களைக் கிரகித்துக்கொள்ளும். அதனால் இரத்தமிருக்கவேண்டிய வுறுப்புகளில் ஜலம் தங்குவதால், முகவாதம், பக்ஷவாதம், நடுக்குவாதம், ஈரல்வீக்கம் முதலிய மகா கொடிய ரோகங்களுண்டாகும். இதுபோலவே சம்போகத்திற்குப்பின் அதிக வெப்பமுள்ள பானங்களைப் பருகவாவது, கடுமையான காரமுள்ள பதார்த்தங்களைப் புசிக்கவாவது கூடாது, அப்படிப் புசிப்பார்களானால், நன்றாய்க் காய்ந்த விறகில் விரைவில் தீப்பற்றுவதுபோலக் கலவியினால் கனலேறி யிருக்கிற மிக நுட்பமான உள்ளுறுப்புகளுக்கு உஷ்ணம் தாக்கி அதனாலும் புகலக்கூடாத பல பொல்லாத வியாதிகளை விளைவிக்கும் வித்தாகும். ஆகையால் மேற்கூறிய இரு விஷயங்களும் சதிபதிகளுக்குத் தீங்கை யுண்டுபண்ணுமாகையால், வெள்ளை நிறமான வெங்காயச் சாற்றோடு இரண்டு பங்கு நல்ல தேன் சேர்த்துக் காய்ச்சி பாகுபதத்திலிறக்கி வைத்துக்கொண்டு, பிரதிதினமும் படுக்கைக்குப் போகுமுன் மூன்று தோலா எடை சாப்பிட்டு வரவும். இப்படிச் செய்வதினால் சம்போகத்திற்குப் பின்னுண்டாகும் சரீர ஆயாசம், துர்பலம் முதலியவை நீங்கும். இன்னும் இதனைச் சம்போகத்திற்குப் பின்னும் பசும்பாலிற் கூட்டிப் பருகுவதினாலும் சுகமுண்டு. இன்னும் பசும்பாலில் நல்ல கெட்டித்தேன் கூட்டிப் பருகுவதினாலும் பயனுண்டு.

## பரஸ்திரீகமனம்.

ஆ! ஆ! பரஸ்திரீகமனத்தைப்பற்றி எழுதவென்றாலோ எம் மனம் பதருகின்றது. பரஸ்திரீகளைப் பார்ப்பதும் ஆகாது. அவர்களை மனதில் ஸ்மரிப்பதும் ஆகாது. அவர்களுடன் தனித்து சம்பாஷிப்பதும் அவர்களின் சம்பாஷணைக்குச் செவி சாய்ப்பதும் கூடாது. கூடாது. ஆடவர்கள் அயமாயும் (இரும்பு) ஸ்திரீகள் காந்தசக்தி யுடையவர்களாயும் இருப்பதால் பரஸ்திரீகளைப் பார்த்தமாத்திரத்தில் காந்தமானது தன் சக்திப் பிரயோகத்தால் இரும்பை இழுத்துக்கொள்வதுபோல, காந்த சக்தியுடைய கன்னிகைகளும் அயமான ஆடவர்களை ஆகர்ஷித்துக் கொள்ளுகிறார்கள். இன்னும் மாதர்கள் தங்களது வேல் போன்ற விழியினால் நோக்கி, ஸ்தனபாரமாகிய பாசத்தினால்

கட்டிக் கசுமால காமக்கடலில் வீழ்த்திப் போடுவார்கள். இக்காரணம் பற்றியே ஸ்ரீமான் வேதநாயகம் பிள்ளை யவர்களும்,

"கன்னியர் விழிஉயிர் பிளந்திடும் அம்பு
கனதன மிரண்டுமே நமைக்கட்டும் தும்பு
அன்னிய மாதரை விஷமென நம்பு
அவளுடன் பேசுவதே பெரும் வம்பு.
இதமாகவே மணஞ் செய்தசீமாட்டி
இகபரம் இரண்டுக்குமே வழிகாட்டி
இதரமின் னார்களைச் சேர்வோன் காமாட்டி
என்றைக்கும் அவனுக்கு மூத்தவள் பேட்டி.

என்று பாடியிருக்கிறார்கள். ஆ! ஆ! தேகத்தின் வலிவைக் குறைத்து, தேகதாஷ்டிகத்தை வற்றச்செய்து, தேகத்தளுக்கையும் மினுக்கையும் போக்கி, மதியின் கூர்மையை மழுக்கி, மகா வெட்கக் கேடான பல ஆபாசரோகங்களுக்கும் ஆளாக்கி, அழகிய வடிவத்தை வாட்டி வதங்கச்செய்து வாலப்பருவம் வருவதற்கு முன்னதாகவே முதுமைப்பருவத்தைக் கூவியழைத்து, நரை திரை மூப்பு முதலிய வைகளை யுண்டாக்கி, கைப்பொருளையும் போக்கி, புகழையும் போக்கி வறுமையையுண்டாக்கி, இகத்தில் இழிச்சொல்லிற்கும் பரத்தில் பாபத்திற்கும் பாத்திரமாகச் செய்யும் இம்மகா கொடிய சிற்றின்பத்தின் செய்கைதானென்னே! நம்முன்னோர்களிற் சிலர் இக்கசுமாலக் காம வலையிற் சிக்கித் தமது பொருளையும் புகழையும்போக்கித் தமது வாணாளையும் வீணாளாக்கிக்கொண்ட சரித்திரங்களை நாமறிந்து நல்வழிப்படுவதற்காகவல்லவோ அச்சரித்திரங்களைக் கற்றறிந்த கல்விமான்கள் சிரமப்பட்டு எழுதி வைத்திருக்கிறார்கள். அறம் பொருள் இன்பங்களை அறவே யொழித்து நித்தியமாகிய முக்தி வீட்டை யடையும்பொருட்டுக் கானகம் புகுந்து, கந்தமூலம் அருந்தி, ஐம்பொறி யடக்கி, மூலவாயுவை யெழுப்பி, இடை பிங்கலை வழியை இறுக வடைத்து, சுழிமுனை வழியைத் திறந்து, ஐந்தெழுத்தோதி, அகோர தவம் புரிந்து அநேக அரிய வரங்களைப் பெற்றவராகிய விஸ்வாமித்திரரும் மேனகையுடன் கூடித் தனது தபோபலத்தை இழந்ததும்



இக்காமத்தினாலன்றோ! தேவர்களுக்கிறைவனான தேவேந்திரன் தனது அங்கமுழுதும் பங்கமானதற்குக் காரணம் இக்கசுமாலக்காமமன்றோ! சித்து விளைந்த சுந்தரமிகுந்த இலங்காபுரிக்கு இறைவனான இராவணனென்னும் அரக்கனும் அவ்வரக்கன் சேனைகளும் அடியோடு அழிந்ததும் இக்காமத்தினாலன்றோ பல சாஸ்திரங்களிலும் பாண்டித்திய முடையவரான பராசரர் யமுனாநதி தீரத்தில் யோசனைகந்தி என்ற உத்தம கன்னியைக் கற்பழித்ததும் இக்காமத்தினாலன்றோ! சோடச கலைகள் நிறைந்த மஹாசுந்திர ரூபனான சந்திரனும் தன் கலைகளை இழக்க நேரிட்டதும் இக்காமத்தினாலன்றோ! இப்படியாகக் காமவலையிற் சிக்கி பொருளையும் புகழையுமிழந்து, நவிலமுடியாத பல கஷ்ட நஷ்டங்களுக்குட்பட்டவர்களின் சரித்திரங்கள் எவ்வளவோ இருக்கின்றது. அவைகளை எழுதுவதென்றால் அவை ஏட்டிலும் அடங்காது. எழுதவும் முடியாது. எம்மாலும் ஆகாது மற்ற எவராலும் இயலாது. மனிதன் எத்தகைய பாபகிருத்தியங்களைப் பண்ணினாலும் அப்பாவம் புறம்பாகவே இருந்து "பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே" என்று பட்டினத்தடிகள் கூறியவாறு மரண காலத்தில் அவனைத் தொடருமென்பது பலர் அறிந்த விஷயம். ஆனால் காமப்பாவமோவெனில் அவன் தேகத்தில் தொடர்ந்து, இரணங்களும், கட்டிகளும், புண்களும், புரைகளும், படைகளும் கண்டு, ஈ எறும்பு கிருமி முதலியவைகளைக் கூவியழைத்து அவைகளுக்கு விருந்தளித்து வேப்பிலையுங் கையுமாய்த் திரியச் செய்கிறது. இக்காரணம் பற்றியே ஸ்ரீமான் வேதநாயகம் பிள்ளையவர்களும் அடியில் வருமாறு பாடி யிருக்கிறார்கள்.

என்றுங்காம தூர்க்கு ரோகங்கள் நிலையே
ஈ எறும்போட்டக் கையில் வேண்டும் வேப்பிலையே
அன்று கொண்டவன் அறிந்தால் வருங்கொலையே
அற்ப சுகத்தில் வரும் ஆபத்து மலையே.
மண்ணிற் பரஸ்திரீயைச் சேரும் நிமித்தம்
வாழ்வும் சுகமுந் தனமும் அனர்த்தம்

எண்ணில்லாத் துன்பமும் புண்களும் சித்தம்
ஈ எறும்புக்கு மகோற்சவம் நித்தம்.

காமத்தைப் போல் பிரதமத்தில் புத்தியை மயக்கி இன்பத்தை யுண்டாக்கிப் பிறகு அருவருப்பையும், அரையாப்பு, நீரடைப்பு, நீரிழிவு, நீர்க்குத்தல், எரிச்சல், கடுப்பு, இரணம், வெள்ளை, வெட்டை, மூலம், பௌத்திரம், குஷ்டம், மேகம் முதலிய கொடிய நோய்களை யுமுண்டாக்கி, வாழ்நாள் முழுதும் தீராத்துயரத்தை யுண்டுபண்ணக் கூடியது வேறொன்றுமில்லை. பரஸ்திரீகமனமென்னும் பாழும் படுகுழியில் விழுந்து பரிதபிக்கும் நண்பர்களே! இனியாகிலும் உங்கள் காசையும் புகழையும் தோத்துவிட்டுப் பொன்போன்ற தேகத்தைப் புரையோடும் புண்ணாக்கிக்கொண்டு நாசமடையாது நல்வழியைச் சாருங்கள். மேகங்களெல்லாம் ஆகாயத்தை விட்டுத் தாசிகளுடைய தேகங்களில் வாசஞ்செய்வதால், ஆகாயத்தில் ஆசைக்குங்கூட மேக கூட்டங்கள் சிறிதும் காணப்படவில்லை. அதனால் மாரியின்றி மண்ணுலகோர் வருந்துவாராயினர். ஆனால் வேசிகளுக்கு யார் காசைக் கொடுப்பாரோ அவர்க்கே அத்தாசிகள் அம்மேகங்களைக் கொடுப்பார்கள். வேசிக்குக் காசைக் கொடுத்து மேகத்தை விலைக்கு வாங்கியவர்களின் தேகத்தில், மேக விரணமுண்டாகி அவ்விரணங்களிலிருந்து மேகநீர்கள் சதா காலமும் சொரிந்துகொண்டிருப்பதே போதிய சாக்ஷியாகும்.

மேகங்கள் யாவுமுயர் விண்ணீங்கி வேசையர்தந்
தேகங்களில் வாசஞ் செய்கையான்—மாகமிசை
யாசைக்குங் கார்காணே மவ்வேசை யார்கொடுப்பர்
காசைக் கொடுப்பார்க்குக் காண்.

பரத்தையர் வீட்டுக்குப் போய்ப்பணத்தைக் கொடுத்து விஷநீரை விலைக்கு வாங்கிக்கொள்ளாத மனுஷன், சுறுமீன், திமிங்கலம் முதலிய துஷ்ட ஜந்துக்கள் வாசஞ்செய்யும் அலைகடலில் விழுந்து, அக்கடலை கையினால் நீந்திக் கரையேறுதல்போலாம். இக்காரணம் பற்றியே மூவாசை யொழித்த பட்டினத்தடிகளும் அடியில் வருமாறு திருவாய் மலர்ந்தருளி யிருக்கிறார்கள்.



சீறும் வினையது பெண்ணுரு வாகித் திரண்டுருண்டு
கூறு முலையு மிறைச்சியு மாகிக் கொடுமையினாற்
பீறு மலமு முதிரமுஞ் சாயும் பெருங்குழிவிட்
டேறுங் கரைகண் டிலேனிறைவா கச்சியேகம்பனே.

சீயுங் குருதிச் செழுநீர் வழும்புஞ் செறிந்தெழுந்து
பாயும் புடைவையொன் றில்லாத போது பகலிரவா
யீயு மெறும்பும் புகுகின்ற யோனிக் கிரவுபகன்
மாயு மனிதரை மாயாமல் வைக்க மருந்தில்லையே.

## பரஸ்திரீ கமனமும் பல ஆபாசரோகமும்.

### பிரமேகரோகம். (GONARAHÆ-கனேரியா)

பிரமேகரோகமானது, சீழ்மேகம், வெள்ளை, வெட்டை, பிரமியம், மேககாங்கை, அல்லது மேகச்சூடு என்று சொல்லப்படும். லக்ஷணங்கள். புருஷனில் நீர்த்தாரையிலும், ஸ்திரீயில் அல்குலிலுமிருந்து சீழ் போல் வெளுத்த மேக நீர் வடிதலுக்கு வெள்ளையென்று பெயர். வியாதி ஆரம்பத்தில் நீர்த்துவாரத்தில் நமைச்சலெடுத்து ஜலம் வடியும், அதை உடனே கண்டிக்காவிட்டால் சீழாகிவிடும். அந்தச் சீழானது மூத்திரப்பை, சளிச்சவ்வு, ஆண்குறி முதலிய பாகங்களிலுண்டாகும் புண்ணினால் உண்டாகின்றது. அது வெள்ளை, பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய இந்நிறங்களில் ஒன்றாயிருக்கும். ஆண்குறியும் மூத்திரதுவாரத்தின் சளிச்சவ்வும் வீங்கி நீரானது சன்னதாரையாய் (சிலருக்கு இரண்டு பிரிவுகளாய்) முக்கலுடன் அதிக வேதனையோடிறங்கும். நீர்த்துவாரத்தில் எரிச்சலுமிருக்கும்; இராத்திரியில் கோசம் விம்மலுற்று வளைந்து அதிக நோவெடுத்து நித்திரா பங்கமுண்டாகும்: (Chordee) ரோகம் நாட்பட்டுவிட்டால் குறிகளெல்லாந் தணிந்து வடிகிற நீர், மூக்குச்சளிபோல் மாறிவிடும்; அதற்குத் தந்திமேகம் (Gleet) என்று பெயர். இந்த வியாதியில் மூத்திரத்துவாரத்திலிருந்து இரத்தம் வடிந்தால் அதற்கு ரத்தப்பிரமேகமென்றும், முழங்கால் முதலிய மூட்டுகள் வீங்கினால் அதற்குப் பிரமேகவாதரோகமென்றும், அரையில் வீங்கி நெறி கட்டினால் அதற்குப் பிரமேகத்

திரட்சி அல்லது அரையாப்பு என்றும் பெயர். இதில் சிலருக்குக் கோசத்தின் தோல் சுருங்கிவிடுவதும் சிலருக்குப் பீஜம் வீங்கி விடுவதுமுண்டு; இந்த ரோகம் சிலருக்குக் கண்டால் சீழ் வடியாமல் மூத்திரம் விடும்போது எரிவும் கடுப்பும் மூத்திர துவாரம் வீங்கி சிவந்துமிருக்கும், அதற்கு வரகூமேகம் அல்லது நாளாவர்த்தி வாதரோகம் என்றும் பெயர். வெள்ளை அடிக்கடி கண்டால் நீரடைப்புக் காணும். நீரெரிச்சலும் நடந்தால் வேதனையும் உட்கார வருத்தமாயும், அரையில் நெறிகட்டியும் சன்ன உறுப்புகள் வீங்கியுமிருக்கும். சீழுஞ்சளியுங்கலந்த மேக நீர்வடியும், சதாகாலமும் நமைச்சலுண்டாகிக் கொண்டிருப்பதால் அவ்வித ரோகிகளின் ஹஸ்தம் எப்போதும் ஜனனேந்திரியத்திற்கு நேராகவே இருக்கும். அவர்களின் வஸ்திரங்களிலும் வெள்ளையிறங்கிக் கறையுண்டாகும். அவ்விஷநீரைத் தொட்ட கையினால் கண்ணைத் தொட்டால் கண் கெட்டுப்போகும். ஸ்திரீகளுக்கு, நிதம்பங்கள், யோனி, கருப்பையின் வாய், ஆகிய இவ்விடங்களிலிருந்து மேகநீர் ஜனிக்கும், அவர்களுக்கு மெத்த உபத்திரவமிராது. ஆனால் அவர்களுக்கு அல்குலுக்குள் அதிக நமைச்சலுண்டாவதால் சம்போக விச்சையதிகமாயிருக்கும். அப்போது அவர்கள் பல்லாயிரம் பாலியர்களைத் தங்கள் இன்பமொழிகளால் இழுத்து வஞ்சித்து ஆசையை மூட்டி அவர்களிடமுள்ள காசைத் தட்டிப் பறித்துக்கொண்டு அதற்குப்பதிலாய் தங்களிடமுள்ள விஷநீரை விக்கிரயம் செய்துவிடுவார்கள். இப்பொல்லாத விஷநீர் ஒருமுறை ஒருவன் தேகத்தில் பாவினால் அவன் ஆயுள்பரியந்தம் அவ்விஷநீர் அவன் தேகத்தில் பதுங்கியிருக்கும். இன்னும் மகா உத்தமியான அவன் மனையாளையும் பீடிப்பதுமன்றி அவனது சந்ததிகளையும் சங்கிலித்துடர்போல் தொடரும். அவன் தேகத்தில் போதிய இரத்தமிருக்குமட்டும் அவ்விஷநீர் தலைகாட்டாதிருந்து, பல க்ஷீணமுண்டாகும்போது நீரடைப்பு, சதையடைப்பு, மூலம், பௌத்திரம் முதலிய கொடிய ரோகங்களை யுண்டாக்கும்.

காரணங்கள்.—அதிக போகத்தினாலும், வீடுதூரமான ஸ்திரீகளோடும் பிரசவித்து ரத்த ஒழுக்காயிருக்கிற ஸ்திரீகளோடும் போகிப்பதினாலும், வெறும் வயிற்றில் சாராயங் குடிப்பதினாலும், வெப்ப



முள்ள ஆகாரங்கள், மருந்துகள் முதலியன சாப்பிடுவதினாலும், வெயிலில் அதிகமாய் நடத்தலினாலும், சுண்ணாம்பில் சிறுநீருக்கிருப்பதினாலும், புணர்ச்சியில் விந்து ஸ்கலிதமாவதற்கு முன் ஸ்திரீயைவிட்டு நீங்கிவிடுவதினாலும், சிறுநீரை அடிக்கடி அடக்குவதினாலும், மோகத்துடன் பட்டினியாயிருப்பதினாலும், தம்பனச் சூட்டினாலும் வெள்ளை காண்பதுண்டு. அது பிரமேகரோகமல்ல, ரோகஸ்திரீயைப் புணர்ந்து சுமார் நாலைந்து நாளில் வெளிப்படுவதே பிரமேக ரோகமாம். சிலருக்கு இரண்டொரு வாரங்களுக்குப் பின்பும் வெளிக்காண்பதுண்டு. ஆகையால் புணர்ந்த மூன்றாம் நாளிலிருந்து பதினைந்து நாளைக்குள் வெள்ளை காணுமென்று பொதுவாய்ச் சொல்லலாம்.

பிரமேகரோகம் பெரும்பாலார்க்கு காண்பதுண்டு இந்தக்கொடிய ரோகத்திற்குக் கோடிக்கணக்கான சிகிச்சைகளுண்டு சிலர் எண்ணெயினங்களைப் பருகுவதும், சிலர் பச்சிலைகளை யரைத்துச் சாப்பிடுவதும், சிலர் வித்தினங்களையும், சிலர் லேகியம், ஷர்பத், முறப்பா முதலிய அவுஷதங்களையும் புசிக்கிறார்கள். ஆனால் இதற்குக் கைகண்ட அவுஷதம் இதுதானென்று நிச்சயமாய்ச் சொல்லக்கூடாமலிருக்கிறது. ஏனெனில் சிலருக்குச் சில அவுஷதங்களினால் தக்ஷணமே சௌக்யமாகிறது. வேறு சிலருக்கு அவ்வவுஷதம் ஒரு பிரயோஜனத்தையும் கொடுப்பதில்லை. இன்னும் சிலர்களுக்கு ஒரு மருந்தினாலும் தீருகிறதேயில்லை. இங்ஙனம் பலவிதமாயிருப்பினும் ரோக உற்பத்தி விபரம் அதன் லக்ஷணம் முதலியவைகளைத் தீர்க்கமாய்த் தெரிந்துகொண்டு சிகிச்சை செய்தால் பருதியைக்கண்ட பனிபோல் பறக்கும். மேலும் இதற்கு இதனடியில் வரைந்திருக்கும் அவுஷதங்கள்யாவும் மிகவும் உத்கிருஷ்டமும் உண்மையுள்ள அவுஷதங்களாகும்.

சிகிச்சை.—பிரமேக ரோகத்திற்கெல்லாம் பிரதமத்தில் பேதிக்குக் கொடுத்துக் குடலைச் சுத்திசெய்துகொண்டு, பிறகு அவுஷதப் பிரயோகம் செய்ய வேண்டியது. பிரமேக ரோகம் கண்டிருக்கும்போது ஸ்திரீகளைப் பார்ப்பதும் அவர்களுடன் சம்பாஷிப்பதும் காமநூல்களைப் படிப்பதும் கேட்பதும்கூடாது. இன்னும், காப்பி, தேயிலை, மதுபானம் முதலிய வெப்பமுள்ள பானங்களை ஒருபோதும் பருகக்கூடாது.

வாய்வுபதார்த்தங்கள், இறைச்சிகள், புஷ்டியான போஜன பதார்த்தங்கள், அதிக காரம், புளி, புகையிலை முதலியவைகளை முற்றும் நீக்க வேண்டியது. மரக்கறி, கொடிக்கறி, செடிக்கறி முதலிய சாகபதார்த்தங்களுடன், பசும்பால் கூட்டி இலகுவாய் ஜீரணிக்கத்தக்க ஆகாரங்களையும் புசிக்கவேண்டியது. ரோகி வெயிலில் திரியாது நிம்மதியாய் படுத்திருக்கவேண்டியது.

1. வெள்ளை கண்டிருக்கும்போது இராக்காலங்களில் ஆண்குறி விம்மலடைந்து அதனால் நித்திராபங்கமும், வேதனையும் உண்டாகுமானால் குளிர்ந்த ஜலத்தில் கந்தைத் துணியை நனைத்து லிங்கத்தின் மேல் சுற்றி வைக்கவும், நீர்த்துவாரத்தில் எரிச்சலுண்டானால் ஆமணக்கெண்ணை தடவவும். நீர்ச்சுருக்கு நிற்கவேண்டுமானால், துளசிவிதை, யானை நெருஞ்சி, செருப்படை, தண்ணீர் விட்டான் கிழங்கு, ஆளிவிரை, பேதேனு, துத்திவேர், நிலப்பனங்கிழங்கு முதலியவைகளைத் தனித்தேனும் அகப்பட்டவைகளைச் சேர்த்தேனும் கஷாயமிட்டுக் கொடுக்கலாம். பார்லியரிசிக்கஞ்சி, வெடியுப்புச்சேர்ந்த கஞ்சித்தண்ணீர், விளாம்பிசின் சேர்ந்த ஜலம் முதலியவைகளும் கொடுக்கவுதவும்.

2. நன்னாரிவேர் 1, வால்மிளகு 4, பறங்கிப்பட்டை 2, கொத்தமல்லி 3, கற்கண்டுப் பொடி 8, இவற்றின் சூரணங்களை மேற்கண்ட வீதம் பங்குக் கணக்காய்ச்சேர்த்து வைத்துக்கொண்டு அதில் 1-முதல் 2-விராகனிடைவீதம் இளநீரில் கலந்து தினம் ஒன்றுக்கு 3-4-ஆவர்த்தி அருந்தி வருவதினாலும் சுகுணமுண்டாகும்.

3. அத்திப்பிஞ்சைத் தேங்காய்ப் பால் விட்டிடித்துப் பிழிந்த ரசம் ஆழாக்கு ஒன்றில், ஒரு விராகனிடை வெள்ளைக்குங்கிலியத்தைப் பொடித்துப் போட்டு 3-தினத்திற்குக் காலையில் மட்டும் கொடுத்து வரக்குணமுண்டாகும்.

4. சுண்ணாம்புத் தெளிவு நீருடன் சுத்தமான எள்ளெண்ணை சமன்கூட்டி வேளை யொன்றுக்கு ஆழாக்கு வீதம் 5-தினத்திற்குக் காலையில் மட்டும் கொடுத்து வருவதினால் நன்மையுண்டாகும்.

5. சந்தனக்கட்டை, அகிற்கட்டை, ஏலம், லவங்கப்பட்டை, கிராம்பு, சோம்பு, ஏலம், கார்போகவரிசி, வெட்பாலையரிசி, தேற்றான் கொட்டை, அறுகம் வேர், சிற்றாமுட்டி வேர் முதலியவைகளை யோர் நிறையாய் இடித்துச் சூரணித்து அதற்குச் சமனிடை கற்கண்டு பொடி கூட்டி, ½-¾-அல்லது 1-தோலாவீதம் காலைமாலை இருவேளையும் வெண்ணையிற் குழைத்துச் சாப்பிட்டு வருவதினால் நாட்பட்ட வெள்ளை, நீரெரிச்சல், நீர்க்கடுப்பு, நீர் அடைப்பு முதலியன நீங்கும்.



6. பசுவின்பால், பசுவின் நெய் வகைக்குப் படி 1, வாழைப்பூச்சார், வாழைக்கிழங்குச்சார் வகைக்குப்படி ½, சீரகம், சீந்தில் சர்க்கரை வகைக்குப் பலம் ¾, இவற்றை ஒன்றாய்க்கூட்டி நீர் சுண்டக் காய்ச்சி, காலை மாலை இருவேளையும் வேளையொன்றுக்கு ஒரு சிறு கரண்டி வீதம் உட்கொண்டு வருவதினால், அல்குல், ஆண்குறி முதலியவைகளிலுள்ள வெப்பத்தைப் போக்கி இரணத்தை யாற்றும்.

7. இன்னும் ரோக ஆரம்பத்திலேயே 2-கிறேன்ஸ் காடிக்காரத்தை 8-அவுன்ஸ் சுத்த ஜலத்தில் கூட்டியேனும், அல்லது நாக உப்பு 20-கிறேன்ஸ், அபினி பாவனத்திரவம் ½-திராம், சுத்த ஜலம் 8-அவுன்ஸ் இம்மூன்றையும் ஒன்றாய்க்கூட்டி வைத்துக்கொண்டு, ஆண்குறியை இடதுகையில் பிடித்துக்கொண்டு பீச்சாங்குழலால் மேற்படி ஜலத்தை நீர்த்துவாரத்திலடித்துச் சிறிதுநேரம்வரையில் வைத்திருந்து பிறகு நீரை வெளிப்படுத்திவிடவும். இப்படியாகத் தினம் 1-க்கு 4, 5 ஆவர்த்திசெய்து வருவதினால் நீர்த்தாரையிலுள்ள இரணமாறி வேதனை தணிந்து வெள்ளை மாறும். (Injections. Nitrate of Silver 2 grains, Warm water 8 oz,—or, Sulphate of zing 20 grains, Tincture of opium 30 minims, Warm water 8 oz, Mix well, useful for whites and womb diseases.)

8. தந்திமேகம் (Gleet—க்ளீட்) அதாவது நாட்பட்ட பிரமேகத்திற்கு 7-வது பாராவில் கண்ட நாகஉப்பு கூட்டிய அபினி ஜலத்தைப் பீச்சி வருவதோடுங்கூட, குங்கிலியத்தயிலம் 8, (Oil Copaiba) வால்மிளகுப்பொடி 24, (Pulvis Cubebæ) குராசானி யோமச்சத்து 1, (Extract Hyoseyami) கற்பூரம் 1, இவைகளைத் தேவையான தேன் கூட்டி மாத்திரை செய்துகொண்டு தினம் 3, 4-தரம் சுண்டைக்காய்ப்பிரமாணம் சாப்பிட்டு வருவதினால் சுகுணமுண்டாகும்.

9. குங்கிலியத்தயிலம் (Oil Copaiba) அல்லது சந்தனத்தையிலம் (Sandal Wood Oil) முதலியவற்றில் 7-8-துளியை, கொஞ்சம் ஒயினில் (Wine) கலந்து, தினம் 3-4 தடவை சாப்பிட்டு வருவதுடன், பூஜி (Bougie) என்னும் சிலாக்குமேல் குங்கிலியத் தயிலத்தைப் பூசி, நீர் துவாரத்தில் செலுத்திக்கொண்டு வருவதுடன், மூத்திரக்காற்றில் உலாவிவரவேண்டும். இத்துடன் தேகதாருட்டியத்தையும் இரத்த விருத்தியையும் கொடுக்கக்கூடிய, நன்னாரிவேர், வேப்பம்பட்டை, குவாஷியா, நிலவேம்பு, அயம் முதலிய மருந்துகளில் ஏதேனும் ஒன்றைச் சாப்பிட்டு வருவதினால் சௌக்கியமுண்டாகும்.

10. இன்னும் நாட்பட்ட பிரமேகத்திற்கு, குங்கிலியத்தயிலம், 1-அவுன்ஸ், லிகுவர்பொட்டாஷ் ½-அவுன்ஸ், ஸ்பிரிட்ஸ் ஈதரிஸ் நைட்ரோஸி ½-அவுன்ஸ், கருவப்பிசின் சூரணம் 80-கிறேன்ஸ், டிஞ்சுரா ஐயோஸ்ஸியாமி ½-அவுன்ஸ், கருவாப்பட்டைத்தீநீர் 5½-அவுன்ஸ் இவைகளை ஒன்றாய்க்கூட்டி நன்றாய்அரைத்து மிசிரமித்துக்கொண்டு, வேளையொன்றுக்கு 1-அவுன்ஸ்வீதம், தினம் 2வேளைகொடுத்துவரவும். (Oleum copaiba 1 oz, Liquor Potassæ ½ oz, Sprıt Aether Nitrosi ½ oz, Acacia Powder 80 grains, Tincture Hyoscyamus ½, Aqua cinnamomi 5½. Mex well, Dose-one oz to be taken 3times a day for the Chronic affections of the Gleet.)

11. ஸ்திரீகளுக்குக் காணுகிற பிரமேகரோகங்களுக்கு ரோகஸ்திரீயைச் சயனித்துக்கொள்ளச்செய்து, போஸ்தகாய் போட்டுக் காய்ச்சினவெந்நீர் ஒத்தடம் கொடுப்பதுடன் அல்குலை அடிக்கடி வெந்நீரினால் அலம்பிச் சுத்திசெய்து, பன்றி நெய் (Prepared lard) தடவிக்கொண்டு வருவதினாலும் சுகுணமுண்டு. இன்னும் 7-வது பாராவில் கண்ட துவர்ஜலங்களொன்றில் கந்தைத்துணியை நனைத்து, நிதம்பங்களின் மத்தியில் வைப்பதினால் அல்குலிலுள்ள அழற்சிமாறும். பிறகு வேப்பம்பட்டைக் கஷாயத்தைப் பீச்சாங்குழலினால் பீச்சிவருவதனால் விரணமாறி எரிச்சல் வேதனை முதலிய துர்க்குணங்கள் நீங்கும், இன்னும் 1-முதல் 10-பாராக்களில்கண்ட அவுஷதங்களையும் சமயோஜிதம்போல் உபயோகித்து வருவதினால் சுகுணமுண்டாகும்.



## பிரமேகவாதம்.

### (RHEUMATISM GONORRHÆL-ரூமாடிஸம் கனோரியல்)

பிரமேகவாதமானது கைகால் பிடிப்பு, முடக்குவாதம், மேகவாதம், மேகப்பிடிப்பு, மேகவாயு, சந்துவாதம், சந்துவாயு, சூலைக்கட்டு, சூலைவாயு, கைகால்பிடிப்பு, சந்திகசிலேஷ்மகரோகம், அல்லது வாதச்சூலை எனப் பலநாமம் பெறும். இது துர்வியாபாரத்தினால் சரீரத்தில் விஷநீர் சம்மந்தமுண்டாகி நர்வ்ஸ் என்னும் ஸ்பரிச நரம்புகளை யனுசரித்துக் காணுகிற ஓர்வித வாதரோகம். லக்ஷணங்கள்—இதில் முழங்கை, முழங்கால், கணுக்கை, கணுக்கால் முதலிய மூட்டுகளில் வீக்கமுண்டாகி வேதனை பிறக்கும். கைகால் அசைக்கக்கூடாமையாயிருக்கும். வீக்கத்தின் மேல் துணி சமேதம் படக்கூடாத அவ்வளவு வேதனையாயிருக்கும். வேதனை விட்டுவிட்டுக்காணும், தேகமாத்தியந்தம் பச்சைப்புண்ணாய் இருக்கும், ஜுரம் காயும், பிசுபிசுப்பும் துர்வாசனையும் கற்றாழை நாற்றமுமுள்ள வியர்வை பிறக்கும். நாடிநடை தீவிரமாய் நடக்கும், மலபந்தமுண்டாகும். இந்த வியாதியில் சிலருக்கு வேதனையானது இடம் விட்டு இடம் மாறும்படியான ஓர் விசேஷ குணமுண்டு. எப்படியெனில் ஒரு மூட்டிலிருக்கிற தாபிதம் அடுத்த நிமிஷத்தில் வேறொரு மூட்டை யனுசரிக்கும். கடியாரத்திலுள்ள முள்ளானது சதா சஞ்சரித்துக்கொண்டிருப்பது போலவே இந்நோயின் தாபிதமும் பிரதி மூட்டுகளுக்கும் சென்று பிறகு பூர்வஸ்தானத்திற்கே வருவதுமுண்டு. மூத்திரம் குறைந்து சிவந்து, யூரிக் ஆஸிட் (Uric Acid) என்னும் வஸ்து கலந்திருக்கும். நாக்குமேல் மாவுப்படிந்திருப்பதுடன் உமிழ்நீர் புளிப்பாயிருக்கும். மூட்டுகளிலிருக்கிற வாயுவானது இருதயத்திற்குச் செல்லுவதுமுண்டு. இது மிகவும் அபாயகரமானது.

சிகிச்சை.—பிரமேகவாதரோகத்திற்குச் சிகிச்சைகள் அநேகவிதமுண்டு. பிரதமத்தில் வியாதியை விளைவித்த காரணத்தை நீக்கவேண்டியது. நோயாளியை நிம்மதியாய்ப்படுக்கவைத்துக் கஞ்சியினங்களாகிய இலகுவான ஆகாரங்களும், பசும்பால், சூப்பு, ஷெரி ஒயின் முதலிய போஷணகாரிகளும் கொடுக்கவேண்டியது. சர்க்கரை அதிகம் சேர்க்க

லாகாது. பேதிக்குக் கொடுத்துக் குடலைச் சுத்திசெய்யவேண்டியது. வேதனை தணிவதற்கும் நித்திரையுண்டாவதற்கும் குறைந்த அளவாக அபினியைக்கொடுக்கலாம். ஸோடா உப்பில் 3-கிறேன்ஸ் பிரமாணமாக தினம் 3, 4-முறை கொடுக்கலாமென்று ஓர் மேல் நாட்டு வைத்தியர் சொல்லுகிறார். இன்னும் 5-கிறேன்ஸ், டோவர்ஸ் பௌடரை (Dovers Powder) 3, 4-மணிக்கொருமுறை கொடுப்பதினாலும், ஸோடிஸாலிஸலேட் (Sodi salicylate) என்னும்உப்பில் 10-கிறேன்ஸ் அளவாகத் தினம் 3; 4-தரம் கொடுப்பதினாலும் சுகுணமுண்டு. இன்னும் நைட்ரேட் ஆவ் பொட்டாஷ்யம் 20-கிறேன்ஸ், ஸ்பிரிட்ஸ் ஆவ் ஈதர் நைட்ரோஸி 2-திராம், வைனம் கால்ஷிகம் 2-திராம், தீநீர் 8-அவுன்ஸ், இவற்றை ஒன்றாகக்கூட்டி வேளை 1-க்கு 2-மேஜைக்கரண்டி வீதம் தினம் 1-க்கு 3-தரம் கொடுக்கவும். (Nitrate of Potash 20 gr. Sprits of Aether nitrous 2 dr, wine of culchicum 2 dr. Distilled water 8 ozs, Make a mixturə—Dose two table spoonfuls 3-times a day for Rheumatism.)

வேதனையுள்ளவிடத்தில் கடுகை முருங்கைவேர் ரசம் விட்டரைத்துப் பற்றுப்போடலாம். வேலிப்பருத்தி ரசம் பூசலாம். கஞ்சா இலை, துத்தி இலை, மாசிப்பத்திரி இலை, ஊமத்தன் இலை, துத்தி இலை, தும்பை இலை, எருக்கன் இலை, கருஞ்செம்பை இலை, முதலியவைகளிலொன்றை வதக்கி ஒற்றிடம் கொடுக்கலாம். போஸ்தக்காய் கஷாயமும் ஒற்றிடம் கொடுக்கலாம். இன்னும் கற்பூரத்தைலம், மண் தைலம் (Petroleum) கஜபுட் ஆயில் (Cajuput oil) முதலிய தைலங்களையும் வேதனையுள்ள விடங்களில் தேய்ப்பதினாலும் சுகுணமுண்டு. இன்னும் நம்முடைய கைவசமிருக்கும் வாதமர்த்தன தைலத்தை உபயோகிப்பதினால் வீக்கம் குறைந்து வேதனை தணியும்.

### பிரமேகத்திரக்ஷி. (BUBO—பூபோ)

பிரமேகத்திரக்ஷியானது, பிரமேகக் கட்டி, அரையாப்புக்கட்டி அல்லது வம்க்ஷண ஸ்தான வித்திரதி எனப் பல நாமம் பெறும். அரையின் மடிப்புக்கு மேல் அரையாப்புக்கட்டி காணும். அது ஒரே நெறியை மாத்திரம் பற்றி யிருக்கும், அரையின் மடிப்புக்குக் கீழ் 2—3 மாமிச



கிரந்திகள் வீங்கிவேதனை எடுத்தால் அதற்கு நெறியென்று பேர். சாதாரணமான நெறிக்கும் அரையாப்புக் கட்டிக்கும் இருக்கிற வித்தியாசமிதுதான். இதனைக் கண்டறிந்து சிகிச்சை செய்வது வைத்தியர்களின் கடமையாகும். ரோக ஸ்திரீயைப் புணர்ந்து அதன் காரணத்தால் தேகத்தில் விஷநீர் வியாபித்து இந்தக் கட்டி உண்டாகிறது. இந்தக் கட்டியானது நோயாளியை நிமிரவும் குனியவும் முடியாதபடிக்கு அரையில் ஆப்புவைத்து அடித்ததுபோ லிருப்பதால் இதற்கு அரையாப்பு, என்று பெரியோர் பேர்கொடுத்திருக்கிறார்கள்.

சிகிச்சை.—அரையாப்புக் கட்டிக்கு ஆரம்பத்தில் பேதிக்குக் கொடுத்துக் குடலை சுத்தி செய்துகொண்டு பிறகு கட்டி கரைவதற்கான முயற்சிசெய்யவேண்டியது. அதற்கு வசப்படாவிட்டால் கட்டியைப் பழுக்கவைத்துக் கத்தியால் கீறிசீழைவெளிப்படுத்தி விடவேண்டியது, ஒரு புட்டி சுத்தஜலத்தில் 3-விராகனிடை நவக்ஷாரத்தைக்கரைத்து அதில் கந்தைத் துணியை நனைத்துக் கட்டியின்மேல் போட்டுக்கொண்டிருப்பதினால் கட்டி கரையும். வெங்காயம், வெள்ளுள்ளி, அமுக்கராக் கிழங்கு இவைகளைச் சமனாக அரைத்துப்போடக் கட்டிகரையும். வெள்ளைப்பூண்டும் எருக்கன் பிஞ்சும் சமனிடையாய் உமிக்காந்தலில் வெதுப்பி அரைத்துப் போடக் கட்டிகரையும். ஐயோடின் (Iodin) என்னும் மருந்தைத் தடவுவதினாலும், ரசப் பிளாஸ்திரியை (Emplastrum Hydrargyri) தோலின்மேற் றடவிப் போடுவதினாலும், தேன், சுண்ணாம்பு, அரிசிமா இவைமூன்றையும் குழைத்துப்போடுவதினாலும் கட்டி கரையும். கட்டியைப்பழுக்கவைக்கும் மருந்துகளாவன. கற்பூரத்தோடு சாம்பிராணி சேர்த்தரைக்க மெழுகாகும். அதைத் துணியிற் றடவி கட்டியின்மேல் போட கட்டி பழுத்து உடையும். துத்தியிலையுடன் கரியபோளம் கூட்டி அரைத்துப் பற்றுப் போடகட்டி பழுத்துடையும். வெண்டைக்காய், ஆமணக்கிலை, ஊமத்தன் இலை, முள்ளிக்கீரை, சேப்பங்கிழங்கு, புளிச்சக்கீரை இவைகளிலொன்றை வதக்கி வைத்துக் கட்டிக்கொண்டு வந்தால் கட்டி பழுத்து உடையும். அரசிமாவுக்களி, ஆளிவிரைக்களி, கேழ்வரகு மாவுக்களி இவைகளிலொன்றை வைத்துக் கட்டுவதினாலும், புளித்த சோற்றையாவது; எள்ளையாவது அரைத்துக் கட்டி

வருவதினாலும் கட்டிபழுத்து உடையும்அக்கினிப் பிளாஸ்திரி(Empla Strum Cantharidis) அல்லது காடிக்காரம்(Silver Nirate)போட்டுப் புண்ணாக்குவதும் உண்டு.


கட்டி பழுத்துச் சீழ் பிடித்து விட்டால் மாவுக்களியை இடைவிடாது கட்டிவரவும். நன்ராய் பழுத்தபிறகு கத்தியால் கீறி சீழை வெளிப்படுத்திவிட்டு, திரும்பவும் களியையே கட்டிக்கொண்டு வரவேண்டியது. ரஸம் 8, பன்றி நெய் 8, சுத்திசெய்த ஆட்டுக் கொழுப்பு ½, இவைகளைச் சேர்த்து ரஸம் மறையும்படி அரைத்துத் துணியில் தடவி இரணத்தின்மேல் போட விரணம் ஆறும். லிங்கம், மிருதார்சிங்கு, ரசகற்பூரம், வெள்ளைக் குங்குலியம், கடுக்காய், மாசிக்காய், காசுக்கட்டி, தான்றிக்காய், இவைகளையோர் நிறையாய் எடுத்து பசுவின் வெண்ணை கூட்டிமைபோலரைத்து, கந்தையில் தடவி விரணத்தின்மேல் போட்டுவர விரணம் சீக்கிரம் ஆறும். காட்டுச் சீரகம், கார்போகவரிசி, கஸ்தூரிமஞ்சள், நீரடிமுத்துவின் பருப்பு, மிருதார்சிங்கு, கந்தகம், துத்தம், துரிசி, ரஸம், கற்பூரம், ரசகற்பூரம், ஏலம், கஸ்தூரிமஞ்சள் இவற்றில் 1-விராகனிடை வீதம் எடுத்து 1-படி தேங்காய்ப் பாலில் போட்டுச் சிறுதீயிட்டெரித்து, எண்ணை பதத்தில் வடித்து எடுத்து வைத்துக்கொண்டு, அதில் கந்தையை நனைத்து விரணத்தின்மேல் போட்டுவர சர்வமேக ரணங்களும் ஆறும். நோயாளிக்குத் தாருட்டியகாரியான, அயம், நிலவேம்பு, வேப்பம்பட்டைக் கஷாயம், ஈஸ்டன்ஸ் ஸிரப் (Easton's syrup) முதலியவைகளில் ஏதேனும் ஒன்றைக்கொடுத்து தேகதிடத்தைத் விருத்தி செய்ய வேண்டியது.

## பறங்கிப்புண். (CHANCRE—ஷாங்கர்)

மேகவிரணமானது, மேகப்புண், பறங்கிப்புண், கொருக்கு, குய்ய ரோகம், அலவிரோகம் அல்லது உபதம்ஸரோகம் எனப் பல நாமம் பெறும். இந்த ரோகமானது பறங்கிக்காரர்களின் மூலமாய் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டதால் இதற்குப் பறங்கிரோகமென்று பேர் உண்டாயிற்று. மேகவிரண விஷநீருள்ள ஸ்திரீயோடு சம்போகிக்கும் போது உபஸ்தத்திலிருக்கிற விஷநீர், ஆண்குறியின்மேல் எந்தவிடத்



தில் படுகின்றதோ அந்த ஸ்தானத்தில் விரணம் உண்டாகும். சம்போகம் செய்ததிலிருந்து பத்துதினங்களுக்குள் பறங்கிப்புண் உண்டாகுமென்று ஒருவாறு சொல்லலாம். ஆனால் ஆறு வாரங்களுக்கு மேற்பட்டுங்கூட சிலர்களுக்கு விரணம் காண்பதுண்டு. மலரின்மேலாவது, மலருக்கடியிருக்கும் ஜவ்வுமடிப்பிலாவது,மலரை மூடிக்கொண்டிருக்கும் தோலுக்குள்ளாவது விரணம் காண்பது வழக்கம். லிங்கத்தின்மேல் சாதாரண விரணங்களும் காண்பதுண்டு. ஆகையால் ஆண்குறிமேல் காணுகிற எல்லாவித விரணங்களையும் மேகவிரணங்களென்று தீர்மானிக்கலாகாது.



(Chancre-ஷாங்கர்) இந்தப் படத்தில் ஆண் குறியின் மேலிருக்கும் மேகவிரணத்தைக் காட்டப் பட்டிருக்கிறது.

லக்ஷணங்கள்.—மேகவிரணம் நான்குவகைப்படும், ஒருஜாதியில் (Hard Chancre) விரணத்துக்கடியில் விருத்தமாய்க் கல்லைப்போல் கட்டியாயிருக்கும். மற்றொரு ஜாதிவிரணம் (Soft Chancre) மிருதுவாய் இருக்கும். வேறொரு ஜாதிவிரணம்(Spreading Sore)வெகுவேகமாய்ப் பரவிவிடும். கடைசிஜாதி விரணம் (Sloughing Sore) அழுகி துர் மாமிசம் உண்டாகும். இம்மகா கொடிய ரோகத்தைப் போல் தேகத்தைக் கெடுப்பது வேறொன்றுமில்லை. இது தேகத்திலுள்ள சகல தாதுக்களையும் உள்ளுறுப்புகளையும் கெடுத்துவிடுகிறது புருஷனுடைய மேகவிரணமானது அவனுடைய பெண்சாதிக்கும் தடரும். ஆனால் ஸ்திரீகளுக்கு மேகவிரணமெழுத்த உபத்திரவப்படுத்தாது. யோனிக்குள் வெகுதூரத்தில் விரணமிருந்தால் கண்ணுக்குத்தெரியாது. அவர்களுக்கும் அதனால் யாதொரு அசௌக்கியமுமிராது. பார்வைக்கும் பகட்டாயிருப்பாள், இவளுடைய கண்ணியில் அகப்பட்ட ஆடவர்களின் கெதி அதோ கெதிதான்.

சிகிச்சை.—மேகவிரணம் உற்பத்தியான 5-6-தினங்களுக்குள் பொட்டிலுப்பு திராவகத்தையாவது, (Nitric acid) காடிக் காரத்தைத் (Silver nitrate) தடவியாவது விஷநீரை முறித்துவிட்டால், அது அடியோடு ஒழிந்துபோம். ஆனால் ஆரம்பத்திலேயே சிகிச்சை செய்து கொள்பவர்கள்தான் கிடையாது. விரணத்தின் அடி கனத்துவிட்டால் தேகத்தில் விஷநீர் வியாபித்து விட்டதாக அறிந்துகொள்ளவேண்டியது. பிரதமத்தில் பேதிக்குக் கொடுத்துக் குடலைச் சுத்தி செய்ய வேண்டியது. நோயாளியை நிம்மதியாய் இருக்கும்படி செய்யவேண்

டியது. ரஸபஸ்பம்(Calomel) $\frac{1}{2}$-கிராகனிடை சுண்ணாம்பு தண்ணீர்
$\frac{1}{2}$-படி, விளாம்பிசினியின் தூள் $\frac{1}{6}$-கிராகனிடை இம்மூன்றையும் கூட்
டிச்செய்யப்படுகிற பூரக்கிலேதத்தினால் (Black wash) விரணத்தை
அலம்பி வருவதோடுங்கூட அதில் கந்தைத்துணியை நனைத்து விரணத்
தின்மேற் சுற்றிவைப்பதினாலும் சுகமுண்டு, விரணத்தின் கனப்பும்
வீரியமும் தணிகிறவரையில் ரஸசம்மந்தமான மருந்துகள் கொடுத்து
வரவேண்டியது. ரஸபஸ்மத்துடன் மெழுகுக்களிம்புக் கூட்டி விரணத்
தின்மேல் போட்டு வர விரணம் காயும். ஐடோபாரத்துடன் (Iodo
form) வெண்காரப்பதங்கம் (Boric acid) கூட்டி விரணத்தின்மேல்
தூவி வருவதினாலும் விரணம் காயும். துர்மாமிசம் வளர்ந்து விரணம்
உலரத்தாமதப்பட்டால் காடிக்காரம், அல்லது துருசுவைத்துக் கரைக்க
வேண்டியது. இந்த ரோகத்திற்குக் கடும்பத்தியம் வைப்பது சுதேச
வைத்தியர்களின் வழக்கம். இதற்குக் கடும்பத்தியம் உதவாது. வாரத்
திற்கு இருமுறை நீராவி ஸ்நானம்(Vapour Bath)செய்து வருவதினா
லும், இரவு படுக்கைக்குப்போகு முன் ஆசன ஸ்நானம் செய்து வரு
வதினாலும் சுகுணமுண்டாகும்.

## பறங்கிரோகம். (SYPHILIS—ஸீபிலிஸ்)

மேகவிரண விஷநீரினால் காணும் ரோகங்கள் இருவகைப்படும்.
அதாவது ஆண் குறியின்மேல் விஷநீர்பட்டு அதனால் உண்டாகும்
விரணங்களுக்கு, முதல்பருவ பறங்கிரோகமென்றும், (Primary sy-
philis) மேகவிரண விஷநீரானது ரத்தத்தோடு கலந்து தேகத்தி



இந்தப் படம் மேக விஷ
நீரினால்காணும் கிரந்திமேகம்,
மேகப்புடை,மேகச்சொறிமுத
லியவைகளைக் காட்டுகிறது.

லூறி, மேகசூலை, மேகச்சொறி, மேகசிரங்கு.
மேகப்புடை, கிரந்தி, நயனரோகம், சிரோ
ரோகம், அஸ்திரோகம், நீரிழிவு, நீரடைப்பு, கல்
லடைப்பு, தசையடைப்பு, குஷ்டம், நபும்ஸகம்,
ஆண்மலடு முதலிய ரோகங்கள் உண்டாவதற்கு
இரண்டாம் பருவப்பறங்கிரோகமென்றும், (Se-
condary Syphilis) மூன்று வருஷம் கிரமித்து
விட்டால் அதற்கு மூன்றாம் பருவப் பறங்கி
ரோகம் (Tertiary Syphilis) என்றும் பேர்.
இதுவே மகா கொடிய பருவம், இக்கொடிய
ரோகமானது, கண், காது, நாசி, நாக்கு, ஈரல்,
நுரையீரல், அஸ்தி முதலிய அவயவங்களைத்
தாக்கி அவற்றை அழுகச்செய்யும். இவ்வித



ரோகம் சுவஸ்தமாவது மிகவும் கஷ்டம். வேசியர்களிடம் காசைக்
கொடுத்து விஷநீரை விலைக்கு வாங்கும் ஆடவர்கள் அவ்விஷநீரை,
மாசற்ற தங்கள் மனைவியர்களுக்கும் ஒட்டவைத்து விடுவதால், அவ
ளுக்குக் கருத்தரித்தால் அக்கருவிற்கும் அவ்விஷநீர் பரவி, நாலைந்துமா
தங்களுக்குள் வயிற்றுக்குள் பிண்டம் மரித்து வெளியாவதுமுண்டு.
இவ்வியாதியுள்ள ஸ்திரீகளுக்கு அடிக்கடி கருவழிவு உண்டாவது வழக்
கம். ஒருவேளை சிசு ஜீவித்திருந்தாலும் தேவாங்கைப்போல் தேகம்
மெலிவுற்றிருக்கும். ஆசனம், அல்குல், வாய் முதலிய விடங்க
ளில் தாம்பிர நிறமான வர்ணத்துடன் சிசு ஜனிப்பது வழக்
கம். ஜனன காலத்தில் மேற்கண்ட குறிகள் இல்லாவிட்டாலும், சிறிது
நாட் சென்ற பிறகாவது மேற்கண்ட ரோகங்கள் காணப்படும். இன்
னும் ஸ்திரீகளுக்கு அல்குலில் மேகவிரணத்தின் விஷ நீர் இருக்குமா
னால் சிசு ஜனனமாகும்போது அவ்விஷ நீர் சிசுவுக்கும் பட்டு, அதற்
கும் மேகரோகம் பிறக்கும். அக்குழந்தைக்குப் பால் கொடுக்கிற
தாதிக்கும் குழந்தையின் வாய் வழியாக விஷநீர் வியாபித்து
முலைக்காம்பில் விரணம் காணும். அதன் பிறகு அவளுக்கு மஹா
கொடிய மேகச் சிரங்கும், மேகப் புடைகளும் உண்டாகும். இக்
கொடிய ரோகமானது குக்கிராமங்களைக் காட்டிலும் வேசியர்கள்
நிறைந்த பட்டினங்களிலேயே விசேஷமாய்ப் பரவி இருக்கிறது.
இந்நுண்மையை அறியவேண்டுமானால் ஒவ்வொரு பட்டினங்களிலு
முள்ள தர்ம வைத்தியசாலைகளிலும் (Hospitals) வைக்கப்பட்டிருக்
கும் நோயாளிகளின் பதிவுப் புத்தகத்தை (Patient Admission
Register Book) பார்வையிட்டால் நன்கு விளங்கும்.

விபசாரத் தொழில் செய்யும் ஒவ்வொரு வேசியரும் தங்களைச்
சேருவதற்காக வரும் யவ்வன புருஷர்களிடமிருந்து கிடைத்தவரை
யில் பொருளைப் பறித்துக்கொண்டு, அவர்களுக்கென்றே சம்பாதித்து
மிகவும் பதனமாக வைத்திருக்கும் பறங்கிரோகத்தைக் கொடுத்து
விடுகிறார்கள். அந்நோயும் பருத்திப்பொதியில் தீப்பிடிப்பதுபோல்
பிடித்துக்கொள்ளுகிறது. அதனால் அவர்களடையும் அவஸ்தையை
அனுபோகசாலிகள் திட்டமாக அறிவார்கள். பரத்தையரிடம்

பணத்தைக்கொடுத்து விலைக்குவாங்கிய பறங்கிரோகத்திற்குப் பரிகாரம் செய்யும் வைத்தியர்களிடம் தெரிவிக்க லஜ்ஜைப்பட்டு அக்கொடியநோய்க்கே இறையானோர் அநேகம் பேர் உண்டு.ஆகவே ஆப்பதனைப் பிடித்து அசைத்த பேய்க்குரங்குபோல் விழிக்கவேண்டும். பரத்தையர் போகத்தை விரும்பும் யவ்வன புருஷர்கள் தங்களின் கைக்காசையும் போக்கி, கடனாளியாகி, முடிவில் காராக்கிரகப் பிரவேசமடைந்து "விந்து விட்டாயா நொந்து கெட்டாயா" என்னும் வசனத்துக்கிணங்க தங்கள் தேகசுகத்தையுமிழந்து, நடைப்பிணத்திலும் கடைப்பிணமாய் கஷ்டப்படுவதை நாம் என்னென்று சொல்லலாம்.

நெடுங்காமம் முற்பயகும் சின்னீர இன்பத்தின் முற்றிழாய்—
பிற்பயக்கும் பீழை பெரிது. (குறள்)

சிகிச்சை.—இவ்வியாதியை வேரோடறுக்கப் பாதரஸமே விசேஷமானது, ஆனால் பாதரஸத்தை நோயாளிக்குக் கொடுப்பது இருவகைப்படும், பாதரஸத்தைப் பக்குவம் செய்து உள்ளுக்குக் கொடுப்பது ஒன்று, சர்மத்தின் மேல் உபயோகிப்பதொன்று உள்ளுக்குக் கொடுப்பதைப் பார்க்கிலும், மேலுக்கு உபயோகிப்பதே நன்மையாகும். பறங்கிரோகக் குறிகள் கண்ட மாத்திரத்தில் ரசத்தைலம், ரசமெழுகு (Blue pill) முதலிய சாந்தமான ரசமருந்துகளைக் கொடுத்து நோயை வசப்படுத்த வேண்டியது நம் நாட்டிலுள்ள சில பாமர வைத்தியர்கள், இவ்வித ரோகங்களுக்குப் பச்சைவெட்டு பாஷாணங்களையும், பாதரசங்களையுங் கொடுத்துக் கடும்பத்தியம் வைத்து வீணில் ஜனங்களைக் கொல்லுவது வழக்கம், இவ்வித அவுஷதப் பிரயோகங்களினால் நோய் நீங்குவது சற்று சந்தேகமாயினும் நோயாளியின் பற்கள் கூட்டோடு கொட்டிப் போவதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. இவ்வித வைத்தியர்களிடம் சிகிச்சை செய்து கொண்ட அநேகம் நோயாளிகள், வாய்த்தவிடம் போய் அடுப்பு நெருப்பும் போன கதைபோல் கைக்காசையும் போக்கி, வாய்ப் பற்களையும் போக்கிப் பொக்கைவாயர்களாய்ப் பரிதவிப்பதை உங்களில் அநேகர் அறிந்திருக்கலாம். இவ்வித கெட்ட வழக்கங்கள் நம் நாட்டைவிட்டு எப்போது நீங்குமோ அதைக் கடவுளே அறிவர். ரோகிகள் வைத்தியர்களை



அனுசரிப்பது அனுகூலத்திற்கு அல்லவா. ரோக நிதானம் தெரியாதவர்கள் சிகிச்சைசெய்ய உட்படலாகாது. இன்னும் சில வைத்தியர்கள் இவ்வித ரோகங்களுக்கு மேகராஜாங்க எண்ணெய்களைக் கொடுத்து உப்பில்லாப் பத்தியம் வைக்கிறார்கள். பத்தியம் வைப்பதினால் சிலருக்கு நன்மையும் சிலருக்கு துன்பமும் உண்டாகின்றது. ஆனால் தேக திடமுள்ளவர்களுக்குத் பத்தியம் வைப்பதினால் சிறிது அனுகூலமுண்டு. மெலிந்த தேகிகளுக்கும் வியாதியினால் அடிபட்டு தேகசக்தி குன்றினவர்களுக்கும் பத்தியம்வைப்பதினால் பயனுண்டாகாது. எல்லோருக்கும் வித்தியாசமின்றிப் பத்தியம் வைக்காது ரோக நிதானமறிந்து சிகிச்சை செய்வது வைத்தியர்களின் கடமை. ஒரு மருந்தில் சௌகர்ய மில்லாவிட்டால் மருந்தை மாற்றிக்கொடுக்க வேண்டியது. உத்தமமான மருந்தென்று ஒரே மருந்தில் அதிக நம்பிக்கை வைக்கலாகாது, சருமத்தின் மேல் காணுகிற புடைகளுக்கு ரஸக்களிம்பு (Citrone ointment) ரஸக்காரசிந்தூரக்களிம்பு, (Ointment of red oxide of Mercury) முதலியவைகளி லொன்றைப் போட்டு வருவதினாலும், கரிய கோளத்தோடு, ருமிமஸ்தகி சமன் சேர்த்து வெண்ணெயிலிட்டு அரைத்துப் போடுவதினாலும், குந்திரிகத்துடன் ஆட்டுக்கொழுப்பு, மஞ்சள் மெழுகு முதலியவைகளைச் சமனிடையாய் உருக்கி ஒன்றாய்க் கூட்டி அதனைப் போடுவதினாலும், பொன்னாவரை வேரோடு சந்தனங் கூட்டிப் பூசுவதினாலும், பிரமத்தண்டு ரசம், நாகமல்லி ரசம், சீமை அகத்திரசம், வகைக்குப்படி $\frac{1}{4}$, எள்ளெண்ணெய் படி $\frac{1}{2}$, குந்திரிகம் பலம் 2, இவைகளை ஒன்றாய்க் கூட்டி பதமாய்க்காய்ச்சி வடிகட்டி மேலே பூசிவருவதினாலும், ரசப்புகை, கந்தப்புகை, முதலியவைகள் போடுவதினாலும், வாரத்திற்கு 4-முறை நீராவி ஸ்நானம் (Vapour Bath) ஆசஸ்நானம் முதலியவைகள் செய்து வருவதினாலும் சுகமுண்டாகும்.

அபினி, மார்பியா, (Morphia) குரோஸானியோமச்சத்து (Extract Hyoseyami) முதலியவைகளி லொன்றைக் கொடுத்து நோயாளிக்கு நல்ல நித்திரையை உண்டுபண்ணவேண்டியது. ஐயோடைட் ஆவ் பொடாஸியம்,(Iodid of Potash) விளாவின வெடியுப்புத் திராவகம், (Acid Nitric dilute) வெள்ளைப் பாஷாணத் திராவகம்

(Liq arsenicalis) முதலியவைகளை உள்ளுக்குக் கொடுத்து வருவதினாலும், நிலவேம்புக்கஷாயம், நன்னாரிவேர்க் கஷாயம், வேப்பம்பட்டைக்கஷாயம் ஏதேனும் ஒன்றுடன் 1/10 உளுந்து நிறை சுத்தி செய்த சவ்வீரம் சேர்த்துக்கொடுத்து வருவதினாலும், வெற்றிலை, பாவட்டன் இலை, கோவை இலை வகைக்குப் பலம் 5-இம்மூன்றையும் கல்லுரலிலிட்டு, பாதரசம் $\frac{1}{4}$-பலம் கூட்டி இரும்புப் பூணில்லாத உலக்கையால் மைபோலிடித்து, கடைந்தெடுத்து ஓர் மண்பாண்டத்திலிட்டு ஒரு படி ஆமணக்கெண்ணெய் கூட்டி தடுப்பினால் கிண்டி, 3-தினத்திற்கு சூரியபுடம்வைத்து எடுத்துக்கொண்டு அதில் வேளையொன்றுக்கு $\frac{1}{4}$-பலம்வீதம் கொடுத்து வருவதினாலும், வல்லாரை கிருதம் அல்லது சூரணம், கந்தகபஸ்பம், அயச்சிந்தூரம், எருக்கன்வேர்ப் பட்டைத்தூள், சிவனார் வேம்புச் சூரணம், சேங்கொட்டை லேகியம் முதலியவைகளிலொன்றைக் கொடுத்து வருவதினாலும், அடியில் கண்ட இங்கிலீஷ் மருந்து வகைகளிலேதேனும் ஒன்றை உபயோகித்து வருவதினாலும் சுகுணமுண்டாகும்.

ஸிரப் பெர்ரி ஐயோடைட் 2-திராம், பொட்டாஷ் ஐயோடைட், 32-கிறேன்ஸ், நன்னாரிவேர்க் கஷாயம் 8-அவுன்ஸ் இவைகளை ஒன்றாய்க்கூட்டி வேளை 1-க்கு 1 அவுன்ஸ்வீதம் தினம் 1-க்கு 2-வேளை சாப்பிடவும். (Syrup ferri Iodid 2 dr, Potash Iodid 32 grs, Infusion Sarsaparila 8 oz, make a mixture, Dose 1 oz, to be taken Two times a day.)

பொட்டாஷ் ஐயோடைட் 1-திராம், நன்னாரி ஷர்பத் 3-அவுன்ஸ், லிகுவர் ஹைட்ரார்ஜிரை பெர்குளோரிடம் 3-திராம், நீநீர் 10அவுன்ஸ் இவைகளை ஒன்றாய்க்கூட்டி வேளை 1-க்கு 1-அவுன்ஸ்வீதம் தினம் 1-க்கு 2-3 வேளை சாப்பிடவும். (Potash Iodid 1 dr, Syrup Sarasaparila 3oz, Liquor Hydrargyri per chloridam 3 drachms, Aqua Distillata 10 oz, make a mixture, Dose 1 oz, to be taken 2 or 3 times a day.)

பொட்டாஷ் ஐயோடைட் 1 திராம், பொட்டாஷ் பைகார்போனஸ் 1-திராம், லிகுவர் குவைனைன் ஆர்ஸினாஸ், 2-திராம், டிஞ்சர் ஐயோஸ்ஸியாமி 6-திராம், நீநீர் 11 அவுன்ஸ் இவைகளை ஒன்றாய்க்கூட்டி வேளை 1-க்கு 1-அவுன்ஸ்வீதம், தினம் 1-க்கு 3-வேளை சாப்பிடவும். (Potash Iodid 1 dr, Potash Bicarbonas 1 dr, Liquor Quininae arsenas 2 dr, Tincture Hyoseyami 6 dr, Aqua Distillata 11 ozs, make a mixture Dose 1 oz, 3 times a day)



பெர்ரி எட் அமோனி ஸிட்ராஸ் 15-கிரேன்ஸ், லிகுவர் ஆர்ஸினி கேலிஸ் 20-மினம்ஸ், டோனோவான்ஸ் ஸொலுஷன் $\frac{1}{2}$-திராம், லிகுவர் ஸ்ட்ரிக்னைன் 15-மினம்ஸ், நன்னாரிவேர்க் கஷாயம் 3-அவுன்ஸ் இவைகளை ஒன்றாய்க்கூட்டி வேளை 1-க்கு 1-அவுன்ஸ் வீதம் தினம் 1-க்கு 3-வேளையாக ஆகாரம் செய்து 1-மணி கிரமித்து சாப்பிட்டு வரவும். (Ferriet ammonia cit 15 gr, Liquor arsenicalis 20 minims, Donovan's Solution $\frac{1}{2}$ drachm, Liquor Strychninæ 15 minims, Infusion Sarsaparila 3 ozs, make a mixture, Dose 1 oz, 3 times a day, An hour after meals.)

## மருத்துவசாஸ்திரம். (MIDWIFERY-மிட் ஒய்பிரி)

### கருத்தரிக்கும் விபரம்.

மாதர்களுக்கு மாதாந்திர ருதுகாலத்திலேனும் அல்லது அதற்குச் சில தினங்களுக்கு முன்னாவது, பின்னாவது சினைப்பையிலிருக்கிற நாதக்குமிழ்களிலொன்று அல்லது இரண்டுமுற்றிவெடிக்கும். அக்காலத்தில் சினைப்பாதையின் குஞ்சமுனையானது சினைப்பையைக் கவ்விக் கொள்ளும். அப்போது வெடித்த நாதக்குமிழிலிருந்து வெளிப்படுகிற நாதமானது சினைப்பையிலிறங்கி அந்த வழியாகச்சென்று கருக்குழியில் விழும், சம்போககாலங்களில் வெளிப்பட்ட விந்துவிலுள்ள விந்துக்கிருமிகளில் ஒன்று மேற்கூறிய நாதத்தோடு கூடினால் கருத்தரிக்கும். இரண்டு மூன்று விந்துக்கிருமிகள் நாதத்தோடு தனித்தனியாகச் சேர்ந்து கருப்பற்றினால் இரண்டு மூன்று பிண்டம் வளரும். நாதமானது கருப்பையிலில்லாமல் சினைப்பாதை மத்தியிலிருந்தபோதிலும் சினைப்பாதையானது விந்துக்கிருமியை இழுத்து நாதத்தோடுகூடச் செய்யும். அங்கு அது நாதத்தோடு கூடி சிலநாள் சென்று

கருக்குழியில் வந்திறங்கின பிறகு கருவளர்த்தியோடு கருப்பையும் வர்த்திக்கும். அதின் ரத்த நரம்புகளும், ஸ்பரிஸ நரம்புகளும் பெருக்கும். பிரதமத்தில் கருப்பையின் மேற்புறமும், பிறகு மத்தியபாகமும் கடைசியில் கழுத்தும் ஸ்தூலிக்கும். ஸ்திரீ புருஷர்களின் சம்போகமின்றியே கருத்தரிக்கச் செய்யலாமென்று டாக்டர். காக்பரன் (Dr. Cokparin) துரையவர்கள் கூறுகின்றார். அதாவது "ஒருவனுக்கு ஆசனத்திற்கும் பீஜங்களுக்கு மிடையில் சுக்கில நாளங்களில் சிறிய துவாரங்கள் விழுந்திருந்ததினால் அத்துவாரங்கள் வழியாய் எடுக்கப்பட்ட புதிதான விந்துவை ஓர் ஸ்திரீயின் கருப்பையில் பீச்சாங் குழலினால் (Syringe) செலுத்த அதனால் கருப்பமுண்டாகிப்பின் ஒன்பது மாதங் கிரமித்து ஓர் ஆண் மகவைப் பெற்றாள்" என்பதேயாம்.

கருப்பையானது ஒரு முறை விந்துவை கிரகித்துக் கருவையுண்டாக்கிச் சிறிதுநாட் சென்றபிறகு வேறொரு கருவையும் உற்பத்தி செய்ய சக்தியுள்ளதென்று டாக்டர் பீடன் (Dr. Pedan) துரையவர்கள் கூறுகின்றார், அதாவது, "ஒரு ஸ்திரீக்கு ஒருபிள்ளை பிறந்து மூன்று மாதத்திற்குப் பின் அவள் மற்றொரு பிள்ளையையும் பெற்றாள். அவ்விரண்டு குழந்தைகளும் சுகமாய் வாழ்ந்தன" என்கிறார். இன்னும் இதைப்பற்றி டாக்டர் பீக் (Dr. Peek) துரையவர்கள் சொல்லுகிறதாவது, கி. பி. 1814-ம் வருஷத்தில் ஓர் ஐரோப்பிய ஸ்திரீ பிரதமத்தில் ஓர் சிகப்பு நிறமான ஆண்மகவைப் பெற்றுச் சிலநாட்களுக்குப் பின் கறுப்பு நிறமான மற்றொரு குழந்தையும் பெற்றாள். இதன் உண்மையை விசாரித்தபோது அவள் புருஷன் அவளோடு சேர்ந்த சிறிது நாட்களுக்குப் பின் அவள் மற்றொரு காபிரியோடு சம்பந்தப்பட்டதாக அறியப்பட்டது. இன்னும் இது விஷயமாய் நாம் சமீபத்தில் கேள்விப்பட்ட ஓர் அதி ஆச்சர்யமான ஸங்கதியையும் இவ்விடத்தில் வரைய வேண்டியது மிகவும் அவஸ்யமாய் இருக்கிறது. அதாவது "*ஆஸ்டிரேலியா தேசத்திலுள்ள மண்டபுல்லாகனு" என்னும் ஊரில் ஓர்பெண் குதிரை முதலில் ஓர் குதிரைக் குட்டியைப் போட்டதாம். அதன்பிறகு அதே குதிரை பிறகு நான்கு மாதம் சென்றவுடன்

* The Vysiamitran Vol 1. No 25. Page—6



ஓர் கோவேறுகழுதைக் குட்டியையும் ஈன்றதாம். இதன் உண்மையை
விசாரித்தபோது தெரிய வந்ததாவது அப்பெண்குதிரையைப் பிரதமத்
தில் ஓர் நல்ல ஜாதிக் குதிரையோடு கலக்கும்படி விட்டார்களாம். நாலு
மாதம் வரையில் பார்த்ததில் பலன் படவில்லை என்று எண்ணி, மறு
படியும் கோவேறு கழுதை யொன்றுடன் கலக்கும்படி விட்டார்களாம்.

## கர்ப்பந்தரித்த குறிகள்.

கர்ப்பந்தரித்த ஸ்திரீகளுக்கு இயற்கையாய் இருப்பதைவிட சரீ
ரம் ஸ்தூலிக்கும், நாடி பெருத்து படபடப்பாய் நடக்கும், ரத்தாதிக்க
மும் காணும், குணம், நடவடிக்கை இவைகள் மாறும். சிற்றுண்டிகளில்
அதிக பிரேமையுண்டாகும், சிறுநீர் விகற்பப்படும், தேக மினுமினுப்
புண்டாகும். இத்தியாதி குணங்கள் கருத்தரித்த பிறகு, கண்டபோதி
லும், தலை முழுக்கு நிற்குதல், காலை வாந்தி, கண்களில் மஞ்சள் வரு
ணம், அல்லது ஊதாவருணம் தோன்றுதல், மயக்கம், கண்ணிருளல்,
வாயில் அளவிற் கதிகமான நீர் சுரக்குதல், ஸ்தனங்களில்
பால் சுரப்புண்டாகுதல், ஸ்னதங்கள் விம்மி வேதனை யுண்டாகுதல்,
ஸ்தனங்களுக்கடியிலிருக்கிற விருத்த வடிவு அதிகமாய்க் கறுக்குதல்,
ஸ்தனங்களைக் கையினால் அழுத்திப்பார்த்தால் முடிச்சுகளைப்போல்
தோன்றுதல், வயிறு படிப்படியாய் பெரிதாகுதல், கருப்பையைக் கையி
னால் அழுத்திப்பார்த்தால் கல்லுப்போல் காணப்படுதல், பிண்டத்தின்
அசைவு தாய்க்குத் தெரிதல், அடிவயிற்றின் மேல் சப்தவேணுவை
(Stythoscope) வைத்து உற்றுக்கேட்டால் பிண்டத்தின் இருதய
நடையும், நஞ்சில் ரத்தஓட்டமும் கேழ்க்குதல் முதலியவைகளே
முக்கிய குறிகளாம். ஆனால் சில ஸ்திரீகள் கர்ப்பங்கொண்டு சரீரத்தில்
மாறுதல் விசேஷமாயில்லாமலும், இன்னும் சிலர் முற்றுமே யில்லாம
லும் முழுகர்ப்ப காலத்தையும் கழிக்கிறார்கள். ஆயினும் சூதக நிற்பா
டும் மற்றும் சில குறிகளுமே கர்ப்பந்தரித்ததற்குச் சாதாரண அடையா
ளமாகக் கொள்ளப்படுகிறது. இன்னும் ஸ்திரீகளுக்குக் கருப்பற்றின
வுடன் பந்து ஜனங்கள்மீது இருக்கும் பாசம் மிகுந்து அவர்களைப்
போய்ப் பார்க்க வேண்டுமென்கிற பிரியமும் தின்பண்டங்களின்மேல்
ஆசையும், மனோவுற்சாகமும் புத்திதீக்ஷிண்யமுமுண்டாகும்.

## பொய்க்கர்ப்பம்.

மாதர்களுக்கு மாதாந்திரங்களில் வெளிப்படவேண்டிய உதிரத்தில் வாயு அதிக்கிரமித்து அதனை ஒரு துளியேனும் வெளியாக்காமல் உள்ளடக்கி கருப்பையில் கட்டியாகி கர்ப்பஸ்திரீகளுக்குள்ள சூதகபந்தம், பசிமந்தம், தேகநிறமாறுதல், கலவியல் வெறுப்பு, ஸ்தனம், வயிறு முதலியன பெருத்தல், மார்பு துடித்தல், வாந்தி, அரோசகம், ஆயாசம், ஸ்தனங்களில் பால் சுரக்குதல், கருப்பைக்குள் மறிபட்டு மொத்தையாகிய கெட்ட உதிரக்கட்டியானது கருப்பத்தைப்போலவே கைக்குத் தென்படுதல், சில சமயங்களில் சிசுவைப்போலவே அசைந்து கொண்டிருக்குதல் முதலிய குறிகள் காணப்படும். சிலருக்கு இக்கட்டியானது மருந்தினால் வெளிப்படுவதும், சிலருக்கு பிரசவவேதனை போலவே இடுப்பு வலி கண்டு அதன்பிறகு கட்டி வெளிப்படுவதும் உண்டு. சிலருக்கு இதனாலேயே அபமிருத்து நேரிடுவதுமுண்டு.

## கர்ப்பமும் பொய் கர்ப்பமும்.

கர்ப்பமானது மூன்றுமாதங்களுக்கு முன் அசையாது, பொய்க்கர்ப்பமோ அதற்கு முன்னதாகவே மெதுவாய் அசையும். கர்ப்பமானால் அடிவயிறு கருக்குழியைச் சார்ந்து ஒட்டி உள்ளடங்கி கரு வளரவளர சிறுகச்சிறுகப் பருத்துக்கொண்டே வரும். பொய்க்கர்ப்பமானால் பிரதமத்திலேயே வயிற்றைப் பருக்கச் செய்யும், கர்ப்பத்தை விரல்களினால் அழுத்திப்பார்த்தால் தக்ஷணமே அழுந்தாது, அதவாது அழுந்தினபோதிலும் படிப்படியாகப் பழய ஸ்திதிக்கே வரும். பொய்க்கர்ப்பமானால் அழுத்தின தக்ஷணமே அழுந்திக் கையை யெடுத்தவுடனே பூர்வ ஸ்திதிக்கு வந்துவிடும். உண்மையாகவே கர்ப்பமானால் பதினொரு மாதங்களுக்குமேல் வயிற்றிலிருப்பது அபூர்வம். சூதகக்கட்டியானால் அதற்கதிகமாகவும், சிலர்களுக்கு வருஷக்கணக்காகவும் இருப்பதுண்டு.

## கர்ப்பப் பரீக்ஷைகள்.

கர்ப்பமும் பொய்க் கர்ப்பமும் அறியவேண்டில் ஸ்திரீயின் சிறு நீரைப் பிடித்து நான்கு தினத்திற்கு அசையாமல் வைத்திருந்து



அதன் பிறகு அதனை வடிகட்டிப் பார்க்க, அதில் நுண்ணிய கிருமிகள் காணப்படுமாகில் கர்ப்பமென்றும், இல்லையானால் கர்ப்பமில்லையென்றும் தெரிந்துகொள்ள வேண்டியது.

சுத்தமான கெட்டித் தேன், சுத்தஜலம் வகைக்குப் பலம் ½, இவ்விரண்டையும் ஒன்றாய்க் கூட்டி, இரவு படுக்கைக்குப் போகுமுன் கொடுக்கவும், அதிகாலையில் ஷை ஸ்திரீக்கு வயிற்றில் வலி இருந்தால் கர்ப்பமென்றும், வலி இல்லாத பக்ஷத்தில் கர்ப்பமில்லையென்றும் தெரிந்துகொள்ள வேண்டியது.

வெள்ளைப்பூண்டின் மேற்தோலை உரித்து இரவு படுக்கைக்குப் போகுமுன் அதனை அல்குலில் வைத்துக்கொண்டுறங்கி, அருணோதயத்தில் எடுத்துப்பார்க்க, வெள்ளைப்பூண்டின் வாசனையில்லையாயின் கர்ப்பமென்றும், வாசனை இருக்குமானால் கர்ப்பமில்லை என்றும் தெரிந்துகொள்ள வேண்டியது.

## கருப்பற்றியபின் கருப்பையின் நிலைமை.

கர்ப்பந்தரித்து மூன்று மாதம் முடியும் வரையில் இடைக்குழியில் தானே கருப்பை அடங்கியிருக்கும். அதன்பிறகு மர்மஸ்தான எலும்பிற்கு மேலாக வரும். கர்ப்ப ஸ்திரீயின் தேகம் மெலிந்திருந்தால் அது விரல்களுக்குத் தென்படும். ஐந்தாம் மாதத்தில் மர்மஸ்தான எலும்பிற்கும் நாபிக்கும் மத்தியமாய் வரும். அப்போது அடிவயிறு கனக்கும். ஆறு மாதம் தொப்புளுக்கு நேராய் வரும், அப்போது தொப்புள் பருக்கும். எழாவது எட்டாவது மாதங்களில் அதற்குமேல் எழும்பித் தாயின் ஈரற்குழிவரையில் வளர்ந்து வயிற்றை நிரப்பிக்கொள்ளுமாதலால் அப்போது அவளுக்கு மூச்சு முட்டும். ஒன்பதாம் மாதத்திலும் கருப்பை வளர்ந்துகொண்டிருந்தாலுங்கூட வயிற்றுத்தசைகள் தளர்ச்சியடைவதால் அப்போது அது கொஞ்சம் தாழ்ந்துவிடும். கருப்பையானது அடிக்கடி விரிந்து சுருங்குவதால் அடிவயிற்றில் ஓர்வித வலியுண்டாகும்.

இப்படியாகக் கருப்பை விருத்தி யடைவதால் கருப்பையின்

கழுத்து தோற்றத்தில் வித்தியாசப்படும். அப்போது கருப்பையின் வாயும் விகாரமடைந்து, தனது யதாஸ்தானத்தை விட்டு விலகிக் கொஞ்சம் தாழ்ந்து முன்னுக்கு வந்திருக்கும். கருப்பையின் வாயானது ஐந்தாம் மாதம் முதற்கொண்டு குறைய ஆரம்பித்து, ஆறுமாதம் காற்பங்கும், ஏழாமாதம் அரைப்பங்கும், எட்டாமாதம் முக்காற்பங்கும், ஒன்பதாம்மாதம் முழுமையும் குறைந்துவிடுமாகையால் பேய்ச்சுரக்காய் போன்ற சுவாபீக ரூபம் மாறி அண்டவடிவாகி விடுகிறது.

## நஞ்சு. (PLACENTA—பிளஸெண்டா)

நஞ்சு, மாவு அல்லது மாயை இது கடற்பஞ்சை (Sponge)ப் போல் மிருதுவாய், இரத்த நரம்புகளால் ஏற்பட்டுக் கருப்பாஸயத்தின் அடி அல்லது மேற்பகுதியோடு ஒட்டிக்கொண்டிருக்கும். நஞ்சானது கருவுக்கு, புப்புஸத்திற்கு(நுரையீரல்) சமானம். நஞ்சிலிருக்கிற இரத்த நரம்புகளின் குஞ்சம் கருப்பையின் இரத்த நரம்புகளுக்கு மத்தியில் சென்று இரத்தத்தைக் கிரகிக்கின்றது. இந்நஞ்சானது சிசுவின் நாபிக்கொடியோடு ஒட்டிக்கொண்டிருப்பதால் தாய்க்கும் சிசுவுக்கும் சம்பந்தமுண்டாகிறது. சிசு கருப்பையிலிருக்கும்போது அதற்கு உஸ்வாஸ நிஸ்வாஸத்திற்கும், தாயானவள் உண்ணும் உணவின் சாரம் சிசுவினிடம் சென்று அதனைப் போஷிப்பதற்கும் இந்நஞ்சே ஆதாரமாகிறது. கிருப்பைக்குள்ளிருக்கும் ஒவ்வொரு பிண்டத்திற்கும் வெவ்வேறு நஞ்சுகளுண்டு. பிண்டமானது பெருக்கப்பெருக்க நஞ்சுப்பை அதை விட்டுப் பிரிந்த போதிலும், அதிலிருந்து சிசுவின் நாபிக்குச்செல்லும் இரத்தக் குழாய்களின் மார்க்கமாக ஆகாயமும் ஆகாரமும் சென்றுகொண்டிருக்கும். நஞ்சுக்கொடியானது சற்றேறக்குறைய இருபது அங்குல அளவுள்ளதாய் இருக்கும். இதனடுவில் கோழி முட்டைக்குள்ளிருக்கும் ஜவ்வைப்போலொத்த, இரண்டு ஜவ்வுகள் சிசுவை மூடிக்கொண்டிருக்கும். அந்த ஜவ்வுப்பைக்குள் ஜலமுண்டு. அதற்கு உதய ஜலமென்று (Liquor amnii) பெயர். அந்த நீரில் சிசு மிதந்து கொண்டிருக்கும்.



## நாபிக்கொடி. (UMBILICAL CORD—அம்பிலிகல் கார்ட்)

நாபிக்கொடி, நஞ்சுக்கொடி, அல்லது தொப்புள்க் கொடி யெனப்
பலநாமம் பெறும். நாபிக்கொடியானது சிசுவின் நாபியோடும், நஞ்சின்
மத்தியிலும், சிலருக்கு ஓரத்திலும் ஒட்டிக்கொண்டிருக்கும். நாபிக்
கொடியானது 12-அங்குலத்திற்குக் குறைந்தும் 54-அங்குலத்திற்கு
அதிகப்பட்டும் ஒருவருக்கு மிருக்காது. குழந்தை பிறந்த அரை நாழி
கைக்குப் பிறகு நாபிக்கொடியிலுள்ள நாடி நடை நின்றுவிடும். நாபிக்
கொடியைத் துண்டித்த பிறகு அது ஐந்து அல்லது ஆறு தினங்களில்
கீழே விழுந்துவிடும்.

நாபிக் கொடியானது சிசுவின் சந்து எலும்பின் உட்பக்கத்திலிரு
ந்து வரும் இரண்டு நாடிகளாலும், மாயையினின்று இரத்தத்தைச் சிசு
விற்குத் திருப்பிக்கொண்டு வருகிற ஓர் நாளத்தினாலும் உண்டானது.
இந்த இரத்த சரங்களெல்லாம் பிசின் (Gelatinous) தன்மையுள்ள
வஸ்துவினால் ஒட்டப்பட்டு முறுக்குற்று நெளிந்திருக்கின்றன. நாபிக்
கொடியானது ஆம்னியன் (Amnion) என்னும் ஜவ்வுப்பைக்குள் சிசு
வின் சிரசுக்கு நேராகத் தொங்கிக்கொண்டிருக்கும். சிலசமயம் சிசு
வின் கழுத்தைச் சுற்றிக்கொண்டிருப்பது முண்டு. அதனோடு சிசு
ஜனனமானால் தோஷங் கூறுவது நாட்டுவழக்கம். நாபிக்கொடியில் முடி
விழுந் திருப்பதுமுண்டு.

## உதயஜலம். (LIQUOR AMNII—லிகர் ஆம்னியை)

உதயஜலம் அல்லது பனிநீர் எனப் பகருவர்—கருவானது
கருக்குழியில் வரும்போது இரண்டு ஜவ்வுகளால் ஏற்பட்ட ஒரு பைக்
குள் இருப்பதாக இதற்கு முன்னதாகவே தெரிவித்திருக்கிறோம்.
டை ஜவ்விலிருந்தே உதயஜலமென்னும் உப்பு நீர் ஜனிக்கின்றது.
மாதங்கள் ஆக ஆக டை ஜலத்திலுள்ள உப்பும் அதிகரிக்கும். உதய
ஜலமானது சற்றேறக்குறைய ஒரு பவுண்டு (1 lb) அளவுள்ளதாய்
இருக்கும். இந்த ஜலமானது கருவளர்த்தி ஆரம்பத்தில் சிசுவின்
போஷணைக்கு ஆதாரமாகவும், ஜவ்வுப்பைகளைச் சிசுவின்மேற் படா

மல் அகற்றுவதற்கும், கர்ப்பாசயத்தின் பளுவினால் பிண்டத்திற்கு யாதொரு தீங்கும் நேரிடாதபடிக்கும், கர்ப்பாஸயத்திலுள்ள உஷ்ணத்தைச் சமரசப்படுத்துவதற்கும், குழந்தைக்கு, அடி, குத்து முதலிய அபாயங்கள் நேரிடாதபடிக்கும், முக்கியமாய் பிரஸவகாலத்தில் சிசு வரும் வழியாகிய கருப்பாஸயத்தின் வாய், யோனித்துவாரம் முதலானவைகளை அகற்றுவதற்காக ஜவ்வுகளை முன்னுக்குத் தள்ளி பைபோலேற்பட்டு கர்ப்பாசயத்தின் வாயை விசாலப்படுத்துகின்றது. அதைப் பனிக்குடமென்று பகருவர். இங்ஙனமாக மகா அருமை மிகுந்த பெருமை பொருந்திய உதயஜலத்தை உற்பத்தி செய்திருக்கும் கடவுளின் கருணையை நாம் என்னென்று சொல்லலாம்.

## பிண்டம். (EMBRYO—எம்பிரயோ)

சதிபுருஷர்களின் சம்போகத்தால் தரித்த கருவானது சிறிது நாட் சென்ற பிறகு கருப்பாஸயத்தில் வந்திறங்கும். சிசுவின் பாகங்கள் கருத்தரித்து அநேக வாரம் வரைக்கும் மிகவும் சிறியனவாய் இருப்பதினாலே அவற்றை பூதக்கண்ணாடியால் (Microscope) பார்த்தாலும் பிசின் தன்மையுள்ளதும், மத்திய ஒளியுள்ளதும் நரைத்த மயிர்போன்ற நிறத்தையுடையதுமாகிய அணுக்கூட்டங்களாலானதுபோல் தோன்றுகின்றன. கருதரித்த மூன்றாம் வாரத்தில் இலந்தைப் பழம் பருமனாய் உருண்டை வடிவமானது மாறிப் புழுவைப்போல் நான்கு குன்றுமணி நிறையுள்ளதாய்த் தோன்றும். நான்காம் வாரத்தில் அண்ட வடிவமான



மூன்றாவது வாரம்.

சுண்டைக்காய்ப் பிரமாணமான புழுவாய் அரை அங்குல நீளமுள்ளதாய்த் தோன்றும். தலை முதலிய அவயவங்களை எளிதில் கண்டுபிடிக்கக் கூடாததாயிருக்கும். வாயானது ஒரு பள்ளமான கீற்றாய்த்தோற்றப்படும். கண்களிரண்டும் கரும்புள்ளிகள்போல் தோற்றப்படும். அன்றியும் ரத்தசரங்களே அழகான சொரசொரப்புள்ள போர்வைபோன்ற புறக்கவசத்தால் (Chorin) மூடப்பட்டிருப்பதுடன், உட்கவசமும் (Amnion) உதய ஜலமும் (Liquor Amnii) இதற்குள் உண்டு.



ஐந்தாம் வாரத்தில் சிசுவின் சிரசானது சரீரத்தைவிட பெரிதாயிருக்கும். ஆறாம் வாரத்தில் பிரான்ஸ் மொச்சக் கொட்டையின் (French Beam) ஓர் பிளவைப்போலிருக்கும். ஏழாவது எட்டாவது வாரங்களில் நேத்திரங்களும் செவிகளுமுண்டாகி, அஸ்திகள், மூளை, ஈரல், முதலியவைகளின் குறி தோன்றி, கருவானது சற்று வளைந்தும், சிரசு தோற்றப்பட்டும், கழுத்துக் காணக்கூடாததாயும், முகத்தில் நேத்திரம், வாய், மூக்கு, செவி, முதலிய துவாரங்கள் காணக்கூடியதாயும், கைகால் முதலிய அவயவங்கள் தெளிவாகவும் தோன்றும், சரீரத்தில் மூன்றிலொரு பாகம் சிரசாயிருக்கும்.



ஏழாவது வாரம்.

தொப்புளானது ஒரு பட்டாணிக் கடலைப்பருமனும், தொப்புள்கொடி தெளிவாகவும், நரம்புகள் இரத்தக்குழல்களுடன் சேர்க்கப்பட்டுமிருக்கும். தொப்புள் கொடியினுடைய இரண்டு இரத்தக்குழல்களும் நரம்புகளும் தொப்புளிலிருந்து குழந்தையினுடைய குடலிற்குச் செல்லும். நஞ்சுக்கொடி வளர ஆரம்பிக்கும். ஆண் பெண் குறிகளும் காணப்படும். ஆனால் ஸ்திரீ புருஷ பேதக்குறிகள் தென்படாது. இரண்டாவது மாதக்கடைசியில் பிண்டமானது எலிக்குஞ்சுபோல் ஒன்று முதல் இரண்டு அங்குலம்வரையில் இருக்கும். அதன் நிறை சுமார் மூன்று திராம் அதாவது சற்றேறக்குறைய 3-விராகனிடை.

கருத்தரித்த மூன்றாவது மாதக்கடைசியில் அவயவங்கள் பிரத்தியேகமாய்ப் பிரிக்கப்பட்டுத் தெரியும். ஜனனேந்திரியங்கள் காணப்படும். கைகால் விரல்கள் செவ்வையாய்த் தெரியும். நுரையீரல், கல்லீரல், மண்ணீரல், இரைப்பை, குடல் முதலிய உறுப்புகள் உற்பத்தியாகும். இருதயத்தினுடைய அறைகள் பிரிக்கப்பட்டிருக்கும். (28-வது பக்கம் பார்க்கவும்) கண் ரெப்பைகள், வாய், அபானவாய் முதலியன மூடப்பட்டிருக்கும். நாசியும் செவியும் காணப்படும். சரீரத்தில் இரத்த வோட்டமுண்டாகி இருதயம் பலக்க



மூன்றாவது மாதம்.

அடித்துக்கொள்ளும். பிண்டமானது சற்றேறக்குறைய ஆறு அங்குல நீளமும் 5-தோலா முதல் 10-தோலா நிறையுடையதாயும் இருக்கும்.

கருத்தரித்த நான்காவது மாதக்கடைசியில் ஆண் பெண் என்ற வித்தியாசங்களைக் கண்டறியும்படி ஜனனேந்திரியங்கள் செவ்வையாய்த் தோன்றும். வாய், ஆசனம் முதலியன திறக்கப்படும். கைகால் விரல்களின்மீது நகங்களும் சற்று தோற்றப்படும். பித்தப்பை யுண்டாகி மேற்குடலில், மலமுமிருக்கும். சருமம் ரோஜாபுஷ்பம்போல் சிவந்து சதை வளர்ந்திருக்கும். சிரஸில் முடி இருக்கும். இக்காலத்திலேயே கருவுக்குப் பிண்டம் என்கிற பேர் போய் சிசு வென்று பேர் பெறுமாதலால், இம்மாதத்தில் சிசுவானது கருப்பைக்குள் சுழன்று கொண்டிருப்பது தாய்க்கு நன்றாய்த் தெரியும். இக்காலத்தில் ஜனிக்கும் சிசு சில மணி நேரங்கள் உயிரோடிருக்கும்.




நான்காவது மாதம்.

கருத்தரித்த ஐந்தாவது மாதக் கடைசியில் தோல் மிருதுவாயிருக்கும். நகமும் உரோமமும் நன்றாய்த் தெரியும். தலை, இருதயம், குண்டிக்காய் முதலியன பெரியதாயிருக்கும். பித்தப்பையும் நன்றாய் இருக்கும். மூளையினுடைய வெண்மை நிறமாகிய வஸ்துக்கள் தோற்றப்படும். சற்றேறக்குறைய பத்தங்குல நீளமும், சற்றேறக்குறைய 25-தோலா நிறையுடையதாயுமிருக்கும். இம்மாத முடிவில் சிசுவின் உறுப்புகளெல்லாம் ஒருவிதமாய் பூரணமடைந்து அதுமுதல் வளர்ந்துகொண்டே வரும்.



ஐந்தாவது மாதம்

கருத்தரித்த ஆறுவது மாதத்தில் கல்லீரல் பெரிதாயும், சிவப்பாயும் தோற்றும். பித்தப் பையில் சிறிது ஜலமிருக்கும். ஆனால் கசப்பாயிராது. பீஜங்கள் குண்டிக்காய்களுக்குச் சமீபமாய் இருக்கும். பெருங்குடலில் மலம் இருக்கும். ரோமம் தெளிவாயிருக்கும். கண்ணில் கிருஷ்ண மண்டலத் துவாரத்தை ஒருவித ஜவ்வு அடைத்துக் கொண்டிருக்கும். அது வரவர மறைந்துவிடும். சிசுவின் மேல் தோலில் வெர்னிஸ் கேஸியோஸா (Vernix Caseosa) என்ற பாசிபோன்ற ஓர்விதப் பசையடைந்திருக்கும். சிசு பன்னிரண்டரை அங்குல நீளமும் 40-தோலா நிறையுடையதாயுமிருக்கும்.



ஆறுவதுமாதம்.




கருத்தரித்த ஏழாவது மாதத்தில் சிரசின் மூளையானது அழுத்தமாகவும், சிவப்பாகவும், நகங்கள் தெளிவாகவும், குண்டிக்காய்கள் கெட்டியாகவும், பித்தப்பையில் பித்தமும், பீஜங்கள் இறங்கியும் ஒவ்வொரு உறுப்புகளும் ஸ்பஷ்டமாய்த் துலங்குவதோடு எலும்புகளுக்கெல்லாம் வலுவேறி சிசு பூரணமடையும். சுமார் பதினைந்தங்குல நீளமும் 120 தோலா நிறையுடையதாயுமிருக்கும். இக்காலத்தில் ஜனிக்கும் சிசுவைப் பத்திரமாய்ப் பாதுகாக்கப்பட்டால் பிழைத்துக்கொள்ளும்.



ஏழாவது மாதம்.

கருத்தரித்த எட்டாவது மாதக்கடைசியில் சிரசின் மூளையில் ஒருவிதமான வரிகள் அல்லது ரேகைகள் காணப்படும். தேகமுழுதும் சிவந்து ரோமத்துவாரங்கள் மிக நுட்பமாகத் தோன்றுவதுடன் மேனி முழுதும் சிறிய ரோமக் குருத்துகளும் தோன்றும். சருமம் முழுதும் வெண்பாசு படர்ந்ததுபோலும், நகங்கள் கெட்டியாகவும் பீஜங்கள் முன்னிலும் சற்றுக் கீழிறங்கியும் சற்றேறக்குறைய 180 தோலா நிறையுடையதாயும், சுமார் பதினெட்டு அங்குல நீளமுடையதாயும் இருக்கும்.



இந்தப் படம் கர்ப்பாசயத்தில் பனிக்குடமென்னும் ஜவ்வுப்பைக்குள் உதயஜலமென்னும் நீரில் பூரணமடைந்த சிசு மிதந்துகொண்டிருக்கும் மாதிரியை விளக்கிக் காட்டுகிறது.

கருத்தரித்த ஒன்பதாவது மாதத்தில் மூளையானது வெண்மையாகவும், சாம்பல் வர்ணமாகவும், மூளையின் மேலுள்ள ரேகைகள் தெளிவாயும் தெரியும். மலம் ஆசனத்திலும், தொப்புள் கொடியானது சிரசுக்கும் பாதங்களுக்கும் மத்தியிலும் இருக்கும். ஒவ்வொரு அவயவங்களும் வளர்ந்து வலுவேறி ரோமங்களெல்லாம் நன்றாய் வளர்ந்திருக்கும். ஒன்பதாம் மாதக் கடைசி அல்லது பூரண கர்ப்பத்தில் சிசுவானது ஏறக்குறைய இருபது அங்குல நீளமும், 200-தோலா நிறையுடையதாயு மிருக்கும்.

பல பிள்ளைகள் ஜனிக்கும் விதமாவன. ஒவ்வோர் சமயத்தில் இரண்டு மூன்று விந்துக்கிருமிகள் நாதத்தோடு தனித்தனியாகச் சேர்ந்து கருப்பற்றினால் இரண்டு மூன்று பிண்டம் வளரும். இதுவே இரட்டைக் குழந்தை, மூன்று, நான்கு, * ஐந்து அல்லது † ஆறு குழந்தைகள் பிறப்பதற்குக் காரணம்.



இந்தப் படம் கருப்பையில் 2, 3 குழந்தைகள் வளரும் விதத்தை விளக்கிக் காட்டுகிறது.

## கர்ப்பாஸயத்திலிருக்கும் சிசுவின் நிலைமை.

சிசுவானது கருப்பைக்குள் உட்கார்ந்து கொண்டிருக்கிறதென்றும், அதற்கு அன்ன பானாதிகள் உச்சியின் வழியாய்ச் சென்று போஷிக்கின்றதென்றும், பிறகு பிரசூதவாயுவால் தலைகீழாகத் தள்ளப்படுகின்றதென்றும், முன்னோர்களிற் சிலர் அபிப்பிராயங்கொண்டிருந்தார்கள். ஆனால் அது அசம்பாவிதமாகும். கர்ப்பிணியின் வயிற்றைப் பிளந்து பார்வையிடில் சில சமயம் சிசுவின் தலை மேலாகவும், சில சமயம் கால் மேலாகவும் கிடக்கிறது. சிசுவின் சிரசானது சரீரத்தின் இதர பாகங்களைக்காட்டிலும் கனதியாயிருப்பதால் பெரும்பாலும் தலை கீழும் கால் மேலுமாகவே கிடக்கின்றது. ஏனெனில் கருப்பையானது சுரக்காய்போன்ற வடிவுடையதாயிருப்பதால் அதன் அகலமானது சிசுவின் உயரத்தைக் காட்டிலும் குறைவாயிருப்பதினால் கீழ்நோக்கிய சிரசு மேல்நோக்க முடியாது, இருகைகளையும் கட்டி மார்போடணைத்துக் கொண்டும், முழங்கால்களை மேலுக்குயர்த்தி பாதங்கள் ஒன்றின்மேலொன்றாகக் குறுக்கிட்டுக்கொண்டும். முதுகும் சிரசும் முன்னுக்கு

* ஐரோப்பா கண்டத்திலுள்ள வேல்ஸ் தேசத்து ஸ்திரீ யொருத்திக்கு ஒரு சூலில் 5-குழந்தைகள் பிறந்தனவாம். அப்போது ராஜ்யபாரம் வகித்திருந்த விக்டோரியா (Victoria) சக்ரவர்த்தினியவர்கள், அவ்வாச்சர்யத்தைக் கேள்விப்பட்டு அவளுக்கு ஏழு பவுன் பரிசளித்தார்களாம்.

† தஞ்சை ஜில்லாவில் திருக்காட்டுப்பள்ளிக்கு அதிக சமீபத்திலுள்ள இளங்காடு என்னும் ஒரு கிராமத்தில் சற்றேறக்குறைய 10-வருஷங்களுக்குமுன் ஓர் ஸ்திரீக்கு ஒரே சூலில் ஒரே தினத்தில் சற்று முன்னும் பின்னுமாக ஆறு ஆண்குழந்தைகள் பிறந்ததை நாம் நேரில் பார்த்திருக்கிறோம்.



வளைந்து மோவாய்க்கட்டை மார்போடணைந்திருக்கும். இந்தப் பிரகாரமாய் உறுப்புகளெல்லாம் ஒடுங்கி கருக்குழியில் சிக்கிக்கொண்டிருக்கும். அவ்விதமாகவே இருந்துகொண்டு வளர்ச்சியடையும். இவ்வித அமைப்பினால் பிரசவ காலத்தில் சிசுவின் சிரசானது பிரதமத்தில் வெளி வரவும், அதனால் தாய்க்கும் பிள்ளைக்கும் பல நன்மைகளுண்டாவதற்கும் இடமாகிறது.

பிரஸவகாலத்திலுண்டாகும் பிரஸவ நோய் என்பது தாய் படுகிற வேதனையல்ல. ஆனால் அது தாயின் சரீரக்கட்டுகள் தளர்ந்து கருப்பை சுருங்கி நெருக்குவதால் தாய்க்கு வலியுண்டாகும். கருப்பையிலிருக்கிற சிசுவை உதைத்து வெளிக்குத்தள்ளுகிற கிரியை கருப்பைக்கு முக்கியமானதால் வலி ஆரம்பத்தில் கொஞ்சமாகவும் பிற்பாடு நேரஞ்செல்லச் செல்ல கருப்பையானது அதிகமாய் நெருங்கிச் சுருங்குவதாலும், ஸ்திரீயின் அடிவயிற்றிலுள்ள மாம்ஸதசை சுருங்கித் தள்ளுவதினாலும், யோனித்துவாரம் விரிந்து கொடுப்பதினாலும் வலி அதிகமாகிறது. பிரசவநோய் அற்பமாயிருந்தால் சிசு வெளிப்படத் தாமதமாகும். பிரசூதவேதனை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாய் இருக்கின்றதோ அவ்வளவுக் கவ்வளவு பிரஸவத்திற்கு அனுகூலம். பிரஸவ வேதனையினால் ஸ்திரீ இம்சைப்படுகிறாளென்று அதைக் குறைப்பதற்கான முயற்சி எடுக்கலாகாது. சரீரப்பிரகிருதிக்குத் தக்கபடி பிரஸவ வேதனை விகற்பப்படும். கர்ப்ப காலங்களிலும் மற்ற காலங்களிலும் ஓடியாடித்திரிந்து கஷ்டவேலை செய்யும் பெண்கள் சிரம மில்லாது இலகுவாய்ப் பிரசவிப்பார்கள். சுகானுபவத்திலிருக்கிற ஸ்திரீகள் மெத்த வருத்தப்படுவார்கள். பிரஸவ நோய் கண்டு கருப்பைச் சுருங்கிச் சிசுவை நெருக்குவதால் சிசுவைச் சுற்றிக்கொண்டிருக்கும் ஜவ்வுப்பை (பனிக்குடம்) உடைந்து அதற்குள்ளிருக்கும் நீர் வெளிப்படும். அப்போது உடைந்த இரத்தக்குழாய்களிலிருந்து இரத்தம் அதிக வேகமாய் வெளிப்படும். அதன் பிறகு கருப்பை சுருங்குவதால் இரத்தம் வெளியாவது நின்று, அவைகளும் தத்தம் ஸ்தானத்தை யடையும்.

பிரஸவகாலத்திலுண்டாகும் பிரபல்லிய நோயை நீக்கும்பொருட்டு

தற்காலத்தில் குளோரோபாரம் (Chloroform) என்னும் அவுஷ
தத்தை உபயோகிக்கப்பட்டு வருகிறது. இம்மருந்தானது மகாகொடிய
தென்றும், சில சமயங்களில் அதனால் அனேகம் விபரீதங்கள் உண்டா
கின்றதென்றும், ஆகையால் அதனை உபயோகிக்கக்கூடாதென்றும்
அனேகம் ஆங்கிலோ டாக்டர்மார்கள் அறிவித்திருந்தபோதிலும் காலஞ்
சென்ற சக்ரவர்த்தினியாகிய விக்டோரியா (Victoria) மகாராணி
அவர்கள் இவ்வௌஷதத்தை உபயோகித்து, உபத்திரவமில்லாமல்
பிரஸவித்தார்களென்று பிரசித்தியானவுடனே மேனாட்டிலுள்ள ஆங்
கிலேய ஸ்திரீகளில் அநேகம்பேர் அவ்வௌஷதத்தை உபயோகிக்
கத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

ஆ! ஆ! இதென்ன விந்தை! சுக்கில ஸ்ரோணிதமானது கரசர
ணாதி அவயவங்களாக வுருப்பட்டு, உயிர்பெற்று எண்சாணுடம்பில்
ஒரு சாணளவாகிய தாய்வயிற்றில், இரைப்பை, மலப்பை, ஜலப்பை
முதலியவைகளுக் கிடையில் மிகவும் சிறியதாகிய * கருப்பாஸயத்திற்
கட்டுண்டிருந்து அதனால் † உறுத்தப்பட்டு ‡ உதராக்கினியில் வெந்து
அவ்விடத்தில் § பூரிக்கும் ஜலத்திலமிழ்ந்து ஒருநா ளிரண்டுநாளா
முந்நூறு நாட்டங்கி யிருந்து பிறகு $ பிரசூதவாயு முறித்துத்தள்ள
அதோ முகமாய் சிசு உற்பவிக்கின்ற அதிசயத்தை என்னென்று

* கருக்குழியானது மல மூத்திராதிகளால் நிரம்பிய ஆபாசக் களஞ்சியம். இரத்தம் மாம்ஸம் முதலியவற்றால் நிருமிக்கப்பட்ட பாண்டம். இதைப் பார்த்தால் ஆகாராதிகளில் அருசி உண்டாகும் என்பதில் ஐயமில்லை. சிசுவானது அக்கருக்குழியில் 300-நாள் தங்கும்படி நேரிடுகிறது. ஒரு மனுஷ்யனை ஒரு க்ஷணநேரம் கக்கூஸ் வாசலில் நிற்கசெய்தால் மூக்கையும் வாயையும் பொத்துகிறான். அவ்விதம் இருக்க 10-மாதகாலம் கருப்பாஸயத்தில் வஸிக்கிறது கஷ்டத்தினும் கஷ்டமன்றோ?

† கருப்பாஸயமானது சிசுவை நாற்புறமும் உறுத்துவதனாலே ஒரு மலையின் கீழ்தங்கிய ஒருவன் அதன் பாரத்தைத் தாங்கமுடியாது துன்பப்படுவதுபோலத் தோன்றும்.

‡ தாயின் உதராக்கினியானது, அக்கினியிலோர் இருப்புப்பாத்திரத்தை வைத்து அப்பாத்திரத்தின்மேல் சிசுவை வைத்துப் பழுக்கக் காய்ச்சிய ஊசியினால் குத்தப்படுகையிலே படும் துயரத்தைவிட அநேகம் மடங்கு அதிகமான துன்பமுண்டாகும்.

§ கருப்பாஸயத்தில் ஜலம் பூரித்து அந்த ஜலத்தில் சிசு அமிழ்ந்து கிடக்கும்போது, பெரிய பாராவாரத்தில் (சமுத்திரத்தில்) வீழ்ந்து பரிதவிப்பதுபோல் தோன்றும்.

$பிரசூதவாயுவினால் தலைகீழாகச் சிசுவை மாறி வாய்குறுகிய பாண்டத்தில் அடைபட்ட பறங்கிக்காய்வெளிப்படுவதுபோல, யோனித்துவாரத்தில் நெருக்குண்டு வெளிப்படும் துன்பம் பெரிது. கருப்பை உறுத்தல், ஜலம் பூரித்தல், உதராக்கினியால் வேவுதல், பிரசூதவாயுவினால் முறித்துத்தள்ளுதல், யோனித்துவாரத்தில் நெருக்குண்டல் என்னும் மேற்கண்ட ஐந்துவித அவஸ்தையினாலேயே, கர்ப்பவாஸம் மகா கொடிதென்று பெரியோர் கூறியிருக்கிறார்கள்.



சொல்லுவேம். இவ்வண்ண மியற்றுனர் யாவர். "பார்க்குமிடமெங்கு
மொரு நீக்கமறநிறைகின்ற பரிபூரணானந்தமே" எனத்தாயுமான சுவாமி
கள் திருவாய்மலர்ந்தருளியபடி அகிலாண்டங்கங்களிலும் எள்ளுக்
குள் எண்ணெய்போல் எங்கும் நிறைந்திருக்கப்பட்டவராகிய சர்வேஸ்வர
னன்றோ?

## கர்ப்பவதிகளின் பிரசவ காலம்.

பிரஸவ காலமானது யௌவன வயதுடைய ஸ்திரீ புருஷர்களால்
ஏற்பட்ட கர்ப்பங்கள் சீக்கிரமாகவும், வயது அதிகரிக்க அதிகரிக்க
பிரஸவகாலமும் சற்று அதிகரித்துக்கொண்டே போகுமென்றும், டாக்
டர் சார்லெஸ்கிலே (Dr. Charlesclay) என்பவர் கூறியிருக்கிறார்.
ஆனால் கர்ப்பந்தரித்த நாற்பதாவது வாரமாகிய 280-நாட்களுக்கு மேல்
300-நாட்களுக்குள் பிரஸவமாகுமென்று ஒருவாறு கூறலாம். இந்தக்
காலப் பிரமாணம் சிலருக்கு அதிகப்படும். சிலருக்குக் குறை
யும். நாற்பத்து மூன்றாவது வாரமாகிய 300-நாட்களுக்குள்
ளாகவே கர்ப்பஸ்திரீகள் பிரஸவிப்பார்கள். அதற்கு மேற்படாது
என்று நினைத்தபோதிலும் சிலவேளை கர்ப்பகாலத்தின் பரிமாணம்
315-நாட்கள் வரைக்கும் செல்லுமென்பதற்கு அநேக அத்தாட்சிக
ளுண்டு. எப்படியெனில் கருத்தரித்துப் பிண்டம் பூரணமாவதற்கு முப்
பத்தைந்து வாரம் செல்லுகின்றது. ஆனால் இப்படிப் பூரணமாகிற
தற்குப் போதுமான காலத்தில்,பூர்ணமாகாமலிருக்க அநேக இடையூறு
கள் சம்பவிப்பது முண்டு. ஆயினும் வழக்கமான காலத்தைக் கடப்பதி
னாலே சிசு இயற்கைப் பிரமாணத்தைக் காட்டிலும் அதிகப்பட்டிராது.
பிரஸவகாலத்தைஅறிந்துகொள்வதற்குச்சுலபமான ஓர்வழியுண்டு.அதா
வது ஸ்திரீயானவள் கடைசியாகமாதாந்திர ஸ்நானம் செய்ததினத்திலி
ருந்து 3-மாதம் முன்னிட்டு அதனோடு 7-நாள் கூட்டிக் கணக்குப்பார்க்க
ஏற்படுகிற மாதம்தேதியே பிரஸவிக்குங் காலமாம். அதெப்படியெனில்
ஒரு ஸ்திரீயானவள் ஜனவரிமாதம் 20௳ கடைசியாக வீட்டுக்குத் தூர
மானதாக வைத்துக்கொண்டு, மூன்று மாதம் முன்னிட்டுக் கணக்கிட்
டால் அக்டோபர் மாதம் 20-தேதி ஆகிறது. அதனோடு 7-நாள் கூட்

அக்டோபர் மாதம் 27-தேதி ஆகும். சிலசமையம் இதற்கு இரண்டொரு தினங்கள் முன் பின்னாகவும் பிரசவிப்பதுண்டு.

ஆனால் டாக்டர் மான்கோமேரி என்பவர் அடியில்கண்ட அட்டவணைப் பிரகாரம் பிரஸவித்த ஸ்திரீகளைத் தாம் நேரில் பார்த்ததாகச் சொல்லுகிறார். அதாவது 259-நாள்களில் 2-ஸ்திரீகளும், 266-நாட்களில் 2-ஸ்திரீகளும், 273-நாட்களில் 10-ஸ்திரீகளும் பிரஸவித்ததாகக் கூறியிருக்கிறார். இன்னும் இதுபோலவே டாக்டர் மர்பி, டாக்டர் ரிட், டாக்டர் மெர்ரிமான், ஸர் ஜேம்ஸ் ஸிம்ப்ஸன், ஸர் சார்லெஸ் க்ளார்க், டாக்டர் கூச், டாக்டர் டேவிஸ், டாக்டர் ப்ளன்டல், டாக்டர் கிரான்வில், டாக்டர் கான்துவிஸ்ட் முதலிய அதிமேதாவிகளான டாக்டர்மார்கள் தங்கள் தங்கள் அனுபவத்தில் கண்ட, குறைந்த நாட்களில் பிரசவித்த ஸ்திரீகளின் சங்கியைப்பற்றிக் கூறியிருக்கிறார்கள். குறைந்த நாட்களில் பிரஸவித்த ஸ்திரீகளின் சங்கியைப்பற்றி மேற்கண்ட டாக்டர்மார்கள் கூறியிருப்பதுபோலவே அதிக நாட்களில் பிரஸவித்த ஸ்திரீகளின் சங்கியையும் அடியில் வரும் டாக்டர்மார்களால் கூறப்பட்டிருக்கிறது.

இன்னும் ஸர் ஜேம்ஸ் ஸிம்ஸன் என்பவரே தன் அனுபோகத்தில் கண்டதாகக் கூறுகிறதாவது, கடைசியாக வீட்டு விலக்கமானதிலிருந்து 319-நாட்கள் கழித்து ஒருத்தியும், 324-நாட்கள் கழித்து ஒருத்தியும், 332-நாட்கள் கழித்து ஒருத்தியும், 336-நாட்கள் கழித்தபிறகு மற்றொருத்தியும் பிரஸவித்தார்கள் என்பதே! புரோபஸர் அப்லீ. என்பவர் கூறுகிறதாவது, 365-நாட்கள் கிரமித்து ஒருத்தியும், 372-நாட்களுக்குப்பிறகு மற்றொருத்தியும் பிரஸவித்தார்களென்பதே. இன்னும் புரோபஸர் மீக்ஸ் என்பவர் ஒரு கர்ப்ப ஸ்திரீ 420-நாட்களுக்குப் பிறகு பிரஸவித்ததாகக் கூறியிருக்கிறார்.

மேற்கண்ட டாக்டர்மார்கள் குறைந்த நாட்களிலும் அதிக நாட்களிலும் பிரசவித்த ஸ்திரீகளின் சங்கியைக் கூறியிருப்பது போலவே டாக்டர் மான்கோமேரி என்பவர் குறைந்த நாட்களில் பிறந்த குழந்தைகள் ஜீவனோடிருந்தகால அளவைக் கூறியிருக்கிறார். அதாவது 161-நாட்களில் பிறந்த குழந்தை 12-மணி நேரமும், 174 நாட்களில் பிறந்த



குழந்தை 1-வாரமும், 180-நாட்களில் பிறந்த குழந்தை 131-நாட்களும், 183-நாட்களில் பிறந்த குழந்தை 7-வாரமும், 189-நாட்களில் பிறந்த குழந்தை 11-வருஷமும், 193-நாட்களில் பிறந்த குழந்தை, 6-மாதமும், 196-நாட்களில் பிறந்த குழந்தை 30-வருஷமும், 198-நாட்களில் பிறந்த குழந்தை 2-வருஷமும், 199-நாட்களில் பிறந்த குழந்தை 11-வருஷமும், 201-நாட்களில் பிறந்த குழந்தை 13-வருஷமும் ஜீவனோடிருந்தனவாம்.

மேற்கண்ட திருஷ்டாந்தங்களினால் கர்ப்ப ஸ்திரீகள் பிரஸவிக்கும் காலமானது யாவருக்கும் ஒரேதன்மையாயிராமல் வித்தியாசப்படுமென்றுதெளிவாய்த் தெரியவருகின்றது. ஆனால் மேற்கண்ட விஷயங்கள் யாவும் மிகவும் அபூர்வமாய் உண்டாகக்கூடியவைகளாகையால், எவர்களுக்கும் விசேஷமாய் 280-நாட்களுக்கு மேற்பட்டு 300-நாட்களுக்குள்ளாக பிரஸவம் உண்டாகுமென்று அநேகம் அறிவாளிகள் அறிவித்திருக்கிறார்கள்.

## கர்பத்திலிருக்கும் சிசு ஆணோ பெண்ணோவென்றறியும்வகை.

ஒரு பாத்திரத்தில் சுத்த ஜலத்தை வார்த்து அதில் கர்ப்பஸ்திரீயின் முலைப்பாலில் ஒரு துளிவிட அது ஜலத்தில் மிதக்குமாயின் ஆணென்றும், பாவாமல் அப்படியே உள்ளமுழ்ந்திப்போகுமாயின் பெண்ணென்றும் அறியவும். இன்னும் கர்ப்ப ஸ்திரீயானவள் உட்காரும்போதும் எழுந்திருக்கும்போதும் பெரும்பாலும் வலது கையையே ஊன்றிக்கொள்ளுவாளானால் ஆண்குழந்தை யென்றும், இது போலவே இடது கையை அடிக்கடி உபயோகிக்கில் பெண் குழந்தை யென்றும், வயிறு அதிக உயர்வாகவும் நட்டமாகவுமிருக்குமானால் ஆண்குழந்தையென்றும், வயிறு மட்டமாகவும் சரிவாகவுமிருக்குமானால் பெண்குழந்தையென்றும், வலது ஸ்தனம் மிகவும் பருத்துக்கருத்து விம்மி வன்மையாயிருப்பதுடன் அதிலுள்ள பாலானது வெண்மையாகவும் கலங்கலாகவுமிருக்குமானால் ஆண்குழந்தையென்றும், இதுபோலவே இடது ஸ்தனமிருக்குமானால் பெண்குழந்தையென்றும், சிசுவானது கருப்பையின் வலது பாரிசத்திலிருப்பதாகத் தாய்க்குத் தோன்றுமானால் ஆணாகுமென்றும், இடது பாரிசத்திலிருப்ப

தாகத் தோன்றுமானால் பெண்ணாகுமென்றும், வலது கண்ணில் கருமை நிறம் தோன்றுமானால் ஆணாகுமென்றும், இடதுகண்ணில் கருமைநிறம் தோன்றுமானால் பெண்ணாகுமென்றும், வலது புறமாய் அடிக்கடி சாய்ந்து படுத்துக்கொள்ளுவாளாகில் ஆணாகுமென்றும், இதுபோலவே இடது புறமாய்ச் சாய்ந்து படுத்துக்கொள்ளுவாளானால் பெண்ணாகுமென்றும், பிரஸவ காலத்தில் நாபிக்கும் அல்குலுக்கும் இடையில் நோய்ஆரம்பித்துப் பின்பக்கமாய் இடுப்புக்குப் பரவுமானால்ஆணாகுமென்றும், அதிகப்பசி, அதிகமான சோம்பல், கேவலமான தின்பண்டங்களில் பிரியம், பிரஸவகாலத்தில் நாபிக்கும் அல்குலிற்குமிடையில் நோய் ஆரம்பித்து வயிற்றில் பரவுதல் முதலிய குறிகளிருக்குமானால் பெண்ணாகுமென்றும் அறியவேண்டியது.

## கர்ப்பவதிகளுக்குண்டாகும் ரோகங்கள்.

**கர்ப்பவதிகளின் காலை வாந்தி.**—இது ஸ்திரீகள்கர்ப்பந்தரித்த இரண்டா மாதம் முதற்கொண்டு மூன்றாமாதக் கடைசிவரையில் இருக்கும். சிலருக்குப் பிரஸவிக்கும்வரையில் இருப்பதும் உண்டு. சில ஸ்திரீகளுக்கு வாந்தி என்பதே கிடையாது. ஆகையால் இது கர்ப்ப ஸ்திரீகளுக்கு இயற்கை என்று சொல்வதற்கில்லை. அரோசகம், ஒக்காளம்,வாந்தி முதலியவைகள் கொஞ்சமாயிருந்தாலுங் கூட ஸ்திரீகளுக்கு மெத்த கஷ்டமாகவே இருக்கும். கர்ப்ப ஸ்திரீகள் தாங்கள் விரும்பினவற்றையெல்லாம் புசிப்பதினால் பிண்டத்திற்கு இரத்தவோட்டம் அதிகமாயுண்டாகி, அபாயம் நேரிடுமென்றே சர்வ வல்லமையுள்ள உண்மைப் பண்டிதராகிய கடவுள் காலை வாந்தியை உண்டுபண்ணி இருக்கிறார். அப்படிக்கிருந்தாலும் பிரகிருதி வித்தியாசத்தினால் வாந்தி பிரபலமாகக் காணுமானால் அதனைத் தடுக்க தக்க முயற்சி எடுக்கவேண்டியது. காலை வாந்திக்குட்பட்டிருக்கும் ஸ்திரீகள் தங்கள் ஆகாரங்களைச் சீர்படுத்திக்கொள்ளவேண்டியது. அடிக்கடி புசித்தலாகாது. பிரதி தினமும் பிராதக்காலம் படுக்கையிலிருந்தெழுந்தவுடன் ஒரு டம்ளர் குளிர்ந்த ஜலத்துடன் கொஞ்சம் பனிக்கட்டியைக்கூட்டிப் பருகுவதினாலும், அல்லது ஒரு கிளாஸ் குளிர்ந்த ஜலத்தில் 4-விராகனிடை ஸோடா உப்பும், (Bicarbonate of Soda) கொஞ்சம் சீனிச்



சர்க்கரையும் கலந்து, அத்துடன் கொஞ்சம் எலுமிச்சம்பழ ரசமாகிலும் அல்லது 17-கிரேன்ஸ் எலுமிச்சம்பழ வுப்பாகிலும் (Citric Acid) கூட்டி, நுரையுண்டாகிப் பொங்கும்பொழுது குடிப்பதினாலும், இங்லுவின் (Ingluvin) என்னும் மருந்தில் 10-கிரேன்ஸ் பிரமாணம், பசும்பாலிற் கலந்து பருகுவதினாலும் சுகுணமுண்டாகும். அதிக வாந்தியினால் அவஸ்தைப்படும் ஸ்திரீகள் போஜனத்திற்குமேல் இஞ்சி முறப்பா, அருநெல்லிக்காய் அல்லது நெல்லிக்காய் ஊறுகாய் முதலியவைகளில் ஏதேனும் ஒன்றைச் சாப்பிட்டு வரலாம். இன்னும் காய்ச்சி நுரை நீக்கின கெட்டித்தேனில் கொஞ்சம் சாப்பிட்டு வருவதினாலும் சௌகர்யமுண்டாகும்.

**கருப்பவதிகளின் இருமல்.**—இது கர்ப்பந் தரித்த ஐந்து அல்லது ஆறுமாதங்களில், நாளங்களில் ஓடுகிற இரத்தத்திலிருந்துண்டாகிற ஓர்வித உக்கிரமான ஆவியினால், இருமல், மார்பு துடித்தல்., மூர்ச்சை, நித்திரையின்மை, இடுப்பிலும் சந்துக்களிலும் வேதனை, இரத்தப் பெருக்கு முதலியவைகளில் ஒன்றேனும் பலவேனும் கண்டு பாதிக்கும். இருமல் அதிகப்படுமானால் கருவிற்கு ஏதேனும் கெடுதியுண்டாகும். இதற்குப் பிரதமத்தில் சிற்றாமணக்கெண்ணெய், நிலாவாரைக் கஷாயம், சீமை இந்துப்பு, (Epsom Salt) ரேவல் சின்னிக்கலவைச் சூரணம், (Pulvis Rhei Compositus, or Gregory's powder) முதலிய இலகுவான பேதிமருந்துகளைக் கொடுத்து மலத்தை வெளிப்படுத்தவேண்டியது. இரத்தவிருத்தி அவுஷதங்களையும் மூளைக்குப் பலத்தை உண்டுபண்ணக்கூடியதும், இருதயத்தைப் பலப்படுத்தி சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடிய அவுஷதங்களையும் கொடுத்து வரவேண்டியது. இதற்கு விளாம்பிசின் அல்லது அதிமதுரப்பால் முதலியவைகளில் ஏதேனும் ஒன்றை வாயில் அடக்கிக்கொண்டிருப்பதினாலும், ஆளிவிரைக் கஷாயம், பாதாம் ஷர்பத், கசகசா ஷர்பத் முதலியவைகளில் ஒன்றை உபயோகிப்பதினாலும், தூதுவளை சமூலத்தைப் பசும்பால் விட்டரைத்து அதை 10-பலம் பசு நெய்யிலிட்டுப் பதமாய்க் காய்ச்சி வடித்து அதில் சீனிச்சர்க்கரை பலம் 10. கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக்காய், சுக்கு, திப்பிலி, மிளகு முதலியவைகளின் சூர

ணம் வகைக்கு பலம் 1-வீதம் கலந்துவைத்துக்கொண்டு, வேளையொன்றுக்கு $\frac{1}{2}$-அல்லது $\frac{3}{4}$-தோலாவீதம் சாப்பிட்டு வருவதினாலும், இருமல், கக்கிருமல் முதலியவைகள் நீங்கும். இவ்வித சிகிச்சைகளினால் இருமல் நீங்காவிட்டால் ஈரல் குலைமீது (Stomach) அக்கினி பிளாஸ்திரியினால் கொப்புளம் (Blister) செய்தல், அட்டையைக் கடிக்கவிடுதல் முதலிய பிரயோகங்களைச் செய்வதினால் சுகுணமுண்டாகும்.

**கர்ப்பவதிகளின் மூர்ச்சை.**—இது கர்ப்பந்தரித்த நான்காம் மாதம் அதாவது கருப்பைக்குள் பிண்டம் அசைவு கொடுக்க ஆரம்பிக்கும் காலத்தில் காண்பது வழக்கம். இருதயத்திற்குச் செல்லும் அசுத்த இரத்தத்தினின்றெழும் ஆவியினாலாவது, கருப்பையிலிருந்து மேலுக்கு அதிகமாய்ச் சென்று பரவும் இரத்தத்தினாலாவது, காற்றோட்டமில்லாத அசுத்த ஆகாயமுள்ள இடங்களில் வசிப்பதினாலாவது அகஸ்மாத்தாய் நேரிடும் துக்கம் அல்லது சந்தோஷத்தினாலாவது மூர்ச்சை காண்பது வழக்கம். கர்ப்ப ஸ்திரீகளுக்கு மூர்ச்சை கண்டவுடன் முகத்தில் குளிர்ந்த ஜலமடித்து அவர்களின் ஆடையாபரணங்களைத் தளர்த்தி பரிசுத்தமான காற்று வீசும்படிச் செய்யவேண்டியது. மூர்ச்சை தெளிந்த பிறகு,மனதிற்கு ஆனந்தத்தையும் மூளை இருதயம் இவைகளுக்கு வன்மையையும் கொடுக்கக்கூடிய நல்ல வாசனைத் திரவியங்களை அணிந்துகொள்ளல், சக்திக்கேற்க நல்ல ஆடையாபரணங்களைத் தரித்துக்கொள்ளல், வீணை, சித்தார், சுரபத்து, பாலசரஸ்வதி, ஜலதரங்கம், ஹார்மோனியம் போன்ற நல்ல சங்கீத வாத்தியங்களை வாசித்தல் அல்லது கேட்டல், நல்ல தோழியர்களுடன் சல்லாப வார்த்தையாடிக்கொண்டிருத்தல் முதலியவைகளைக் கொஞ்சநாள்வரையில் பழக்கத்திற்குக் கொண்டுவரவேண்டியது. அதிக கஷ்டமான வேலை, மனக்கவலை, ஆழ்ந்த யோஜனை முதலியவைகளை நீக்கவேண்டியது. இன்னும் ஜாலாமிஸ்ரி, போஜிதான்மிஸ்ரி, சுக்கு, சீமைத்தண்ணீர்விட்டான் கிழங்கு, பெருங்காயம், வகைக்கு பலம் 1, சில்கூஜாப் பருப்பு ஆளிவிரை, நாயுருவி விரை, சிறு பூனைக்காலி விரை, வகைக்கு பலம் 2, சீனிச்சர்க்கரை, தேன் வகைக்குபலம் 8, பசுநெய் பலம் 2, பருப்பினங்களை நைய அரைத்தும்,மற்றவைகளைச்சூரணித்து வஸ்திரகாயம்,



செய்து தேனையும் சீனியையும் கலந்து பாகு காய்ச்சி அதில் சரக்குகளைத் தூவிக் கிண்டிப் பிறகு நெய்யைவிட்டுப் பிசைந்து வைத்துக்கொண்டு வேளையொன்றுக்கு 1-தோலா வீதம் காலை மாலை இரு வேளையும் சாப்பிட்டு வருவதினாலும்,மூர்ச்சை, மூச்சுமுட்டல்,மாரடைப்பு, மயக்கம் முதலியவைகள் நீங்கி தேகாரோக்கிய முண்டாகும்.

**கர்ப்பவதிகளுக்குக் காணும் மலபந்தம்.**—இது கருப்பை கீழிறங்கி அபானம் நெருக்கப்பட்டு போவதினாலுண்டாகிறது. ஆகையால் இது பிரஸவத்திற்குப் பின் சௌக்கியமாய் விடும். ஆனால் நெடுநேரம் நின்றுகொண்டிராமல் அடிக்கடி படுத்துக்கொண்டிருப்பதினாலும் பயனுண்டு. ஆனால் மலபந்தம் அதிகமாயிருந்தால், தலைவலி, வயிற்றுவலி, நெஞ்செரிவு, குலையெரிவு, நித்திரையின்மை, மயக்கம், மூலமுளை, கருவழிவு முதலியவைகளுக் கிடமாகும். ஆகையால் நிலாவாரைக் கஷாயம், ரோஜாப்பு குல்கந்து, நெல்லிக்காய் ஊறுகாய் அல்லது முறபா, பன்னீர் ஷர்பத், நிலாவாரைத் துவையல், சரக்கொன்றைத்துவையல், வாதநாராயணனிலைத் துவையல் அல்லது ஊரஸம், பேயன்வாழைப்பழம், பேரீச்சம்பழம், அத்திப்பழம், இச்சிலிப்பழம், திராக்ஷைப் பழம்; சீமை இலந்தைப்பழம், கிஷ்மிஷ், ஜரிஷ்க், அலுபூகோரா முதலியவைகளைச் சாப்பிட்டு வருவதினாலும், இரவில் பசும்பால் பருகுவதினாலும் பயனுண்டு. தாகவிடாய் உண்டாகும்பொழுதெல்லாம் குளிர்ந்தஜலமே சாப்பிட்டு வரவேண்டும். இரவு படுக்கைக்குப் போகுமுன் இடுப்பின்மேல் வெந்நீர் விட்டு வரவேண்டும்.

மேற்கண்ட பிரயோகங்களினால் அதிக பிரயோஜனம் காணாவிட்டால்இங்கிலீஷ் மருந்துக்கடைகளில் விற்கக்கூடிய ரேவல் சின்னிக்கலவைச் சூரணத்தில் (Compound Rhubarb Powder) ஒரு விராகனிடையளவு ஒரு அவுன்ஸ் குளிர்ந்த ஜலத்தில் கூட்டிக் கொடுப்பதினாலும்,இரவு படுக்கைக்குப்போகுமுன் ஜைதூனெண்ணெய் (Olive oil) அல்லது ஆமணக்கெண்ணெய் (Caster oil) முதலியவைகளிலொன்றில் ஒருசிறு கரண்டி வீதம்சாப்பிட்டு வருவதினாலும் மலமிளகும். நம்மிந்திய காட்டிலும் ஆங்கிலேய தேசத்திலும் மலபந்தத்திற்குப் பிரதிதினமும் மருந்து கொடுக்கிற துர்வழக்கத்தைக் காட்டிலும், பிரான்ஸ் தேசத்தில்.

ஜலரூபமான மருந்துகளை இனீம (Enema) என்னும் பீச்சாங்குழலால் பிரதிதினமும் பிரயோகிக்கிறது நலமாய் இருக்கிறது. மலச்சிக்கலினால் மூலமுளைகண்டு தொந்திரவு செய்யுமானால், மாசிக்காய் அபினிக்களிம்பை (Unquentum gallæ Cum opio) மூலத்தின்மேல் தடவி வருவதுடன் தினம் காலை வேளைகளில் கந்தக லேகியத்தில் (Confectio Sulphuris) விராகனிடை 1-வீதம் சாப்பிட்டு வரவேண்டியது.

**கர்ப்பவதிகளுக்குக்காணும் வயிற்றுப்போக்கு**—இது அபக்குவ போஜனம், அசுத்த ஜலபானம், அசுத்த ஆகாயமுள்ள விடத்தில் வசித்தல், அளவுக்கு மிஞ்சின உஷ்ணம், பயம், திடுக்கம்முதலியகாரணங்களால் காண்பதுண்டு. ஆனால் வேனிற்காலத்தில் காணும் பேதிக்கு அபரிமிதமான உஷ்ணமேகாரணமாகும். இதில் வயிற்றுப்போக்கோடு, வயிற்றிரைச்சல், வயிற்றுவலி, வாய்நாற்றம், ஓக்காளம், புளித்த எப்பம், மூக்கல் முதலிய குணங்களுண்டாகும். வயிற்றில் வலி இருந்தால் வெந்நீர்நிரப்பிய புட்டியினால்(Battle)வயிற்றின்மேல்ஒற்றடம்கொடுக்கலாம். இடுப்பின்மேல் வெந்நீர் ஊற்றுவதினாலும் நன்மையுண்டு. இலகுவான ஆகாரங்களைப் புசிக்கவேண்டியது. வாழைப்பூ,வாழைக்கச்சல்,அத்திப்பிஞ்சு, மாங்கொட்டைப்பருப்பு, வெந்தயம் முதலியவைகளைப் பக்குவம்செய்து ஆகாரங்களோடு சேர்த்துப் புசித்து வரவேண்டும். மாசிக்காய், தான்றிக்காய், நெல்லிமுள்ளி, மாதுளன் ஓடு, கடுக்காய்ப்பூ இவைகளைச் சமனிடையாய்ச் சூரணித்துக் கலந்துகொண்டு வேளை யொன்றுக்கு ½-விராகனிடையளவு, நெய், தேன், தயிர் இவற்றில் ஏதேனும் ஒன்றுடன் கூட்டிக் கொடுத்து வரவும். குணம் காணாவிட்டால் ஆமணக்கெண்ணெயுடன் கொஞ்சம் பசும் பால் கூட்டிக்கொடுத்தால் வயிற்றிலுள்ள ஆபாசங்களை அகற்றிவிடும். அதன் பிறகு, வேங்கைப்பிசின் கலவைச்சூர்ணம், (Pulvis Kino Composita) அல்லது டோவர்ஸ் பவுடராவது 5-கிரேன்ஸ் பிரமாணம் தேனில் கலந்து கொடுக்கலாம். அல்லது குளோரோடையின் (Chlorodyne) என்னும் மருந்தில் பத்துத்துளி கொஞ்சம் குளிர்ந்த ஜலத்தில் கூட்டிக்கொடுக்கலாம். இன்னும், இங்க்ளூவின் (Engluvin) என்னும் மருந்தில் 10-கிரேன்ஸ் குளிர்ந்தஜலம் அல்லது பசும்பாலிற் கூட்டிப் பருகுவதினாலும் பயனுண்டு.



**கர்ப்பவதிகளுக் குண்டாகும் கால்வீக்கம்.**—இது கர்ப்பஸ்திரீகளுக்குக் கடைசி மாதங்களில் காண்பது வழக்கம். சரீரத்தின் கீழ்பாகத்திற்குச் செல்லும் இரத்த தாரைகளைக் கருப்பை அழுத்துவதினால் இரத்தம்தடைப்பட்டு, அதனால் கால், கணுக்கால், அல்குல் முதலியவிடங்களில் வீக்கம் அல்லது எரிவந்தம் உண்டாகிறது. வீக்கமுள்ள விடத்தில் அழுத்தினால் குழிவிழும். நடந்தால் வீக்கம் அதிகமாகும். இரவு முழுதும் படுத்துக்கொண்டிருப்பதினால் காலை நேரங்களில் வீக்கம் கொஞ்சமாய் இருக்கும். எழுந்து நின்றவுடனே திரும்பவும் வீக்கம் வந்துவிடும். இவ்வித வீக்கங்களுக்குத் தகுந்த பரிகாரமே கிடையாது. ஏனெனில் பிரஸவத்திற்குப்பின் இவ்வீக்கம் தானாய்ப்போய்விடும். வீக்கத்தின்மேல் காடியைப்பூசிவருவதினாலும், வீக்கத்தின்மேல் நாலு அங்குல அகலமுள்ள கந்தைத்துணியினாலாவது,கம்பளித்துணியினாலாவது கட்டிவைப்பதினாலும், நித்திரை போகும்போதெல்லாம் கால்களுக்குக் கீழ் தலையணை வைத்துக்கொண்டு தூங்குவதினாலும், கணுக்கால் பாதம்முதலிய விடங்களில் பிரதிதினம் 5—6 முறை, கால் மணிநேரத்திற்குக் குறையாது சூடுபிறக்கத் தேய்த்துக்கொண்டு வருவதினாலும் சுகமுண்டாகும். ஆனால் கர்ப்ப ஸ்திரீகளுக்கு கால்களல்லாது முகத்தில் அல்லது தேகத்தில் எப்பகுதிகளிலேனும் வீக்கம் கண்டாலும், காதிரைச்சல், நெற்றிவலி, கண்களுக்குமுன் ஒளி அல்லது பிரகாசம்வீசுவது போன்ற குறிகள் கண்டாலும் அது விபரீதத்துக்கிடமாகும். ஆகையால் இதற்கு உடனே தக்கபடி சிகிச்சை செய்ய வேண்டியது.

**கர்ப்பவதிகளுக்குண்டாகும் நீர்க்கடுப்பு.**—கருப்பையானது நீர்ப்பைக்கு அதிசமீபத்தில் இருப்பதால் கருப்பை பெருக்கப் பெருக்க நீர்ப்பையை நெருக்குகிறது. இதனால் நீர்ப்பை (Bladder) அழற்சி உண்டாக ஹேதுவாகிறது. அதிக உஷ்ணத்தினால் நீர்ப்பை அழற்சியுண்டானவர்களுக்கு அடிக்கடி கொஞ்சங்கொஞ்சமாய் கடுப்புடன் நீரிறங்கும், சிலருக்குச் சாதாரண காலங்களிலேயே நீர்த்துவாரத்தில் கடுப்பு, குத்துவலி முதலிய வேதனை யுண்டாகும். அடிக்கடி வெளிப்படும் நீரை அடக்கமுடியாது. அதவா அடக்கினபோதிலும் உபத்திரவம் அதிகப்படும். இதற்கு பார்லி அரிசிக்கஞ்சி (Barley water) ஆளி

விரைக்கஞ்சி (Linseed water) இஸ்பகோல்விரை ஊறவைத்த ஜலம், நன்னாரிவேர்க்கஷாயம், ரோஜாப்புக்கஷாயம், சுண்ணாம்புத் தெளிவு நீருடன் சமன் பசும்பால் சேர்த்தது முதலியவைகளிலொன்றைக் கொடுத்து வருவதினாலும், உபஸ்தத்தை வெந்நீரினால் அடிக்கடி அலம்பி வருவதினாலும், வெந்நீரில் ¼-மணிநேரம் ஆசனஸ்நானம் செய்து வருவதினாலும், நல்ல பழவகைகளைப் புசித்து வருவதினாலும், சோடா, லெம்னெட், ஆரஞ்சி முதலிய குளிர்ச்சியான பானங்களைப் பருகுவதினாலும் சுகுணமுண்டாம்.

**கர்ப்பவதிகளின் நீர் அடைப்பு.**—இது சோம்பலினால் நீரை அடக்கிக்கொண்டிருப்பதினாலும், வழிப்பிரயாணம் செய்யும்போதாவது அல்லது வேறு காரணங்களினாலாவது, நீருக்கிருக்க உணர்ச்சி யுண்டாகியும் அந்நீரை வெளிப்படுத்தாமல் அடக்கிக்கொண்டிருப்பதினாலும் நீர்ப்பையின் இயற்கைத்தொழில் கெட்டு நீர்க்கட்டு உண்டாகிறது. இதற்கு தக்ஷணமே வெந்நீரில் ஸ்நானம் செய்ய வேண்டும். அல்லது ½-மணி நேரத்திற்குக் குறையாது வெந்நீரில் ஆசனஸ்நானம் செய்யவேண்டும். புற்பாடகம், பேய்ப்புடல், வெந்நீர், தேத்தண்ணீர் (Tea) டோவர்ஸ் பவுடர் (Dover's Powder) முதலியவைகளிலொன்றைக்கொடுத்து, வேர்வை வெளிப்படும்படி போர்வைபோர்த்துக் கொண்டு சிறிதுநேரம் நித்திரைசெய்து விழித்தால் நீரிறங்கும். அல்லது அரைப்படி வெந்நீரில் பசலைக்கீரை, கீழாநெல்லி, அருகன்வேர், துத்திவிரை, வெள்ளரி விரை வகைக்கு பலம் 3, போட்டு 3-மணி நேரம் ஊறவைத்துப் பிசைந்து பின் வடிகட்டி அதில் ¼-ஆழாக்கு எடுத்துக்கொண்டு பொரித்த * வெங்காரம் 4-குன்றுமணிப் பிரமாணம் கூட்டிக்கொடுக்கவும். அல்லது அடியிற்கண்ட இங்கிலீஷ் மருந்துகளைக் கொடுப்பதினாலும் குணமுண்டாகும். (Remedies Take of Sprits of Nitrous ether dr 1, Sprits of Ammonia aromatic Dr ½, Vinum Ipecacuanha, Minims 20 White Sugar dr 1, Distilled water oz 8, make a mixture, Dose Twe Table-

* வெங்காரத்திற்கு ருதுவர்த்தனகாரி குணமுண்டாகையால் கர்ப்ப ஸ்திரீகளுக்கு உபயோகிக்கும்போது புத்திமான்கள் சமயோஜிதம்போல் நடந்துகொள்ளவேண்டியது.



spoonfuls every 3 hours,—or Take of Potash Nitrate Gr 20, Sprits of Nitrous ether drachms 2, Vinam Colchicum drachms 2, Distilled water oz. 8 Make a Mixture,- Dose Two tablespoonfuls every 3 hours.

**கர்ப்பவதிகளின் நெஞ்செரிவு.**—இது கர்ப்பந்தரித்த பிரதமத்தில் சிலருக்கு அடிக்கடி காண்பது வழக்கம். குலை எரிவு என்பது அதிக சிரமத்தைக் கொடுக்கக்கூடிய இரைப்பை நோயாம். இதனால் தொண்டையிலும் அடிநாவிலும் எரிச்சல் காண்பதுண்டு. இன்னும் வாயில் காரகரப்பான நீர்சுரந்து அடிக்கடி புளித்த ஏப்பம் வருவதும் உண்டு. நெஞ்செரிவு கண்டவுடன் உணவைக் கூடியவரையில் குறைத்துச் சாப்பிடவேண்டும். இலகுவாய் ஜீரணிக்கத் தகுந்ததும், தேகத்திற்கு மிதமான பலத்தை யுண்டுபண்ணக் கூடியதுமான உணவை உட்கொள்ளவேண்டும். லாகிரிவஸ்துக்களைக் கொஞ்சமும் சேர்க்கலாகாது. நெஞ்செரிவு கண்டவுடன் ஒருநாள் உபவாசமிருந்து ஒரு டம்ளர் வெந்நீரைக்குடித்து வாந்தி செய்வதினால் நன்மையுண்டாகும். வெந்நீரினால் வாந்தி யுண்டாகாவிட்டாலும் அது இரைப்பைக்குள் (Stomach) சென்று சௌகர்யத்தை யுண்டுபண்ணும். நெஞ்செரிவு அதிகமாயிருக்குமானால், காந்தமண் பஸ்பம் (Magnesii carbonas) அல்லது சவுட்டு மண் உப்பில் (Sodium carbonate) ½-வீ வெந்நீரில் கூட்டிச் சாப்பிட்டு வருவதினால் நன்மையுண்டு. இன்னும் மாஉப்புத்திராவகம் (Liquor Potassae) அல்லது நவச்சார நீரில் (Liquor Ammoniae) முப்பது துளிவீதம் கொஞ்சம் குளிர்ந்த ஜலத்தில் கூட்டிக்கொடுப்பதினாலும், நிலவேம்பு, வேப்பம்பட்டை, வெஸ்ட் இண்டீஸ் என்னும் தீவுகளில் விளைகிற குவாஷியா மரச்சக்கை முதலிய கசப்பு மூலிகைகளை உபயோகித்து வருவதினாலும் குணமுண்டாகும். மலபந்தமிருக்குமானால் ஈனோஸ் புருட் ஸால்ட் (Enos fruit Salt) அல்லது ஸிட்லிட்ஜ் பவுடர் (Seidlitz Powder) முதலியவைகளில் ஒன்றைக் கொடுக்கலாம்.

**கர்ப்பவதிகளுக்குக்காணும் தலைவலி.**—இது சூதகபந்தத்தினால் ரத்தம்பூரித்தலில் பழகியிராத ஸ்திரீகளுக்கு சூதகபந்தத்தினால் ரத்த தசரங்கள் கன்றி அதனால் தலைநோயும் மற்றநோய்களும் கர்ப்பந்தரித்த

சில மாதங்களுக்குப் பின் காண்பதுவழக்கம். இதற்கு சரீரத்தில்இரத்தவோட்டம் இயற்கையான நிலைமையை அடைகிற வரையில் கர்ப்பவதிகளின் மலபந்தத்திற்குச் சொல்லியிருக்கும் இலகுவான விரேசன காரிகளால் மலபந்தத்தை வெளிப்படுத்தி தேகத்தில் இரத்த ஓட்டத்தைக் குறைக்கவேண்டும். காப்பி, தேயிலை முதலிய பானங்களைப் பருகுவோர்களுக்கு தலைவலி காண்பது சகஜம். இன்னும் அஜீர்ணம், அதிபித்தம், அதிகமான பசி, அசுத்த ஆகாயம், அகோரமான வெயில், மழையில் நனைதல், பனிவாடையில் படுத்து நித்திரை செய்தல், மலபந்தம்,கருப்பை அழற்சி,கடுமையான உழைப்பு,ஆழ்ந்த சிந்தனை, இன்னும் இவைபோன்ற பல காரணங்களினாலும் தலைவலி காண்பதுண்டு. கர்ப்பிணியானவள் மனுஷ இயற்கைக்கு வேறுபடாமல் தனது உணவு முதலானவற்றைச் சீர்படுத்தி நடந்துகொள்ளுவாளாயின் தலைவலி தலைகாட்டாது. தலைவலிக்குட்பட்டிருக்கும் ஸ்திரீகள் பிரதிதினமும் காலைமாலை இருவேளைகளிலும் உத்தியாவனம், கடற்கரை முதலிய விடங்களுக்குச் சென்று உலாவி சுத்த ஆகாயத்தை சுவாசித்து வரவேண்டும். பூசணிக்காய், சுரைக்காய், வெள்ளரிக்காய், கக்கரிக்காய், முள்ளங்கி, வெங்காயம் முதலிய ஜலபிதார்த்தங்களையும், மொச்சை, கடலை, காராமணி, உளுந்து ஆகிய வாய்வு பதார்த்தங்களையும் பற்றற நீக்கவேண்டியது. இதில் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயம் என்னவெனில் தலைவலி பிறப்பதற்கு அநேக காரணங்களுண்டு. ஆகையால் தலைவலி உற்பத்திக்குக் காரணம் தெரிந்துகொண்டு சிகிச்சை செய்யவேண்டியது. மருதம்பட்டைத்தூள், மாதளம்பூரசம், தும்பையிலைரசம், அதிமதுரரசம் முதலியவைகளை நசியமிடுவதும். அகருக்கட்டை, சந்தனம், அபினி, சுக்கு, சாம்பிராணி, கஸ்தூரிமஞ்சள், இவைகளைச் சேர்த்து அரைத்துப் பத்துப்போடுவதும், வேப்பிலை, நொச்சியிலை, தும்பையிலை இவைகளைத் தண்ணீரிலிட்டு வேகவைத்து இறக்கி ஆவிபிடிப்பதும் வீட்டுவழக்கம். முலைப்பாலில் கந்தைத்துணியை நனைத்துப் போடுவதினாலும், மிளகை முலைப்பால் விட்டு அரைத்துக் கொதிக்கவைத்து நோயுள்ளவிடத்தில் பூசுவதினாலும் சௌக்கியமுண்டாகும். ஸோடா



வாட்டர் (Soda water) சுடுகையான காப்பி, சுடுதண்ணீர், அல்லது சுடுதண்ணீரில் கொஞ்சம் உப்பைக்கூட்டிக் குடிப்பதினாலும், ஆன்டிபைரின் (Antipyrin) அல்லது பெனஸிடின் (Phenacetin) என்கிற மருந்தில் 5-கிறேன்ஸ் வாயில் போட்டுக்கொண்டு சுடுதண்ணீராவது சுடுகையான காப்பிக்கஷாயமாவது குடிப்பதினால் குணமுண்டாகும். இன்னும் யுடுக்கலாம் (Eau de Cologne) ஓரியன்டல் பாம் (Oriental Balm) ஹென்ரிஸ் தைலம் (Henres Thilam) மென்தால் (Menthol) முதலியவைகளிலொன்றை மேலுக்குப் போடுவதினாலும், வெந்நீரில் 15-20-நிமிஷம் வரையில் இரு பாதங்களையும் வைத்துக்கொண்டிருப்பதினாலும் தலைவலி நிற்கும்.

**கர்ப்பவதிகளின் ஸ்தனமேரிவு.**—இதுகர்ப்பந்தரித்த 8-வாரங்களுக்கு மேல் காணபது வழக்கம். எனெனில் அக்காலங்களில் ஸ்தனங்கள் பருத்து, விரிந்துபோவதுபோன்ற உணர்ச்சியும், வேதனையும் உண்டாகும். ஸ்தனங்கள் வரவர பெருக்கும். ஸ்தனங்களைக் கையினால் அழுத்திப் பார்த்தால் அவைகளில் முடிச்சு விழுவதுபோல் தோன்றும். முலைக்காம்புக்கடியில் வட்டமாகிய கருப்பு நிறம் காணப்படும். கலங்கலான பால் வெளிப்படும். சில ஸ்திரீகளுக்கு காம்பு கறுத்து கனத்து நோவுண்டாகும். இதற்குப் பிரதமத்தில் இலகு விரேசன காரிகளைக் கொடுத்து மலத்தைக் கழிக்கவேண்டியது. குளிர்ந்த ஜலத்தில் கந்தைத்துணியை நனைத்து ஸ்தனங்களின் மேல் வைத்துக்கட்ட வேண்டியது. அல்லதுயுடுக்கலாம்,(Eau de Cologne)ஜைதூனெண்ணெய் (Olive oil) இவ்விரண்டையும் சமமாய்ச் சேர்த்துக் கொண்டுஸ்தனங்களின்மேல் தேய்த்து கம்பளித்துணியினால்(Flannel) கட்டிவைக்கலாம். இரத்தவோட்டம் இயற்கையாய் நடக்கும்படி கஞ்சுகத்தின் (ரவிக்கை) முடிச்சை சற்று தளர்த்திவிடவேண்டியது. பிரஸவத்திற்குப் பின் குழந்தை பால்குடிக்கும்போது சில ஸ்திரீகளுக்கு முலைக்காம்புகளில் வெடிப்புக் காண்பதுண்டு. ஆகையால் கர்ப்பந்தரித்த ஆரம்பத்திலிருந்தே பிரதிதினமும் காலை மாலை இருவேளையும், தேயிலைக்கஷாயம்(Tea)படிக்காரத்தண்ணீர் அல்லது வெந்நீரினால் ஸ்தனங்களைக் கழுவி வருவார்களானால் பின்னிட்டு வெடிப்புண்டாகாது.

**குறிப்பு** :—கர்ப்ப ஸ்திரீகளுக்கு மேற்சொல்லிய ரோகங்களின்றி இன்னும், இடுப்புவலி, முகவலி, பல்வலி, கைகால் குடைச்சல், நித்திரையின்மை, இசிவு, இரத்தவாந்தி, காமாலை, மஞ்சட் காமாலை, சூதக ஒழுக்கு, உமிழ் நீர் பெருக்கு, ஜலதோஷம், ஜுரம் முதலிய இன்னும் அநேக நோய்களும் காண்பதுண்டு. அவைகளைப்பற்றி எழுதுவதென்றால் இச்சிறிய புத்தகம் இடம்பெறாதென்றஞ்சி இவ்விஷயத்தை இவ்வளவோடு நிறுத்தலானோம். புத்திமான்கள் அந்தந்த நோய்களுக்குத் தக்கபடி சமயோஜிதம்போல் சிகிச்சை செய்துகொள்வார்களாகவும்.

## கருவழிவு. (ABORTION).—ஏபார்ஷன்)

கருவழிவனது, கர்ப்பபாதம், கர்ப்பவிச்சியுதி, கர்ப்பவிராவம், கர்ப்பங்கரைந்துபோகுதல், அழிகர்ப்பம் அல்லது அகாலப்பிரஸவம் எனப் பல நாமம் பெறும். இது இருவகைப்படும். அதாவது கருவானது கர்ப்பாஸயத்தின் உதவியை வேண்டாது ஆறு மாதத்துக்குள் வெளிக்கண்டுவிட்டால் அழிகர்ப்பமென்றும், (Abortion) அதற்கு மேற்பட்டு பூரணகாலத்தில் வெளிப்படுமானால் அகாலப்பிரஸவமென்றும் (Premature labour) சொல்வது வழக்கம்.

நமது இந்திய தேசத்தில் விதவைகளுக்குப் புனர்விவாகம் செய்யும் வழக்கமில்லை யாகையால், காமவிகாரம்அதிகமாயுள்ள சில யவ்வன விதவைகளும், விவாகமாகாத கன்னிகைகளும் தங்களுக்குண்டாகப் போகும் தேக அசௌகர்யத்தையும், மானக்கேட்டையும் சிறிதும் தெரிந்துகொள்ளாமல் காமவிகாரத்தினால் கள்ளப்புருஷனோடின்பமுறக்கலந்து கருத்தரித்து விடுவதால், அது பந்து ஜனங்களுக்குத் தெரிந்துவிட்டால் ஜாதி பிரஷ்டம் செய்து விடுவார்களே என்கிற பயத்தினால், கரியபோளம், கள்ளி, கற்பூரம், கொடிவேலி முதலிய கொடியமருந்துகளைத்தின்று அனியாயமாய் தேக அசவுக்கியத்தை உண்டுபண்ணிக்கொள்ளுகிறார்கள். இன்னும் இக்கொடிய கிரியையினால் தமது உயிரைத் தாமாகவே மாய்த்துக்கொண்டோர் பலர். புருஷனோடு வாழும் ஸ்திரீகளுட் சிலரும் தங்களால் பாதுகாக்கக்கூடிய பிள்ளைகளைவிட அதிகம் பெறாதபடி மேற்கூறிய முறையைக் கையாடி வருவோருமுண்டு. இத்தகாத செய்கையானது அரசாங்க விதிக்கு



விரோதமாகையால் இதைச் செய்துகொள்பவளுக்கும், செய்கிறவளுக்
கும் கொடிய தண்டனை கிடைக்கும். ஆகையால் இம்முறையைக்
கையாடிவரும் ஸ்திரீகள் இனி இது விஷயமாய் எச்சரிக்கையாய்
இருக்கவேண்டியது.

கருவழிவானது அநேக காரணங்களால் பிறக்கின்றது. அதாவது
கஷ்டமான வேலை, ஓட்டம், அதிர்ச்சியுண்டாகும்படியான முயற்சி
கள், உரக்கசப்தமிடுதல், கைகளை தலைக்குமேல் உயர்த்துதல், பாரமான
சுமைகளைச் சுமக்குதல், மாடிப்படிகளில் அடிக்கடி ஏறி இறங்
குதல், இராக்காலங்களில் அதிக நேரம் நித்திரையின்றி விழித்திருக்
குதல், சுத்தமான காற்றோட்டமில்லாத விடங்களில் வசித்தல்,
திரேகம் அதிரும்படியாக வண்டி முதலிய வாகனங்களில் ஏறி வழிப்
பிரயாணஞ் செய்தல், தையல் தைக்கும் இயந்திரத்தில் கைகால் ஆட்
டங்கொடுக்கும்படி வேலை செய்தல், கருவளரவொட்டாமல் தடுக்கு
தல் அதாவது கருப்பை பலஹீனப்பட்டு தன் தொழிலை இழந்து
போகுதல், தேகமுழுமையும் காய்தல், ஆசனக்குடல் அல்லது நீர்ப்பை
நோய் கொள்ளுதல், வெப்ப குணமுள்ள பேதிமருந்துகளைச்
சாப்பிடுதல், ஆடல்பாடல் முதலியவற்றாலுண்டாகும் பெரும்
பிரயாசை, பனிநீர் சீக்கிரத்தில் விர்த்தியாகுதல், வயிற்றின்மேல் அடி
படுதல், பிண்டத்திற்கு வியாதிகண்டு உள்ளேயே இறந்துவிடுதல்,
இயற்கைக்கு விரோதமாய்க் கருவை மருந்துகளினால் வெளிப்படுத்த
முயலுதல், பயம், பலஹீனம், கோபம், சந்தோஷம், இருமல், சுரம்,
சீதபேதி, மேகரோகம், அளவுக்குமிஞ்சிய சம்போகம், அளவுக்குமேல்
தேகம் பெருக்குதல் அல்லது கொழுப்படைதல், கண்டமாலை, மலச்சிக்
கல், ஆடையை இறுகத்தரித்தல், ஆசனத்தில் கிருமி யுண்டாகுதல் முத
லிய காரணங்களால் கருவழிவு சம்பவிக்கும்.

**லக்ஷணங்கள்.**—கருப்பைக்குள் உருவம் ஏற்படாத இளங்கருவா
யிருக்கும்போது, விலா, அடிவயிறு, மேல்வயிறு, பிட்டம் முதலிய
விடங்களில் அதிக வேதனையும், நாபியின் கீழ்வாளால் அறுப்பதுபோல
வும், மார்புநோவும் முகவெளுப்பும், மூச்சுமுட்டலும், ஸ்தனங்களில்
குத்துவலியுண்டாதலும், பிறகு அவை இளகுதலும், காலை வாங்கி

நின்றுவிடுதலும், வயிற்றின் அடிப்புறம் சில்லென்றிருத்தலும், தேகத்தில் சாதாரணமாய்க் குளிருடன் நடுக்கலுண்டாதலும், சில சமயங்களில் கருப்பையினின்று துர்கந்தமான நீர் வெளிப்படுதலுமாம். இத்தகைய குணங்கள் காணுமானால் கர்ப்பங் கரைந்து விழுவதுடன் பயங்கரமான இரத்தப்பெருக்கு முண்டாகுமென்பது திண்ணம்.

கருவெளிப்படும்போது அசௌக்கியமும் ஆயாசமும் முதுகில் வேதனையும் கண்டு பிறகு பிரஸவ வேதனைக்குடைய குணங்களெல்லாம் காணும். நோயானது முதுகில் பிறந்து இடுப்பைச்சுற்றி வயிற்றிற்கு வந்து தொடைகளுக்கிறங்கிவிடும். நோய் நின்று நின்றுகாணும். பிறகு வழக்கம்போல் அதிகரித்துத்தீவிரப்படும். வாந்தி, ஒக்காளம், தீவிரமான நாடி, அளவுக்கு மிஞ்சிய தேகஉஷ்ணம், முக்கல் முதலிய குறிகள் கண்டு முடிவில் பிண்டம் வெளிப்படும். மேற்கண்ட குறிகளெல்லாம் சரீரப்பிரகிருதிகளுக்குத் தகுந்தாற்போல் சிலருக்கு அற்பமாகவும் சிலருக்குப் பிரபலமாகவும் இருக்கும். வழக்கமாகவே கருவழிவு உண்டாகும் ஸ்திரீகளுக்கு அதிக உபத்திரவமில்லாமல் பிண்டம் வெளிப்பட்டு விடுவதோடுகூட, சரீரமும் சீக்கிரத்தில் சௌக்கியமாய் விடும். இதில் வைத்தியன் மகா ஜாக்கிரதையாய்இருக்கவேண்டும். ஏனெனில் கருவழிவினால் பின்னிட்டு உண்டாகும் துன்பம் அதிகமாயிராமற் போனாலும், அக்கருவழிவானது தேகத்தைப் பலஹீனப்படுத்தி ரத்ததசரங்களைச் சலனப்படுத்துவதினாலே உண்டாகும் துன்பங்களெல்லாம் ஒன்றின்பின் ஒன்றாக வரும் அபாயம் எதன்மேலிருக்கிறதென்றால் இரத்தப் பெருக்கின்மேல்இருக்கிறது. இதனால் இளங்கரு அழிவைப் பார்க்கிலும், முதிர்ந்த கரு அழிவில் அதிக அபாயம் நேரிடுமென்பதை ஒருபோதும் மறக்கலாகாது. கருவழிவைப்போலஸ்திரீயின்தேகத்தைக் கெடுக்கக்கூடியதும், பயங்கரமும் கொடியதுமான ரோகம் வேறொன்றுமில்லை. ஒருமுறை கருவழிவுக்குட்பட்ட ஸ்திரீக்கு வழக்கமாகவே கருவழிவு உண்டாவது சகஜம். வழக்கமாகவே கருவழிவுக் குட்பட்டிருக்கும் ஸ்திரீயானவள்திரும்பவும் திரேகஆரோக்கியத்தை யடைவாளென்பது சந்தேகமே. அப்படிப்பட்டவளுக்கு உலகவாழ்க்கையில் வெறுப்புண்டாவதும் தவிர, சூதகம் கிரமமில்லாது அளவிற்கதிகமாயும் காண்பதுண்டு.



சிகிச்சை:—தேக அழற்சியையும் பலஹீனத்தையும் போக்க
வேண்டியது, கருவெளிப்படாம லிருக்கும்படியான மார்க்கங்களைச்
செய்யவேண்டியது. இடுப்புநோய் கண்டு கருவெளிப்படும் குறிகள்
கண்டால் ஸ்திரீயின் இடுப்பின் கீழ் ஓர் தலையணையை வைத்து, இடுப்
புப்பக்கம் உயரமாகவும், சிரசையும் மற்ற பாகங்களையும் சற்றுத்தாழ்
வாகவும் வைத்துக்கொண்டு நிம்மதியாய் நித்திரைபோகச்செய்யவேண்
டியது. எப்பொழுது மல்லாந்து படுத்திருக்க வேண்டியது. பத்திய
போஜனங்கள் செய்விக்க வேண்டியது. குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம்
செய்து வரவேண்டியது. லாகிரி வஸ்துக்களையும், புணர்ச்சியையும்
ஒழிக்கவேண்டியது. நீர் சம்பந்தமான ஆகாரவஸ்துக்களை நீக்கி மற்ற
வைகளைப் புசிக்கவேண்டியது. கருவழிவுக்கு ஆயத்தமாய் இருக்கிற
ஸ்திரீகள் வேறுஸ்திரீகள் பிரஸவிக்கும் சமயத்தில் அருகிலிருக்கக்கூ
டாது. அபினியைக் குறைந்த அளவாகக் கொடுத்தால் பிரஸவ வலியை
நிறுத்தி வேதனையில்லாமல் செய்யும். ஈரத்துணியை அல்குலின் மேல்
போட்டு வைப்பதினாலும் சௌக்கியமுண்டாகும்.

இரத்தப் பெருக்கு அதிகமாகி இடுப்பு வேதனையும் அதிகமானால்
அகாலப் பிரஸவத்தைத் தடுக்க முடியாது. இப்படிப்பட்ட சமயத்தில்
தேகத்தைக் குத்தி இரத்தம் எடுத்தல், 3-கிறேன்ஸ் அபினியைக்
குளிர்ந்த ஜலத்தில் கரைத்து பீச்சாங்குழலினால் ஆசனத்தில்செலுத்து
தல், குளிர்ச்சி யானவிடத்தில் நிர்விசாரமாய் நிமிர்ந்து படுத்திருத்
தல், வாந்தியாகாதிருந்திருந்தால் பச்சத்தண்ணீரில் 10-கிறேன்ஸ்
பொட்டிலுப்பைக் (Potash Nitrate) கரைத்து வாந்தியுண்டாகும்
வரையில் 2-மணி நேரத்திற்கு ஒருமுறை கொடுத்தல், அபானத்தி
லாவது அல்லது யோனித்துவாரத்திலாவது குளிர்ந்த ஜலத்தைப்
பீச்சுதல் முதலிய சிகிச்சைகளைச் செய்வதினால் அபாயக் குறிகள் தணி
யும். ஆனால் கர்ப்பாஸயத்தில் பிரஸவநோய் கண்டுவிட்டால் கட்டா
யம் கருவழிவு சம்பவிக்கவும். இப்படிப்பட்ட சமயத்திலும் மேற்
சொன்ன பரிகாரங்களைச் செய்வதினாலும் பயனுண்டு. அதிக ரத்தப்
பெருக்கினால் ஸ்திரீயின் ஜீவனுக்கே ஹானியுண்டாகும்போல் தோன்
றினால், கடற்பஞ்சினால் (Sponge) யோனிவாயை யடைத்தல், பனிக்

கட்டியை (Ice) யோனிக்குள் செலுத்துதல், பனிக்கட்டி நீரை உள்ளுக்குக் கொடுத்தல், காடியுடன் குளிர்ந்த ஜலம் கூட்டி அதனை யோனிக்குள் பீச்சுதல், அல்லது 2-அவுன்ஸ் காடியுடன் ஒரு புட்டி சுத்த ஜலம் கூட்டிக் கொஞ்சம் சர்க்கரை சேர்த்து வேளைக்கு ஒரு அவுன்ஸ் வீதம், தினம் ஒன்றுக்கு 2-3-தரமாகிலும் அல்லது பலதடவையாகிலும் கொடுப்பதினால் குணமுண்டாகும். மேற்சொல்லிய சிகிச்சைகளிலும் குணமில்லாது இரத்தப்பிரவாகம் அதிகமானால் பிண்டத்தை வெளிப்படுத்தும்படிக்கான முயற்சி செய்ய வேண்டியது. இடுப்பு நோய் அதிகமாகி பிண்டம் வெளியாகிவிட்டால் நாம் அதிகமாகச் சிகிச்சை செய்ய வேண்டிய நிமித்தமிராது. பிண்டம் பேர்பாதி வெளிவந்து பேர்பாதி கருப்பையில் தங்கிப் போகுமானால் இரத்தப் பிரவாகம் இருந்துகொண்டே யிருக்கும். அவசியமானால் விரலை விட்டாவது வளைந்த குறட்டை உள்ளுக்குச் செலுத்தியாவது பிண்ட சேஷத்தை அடியோடு வெளியாக்கி விடவேண்டியது. எர்காட் ஆவ்ரை (Extract Ergot Liq) என்னும் கோதும்பைச்சத்தில் $\frac{1}{2}$-டிராம் கொடுத்தல் அல்லது 5-கிறேன்ஸ் ஈய பஸ்பத்தை (Plumbi acetas) $\frac{1}{4}$-கிறேன்ஸ் அபினியுடன் கூட்டி மாத்திரையாகச் செய்து உள்ளுக்குக் கொடுத்தல் ஆகிய இவைகளை அனுசரிக்க வேண்டியது. ஈய பஸ்பமானது மாக விசேஷகுணமுடையதும், ஜீவனைக்காப்பாற்றக்கூடிய அவுஷதமுமாய் இருக்கிறது. கஞ்சாத்திராவகத்தை (Tincture Cannabis Indica) குறைந்த அளவில் கொடுத்து வருவதினாலும் நன்மையுண்டு. (Take of Acid Sulphuric dil dr 2, Tincture of Gingiberis dr 1, distilled water oz 8, Make a mixture, Dose 2 tablespoonfuls every four hours,—or, Take of Acetate of lead gr 3, Tincture of opium drops 5, distilled water oz $1\frac{1}{2}$, Make a draufht to be taken every 3 or 4 hours—or Take of Acetate of lead gr 3, Extract of opium gr $\frac{1}{4}$, mix well, And make a pill one to be taken three times a day.)

வழக்கமாகவே பிண்டம் கலங்கி வெளிப்பட்டுவிடும். சுபாவத்தையுடைய ஸ்திரீகள் தேகதிடமுண்டாகி கருப்பை வலுவடையும்.



வரையில் சம்போகத்தை நிசேஷமாய் நீக்கி வைக்கவேண்டியது. இன்னும் கர்ப்பகாலத்தில் முத்துச்சுன்னம், அக்கிரகாரம் வகைக்கு விராகனிடை $\frac{1}{2}$ தாளிசபத்திரி, ஏலக்காய், ஓமம், லவங்கம், லவங்கப் பத்திரி லவங்கப்பட்டை, கிச்சிலிக்கிழங்கு, வகைக்கு விராகனிடை 1, பருப்புக்கீரைவிரை, வெண்சந்தனம், மருதம்பட்டை, அரிசித்திப்பிலி, பகமனேசீபேத், பசமனே சுரூஃ வகைக்கு விராகனிடை $1\frac{1}{2}$, மூங்கிலுப்பு, செஞ்சந்தனம், சுக்கு, முலாம்பழ விரைப்பருப்பு, ரூமிமஸ்தகி வகைக்கு விராகனிடை 2, சீனிச்சர்க்கரை பலம் 5, பசுவின் நெய் பலம் $1\frac{1}{2}$, இவைகளைச் சேர்த்து லேகியம் செய்துகொண்டு, வேளையொன்றுக்கு $\frac{1}{2}$-தோலாவீதம் காலை மாலை இருவேளையும் சாப்பிட்டு வருவதினால் கருச்சிதைவை ஒழிக்கும், கருப்பையைப் பலப்படுத்தும். பிண்டத்தை வளர்க்கும்.

## கர்ப்ப ஸ்த்ரீகள் கவனிக்கவேண்டிய விஷயங்கள்.

நமது தேசத்தில் சுகாதார விதிகளை அனுசரித்து நடக்கிற ஸ்திரீகள் மிகவும் குறைவு. அவர்களால் இந்த விஷயம் அவசியம் நடத்தித் தீரவேண்டியிருப்பதால் பாலிகா பாடசாலைகளில் இதைக் கற்பித்துக் கொடுத்தால் விருத்தி யடையும். பிரதி ஜீவாத்மாக்களும் ஜீவனோடிருப்பதற்குப் பரிசுத்தமான ஆகாயமும், சுத்த ஜலமும், சூரியவெளிச்சமும் இன்றியமையாதனவாய் இருக்கிறது. ஆனால் கர்ப்ப ஸ்திரீகளுக்கோவெனில் அது சாதாரண மனிதர்களைக்காட்டிலும் இருமடங்கு அதிகமாய் இருக்கவேண்டும். ஏனெனில் கர்ப்பிணியானவள் தனக்காகவும், தன் வயிற்றிலுள்ள சிசுவுக்காகவும் சுவாசிக்க வேண்டியதாய் இருக்கிறது. அவள் அசுத்த ஆகாயத்தைச் சுவாசிப்பாளானால் அவள் தேகத்திலுள்ள இரத்தமுழுதும் கெட்டு அதனால் சிசுவிற்கு அசௌக்கியமும் ஆயுள் நஷ்டமும் உண்டாகுமென்பதற் கையமில்லை. ஆகையால் கர்ப்பஸ்திரீயானவள் கூடுமானவரையில் பரிசுத்தமான ஆகாயத்தைச் சுவாசித்து வரவேண்டும். அதிகமான சூடு அல்லது குளிர்ச்சியாகிய காற்றாகாது. அதிக உஷ்ணமுள்ள காற்றினால் காராணுக்கினி அதிகரித்து ஆன்மாக்களின் சக்தி குறைந்து, பலவித துர்க்குணங்களுண்டாகும். இதுபோலவே அளவிற்கதிகமான குளிர்ந்த காற்றானது ஜல

தோஷம், கடினமான இருமல் முதலியவைகளையுமுண்டாக்கும். அவ்வித இருமலினால் கருவழிவு உண்டாவதுமுண்டு. இன்னும் சுத்த ஜலத்தைப் பருகுவதிலும், சூரிய வெளிச்சமுள்ள விடங்களில் வசிப்பதிலும் எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். கர்ப்பஸ்திரீயானவள் பிரதிதினமும், குளிர்ந்த ஜலம் அல்லது வெந்நீரில் ஸ்நானம் செய்து வரவேண்டும். இன்னும் கர்ப்ப ஸ்திரீயானவள் உண்பதிலும் உறங்குவதிலும், தனக்கு நேரிடும் அபாயங்களைத் தடுத்துக்கொள்வதிலும், மற்றக் காரியங்களிலும் அதிக ஜாக்கிறதையாய் இருக்கவேண்டியது. அப்படிக் கிராவிட்டால் கருச்சிதைவிற்கு இடமுண்டாவதும் தவிர தங்கள் உயிரை இழக்கச் செய்யும் அபாயங்களுக்கும் இடமுண்டாகும்

கர்ப்பந்தரித்ததுமுதல் அல்லது கர்பந்தரித்த குறிகளுண்டானது முதல் அதிக கடினமான வேலை, அதிர்ச்சியை யுண்டாக்கும்படியான காரியங்கள், அலறி சப்தமிடுதல், ஓட்டம் முதலியவைகளை முற்றும் நீக்க வேண்டியது. நடக்கும்போதும், வண்டி முதலிய வாகனங்களில் ஏறிப் போகையிலும், மெதுவாகவும் அமைதியாகவும் போகவேண்டியது. இராக்காலங்களில் நீண்ட நேரம் நித்திரையின்றி விழித்திருக்குதல், விசனத்தினால் அழுதுகொண்டிருத்தல், கோபித்தல், பயப்படுதல், பாரமான சுமைகளைச் சுமக்குதல் முதலிய கிரியைகளைத் தவிர்க்க வேண்டியது. இன்னும் மனதிற்கு அருவருப்பான வஸ்துக்களையும் துர்வாசனையுள்ள வஸ்துக்களையும் நீக்கவேண்டியது. கெந்தகப்புகை முதலான கெட்ட நாற்றத்தையுடைய புகைகளைச் சுவாசித்தலுமாகாது.

தாகித்திருப்பதும் அடிக்கடி சாப்பிடுவதும், அதிகநேரம் பட்டினியாயிருப்பதும், அதிகமாய்ச் சாப்பிடுவதும் கெடுதியே. முக்கியமாய் இராக்காலங்களில்அதிகமாய்ச் சாப்பிடுவது கொஞ்சமும் கூடாது. அப்படிச் சாப்பிடுவதினால் இரைப்பை அதிகமாய்க் கனத்துவிடுவதால் மூச்சுவிடக் கஷ்டமாய் இருக்கும். * கிடைக்கக்கூடாத பதார்த்தங்களின்மேலுள்ள பிரியத்தை நீக்கவேண்டியது. இன்னும் கர்ப்ப ஸ்திரீகளில்

* கிடைக்கக்கூடாத பதார்த்தங்களின்மேல் கர்ப்ப ஸ்திரீக்கு அபேக்ஷையுண்டானால், குளிர்ந்த ஜலத்தை வயிறு நிறைய சாப்பிடும்படி சில பண்டிதர்கள் கூறியிருக்கிறார்கள்.



அநேகர் *மண், சாம்பல், கரி, செங்கற்றூள், சீமைச்சுண்ணாம்பு முதலியவைகளை அதிக ஆவலாய்த் தின்பதுண்டு. அதனால் கருவிற்கும், தனக்கும் பலவித கெடுதி விளையுமாகையால் இத்துர்வழக்கத்தை இன்றே நீக்கவேண்டியது.

ஸ்திரீகளுக்குக் கர்ப்பந்தரித்த மூன்றாவது, நான்காவது மாதங்களில் கருப்பைக்குத் தன் தொழிலைத் தடைசெய்யும்படியாக ஓர் வித உணர்ச்சி உண்டாகிறபடியால், இம்மாதங்களில் மற்ற மாதங்களைவிட அதிக ஜாக்கிரதையாய் இருக்கவேண்டியது. இன்னும் ருதுவர்த்தனகாரி, விரோசனகாரி முதலிய வெப்பமான மருந்து வகைகளையும் இம்மாதங்களில் உபயோகிக்கலாகாது. அப்படிச் செய்வதால் கருவழிவு உண்டாகு மென்பதற்கையமில்லை.

கர்ப்ப ஸ்திரீயானவள் கர்ப்பகால முழுவதும் இலகுவான சரீரப் பயிற்சி செய்துகொண்டு வரவேண்டியது. மிகவும் நன்மையானபோதிலும், பெரும்பாலும் எட்டாவது மாதத்தில் அதனை அதிகமாக கவனிக்கவேண்டும். ஏனெனில் இம்மாதத்தில் நன்றாய் ஓடியாடித் திரிந்தால்தான் அடுத்த மாதத்தில் பிரஸவம் கஷ்டமில்லாதிருக்கும். இன்னும் இம்மாதத்தில் வயிற்றிலிருந்து ஓர்வித கெட்ட ஆவி ஜனித்து சிசுவைத் துர்ப்பலப்படுத்தி அகாலப் பிரஸவத்திற்கு முன்ளாக்கும். ஆகையால் இவ்விரு விஷயங்களுக்கும் உள்ளாகாது கருப்பவதிகள் இம்மாதத்தில் சாந்தமான சரீரப் பயிற்சி எடுத்துக்கொள்ள வேண்டியது. ஜுரம், விஷபேதி, வைசூரி, பிளேக் முதலிய விஷஜ்சிக ரோகமுள்ள இடங்களுக்குப் போகக்கூடாது. அவ்விதரோகமுள்ள விடங்களிலிருந்து வருபவர்களைத் தீண்டவாவது, தங்கள் வீடுகளுக்கு வருவதற்காவது இடங்கொடுக்கலாகாது.

ஒன்பதாமாதமானது பிரஸவிக்கும் மாதமாகையால் சிசுவிற்கும் தனக்கும் அபாயத்தை விளைவிக்காத கிரியைகளைக் கையாடி வரவேண்

* மண், சாம்பல், கரி, செங்கற்றூள் முதலிய தகாத வஸ்துக்களின்மேல் அதிக அபேக்ஷையாய் இருப்பவர்கள் பச்சைப்பயறை நன்றாய் வேகவைத்து சர்க்கரை கூட்டிச் சாப்பிட்டு வருவதினால் மேற்கூறிய வஸ்துக்களின்மேலுள்ள அபேக்ஷை நீங்குமென்று அநேகம் அறிவாளிகள் அறிவித்திருக்கிறார்கள்.

டும். குனிந்துகொண்டிருப்பதும், நீண்ட நேரம் உட்கார்ந்திருப்பதும்
கூடாது, உட்காரும்போதும், படுத்திருக்கும்போதும் அலங்கோலமாய்
இருக்கலாகாது. பேறு காலம் நெருங்கி வரவர காலை மாலை இருவேளை
களிலும் துளசிச்செடி போட்டுக் காய்ச்சிய வெந்நீரினால் வயிற்றைக்
கழுவி வர, குழந்தையும் பலப்பட்டு, சிரமமில்லாது சுகப் பிரசவமு
மாகும்.

இன்னும் கர்ப்பவதியானவள் தன்னால் இயன்றமட்டும்,
பொறாமை, குரோதம், விரோதம், கோபம், லோபம், துக்கம் முதலிய
கொடிய விஷயங்களை விசேஷமாய் நீக்கவேண்டியது. அவரவர்களின்
சக்திக்கேற்றபடி ஆடையாபரணங்களைத் தரித்துக்கொண்டு சரீரத்தை
அலங்காரமாகவும் மனதை அமைதியாகவும் வைத்திருக்கவேண்
டும். நற்குணம் நன்னடக்கை முதலியன வாய்ந்த ஸ்திரீகளோடு சம்
பாஷித்து வரவேண்டும். இன்னும் பிரதம கர்ப்பத்தில் ஸ்திரீக்கு
ஒன்றுந் தெரியாதாகையால், என்னமோ, ஏதோ, எப்படி முடியுமோ
என்று ஏக்கமுற்று திகிலடைவது வழக்கமாகையால் விவேகமுள்ள
ஸ்திரீகள் அந்தப் பயத்தை மனதில் கொஞ்சமும் வைக்கமாட்டார்கள்
பிள்ளைப்பேறானது சர்வ பிராணிகளுக்கும் இயற்கையானதால், பகுத்
தறிவுள்ள ஸ்திரீகள் மேற்கண்ட பயத்தை எள்ளளவும் மனதில்
வைக்காது தங்கள் தங்கள் மதாசாரப்படி பூஜை நோன்பு முதலியவை
களைத்தப்பாது அனுஷ்டித்து வருவதோடுங்கூட, தங்களுக்குண்டாகும்
சந்ததியானது நன்னடக்கை, அழகு, ஆயுள்பலம், தேகபலம், மனோபம்,
முதலியவைகளோடு கூடினதாய் உதிக்கும்படி எப்போதும் கடவுளைப்
பிரார்த்தித்தவர்களாய் இருக்கவேண்டும்.

## கர்ப்பவதிகளுக்கான ஆகாரவினங்கள்.

**கறிகாய் வகையில்.**—அத்திப்பிஞ்சு, அவரைப்பிஞ்சு, முருங்
கைப்பிஞ்சு, கத்திரிப்பிஞ்சு, பீர்க்கம்பிஞ்சு, புடலம்பிஞ்சு, வெண்டைப்
பிஞ்சு, வாழைக்கச்சல், வாழைப்பூ, பாகற்காய், கோவைக்காய், மாவ
டுகு, உருளைக்கிழங்கு, ஆல்வள்ளிக்கிழங்கு, கொட்டிக்கிழங்கு முதலிய
வைகளும், **கீரைவகையில்**, அறுகீரை, அரைக்கீரை, ஆரைக்கீரை, சிறு
கீரை, பசலைக்கீரை, பொன்னாங்காணி, மணத்தக்காளி, முன்னை, வேளைக்



கீரை, பருப்புக்கீரை, வெந்தியக்கீரை, காசினிக்கீரை, முளைக்கீரை
முதலியவைகளும், **பழவகையில்** திராக்ஷபழம், கொடிமுந்திரிப்பழம்,
ஆல்பகோராப் பழம், கிச்சிலிப்பழம், மாதுளன்பழம், பேயன்வாழைப்
பழம், சீமை இலந்தைப்பழம், அத்திப்பழம், எலுமிச்சம்பழம், முதலி
யவைகளும், **துவையல் வகையில்,**—பிரண்டை, பொதினா, புளியாரை,
வேப்பம்பூ, பச்சைக்கொத்துமல்லி, நாய்க்கடுகு, துவரம்பருப்பு, பச்
சைப்பருப்பு, முதலியவைகளும், **பருப்பு வகையில்.**—துவரம்பருப்பு,
பச்சைப்பருப்பு, பாதாம்பருப்பு, முந்திரிப்பருப்பு, சாரப்பருப்பு முத
லியவைகளும், **ஊறுகாய் வகையில்.**—மரிமாங்காய், மாம்பிஞ்சு, களாக்
காய், நெல்லிக்காய், கச்சநார்த்தங்காய், கடுக்காய், இஞ்சு, எலுமிச்சம்
பழம், முதலியவைகளும், **கஞ்சிவகையில்,**—சுக்குத்தட்டிப்போட்டுக்
காய்ச்சிய அரிசிக்கஞ்சி, சிறுபயறுக்கஞ்சி, கோதுமைக்கஞ்சி, சவ்வரி
சிக்கஞ்சி, அரரூட்கஞ்சி, ஆல்வள்ளிக்கிழங்கு மாவின் கஞ்சி, பாற்
கஞ்சி, நெற்பொரிக்கஞ்சி, பருப்பினங்கள் சேர்ந்த பாயஸம் முதலிய
வைகளும், **சிற்றுண்டிகளில்,**—இஞ்சி, காயம், மிளகு முதலியவைகள்
சேர்த்துச் செய்த தோசை, ஆப்பம், இட்டலி, பர்பி, பூரி, பூந்தி, பேணி,
போளி, லட்டு, ஜிலேபி, ஹல்வா, பழய ரொட்டி, பிஸ்கோத் முதலிய
வைகளும், இன்னும் நல்ல கெட்டித்தேன், புதிய நெய், புலவு, கிச்சடி,
பன்னீர், ரோஜாப்பூ, குங்குமப்பூ, கரும்பு, அதிமதுரம், உள்ளிப்பூண்டு
முதலியவைகளும், **இறைச்சி வகையில்**—கோழிக்குஞ்சு, ஆட்டெலும்பு
முதலியவற்றின் சூப்பு, கோழிமுட்டை, கோழிக்குஞ்சு, புறாக்குஞ்சு,
மான், முசல், உடும்பு, உள்ளான், ஊர்க்குருவி, காடை, கவுதாரி
முதலியவைகளும், **கருவாடு வகையில்.**—கிழங்கான், குரவை, சென்
னகுனி, சுறா, திருக்கை, நெத்திலி, வெரால், வெள்ளை கச்சைக்கரு
வாடு, தாரைப்பொடி, ஓலைவாளைச்சாகு முதலியவைகளுமாம். பூண்டு,
வெங்காயம், கடுகு, மிளகு, சதகுப்பை முதலிய வெப்பமான வஸ்துக்
களை அடிக்கடி உபயோகிக்கலாகாது. மசாலா வஸ்துக்களில் லவங்கப்
பட்டையை மட்டும் ஏழாமாதத்திற்கு மேற்பட்டு பிரஸவகால பரியந்தம்
உபயோகிக்கலாம். அதனால் நன்மையுண்டு. அதிக புளிப்பு, அதிக
கசப்பு, அதிககாரம், உவர்ப்பு ஆகிய பதார்த்தங்களை அதிகம் சேர்க்க

லாகாது. அஜீரணத்தையுண்டுபண்ணக்கூடியதும் அதிக்நேரஞ்சென்று ஜீரணமாகக்கூடியதும், மலபேதி, நீர்பேதி, சூதகவிர்த்தி முதலியவைகளை உண்டுபண்ணக்கூடிய வஸ்துக்களையும், கள்ளு, சாராயம், ஒயின், பீர், பிராந்தி, விஸ்கி முதலிய லாகிரி வஸ்துக்களையும், பப்பாளிப்பழம், பலாப்பழம், மாம்பழம், அன்னாசிப்பழம், உப்புக்கண்டம், கெண்டை, உள்ளான், முதலிய வஸ்துக்களை ஒருபோதும் புசிக்கலாகாது.

## பிரஸவம். (FARTURITION—பார்டியூரிஷன்)

பிரஸவம் நான்கு வகைப்படும். அதாவது கருத்தரித்த ஒன்பது மாதங்களுக்குமேல், பிரஸவநோய் கண்டு சிரசு உதயமாகி 24-மணி நேரத்திற்குள் தாய்க்கும் பிள்ளைக்கும் யாதொரு அசௌக்கியமுமில்லாமல் சிசு ஜீவனோடு ஜனனமாவதற்கு கிரமப் பிரஸவம் (Natural labour) என்றும், 24-மணிக்கு மேற்பட்டும் பிரஸவவலியினால் அவதிப்படுவதற்கும், சிசுவின் சிரசு வெளிப்படாமல் வெளிப்படுவதற்குக் கஷ்டமாய் இருக்கும்போது ஆயுதப்பிரயோகத்தினால் வெளிப்படுத்துவதற்குக் கஷ்டப்பிரஸவம் (Difficult labour) என்றும், பிரதமத்தில் சிசுவின் சிரசு வெளிப்படாமல், பிட்டம், கால், கை, நஞ்சுக்கொடி முதலியவற்றில் ஏதாவது ஒன்று உதயமாவதற்குக் கிரமாதீதப் பிரஸவம், (Preternatural labour) என்றும், பிரஸவ காலத்தில் வலிப்பு அதாவது இசிவு காணுதல், பெரும்பாடு காணுதல் இரட்டப்பிள்ளைப் பேறு முதலியவைகளுக்கு விபரீதப் பிரஸவம் (Complex labour). என்றும் பேர்.

## பிரஸவகால சமையங்கள்.
## (STAGES OF LABOUR—ஸ்டேஜஸ் ஆவ் லேபர்)

பிரஸவம் நான்குவிதமாக வேறுபட் டிருப்பதுபோலவே பிரஸவகால சமையங்களும் 3-விதமாக வேறுபட்டிருக்கிறது. அதாவது பிரஸவ நோய் கண்டு கருப்பையின் கழுத்து முற்றும் விரிவதற்கு முன்னதாக முதல் பாதம் (First Stage) என்றும், கருப்பையின் கழுத்து விரிந்தது முதல் சிசுஜனனமாகும் வரையில் இரண்டாம் பாதம் (Second Stage) என்றும், மாயை, ஜவ்வு, அழுக்கு முதலானவை



கருப்பையைவிட்டு வெளிப்படுகிறவரையில் மூன்றும் பாதம் (Third Stage) என்றும் சொல்லப்படும்.

**கிரமப்பிரஸவம்.**—முதல் பிரஸவமானது எப்போதும் கொஞ்சம் கர்ப்பா சிரமமாகவேயிருக்கும். பிரஸவகாலத்துக்குச் சிலநாள் முந்திக் கர்ப்பாஸயத்தின் வாயினின்றும்,யோனியினின்றும் ஓர்விதமினுமினுப்புள்ள பிசின்போன்ற நீர் கசிந்துகொண்டிருக்கும். அதில் ரத்தக்கோடுகளுமிருக்கும். இது சிசுவரும் மார்க்கங்களை நைப்புப்பண்ணி வைக்கிறது. இரவில் நித்திரையின்றி அரட்டல்புரட்டலாய் இருக்குதல், கருப்பை கீழுக்கிறங்கி வயிறு சற்று தளர்ச்சியாகிறதும், மலஜலங்கள் இயற்கைக்கதிகமாய் அடிக்கடி வெளிப்படுவதும், பிரஸநோய் சீக்கிரத்தில் ஆரம்பிக்குமென்று காட்டுங் குறிகளாம். சில ஸ்திரீகளுக்கு மேற்கண்ட குறிகள் யாதொன்றும் காணாமலேயே பிரஸவ வேதனை கண்டு சிசு ஜனிப்பது முண்டு.

பிரஸவ நோய் கண்டு சிசுவின் சிரசு உதயமாகி 24-மணி நேரத்திற்குள் யாதொரு உபத்திரவமில்லாமல் பிரஸவம் முடிந்து நஞ்சும் இயற்கையாய் வெளிப்பட்டு விடுவதே கிரமப்பிரஸவம். பிரஸவநோயானது பொய் நோய் (False Pain) மெய் நோய் (True Pain) என இருவகைப்படும். பலஹீனம், பசிமந்தம், மலபந்தம், குளிர்ச்சி ஆகிய அநேக காரணங்களால் பொய்நோய் என்பது உண்டாகும். கர்ப்பாஸயத்திற்குச் சுருங்கும் தன்மையில்லாமையாலும், வயிற்றின் பல இடங்களில் நோய் தெரிகிறதினாலும்,சிலேத்தும நீர் யோனியிலிருந்து வெளிப்படாததினாலும், கர்ப்பாஸயத்தின் முகம் விரியாததினாலும், பனிக்குடம் ஏற்படாததினாலும், அந்த நோயும் கிரமமின்றி உண்டாவதினாலும், இந்நோயை மெய்யான நோயல்லவென்று அறிந்துகொள்ளலாம். இந்நோயானது குடலிற்காணும் அழற்சியினால் (Intestinal irritation) உண்டாகிறது. இதற்குப் பிரதமத்தில் இலகு விரேசனகாரிகளால் மலத்தைப் போக்கிப் பிறகு குறைந்த அளவாக அபினியைக் கொடுப்பதினால் அவை நீங்கும். அனுபோகமுள்ள வைத்தியனுக்கு இது குடல்தாபிதத்தினால் (Enteritis) ஏற்பட்டநோய் அல்லவென்று தெரியவரும்.

மெய்யான பிரஸவ நோயானது முதல் முதுகில் கண்டு பிறகு கொஞ்சங்கொஞ்சமாய் இடுப்பு முழுதும் வியாபித்த பிறகு வயிற்றுக்குச் சென்று அதன் பிறகு தொடைகளுக்கிறங்கிவிடும். இந்நோயானது கருப்பை சுருங்குவதினால் உண்டாகிறது. மேலும் இந்நோய் கருப்பையின் வாயை அகற்றி பனிக்குடத்தைப் பிதுங்கச் செய்வதற்கும் அனுகுணமாய் இருக்கிறது. இத்தருணத்தில் ஸ்த்ரீக்கு மனத்துயரத்தை உண்டுபண்ணும். அதனால் எக்கமுற்று, பயந்து அழுவாள், சிலர் தைரியமாயும் இருப்பதுண்டு. இந்நோய் விட்டுவிட்டு வந்தாலும் சில சமயம் நீடித்திருப்பதும் உண்டு. நோய் நிசேஷமாய் நின்றிருக்கும்போதும் ஸ்திரியின் மனத்துயரம் எள்ளளவும் நீங்காது. சிலருக்கு அத்தருணத்தில் வாந்தியுண்டாகும். இது நல்லது, இதனால் இரைப்பைக்கு (Stomach) அதிக பளுவில்லாமல் சுகுணமுண்டாக்கும். இன்னும் படபடப்பான நாடி நடையுடன் முகம் சிவக்கும். தேக முழுமையும் வியர்வைகாணும், கால்களில் திமிருண்டாகும். பிரஸவ நோய் கண்டு கருப்பையின் வாயை அகற்றும்போது ஓர்வித நடுக்கமுண்டாகும். இந்நடுக்கம் குளிர்ச்சியினால் ஏற்படுவதன்று. ஸ்திரீயானவள் தனது தேகம் போதிய உஷ்ணமுடையதாயிருந்தும் இவ்வித நடுக்கமுண்டானதைப்பற்றி கவலைப்படுவாள். ஆனால் இந்த நடுக்கமானது கருப்பையின் கழுத்திற்கும் தேகத்தின் இதர பக்கங்களுக்குமுள்ள சம்பந்தத்தினால் உண்டாகிறது. கருப்பையின் கழுத்து முற்றும் விரிகிற சமயத்தில் நடுக்கம் ஆரம்பமாவதே மேற்கண்ட விஷயத்திற்குப் போதிய சாக்ஷியாகும். ஒவ்வொரு தரமும் நோய் உண்டாகும்போதெல்லாம் பனிக்குடம் கருப்பையின் கழுத்திற்கு வந்து குழந்தை வெளிப்படும் மார்க்கமாகிய கர்ப்பாஸயமும் யோனியும் ஒரேதொடர்ச்சியான மார்க்கமாகிற வரைக்கும் மனித எத்தனத்தால் செய்யக்கூடாத மிருதுவும் பலமுமுள்ள ஓர் ஆப்பின் (Wedge) செய்கையைச் செய்து கொண்டிருக்கும். கருப்பையின் கழுத்துப் பூரணமாய் விரிந்தபிறகு ஓர் பெரும் நோய் கண்டு பனிக்குடம் உடைந்து அதிலுள்ள நீர் வெளிப்படும். இரண்டாம்பாதத்தில் அதிக வேதனையோடு முக்கல் காணும். அருகிலிருக்கிற ஏதேனும் ஒன்றைப் பிடித்துக்கொண்டு முக்குவள் வேதனை விட்டுவிட்டுக் காணும்.



சிசு ஜனித்தபிறகு மூன்றும் பாதத்தில் (Third Stage) நோய் நின்றுவிடும். அக்காலத்தில் கருப்பையின்மேல் கையை வைத்துப் பார்வையிட்டால் அது கொஞ்சம் துவண்டும் கருப்பை சிறுத்துமிருக்கும். சிறிதுநேரம் நோயில்லாமலிருந்து பிறகு சீக்கிரத்தில் நோய் ஆரம்பிக்கும். இந்த நோயினால் நஞ்சு வெளிப்படும். ஆனால் சிசு வெளிப்பட்ட 20-நிமிஷங்களுக்கு மேல் பிரசூதநோய் உண்டாகி பிறகு நஞ்சு அழுக்கு முதலியவை வெளிக்காண்பது வழக்கம். சிலருக்கு 30-நிமிஷங்களுக்கு மேற்பட்டும் 1-மணிக்கு உட்பட்டும் நஞ்சு வெளிப்படுவது உண்டு. ஆனால் 1-மணி நேரத்திற்குப் பிறகும் நஞ்சு வெளிப்படாதிருப்பதற்கு ஆங்கிலத்தில் (Retained Placenta) என்று பேர். சில சமயங்களில் சிசுவோடு கூடவே நஞ்சும் ஏககாலத்தில் வெளிப்படுவதுமுண்டு. இலகுவும், சிறப்புமான இயற்கைப் பிரஸவம் இதுவேயாகும். இவ்வித பிரஸவத்தில் நாம் செய்யவேண்டிய உதவி ஒன்றும் இல்லை. அப்படிக்கின்றி நாம் ஏதேனும் செய்யப்பிரவேசிப்போமானால் அதனால் ஏதேனும் ஒரு தீங்கு நேரிடும்.

## பிரஸவ நிர்வாகத்தைப்பற்றிய போத நிபந்தனைகள்.

## GENERAL RULES FOR CONDUCTING LABOURS.

மருந்துவத்தொழில் செய்வோர் பிரஸவ ஸ்திரீ இருக்குமிடத்திற்குச் சென்றவுடன், ஸ்திரீயின் தற்சமய தேகஸ்திதியையும், நாடி நடை, மலக்கிரமம், நாக்கு ஆகிய இவைகளையும், அவளுக்கு மெய்யான பிரஸவ நோய் கண்டிருப்பதும் இல்லாததும், உண்மையாகவே பிரஸவ நோய்கண்டிருக்குமானால் உதயமாகும்உறுப்பு இன்னதென்றும்அறிந்து கொள்ளவேண்டும். திடீரென்று யோனிவழியாய்க் கையைச் செலுத்தி பரிக்ஷை செய்யலாகாது. பிரஸவ நோய் நின்றவுடனே வலது கை முன் விரலுக்கு எண்ணெய் தடவி கர்ப்பாஸயத்தின் வாயினுள்ளே விரலைச் செலுத்தி உதயமாகும் உறுப்பையும், அதன் ஸ்தானத்தையும் கர்ப்பாஸயத்தின் வாயின் நிலைமையையும் அறிந்துகொண்டு பிறகு விரலை எடுத்துவிட வேண்டியது. இவ்வித பரிக்ஷையினால் இயற்கைக்கு விரோதமாய் உதயமாகும் உறுப்பையும், கூபகத்

தின் விட்டத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் சிசுவையும் சீர்படுத்த அவகாசமுண்டாகும். மேற்கண்டவிதமாய் பரிக்ஷைசெய்து திருப்திகரமாய் அறிந்துகொண்டபிறகு வைத்தியன் பிரஸவ அறையைவிட்டு வெளியே வந்துவிடவேண்டும். அப்படிக்கு வராவிட்டால் பிரஸவ ஸ்திரீயானவள் லஜ்ஜையினால் மலஜலங்களை அடக்கிக்கொண்டிருப்பாள். மலஜலக்கிரமங்களைத் *தாதியின் மூலமாய்த் தெரிந்துகொண்டு அவசியமானால் பீச்சாங்குழல் (Enema) அடித்து மலத்தை வெளிப்படுத்தவும். பிரஸவ நோயின் முதல் பாதத்தில் ஸ்திரீக்கு இஷ்டமிருந்தால் உலாத்தச் செய்யலாம். சிரமமாய் இருந்தால் படுக்கவைக்கலாம். இலகுவாய் ஜீரணிக்கக்கூடிய ஆகாரங்களையும், அதிக புளிப்பில்லாத கனிவர்க்கங்களையும், காய்ச்சினபால், இறைச்சிரசம் (Soup) தேத்தண்ணீர் இவைகளில் ஏதேனும் ஒன்றைக் கொடுக்கலாம். இச்சமயத்தில் ஸ்திரீக்கு ஹிதமான வார்த்தைகளைச்சொல்லி அவளுக்குண்டாயிருக்கும் மனத்துயரத்தையும் பயத்தையும் அடியோடு அகற்றவேண்டியது. நோயை உண்டுபண்ண வேணுமென்கிற நோக்கத்தினால் ஸ்திரீயைப் பலாத்காரமாக முக்கும்படித் தூண்டலாகாது. பிரயோஜனமில்லாத இம்முயற்சியால் ஸ்திரீ மிகவும் களைத்துப்போவதினால், பிறகு குழந்தையைத் தள்ளும்படிக்கான போதிய பலம் இல்லாமற்போகிறது. அதன் பிறகு ஆயுதப்பிரயோகம் செய்து சிசுவை வெளிப்படுத்தும்படி நேரிடும். சில ஸ்திரீகளுக்கு நோய்கண்டு முக்கும்போதெல்லாம் மலம் வெளிப்படுவதுபோலிருக்கும். இதனால் ஸ்திரீக்கு அதிக வேதனையாயிருக்கும். ஆகையால் 15–துளி அபினித் திராவகத்தை (Tincture of opium) கொஞ்சம் ஜலத்தில்கூட்டி பீச்சாங்குழல் (Syringe) மூலமாக ஆஸனத்தில் பீச்சவேண்டியது. நீடித்த பிரஸவ நோயில் கருப்பையின் கழுத்துமுழுதும் விரிந்தபிறகும், வாந்தியாகிக்கொண்டிருந்தாலும், நாக்கில் மாப்படிந்திருந்தாலும், நாடி நடை துரிதமாய் நடந்தாலும், கறுத்த காப்பித் திப்பியைப்போல் (dark coffee-grounds)வாந்தியானாலும், தக்ஷணமே தகுந்த சிகிச்சைசெய்ய வேண்டியது, நல்ல காற்று வீசும்படியான அறைக்குள் பிரஸவிக்கும்படி ஏற்பாடுசெய்யவேண்டியது. காற்றும் வெளிச்சமுமில்லாத அறைக்குள்



வைத்து ஜன்னல்களையும் கதவு முதலியவைகளையும் மூடி ஸ்திரீயை வீணில் வதைக்கலாகாது. காற்று வாடைப்பட்டால் சீதளம் உண்டாகுமென்று சொல்வது நாட்டு வழக்கம். இன்னும் பிரஸவிக்கும் அறையில் ஏராளமான ஸ்திரீகள் சூழ்ந்துகொண்டு கூட்டம் போடலாகாது. பிரஸவக்குறிகள் காண்பதற்குமுன்னமேயே ஸ்திரீயின் படுக்கை, உடை முதலியவைகளைக் கவனிக்கவேண்டும். பனிக்குடம் உடைந்து சிசு உதயமாகிற இரண்டாம் பாதத்தில் ஸ்திரீயின் ஆடை முதலியவைகளைக் களைந்து நிர்வாணப்படுத்தி, படுக்கவைத்து துப்பட்டியால் போர்த்துவைக்க வேண்டியது. * பிரஸவஸ்திரீயை ஓர்கட்டிலின் ஓரத்திலே இடது பக்கமாய்ப் படுக்கவைத்து முழங்கால்களை முடக்கி வயிற்றோடணைத்துக்கொள்ளும்படி செய்து, தலையணையை இருகால்களுக்கும் மத்தியில் வைக்கவேண்டியது. ஓர் நீளமான வஸ்திரத்தைக் கட்டிலுக்குமேல் கட்டி அவ்வஸ்திரத்தின் முனையையாவது, அருகிலிருக்கும் தாதியின் கையையாவது பிரஸவ நோய் வரும்போது பிடித்துக்கொள்ளும்படி செய்யவேண்டியது. சிசு உதயமாகும் இரண்டாம் பாதத்தில் ஸ்திரீக்கு ஆகாரம் கொடுக்கலாகாது. ஆனால் வெந்நீர், தேயிலைத்தண்ணீர், கஞ்சித்தண்ணீர் இவைகளில் ஒன்றைக் கொடுக்கலாம். நீண்ட பிரஸவ வேதனையில் கருப்பையின் கழுத்து பூரணமாய விரிந்த பிறகும், பனிக்குடம் உடையாது அதனால் பிரஸவம் தாமதமாகும்போலிருந்தால், வலது கையின் முன்விரலை யோனிக்குள் செலுத்தி பனிக்குடத்தைக்குத்தி நீர்மெதுவாய் வெளிப்படும்படியாகச் செய்யவேண்டியது. ஆனால் இயற்கை முறையைக் கவனியாது பனிக்குடத்தைப் பார்த்தவுடன், சிசுவைச் சீக்கிரம் வெளிவரச்செய்யலாமென்றெண்ணி அதை உடைப்பதினால் ஸ்திரீயானவள் தனது வாழ்நாள் முழுமையும் அசௌக்கியத்திற்கு உள்ளாவாள். சிசுவெளிவந்த பிறகு உடல்சீக்கிரமாய் வரும்பொருட்டு சிசுவின் சிரசைப்பற்றி இழுப்பதாகிய மூடச்

* இப்படிப் படுக்கவைப்பது ஆங்கிலேய தேசத்து வழக்கம், பிரஸவ ஸ்திரீயைவைப்பது ஒவ்வொரு தேசத்தில் ஒவ்வொரு விதமாய் இருக்கிறது. பிரான்ஸ் (France) தேசத்தில் மல்லாக்கப் படுக்கவைத்து முழங்காலை முடக்கி வைப்பதும், சீனா (China) தேசத்தில் முழங்கால்மேல் நிற்கவைப்பதும், சில தேசங்களில் உட்காரவைப்பதும் வழக்கம்.

செய்கையைப்போன்றது மற்றெதுவும் கிடையாது. ஆகையால் உடல் கர்ப்பாஸயத்தின் செய்கையினாலே வெளியாகும்படி விட்டுவிடவேண்டும். சிசுவின் சிரசு வெளிப்படும்போது விடபம் (62-வது பக்கத்தில் பார்க்கவும்) கிழிபடாதிருக்க வைத்தியன் செய்யவேண்டியதென்னவெனில், விடபம் போதுமானவரையில் விரியாமலிருக்கும்போது சிசுவின் சிரசை அதன்மேல்செல்லவிடாமல் தடுக்கவேண்டியது. சிரசு வெளிப்படும் சமயத்தில் அதை வலது கையால் ஏந்திக்கொண்டு சிரசு தானாய்த் திரும்பும்படி விட்டுவிடவேண்டியது. சிரசு வெளிப்படும்போது சிசுவின் கழுத்தைப் பரிக்ஷிக்கவேண்டியது. ஏனெனில் சில சமயங்களில் நாபிக்கொடி கழுத்தில் சுற்றிக்கொண்டிருப்பது வழக்கம். அப்படிக் கிருக்குமானால் இச்சமயத்தில் அதனை மெதுவாய் தோளின்மேல் தள்ளிவிடுவதற்குச் சாத்தியமாகும். சிரசு வெளிக்கண்டு சிறிது நேரம் நோய் இல்லாதிருந்து அதன்பிறகு நோய் ஆரம்பித்து சரீரத்தை வெளிப்படுத்துவது வழக்கம். சிரசு வெளிவந்துநீண்ட நேரமாகியும் இதர பாகங்கள் வெளிப்படாது சிசுமரித்துப் போகும்போலிருந்தால், ஸ்திரீயின் வயிற்றின்மேல் உள்ளங்கையினால் சூடுபிறக்கத் தேய்த்து நோயை உண்டுபண்ணவேண்டியது. இதிலும் சாத்தியமாகாவிட்டால், தாதியைக் கருப்பையைப் பலமாய்ப் பிடித்துக்கொள்ளச் செய்து இடது கையினால் சிசுவின் சிரசைப் பிடித்துக்கொண்டு வலதுகை விரலை அக்குலில் செலுத்தி இலகுவாய் இழுத்து சிசுவின் உடலைவெளிப்படுத்த வேண்டியது. தீவிரமாய் இழுத்தால் கருப்பை சுருங்குவதற்கு அதிகநேரம் பிடிக்கும். அதினால் ரத்தம் அதிகமாய் வெளிப்படும்.

குழந்தையை வெளிப்படுத்தின பிறகு தாயின் வயிற்றைப் பரிசோதித்து இரட்டைப்பிள்ளை இருப்பதும் இல்லாததும் நிச்சந்தேகமாய் அறிந்துகொள்ள வேண்டியது. பிறகு 3-கஜ நீளமும் 1½-அடி அகலமுமுள்ள கெட்டித்துணியினால் பிரஸவித்த ஸ்திரீயின் வயிற்றைச்சுற்றி இழுத்துக் கட்டிவைக்கவேண்டியது. நஞ்சு வெளிகண்டவுடனே வயிற்றின்மேலுள்ளசுற்றுடையைப்பிகுவுபடுத்தி, யோனியின்



உதடுகளின்மேல் ஓர் துல்லியமான துணியைப் போட்டு போர்த்து வைக்கவேண்டும். தாயின் படுக்கையின் மேலுள்ள கறைபட்ட அழுக்குத் துணிகளை நீக்கிவிட்ட பிறகு இலகுவாய் ஜீரணமாகக்கூடியதும், ஆறினதுமான உணவைக் கொடுத்த பின்பு, ஸ்திரியை 3-மணி நேரம் வரையில் அசையாமல் நிம்மதியாய் படுத்துக்கொண்டிருக்கச் செய்யவேண்டியது. படுத்துக்கொண்ட பிறகு எந்த ஏதுவினாலும் எழுந்திருக்கலாகாது. அதவா எழுந்திருந்தால் ரத்தப் பெருக்கமாவது, கர்ப்பாஸயம் வெளிப்பிதுங்கலாவது உண்டாகும். மேற்கண்ட விதமாக 3-தினங்களுக்குக் குறையாது சயனித்துக்கொண்டிருக்கவேண்டும். அவளுக்கு குளிர்ந்து கூசினால் ஓர் கம்பளியினால் போர்த்தவேண்டியது. 15-தினங்களுக்குமேல் எழுந்து உலாத்தலாம். பிரஸவம் முடிந்தவுடனே வைத்தியன், ஸ்திரீயின் நாடி நடை, முகம், சுவாஸம் முதலியவைகளைக் கவனிக்கவேண்டியது. இன்னும் கருப்பை கிரமமாய் சுருங்கினதும் சுருஸ்காததும் ஸ்பஷ்டமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியது, தோஷகுணங்கள் ஏதேனுமிருக்குமானால், அதற்கனுகுணமான சிகிச்சை செய்யவேண்டியது. ஒயின் (wine) பிராந்தி (Brandy) இவைகளிலொன்றைக் கொஞ்சமாய்க் கொடுக்கலாம். ஆனால் இவ்வித சந்தர்ப்பத்தில் குறைந்த அளவில் அபினியை (Opium) கொடுத்தால் தேகத்தைத் திடப்படுத்தி நித்திரையை உண்டுபண்ணி, அதிக வேகமான நாடிநடையைத் தணித்து, மேல்மூச்சை சமனப்படுத்தி நிம்மதியான நித்திரையைப் பிறப்பிவிக்கும்.

இன்னும் பரிமளநவக்ஷாத்திராவகத்தில் (Spritus ammonia aromaticum) பத்து துளியைக் கொஞ்சம் ஜலத்தில் கலந்து கொடுக்கலாம் அல்லது கஸ்தூரித்திராவகம் (Tincture of Musk) பத்துத்துளி கொஞ்சம் ஜலத்தில் கலந்து கொடுக்கவும். அடிவயிற்றில் வேதனை அதிகமாய் இருந்தால் அபினித்திராவகம் (Tincture of opium) பத்துத்துளி, ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து கொடுக்கவும். இரத்தம் அதிகமாய்ப் பெருகினால், எக்ஸ்ட்ராக்ட் எர்காட் (Extract Ergot Liquid) என்னும் மருந்தில் 30-துளி கொஞ்சம் ஜலத்தில் கலந்து கொடுக்கவும். பிரஸவித்த ஸ்திரிகளை ரக்ஷிக்கவேண்டிய

விநிகளி இப்படிக்கிருக்க, இவ்விதமாய் நடப்பிவிக்க நமது வீட்டு
கிழப்பிணங்களுக்கு மனம் வராமல் அதியுஷ்ணமான காய மருந்துகளைக்
கொடுத்துக் காற்ரோட்டமில்லாத அறைக்குள் அடைத்து வைந்து
வீணில் வதைக்கிறார்கள்.

## தாமதப் பிரஸவம். (TEDIOUS LABOUR—டீடியஸ் லேபர்)

தாமதப் பிரஸவம் என்பது கர்ப்பஸ்திரீ அதிக நேரம் அவதிப்
பட்டு மாதாவுக்கும், சிசுவுக்கும் யாதொரு அபாயமுமின்றிப் பிரஸவம்
முடிவதற்குத் தாமதப் பிரஸவமென்று சொல்வது வழக்கம்.

தாமதப் பிரஸவத்திற்குக் காரணங்களாவன,—பனிக்குடத்தின்
ஜவ்வு அழுத்தமாய் இருக்குதல், பனிநீர் இயற்கைக்கு அதிகமாயிருக்கு
தல் பனிக்குடம் இல்லாமலிருக்குதல், பக்குவ காலத்திற்கு முன்ன
தாகவே பனிநீர் வெளிப்பட்டுவிடுதல்,யோனிக்குள்ளிருக்கும் ஹைமன்
(Hyman) என்னும் பிறைஜவ்வு, ஏற்றகாலத்தில் எடுபட்டுப்போகா
மல், நிலைத்திருக்குதல், யோனியானது பிறப்பினாலாவது, வியாதி
யினாலாவது சிறுத்திருக்குதல்,அடிக்கடி கர்ப்பந்தரித்தல், கருப்பையின்
வாய் விரியக்கூடாமலிருத்தல், கருப்பை அதிகநேரஞ் சென்று சுருங்கு
தல், கருப்பை ஸ்தானம் மாறுதல், பிரஸவநோய் பிரபலமாய் காணமற்
போகுதல், அதிக பலஹீனம், அதிக பாலியம், விருத்தாப்பியம், அதிக
உஷ்ணம், அதிக சஞ்சலம், ஜன்னி முதலிய காரணங்களாம்.

இதற்குச் செய்யவேண்டிய சிகிச்சை என்னவெனில் ஸ்திரீயின்
மனதைத் தேற்றி வேதனையைச் சகித்துக்கொள்ளும்படி செய்வதே
மிகவும் முக்கியமானது. அவசரப்படாமல் தாமதத்திற்குக் காரணத்தை
தெரிந்துகொண்டு அதற்குரிய சிகிச்சை செய்வித்தால் கிரமமாய் முடி
யும். மலபந்தமிருந்தால் ஆஸனத்தில் பீச்சாங்குழல் (Enema) பிரயோ
கம் செய்யவும், பசியிருந்தால் காரமில்லாததும் இலகுவாய் ஜீரணிக்கத்
தக்கதுமான ஆகாரம் கொடுக்கவேண்டியது.

பனிநீர் இயற்கைக்கு அதிகமாயிருந்தால் அதை நிச்சயமாய்த்
தெரிந்துகொண்டபிறகு அதை நகத்தால் கீறி நீரை வெளிப்படுத்தவும்.
கருப்பையின் வால் விரியக்கூடாமலிருந்தால் வாந்தி உப்பு (Tarter



emetic) மூன்று கிறேன்ஸ் ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து கொடுத்
தாகிலும், அல்லது கையை வாய்க்குள் விட்டாகிலும் வாந்தியை
யுண்டுபண்ணவும். கருப்பை ஸ்தானம் மாறி இருந்தால் ஸ்திரீ
யை மற்றொரு பக்கமாய் படுக்க வைக்கவும். முன்பக்கம் சாய்ந்திருந்
தால் மல்லாக்கப்படுக்க வைத்து, துணியை வயிற்றின்மேல் சுற்றி
வைக்கவும். பக்குவ காலத்திற்குமுன் பனிநீர் வெளியாய் விட்டால்
பக்குவகாலம் வருகிறவரையில் நாம் காத்துக்கொண்டிருப்பதைத்
த்விர வேறு விதியில்லை.

அதிக பலவீனத்தால் பிரஸவ நோய் பிரபலமாய் வராவிட்டால்,
இடுப்பு, அடிவயிறு முதலியவற்றைக் கையினால் தேய்த்தல், நித்திரை
செய்தல், ஆகாரம் சாப்பிடுதல் முதலியவை பிரஸவநோயை உண்டு
பண்ணும். இதிலும் நோய் வராவிட்டால் எக்ஸ்ட்ராக்ட் எர்கட்
(Extract Ergot) என்னும் மருந்தில் 20-கிறேன்ஸ் எடைக்குபொடி
செய்து, 1-அவுன்ஸ் வெந்நீரில் கலந்து மூடிவைத்துக் குளிர்ந்த பின்பு
கொடுக்க வேண்டியது. இவ்விதமாக ஒரு நாழிகைக் கொருதரமாக
விடாமுயற்சியாய் 2-3-ஆவர்த்தி கொடுக்க பிரஸவ நோய் பலமாகி பிர
ஸவம் முடியும். ஏர்கட் என்னும் மருந்தை, வெங்காரம்,லவங்கப்பட்டை
கஷாயம்முதலியவற்றுடன் சேர்த்துக்கொடுப்பதுமுண்டு. கருப்பையின்
வாய் நன்றாய் விரியாதிருக்கும்போது எர்கட் என்னும் மருந்தைக்
கொடுக்கலாகாது. கருப்பையின் வாய் போதுமான அளவு விரிந்திருந்
தும் மேற்சொன்னவைகளால் யாதொரு பிரயோஜனமும் காணாத
போது, குறட்டினால் (Forceps) சிசுவை வெளிப்படுத்த வேண்டியது.

## கஷ்டப்பிரஸவம்.

## (DIFFICULT LABOUR.—டிப்பிகல்ட் லேபர்)

இது சிசுவின் சிரசு இயற்கைக்கு மேல் பெருத்திருத்தல்,
சிரசின் எலும்புகள் கனதியாயிருத்தல், சிசுவின் சிரசு பிரண்டிருத்தல்,
நாபிக்கொடி சிசுவைச் சுற்றிக்கொண்டிருத்தல், சிசுவின் முகம் உதய
மாகுதல், சிசுவின் வயிறு பெருத்திருக்குதல், ஸ்திரீயின் இடுப்பு,பிரஷ்
டம் முதலியவற்றின் எலும்புகள் குறுகி இருக்குதல், நீர்ப்பையில்

நீர்நிரம்பி இடைக்குழியை அடைத்துக்கொள்ளல் முதலிய காரணங்களால் ஏற்படுகிறது. மேற்கண்ட காரணங்களில், எவ்விதமான காரணங்களால் ஏற்பட்ட கஷ்டப்பிரஸவமாயிருப்பினும் ஆயுதப்பிரயோகத்தினால் சிசுவை வெளிப்படுத்த வேண்டியதேயன்றி இதற்கு வேறு எவ்வித சிகிச்சையும் சாத்தியமல்ல.

### ஆசன உதயம். (PRESENTATION OF BREECH)

ஆசன உதயத்தில் அநேக முறை உதய உறுப்பு சிரசென்றும், ஆசனமென்றும் அறிந்துகொள்வது மிகவும் சிரமமாய் இருக்கும். சிசுவின் சிரசைக் காட்டிலும் பிட்டங்கள் (Breech) மிகவும் நுட்பமாய் இருப்பதால் இலகுவாய் அறிந்துகொள்ளலாமென்று சிலர் நினைக்கக்கூடும். ஆனால் சிரசைப்போலவே பிட்டங்களும் உருண்டையாய் இருப்பதினால் இரண்டுக்கும் வித்தியாசம் தெரியாமல் மயங்கவேண்டியிருக்கிறது. ஆனால் ஆசன உதயத்தை அடியிற்காணும் சிலகுறிகளால் அறிந்துகொள்ளலாம். அதாவது, காட்டுமலம், அபானவாய், ஜனனேந்திரியங்கள் ஆகியவைகளாம். இவ்விதப் பிரஸவங்களில் சிரோதயத்தைப்போல் மர்மஸ்தான மார்க்கத்தை விசாலப்படுத்தாது, மேலும் கர்ப்பாஸயமும் விரைவில் சுருங்குவதில்லை.

ஆசனம் வெளிக்கு வந்த பிறகு குழந்தையை வலது கையால் ஏந்திக்கொண்டிருந்தால், அது தானாகவே திரும்பி வெளிப்படும். நஞ்சுக்கொடி வெளிப்பட்டவுடனே அதைக் கொஞ்சம் கீழே இழுத்து நசுங்காமல் பாதுகாக்கவேண்டியது. நஞ்சுக்கொடியில் நாடிநடை மெதுவாய் இருந்தால் வலியை அதிகப்படுத்தி வலியிருக்கும்போது சிசுவை வெளிப்படுத்தவேண்டியது. கைகள் சிரசோடு அணைந்திருந்தால் விரலை விட்டு மெதுவாய் வெளிப்படுத்தி விடவேணடியது. கைகள் சற்று தாமஸமாகவே வெளிப்படும். சிசுவைப் பலமாய் இழுக்கலாகாது. சிரசு கருப்பையின் மத்தியில் வரும்பொழுதே, இடது கையின் இரண்டு விரல்களைச் சிசுவின் வாய்க்குட் செலுத்தி வலது கைவிரல்களைச் சிசுவின் பிடரியின் மேல் வைத்துஅழுத்தி, முகவாய்க்கட்டையை மார்போடணைத்து, சிரசை வெளியில் இழுக்க வேண்டியது. இப்படிக்குச் செய்து வெளிப்படாவிட்டால் ஆயுதப்பிரயோகம் செய்யவேண்டியது. குழந்தை-



யைக் கத்தரிக்குமுன் நுட்பமான நூற்கயிற்றினால் கட்டிவைக்க மறக்கலாகாது. அப்படிக்குச்செய்யாவிட்டால் கருப்பைக்குள்ளிருக்கும் இரண்டாம் பிள்ளைக்குப் பிராண பயமுண்டாகும். பிறகு ஸ்திரீயின் வயிற்றின் மேல் கட்டியிருக்கும் சுற்றுடையைச் சற்று தளர்த்திவிடவேண்டியது. இந்தப் பிரஸவத்தில் பிரமிக்கத்தக்கவிதமாய் இரத்தம் வெளிப்படுவதுமுண்டு. சில சமயங்களில் இரண்டு சிசுக்களின் சிரசுகளும் ஒன்றாய்க்கூடி கர்ப்பாஸயத்தின் கழுத்தை அடைத்துக்கொண்டு கஷ்டப்பிரஸவமாக முடியும். இச்சமயத்தில் கருப்பைக்குள் கையைச் செலுத்தி ஓர் சிசுவின் சிரசை மேலுக்கேற்றி வேறுபடுத்திவிட்டு, குறட்டினால் பிடித்து மெதுவாய் இழுத்து வெளிப்படுத்த வேண்டும் இரண்டாவது சிசுவின் பனிக்குடம் உடையாவிட்டால், அதை மெதுவாய் உடைத்துவிடவும். பனிக்குடம் உடைந்து 5-நாழிகைக்குள் குழந்தை ஜனனமாகாவிட்டால், கையினாலாவது, ஆயுதத்தினாலாவது குழந்தையை வெளிப்படுத்த வேண்டியது. இதில் முதல் பிறந்த குழந்தைக்கு ஒரு அடையாளம் வைத்திருக்க வேண்டியது மிகவும் அவஸ்யம். ஏனெனில் மூத்த குழந்தை இன்னதென்றும், இளைய குழந்தை இன்னதென்றும் தெரிந்துகொள்வதற்கும், மற்ற லௌகீக விஷயங்களுக்கும் இது இன்றியமையாதனவாய் இருக்கிறது.

### கருப்பைக்குள் சிசு இறத்தல்.

கர்ப்ப ஸ்திரீகளுக்கு மல ஜலங்கள் பந்தப்படுதல், தேகமுழுதும் வளையல் ஓட்டைப்போல் கருமை நிறமடைதல், வாய் அதிக துர்க்கந்தம் வீசுதல், கையுங்காலும் அதிகமாய்க் கருக்குதல், முகம் சிரசு முதலிய இடங்களில் வீக்கம், ஆயாசம் முதலிய இத்தியாதி குணங்கள் உண்டாகுமானால் சிசு மரிக்குமென்று அறியவேண்டியது.

### கருப்பையில் சிசு மரித்த லக்ஷணம்.

வாதபித்த சிலேஷ்ம விகற்பத்தினாலும், அபாயத்தினாலும் சிசு மரிக்கும். தொப்புளைச் சுற்றிலுமாவது, வயிறு முற்றிலுமாவது, தேகமுற்றிலுமாவது, சீதளம், வயிற்றுப்புசம், வயிற்றுக்குள் பிண்டம்

அசையாதிருத்தல், அதிக தாகம், அதிக பிரயாசம், ஸ்தனம் தளரல், கஷ்ட சுவாஸம், சுவாச நாற்றம், ஆயாசம், உலகவாழ்க்கையில் வெறுப்பு, நீர் அதிக துர்க்கந்தத்துடன் குழம்பாக விறங்குதல், மயங்கிய நித்திரையில் இறந்தவர்களைப் பார்ப்பதுபோன்ற சொர்ப்பனம், வெந்நீர் ஆவிப்பிடித்த கையை அடிவயிற்றின் மேல் வைத்தால் அதிரலில்லாமலிருத்தல், ஸ்திரீ அசையுந்தோறும் இருபக்கங்களிலும் ஏதோ ஓர் கனதியான பொருள் உருள்வதுபோல் தோற்றுதல், நேத்திரங்களிரண்டும் வட்டமிட்டு சுற்றுதல், பிரஸவ நோய் நின்றுவிடுதல், இத்தகைய குறிகள் காணுமானால் பிண்டம் மரித்துவிட்டதாக நிச்சயித்துக்கொள்ளவும். கருப்பையில் பிண்டம் மரித்ததும் மரிக்காததும் அறிந்துகொள்வதற்கேற்ற ஓர் சுலபமான வழி, ஒரு அவுன்ஸ் ஒயின் சாராயத்தைக் கொஞ்சம் சூடு செய்து அதில் 4-கிராம். லவங்கப்பட்டைத்தூளைக் கூட்டி உள்ளுக்குக் கொடுக்கவும். பிரஸவ வேதனையைப்போல் உபத்திரவங் காணுமாயின் சிசு மரித்ததென்றும், உபத்திரவங் காணவில்லையாயின் வியாதியினாலேயோ அல்லது அசதியினாலேயோ சிசு அசைவற்றிருக்கிறதென்றும் அறிந்துகொள்ள வேண்டியது. இம்மருந்தின் குணம் யாதெனில் சிசு மரித்திருக்கில் ஸ்திரீக்குப் பிரஸவ நோய் கண்டு பிண்டம் வெளிப்பட்டு விடும். பலஹீனத்தினாலாவது, வியாதியினாலாவதிருக்குமானால் அந்நோயை நீக்கி அவளுக்கு சுகத்தைக் கொடுக்கும்.

சிகிச்சை.—ஒரு தோலா நிறையுள்ள நாயுருவி வேரை அரைத்துக் குளிர்ந்த ஜலத்தில் கூட்டிக்கொடுப்பதினாலும் அல்லது அரைப்பலம் சங்கம் வேரை யரைத்து வெந்நீரில் கரைத்துக் கொடுப்பதினாலும் அல்லது ஒரு தோலா நிறையுள்ள குங்குமப் பூவை ஜலம்விட்டரைத்து உருட்டிக் கொடுப்பதினாலும், இரண்டு உள்ளியுடன் இரண்டு முருங்கைப் பிஞ்சையும் சேர்த்து நசுக்கி ஆழாக்கு ஜலத்தில் கஷாயமிட்டு அதில் 5-குன்றி எடை அபினியைக் கரைத்து கொடுப்பதினாலும், எக்ஸ்ட்ராக்ட் எர்கட் (Extract Ergot Liq) என்னும் மருந்தில் இரண்டு திராம், ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து கொடுப்பதினாலும் இன்னும் கொஞ்சம் மஹாமூதாவை சுத்த ஜலம் விட்டு இழைத்து கந்தைத் துணியிற்றடவி யோனிக்குள் வைப்பதினால் மரித்த சிசு வெளிப்



படும். மேற்கண்ட மருந்துகளைக்கொடுத்த பிறகும் சிசு வெளிப்படாது போனால், சிசுவைக் குறட்டினால் (Foreps) இழுத்து வெளிப்படுத்த வேண்டியது. குறட்டினாலும் முடியாது போனால் சிசுவைச் சேதித்து வெளிப்படுத்துவதைக் காட்டிலும் வேறு சுலபமான மார்க்கமில்லை.

## நஞ்சு தங்குதல். (DETENTION OF THE AFTER BIRTH)

இது சிசு ஜனனமானதிற்குமேல் $1\frac{1}{2}$-மணி நேரமாகியும் விழாவிட்டால் நஞ்சு தங்குதல் அல்லது நஞ்சு பிடித்தம் என்று சொல்வது வழக்கம். கருப்பை சிசுவை உதைத்து வெளிப்படுத்தின பலஹீனத்தினால், நஞ்சை வெளிப்படுத்தி சுருங்கும் சக்தியற்றுப்போகுதல், கருப்பை இயற்கைக்கு விரோதமாய்ச் சுருங்குதல், வியாதியினாலாவது, இதர காரணங்களினாலாவது கருப்பையும் நஞ்சும் ஒன்றோடொன்று ஒட்டிக்கொள்ளுதல் முதலிய மூன்று காரணங்களால் இது உண்டாகிறது. இதற்குத் தக்ஷணமே தகுந்த சிகிச்சை செய்து நஞ்சை வெளிப்படுத்தாவிட்டால் பயங்கரமான இரத்தப்பெருக்கு உண்டாகி ஸ்திரீக்குப் பிராணபயமுண்டாகும்.

கருப்பையானது கடினமான வேலையினால் களைப்படைந்து பலங்குன்றி நஞ்சை வெளிப்படுத்த சக்தியற்றுப் போயிருந்தால் அடிவயிற்றின்மேல் கையை வைத்துப் பார்த்தால், கருப்பை பந்துபோல் உருண்டையாய்த் தோற்றாமல் தளர்ச்சி யடைந்து வயிறு முழுதும் வியாபித்திருப்பதுபோல் தோற்றும். இச்சமயத்தில் நஞ்சுக் கொடியைப்பற்றி இழுப்பதுபோல் அவிவேகமான செய்கையும், ஸ்திரீக்குப் பேராபத்தை விளைவிக்கக் கூடியதும் வேறொன்றுமில்லை. அப்படிக்கு இழுப்பதினால் நஞ்சு வெளிப்பட்டு விட்டாலுங்கூட கருப்பை சுருங்காமல் ரத்தப்பெருக்கை உண்டுபண்ணும். சில சமயத்தில் கருப்பை உட்புறம் வெளிப்புறமாய் மாறிவிடும். ஆகையால் வயிற்றைத் தேய்த்தாவது அல்லது வயிற்றை அழுத்தியாவது நோயை உண்டாக்கி கருப்பை சுருங்கும்படி செய்வது உத்தமம். இதிலும் வெளிப்படாவிட்டால், வேப்பங்கொழுந்து, கருவேப்பிலைக் கொழுந்து, முருக்கங் கொழுந்து வகைக்கு ஒரு பிடி, கடுக்காய் ஒரு கழஞ்சி இலைகளைக் கஷாயமிட்டு

கொடுக்கவும். அல்லது எக்ஸ்ட்ராக்ட் எர்கட்(Extract Ergot Liquid) என்னும் மருந்தில் ஒரு திராம் கொஞ்சம் ஜலத்தில் கலந்து ஒரு வேளைக்குக்கொடுக்கவும். இதுகளினாலும் வெளிப்படாவிட்டால் கருப்பைக்குள் கையைவிட்டு நஞ்சை வெளிப்படுத்துவதைத் தவிர வேறு விதியில்லை. ஆனால் கொஞ்சநேரம் நிதானித்து ஸ்திரீக்கு ஆயாஸம் தீர்ந்த பிறகு, இடதுகையால் நஞ்சுக்கொடியைப் பிடித்துக்கொண்டு வலது கைவிரல்களை வாழைப்பூபோல் கூச்சாய்க் குவித்துக்கொண்டு, கொடிவழியாய்க் கருப்பைக்குள் கொண்டுபோய் மிகவும்கவனத்தோடு நஞ்சு அணைந்திருக்கிற ஸ்தானத்தை விரல்களினால் தடவிப் பார்த்துத் தெரிந்துகொண்டு கருப்பையினுட்புறத்தோடு ஒட்டிக்கொண்டிருக்கும் நஞ்சை கருப்பையின் மத்தியில் வரும்படி இழுக்கவேண்டும்.பிறகு கருப்பையில் காயம் படாமல் விரல்களால் பெயர்த்து சுருட்டி நஞ்சு முழுதையும் எடுத்துவிடவேண்டியது. இப்படிக்குச்செய்வதில் அகஸ்மாத்தாய் நஞ்சின் சேஷம் கருப்பைக்குள் கொஞ்சம் நின்றுவிடுமாகில் அது அழுகிப்போய்க் கருப்பையைப் புண்ணாக்கி விடுவதோடுங்கூட, அதன் சாரம் சரீரத்திலூறி ஜுரம், அஜீரணம், விப்புருதி முதலியவைகளை யுண்டாக்கும். நஞ்சின் சேஷம் கருப்பைக்குள் தங்கிவிட்டால் காண்டிஸ் லோஷனை(Condy's Lotinon)அடித்துக் கருப்பையைச் சுத்திசெய்வதோடுங்கூட அடிவயிற்றின்மேல் ஆளிவிரையைக்களிக்கிண்டி கட்டவேண்டும். நஞ்சை வெளிப்படுத்திய பின்பு அடிவயிற்றைத் தேய்த்து பிறகு வயிற்றின்மேல் சுரீருடை கட்டிவைக்கவேண்டும். கருப்பைக்குள் கைபோனதினால் கருப்பைக்கு மூடிக்கொள்ளும் சக்தி ஏற்படும். சில சமயம், எர்கட் (Ergot) என்னும் மருந்தைக் கொடுப்பதினாலும், தொங்கிக்கொண்டிருக்கும் தொப்புள்க் கொடியை மருத்துவச்சி கெட்டியாய்ப் பிடித்து இழுப்பதினாலும் நஞ்சு வெளிப்படக்கூடாத விதமாய் கருப்பை மூடிக்கொள்ளும். இதற்குத்தக்ஷணமே,அபின் திராவகம்(Tincture of Opium)இருபது துளியை ஒரு அவுன்ஸ் ஜலத்தில் சேர்த்துக்கொடுக்க 30-நிமிஷத்திற்குள் கருப்பைவிரியும். அச்சமயத்தில் மேலே சொல்லியபடி கையைச் செலுத்தி நஞ்சை வெளிப்படுத்தி விடலாம். சிலருக்குக் கருப்பைக்குள் நஞ்சுதங்கி இருக்கும்போதும், நஞ்சு வெளிப்பட்ட பிறகும் மிகவும்



பயங்கரமான இரத்தப்பெருக்கு உண்டாவது வழக்கம். ஆகையால் நஞ்சை வெளிப்படுத்தின பிறகு வைத்தியன் ஸ்திரீயினிடத்தில் சிறிது நேரம் இருந்து பார்வையிட்டுக் கருப்பை நன்றாய் சுருங்கிய பிறகு ஸ்திரீயைவிட்டுப் பிரிந்து போகலாம்.

## பிரஸவத்திற்குப்பின் காணும் வியாதிகள்.

### பிரஸவப் பெரும்பாடு. (FLOODING-பிளடிங்.)

இது பிரஸவத்துக்கு முன்னும், பின்னும், பிரஸவத்திலும் காண்பது வழக்கம். பிரஸவித்த ஸ்திரீகளுக்கு நாடிநடை தணிந்து கொஞ்ச நேரம் சென்ற பிறகு படபடப்பாய் நடக்கும். ஸ்திரீக்கு அதிக ஆயாஸமாய் இருக்கும்போது, நாடிநடை படபடப்பாய் இருந்தால் திடீரென்றுவது படிப்படியாவது பிரமிக்கத் தக்கவிதமாய் இரத்தப் பிரவாகம் உண்டாகி கரைபுரண்ட வெள்ளம்போல் வெளிவந்து பாய்படுக்கை தரை முழுமையும் நனைத்துவிடும். இதைத் தக்ஷணமேநிறுத்தாவிட்டால் ஸ்திரீக்குக் களை அதிகரித்து, நாடி நடை க்ஷீணித்து, மூர்ச்சை யுண்டாகி, கைகால்களை அங்கு மிங்கும் போட்டுப் படுக்கையில் புரளுவாள். சரீரமுழுதும் அகோரமான வியர்வை யுண்டாகி மேல்மூச்செடுக்கும். இதற்கு இடது கையினால் வயிற்றைப் பிசைந்து தேய்த்துக்கொண்டிருப்பதுடன், வலது கையால் குளிர்ந்த ஜலத்தை அள்ளி, அடி வயிறு, யோனித்துவாரம் முதலிய விடங்களில் அடித்தால் கருப்பை சுருங்கி இரத்தப்பிரவாகம் நிற்கும். அடிவயிற்றின்மேல் தடவிப்பார்த்தால் கருப்பை கைக்கு மிருதுவாய்த் தோன்றினால் கருப்பைக்குள் உரைந்திருக்கும் உதிரம் வெளிப்பட்டு கருப்பை சுருங்க ஆரம்பிக்கும். கருப்பைக்குள் உதிரம் உரைந்து கட்டியாயிருந்தால் கருப்பைக்குள் கையைவிட்டு அதை வெளிப்படுத்தவேண்டியது. இவையெல்லாம் மிகவும் அமரிக்கையோடு செய்யவேண்டுமேயன்றி முரட்டுத்தனமாய்ச் செய்து ஸ்திரீயை உபத்திரவிப்பது புத்திமான்களுக்கு அழகல்ல.ஸ்திரீயின்மேல் நல்ல காற்று வீசும்படியாய் ஜன்னல் கதவுகளைத் திறந்து வைக்கவேண்டும். அவசியமானால், எக்ஸ்ட்ராக்ட் எர்கட் (Extract Ergot liq) என்னும் மருந்தில் 30-துளி 1-அவுன்ஸ் ஜலத்தில்

கலந்து கொடுக்கலாம். இரத்தப்பெருக்கில் அநேகம் அபாயக்குறிகள் தோன்றி மனதைச்சஞ்சலப்படுத்துவதுபோல் வேறெதுவும் அவ்வளவு அபாயமும் பயமுறுத்தத்தக்கதுமன்று. அதிக தலைநோய், அதிகச் சோர்வு,தாகவிடாய்,அரட்டல் புரட்டல் முதலிய குறிகள் காணுமானால் ஸ்திரீ பிழைப்பது சந்தேகம். இவ்விதக்குறிகளுடன் கூடிய ஸ்திரீயை மிகவும் சாமர்த்தியமாய் நிர்வகிக்கவேண்டும். இதற்கு விரைவாயும் பலமாயும் யுக்தாயுக்தமறிந்தும் சிகிச்சை செய்யவேண்டுமாகையால்,சூதகப்பெருக்கு, கருவழியில் காணும் இரத்தப்பெருக்கு முதலியவைகளுக்குச் சொல்லியிருக்கும் அவுஷதங்களைப் புத்திமான்கள் சமயோஜிதம் போல் கொடுத்து சிகிச்சை செய்வார்களாகவும். இரத்தப்பிரவாகத்திற்கு எவ்விதமான சிகிச்சை செய்தபோதிலும்கூட, ஸ்திரீயை மல்லாக்கப் படுக்கவைப்பதையும்,ஸ்திரீயின் வயிற்றின்மேல் சுற்றுடை கட்டிவைப்பதையும் வைத்தியன் எவ்வளவும் மறக்கலாகாது.

## அழுக்கு. (THE LOCHIA—தி லோகியா)

குழந்தை பிறந்தவுடன் கருப்பை சுருங்கி சற்றேறக்குறைய சிசுவின் சிரசிற்குச் சமமாய் இருக்கும். அப்போது கருப்பை 60-தோலாவும். ஒரு வாரத்திற்குப்பின் 24-தோலாவும், மூன்று வாரத்திற்குப் பிறகு 12-தோலா நிறையுடையதாகவும் இருக்கும். கருப்பை இயற்கை ரூபத்தை யடைவதற்கு இரண்டு மாதகாலம் பிடிக்கும். பிரஸவமானவுடன் கர்ப்பாஸயத்திலிருந்து யோனி வழியாய் இரத்தம் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும். அதனை அழுக்கு என்று சொல்வது வழக்கம். சிறிது நாட் சென்ற பிறகு அந்த அழுக்கு நிறம் மாறி, பச்சை, மஞ்சள் ஆகிய இவ்வித வர்ணங்களில் ஒன்றாய் மாறிவிடும். கடைசியில் ஜலம் போல வடியும் அழுக்கு உறையமாட்டாது. இது சரீரப் பிரகிருதிக்குத் தக்கபடி 1-முதல் 3-வாரம் வரையில் இருக்கும். பெரும்பாடு கண்டவர்களுக்கு இது கொஞ்சமாய் இருக்கும். மற்றவர்களுக்கு அதிகமாய் வந்து வைத்தியம் செய்யும்படி நேரிடும். வெளிப்படும் திரவத்தில் நாற்றமிருந்தால், கருப்பைக்குள் இரத்தம் உறைந்து அழுகிப்போயிருக்கிறதென்று அறிந்துகொள்ளவும். இதற்கு உடனே காண்டிஸ்



வெளிப்படுகிற வரையில் ஸ்திரீயின் வயிற்றைப்பிடித்து அழுத்திக் கொண்டிருந்தால் நஞ்சு ஒழுங்காய் வெளிப்படும்.

## பாத உதயம். (PRESENTATIONS OF FOOT)

சிசுவின் முழங்காலாவது பாதங்களாவது உதயமானால் ஆசன உதயத்திற்குச் செய்கிற சிகிச்சையே இவைகளுக்கும் செய்யவேண்டியது. கையிடாமலும் கால்களைப் பிடித்திழுக்காமலும் சிசு தானாகவே வெளிப்படும்படி விட்டுவிட வேண்டியது. ஆசன உதயத்தைக் காட்டிலும் இவைகள் சிறிது சிரமத்தைக் கொடுக்கும். தொப்புட் கொடி நசுங்கி நாடி நடை க்ஷீணித்திருந்தால் தக்ஷணமே சிசுவிற்கு அபாயம் வராமல் சிசுவை வெளிப்படுத்துவதே வைத்தியனுடைய கடமை.

## அஸ்த உதயம். (PRESENTATIONS OF HAND)

அஸ்த உதயமாகும்போது ஏதேனும் யுக்திசெய்து சிசுவை வெளிப் படுத்தாவிட்டால் தாயாருக்கும் சிசுவுக்கும் அபமிருத்யு நேரிடுமென்பதற்கு ஐயமில்லை. மருத்துவத்தொழிலில் அதிக அனுபோகமில்லாத சில நாட்டு மருத்துவச்சிகள், உதயமாயிருக்கும் கையைப்பிடித்திழுத்தால் சிசு இலகுவாய் வெளிப்பட்டு விடுமென்றெண்ணி,அவ்விதமாகச் செய்து சிசுவின் ஜீவனைப் போக்கி ஸ்திரீக்கும் அபாயத்தை விளைவிக்கிறார்கள். அஸ்த உதயமாகிறதென்று தெரிந்த தக்ஷணமே கருப் பைக்குள் கையைச் செலுத்தி குழந்தையைத் திருப்பி வெளிப்படுத்த வேண்டியது வைத்தியனுடைய முக்கிய கடமை.

## நாபிக்கோடி பிரசன்னம். (PRESENTATIONS OF NAVEL CORD)

குழந்தையின் சிரசு உதயமாவதற்கு முன் நாபிக்கொடி உதயமானால், அக்கொடியானது சிசுவின் சிரசால் நசுக்குண்டு இரத்தவோட்டம் மறிபட்டு சிசு இறந்துவிடும். ஆனால் இவ்வித பிரஸவத்தில் ஸ்திரீக்கு யாதொரு அபாயமுமில்லை. நாபிக்கொடியில் நாடிநடை நிசேஷமாய் நின்றுபோயிருந்தாலும், அல்லது அது அழுகிப்போயிருந்தாலும் சிசு இறந்திருக்கிற தென்பதற்குச் சிறிதும் சந்தேகமில்லை. அப்பொழுது குழந்தை தானாய் வெளிப்படும்படி விட்டுவிடவேண்டியது. நாபிக்

கொடியில் நாடிநடை இருந்தால் சிரசு கருப்பையின் வாயில் இறங்கு கிற வரையில் விரல்களினுலாவது ரப்பர் சலாக்கினுலாவது நாபிக் கொடியைக் கருப்பைக்குள் கொண்டுபோய் குழந்தையின் அஸ்தத் தோடாவது பாதத்தோடாவது சேர்ந்தாப்போல் வைக்கவேண்டியது. திரும்பவும் அது வெளிப்பட்டு விடாமல் கடற்பஞ்சை (Sponge) வைத்து அடைக்கலாமென்றும் சொல்லியிருக்கிறது. ஆனுல் நாபிக் கொடி இருப்பதற்குத் தகுந்தாப்போல் யோசித்து அதற்கேற்றப் போல் சிகிச்சைசெய்து, குழந்தைக்கு உயிர்கொடுப்பதே கைதேர்ந்த வைத்தியனுடைய முக்கிய கடமை.

## இரட்டைப் பிரஸவம். (TWIN—டுவின்)

இரண்டாம் பிள்ளை யிருந்தால் முதற்குழந்தை ஜனனமாவதற்கு முன் இருந்ததுபோலவே வயிறு பருத்திருக்கும். வேறு காரணங்களா லும் வயிறு பெருத்து இருப்பதுமுண்டு. ஆனுல் வயிறு இயற்கைக்கு அதிகமாய்ப் பருத்திருக்குதல், வயிறு இருபாகமாய்ப் பிரிந்திருக்கு தல், கருப்பைக்குள் இரண்டு சிசுக்கள் அசைவதுபோலத் தோன்று தல், கருப்பை வெகு விரைவாய் மேலுக்கு ஏறுதல் ஆகிய இவைக ளெல்லாம் இரண்டாம் பிள்ளை இருப்பதற்கு அடையாளமாம். இரட் டைப் பிரசவத்தில் ஒன்றுக்குச் சிரசும், மற்றொன்றுக்கு ஆஸனமும் உதயமாவது வழக்கம். முதல் குழந்தை பிரசவமான சிறிது நேரத்துக் கெல்லாம் திரும்பவும் பிரஸவநோய் கண்டு இரண்டாம் பிள்ளை வெளிப் பட ஆரம்பிக்கும். குழந்தைகள் ரூபத்தில் சிறுத்திருப்பது வழக்கம். முதற்பிள்ளைப் பிரஸவத்தினுல் கருப்பையின் வாய், யோனித்துவாரம் முதலியவைகள் விசாலமடைந் திருப்பதினுல் முதற்பிள்ளைக்கிருந்த சிரமமும், முதற்பிள்ளைக்குப் பிடித்த நேரமும் இரண்டாம் பிள்ளைக் குப் பிடிக்காது. ஒவ்வொரு சமயங்களில் இரண்டொரு நாட்களுக்குப் பிறகும் இரண்டாம் குழந்தை பிரசவமாகும். பிரதி சிசுக்களுக்கும் தனித்தனி பனிக்குடமும், நஞ்சு நாபிக்கொடியு மிருக்கும். இரட் டைப்பிள்ளை பிரஸவத்தில் முதற் குழந்தையின் தொப்புள் கொடி யைக் கிரமப்படி கட்டித் துண்டித்துவிடவும். ஆனுல் தொப்புள் கொடி



படி செய்யவேண்டியது. நிலாவாரைக் கஷாயத்துடன், சீமை இந் துப்பைச் (Epsom Salt) சேர்த்துக்கொடுத்து பேதியாகும்படி செய்ய வேண்டியது. குவைனு மாத்திரைகளைக் கொடுத்து ஜுரத்தைப் போக்க வேண்டியது. இன்னும் க்ஷீரஜுரம்கண்டு, குளிர், நாவறட்சி, தலைவலி முதலியவைகளுண்டானுல் கால்ரூபாய் நிறையுள்ள ஸிட்லிஸ் பவுட ரை, (Seidlitz powder) கொஞ்சம் வெந்நீரில் கலந்து தினம் இரண்டும் மூன்று முறை கொடுக்கலாம். தாகத்திற்குக் கூடுமானவரையில் கொஞ் சமாகவே கொள்ளவேண்டும். ஒருமணி நேரத்திற்கு ஒரு முறை ஸ்த னங்களைக் கையால் அழுத்தித் தேய்க்கவேண்டும். அடிக்கடி வெந்நீர் ஒற்றிடம் கொடுக்கவேண்டும். வேதனை அதிகமானுல் அட்டைகளைக் கடிக்கவிடலாம். சீழ்க்கொண்டு பழுத்திருக்கிற தாகத்தோன்றினுல் சிறுகத்தியினுல் (Lancet) கீறி, சீழை வெளிப்படுத்தி, விரணத்தை ஆற்றவேண்டியதே முக்கிய சிகிச்சை.

## முலைக்காம்பு விரணம். (SORE NIPPLE)

ஸ்திரீகளுக்கு இதனுல் பிராணபயமில்லவிடினும் முலைக்காம்பு இரணத்தைப்போல் அவர்களுக்கு மனேவியாகூலத்தை உண்டுபண் ணக்கூடிய நோய் வேறொன்றுமில்லை. இந்த உபத்திரவம் உண் டாகுமென்று சந்தேகப்பட்டபோதே, போர்ட் ஒயின் (Portwine) பிராந்தி (Brandy) ஆகிய ஏதேனும் ஒன்றுடன் சம அளவாய் ஜலம் கலந்து காலைமாலை இருவேளையும் கழுவுவதினுல் நோய் தணியும். வெந்நீர் ஒற்றிடமும், பனிக்கட்டி ஒற்றிடமும் மாற்றி மாற்றிக் கொடுக்கலாம். காம்பில் விரணம் அதிகமாயிருந்தால், துத்த நாக உப்பு, (Zing Sulphate) படிக்காரம், காடிக்காரம் (Silver Nitrate) ஆகியவைகளில் ஏதேனும் ஒன்றை 5-குன்றி இடை 1-புட்டி ஜலத்தில் கரைத்து விரணத்தைக் காலை மாலை இருவேளையும் அலம்பி வரவும். மெழுகோடு வெண்ணையைச் சேர்த்து உருக்கி காம்பின்மேல் பூசுவது நல்லது. ஸிட்ரைன் ஆயின்ட்மெண்டும் (Citrine Ointment) பூசலாம். பொரித்த படிகாரத்தைப் பொடிபண்ணி வைத்து அழுத்த லாம், அரிசிமாவைத் தூவலாம். பாதாம் எண்ணை, தேங்காயெண்ணை,

முட்டையின் வெள்ளைக்கரு ஆகிய இவைகளிலொன்றைத் தடவலாம். விளாம்பிசினைப் பொடிசெய்து,வாஸிலைனுடன் (Vaseline)குழைத்து விரணத்தின் மேல் தடவலாம். குழந்தைபால் குடிக்கவேண்டியிருக்கும் போது வெந்நீரினால் முலைக்காம்பைக் கழுவி சுத்திசெய்தபின் பால் கொடுக்கவேண்டும். குழந்தை பால்பருகும்போது அதிக வலி யெடுத்தால் முலைக்காம்புக் கவசம், அதாவது ஷாப்புக்களில் விற்கிற ரீப்பர் முலைக்காம்பை (Nipple Shields) போட்டுக்கொண்டு ஸ்தன்னியம், குடிப்பிப்பது நல்லது. ஒரு ஸ்தனத்தில் விரணமுண்டாயிருந்தால் அதிலுள்ள பாலைக் குழந்தைக்குக் கொடுக்காமல், மற்றொரு ஸ்தனத்தி லுள்ள பாலைப் புகட்ட வேண்டும்.

## குறிப்பு.

இப்புத்தகமானது, சுதேச ஆயுர்வேத சாஸ்திரத்தைக் கற்போருக்கும், அதைக் கையாடுவோருக்கும், மற்றும் கற்றுணர்ந்த ஸ்திரீ புருஷர்களுக்கும் பயன்படுமாறு வரையப்பட்டிருப்பதால், கிரமாதீதப் பிரஸவங்களில் சிசுவைத் திருப்பும் மார்க்கங்களையும், ஆயுதப் பிரயோகங்களினால் சிசுவை ஜீவனோடாவது சேதித்தாவது வெளிப்படுத்தும் மார்க்கங்களையும், பிரஸவித்த ஸ்திரீகளுக்குக் காணும் சில கொடிய ரோகங்களையும், அக்கொடிய ரோகங்களுக்குச் செய்யும் சிகிச்சைமுறைகளையும் இதில் விரிவாய்க் கூறாது விடுத்தோம். ஏனெனில் அவைகளைப்பற்றி இதில் விரிவாய்க் கூறுவதும், அப்படிக் கூறினும் அவற்றை யறிந்து நடத்துவதும் மிக்க பிரயாசைமான காரியமென்பதேயன்றி வேறல்லவென்பதை நேயர்கள் அறியவேண்டியது.

## பிரஸவித்த ஸ்திரீயைக் காப்பாற்றும் கிரமம்.

பிரஸவமானதிலிருந்து 3-4-நாள் வரையில் கோதுமைக்கஞ்சி, நெற்பொரிக்கஞ்சி, சவ்வரிசிக் கஞ்சி, அரோரூட் கஞ்சி, ரொட்டி, வாட்டினரொட்டி, பிஸ்கத்து, பசும்பால் ஆகியவைகளில் ஏதேனும் ஒன்றைக் கொடுத்து வரலாம். நான்கு தினங்களுக்கு மேல் உஷ்ணம் தணிந்த பிறகு குழைந்த பழய அரிசி சாதத்துடன் மிளகு ரசம்,



லோஷனை(Condye's lotion) பீச்சாங்குழலால் கருப்பைக்குள் அடித்துக் கழுவி சுத்திசெய்ய வேண்டியது. கேணிக்கு தூரு எடுப்பதினால் கேணியும் கேணியிலுள்ள ஜலமும் சுத்தப்படுவதுபோல், கருப்பையினின்று அழுக்கு எவ்வளவுக்கெவ்வளவு வெளிப்படுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு பிரஸவித்த ஸ்திரீக்கு தேக ஆரோக்யமும், கருப்பைக்கு வன்மையும் உண்டாகும். ஆனால்அழுக்கு அளவிற்கதிகமாய் வெளிப்படுமானால் ஸ்திரீயின் தேகத்தை அலங்கோலஞ் செய்து மிகப் பயங்கரமான இரத்தப் பிரவாகத்தை உண்டுபண்ணும். ஆகையால் ஸ்திரீயைக் குளிர்ச்சியான விடத்தில் நிச்சிந்தையாய் நிமிர்த்து படுத்திருக்கும்படி செய்து,படிக்காரம் கூட்டின குளிர்ந்த ஜலத்தைப் பீச்சாங்குழலால்யோனித்துவாரத்தில்அடிக்கவேண்டியது. இதைத் தினம் இரண்டு மூன்று தடவைக்குக்குறையாது பிரயோகிக்கவேண்டும். ஸ்திரீக்குப் பல ஹீனமுண்டானால்கொஞ்சம் பிராந்தி கொடுக்கலாம்,இதிலும் நிற்காவிட்டால்,விளாவின கந்தகத் திராவகம் (Acidum Sulphuric Dilutum) முப்பது துளி, டிஞ்சர் ஜென்ஷியன் 1½-திராம், சுத்தஜலம் 3-அவுன்ஸ் கலந்து வேளை1-க்கு 1-அவுன்ஸ் வீதம், தினம் 3-வேளையாகச்சாப்பிட்டு வரவும். ஆவாரம்பட்டை, ஆவாரம்வேர், ஆலம்வேர், ஷை பூ, விழுது, கொழுந்து ஆகியவைகளைப் பசும்பால் விட்டிடித்து வடிகட்டிய ரசத்தில் ஒருஆழாக்கு வீதம் காலை நேரங்களில் சாப்பிட்டுவரச் சுகுணமுண்டாகும். கூடுமானால் ஸமுத்திர ஜலத்தில் ஸ்நானம் செய்து வரும்படி திட்டம் செய்யவேண்டியது. இரத்தாசயத்தின் (Heart) செய்கையை அதிகரிப்பதான எவ்விதமான ஆகாரத்தையும், எவ்விதமான வேலையையும் நிசேஷமாய் நீக்கவேண்டியது. அழுக்கு செவ்வையாய் வெளிப்படாத ஸ்திரீகளுக்கு, பெருங்காயம், கருஞ்சீரகம், கோரைக்கிழங்கு, சடாமாஞ்சி,ஓமம்,சுக்கு, மிளகு, வாலேந்திரபோளம் வகைக்கு விரா-1, இவைகளைக் கஷாயமிட்டு, வேளைக்கு கால்சேர்வீதம் எடுத்து அதில் 5 குன்றியிடை குங்குமப்பூவை அரைத்துப்போட்டுக் கலக்கிக்கொடுக்கவும்.

பிரஸவித்த ஸ்திரீகளின் மலமூத்திரங்களைப்பற்றி வைத்தியன் அடிக்கடி விசாரித்து வரவேண்டியது. இரண்டுமணி நேரத்திற்கொரு

தாமாது அல்லது இன்னும் சீக்கிரமாயாது நீரை வெளிப்படுத்த வேண்டுமென்று ஸ்திரீக்கு எச்சரிக்கை செய்யவேண்டியது. படுத்துக் கொண்டே நீர்விடவேண்டியது. நீர் தாராளமாய் இறங்காமல் தடையுண்டாகுமானல் வெந்நீரில் கம்பிளித் துணியை நனைத்து அடிவயிறு அல்குல் முதலியவிடங்களில் ஒற்றிடம்போட வேண்டியது. இதற்கும் சௌகர்யப்படாவிட்டால் நீர்த்துவாரத்துக்குள் சிலாக்கைவிட்டு (Catheter)நீரை வெளிப்படுத்தவேண்டியது. இதுபோலவே மலப்பிரவர்த்தியையும் கவனிக்கவேண்டியது நிரம்ப அவஸ்யம். ஆனல் ஒரு நாள் முழுதும் மலப்பிரவர்த்தி ஆகாவிட்டாலும் பாதகமில்லை. அதற்கு மேற்பட்டால், கர்ப்பவதிகளின் மலபந்தத்திற்குச் சொல்லியிருக்கும் இலகு விரேசன காரிகளில் ஒன்றைக் கொடுக்கவும். ஸ்திரீக்கு விரேசன மருந்து உட்கொள்வதில் விருப்பமில்லாவிட்டால் பீச்சாங்குழலால் (Enema) வெந்நீரை ஆஸனத் துவாரத்திற்குட் செலுத்தி வயிற்றைச் சுத்திசெய்யவேண்டியது.

## கருப்பை அகம்புறமாகுதல். (INVERSION OF THE UTERUS

கருப்பாஸயம் தானய்ச் சுருங்கி நஞ்சை வெளிப்படுத்துவதற்கு முன் மருத்துவ சாஸ்திரத்தில் அதிக அனுபோகமில்லாத சில மருத்துவச்சிகள் அதைப் பிடித்து பலமாய் இழுப்பதினலும், இன்னும் அநேக காரணங்களினலும் இது சம்பவிக்கிறது. இதற்குக் கருப்பையை முன்னிருந்த மாதிரி திருப்பவேண்டியதே விசேஷமான காரியம். தள்ளி விட்டவுடன் தாமதிக்காமல் கொஞ்சம் குளிர்ந்த ஜலத்தைக் கர்ப்பாஸயத்தில் செலுத்தி கையைக் கொஞ்சநேரம் கருப்பைக்குள்ளே வைத்திருந்தால் கருப்பை சுருங்கிவிடும். அப்படிக் கையை வைத்திரா விட்டால் திரும்பவும் கருப்பை திரும்பிவிட யத்தனிக்கும்.

## விடபக்கிழிவு.(LACERATION OF THE PERINEUM)

சிசுவின் சிரசு பெருத்திருப்பதினலும், குறடுகளை (Forceps) அஜாக்கிரதையாய் உபயோகிப்பதினலும், சிசுவின் சிரசு வெளிவரும் போது விடபத்தைக் கையால் அணைக்காததினலும் விடபக்கிழிவு உண்



டாகும். சில ஸ்திரீகளுக்குப் பிரதமப் பிரஸவத்தில் விடபம் கொஞ்சம் கிழிவது வழக்கம். ஆனல் சிலருக்கு விடபம் முழுமையும் கிழிபட்டுப் போய் யோனியும் அபானத்துவாரமும் ஒன்றாய்த் திறந்து போகிறது முண்டு. விடபக்கிழிவு அதிகமானல் கிழிபட்ட உதடுகளைச் சேர்த்துத் தையல் போட வேண்டியது. கிழிவு சாமான்யமாயிருந்தால் ஸ்திரீயின் இரண்டு முழங்கால்களையும் சேர்த்துக் கட்டி வைத்திருந்தால் கிழிந்த உதடுகள் இரத்தவோட்ட முண்டாகிப் பொருந்திவிடும்.

## அற்ப ஜ்வரம். (SYMPATHETIC FEVER)

இது பிரஸவித்த ஸ்திரீகளுக்குக் காணும் இரைப்பை, ஈரல் முதலியவைகளின் அழற்சியினலும், தூர்பலம், மனேவியாகூலம், அபத்தியம், சீதளம், நித்திரையின்மை, வசதிக்குறைவு முதலிய ஏதுக்களாலும், இந்த ஜ்வரம் காணுகிறது. பிரஸவித்து இரண்டு மூன்று தினங்களுக்குள் குளிருடன் ஆரம்பித்து வெகு சீக்கிரத்தில் நீங்கிவிடுவதினல் இதற்கு அற்ப சுரம் என்று பெயர் வந்திருக்கிறது. சிலருக்கு முறை ஜ்வரமாயும் வந்து வியர்த்துவிடும். இந்த அற்ப ஜ்வரத்தைப் போக்கப் பிரதமத்தில் இலகுவிரேசன காரிகளில் ஒன்றைக்கொடுத்து வயிற்றை சுத்திசெய்து கஞ்சியினங்களில் ஒன்றைக் கொடுத்துவரவும். அபத்தியத்தினல் உண்டானதென்று தெரிந்தால் 2-குன்றியிடை, ரஸ பஸ்பம் (Calomel)கொடுத்துக் கொஞ்சநேரஞ்சென்றபிறகு நிலாவாரைக் கஷாயம் கொடுக்கவேண்டியது.

## தினைபோன்ற வியர்க்குரு ஜ்வரம். (MILIARY FEVER).

பிரஸவித்த ஸ்திரீகள் அதிக உஷ்ணமான பானங்களையும் அதிககாரமான ஆகாரங்களையும் உட்கொள்வதினல் உஷ்ணம் அதிகரித்து முகம், கழுத்து, முதுகு, முதலியவிடங்களிலும், சில சமயங்களில் தேக முழுதும் தினையளவுபோன்ற வியர்க்குரு கண்டு வியர்வையுடன் இந்த ஜ்வரம் காண்பது வழக்கம். இந்த ஜ்வரத்திற்கு உப்புபேதிக்குக் (Mag Sulphat) கொடுத்து, குளிர்ச்சியை உண்டுபண்ணக்கூடிய ஆகாரங்களைப் புசிக்கச்செய்து சுத்தமான காற்றில் உலாவச்செய்யவேண்டியது.

## பிரஸவலிப்பு. (CONVULSIONS)

இது ஸ்திரீகள் கர்ப்பமாய் இருக்கும்போதும், பிரஸவகால ஸமீபத்திலும், பிரஸவ நோய்கண்டிருக்கிறபோதும், பிரஸவித்தபிறகும் காணுவது வழக்கம். இது பார்வைக்கு மிகவும் பயங்கரமாகவும், சிகிச்சைக்கு வசப்படுவது சிரமமாகவும் இருக்கும். இந்தக் கொடிய ரோகத்திற்குக் கற்பூரம், மிளகு, நவச்சாரம் பெருங்காயம், சடாமஞ்சி முதலிய உஷ்ணகாரிகளையும், இசிவுகளைப்போக்குகிற இதரமருந்துகளையும் கொடுக்கவேண்டியது. வலிநின்ற பிறகு கொஞ்சம் அபினி கொடுத்து நித்திரையை உண்டு பண்ணவேண்டியது. மலபந்தமிருந்தால் இலகுவிரேசன காரிகளாலேனும், பீச்சாங்குழலேனும் (Enema) அடித்துக் குடலை சுத்தி செய்யவேண்டியது. இரண்டு மூன்று தடவை பேதியாகி கறுத்து நாற்றத்தோடு கூடிய மலம் வெளுப்பட்டு விட்டால் சிலவேளை வலிப்பு நீங்கும். அதன்பிறகு வேப்பம்பட்டை, நிலவேம்பு, குவாஷியா முதலிய கசப்பு மருந்துகளைக் கொடுத்துத் தேகதிடத்தை உண்டுபண்ணவேண்டியது.

## பிராணமோசமான மூர்ச்சை. (FATAL SYNCOPE)

மிகவும் பயங்கரமான இப்பிராண மோசமான மூர்ச்சையானது தேகத்தில் இரத்த ஓட்டமானது தடைபடுவதினால் பிரஸவித்த ஒரு மணி நேரத்துக்குள், ஈரல் குலையில் நோயும், கொஞ்சம் களையும், வாய் குமட்டலும் உண்டாகி பிறகு சுவாசம் நின்றுவிடும். முகம் மிகவும் விரைவாயும், பயங்கரமாயும் வாடும். நாடிநடை பலஹீனப்பட்டு விட்டு விட்டு அடிக்கும், அரட்டல் புரட்டல் உண்டாகும். பல்லுக்கிட்டிப்பேகும், நாக்கை உள்ளுக்கு இழுத்துக்கொள்ளும். இதற்கு தக்ஷணமே பரிகாரஞ் செய்யாவிட்டால், தப்பாமல் மரணம் சம்பவிக்கும். இதற்கு இரத்தவோட்டத்தைச் சீர்படுத்துவதுதான் விசேஷித்த சிகிச்சை. ஸ்திரீயை நல்ல காற்றுள்ளவிடத்தில் நிமிர்ந்து படுத்திருக்கும்படி செய்ய வேண்டியது. ஆடையாபரணங்களைத் தளர்த்திவிட வேண்டியது. ஒரு அவுன்ஸ் பிராந்தியில் (Brandy) கொஞ்சம் ஜலம் சேர்த்துக் கொடுக்கலாம். அல்லது பரிமள நவச்சாரமது (Sprit Sammonae



Aromatic) ஒரு டிராம், ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து மூன்று மணி நேரத்திற்கு ஒருமுறையாக, இரண்டு மூன்று முறை கொடுப்பதினாலும் சுகுணமுண்டாகும்.

## பிரஸவப்பைத்தியம். (PUERPERAL INSANITY)

இது இருவகைப்படும், ஒன்று பைத்தியம், மற்றொன்று மூளையின் தாபனம், இந்த ரோகம் காண்பதற்குமுன் நித்திராபங்கம், முகம் ஊதல், விகாரமான பார்வை, சிரசு பிகுவாய் கட்டியிருப்பது போல் தோன்றுதல் ஆகிய இக்குறிகள் காண்பது வழக்கம். இதில் மனோவியாகூலமாவது சந்தோஷமாவது இருக்கும். எல்லோரையும் சம்சயமாய்ப் பார்ப்பாள். ஆடல் பாடல், விடாப்பேச்சு, மௌனம் முதலியவைகளுண்டு. குழந்தைக்கும் தன் புருஷனுக்கும் ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக எண்ணுவாள். குழந்தையின்மேல் ஞாபகமே இல்லாமல் போவதுமுண்டு. காதிரைச்சல், மேனி பதப்படுதல், முகம் வெளுத்தல், நாக்கில் மாப்படிந்திருக்குதல், நாடி மெலிந்து நடக்குதல், மலபந்தம் முதலிய குறிகள் காணும், இதில் ஜுரமாவது கருப்பை வியாதியாவது கண்டால் அசாத்தியமென்றே தீர்மானிக்கவேண்டியது. இந்நோய் நிலைத்திருக்கும் காலம் இவ்வளவென்று தெரியாது. ஆயினும் சீக்கிரத்தில் குணத்துக்கு வந்துவிடும். சில சமயம் குறிகள் சாந்தப்படாமலே பலமாதம் வரைக்கும் இருக்கும். பெரும்பாலும் ஸ்திரீகள் இதினின்று குணப்படுகிறார்கள். ஒவ்வொரு வேளை இதனால் உயிர் துறந்தவர்களுமுண்டு. இந்நோய் தீராதவர்களுமுண்டு.

சிகிச்சை.—வாந்தி உப்பு (Tartar emetic) மூன்று கிறேன்ஸ் கொஞ்சம் ஜலத்தில் கலந்து கொடுத்து வாந்தியை உண்டுபண்ணுவது நல்லது. டிஞ்சர் டிஜிடேலிஸ் (Tincture Digitalis) 20 துளியை ஒரு அவுன்ஸ் ஜலத்தில் கலந்து. 3-மணிக்கொருதரம் கொடுக்கலாம். பேதிக்குக் கொடுத்துக் குடலைச் சுத்திசெய்தபிறகு அபினி 2-கிறேன்ஸ் அல்லது இபிகாக்கலவைச் சூரணம் (Dover's Powder) 15-கிறேன்ஸ் வீதம் 3-மணிக்கொரு தடவையாக 2–3 முறை கொடுக்கலாம். சிரசிலுள்ள ரோமங்களைப் போக்கி ஈரத்துணியைப் போட்டு வைக்கலாம்.

ரோகிஷ்டி ஒருவருடனும் வார்த்தை சொல்லாமல் இருட்டான விடத்தில் நிம்மதியாய் படுத்திருக்கும்படி செய்யவேண்டியது. தேகதிடத்தை உண்டுபண்ணக்கூடிய, ஒயின், இறைச்சி ரசம் (Soup) வேப்பம்பட்டை கஷாயம், லிங்கோனு, குவாஷ்யா. பரிமள நவச்சாரமது (Sprit ammoniae Aromatic) முதலியவைகளையும் கொடுக்கவேண்டியது.

## ஸ்தனதாபிதம். (INFLAMMATION OF THE BREASTS)

பிரஸவித்தஸ்திரீகளுக்கு ஸ்தனங்களில் கட்டியுண்டாகுதல், வெடித்தல் முதலியவைகளெல்லாம், சீதளத்தினாலும், அஜாக்கிரதையினாலும் பால் தங்கித் தாரை பூரிப்பதினாலும் உண்டாகிறது. குழந்தை பிறந்த 2-3-மணி நேரத்திற்குப் பிறகு ஸ்திரீக்கு ஆயாஸம் நீங்கினவுடன் சிசுவைப் பால்உண்ணும்படி செய்து, அதுமுதற்கொண்டு அடிக்கடி பால் கொடுத்துக்கொண்டு வந்தால் இது உண்டாகாது. பெரும்பாலும் முதல் பிரஸவத்தில் முதல் மூன்று தினங்கள்வரையில் பாலிருக்கமாட்டாது. மூன்று தினங்களுக்கு மேற்பட்டு ஸ்தனங்கள் பருத்து விம்மலடைந்து வீக்கமுண்டாகிக் குத்துவலி காணும். இதை தக்ஷணமே கவனிக்காவிட்டால் ஜுரம் கண்டு ஸ்தனங்களில் கட்டியுண்டாகி, கஷ்டப்படுத்தும். ஆகையால் பிரஸவித்த ஸ்திரீகளின் முலைக்காம்பை அடிக்கடி பீச்சிப் பார்த்து பாலிருக்கிறதாகத் தெரிந்தால் குழந்தையைப் பால் உண்ணும்படி செய்யவேண்டியது. முதல் முதல் குழந்தைக்கு முலை கொடுக்கு முன் வியர்வை நாற்றம், அழுக்கு முதலியவைகள் நீங்கும்படி காம்புகளை இளஞ்சூடான வெந்நீரால் கழுவித் துணியினால் துடைக்கவேண்டும். சிசு ஸ்தன்னியபானம் பண்ணுவிட்டால் கொஞ்சம்தேனை முலைக் காம்பில் தடவிப் பிறகு பால் கொடுக்கவேண்டியது. குழந்தைப் பால் குடித்தவுடன் ஸ்திரீ தன் விரல்களால் முலைக்காம்பிலுள்ள பாலைப் பீச்சி வெளிப்படுத்திவிட்டு வெந்நீரினால் கழுவி வந்தால் முலைக்காம்புகளில் வெடிப்புகளேனும், விரணங்களேனும் காணமாட்டாது.

சிகிச்சை.—ஸ்தனங்களில்பால் கட்டிக்கொண்டு ஜுரம்கண்டால், பிராந்தி, (Brandy) மிளகுக்கஷாயம் முதலிய உஷ்ண காரிகளைக் கொடுக்கவும். ஜுரம் வெளிக்கண்டபிறகு வியர்வை பிறக்கும்



(Pepper-water) அல்லது இறைச்சிரசம் (Soup) முதலியவைகளிலொன்றைச் சேர்த்துக் கொடுக்கலாம். பிரஸவித்த ஸ்திரீ தேக ஆரோக்கியமாயிருந்தால் சீக்கிரத்தில் ஸ்நானம் செய்வித்து தேக திடத்தை உண்டுபண்ணக் கூடியதான நல்ல ஊட்டம் கொடுத்துவர வேண்டியது. பாமர வைத்தியர்களின் வார்த்தையைக் கேட்டுச் சோறு கொடுக்காமலும், ஸ்நானம் செய்விக்காமலும் இருப்பது விவேகிகளுக்கு அழகல்ல. பிரஸவித்த ஸ்திரீயைக் கஞ்சி, மிளகுரசம், இறைச்சிரசம் (Soup) முதலியவற்றையே பலாத்காரமாய் உட்கொள்ளும்படி செய்து அவள் வயிறு பூரிக்கும்படியாய்ச் செய்வது மனுஷத் தன்மைக்கு அழகல்ல. இதனால் இரைப்பை (Stomach) பலஹீனப்பட்டு சீதளத்துக்கு இடமுண்டாகும். ஆகையால் பிரஸவித்த சிலநாள் வரைக்கும் பகலில் இரண்டொரு முட்டைகளையும் ரொட்டிகளையும் கொடுத்து வரவேண்டும். ஆனால் நெய் சேர்ந்த பலகாரங்களையும், கொழுப்புள்ள வஸ்துக்களையும் ஸ்திரீயின் தேக சௌக்கியத்திற்காகவும், குழந்தையின் ஆயுள் விருத்திக்காகவும் அடியோடு நீக்கவேண்டியது. மரக்கறி, செடிக்கறி, கொடிக்கறி முதலிய தாவர உணவுகளைத் தினம் ஒரு தடவையாகிலும் வயிறார உண்ணவேண்டும். ஸ்திரீக்கும் உலகத்தாருக்கும் பெரும் தீமையை விளைவிப்பதான * சாராய முதலிய போதை வஸ்துக்களை ஒருபோதும் கொடுக்கலாகாது. இதனால் குழந்தைக்கும் தாய்க்கும் அசௌக்கிய முண்டாகுமென்பதில் ஐயமில்லை. ஆனால் அதைச் சாப்பிடும்போது மாத்திரம் சோர்வு நீங்கி சுறு சுறுப்பு உண்டானதுபோல் தோற்றுமேயன்றிப் பிறகு நவிலமுடியாத நரம்புத்தளர்ச்சியும், துர்ப்பலமும் சோர்வுமுண்டாகி அதை நீக்க மேன்மேலும் லாகிரி வஸ்துக்களையே கையாடும்படி நேரிடும். இன்னும் ஜீரணசக்தி முதலியவற்றை அடியோடு கெடுத்து ஸ்திரீக்கு இயற்கையாயுள்ள பாலையும் பாழ்படுத்தி, அது குழந்தை பருகுவதற்கு உதவியற்றதாயாகும்படி செய்துவிடுகின்றது.

---

* சாராயமுதலிய மதுபானங்களைப் பற்றிய விபரங்களை விரிவாய் அறிய விரும்புவோர் நம்மால் இயற்றப்பட்டுள்ள "சுதேச வைத்தியரத்தினம்" என்னும் புத்தகத்தைப் பார்வையிடவும்.

## சிசுபரிபாலனம். (CARE OF INFANTS)

குழந்தை ஜீவனோடு ஜனனமானவுடன் கைகால்களை உதரிக்கொண்டு அழும். அவ்விதமாக அழுது சுவாசம் சுவாபீகமாய் ஏற்பட்டு நாபிக்கொடியின் நாடிநடை நின்றபிறகு, தொப்புள் கொடியை நாபியினின்று இரண்டு அங்குல நீளம் விட்டு, நாடா (Tape) அல்லது மிருதுவான நூற்கயிற்றினால் கட்டி, இந்த முடிச்சுக்கு மூன்றங்குல தூரத்தில் வேறொரு முடியிட்டு இவ்விரண்டு முடிகளுக்கும் மத்தியில் கூர்மையான கத்திரிக்கோலால் துண்டித்து சிசுவையும் தாயையும் வேறுபடுத்தவேண்டியது. அவ்விதமாகக் கட்டுக்கட்டிக் கத்திரிக்காவிட்டால், இரத்தம் பெருகிக் குழந்தை இறந்துபோம். கட்டுக்கட்டாவிட்டாலும் குழந்தை பிறந்த 20-நிமிஷத்திற்கெல்லாம் தொப்புள் கொடியின் நாடிநடை நின்றுவிடும். அதன்பிறகு கத்திரித்து விடலாம். மேற்கண்ட கிரமத்தை, மருத்துவத்தொழிலில் அதிக அனுபோகமில்லாத சில மருத்துவப் பெண்கள் அநுசரிக்காமல் அவசரப்பட்டு சிசு ஜனனமான தக்ஷணமே நாபிக்கொடியைத் துண்டித்து விடுவதால் சிலசமயங்களில் சிசுவுக்கு அநேக அபாயங்கள் நேரிடுகின்றன.

துண்டித்த நாபிக்கொடியின் நுனியில் ஈரமில்லாத ஓர் துண்டுத்துணியைக் கட்டித் தொங்கவிடவேண்டும். நாபிக்கொடி 5-6-தினங்களுக்குள் அற்றுவிழுந்துவிடும். விழுந்தபிறகு அதன் வாயில் இரணமிருக்குமானால் அதன்மேல் மெழுகுக் களிம்பை (Simple ointment) தடவவேண்டும். குழந்தையைக் கழுவும் போதெல்லாம் இரணம் ஆறுகிறவரைக்கும் இவ்வாறு செய்து வரவேண்டும்.

குழந்தை வெளிப்பட்டவுடன் வீரிட்டழுதால் அதன் சுவர்சப்பை விரிந்து, சுவாசம் விட இலகுவாய் இருக்கும். குழந்தையின் வாயில் விரலைவிட்டுக் கோழையை எடுத்துவிட்டுக் கந்தைத் துணியினால் துடைத்துவிட வேண்டியது. அது மூச்சு விடுவதற்குச் சுளுவாய் இருக்கும்படியாக மல்லாத்திக் கிடத்தவேண்டும். அதற்குமேல் குழந்தையின் தேகத்தின்மேலிருக்கிற வழவழப்புகள் போகும்படியாய் வெந்நீரில் கழுவிக் கம்பளி அல்லது மிருதுவான இலவம்பஞ்சடைத்த மெத்தையின்மேல் படுக்கவைக்கவேண்டியது. இத்தருணத்தில்



தாயானவள் தான் பெற்றெடுத்த குழந்தையைப் பார்த்து இக்குழந்தையால் தான் பட்டனுபவித்த கஷ்டங்களையெல்லாம் முற்றும் மறந்து மனமகிழ்ச்சியடைவாள்.

### சிசுவின் ஜீவசக்தி அடங்கியிருப்பது

இயற்கைக்கு அதிகமாய் ரத்தம் வடிவதினாலும், நஞ்சு சீக்கிரத்தில் பிரிந்து போவதினாலும், போஷணைக் குறைவினாலும், கபாலம் நாபிக்கொடியை விடாமல் அழுத்தினதினாலும், நீடித்த பிரஸவத்தினாலும், சில சிசுக்களுக்கு மூர்ச்சையும் சுவாஸபந்தமும் காணும். இருதய நடை நின்றிருக்கும். இதற்கு தக்ஷணமே, குளிர்ந்த ஜலத்தைச் சிசுவின் சிரசின்மேல் தெளித்து வெந்நீரிலும், குளிர்ந்த ஜலத்திலும் மாறிமாறி நனைக்கவேண்டியது. உஷ்ணம் உண்டாகும்படி குழந்தையின் தேகமுழுதும் கம்பளியால் தேய்க்கவேண்டியது. அதிலும் நன்மையுண்டாகாமற் போனால், கோழி இறகைச் சிசுவின் நாசித்துவாரத்திலும், தொண்டைக்குள்ளும் செலுத்தி கூச்சம் உண்டாக்க வேண்டியது. குழந்தையின் பிட்டத்தின்மேல் விரல்களால் இலகுவாய் அடித்து அழச் செய்யவேண்டியது. குழந்தைக்குச் செய்யவேண்டிய மேற்கண்ட கிரியைகளை அதைர்யப்படாமல் செய்யவேண்டியது. சிறிது நேரம் பார்த்து எவ்வித முயற்சியாலும் சுகுணம் பிறந்து சிசுவிக்குச் சுவாஸ ஓட்டமுண்டாகி அழ ஆரம்பிக்காவிட்டால் அது அசாத்தியமென்றே தீர்மானிக்க வேண்டியது. ஆனால் பிறந்த இரண்டுமணி நேரம்மட்டும் இறந்தாப்போலிருந்து உயிர்ப்பிக்கவேண்டிய முயற்சிகள் விடாமற் செய்துவந்ததினால் பிறகு உயிரடைந்தனவாங் சரித்திரப் பூர்வகமான அநேக இன்பமான திருஷ்டாந்தங்களை வாசித்திருக்கிறோம். ஆகையால் உயிர்ப்பிக்க வேண்டிய சிகிச்சைகளை அரைமணி நேரத்திற்குக் குறையாது செய்தே தீரவேண்டும். ஏனெனில் அப்படிக்குச் செய்தும் பிரயோஜனமுண்டாகாதென்று தெரிந்தாலும், அவைகளைச் செய்வதினால் பெற்ற தாய்க்கு சந்தோஷமும், மன இரக்கமுள்ள மற்றவர்களுக்குத் திருப்திகரமும் உண்டாகிறது.

பிரஸவித்த ஸ்திரீக்கு முதலில் சுரக்கும் கீழ்ப்பாலை குழந்தை குடிப்பதினால் அதன் வயிற்றிலுள்ள கறுத்த பச்சைநிறமான காட்டு மலம் வெளியாகும். இந்தக் கீழ்ப்பாலைக் குடிக்காவிட்டால் காட்டு மலம் வெளிப்படாது. சிலர் குழந்தை பிறந்தவுடன், காட்டுமலம் கழிவதற்காக, சர்க்கரை, செங்கற்மாவு, வெண்ணை, வெற்றிலை ரசம், கள்ளி ரசம் ஆகியவைகளை விழுங்கச் செய்கிறார்கள். இக்கொடிய பழக்கத்தை இன்றோடே நீக்கவேண்டியது. வேண்டுமானால் அதற்குப் பதிலாக அரைக்கால் ரூபா யெடை ஆமணக்கெண்ணெயை (Castor oil) கொடுக்கவும். அவசியமானால், ஆமணக்கெண்ணெயை மேற்கண்டபடி இரண்டு மூன்று முறைகொடுக்கலாம்.

கீழே கம்பளித்துணி போட்டு அதன்பேரில் மிருதுவானபருத்தி வஸ்திரத்தை மெத்தைபோல் மடித்துப்போட்டு அதன்பேரில் குழந்தையை மல்லாத்திப்படுக்கவைக்க வேண்டும், சிசுவின் நுட்பமான தேகத்திற்குச்சீதளம் தாக்காதபடி, சகலாத்தினால் (Flannel) போர்த்து வைக்க வேண்டியது அவசியமாயிருந்தாலுங்கூட, அதன் உடம்பின் மீது அதிகத் துணிகளைப் போட்டு வைப்பதினால் அதற்கு அநேகவித நோய் உண்டாவதோடுங்கூட, சிசுவின் தோல் மெல்லியதாகையால் அதற்கு உறுத்தும். சிசுவுக்குச் சீதளம் உண்டாகாதபடி கம்பளித் துணியினால் போர்த்து வைத்திருப்பதோடுங்கூட, தாய் மார்போடு அணைத்துக் கொள்வதனால் தாயின் சரீர உஷ்ணம் சிசுவுக்குத்தாக்கும். அதனால் சிசுவுக்கு தேக ஆரோக்கியமுண்டாகும்.

தற்கால நவீன நாகரீகத்தாலும், பக்கத்தில் படுக்கவைத்துக் கொண்டால் அயர்ந்த நித்திரையில் தாயின்கீழ் சிசு ஒருவேளை அகப்பட்டுக்கொண்டு நசுங்கிப்போகும் என்கிற பயத்தினாலும், அநேக குழந்தைகளைச் சிறந்த படுக்கையாகிய தாயின் மார்பினின்று நீக்கித் துணியினால் தொட்டில் கட்டி அதில் குழந்தைகளைப் படுக்கவைக்கிறார்கள். இதில் குழந்தைகள் கிடத்தின மாதிரியாய்ப் படுத்திருக்க முடியுமே யன்றித் தங்களுக் கிஷ்டமானபடித் திரும்பிப் படுக்கவாவது கைகால்களை ஆட்டி அசைக்கவாவது முடியாது. பரிசுத்தமான காற்று தாராளமாய் உட்செல்ல இடமிராததால் குழந்தை அழும். சில குழந்



தைகள் கால் பக்கமாயாவது தலைபக்கமாயாவது நழுவிக் கீழே விழுந்து விடுவதுமுண்டு. அப்படி விழும்போது கால் கைகள் சிக்கிக்கொள்வதால் சில குழந்தைகள் தலைகீழாய்த் தொங்குவதுமுண்டு. ஆகையால் துணித் தொட்டில்களைவிட சுற்றிலும் கிராதியுள்ளமரத்தொட்டில்களே மிகவும் நல்லது. அப்படிக்குத் தாயின் மார்பினின்று நீக்கி மரத்தொட்டிலில் படுக்கவைத்தாலுங் கூட, அதில் குழந்தைகள் குளிர்ச்சி தாங்கமாட்டாமல் இரவு முழுதும் அழுதுகொண் டிருப்பதுமன்றி, குளிர்ச்சியினாலும் பாதுகாப்புக் குறைவினாலும் அவைகள் இறந்துபோகும்படி நேரிடுகின்றது. இப்படிக்குச் சொல்வதினால் குழந்தைகளின்மீது "குடுகுடுப்பைக்காரன்போல்" அநேகதுணி முதலியவைகளைப் போட்டுமுற்றும் காற்றுப்படாமல் செய்யவேண்டு மென்பது அர்த்தமல்ல. தொட்டிலைச் சுற்றித் திரைகட்டி யிருந்தபோதிலும், குழந்தையின் மேல் போதுமானபடி பரிசுத்தமான காற்றுப்படும்படி ஏற்பாடு செய்யவேண்டும். சில சிசுக்களுக்குப் பிறக்கும்போதே மார்பு பெருத்திருப்பதினால். சிலர் மார்பைப் பிசைந்து மார்பிலுள்ள நீரை வெளிப்படுத்துகிறார்கள் இக்கொடிய செய்கை நூற்றில் ஒரு குழந்தைக்கும் செய்யவேண்டி வராது, அப்படிக்கு நேரிட்டால் மார்பைத் தளர்ச்சி செய்யத்தக்க மிருதுவான மாவுக்களியை (Poultice) வைத்துக் கட்டுவதே உத்தமம்.

## தாய்மார்களுக்கு ஓர் எச்சரிக்கை

குழந்தைக்குப் பால் கொடுக்கும் ஸ்திரீயின் உணவு சாதாரணமாயும் எளிதில் ஜீரணித்துப் போஷிக்கத் தக்கதாயும் இருக்கவேண்டும். இதற்கு முன் வழக்கமாய்ச் சாப்பிட்ட எந்த உணவையாகிலும் குழந்தைக்குத் துன்பம் வருவிக்காமலே சாப்பிடலாம். தாய்க்கு ஒத்ததாயிருப்பது சிசுவுக்கு ஒவ்வாமலிருப்பது அபூர்வம். பால் கொடுக்கிற தாய்க்குப் போஷிக்கத்தக்க ஆகாரம் அதிக அவசியமானாலும் நன்றாய்ச் சாப்பிட வேண்டுமென்கிறது குற்றமாவதோடுங்கூட அவ்வித செல்வச் சாப்பாடு பாலைக்கெடுத்து சிசுவுக்கு அஜீரணத்தை உண்டுபண்ணுமென்பதற்குச் சிறிதும் ஐயமில்லை.

தாய்மார்கள் தத்தம் பாலர்களுக்கு ஊட்டும் பாலானது கடவுளால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சஞ்சீவிக்கொப்பா யிருக்கிறது. தேக

வளர்ச்சிக்கு அவசியமான, சர்க்கரை, நெய், ஜலம், சொற்ப உவர்ப்பு, சொற்ப அயம் ஆகிய இவைகளே அப்பாலிருக்கின்றன. தேகத்திலுள்ள ஒவ்வொரு அவயவமும் வளர்ச்சியடையவும், ஜீவாக்கினி நிலைபெற்றிருக்கவும், மேற்கண்ட அற்புத அவுஷதத்தை உண்டாக்கின கடவுளின் கிருபாகடாக்ஷத்தின் பெருமையையும் அருமையையும் நாமென்னென்று சொல்லலாம். எவ்வகையான துதி செலுத்தி நன்றிகூறலாம். தங்கள் அருமைப்பாலகர்களுக்காக அதிக கிருபையுடன் தங்கள் இரத்தத்தினின்றே இப்பாலானது சித்தப்படுத்தப் படுகின்றது.

இன்னும் அந்தப்பாலானது தாங்கள் நினைத்த க்ஷணமே, தங்கள் பாலர்களுக்குக் குடிப்பாட்டும்படியாகத் தங்களிடத்திலேயே தடைதவக்க முதலியவைகளின்றிச் சர்வசித்தமாய் வைக்கப்பட்டிருக்கிறது. தங்கள் பாலகர்கள் தினேதினே வளர்ந்து செழித்துப் புஷ்டியாகி சுகமாயிருப்பதற்காகவே இராப்பகலென்னும் விகர்ப்பமின்றிப் பால் கொடுத்து வருகின்றீர்கள். தாய்மார்கள் பிள்ளைக்குப் பாலூட்டும்போது, எவ்வித விசனம், கவலை, பயம், திகில் முதலியவை யில்லாதவர்களாய்க் கூடிய வரையில், மனக்களிப்பு, திருப்தி முதலியவையுள்ளவர்களாக இருக்கவேண்டும். ஏனெனில் பால்உண்ணும்போது, தாய் கடுத்த முகமும், சஞ்சலப்பட்டும் மனோ எழுச்சிகொண்டுமிருந்தால் சிசுவுக்குத் துன்பம் உண்டாகும். பால் கெட்டுப்போவதுமன்றிப் பால் அதிகமாய்ச் சுரக்காமலும் சில வேளை நிசேஷமாய் நின்றுபோகும். பெற்ற தாய் அல்லது பால் கொடுக்கும் ஸ்திரீ மேற்குறித்த மனோ சஞ்சலங்களுக்குள்ளாகி, அதனால் அஜீரணம், மந்தம், பேதி, ஜுரம், வலிப்பு ஆகிய நோய்கள் கண்டு பிள்ளைகளுக்கு மோசம் சம்பவித்ததாய் அநேக திருஷ்டாந்தங்கள் சரித்திர பூர்வமாய் ஏற்பட்டிருக்கிறது.

குழந்தைக்குப் பால் கொடுக்கக்கூடாதபடி அசந்தர்ப்பங்கள் நேரிட்டாலன்றி மற்ற எக்காலத்திலும் பெற்ற தாயே பால் கொடுக்கவேண்டும். இது இயற்கைக்கும், புத்திக்கும், நியாயத்துக்கும் ஒத்ததாயிருக்கிறது. இயற்கையான தாய்ப்பாலைப் பருகப் பிராப்தி இல்லாத குழந்தைக்கு ஏற்படும் அசௌகரியத்தை எடுத்து சொல்வது பிரயாசையாகும். தாய்ப்பால் உண்டு வளருகிற குழந்தை சௌக்கிய



மாயிருக்கிறது போலவும், அதற்கு நோய் வந்தால் அதை அது தாங்குகிறதுபோலவும், மற்றக் குழந்தைகளுக்கு முடியாது. இயற்கை அறிவையும் உலகத்தையும் கவனிக்கும்போது, அவைகள் பெற்ற தாய் தன் குழந்தைப்பால் கொடுப்பதே நன்மை எனச் சொல்லுகின்றன. இப்பூவுலகில் அநேக இடங்களிலே அழகும் பலமும் பொருந்தியிருக்கிற குழந்தைகள் ஒருவருஷம் வரையில், தாயின்பாலையே பருகி வேறெதையும் உண்ணாமல் வளர்ந்தவர்களாகவே இருக்கிறார்கள். சிசுவுக்குக் கொடுக்கப்படும் வேறெவ்விதமான ஆகாரமும், தாய்ப்பாலுக்கு எவ்வளவு ஒத்திருந்தபோதிலும், அது முலைப்பாலுக்குச் சமானமாகாதென்பது, நியாயத்தாலும் அநுபவத்தாலும் தெரியவரும்.

பெற்ற தாயைப் பால் கொடுக்கும்படி ஏற்பட்டிருக்கும் மற்றொரு நியாயம் என்னவெனில் பால்கொடுப்பதினால் தேகம் பலஹீனப்படாது என்பதேயாம். அதல்லாமலும் பால் கொடுப்பதினாலே தேகத்தின் சௌக்கியம் விர்த்தியாகிறது. ஒற்றை நாடி ஸ்திரீகள் பால் கொடுப்பதினாலே பலப்பட்டு பெண்களுக்குச் சம்பவிக்கும் நோய்களுக்கு உள்ளாகாமல் தப்பித்துக்கொள்ளுகிறார்கள். ஸ்திரீகள் கர்ப்பவதியாயிருக்கும் காலத்தைத் தள்ளிவிட்டுப் பால் கொடுக்கும் காலத்திலோ, அல்லது சாதாரணகாலத்திலோ ஸ்திரீகள் அதிகமாய் இறக்கிறார்களென்று கணக்குப் பார்க்கும்போது, பால் கொடுக்கும்போது இறக்கிற ஸ்திரீகள் வெகு சொற்பமென்பது ஒருவரும் மறுக்கக்கூடாத விஷயமாகும். மேலும் ஸ்திரீகள் பால் கொடுக்கும்போது மற்றக் காலத்திலில்லாத உற்சாகத்தையும், வேறுபடாத மனதையும், சாந்தத்தையும், சந்தோஷத்தையும் அடைகிறார்களென்பது அநுபவ சித்தம்.

மிகவும் முக்கியமான மேற்கூறிய விஷயங்களை அலக்ஷியம் செய்வதினால் உண்டாகிற பெருந்தீங்கு என்னவெனில் தன்தேகம் பொறுப்பதற்கு மேலாகப் பலமுறை கர்ப்பமாகித் தீராப்பிணிக்கு ஆளாவதுதான். பால் கொடுக்கும் தாய் மற்றொரு குழந்தையைப் பெற சற்றேறக்குறைய இருபது மாதம் செல்லும். இயற்கை நியாயத்துக்கு விரோதமாய்ப் பிள்ளைக்குப் பால் கொடுக்காமலிருக்கிற

ஸ்திரீயோ வருஷத்துக் கொருபிள்ளை பெறுவதுமன்றித் தேகம்
தளர்ந்து சீக்கிரத்தில் கிழவியாகும்படிக்கும் நேரிடுகிறது.

இயற்கையான இப்பழக்கத்தால் ஜ்வரத்தினின்றும் மார் தாபிதங்
கொண்டு, காம்புகள் வெடித்து அதனால் உண்டாகும் சஞ்சலத்தையும்,
பயத்தையும் அடையாவண்ணம் தாயானவள் நீங்குகிறாள். கர்ப்பமா
யிருக்கும்போதே மார் சுரந்திராமற் போனால் பிறகு குழந்தை சப்புவதி
னால் அதி விரைவாய்ச் சுரக்கும். இதனால் பூரித்த மாரின் நிமித்த
மாக உண்டாகும் நோய் உண்டாகிறதில்லை. அதுவுமன்றி மார்
நிறைந்து கெட்டியாகிற வரையில் குழந்தையைச் சப்பவிடாமற்
போனால், ஸ்தனங்கள் அதிகமாய்ப் பூரித்து காம்புத் தெரியாமற்
போகும். அதன் பிறகு அதிகமாய்ப் பிரயாசப்பட்டாலுங்கூட
குழந்தை பிடித்துண்ணக் கூடாமற் போகும். அப்போது காம்பு
கள் புண்ணாகித் தாய்க்கு அதிக நோய் உண்டாகும். கடவு
ளின் கட்டளையும் இயற்கை நியாயமும் இவ்வாறிருக்க தற்கால
நவீன நாகரீகத்தைக் கைப்பற்றி யிருக்கும் சில தாய்மார்கள், தாங்கள்
அரிய தவமிருந்து முந்நூறு நாட் சுமந்து பெற்ற குழந்தைக்குப் பால்
கொடுத்தால், தங்களின் தேகக்கட்டுத்தளர்ந்து, சருமம் திரைந்து, கூந்
தல் நரைத்து, முதுமைப்பருவத்தை யடைவோமென்று பயந்து,
வேறொரு ஸ்திரீயைக் கொண்டு பால்கொடுக்கும்படி திட்டம் செய்
கிறார்கள். அந்தோ! பாவம்! இவ்வறிவிலிகளுக்கு யாரே புத்தி
புகட்டவல்லார்! சில ஸ்திரீகள் பால்கொடுக்க அசக்தர்களாய் இருந்த
போதிலும், முற்றிலும் அசாத்தியமாய் இருந்தாலொழிய அவர்கள்
பால் கொடுத்தே தீரவேண்டும். அநேக நாள் பால்கொடுக்க தாய்க்கு
சாத்தியப்படாமற் போனபோதிலும் ஒரு மாதகால பரியந்தமாவது பால்
கொடுக்கவேண்டும். சில ஸ்திரீகள் தங்களுடைய ஸ்தனங்களை நவிக்
கையினால் இறுக்கிக் கட்டுகிற கெட்ட வழக்கத்தினால் காம்புகள் தட்
டையாயும் இரணமாயும் ஆய்விடுகின்றன. காம்புகள் தட்டையாகிச்
சிறுத்துப்போவதினால், இளஞ்சிசு பிடித்துப் பருகாதாகையால், பல
மும் சௌக்கியமுமான வேறொரு குழந்தையை உண்ணும்படி செய்ய
வேண்டும். குழந்தைக்குப் பால் கொடுக்காமல்நீண்டநேரம் இருந்து



விட்டால் பால்கட்டிக்கொண்டு வேதனை யுண்டாகி சில சமயங்களில்
ஜ்வரமும், மார்ச்சிலந்தியும் உண்டாகின்றது.

## குழந்தைக்குப் பால்புகட்டும் கிரமம்

குழந்தைக்குப் பன்னிரண்டு மணி நேரம் வரையில் பால் கொடுக்
காமலிருந்து,பிற்கு அதைப்புகட்டினால் நீண்ட நேரம்வரையில் ஸ்தனத்
தில் தங்கியிருந்த அந்தப்பாலே நஞ்சாகி வாந்தி அல்லது பேதியை
யுண்டுபண்ணும். சில ஸ்திரீகளுக்கு குழந்தைக்கு வேண்டிய பாலுக்கு
மேல் மிதமிஞ்சி சுரப்பதுமுண்டு. அப்படிப்பட்டவர்கள் எண்ணெய்
அல்லது உப்புபேதிக்கு உட்கொண்டால் குழந்தைக்குப் போதிய
அளவான பால் சுரக்கும். தாய்க்குப் போதுமான அளவு பாலிருக்கு
மானால், குழந்தைக்குப் பல் முளைக்கும் வரையில் அல்லது ஆறுமாத
காலம் வரையில், இரண்டு மணிக்கொரு முறை பால் கொடுக்க
வேண்டும். இராக்காலங்களில் இடைக்கிடை கொடுக்கவேண்டு
மென்கிற அவசியமில்லை. தாய்க்குப் பால் குறைவானால் தாதிப்
பால் கொடுக்கவேண்டியது. தாதியானவள் வயதிலும், சரீரப்பிர
கிருதியிலும் தாயாருக்கு ஒத்திருந்து, அத்தாதியும்அப்போதே பிள்ளை
பெற்றவளாயும் இருக்கவேண்டியது. ஏனெனில் முதிர்ந்தபால் குழந்
தைக்குப் பலவித பிணிக்கு வித்தாகும். ஏழை ஸ்திரீகளுக்கும், சரீரப்
பிரயாசையுள்ள ஸ்திரீகளுக்கும் போதுமான அளவு பால் சுரக்கும்.
குழந்தையை இரக்ஷிப்பதற்காகத் தாதியை வைக்கும் பக்ஷத்தில் தாதி
யானவள் தாயைப்போல் தன் சரீரத்தைக் கட்டிக்காக்கவேண்டியது.
கர்ப்பவதியின் பாலும் வியாதியுடையவளின் பாலும் குழந்தைக்குக்
கெடுதியை விளைவிக்கு மென்றறியவும்.

## பாலில்லாக் குழந்தைகளைக் காப்பாற்றும் விதம்

பெற்ற தாய்க்குப்பால் இல்லாவிட்டாலும், பால்கொடுக்கத் தாதி
கிடைக்காவிட்டாலும், அல்லது தாதியை ஏற்படுத்திக்கொள்ள சக்தி
யில்லாவிட்டாலும் அல்லது தாயும் தாதியும் நோயுற்றிருந்தாலும் குழந்
தைக்கு, வெள்ளாட்டுப்பால், பசும்பால் ஆகியவைகளிலொன்றைக்

கொடுத்து வளர்க்கவேண்டும். வெள்ளாட்டுப் பாலானால் அதில் சிறிது சர்க்கரையும் மூன்றிலொருபங்கு வெந்நீர் அல்லது சுண்ணாம்புத் தெளிவு நீர் கலந்து இரண்டுமணி நேரத்திற் கொருமுறை கொடுக்க வேண்டும். வெள்ளாட்டுப்பால் கிடைக்காவிட்டால் இளங்கன்றுடையதும், நோய் இல்லாததும், சாந்தமான குணமுடையதும், நாலு வருஷத்திற்குக் குறையாததும் பத்துவருஷத்திற்கு மேற்படாதது மான பசுவின்பால் ஒருபங்கும் இருபங்கு ஜலமும் சேர்த்து இலேசாய்க் காய்ச்சி கொஞ்சம் சர்க்கரையும் கூட்டி இரண்டு மணி நேரத்திற்கொருமுறை கொடுக்கவேண்டியது. இதனால் மாந்தம், வயிற்றுப் பொருமல் அல்லது வயிற்றுப்போக்கு முதலியவைகள் கண்டால், ஜலத்திற்குப் பதிலாக பாலுடன் சுண்ணாம்புத்தெளிவு நீர் கலந்து கொண்டால் குழந்தைக்கு ஜீரணசக்தி அதிகரிப்பதுடன் தேக ஆரோக்கியமு முண்டாகும். ஆனால் குழந்தைக்கு ஆவின் பால் கொடுப்பதானால் அது ஒரே மாட்டின் பாலாக இருக்கவேண்டும். அதைத் தினந்தோறும், சுத்த ஜலத்தில் குளிப்பாட்டி, புஷ்டியான தீனிகள் வைத்து, • தூலந்தப்பாது காலை மாலை இருவேளையும் பழக்கமான ஒரே மனிதன் பால் கறக்கவேண்டும். பாலில் காற்றுவாடை பட்டு அதில் கிருமிகள் உண்டாகாதபடிக்கு, பால் கறந்தவுடன் அதை மேல் மூடியுள்ள சுத்தமான பீங்கான் அல்லது மண்பாத்திரங்களில் வைக்கவேண்டியது. களிம்பேறக்கூடிய, ஈயம், செம்பு, பித்தளை, வெங்கலம் முதலிய உலோக பாத்திரங்களில் பாலை ஒருபோதும் வைக்கலாகாது. பிள்ளைக்குப் பால் போட்டினபிறகு கொஞ்சநேரம் தூங்க வைத்தால் வயிற்றிலுள்ள காற்றுகள் வெளிப்பட்டுவிடும். அப்படிக்கு நித்திரை போகச் செய்யாவிட்டால் வயிற்றில் அசுத்த வாயுக்கள் சேர்ந்து உபத்திரவம் செய்யும். குழந்தைகள்; குளிர், வலி, தூக்கம், கனவு முதலிய பலவற்றில் எதற்காகவாயினும் அழக்கூடும். ஆகையால், குழந்தைகள் அழும்பொழுதெல்லாம் பால் போட்டாமல் இரண்டுமணிக் கொருமுறை போட்டவேண்டும். அழுகையை நிறுத்தும்பொருட்டு ஒரு காய்ந்த ரொட்டித்துண்டைக் கையில் கொடுத்தால் அதைக் கடித்துக்கொண்டிருந்து அழுகை நின்றுபோகும். பிரத



மதில் பசும்பால் ஒரு பங்கும் இருபங்கு சுத்த ஜலமும் சேர்த்தபோதி
லும், நாட்செல்லச்செல்ல பாலை அதிகமாகச் சேர்க்கவேண்டும். மூன்று
மாதங்களுக்குப் பிறகு பசும்பாலும் சுத்தஜலமும் சம அளவாகக் கலந்து
காய்ச்சிக் கொஞ்சம் சீனிச்சர்க்கரை சேர்த்துக் கொடுத்துவரவேண்டும்.
மேற்கூறியபடி நல்ல ஆவின் பால் கிடைக்காவிட்டால், டப்பிகளில்
அடைக்கப்பட்டு ஷாப்புகளில் விற்கும் கட்டிப்பாலை (Condensed
Milk) போட்டலாம். குழந்தைக்கு நான்கு மாதங்களுக்கு மேற்பட்டு
அவசியமானால் மெல்லன்ஸ் பூட் (Mellins food) என்னும் மாவை
வெந்நீரில் கரைத்துப்போட்டலாம்.

## குழந்தைகளின் ஆகாரம்

பிரபஞ்சத்தில் பிறக்கின்ற பிள்ளைகளில் பேர்பாதி ஐந்து வய
துக்குள் இறக்கின்றதாய் கணிக்கப்பட்டிருக்கின்றது. இதற்குக்
காரணம் யாதெனில் குழந்தைகளுக்கு, சுத்தமான காற்று, நல்ல
தண்ணீர், பாகமான உணவு முதலியவைகளின் குறைவினாலும்,
காற்று, வெய்யில், மழை, பனி ஆகியவைகளுக்கேற்றபடி பாதுகாக்கப்
படாததும், போஜன அளவு வித்தியாசப்படுவதுமேயாம். குழந்தைக்கு
ஐந்து மாதமான உடனே அம்மை குத்தவேண்டியது. ஏழு மாதம்
சென்ற பிறகு குழந்தையின் சரீர சௌக்கியத்திற்கேற்க பாலைப் படிப்
படியாய் நிறுத்திவிட்டுப் பிள்ளையின் ஜீரண சக்திக்கும், பற்களிருக்
கிற ஸ்திதிக்கும், விளையாட்டின் தன்மைக்கும் ஏற்றபடி, நெல்லரிசிக்
கஞ்சி, அரோருட்கஞ்சி, கான்புளோர் கஞ்சி, ரவைக்கஞ்சி, ஜவ்வரி
சிக்கஞ்சி, புழுங்கலரிசி நொய்க்கஞ்சி, கேழ்வரகுக்கஞ்சி, முதலிய
சொற்ப ஆகாரத்தினால் போஷித்து வரவேண்டியது. அப்பொழுது
ஜீரணசக்தி படிப்படியாய் அதிகப்படும். சோற்றையாவது, மற்றெந்த
ஆகாரத்தையாவது பலவந்தமாகக் கொடுக்கலாகாது. தேங்காய், கறி
காய், கனியாப்பழம், கிழங்கு, கடலை, பயறு முதலிய அஜீரணத்தை
உண்டு பண்ணக்கூடிய வஸ்துக்களையும், இனிப்பான பண்டங்களையும்
மசாலை அல்லது காரசாரமுள்ள போஜனங்களையும் பிள்ளைகளுக்குக்
கொடுக்கலாகாது. குழந்தைகளுக்கு ஒருவருஷம் அல்லது இரண்டு
வருஷம் வரையில் பால்கொடுப்பதினால் மிகுதியான பலம் உண்டாகு

மென்பது அறிவீனம். சிசுவானது மாதாவின் உதரத்தினுள் ஒன்பது மாதகாலமிருந்து விர்த்தியடைவது போலவே, சிசு ஜனனமானதிற்குப் பின்னும் ஒன்பது மாதங்களுக்குத் தன் மாதாவின் முலைப்பாலையுண்டு வளர்ச்சியடைய வேண்டுமென்பதே கடவுளின் கட்டளை. இக்கட்டளையை மீறி அதிக நாட்களுக்குப் பால்கொடுத்து வருவதால் குழந்தை பலஹீனமடைந்து, மூளையின் சக்தி குறைந்து, புத்தி தீக்ஷிண்யம் குறைந்து, சில சமயங்களில் பைத்தியமு முண்டாவதோடுகூட பால் கொடுக்கும் தாய்க்கும் பலவித பிணிகளுண்டாகும். இதுபோலவே ஒன்பது மாதங்களுக்கு முன் குழந்தையைப் பால் மறப்பித்தால் அதற்குப் போதுமான பலமும், தேக திடமும் உண்டாகமாட்டாது. ஆனால் தாயின் தேகசக்திக்கும், குழந்தையின் தேகதிடத்திற்கும் தக்கபடி சில மாதங்கள் அதிகமாகவேனும், சில மாதங்கள் குறைவாகவேனும் பால்கொடுப்பதினால் யாதொரு தீங்கும் உண்டாகமாட்டாது. குழந்தைகளுக்கு வாந்தி, வயிற்றுவலி, இருமல், சீதபேதி முதலியவைகள் கண்டால் அஜாக்கிரதையாய் இராமல் உடனே தகுந்த சிகிச்சை செய்யவேண்டியது. மழை அல்லது வெயில் காலங்களை அநுசரித்து அந்தந்தக் காலங்களுக்கேற்ற உடுப்புகளைக் குழந்தைகளுக்குப் போடவேண்டும். உடுப்புகள் தாராளமாய் இருக்கவேண்டும். பரிசுத்தமான காற்றுள்ள விடத்தில் குழந்தையை நித்திரை செய்யவிடவேண்டும். பிரதிதினமும் குழந்தையை வெந்நீரில் ஸ்நானம்செய்து வைக்கவேண்டும். இரண்டு மூன்று வயதுடைய சில குழந்தைகள் விடியற்காலத்தில், பசி, ஆயாசம் முதலியவற்றால் திடீரென்று விழித்துக்கொண்டு அழுகிற வழக்கமுண்டு. அச்சமயத்தில் பிஸ்கோத்து, பொரிக்கஞ்சி, அரிசிநொய்க்கஞ்சி, ஆரோரூட் கஞ்சி, க்ரான்புளோர்க் கஞ்சி, மெல்லின்ஸ் பூட்( (Mellins food) முதலிய இலகுவான ஆகாரங்களில் ஒன்றைக் கொடுக்கவேண்டியது. குழந்தைக்கு இரண்டு வயதான பிறகு நன்றாய்க் குழந்தை பழைய அரிசிச் சாதத்தில் மிளகு ரசம்(Pepper water) அல்லது பருப்புரசம் சேர்த்துப் பிசைந்து தினம் காலை மாலை இருவேளையும் கொடுக்கலாம். இடையில் பிஸ்கோத்தும் (Biscuts) கொடுக்கலாம். எவ்வித முகாந்திரத்தைக்



கொண்டும் குழந்தைகளுக்குப் பெரியவர்கள் புசிக்கத்தக்கதான ஆகாரங்களை ஒருபோதும் கொடுக்கலாகாது.

## பால் வற்றுவதற்கான முறைகள்

சில ஸ்திரீகளுக்குப் பால் வற்றச் செய்யுங்காலத்தில் பால் கட்டிக்கொண்டு ஸ்தனங்கள் வீங்கி சுரம் கண்டு உபத்திரவிக்கும். அதற்கு மல்லிகைப்பூவையாவது, கோஸ்கீரையாவது, வெற்றிலையை வதக்கியாவது கட்டலாம். ஆளிவிரைமாவைக் களிக்கிண்டி (Poultice) வைத்துக்கட்டினாலும் பால் வற்றிவிடும். பனிக்கட்டி (Ice) ஒற்றிடம் கொடுக்கலாம், கற்பூர எண்ணெய், ஓடிக்கலான் (Eaude Cologne) ஆகியவைகளில் துணியை நனைத்து மார்பின்மேல் போட்டுக் கட்டி வைக்கலாம். கரியபோளத்தை அரைத்துப் பூசலாம். பெல்லடோனா பிளாஸ்திரியை (Emplastrum Belladonac) முலைக்காம்பு வெளியில் வரத்தக்கவிதமாய் துவாரம் செய்த துணியில்தடவி,ஸ்தனங்களின் மேல் போட்டுவைக்கலாம். பால் கட்டிக்கொண்டு ஸ்தனங்கள் பருத்து விம்மலடைந்து வீங்கி ஜுரம்கண்டு அதிக கஷ்டமாயிருந்தால் இரண்டு தோலா நிறையுள்ள சீமை இந்துப்பை(Magnesi Sulphate)கொஞ்சம் சுக்குக்கஷாயம், அல்லது நிலாவாரைக் கஷாயத்தில் கலந்து காலையில் கொடுத்தால் ஐந்தாறு ஆவர்த்தி பேதியாகிப் பால்வற்றிவிடும். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் தாயானவள் உணவை வெறுத்துத் தண்ணீர் குடிக்கக்கூடாது. இன்னும் ஸ்தனங்களில் கட்டிக்கொண்டிருக்கும் பாலை வற்றச்செய்யும்படி, நாய்க்குட்டி, ஆட்டுக்குட்டி முதலியவைகளைக் கொண்டாவது, வாயினாலாவது, கண்ணாடியினால் செய்து ரப்பர்குழாய் அமைக்கப்பட்டு ஷாப்புகளில் விற்கப்படுகிற, ஸ்தன சூஸ்திரத்தினாலாவது(Breast Pump) அல்லது வேறெந்தக் கருவியினாலாவது பாலை வெளிப்படுத்தலாகாது. அப்படிக்குச் செய்தால் பால் அதிகமாய்ச் சுரந்து ஸ்தனங்களில் கட்டியுண்டாகும். இப்படிப்பட்ட சமயத்தில் குழந்தை பால் குடிக்கப் பிரியப்பட்டால், முலைக்காம்பில் வேப்பெண்ணெய் அல்லது கரிய போளத்தை அரைத்துப் பூசி வைத்தால் அவற்றால் உண்டாகும் கசப்பினால் அதன்பிறகு பிள்ளை பால்குடிக்கப் பிரியப்படாது.

## பால் சுரப்பதற்கான முறைகள்.

சில ஸ்திரீகளுக்குப் பால் சுரக்காமலிருக்கும். அதனால் குழந்
தைக்கு வேண்டிய அளவு பால் கிடைக்கமாட்டாது. இப்படிப்பட்ட
ஸ்திரீகளுக்கு, கோகோ, பசும்பால், முட்டை முதலிய புஷ்டியான
ஆகாரங்களைக் கொடுக்கவேண்டியது. ஆமணக்கிலையை வதக்கி அது
கொஞ்சம் சூடாயிருக்கும்போதே ஸ்தனங்களின் மேல்வைத்துக் கட்ட
லாம். ஒரிலைத்தாமரையை ஒருசிறு எலுமிச்சம்பழம் அவ்வளவு
அரைத்துப் பசுமோரில் கரைத்து ஒரு வாரம் வரையில் கொடுக்கலாம்.
தண்ணீர் விட்டான் கிழங்கைச் சூரணம் செய்து அதனுடன் சர்க்கரை
கூட்டிச் சாப்பிடலாம். அல்லது கருஞ்சீரகம் சாப்பிட்டுவரப் பால் சுரக்
கும். இரத்த வோட்டம் நன்றாய் நடைபெறும்படி கஞ்சுகம் (ரவிக்கை)
முதலிய வஸ்திரங்களை ஸ்தனங்களில் பிகுவாய்க் கட்டாமல் தளர்த்தி
விடவேண்டியது.

## அரவம் தீண்டல். (SNAKE BITE)

மெலேரியா, விஷபேதி, வைசூரி, பிளேக் முதலிய விஷஜசிக
ரோகங்களினால் வருஷந்தோறும் அநேக லக்ஷம் ஜனங்கள் மடிவது
போதாதென்று, பிரதிவருஷமும் 20000-இந்திய ஜனங்கள் சர்ப்பக்
கடியால் சாகிறார்களென்று கவர்ன்மெண்டாரால் கணிக்கப்படிருக்கின்
றது. பாம்பு விஷம் நர்வ்ஸ் என்னும் நரம்புகளின் மூலமாய் சிரசின்
மூளைக்குச்சென்று மூளையையும் ரத்தத்தையும் கெடுத்துவிடுகின்றது.
க்ஷீணமும், பிரமையும், மயக்கமும், இசிவும் காணுவதற்குக்காரணம்
மூளையின் விகற்பமே, இரத்தாசயத்தில் இரத்தம் அதிகம் சேர்ந்து
கஷ்ட சுவாசம் பிறக்கிறது. பாம்புவிஷத்தால் பரலோகம் சென்றவர்
களின் பிரேதத்தை அறுத்துப் பார்த்தால்இரத்தம் கறுத்து நீராயிருக்
கும். பாம்புக்கடியில் காணும் லக்ஷணங்கள், விஷத்தின் குணம்,
அதின் உக்கிரம், தேகப்பிரகிருதி முதலியவைகளுக்குத் தக்கபடி வித்
தியாசப்படும். சிலபாம்பின் விஷம் சாந்தமானது, சில பாம்பின் விஷம்
மிகவும் கொடியது பிராணிகளைக் கடித்துக்கடித்து விஷம் சிலவழிந்து
போகும். அப்படியாக விஷம் செலவழிந்தபிறகு அந்தப் பாம்பு



பிராணிகளைக் கடிக்குமானால் யாதொருகெடுதியும்நேரிடாது. நல்லபாம்
பின் விஷம் மிகவும் கொடியது. நல்லபாம்புகடித்தால் நரம்புகளின்மேல்
வியாபித்து வெகு சீக்கிரத்தில்கொல்லும். வேறு சில விஷங்கள் சுவா
ஸப்பையைப் புண்ணாக்கும். சில விஷங்களுக்கு நரம்புகளைக் கெடுக்கும்
சக்தி கிடையாது, ஒரு நல்ல பாம்பு மற்றொரு பாம்பைக்கடித்தால்,
விஷம் ஏறாது. நல்லபாம்பு விஷத்தைச் சாப்பிட்டால் யாதொருகெடுதி
யும் உண்டாவதில்லை. பாம்புவிஷங்கள் மாந்திரியத்தினாலும், சில மூலி
கைகளினாலும் சௌக்கியப்படுவதாகக் கேள்விப்பட்டிருக்கிறோம். இவ்
வகையான மாந்திரியத்தையும் மருந்து முறைகளையும் தெரிந்துகொண்
டிருக்கும் புண்ணியபுருஷர்கள் யாராகிலும் பரோபகாரத்தைக் கருதி
அவைகளை வெளியிடுவார்களானால் மேகம் பூமிக்குச் செய்யும் உதவி
போலாகும்.

சிகிச்சை.—பாம்புகடித்தவுடனே விஷம்மேலுக்கேறாமல் கயிற்றி
னால் இறுகக்கட்டி, கடிவாயைக் கத்தியால் கீறி, அதில். வாயாவது
ஆட்டுக்கொம்பாவது வைத்து உறிஞ்சி விஷத்தை வெளிப்படுத்திவிட
வேண்டியது. வெந்நீர் ஒற்றிடம் கொடுத்தால் அதிக ரத்தம் வடி
யும், விஷம் இரத்தத்தோடு கலந்துவிட்டால் உஷ்ணகாரிகளான அவுஷ
தங்களைக் கொடுக்கவேண்டியது. நவக்ஷார ஜெயநீர் (Liquor.
ammonia)முப்பது துளியைக் கொஞ்சம் ஜலத்தில் கலந்துகொடுக்க
லாம். சாராயமும் கொடுக்கலாம். அமெரிக்கா தேசத்தில் மதிமயங்
கும்படி சாராயம் கொடுப்பது வழக்கம். சிலர் விஷம் தீண்டியவுடனே,
கடுகை யரைத்தாவது, கசப்புக் கோவைக்கிழங்கின் தூளில் 2.பைசா
இடை தண்ணீரில் கலந்தாவது,எருக்கன் வேர்ப்பட்டையை உரைத்து
கந்த மெடுத்தாவது, அல்லது இதின் தூளையாவது, பத்திராக்ஷிக் கிழங்
கின் தூளை மோரிலாவது நீரிலாவது கலந்து கொடுத்து வாந்தியாகும்
படி செய்கிறார்கள். நவக்ஷாரஜெய நீரை (Liquor ammonia) கடி
வாயில் பூசலாம். உச்சியைக் கீறி தும்பையிலை ரசத்தை அதில்
விட்டு தேய்க்கலாம். ஷை ரசத்தை உள்ளுக்கும் கொடுக்கலாம். எருக்
கன் பாலைக் கடிவாயில் தடவி, ஷை பாலில் 10 - துளி மோரி
லாவது தண்ணீரிலாவது கலந்து கொடுக்கலாம். ஆடு தீண்

டாப்பாளையின் வேர் அல்லது இலையைத் தண்ணீரில் உரைத்துக் கொடுக்கலாம். எருக்கிலையை வதக்கி ரசமெடுத்து நசியமிடலாம். தும்பை, நொச்சி, குப்பைமேனி, வேளை ஆகிய இவைகளின் ரசத்தை மூக்கில் பிழிவதுமுண்டு. சதாப்புச் செடியின் முற்றின வேரை ஞாயிற்றுக்கிழமை, கொண்டுவந்து அதைப் பாம்பின் சிரசுக்கு நேரில் காட்டினால், வேரின் வாசனை பட்டவுடன் பாம்பு படமெடுக்காது சோர்ந்துபோகு மென்றும் அப்போது பாம்பை இலகுவாய்ப் பிடித்துக்கொள்ளலா மென்றும், கண்டிருக்கிறது.

பாம்புக்கடிக்கேற்ற திவ்விய அவுஷதமொன்றைக் கண்டுபிடிக்க வேண்டுமென்பதாக நம் காருண்ணிய கவர்ன்மெண்டாரவர்களும் பல்லாண்டுகளாகத் தக்க முயற்சி செய்து வருகிறார்கள். மிகவும் பிரக்யாதி பெற்ற, டாக்டர் ரோகேர்ஸ் அவர்கள் I. M. S. சொல்லுகிறதாவது பாம்பு கடித்த உடனே விஷம் மேலுக்கு ஏறாதபடி, கடிவாயின் மேல் கயிற்றினால் கட்டிவிட்டு, கடிவாயைக் கத்தியால் கீறி, பொடாஷியம் பெர்மாங்கனேட் (Potassium Permanganate) என்னும் மருந்தைப் பத்துநிமிஷம் வரையில் தேய்த்ததினால் விஷபாதை விலகி, அநேகம் பேர் பிழைத்துக்கொண்டார்கள் என்பதேயாம். சிலோன், மலாய் நாடு முதலிய விடங்களில் உள்ள தேயிலைத்தோட்டங்களின் கண்டிருக்டர் அனைவரும் மேற்கண்ட மருந்தையும் ஒரு சிறு கத்தியையும் எப்பொழுதும் கைவசமாக வைத்துக்கொண்டிருந்து சமயம் நேர்ந்தபோது தோட்டத்திலுள்ள கூலி ஜனங்களுக்கு உபயோகித்து வருகிறார்களாம். இது அநேகம் தடவைகளில் சித்தியாய் விட்டதென்று சொல்லுகிறார்கள். பிரதி இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் இம்மருந்துடன் சிறு கத்தியும் (Lancet) வைத்து விற்கிறார்கள். இம்மருந்தின் விலையும் மிகவும் சரசம்தான் ஒரு அவுன்ஸ் மருந்து இரண்டு அணாவுக்குக் கிடைக்கும். இது சற்றேறக்குறைய 50-பேர்களுக்கு உபயோகிக்கலாம். ஆகையால் ஒவ்வொரு ஸ்திரீ புருஷர்களும் இம்மருந்தைக் கையோடு வைத்துக்கொண்டிருப்பது மிகவும் அவசியமாகும்.

வைசூரி, பிளேக் முதலியவைகளுக்கு அம்மை வைப்பது போலவே பாம்பு கடித்தால் விஷம் உண்டாகாதிருக்கும்படி, பாம்பு விஷத்தை



எடுத்து இனாக்குலேஷன் (Inoculation) செய்யும் முறையைக் கவர்ன்மெண்டார் கண்டு பிடித்திருக்கிறார்கள். பாம்பின் விஷமெடுப்ப தற்காகவே, பம்பாயில் "பர்ரெல்ல பொடெரியில்" பாம்பு வளர்க்கப் படுகிறது. பாம்பின் விஷமெடுக்கும் விதமாவது, விஷமெடுப்பதற் காக வளர்க்கப்படும் பாம்பை வெளியில் விட்டவுடன் ஒரு கோலால் பாம்பின் தலையை அழுத்திப் பிடித்துக் கொள்ளுவார்கள். ரப்பர் மூடியிட்ட ஒயின் கிளாஸ்(Wine glass) ஒன்றைப் பாம்பின் வாய்க்கு அருகில் பிடிக்க, பாம்பு ரப்பரைக் கடித்துக்கொண்டு சுமார் 2 கிராம் விஷத்தைக் கக்குகிறது. அவ்விஷத்தை ஹிமயமலைக்கருகிலுள்ள காஸெவிலா பொரெட்ரிக்கு அனுப்பப்படுகிறது. அங்கே அந்தச் சர்ப்ப விஷத்தை முயலுக்கு வாக்ஸினேஷன் (Vaccination) செய்ய, அம்முயல் மரணமாய் விடுகிறது. அந்த முயலின் மூளைரத்தத்தை மற்றொரு முயலுக்கும் வாக்ஸினேஷன் செய்ய அதுவும் இறந்துவிடுகிறது. அதன் ரத்தத்தையும் முன் மாதிரியே ஐந்தாவது முயல்வரை வாக்ஸினேஷன் செய்ய, கடைசியான ஐந்தாவது முயல் இறப்பதில்லை. அந்த முயலுக்குப் புதிதாய் ஒரு நல்லபாம்பின் விஷத்தை எடுத்து வாக்ஸினேஷன் செய்ய அந்த முயல் இறப்பதில்லை. அதற்கு சர்ப்பவிஷத்தைத் தாங்கும் சக்தி உண்டாகி விடுகிறது. அந்த முயலின் இரத்தமே மனிதர்களுக்கு இனாக்குலேஷன் (Inoculotion) செய்ய உபயோகப்படுகிறது. ஆனால் ஒருவிஷயம்மட்டும் இவ்விடத்தில் யோஜிக்கவேண்டியதாய் இருக்கிறது. 315,000,000, ஜனத்தொகையுள்ள இவ்விந்தியநாடு முழுதும் மேற் கண்ட விதமாய் இனாக்குலேஷன் செய்வதானால், எத்தனை கோடிபாம்பு களின் விஷம் எடுக்கவேண்டும். அவ்விஷங்களை எத்தனைகோடி முயல்களுக்கு வாக்ஸினேஷன் செய்யவேண்டியதாய் இருக்கும். இவ்விஷயங்களை தீர்க்கமாய் யோஜிக்கும்போது இது பகீரதப்பிரயத் தனமாகவே இருக்கிறது. ஆனால் கவர்ன்மெண்டார்கவலையெடுப்பார் களானால் முடியாதென்று சொல்வதற்குமில்லை.

## விஷத்துக்கு மெய்யான மந்திரம்.

நமது ஹைதராபாத், கனம் நிஜாம் அவர்களுடைய பெயரைச்

சொன்ன மாத்திரத்தில் விஷம் தீரும்படியாக அவர்கள் ஒருவகை சித்தி யடைந்திருந்தார்கள். அந்த விபரங்கண்டு மந்திரமாகச் சொல்லவேண்டிய அவர்கள் பெயருடன் பல விளம்பரங்கள் வெளிப்படுத்தியிருந்தார்கள். அவற்றின் உதவியைக்கண்டு அநேகர் ஆச்சரியப்படும்படி பலவிடங்களில் விஷங்களைத் தீர்த்துக் கடிதங்கள் எழுதினார்கள். எந்த வகை மந்திரத்தால் தீராத கொடிய விஷங்களும் தீர்ந்திருக்கின்றன. இத்தகைய மந்திரம் உலகத்தில் பரவி வரும்போது திடுமென நிஜாமவர்கள் காலமாய்விட்டார்கள். அதனால், இனி என் செய்வதென்று நாம் யோசித்திருந்தோம். அப்படியிருந்த கவலை தீரும்படி இப்போது அவர்கள் பேருக்குப்பதிலாக அவர்களின் குமாரரவர்களின் பெயரைச் சொன்னால் முன்போலவே விஷம் நீங்குமென்று பத்திரிகையில் வெளியாகி யிருக்கிறது. ஆதலால் இனி அந்தப் பெயரைச்சொல்லி எல்லோரும் விஷத்தைப் போக்கிக்கொள்ளலாம். விஷத்தை இறக்க வேண்டிய காலத்தில் அவர்கள் பெயரைச்சொல்லி மந்திரம் உச்சரிக்கும் விபரமாவது

"ஏ விஷமே! உன்க்கு மீர் உஸ்மான் அலிகான் அவர்களுடைய சத்தியம் ஏற்ப ்டிருக்கி ுது, இறங்கிப்போ, நான் இதைப் பற்றி ஒருமாதத்துக்குள் அவர்களுக்குத் தெரிவிப்பேன்."

இந்த மந்திரத்தை விஷந்தீண்டினவனுக்குக் கேட்கும்படி உரத்துச் சொல்லிவிடவேண்டியது. உடனே விஷம் நீங்கிவிடும். அதன் மேல் மேற்கண்ட மந்திரத்தில் குறித்தபடி இவ்வாறு விஷம் நீங்கிய விபரத்தைப்பற்றி ஒரு மாதத்துக்குள் நிஜாம் அவர்களுக்கு, "தங்கள் பெயரால் இன்ன பெயருடையவர்க்கு விஷம் தீர்ந்தது" என்று கடிதமெழுதிவிடவேண்டும். அவ்வாறு எழுதும் கடிதத்தின் மேல் கவரின் ஒரு மூலையில் பாம்பு விஷம் என்று அவர்களுக்கு அடையாளம் தெரியும்படி எழுதி வைக்கவேண்டும். கடிதமெழுதுவதாகக் குறிப்பிட்ட நாளைக்குள் எழுதாவிட்டால் மறுபடியும் விஷம் வந்துவிடும். ஆதலால் தவறாமல் கடிதமெழுதவேண்டும். மந்திரம் செல்லும்போது கடிதம் எழுதுவதற்குச் சொல்லும் நாளை இஷ்டம்போல் மூன்றுவருஷத்துக்கு அதிகப்படாமல் ஏற்படுத்திக்கொள்ளலாம். இந்த மந்திரத்தை விஷம்



தீண்டினவன் தனக்குத் தானேயும் சொல்லிக்கொள்ளலாம். பிரக்ஞை தப்பினவனுக்கும் ஆடுமாடு முதலியவற்றிற்கும் காதில் சொன்னால் போதும், விஷம் தீர்ந்ததைப்பற்றி நிஜாம் அவர்களுக்கு எழுதும் கடிதத்தின் மேற்கவரில் "ஹைதராபாத்து, டக்கான்" என்று விலாசமெழுதினால் அவர்களுக்குக் கிடைத்துவிடும். அது கிடைத்தவுடன் அவ்விஷயத்தை ஒப்புக்கொண்டதாக அவர்கள் பதில் எழுதுவார்கள்.

## ஸர்ப்பபாதை விலக்கலும் சத்துருபக்ஷி விர்த்தியும் *

பன்றி கீறி கெருடன் மயில் முதலிய பக்ஷிகளாலும் பாம்பு அழிவதாகச் சொல்லப்படுகிறது. ஏராளமான பக்ஷிகளிருந்தும் பாம்புகள் அழியாதிருப்பதேன். பாம்பின் ஸங்கியை எடுக்கப்படுமானால் முன்னுக்கிப்போது பதின்மடங்கு அதிகமாகவேயிருக்கும். வருஷந்தோறும் சற்றேறக்குறைய ஒரு லக்ஷம் பாம்புகள் கொல்லப்படுவதாகக் கவர்ன்மெண்டார் கூறுகிறார்கள். சர்ப்பங்களைக் கொல்பவர்களுக்கு வருஷந்தோறும் 2500-ரூபாய் வரையில் வெகுமதியும் கொடுத்துவருகிறார்கள். மரணரிப்போர்ட்டின்படி பார்த்தாலோ சர்ப்ப விஷத்தினால் சாகிறவர்களின் தொகை ஆண்டாண்டுதோறும் அதிகரித்தே வருகின்றது. இன்னும் கணக்கிலடங்காத, ஆடு, மாடு முதலிய எத்தனையோ லக்ஷம் கால்நடைகளும் சர்ப்பவிஷத்தினால் சாகிறதென்பதை ஒருவரும் மறுக்கமுடியாது.

பன்றி கீரி கெருடன் மயில் முதலியவைகள் சர்ப்பத்தை நேரில் சந்திக்கும்போது கொல்லுகிறதே தவிர, உண்மையில் கெருடன், மயில்முதலியவைகள் சர்ப்பங்களை எதிர்த்து சண்டை செய்து கொல்வது மிகவும் குறைவென்றே சொல்லலாம். ஆகவே பாம்பின் பாதை நீக்க கவர்ன்மெண்டார் போதிய ஏற்பாடு செய்வது அத்தியாவசியகம். அவர்கள் செய்யும் ஏற்பாடு பிரத்தியக்ஷருஜு விளங்குவதாயும் இருக்க வேண்டும். பாம்புகளை நிர்மூலமாக்குவது தேசத்துக்கு எவ்வளவோ பெருத்த லாபமாகும்.

---

* Extract From The Vaidya Bodhini Journal Vol. II. Page 127

தென்னாபிரிக்கா உஷ்ண மைதானங்களில் * லிகித பக்ஷி என்னும் ஓர்வகைப்பக்ஷியைக் காணலாம். அவை பாம்பு முதலிய ஊர்வன ஜந்துக்களை மிகவும் பிரியமாயருந்து கின்றன. லிகிதபக்ஷி பாம்பைக் காண்பதே தாமதம். ஒரு சிறகை பாம்புக்கு நேரே நீட்டுவதும் மற்றோர் சிறகாலடித்து பாம்பை மயங்க வைத்துக் கொன்று பக்ஷித்து விடுகிறது. லிகித பக்ஷியிடம் ஆப்பிரிக்கா



லிகித பக்ஷி

வாசிகளுக்கு வெகு பிரியம். அவர்கள் லிகித பக்ஷியைப் பிடித்துப் பழக்கி, எலிகளாலும் பாம்புகளாலும் ஏற்படும் பாதையைப் போக்கிக் கொள்ளுகிறார்கள். பழகிய லிகிதபக்ஷிகள் கோழிகள் சண்டையிடும் போது விலக்கிவிடுகிறது. லிசிதபக்ஷி பாம்பை யடிக்கும் மாதிரி மேல் குறித்த படத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

ஆப்பிரிக்கர்கள் நிலங்களைச் சுற்றிப்பார்க்கப் போகும்போது லிகித பக்ஷி அவர்களுடன் தொடர்ந்துபோய் புலங்களிலுள்ள எலி பாம்பு முதலியவைகளை நிர்மூலமாக்குகிறதாம். விவசாயத்தையே ஜீவனோபாய

* இப்பக்ஷியின் இறகை ஆதியில் ஆங்கிலேயர் எழுதுவதற்கு உபயோகித்ததால் (லிகிதம்—எழுதுதல்) இதற்கு லிகிதபக்ஷி என்ற பேர் உண்டாயிற்று.



மாகக்கொண்ட நம்மிந்திய நாட்டில், நஞ்சை நிலங்களில் வெடிப்பு அதி
கம். அவ்வெடிப்புகளில் சர்ப்பமும் ஜாஸ்தியாகவே இருக்கிறது. எத்
தனையோ விவசாயிகளும், ஆடுமாடு முதலிய கால்நடைகளும் கமர்
வெடிப்பிலுள்ள சர்ப்பங்களால் கடியுண்டு, உயிர் துறக்கும்படி நேரிடு
கிறது. ஆகையால் லிகிதபக்ஷி விர்த்திசெய்வது ஜனோபகாரமாவ
தோடுங்கூட, விவசாயிகளுக்கு எலிகளால் ஏற்படும் தான்ய அழிவு
நீங்கும். எலிகளொழிந்தால் பிளேக் என்னும் கொடிய கொள்ளை
நோயும் தலைகாட்டா தொழியும். சர்ப்ப பாதையும் நீங்கும். இவ்வளவு
உபகாரமான பக்ஷி நமது தேசத்தில் விர்த்தியாகவேண்டியது நிரம்ப
அவசியம். சானிடேரி கமிஷனர் தொற்று வியாதிகளை யொழிக்க
எவ்வளவோ பிரயாசப்படுகிறார்? அதுபோலவே பாம்பும் எலியும்
தொலைய லிகிதபக்ஷி விருத்திசெய்யும்படி கருதுவாரானால் தேசத்
துக் கெவ்வளவோ க்ஷேமமுண்டாகும். தென்னாபிரிகாவிலிருந்து
சில ஜதை தருவித்து வெட்டிரினேரி காலேஜில் விருத்திசெய்ய
வேண்டும். விர்த்தியானபிறகு ஒவ்வொரு ஜில்லாவுக்குந் தேவை
யானவர்களுக்குச் சப்ளை செய்யலாம். தேசாபிமானிகள் கவர்ன்மெண்
டாரிடம் கேட்கவேண்டிய விஷயங்களில் இதுவுமொன்றாம். தஞ்சா
வூர் ஜில்லா நன்செய்களில் எலிகளால் நெல்லழிவாவதை லிகிதபக்ஷி
களால் தடுக்கலாம். விவசாயத்தில் பிரியமுள்ள தஞ்சை விவசாயிகள்
கிருஷி இலாகா (Agriculturel Department) மூலமாக லிகித
பக்ஷியை தருவித்துப் பயனடைவது சிலாக்கியமானது.

தென்னாபிரிகா லிகிதபக்ஷி போலவே அமெரிக்காவில் பரியாசப்
பக்ஷி சாதாரணமானது. கிராமபோன்(Gramaphone) என்னும் வாத்
தியமானது யாருடைய குரலையும் இலகுவாய் கிரகித்து அவரவர்களு
டைய பாட்டுகளையும் பாடிக்காண்பிப்பது போலவே காடுகளில் எத்
தனை வகை பக்ஷிகளிருக்கிறதோ அத்தனை வகை சப்தத்தையும் பரி
யாச பக்ஷி சப்தித்து மற்ற பக்ஷிகளைத் திக்பிரமையடையச் செய்யும்.
இஃதோர் காட்டுசங்கீத வித்வான்என்று கூறலாம். பழகியபக்ஷிமனுஷ்
யர்களைபோலவே, தாளம், லயம், சுருதிமுதலியவை பிசகின்றிப் பாடு
மாம். பழகிய பக்ஷிஇருக்குங் கிரகத்தில் எலிபாதை யிராதாம். பரியாச

பக்ஷியும் பாம்பை யழிப்பதில் வெகு தீவரங்காட்டுமாம். முட்டையை அடைகாக்கும்போது மனிதர், பாம்பு, கீரி, நாய் எதிர்படில் அச்ச மின்றிப் பரியாச பக்ஷி எதிர்க்குமாம். இந்தப் பக்ஷியும் தேசத்தில் விர்த்தியாகவேண்டிய தவசியமே. போனகிரூப் பாடுகிற வல்லமையும் பாம்பு எலி முதலியவைகளைத் துலைக்கும் சக்தியும் பரியாச பக்ஷிக்குமுண்டு. கிளி, பூனை, புறா முதலிய ஜெந்துக்களை வளர்ப்பதிலும் பரியாசபக்ஷி பலனுண்டு. காதுக்கின்பமான ராகமும் பாடும்.

பறவை முதலிய ஜந்துக்களுக்கடங்காத மலைப்பாம்பிருக்கிறதே, அவைகளுக்குப் பரிகாரமில்லையாவென்று வினவக்கூடும். கடவுள் ஒவ்வொன்றுக்கும் சத்துரு ஏற்படுத்தாதிருந்தால் கடவுளை ஸ்துதிப்பதார்!? நாஸ்திகமன்றோ குடிகொண்டுவிடும். ஆகவே மலைப்பாம்புக்குச் சத்துரு வேற்படுத்தப்பட்டிருக்கிறதென்றே கூறலாம். கொச்சி சமஸ்தானம் வடக்காஞ்சேரி பக்கம் மச்சாடுகாடு என்று விஸ்தாரமான மலைப் பிரதேசம் இருக்கிறது. அங்கு அணாலி விருக்ஷமிருக்கிறது. அந்த மரத்தை யணுகிய பாம்புகள் இறந்து கிடப்பதை இன்று மிகுதியாய்க் காணலாம். அந்த மரத்துப்பட்டை விஷகடிக்கு அவிழ்தமாகக் கொடுக்கப் பயன் படுகிறது. கவர்ன்மெண்டார் இம்மரத்தின் விரைகளைக் கிருஷி இலாகா மூல்யமாக வரவழைத்து காடுகளில் விருத்திசெய்தால் காடுகளில் அரவங்களின் தொல்லை அகலும்.

## தேள்கோட்டல். (SCORPION STING)

தேள்கொட்டுதல் நம்மிந்திய நாட்டில் சர்வ சதாரணமாய் இருக்கிறது. அதிலும் மாரிகாலத்தைவிட உஷ்ணதிகமான கோடைகாலத்தில் மிகவும் அதிகமென்றே சொல்லவேண்டும். தேள் நட்டுவாக்காலி முதலியவைகள் கொட்டினால் விருவிருப்பாய் விஷமேறி எரி கட்டும். கொட்டுவாய் வியர்க்கும். தேகப் பிரகிருதிக்குத் தக்கபடி பல்விதவேதனையுமுண்டாகும். தேள்கொட்டலுக்குச்சிகிச்சை தெரியாதவர்கள் ஒருவருமில்லை. சர்ப்ப விஷங்களுக்கு மந்திரிப்பது போலவே தேள் கடிக்கும் மந்திரப் பிரயோகம் செய்கிறார்கள். தேள் கொட்டினவுடனே விஷம் மேலுக்கேறாதபடி கொட்டுவாய்க்கு மேல் கயிற்றால்



கட்டிவிட்டு, நவக்ஷார ஜெயநீர்(Liquor Ammonia)வெடியுப்புத் திராவகம், (Nitric acid) காடிக்காரம் (Nitrate of Silver) இவைகளில் ஒன்றைக் கொட்டின விடத்தில் தடவினால் விஷம் முறிந்துபோகும் ஆனால் விஷம் மேலுக்கேறி எரிகட்டிவிட்டால் எதுவும் பிரயோஜனப் படாது. வெங்காயத்தை அரைமணி நேரம் கொட்டினவிடத்தில் தேய்க்கலாம். சுண்ணாம்பும் உப்பும் சமமாய்க் குழைத்துப் பூசி அனல் காட்டலாம். சுண்ணாம்பு ஒட்டடை இவைகளை அரைத்துப் பூசலாம். பெருங்காரம் பூசலாம், நாயுருவிப் பூண்டின் சமூலத்தைக் கசக்கித் தேய்க்கலாம். புளியங்கொட்டையின் மேல்தோலை நீக்கி பருப்புத் தெரிகிற வரையில் தேய்த்து கொட்டுவாயில் வைத்தால் ஒட்டிக்கொள்ளும். விஷம் இறங்கினபிறகு கொட்டையின் நிறம்மாறி கீழே விழுந்துவிடுமென்று பைஷஜ கல்பத்தில் கண்டிருக்கிறது. வெள்ளைக் குண்டுமணி வேரை வெந்நீர் விட்டரைத்து பிழிந்து வடிகட்டி பஞ்சியில் ஊட்டிக் கொண்டு இடதுபக்கம் கொட்டினால் வலது மூக்கிலும், வலது பக்கம் கொட்டினால் இடது மூக்கிலும் நசியம் பிழிய விஷமிறங்கும். நண்டு வாய்க்காலி கொட்டினால் எட்டிவேரின் பட்டையை அரைத்துச் சிறிய எலுமிச்சம்பழம் பிரமாணம் கொஞ்சம் வெந்நீரில் கலந்து கொடுத்தும் கொட்டின இடத்தில் கத்தரிக்காயைச் சுட்டு வைத்துக் கட்டினால் தீருமென்றும் சொல்லுகிறார்கள். எட்டிக்கொட்டையை மூலைப்பாலிலுரைத்துக் கொஞ்சம் உள்ளுக்குக் கொடுத்துக்கடிவாயிலும் பூசலாம். காஞ்சிரைவேர், அவுரிவேர், நாய்க்கொட்டான்வேர், பொன்முசுட்டைவேர் முதலியவைகளைச் சமனிறையாய் இடித்து வஸ்திரகாயம்செய்து மூன்றுவிரல்கொண்ட அளவு இளவெந்நீரில் கலந்துகொடுக்க தேள் நட்டுவக்காலி முதலிய விஷங்கள் தீரும். பொன்முசுட்டை, முப்புரண்டி, நாகதாளி, ஆடுதீண்டாபாளை வேலிப் பருத்தி, நிலவேம்பு, இவைகளின்வேர்களை ஓர் நிறையாய் இடித்துச் சூரணம்செய்து மூன்று விரல் பிரமாணம் வெந்நீரில் கலந்து கொடுக்க வ்ஷ விஷங்கள் தீரும். மனிதருடைய நகத்தைச் சீவித் துணியிற் சுருட்டி தீயிற் கொளுத்தி ஆற்றி அந்தப் புகையை நாசியிற் பிடிக்க வ்ஷ விஷம் எரிமுதலியன இறங்கும். புகையிலை, மயிலிறகு, வெள்ளெருக்கம் வேர் இம்மூன்றை

யும முன்போலவே கந்தையிற் சுருட்டிப் புகைபிடிக்க வி ‘விஷமிறங் கும்.தேள் நட்டுவாக்காலி இவைகளில் ஏதேனும் கொட்டின உடனே, குளோரோபாரம் (Chloroform) ‘ஈதர் (Aether) என்னும் மருந்துக ளில் ஏதேனும் ஒன்றைத் தடவினால் விஷம் வெகு சீக்கிரமாகத் தணிந்துவிடும். இது பலமுறை அனுபவமானது.

## வண்டுகேடி. (STINGS OF INSECTS)

பொரிவண்டு, நீர்வண்டு, புள்ளிவண்டு, தேனீ, குளவி முதலிய பதினெட்டுவகை விஷவண்டுகள் கடித்தால், தக்ஷணமே சிலருக்கு மாணம் சம்பவிப்பதும் உண்டு. சிலருக்கு வெகு உபத்திரவமுண் டாகும். இன்னும் சிலருக்குச் சிறிது நாட்களுக்குப் பிறகு தேகத் தில் வட்டமாய்த் தடித்துப் படரும். தினவெடுக்கும். நீர்வடியும். ஆடுதீண்டாப்பாளை வேரையாவதுப் பிராய் வேரையாவது, சூரணம் செய்து சாப்பிட்டு வரத் தீரும். வெள்ளறுகு, சிறியாநங்கை, வெள் ளைக்காக்காட்டான் இவைகளின் சமூலத்தைச் சூரணம் செய்து சாப்பிட்டுவர சர்வ வண்டுகடி விஷங்களும் தீரும். வண்டு கடித்த வுடனே, கடுப்பு, வலி, வீக்கம் முதலிய வேதனைகள் காணுமா னால் நவக்ஷார ஜெயநீர் (Liqour Ammonia) தடவலாம். இத னால் அதிக ஆயாசம் பிறந்தால் கொஞ்சம் பிராந்தி (Brandy) கொடுக்கலாம். நவக்ஷார மது (Spritus Ammonia Fetidus) அறுபது துளி கொஞ்சம் ஜலத்தில் கொடுக்கலாம். வேண்டுமானால் குறைந்த அளவில் அபினி கொடுக்கலாம். கொட்டினவிடத்தில் கொடுக்கு ஒடிந்துயிருந்தால் கொறட்டால் எடுத்து விடவும். ராமநாத புரம் ஜில்லா ஸ்ரீ வல்லிப்புத்தூர் தாலூக்கா ராசபாளையம் பக்கம்,பாலாறு உடங்காடு மலையில் பேய்த்தேய்த்த மாமென்று ஓர் விருக்ஷமிருக்கிறது. அந்த மரத்தடியில் ஏராளமாய் பக்ஷிகள், குளவி முதலிய வண்டுகள் மடிந்து கிடக்கிறது. இதன் பட்டை, இலை, விரை ஆகிய இவைக ளில் ஒன்றை மேற்கண்ட சில்விஷங்களுக்கு ஜலத்தில் உரைத்துப் போட்டால் தக்ஷணமே சௌக்கியமாகிறது. மேற்கண்ட விருக்ஷத்தின் விரைகளைக் கவர்ன்மெண்டார் கிருஷி இலாகா மூல்யமாக வரவழைத்து



காடுகளில் விருத்தி செய்தால் எவ்வளவோ சௌகர்யமுண்டாகும்.

**குறிப்பு.**—விஷங்களில் இரத்தமண்டலி, சீதமண்டலி, திமிர் மண்டலி, வீங்குமண்டலி, பூரான், பெருஞ் செய்யான், செவ்வரணை, பெரிய அரணை, சிலந்திப்பூச்சி, செவ்வட்டை, புழுதி உண்ணி, காட்டுண்ணி, சருகுண்ணி, காணுக்கடி, எலிக்கடி, நாய், நரி, சிறுபுலி, வேங்கை, குரங்கு, குதிரை, பெருச்சாளி, மனிதர், முதலை முதலிய இன்னும் எந்தனையோ விஷங்களினால் மனிதர்களுக்கு ஹிம்சை யும் பிராண பயமும் உண்டாகிறது. அத்தகைய விஷங்களையும், அவ்விஷங்களுக்கேற்ற அவுஷத முறைகளையும் இவ்விடத்தில் கூறு வதானால் இச்சிறிய புத்தகம் இடந்தராதென்றெண்ணி மிகவும் முக் கியமான பாம்பு, தேள், நண்டுவாக்கல்லி, வண்டு முதலிய விஷங்களை மட்டு வரையலானோம். கடவுளின் கருணையும். நமது ஆப்தமித்திரர் களின் ஆதரணையும் இருக்குமானால், விஷகடிகளையும் அதனை விலக்கும் மார்க்கங்களையும் விரிவாய் எழுதி ஓர் சிறு புத்தக ரூபமாகவே அச் சிட்டு வெளியிட எண்ணியிருக்கிறோம்.

## சுகாதாரமார்க்கங்கள். (HYGIENE—ஹைஜீன்)

தேக சௌக்கியம் என்பது தேகசம்ரக்ஷணைக்காக நமதுதேகத்தில் இருக்கும், இருதயம், இரைப்பை, நுரையீரல், குண்டிக்காய், மூளை முதலிய ஒவ்வொரு உறுப்புகளும் தத்தம் வேலையைக் கிரமமாய் நடத் திவருவதே தேகசௌக்கியம் அது விகற்பமடைவதே அசௌக்கியம. தேகசௌக்கியத்தை விகற்பப்படுத்துகிற காரணங்கள் அனந்தம். ஆகையால் நாம் மிகவும் முக்கியமான சில விதிகளை அனுசரித்து நடப் போமானால் இவ்வுலக வாழ்க்கையில் இருக்குமளவும், சரீர சௌக்கி யத்தையும், பூரண ஆயுளையும் பெற்று சுகஜீவியாய் வாழ்ந்திருக்கலாம்.

“ விருக்ஷங்களில் அநேகம் அநேக நூறுவருஷ காலம் ஜீவன்பெற் றிருக்கின்றன. இத்தேசத்திலும், பிரதேசங்களிலும் ஐந்நூறு, அறு நூறு, ஆயிரம் இரண்டாயிரம் வருஷங்களாய் சாகாமலிருக்கிற அநேக மரங்களிருக்கின்றன. இந்நாட்டில் ஆல விருக்ஷம் மூவாயிர வருஷ மிருப்பதாக அறிவாளிகள் கருதுகிறார்கள். மேலை நாடுகளில் கர்வாலி,

சீமையிலந்தை யிவைகள் ஆயிரம், ஆயிரத்தைந்நூறு வருஷங்களாய் நிலைத்திருப்பனவாய்ச் சொல்லப்படுகின்றன.”

பக்ஷிகளும் மிருகங்களு மவ்விதமே அநேக வருஷகாலம் ஜீவித்திருக்கின்றன. நமது நாட்டில் அஞ்சுக மென்னப்பட்ட கிளிப்பிள்ளைகள் ஐந்நூறு வருஷகாலம் சுகமா யிருப்பதாய்த் தெரியவருகிறது. இதனால்தான் அதற்குச் சுகம், அஞ்சுகம் என்னும் பெயர் வந்தன போலும். அம்ஸமென்கிற அன்னப் பறவைகளும் முந்நூறு வருஷமிருக்கிறது. கழுகுகள் ஐந்நூறு வருஷகால மிருக்கின்றன. காகங்களும் பல வருஷங்கள் ஜீவித்திருப்பதாய்க் கேள்விப்படுகிறோம்.

மிருகங்களில் சிங்கம் நூறு வருஷத்துக் கதிகமாய் ஜீவிக்கின்றது. ஒட்டகங்கள் நூற்றுக்கு மேற்பட்ட வருஷம் ஜீவனோடிருக்கின்றன. இலங்கைப் பிரதேசத்திலுள்ள யானைகள் ஐந்நூறு வருஷங்களிருக்கின்றன. அமெரிக்காவில் அன்னிபால் என்கிற யானை எழுநூறு வருஷமிருப்பதாய் சாஸ்திரிகள் கூறுகிறார்கள். ஜலத்தில் வசிக்கும் ஆமை இருநூற்றிருபது வருஷ மிருந்ததாய் ஒரு ஆங்கிலப்புலவர் சொல்லுகிறார்.

இப்படி மனுஷனுக்குக் கீழ்ப்பட்ட தாவரங்களும், மிருகங்களும் அநேக நூறுவருஷ காலம் ஜீவனோடிருக்க எண்ணரிய பிறவிகளிலியாதினும் மேலான இந்த மானிடப்பிறவிமட்டும் ஒரு நூறுவருஷ காலம் ஜீவனோடிருப்பதும் துர்லபமாய் முடிந்து, காயாயிருக்கும்போதே யுதிர்ந்து போகக் காரணமென்ன? உலகத்திலே நூறு வயதுக்கு வந்தெட்டின புண்ணிய புருஷர் எத்தனைபேருண்டு? மனுஷர்களில் அரைவாசிப் பேர் பத்து வயதுக்குள் இறந்து போவதாகவே கவர்ன்மெண்டார் கணித்திருக்கிறார்கள்.

“இதற்கு முகாந்தரமென்ன? தங்கள் சுகத்தைத் தக்கபடி பேணாததும், பலவித துராசாரங்களினாலே தங்களைக் கெடுத்துக்கொள்வதுமேயாம். அறியாமையும், அவாவும், சோம்பலும் மனுஷனைக் கொல்லுகிறதென்று பெரியோர் கூறுகிறார்கள். தேகமும், மனமும் சுத்தமாயிருந்து அவைகளுக்குரிய விதிவிலக்குகளைக் கிரமமாய்க் கையாடிவந்தால் அதுவே மானிட ஜீவன் நிலைத்திருக்க மருந்தாம்.” காய



கற்பந்தேடி நெஞ்சம் புண்ணாவோ ரெல்லாம், கையாடவேண்டிய காயகற்பமிதுதான்.’

## ஆகாயம். (AIR—ஏர்)

சுத்தமான காற்றைச் சுவாசிக்கவேண்டும்: “காற்று ஜீவனுக்காதாரமானது. ஜீவன் தோன்றினபோது அதோடு தோன்றி, அது மாயும்போது அதோடுமாய்வதும் காற்றுதான். இந்தக் காற்று அல்லது பிராணாதாரவாயு சிறந்த பண்டிதர்கள் கணித்திருக்கிறபடி அறுபது லட்சம் சிறு ரந்திரங்களுள்ள நுரையீரல் வழியாய் மனிதனுடைய இரத்தத்துக்குள் பிராணவாயுவைப் பாய்ச்சுகிறது, அப்படிப் பாய்ச்சப்படும் பிராண வாயு தேகத்திலுள்ள அசுத்தங்களோடு கலந்து துர்வாயுவாக வெளிப்படும். அந்த வாயு நாம் வசிக்கும் வீடுகளிலும், இருட்டு அறைகளிலும், கழிவு பதார்த்தங்கள் சேருமிடங்களிலும், உட்பள்ளங்களிலும் தங்கியிருக்கும். அந்தத் துர்வாயுவைமீண்டும் உட்கொள்ளக்கூடாது. மனுஷன் உட்கொள்ளும்படியான பிராணவாயுவிலும், அவன் வெளிவிடுவதான துர்வாயு அதிக கனமுள்ளது. ஆனதாலது இப்படிப்பட்ட இடங்களில் தங்கிவிடுகிறது. அதை நீக்கும்படி குப்பைக்கூளங்களை வீட்டில் சேர்த்துவைக்கத் தகாது. நாம் வசிக்கிற ஒவ்வொரு அறையிலும் சூரியவெளிச்சம் பிரவேசிக்கவேண்டும். மனுஷன் வெளிவிடும் துர்வாயு செடிமரங்களுக்கு ஆகாரமாயிருப்பதால், கூடுமானால் இத்துர்வாயுவைப் போக்க வீடுகளில் செடிகளை வைத்து வளர்ப்பது உத்தமம்.” “நாம் வசிக்கும் வீட்டில் நம்மைச் சூழத் தரையில் அசுத்த வாயு இருக்கிறதென்றும் நினைத்துக்கொள்ளுங்கள். அதனால்தரையைச் சுத்தமாய்ப் பெருக்கிச் சூரிய வெளிச்சத்தால் தலைமேலிருக்கும் சுத்த ஆகாயம் வீடெங்கும் பரவச்செய்யுங்கள்.”

“ஒவ்வொருவருக்கும் ஒரு நாளொன்றுக்கு இரண்டாயிரம் மாக்கால் சுத்த ஆகாயம் வேண்டியது. அவரவர் சாப்பிடும் சாப்பாட்டையும் ஜலத்தையும்விட மும்மடங்கு சுத்த ஆகாயம் வேண்டும். ஆகையால் ஒவ்வொருவரும் சுத்த ஆகாயம் விசேஷமாய் நிறைந்திருக்கக்கூடிய தோட்டங்களுக்கும், சமுத்திர தீரங்களுக்கும், வயல் வெளிக

ளுக்கும் போயுலாவி வரவேண்டும். எப்போதும் ஜன நெருக்கமான இடத்திலேயே இருப்பது சுகத்துக்குக் கேடு."

"வெளி ஆகாயங்களில் உலாவலோடு, தேகாப்பியாசமு மிருக்க வேண்டும். தேகாப்பியாசத்தின்போது பலமாய் மூச்சு வாங்குகிறபடியால் மனுஷனுக்கு அதிக சுகமுண்டு. சுவாசிக்கும்போது பலமாய்ச் சுவாசிக்க வேண்டும். சுவாசிக்குந்தோறும் இரத்தம் சுத்தமாகிறது. இரத்தம் ஜீவனுக்காதாரம்." "வெளிகளில் பிரயாணஞ் செய்வதும், படுத்துறங்குவதும் சுகத்துக்கேதுவானது. வனசஞ்சாரிகளுக்குத் தலைநோய், அஜீரணம், வாதநோய், காண்கிறதில்லை யென்பது ஆயுள்வேதியரின் கொள்கை. இதற்குதாரணமாக லண்டன் நகரத்திற்குத் தென்புறத்தில் ஒரு காடு உண்டு. அங்குள்ள ஒரு குன்றின்மீது ஒரு பாடசாலை ஏற்பட்டிருக்கின்றது. அதற்கு வெளியிடத்துப் பாடசாலை (The Open-Air School) என்று பெயர். இந்தப் பாடசாலையின் முன்புறத்தில் ஒரு சிறிய தோட்டமும், பின்புறத்தில் மிகப் பெரிய தோட்டமும் உண்டு. நாட்டில் உள்ள பிள்ளைகளுக்குக் காட்டில் உள்ள பாடசாலை என்ன பயனைத்தரும் என்று பெரும்பாலோர் எண்ண இடமுண்டு. அதன் உபயோகத்தைக் கேட்டால் அதிக ஆச்சரியப்படுவீர்கள் என்பதில் சற்றும் ஐயமில்லை.

இப்பாடசாலை நோயாளிகளாய் மெலிந்துள்ள பிள்ளைகளுக்கென்றே ஏற்பட்டதாம். இதில் வாசிக்கும் பிள்ளைகள், க்ஷயம், காசம், இரைப்பு முதலிய நோய்களால் பீடிக்கப்படுகிறவர்களாம், மனோபலம் அதிகமில்லாம லிருக்கும் பிள்ளைகளும் இதில் சேர இடமுண்டாம். இப்படிப்பட்ட பிள்ளைகள் இந்தப் பாடசாலையில் எப்படிச் சேருகின்றார்கள்—லண்டன் நகரத்தில் அநேக எலிமெண்டரிப் பாடசாலைகள் உண்டல்லவா? அப்பாடசாலைகளில் உள்ள நோயாளிகளான பிள்ளைகளை அப்பாடசாலையின் தலைமை உபாத்தியாயர்கள் தேர்ந்து அனுப்புகிறார்கள். வைத்தியர்களும் இத்தகைய பிள்ளைகளைத் தேர்ந்து அனுப்புவதுண்டாம். அதனால் பட்டணத்தின் பல இடங்களிலிருந்தும் பிள்ளைகள் அங்கு வருவார்கள் என்று ஏற்படுகிறது. நமது நாட்டிலும் இரைப்பு முதலிய நோய்களை யுடையோர் சிலர் சீதோஷ்ண ஸ்திதிக்



குத் தக்கபடி வெவ்வேறு இடங்களுக்குச் செல்வதனால் அந்நோய்க
ளால் அதிக உபத்திரவப்படாமல் இருக்கிறார்கள் அல்லவா? இவ்
வகை உதவியை அப்பாடசாலை, நோயாளிகளான அப்பிள்ளைகளுக்
குச் செய்கின்றது.

இப்பாடசாலையை ஏப்பிரல் மாதம் முதல் அக்டோபர் மாதம்வரை
யில் அங்கு ஏற்படுத்துகின்றனர். தினந்தோறும் காலை $9\frac{1}{2}$-மணிமுதல்
$12\frac{1}{2}$-மணி வரையிலும், மாலை $3\frac{1}{2}$-மணிமுதல் $5\frac{1}{2}$-மணிவரையி
லும் பாடசாலை உண்டு. இப்போது அப்பாடசாலையில் 900-பிள்ளைகள்
வாசிக்கிறார்களாம். அவர்கள் அனைவரும் அதிக ஏழைப்பிள்ளைகள்.
அவர்கள் முதலில் பாடசாலைக்கு வரும்போது அதிகமும் இளைத்து
நோயினால்மெலிந்து, உண்ணவுணவுக்கும் உடுக்க உடைக்கும் வழியின்றி
வந்து சேர்வார்களாம்.

இந்தப் பாடசாலையின் தலைமை உபாத்தியாயராகிய மிஸ்டர்
கிரீன் என்பவர் சிறந்த பாலபோத காசிரியர். அவர் தம் பிள்ளைகளைக்
கொண்டு ஒருவகைச் செடியை ஓர் இடத்தில் அடர்த்தியாக விதைக்கச்
சொன்னார். அவர்கள் அப்படியே செய்தார்கள். செடி அடர்த்தியாய்
முளைத்தது. ஆனால் செழிப்பாய் வளரவில்லை. பிறகு அவர் அந்தச்
செடிகளைப் பிடுங்கி வெவ்வேறு இடங்களில் நடச்செய்தார். சில நாட்
களில் அச்செடிகளில் ஒவ்வொன்றும் செழித்து வளர்ந்ததாம். அவர்
அதைப் பிள்ளைகளுக்குக் காட்டி அரிய விஷயம் ஒன்று போதித்தார்.
பிள்ளைகளே! இந்தச் செடிகள் அடர்த்தியாய் இருந்தபோது நன்
றாய் வளரவில்லை. தூரத்திற் சென்ற பிறகு செழித்து வளர்ந்தன.
அதுபோலவே மனிதரும் ஒரே இடத்தில் கும்பல் கூடிக்கொண்டிருந்
தால் விருத்தியாகமாட்டார்கள். புதுப்புது இடங்களுக்குப் போய் புதுப்
புது விஷயங்களைக் கண்டு உழைத்தால் செழித்து வாழக்கூடும் என்றார்.
ஆரிய நண்பர்காள்! இதனால் அப்பிள்ளைகளுக்கு எத்தகைய உணர்ச்சி
உண்டாகும் என்று ஊகித்துப் பாருங்கள்.

பிள்ளைகள் படிப்பு முடிந்து தம் வீட்டிற்குப் போகும்போது
நோயற்றவர்களாய் மிகவும் சௌக்கியத்துடன் போவார்கள். வரும்
போது அவர்களைக் கண்டவர்கள், போகும்போது கண்டால் அடை

யாளமே தெரியாதாம். மனோ பலமும் தேக பலமும் அடைந்திருப்பார்கள். வேளை தப்பாத உணவும் சுத்த ஆகாயமும் மனோற்சாகமும் அவர்களை அப்படி மாற்றி வருகின்றன. ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு களிப்பை யுண்டாக்கக்கூடிய பலவித விளையாட்டுகளும் கற்பிப்பதால் அவர்கட்கு அளவிறந்த சந்தோஷமுண்டாகின்றது. பட்டினத்திற்குப் புறம்பாயுள்ள இப்பாடசாலையானது எண்ணரிய பிள்ளைகட்கு, இவ்விதமாகத் தேகசுகத்தையும், மனோ உற்சாகத்தையும், உண்டுபண்ணுவதே காட்டுக்கும், வீட்டுக்குமுள்ள வித்தியாசத்தை நன்கு விளக்கிக்காட்டுகிறது.

## நித்திரை. (SLEEP—ஸிலீப்)

"படுக்கையறை எப்போதும் வீட்டிற்குத் தென்பாகத்திலிருக்க வேண்டும். படுக்கையறையில் சூரிய வெளிச்சம் புகவேண்டும். படுக்கையறையில் விளக்கை எரியவிடலாகாது. அது பிராணவாயுவைப் பக்ஷித்துப் போடுவதோடு துர் வாயுவையும் பிறப்பிக்கும். வியாதியுள்ளோர் படுக்கை யறையிலும் விளக்கிருக்கக்கூடாது. விளக்கெரிதல் சுகமான தூக்கத்தையும் கெடுக்கும்." "இரவில் வீட்டின் ஜன்னல்களைச் சாத்துதல் பிசகு. ஜனநெருக்கமான பட்டணங்களில் விசேஷமாய் இரவில் வீசும் காற்றுதான் சுகத்துக்கேதுவானது. படுக்கையறை எப்போதும் சூடாகவே யிருக்கவேண்டும். குளிர்ந்த காற்று சிலபோது அசுத்த காற்றாயிருக்கும். ஆகையால் படுக்கையறை அதிக குளிர்ச்சியும் அதிக சூடுமில்லாதிருக்கவேண்டும். காற்று அறைமுழுவது முலாவவேண்டும்."

"தூக்கத்துக்கு இரவையும், வேலைக்குப் பகலையும் கடவுள் கொடுத்திருக்கிறபடியால் இரவைப் பகலாக்கி வேலைசெய்யக்கூடாது. அர்த்த சாமமட்டும் விழித்திருக்கலாகாது. இரவில் கண்விழித்துப் 'பகலில் உறங்குவது வியாதியை உண்டாக்கும். அதிக தூக்கம் உதவாது. தூக்கம் தரித்திரத்தை யுண்டாக்கும். அப்படியே அற்ப தூக்கமும் தேகத்துக்கு தீமையை விளைக்கும். சோம்பலும் தூக்கமும் தரித்திரத்துக்குச் சகோதரிகள் என்று பெரியோர் கூறுவர்." ஒருவன் ஆறுமணி நேரம் தூங்கினால் போதாது. குறைந்தது ஏழு அல்லது



எட்டுமணிநேரம் நித்திரை செய்யவேண்டும். எட்டு ஒன்பது பத்து மணிநேரம் நித்திரை செய்தாலும் முன்னேரமே படுக்கைக்குப்போய் வைகறையி லெழுந்திருக்க வேண்டும். போதுமான காலம் ஒவ்வொரு வரும் உறங்கவேண்டுமென்று கடவுள் விதித்திருக்க வாரத்தில் நான்கு தினத்திற்குக் குறையாது கூத்துப் பார்த்துக் காலத்தைக் கடத்தும் நன்மக்கட்கு யாரே அறிவு கொளுத்த வல்லார்.

"பசியோடு நித்திரை செய்யலாகாது. மிருகங்கள் உண்டு திருப்தியடைந்தபின் நித்திரை செய்கின்றன. குழந்தைகள் வயிறாறப் பால் குடித்துத் தாயின் மடியிலுறங்குகின்றன. அதே போலச் சாப்பிட்டுப் பசி யாறியபின் படுக்கைக்குப் போகவேண்டும். படுத்தவுடன் முன்னேரத்தில் அயர்ந்து தூங்கி விடியற்காலத்தில் தூக்க அளவைக் குறைக்கவேண்டும். மூளை வேலையாயிருப்பதால் கனவுகள் வருகிறது. கனவில்லாத நித்திரையே நல்லது. மூளைக்கு அதிக வேலை கொடுப்பவர்கள் அதிக நேரம் நித்திரை செய்யவேண்டும். நித்திரைக்குப் போகுமுன் மனிதன் இருக்கும் நிறை எழுந்தபின் இராது. காரணம் வியர்வையாகவும், நிசுவாசமாகவும் தேகத்திலிருந்து கழிவுகள் உண்டாவதாம். ஆகையால் நித்திரைக்குபயோகித்த ஆடைகளை வெயிலிலுலர்த்தி மறுபடியு முபயோகிக்கவேண்டும். வீடுகளை வருஷத்துக் கிருமுறையாவது வெள்ளையடித்துச் சுத்தம்பண்ண வேண்டும். நித்திரை செய்யும்போது அவரவர்க்கும் தனித்தனி படுக்கையறை யிருக்கவேண்டும். சில தேசங்களில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு அறையுண்டு. பிள்ளைகளையும் தாய்மார் அருகில் கிடத்தி நித்திரை செய்தல் கூடாது. புருஷன் மனைவி ஒரே படுக்கையிலிருக்கத் தகாது. ஒருவருக்கொருவர் உசுவாசிக்கும் துர்வாயு மனுஷனின் ஆயுளைக் குறைக்கும். வயோதிகரும் பிள்ளைகளும் ஒரேயிடத்தில் நித்திரை செய்தால், பிள்ளைகளின் பலம் வயோதிபருக்குப்போய், வயோதிபரின் பலக்ஷயம் பிள்ளைகளுக்கு வருகிறதென்று வைத்திய நிபுணர்கள் கூறுகிறார்கள். படுக்கைக்கு ஈரத்தரைகூடவே கூடாதென்பதும், வழியற்றவர்கள் வைக்கோலாவது பரப்பி உறங்குவதுயுக்தியாமென்றும் படுக்கையும் தலையணையும் சுத்தமாயிருக்கவேண்டுமென்பதையும் பற்றி

நாம் இங்கு அதிகமாய் எழுதவேண்டியதில்லை.

## ஜலம். (WATER-வாட்டர்)

"ஜலம் மனுஷஜீவன் நிலைபெற ஆகாயத்திற்கு இரண்டாவதானது உலகத்தில் நாலில் மூன்று பாகத்தை ஜலம் மூடிக்கொண்டிருக்கிறது. மானிடசரீரம் நூற்றுக்குத் தொண்ணூறு பாகம் ஜலமாகவேயிருக்கிறதென்பது சாஸ்திரிகளின் துணிபு. சமுத்திரமானது கப்பல்களைத் தாங்கிச் செல்வதுபோல தேகத்திலுள்ள ஜலம ஜடமாகிய நாவாயைத் தாங்கிச் செல்கிறது. விசும்பினின்று விழும் சுத்த மழைஜலமானது பூமியைச் செழிப்பித்து எங்கும் பசுமைதோன்ற தாவரங்களை வளர்க்கின்றது. புஷ்பங்களுக்கு அழகான வருணங்களை யுண்டாக்கிச் சுகந்தவாசனை யூட்டுகிறது. அதே போல மனுஷனுட்கொள்ளும் ஜலமும் ஆகாரத்தை ஜீரணப்படுத்தி ஜலமயமாக மாற்றிப் போஷிப்பின் நுண்ணிய சத்தைத் தேகத்தின் சர்வபாகத்துக்கும் கொண்டுபோய் வளர்க்கிறது. தேக வஜீகரத்தை யுண்டாக்குகிறது.

"இந்த ஜலத்தை மூன்று விதமாக மனிதனடைகிறான். ஒரு விதம் மழையாகவும் பனியாகவும் ஆகாயத்தினின்றடைதல், இன்னொரு விதம் பூமியினின்று ஊற்றுக்கண்களின் வழியாய்ச் சுரந்து அடைதல் ; மற்றொருவிதம் வானத்தினின்றிழிந்த ஜலமும், பூமியினின்று சுரந்த ஜலமும் பூமியின் மட்டத்துக்கு வந்த பிறகு, ஆறு, குளம், கேணி இவ்வகை ஜலாசயங்களிலிருந்தடைதல்.

"இம்மூன்று வகையான நீரில் முதலிரண்டும் பரிசுத்தமாம். பிந்தினது அசுத்த ஜலமாம். அசுத்த ஜலத்தை நீக்கிப் பரிசுத்த ஜலத்தைப் பானம் பண்ணவேண்டியது ஒவ்வொருவருடைய கடமை. அசுத்த ஜலத்தில் சுண்ணும்பு முதலிய கெட்ட பதார்த்தங்களும், கிருமிகளுமிருப்பதால் அது சுகத்திற்கு மிகவும் பிரதிகூலமானது. ஆறுகளில் பிரவாகித்துவரும் ஜலம் மேகத்தால் சுத்தப்படுத்தப்பட்ட சுத்த ஜலமேயாயினும் அது பூமியில் விழுந்தபின் பல அழுக்குகளையும், அசுத்தங்களையும் அடித்துக்கொண்டு வருகிறபடியால் அதிலும் அசுத்தமிருக்கிறது. அப்படி ஊற்றுக்களிலும் ஊறும் ஜலம் மற்ற அழுக்குகள் கலவாததாயிருந்



தால் மட்டும் சுத்த ஜலமாகும். அசைவற்ற ஜலாசயங்களிலுள்ள நீர் பொதுவாகவே அசுத்தமானது.

மனிதர்களுக்குத் தீராத் துயரத்தை யுண்டுபண்ணுவதான க்ஷயம், காசம், குஷ்டம் போன்ற கொடிய ரோகங்களை உண்டுபண்ணக் கூடியதும், விஷபேதி, மலைஜுரம், ஜன்னிபாத ஜுரம் முதலிய விஷசிகரோகங்களை உண்டுபண்ணக் கூடியதுமான எத்தனையோ வகைக் கிருமிகள் குளம், குட்டைகளில் இருக்கக்கூடும். அதெப்படியெனில் மேற்கண்ட நோயுள்ளவர்களின், வஸ்திரங்கள், படுக்கை, பாத்திரங்கள் ஆகிய இவைகளில் அவர்களுடைய, எச்சில் மலமூத்திர அழுக்குள் தெரிந்து அவை அசுத்தமாகின்றன. அவற்றைத் தண்ணீரில் சுத்திசெய்யும்போது, அவைகளிலுள்ள நமது சிறிய சத்துருக்களாகிய கிருமிகள் (283-வது பக்கத்திலுள்ள படத்தைப் பார்க்கவும்) தண்ணீரில் சேருகின்றன. இன்னும் நோயாளியின் வீட்டிலும் பழகும் பந்துக்கள், வேலைக்காரர்கள் முதலானவர்கள் அவனுடைய படுக்கையையும் வஸ்திரத்தையும் தொட்டிருத்தல் கூடும். அவர்கள், நதி, குளம், குட்டை, கிணறு முதலியவூற்றிற்குப் போகும்போது அந்த ஜலங்களில் அவர்கள் மூலமாய்க் கிருமிகள்வந்து சேரக்கூடும். அவ்விதம் அசுத்தமான ஜலத்தை உட்கொள்ளுகிறவர்களுக்கு அந்நோய்கள் தொற்றிக்கொள்ளும். இவ்வித நோயாளியின் மலம், மூத்திரம், வாந்தி முதலியன தரையில் சிந்தி பூமிக்குள் செல்லக்கூடும். அந்தப் பூமியில் மழை பெய்தாலும், வேறுவிதமாய் ஜலம் சொரிந்தாலும், அந்தப் பூமியின் கீழுள்ள ஊற்றுநீர் கெட்டு, அதன் பக்கத்திலுள்ள கிணறுகளையும் குட்டைகளையுங் கெடுக்கக்கூடும். அந்த ஜலத்தைக் குடிப்பவர்களுக்கு அந்தந்த நோயுண்டாகுமென்பது நிச்சயம் ஆகையால் எவ்வகையான ஜலமா யிருப்பினும் அவற்றைக் காய்ச்சி அசுத்தங்களை வடிகட்டின பிறகே அருந்தவேண்டுமென்பதை ஒருவரும் ஒருபோதும் மறக்கலாகாது.

"முற்காலத்திலே இத்தேசத்தார் தாங்கள் அதிக காலம் ஜீவனோடிருக்கும் நோக்கமாய் நீர் நிலைகளிலிருந்து எந்த நீரையு மருந்தாமல் மலைகளின் மேலும், குன்றுகளின்மேலும் பாத்திரங்களை வைத்துப்

பனிநீரையும், மழை நீரையும் அசுத்தம் சேராமல் பிடித்துப் பருகிவந்தார்கள். இப்படிப் பருகப்படும் ஜலமானது தேகத்திற் சென்று இரத்தத்தோடு கலந்து, இரத்திலுள்ள உவர் பதார்த்தத்தைக் கலைத்துப் பலபாகத்தும் செலுத்திச் சகல உறுப்புக்கும் சத்துவம் கொடுக்கிறதாயிருக்கிறது.

எப்போதும் காய்ச்சின ஜலமே சாப்பிடவேண்டும். அதிக குளிர்ச்சியாகவாவது, அதிக சூடாகவாவது சாப்பிடலாகாது. சாப்பாட்டுக் கிடையிடையே ஜலமருந்தலாகாது. இரத்தத்தின் சூட்டுக்கு அதிகமாய் வெந்நீர் பானம் செய்யற்க. தாகத்தைத் தணிக்கத் தண்ணீரையன்றி வேறு ஜலபதார்த்தம் அவசியமில்லை. ஆனாலும் தற்கால நவீன நாகரீகத்தைக் கைப்பற்றி யிருக்கும் பெரும்பாலார், காலையில் காப்பியும், மாலையில் தேயிலைத் தண்ணீர், கோகோ (Cocoa) முதலிய பானங்களைப் பருகி வருகிறார்கள். ஆனால் நீராகாரத்துக்கு எதுவும் நிகராக மாட்டாது. பழயதையும் நீராகாரத்தையும், விட்டுவிட விதியில்லாதவர்களாகிய அநேகம் ஏழை ஜனங்களுக்கு அதனுடைய பிரயோஜனம் நன்றாய்த் தெரியும். அவர்கள், காப்பி, டீ, கோகோ முதலிய பானங்களைப் பருகுபவர்களைக் காட்டிலும் தாருட்டிய முள்ளவர்களாய், சௌக்கிய ஸ்திதியிலிருப்பதுவே போதிய சாக்ஷியாகும். லாகிரி தரும் எதையும் சாப்பிடக்கூடாது. லாகிரி பான மொன்றும் தாகத்தைத் தணிக்காது. லாகிரி வஸ்துக்குத் தேகத்தைப் போஷிக்கும் சத்து கிடையாது.

## ஸ்நானம். (BATHING—பேதிங்)

தினந்தோறும் ஸ்நானம் செய்ய மறக்கலாகாது. சுகாதார வசதிக்குச் சிரேஷ்டமாக எண்ணப்படும் முறைகளில் ஸ்நானமே மகா அவசியமானதாகக் கருதப்படுகிறது. ஆயுள் வேதியரின் முறைப்படி பிராதக் காலத்தில் குளிர்ந்த ஜல ஸ்நானமும், மத்தியானத்தில் சூரிய உஷ்ண ஸ்நானமும், அஸ்தமனத்தில் அதிக குளிர்ச்சியும் சூடுமில்லாதபடி தேகத்தை வைத்திருப்பதும் உத்தம முறையாக எண்ணப்படுகிறது. ஸ்நானம் செய்வதினால் இரத்தம் பரவி நரம்புகளுக்கு வலுவேற்படுகிறது. சீதளமிகுந்த மேலை நாடுகளாகிய அயல் நாடுகளிலெல்



லாம் ஸ்நான அறைகளை யுண்டாக்கிக்கொண்டு அவர்கள் ஸ்நானம் செய்வார்களானால், உஷ்ணமிகுந்த இந்நாட்டில் ஸ்நானம் செய்யத் தடையென்ன? இத்தேசத்தில் தினந்தோறும் ஸ்நானம் செய்துவருகிற சில பிரஜைகள், தேஜஸும், புத்தி சாதுரியமு முள்ளவர்களாயிருப்பதே ஸ்நானத்தின் அவசியத்தை விளக்குகிறதல்லவா? ஆகையால் ஸ்நானம் ஒவ்வொருவருக்கும் அவசியம். அதிலும் (50-வது பக்கம் பார்க்கவும்) ஸ்நானம் என்றால் முறைமைக்கு ஸ்நான கட்டத்திற்குப் போய் ஜலத்தில் விழுந்தெழுந்து வருதலன்று. தேகத்தை நன்றாய்த் தேய்த்து ஸ்நானம் செய்யவேண்டியது. இருதய ரோகிகளும், மலபந்தமுடையவர்களும், சர்மரோகிகளும், மெலிந்த தேகிகளும், கண்டமாலை சம்பந்தமான ரோகிகளும், குழந்தைகளும், வயது சென்றவர்களும் குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யலாகாது. அதிக வியர்வையுள்ளவர்களும், அதிக மனோமுயற்சியால் தேக ஆரோக்கியம் விகற்பப்பட்டு இருக்கிறவர்களும், குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்தால் சௌக்கியமுண்டாகும். குளிர்ந்த ஜலத்தில் 15–நிமிஷங்களுக்குமேல் இருக்கலாகாது. ஸ்நானம் செய்தவுடன், ஈரமில்லாத ஒரு மிருதுவான துணியால் ஈரமில்லாமல் தேகத்தைத் துடைத்துக்கொண்டு, மெதுவாய் உலாத்தவேண்டும்.

## ஆகாரம். (FOOD——பூட்)

நமது தேகத்திலிருந்து ஒவ்வொரு நிமிஷமும், மலமூத்திரங்களும், வியர்வைபோன்ற அப்பிரயோஜன பதார்த்தங்களும் வெளிப்பட்டுக் கொண்டிருப்பதால், அப்படி வெளிப்பட்ட பதார்த்தங்களுக்குப் பதிலாய் புதிய பாதார்த்தங்கள் வந்து சேர்ந்து தேகத்தைப் போஷிக்கவேண்டியது அவசியம். மேலும் நாம் ஓடியாடித் திரிவதற்கு அனுகுணமான தேக உஷ்ணத்தையும் நாம் உண்ணும் உணவினால் அடைகிறோம். ஆகையால் நாம் உட்கொள்ளும் அன்னபானாதிகளினால், தேகத்தினின்று கழிந்துபோன பதார்த்தங்களுக்குப் பதிலாய் புதிய பதார்த்தங்கள் வந்து சேருதல், சரீரத்தில் அனல் உண்டாகுதல் என இருவகைப்படும். மனிதன் சாப்பிடவேண்டிய போஜனத்தின்

அளவானது அவனவன் செய்யும், தேகமுயற்சி, மனோமுயற்சிகளுக்குத் தக்கதாயும், அவன் சாப்பிடும் போஜனத்தின் தன்மைக்குத் தக்கதாயும் இருக்கவேண்டும். பெருந்திண்டியால் அசுத்தவாயுக்களுண்டாகின்றன. ஜீரணக் கருவிகள் பலனற்றுப்போகின்றன. பல வியாதிகள் உண்டாகின்றன. எப்பொழுதும் அறை வயிறு சாதமும், கால் வயிறு ஜலமும் உட்கொண்டு எஞ்சிய கால்வயிற்றை வாயு சஞ்சரிக்கும்படியாய் வெறுமையாய் வைத்திருக்க வேண்டியதே கிரமம். அளவிற்கதிகமான போஜனத்தினால் அநேக நோய்கள் உண்டாவது போலவே, நாம் உண்ணும் உணவில் சதையை வளர்க்கும் சத்துள்ள பதார்த்தம் குறைவாயிருந்தால்தேகபலமும், மனோபலமும், குறைந்து, மனோதத்துவங்கள் பலஹீனப்பட்டு கடினமான வேலைகளைச்செய்ய சக்தியற்றுப்போகும்.

தினம் மூன்றுவேளை போஜனம் காலக்கிரமமாய் செய்யவேண்டியதே கிரமம். போஜனம் செய்யும்போது இஷ்டமான பதார்த்தங்களோடு உண்ணவேண்டும். இதற்கு இடையில் யாதொன்றையும் புசிக்கலாகாது. நாம் உண்ணும் உணவானது ஜீரணமடைய சற்றேறக்குறைய 3-மணி நேரம் செல்லும். அதன்பிறகு 2-மணி நேரமாகிலும் இரைப்பை இளைப்பாறவேண்டியது. ஆகையால் ஒவ்வொருவரும் போஜனம் செய்து 5-6-மணிநேரம் கிரமித்தபிறகே மறுபடியும் போஜனம் செய்யவேண்டும். சுகுமார தேகிகளுக்கு இரண்டுவேளை போஜனம் போதுமானது. எப்போதும் இராக்காலங்களிலும், வைசூரி, மலைஜுரம், விஷபேதி முதலிய விஷூசிகரோகங்கள் வியாபித்திருக்கும் போதும், இலகுவான உணவே உண்ணவேண்டு மென்பதை ஒவ்வொருவரும் மறக்கலாகாது. சாப்பிடும்போது ஆகாரத்தை செவ்வையாய் மென்று அது உமிழ் நீரோடு கலந்தபின் விழுங்கவேண்டும். போஜனம் செய்யும்போது அவசரமாயாவது, துக்கித்துக் கொண்டாவது அல்லது ஏதேனும் ஒன்றைக் குறித்து ஆலோசனை செய்துகொண்டாவது இராமல் ஒருவரோடொருவர் சந்தோஷமாய்ப் பேசிக்கொண்டு சாப்பிட வேண்டும். போஜனம் செய்தவுடன் கடினமான தேக முயசியாவது மனோமுயற்சியாவது செய்யலாகாது.



நாம் சாப்பிடும் போஜனத்தில் சதையை வளர்க்கக்கூடிய சத்துள்ள பதார்த்தம் குறைவாயிருந்தால் தேகசக்தி குறைந்துபோம். கடலை, மொச்சை, துவரை முதலிய தானியங்களில் தேகபோஷணைக்குறிய சத்துக்களிருக்கின்றன. மாம்ஸ உணவைக்காட்டிலும் மறக்கறி உணவே மேலானது. ஊனை உண்பதனால் தேகத்திற்கு அனேக வியாதிகள் உண்டாகின்றனவென்று பிரபல வைத்திய சாஸ்திரிகளும், தேக தத்துவ சாஸ்திரிகளும், கூறுவதை யறிவதுடன், நாமும் தினந்தோறும் அனுபவத்திலும் அதன் கெடுதியைப் பார்க்கின்றோம். மாமிசம், மச்சம், பறவைகள் முதலியவற்றில் அநேகவிதமான கண்ணுக்குப் புலப்படாத சிறு கிருமிகள் நிறைந்திருப்பதினால் அவைகளை உட்கொள்வதில் அருவருக்கத்தக்க, குட்டநோய், நீரிழிவு, இரத்தக்கட்டி, ஜுரம், விஷபேதி முதலிய பல கொடிய நோய்கள் உண்டாகின்றன. ஊனைக் கொள்வார் இலராயின் ஊனை விற்பாரு மிலராவர்.

“ தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவாரில்.” (திருக்குறள்)

காய்கனிகள் உண்பதனால் நமது வாழ்நாள்வளர்கின்றன வென்பதற்கு நமது முன்னோராகிய ஆன்றோர்களே சான்றா யிருக்கின்றனர். இங்கிலாந்தில், ஸ்ரீமான் தாமஸ்பார் என்பவர் 63-வருஷம் வரையில் ஊனைஉண்டு பிறகு காய்கனிகளையே உண்டுவந்தார். அதனால் அவர் 152-வருடம் உயிருடன் வாழ்ந்தார். ஸ்ரீமான், டைமெண்ட் என்பவர் காய் கனிகளையே சென்ற 40-வருடகாலமாய்ப் புசித்து வருகிறார். அவருக்கிப்பொழுது 114-வயதாயும் தினந்தோறும் ஆறு மைல் தூரம் நடக்கிறார்; குதிரை சவாரி செய்கிறார்; மல்யுத்தம் செய்கிறார்; மற்றும் நமது நாட்டில் “ கனியேனும் வறிய செங்காயேனு முதிர்சருகு கந்தமூலங்களேனுங் கனல்வாதை வந்தெய்தி னள்ளிப்புசித்திடும் ” சாதுக்களும், கூழ், கீரை, காய், கனிகளையே புசிக்கும் சிறிய கிராமவாசிகளும் நெடுநாள் ஜீவித்திருப்பதை நாம் காண்கிறோம்.

“ கொல்லாமை மேற்கொண் டொழுகுவான் வாழ்நாண்மேற்
செல்லா துயிருண்ணுங் கூற்று ” (திருக்குறள்)

லண்டன் நகரத்து கந்தமூல சாகபோஷணச் சங்கத்தின் காரிய

தரிசியாகிய F. I. நிக்கல்ஸனால் 1908-ம் வருஷத்தில் ஆறுமாத காலம்வரையில் லண்டன் நகரத்தில் 10,000 ஆங்கிலேயப் பிள்ளைகளுக்கு ஊனைவிலக்கி மரக்கறி உணவு கொடுக்கப்பட்டது. அதே காலத்தில் லண்டன் பிராந்தியத்துச் சபையாரால் ஏற்படுத்தப்பட்ட மற்றொரு இடத்தில் அதே கணக்கான 10,000 பிள்ளைகளுக்கு மாமிசவுணவு கொடுக்கப்பட்டது. ஆறுமாதம் கழிந்தபின்பு இவ்வாறு போஷிக்கப்பட்ட இரண்டு கட்சிக்காரருடைய பிள்ளைகளும் பெரிய வைத்திய சாஸ்திரிகளால் பரிசோதிக்கப்பட்டு மரக்கறி உணவினால் போஷிக்கப்பட்ட பிள்ளைகளே மாமிச உணவை உண்ட பிள்ளைகளிலும் மேன்மையான தேக சவுக்கியத்தையும், அதிகமான பலத்தையும் கடினமான தசையையும், சுத்தமான சருமத்தையும் உடையவர்களென்று அவர்களால் நிரூபிக்கப்பட்டது.

இப்பொழுது இங்கிலாந்தில் லண்டன் பிராந்தியச் சபையாருடைய வேண்டுகோளின்படி, அவர்களுடைய பார்வையின்கீழ் லண்டனிலுள்ள மேற்படி மரக்கறி போஷணச் சபையாரால் அனேக ஆயிரக் கணக்கான லண்டன் நகரத்து ஏழைப்பிள்ளைகள் கந்தமூலாதிகளினால் போஷிக்கப்படுகிறார்கள். பிரஸல்ஸ் ஸர்வகலாசாலையின் தேகதத்துவ பரீக்ஷைச் சபையில் ஓர் அங்கத்தினராயுள்ள 'டோடிகோ' என்னும் வைத்திய சாஸ்திர பண்டிதையால் மூன்று வருஷத்திற்கு முன்பு மாமிச பக்ஷிணிகளுக்கும் சாகபக்ஷிணிகளுக்கும் உள்ள ஆற்றல், ஏர்கோக்ராப் என்னும் கருவியினால் பரிசோதிக்கப்பட்ட பொழுது, கந்தமூல பக்ஷிணிகள் அதிகமான ஆற்றலை உடையவர்களென்று ஸ்தாபிக்கப்பட்டது. பின்னர் 40-பேர் பரிசோதிக்கப்பட்டு ஒவ்வொருவரும் மாமிச பக்ஷிணிகளினும் மூன்று பங்கு அதிகமான தேகவலிமையை உடையவர்களாய் இருந்தார்களென்று நன்றாக அறியப்பட்டது.

அந்த மாதுசிரோமணி இவ்வாறு காய்கனிகளை உண்பதனால் உண்டாகும் பல நன்மைகளைப் பிறருக்குப் பிரசங்கித்துத் தானும் காய்கனிகளைப் புசித்துவருகிறாள். இப்படியே அனேக ஐரோப்பியர்களும் இப்பொழுது தேக சௌக்யத்தைக் கருதியும், நீடித்த ஆயுளைக் கருதியும், ஜீவகாருண்ணியத்தைக் கருதியும், ஊனை விலக்கிக் காய்



கனிகளைப் புசித்துவருகிறார்கள். ஊனையுண்பதனால், மிந்தபுத்தி, மூர்க்கபுத்தி, சோம்பல், அறிவின்மை, மதுபானம் செய்தல், செருக்கு, கல்லாமை, அழுக்காறு, அருளின்மை, கொலைபுரிதல் முதலிய பல வகையான தீக்குணங்களும் தீச்செயல்களும் உண்டாகின்றன. உதாரணமாக கேசன் (Giessen) என்னுமிடத்தில் பலபொருட்காட்சி சாலையில் ஒரு காடிக்குட்டிக்கு ரொட்டிமட்டும் கொடுத்து வளர்த்த காலத்தில் மிகச்சாந்தமும் அமைதியுமாய்ச் சிறுபிள்ளைகளோடு விளையாடிக்கொண்டிருந்ததாம். ஆனால் அதற்கு மாமிசபோஜனம் கொடுக்கப்பட்ட சிறிது தினங்களுக்குள் மிக மூர்க்கமும் வெறியுமுண்டாகிக் கேடு விளைவித்ததாக வாசித்திருக்கிறோம்.

"கொல்லா விரதங் குவலயமெல் லாமோங்க
வெல்லார்க்குஞ் சொல்லுவதென் னிச்சை பராபரமே"
"கொல்லா விரதமொன்று கொண்டவரே நல்லோர்மற்
றல்லாதார் யாரோ வறியேன் பராபரமே" (பராபரக்கண்ணி)

## வஸ்திரம். (CLOTHING—குளோதிங்)

தேக சுத்தத்திற்காக ஸ்நானம் செய்வதுபோலவே சுத்தமான வஸ்திரம் தரித்துக்கொள்வதே தேகத்துக்கு சவுக்கியம். அழுக்கு வஸ்திரங்களைத் தரித்துக்கொள்வதினால் அவைகளில் படிந்திருக்கும் வியர்வையும், நிணங்களும் வெளியிலிருந்து ஒட்டிக்கொள்ளுகிற விஷங்களும் இருக்கின்றன. ஆகையால் அவைகளை அடிக்கடி மாற்றிவிடவேண்டியது. இராக்காலங்களில் தரித்துக்கொள்ளுகிற உடைகளையும், படுக்கைத் துணிகளையும் பகலில்வெயிலில் உலர்த்தி உதறிவிட்டால் அசுத்தமெல்லாம் நீங்கிவிடும். அழுக்கடைந்த பிறகு சுத்தம் செய்யாவிட்டால், துணியில் படிந்த அழுக்கு அழுக ஆரம்பித்து துர்நாற்றத்தை வீசும். இவ்வாறு அழுக்குப்படிந்த வஸ்திரங்களை அப்போதைக்கப்போது சுத்திசெய்து உடுத்தாவிட்டால் அதிலுள்ள அழுக்கு நமது சருமத்திலுள்ள நுண்ணிய துவாரங்களை அடைத்து, வியர்வையும் நிணத்தையும் வெளிவராமல் தடுத்து பலபிணிகளுக்கு நம்மை ஆளாக்கிவிடும். உடுப்பை அடிக்கடி மாற்ற யோக்கியதையுள்ளவர்களும், இரவும் பகலும்

ஒரு துணியைக் கட்டிக்கொண்டே காலத்தைக் கழிக்கிறார்கள். ஏழை களும் தங்கள் வஸ்திரங்களை அடிக்கடி சுத்தம் செய்வது அருமை யல்ல. லோபிகளுக்கும், மூடர்களுக்கும், சோம்பர்கட்கும் எவ்வளவு சொல்லித்தானென்ன? செவுடன் காதில் சங்கூதினது போலாகும். முக்கியமாய், வைசூரி, மலஜுரம், விஷபேதி முதலிய விஷஜெகரோகம் வியாபித்திருக்கும்போது அழுக்குவஸ்திரங்களைத் தரித்துக்கொண் டிருக்கலாகாது. ஈரவஸ்திரம் தரித்துக் கொண்டிருப்பதால் சில மோச மான வியாதிகளுண்டாகும். எப்பொழுதும் வெள்ளை நிறமான துணி களின் மேற்படுகிற உஷ்ணம் அதற்குள் செல்லாமல் சிதறிப்போகும். கறுப்பு நிறமுள்ள துணிகளோவெனில் உஷ்ணத்தை இழுத்துக்கொள் ளும், ஆதலால் வெள்ளை நிறமான வஸ்திரங்களையும், போர்வை, குடை முதலியவைகளையும் உபயோகிப்பது நலம். வஸ்திரங்களையும் சொக்காய் முதலிய உடுப்புகளையும் எப்போதும் தளர்ச்சியாகவே தரித்துக்கொள்ள வேண்டியது: இல்லாவிட்டால் இரத்த வோட்டம் தடைப்பட்டு தேக சவுக்கியம் கெடும். நாம் தரிக்கும் வஸ்திரம் தேகத்துக்கு அனல் கொடா ததாயும், உடம்பிலுள்ள அனலை வெளிப்படுத்தாததாயும், வாயுவிலுள்ள (Atmosphere) சீதோஷ்ணத்தை உடம்பில் படவிடாமல் காக்கத்தக்க தாயும், உடம்பிலுள்ள வியர்வை வெளியேசென்று நீராவியாய்ப் பறக் கக்கூடிய கண்ணரைத் துவாரங்கள் உள்ளதாயும் இருக்கவேண்டும். மேற்சொல்லியவைகளை பங்கமில்லாது நிறைவேற்றக்கூடியதும் இந் தியாபோன்ற உஷ்ணதேசத்தி லுள்ளவர்கள் தரிக்கக்கூடியதும் பருத்திவஸ்திரமே. ஆனால் மாரிகாலங்களிலும், சீதள தேகங்களுக்குப் போனாலும், நமது தேகத்திலுள்ள அனலை வெளிப்படுத்தாததாயும், இயற்கையான அனலைக் கொடுக்கக்கூடியதாயும் இருக்கவேண்டுமாகை யால், கம்பிளி (Flannel) முதலியவைகளை உபயோகிக்கவேண்டும். வயது சென்றவர்களையும், தேகசக்தி குன்றினவர்களையும், வாத ரோகி களையும், க்ஷயரோகிகளையும், குழந்தைகளையும், சீதபேதி, வயிற்றோட் டம் முதலிய வியாதியஸ்தர்களையும் கம்பிளித் துணி தரிக்கச்செய்வது நிரம்ப அவசியம்.



## தேகமுயற்சி. (EXERCISE - எக்ஸர்ஸைஸ்)


தேகத்திலுள்ள சகலயந்திரங்களும் அதனதன் தொழிலைச்சரியாய் நிறைவேற்றிப்பலம் அடையும் பொருட்டு சுவாசத்தைக் கதிக்கச் செய்து, இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தி, தோலை அனலுள்ளதாக்கி, வியர்வை அதிகமாயுண்டாகும்படி செய்வதே தேகமுயற்சியாம். தேக முயற்சியால் தேகத்திலுள்ள விஷவஸ்துக்கள் கழிந்துபோகின்றன. தேகத்திலுள்ள தசைகள் நன்றாய் வளர்ந்து பலமும் உறுதியுமுள்ளவை களாகின்றன. புத்திக்கு ஆதாரமான மூளையானது பலத்தையும் சுகத் தையும் பெற்று கடினமான மனோ முயற்சிகளைச் செய்யச் சக்தியுள்ள தாகின்றது. மனோ உற்சாகமும் புத்தி கூர்மையுமுண்டாகின்றன. உண்ணும் உணவு சரியாய் ஜீர்ணமாகி அதிலுள்ள சத்துக்கள் தேகத் தில் சாருகின்றன. தேகம் ஸ்தூலித்து அவலக்ஷணமாத் தோன்றாமல் பலமும் லக்ஷணமுமுடையதாயிருக்கும். அஜீரணம், க்ஷயமுதலிய வியாதிகள் கிட்ட நெருங்கமாட்டா.

நம்மவர்களுக்குள் தேக உழைப்பு இன்னதென் றுணராமலே வாழ்பவர்களின் தொகையும் அபாரம். ஐரோப்பியர்கள் பிரபுக்களாயி னும் தேக உழைப்பை மறந்தவர்களல்லர். அதனாற்றான் அவர்கள் விசேஷ சம்பத்தையும் சுகத்தையும் அடைந்திருக்கிறார்கள். கணக்கற்ற நம்மவர்கள் இருந்த விடத்திலேயே இருந்துவிடுகிறார்கள். கிடந்த விடத்திலேயே கிடந்துவிடுகின்றனர். ஐந்து வேளையும் உண்கின்றனர். இவர்கட்கு சாப்பாடு ஜீரணிப்ப தெப்படியோ! உறக்கந்தான் இவர்க ளைத் தேடியடையுமோ கடவுளே யறிவார். இத்தகைய பேதையர் சர்வதாநோயால் வருந்துவதும் அதிசயமோ? மரம், செடி, பூண்டு முத லிய தாவரஜந்துக்களும் இருட்டில் வளரமாட்டாமல் வெளிச்சத்தையே யபேக்ஷிக்குமானால் மக்களைப்பற்றிச் சொல்லவேண்டியதென்ன? இருட் டறையிற் பிறந்து இருட்டிலே கிடந்து இருட்டிலே யொழியும் அசேத னர் நல்லறிவும் பூரணயுளும் அடைவது கூடுமோ? நம்மவர்கள் ராஜாங்க விஷயங்களிற் புகுந்து தேச நன்மையை நாடி சபைகளை யலங்கரிப்பது நன்மையேயாயினும் தங்களது தேக நன்மையை நாடி சுகாதாரக் கடமை களை மறத்தல் நலமன்று.

மனிதன் செய்யக்கூடிய தேக முயற்சிகள், ஒவ்வொருவரும் காலையிலும் மாலையிலும் வெளியில் போய் சுத்தமான காற்றுள்ள விடங்களில் குறைந்தது ஐந்து மயில் தூரம் நடக்கவேண்டும். அல்லது நாடோறும் இரண்டுமணி நேரம் வரையில் உலாவுதல் முதலிய முயற்சிகள் செய்யவேண்டும். உலாவுதல், ஓடுதல், குதிரை, துவிச்சக்கரவண்டி (Bicycle) பல்லக்கு சவாரி, பந்து விளையாடுதல், கல்லா சுற்றுதல், தண்டா எடுத்தல், தோட்டவேலை செய்தல் முதலியன தேகமுயற்சிக்கு ஆதாரமானவைகள். வெளியிற் சென்று உலாத்துவதற்குச் சௌகர்யமில்லாவிட்டால், வீட்டுக்குள்ளாகவே நடந்து உலாத்தலாம். தோட்டவேலை தேக சுகத்தைக் கொடுத்து மனனந்தத்தை யுண்டுபடுத்துவதுமன்றி, கெட்ட விஷயங்களிற் மனதைச் செல்லவொட்டாது, முயற்சிக்குத் தக்க லாபத்தையும் தரும். சிறுவர்களைத் தோட்டவேலையில் பிரவேசிக்கச் செய்தால் அவர்களைச் சோம்பலணுகாது. உழைப்புக்கும் பின்னிடார்கள். பெரிய பட்டினங்களிற் பெரும்பாலார் சோம்பேரிகளாகவும், தேகாப்பியாசமில்லாமல் திண்ணைகளின்பேரிலுட்கார்ந்து கிழக்கதைகளைத் தொனப்பிக்கொண்டு இருக்கிறவர்களாகவு மிருப்பதால், சில சிலம்ப அரங்கங்களையும், தேகாப்பியாசத்திற்கேற்ற விடுதிகளையும் அமைத்து சகலரையும் தேகாப்பியாசம் செய்ய உற்சாகப்படுத்தவேண்டும். பெரும்பாலார் பட்டினத்தில் ஜனநெருக்கமான இடங்களிலேயே இருந்துகொண்டிருக்கிறபடியால் அவர்கள் காலையிலும் மாலையிலும் போயுலாவத் தக்கதான ரமணீயமான பெரிய சிங்காரத் தோட்டங்களை (Park) உண்டாக்கி, அவைகளில் விதம்விதமான புஷ்பச்செடிகளையும், மரங்களையும் கொண்டு வந்து நாட்டி, வேடிக்கை விநோதப் பொருள்களை வைத்து ஜனங்கள் உல்லாச மடையும்படிச் செய்யவேண்டியது. சிறுவர்களும் வயது சென்றவர்களும் இலேசான தேகமுயற்சியைச் செய்யவேண்டியது. தேகமுயற்சிசெய்ய உதயகாலம் மிகவும் அனுகூலமானது. பனிகாலத்தில் பனி நின்றபிறகு உலாத்த வேண்டியது. தோள்களை பின்னுக்கு வைத்து மார்பை விசாலமாக்கிக்கொண்டு நடந்தால் நுரையீரலில் அதிக ஆகாயம்சென்று இரத்தம் சுத்தியாகி செவ்வையாய்க் குதித்தோடும். இதைக்கவனிக்கா விட்டால் முதுகு வளைந்து கூன் உண்டாகும். கைகளை வீசிக்கொண்டு நடக்கவேண்டியது. நெஞ்சு, கழுத்து



முதலியவிடங்களிலுள்ள உடுப்புகள் தளர்த்தியாய் இருக்கவேண்டியது.
தேகமுயற்சி செய்துதேகம் அலுத்து வியர்வையுண்டாயிருக்கும்போது
அதின்மேல் குளிர்ச்சியான காற்றுப்படும்படி விடலாகாது. கொஞ்ச
நேரத்தில் வேகமும் கடினமுமான வேலைசெய்வதைவிட அதிக நேர
மாய்ச் சொற்பவேகமும், கடினமுமான வேலைசெய்வது நல்லது. தேக
முயற்சி செய்து வியர்வை அடங்கினவுடன் ஸ்நானம் செய்வதுநல்லது.




நமது சிறிய சத்துருக்கள்

(இதன் விபரம் அடுத்த பக்கத்தில் பார்க்கவும்.)

(1) க்ஷயரோகிகள் உமிழ்ந்த சளியில் காணப்படும் கிருமிகள். (2) Pneumonia-என்னும் சுவாசப்பை அழற்சியை உண்டாக்கும் கிருமிகள். (3) அழுகிய நாற்றமெடுக்கும் வஸ்துக்களில் காணப்படும் கிருமிகள். (4) அழுகிய தானியங்களிலும் எருக்கூட்டத்திலும் உற்பத்தியாகும் கிருமிகள். (5) கிணற்றுத்தண்ணீரிலும், கட்டுக்கடை ஜலத்திலும் அழுகிய கிழங்குகளிலும் தோன்றும் கிருமிகள். (6) Typhoid fever-என்னும் விஷமச்சுரக் கிருமிகள். (7) மலேச்சுரத்தி லழுந்துபவனின் ரத்தத்தில் காணப்படும் கிருமிகள். (Malaria bacillus). (8) க்ஷயரோகக் கிருமிகள். (9) குஷ்டரோய் கிருமிகள். (10) ஊறவைத்த சாமான்களில் அசைந்துகொண்டு திரியும் கிருமிகள். (11) விஷபேதிக் கிருமிகள். (12) சேற்று நிலத்திலுள்ள ஜலத்தில் (Marshy water) காணப்படும் சவுக்குநுனியுள்ள கிருமிகள். (13) அழுகிய தாவர வஸ்துக்களிலுள்ள (Vegetable matter) கிருமிகள். (14) அழுகிய மாம்சம் அல்லது செடிகளுள்ள தண்ணீரில் சாதாரணமாய்க் காணப்படும் கிருமிகள். (15) குளம் குட்டைகளில் சிவப்பு நிறப்பாசிபோல் படர்ந்திருக்கும் கிருமிகள். (16) அதேயிடத்தில் சிறிது மங்கிய சிவப்பு நிறமுள்ள கிருமிகள். (17) முதிர்ந்த விஷபேதிக் கிருமிகள். (18) காடி முதலிய வஸ்துகளில் புளிப்புண்டாக்கும் கிருமிகள். (19) கட்டிக்கிடக்கும் ஜலத்தில் கிருமிகள் விர்த்தி யாகிவளரும்விதம்.

# PHARMACOPORA

# ஔஷத பாகம்

இப்புத்தகத்தில் மனித சரீரத்திலுள்ள ஒவ்வொரு வுறுப்புகளின்
லக்ஷணங்களும், அவ்வுறுப்புகளின் தொழிற்களும், அவ்வுறுப்பகளுக்
குக் காணும் வியாதிகளும், அவ்வியாதிகளுக்கேற்ற அவுஷத முறை
களும், அததன் கீழ் விபரமாய் வரையப்பட்டிருப்பினும், அப்படிக்கு
அவ்விடங்களில் கூறுதொழிந்த வியாதிகளையும் அவ்வியாதிகளுக்
கேற்ற சிகிச்சை முறைகளையும் இதனடியில் விவரித்திருக்கிறோம்

## இரத்தக் குறைவினால் காணும் தாதுநஷ்டம்.

இரத்தத்தைப்பற்றிய விபரங்களும், இரத்தக் குறைவுண்டாவதற்
கான காரணங்களும், இரத்தக் குறைவினால் உண்டாகும் தாதுநஷ்டத்
தின் லக்ஷணங்களும், முறையே 40, 41, 42, 45. 46-வது பக்கங்களில்
விபரமாய்க் கூறியிருக்கிறோம். உண்டிக் குறைவினால் உதிரங்குறைந்து,
தேகம் துர்ப்பலப்பட்டு அசுத்தம் மேலிட்டு தேகம் இளைத்து வற்றிப்
போய், சரீரம் மஞ்சள் நிறமாகி, சுக்கிலக் குறைவுண்டாகி பின்பு ஆவி
முதலியவைகளும் அடியோடு அழிந்துபோம்.
சிகிச்சை.—இரைப்பை பலஹீனப்பட்டு அஜீரணம் மேலிட்டி
ருக்குமானால் முதலில் இரைப்பை பலஹீனத்தினாலுண்டான தாது
நஷ்டத்திற்குச் சொல்லியிருக்கும் தீபனவர்த்தனகாரி அவுஷதங்களி
லொன்றைக் கொடுத்து ஜீரணசக்தியைக் கிரமப்படுத்தி நல்ல சத்துள்
ளதும், இலகுவில் ஜீரணிக்கத் தக்கதுமான ஆகாரங்களை உபயோகித்து
வருவதுடன், பரிசுத்தமான காற்றுள்ள விடங்களிலேனும், உத்தியா
வனங்களிலேனும் வாசம் செய்யவேண்டியது, மனதை நிம்மதியாய்
வைத்திருக்க வேண்டியது. கேளிவிலாசங்களில் மனதைச் செலுத்த
வேண்டியது. தேகத்தில் போதிய இரத்தமுண்டாகி, போகசக்தியுண்
டாகும் பரியந்தம் சம்போகத்தை நீக்கவேண்டியது.
இரத்தத்தை விர்த்திசெய்து, விந்துவை விளைவித்து போக சக்தி

யையுண்டாக்கக்கூடிய, அய்ச்செந்தூரம், அயக்காந்த செந்தூரம், சொர்ணலோக செந்தூரம், பாஸ்பேட் ஆவ் ஐரன் (Phosphate of Iron) ஸிரப் ஆவ் பாஸ்பேட் ஆவ் ஐரன் (Syrup of Phosphate of Iron) ஈஸ்டன்ஸ் ஸிரப் (Easton's Syrup) முதலிய அவுஷதங்களிலொன்றைச் சாப்பிட்டு வருவதுடன், ஆண்குறியை வெதுவெதுப்பான வெந்நீரினால் கழுவிவர, ரோமத்துவாரங்கள் அகன்று இரத்தவோட்டமுண்டாகும். பின்பு ஆண்குறியின்மேலும் அதைச் சார்ந்த பாகங்களிலும், புலிக்கொழுப்பு, செம்மறியாட்டுப்பால், தார்தைலம் முதலியவைகளி லொன்றைப் பூசிவருவதினாலும், பருத்திக்கொட்டை எண்ணெய் நீலோற்பல எண்ணெய் இவ்விரண்டையும் சமமாய்ச் சேர்த்துப் பூசி வருவதினாலும், இரத்த நரம்புகளுக்கு உற்சாகமுண்டாகி ஆண்குறி சோர்வு நீங்கி கெட்டிப்படும். இன்னும் தாதுவிர்த்தியையும் போக சக்தியையும் உண்டுபண்ணக்கூடிய, பசும்பால், வெள்ளாட்டுப்பால், ஆலம்பால், பருத்திவிரைப்பால், தேங்காய்ப்பால், பாற்சாதம், பாயஸங்கள், நெய், மலைவாழைப்பழம், பேயன்வாழைப்பழம், செவ்வாழைப்பழம் சீமை அத்திப்பழம், பச்சைகொடி முந்திரிப்பழம், பிஸ்தாப்பருப்பு பாதம்பருப்பு, முந்திரிப்பருப்பு, பிந்தஃபருப்பு, சுரைவிரைப்பருப்பு, வெள்ளரிவிரைப்பருப்பு, சீமை வெள்ளரிவிரைப்பருப்பு, தேங்காய், பேரீச்சங்காய், கடலை, மொச்சை, காராமணி, கழுகின எள்ளு, கொழுத்த ஆட்டிறைச்சி, கொழுத்த சேவலிறைச்சி, காடை, கௌதாரி, உடும்பு ஆகிய இவைகளின் இறைச்சிகள், நல்லஜலத்தில் பிடித்தமீன், விலாங்கு மீன், மீன்முட்டைகள், கோழிமுட்டைகள், பறவைகளின் முட்டைகள், அவைகளின் தலைமூளைகள், சாலாமிஸ்ரி, ஷகாகுல் மிஸ்ரி, போஜிதான்மிஸ்ரி, பஃமனேசுபேத், பகமனேசுருஃ, தூதரிசுபேத், தூதரிசுருஃ; முருங்கைவிரை, முள்ளங்கிவிரை, மஞ்சள்முள்ளங்கிவிரை, நாயுருவிவிரை, வெங்காயவிரை, கசகசா இன்னும் இவைபோன்ற வித்தினங்களும், தண்ணீர் விட்டான் கிழங்கு, நிலப்பனங்கிழங்கு, பூமி சருக்கரைக்கிழங்கு, மரவள்ளிக்கிழங்கு, சுக்கு, மிளகு, வெள்ளை மிளகு, திப்பிலி, அக்கிராகாரம், லவங்கம், கோஷ்டம், வெந்தயம், பெருங்காயம். அனிசூன், ஜாதிபத்திரி, வெட்பாலையரிசி, லவங்கப்



பட்டை, அகர்கட்டை, குந்திரிகம், முருங்கைப்பிசின், கருவேலம்பிசின், ஆவாரம்பிசின், கஸ்தூரி அம்பர் முதலியவைகளும், இன்னும் இவை போன்ற வஸ்துக்களையும் ஆகாரங்களாகவும் அவுஷதங்களாகவும் பக்குவம் செய்து சாப்பிட்டு வருவதினால் இரத்த விருத்தியும் வீரிய விருத்தியும் போக சக்தியும், சந்தானசித்தியு முண்டாகும்.

## இருதயத்தின் பலஹீனத்தினாலுண்டான தாது நஷ்டம்.

இருதயத்தைப்பற்றிய விபரங்களும், இருதயத்தின் பிரயோஜனங்களும், இருதயத்தின் பலஹீனத்தினால் உண்டாகும் தாது நஷ்டத்தின் லக்ஷணங்களும், முறையே, 28, 29, 30-வது பக்கங்களில் விபரமாய்க் கூறியிருக்கிறோம்.

**சிகிச்சை.**—இதற்கு பிரதமத்தில் வியாதி உண்டான காரணத்தை அறிந்து அதனை அகற்ற வேண்டியது. இயற்கைக் கதிகமான உஷ்ணத்தினால் இருதயம் பலஹீனப்பட்டிருந்தால், வெள்ளிரேக்கு, மூங்கிலுப்பு, மாணிக்கங்கள், புளி, பூங்காவி, பச்சைக்கற்பூரம், நெல்லிக்காய், நல்முத்துச்சுன்னம், நற்பவளபஸ்பம், தித்திப்பு மாதுளம் பழம், சேப்புப்பழம், சந்தனம், கொத்தமல்லி, கல்தாமரை, கமலாப்பழம், கடுக்காய், கஹரூபா, ரோஜாப்பூ முதலிய வஸ்துக்களையும், இயற்கைக் கதிகமான குளிர்ச்சியினால் இருதயம் பலஹீனப்பட்டிருந்தால், தங்கரேக்கு, லவங்கப்பட்டை, பொதினா, பஹமனேசுபேத், பஹமனேசுருஃ, தூருஞ்சிப்பழத்தோல், சடாமாஞ்சில், குங்குமப்பூ, கோரைக்கிழங்கு, காட்டுதுளசி, அம்பர், அகிர்க்கட்டை, ஏலக்காய் முதலிய வஸ்துக்களையும் அடிக்கடி உபயோகித்து வரவேண்டியது. இன்னும் கொத்துமல்லிக் கீரைச்சாறு பசும்பால் வகைக்கு அரை ஆழாக்கு இவற்றில் ஒருபலம் சீனாக்கற்கண்டை பொடித்துப்போட்டு காலையில் மட்டும் 2-3-வாரம் வரையில் சாப்பிட்டு வருவதினாலும், பனை வேர், நிலப்பனங்கிழங்கு, நீர்முள்ளி விரை, சன்ன லவங்கப் பட்டை, இவை வகைக்குப் பலம் 2, சுத்திசெய்த கஞ்சா, கருவேலம் பிசின், வகைக்கு பலம் 1, ஜாதிக்காய், ஜாதிபத்திரி, சோம்பு, கிராம்பு, வகைக்கு விராகனிடை 1, மிளகு பலம் $\frac{1}{4}$ இவைகளைச் சூரணித்து

அரைப்பிடி பசுவின் பாலில் இரண்டு பலம் கோதுமை மாவும், பத்து
பலம் சீனிச்சருக்கரையும் கலந்து பாகு செய்து அதில் ஷை சூரணங்க
ளைக் கொட்டிக் கிண்டி தேவையான நெய், தேன், பேரீச்சன்பழம்,
முந்திரிப்பருப்பு முதலியவைகளை கூட்டிப் பிசைந்துகொண்டு வேளை
யொன்றுக்கு ஒரு தோலா வீதம், தினம் காலை மாலை இருவேளையும்
உட்கொள்ள இருதயம் வலுவடைந்து, ஆத்மசக்தி யதிகரித்து,போகத்
தில் விருப்பம், ஆனந்தம், வீரியவிர்த்தி, சந்தானசித்தி முதலியன
வுண்டாகும்.

இன்னும இருதயம் பலஹீனப்பட்டு தாதுநஷ்டமடைந்தவர்கள்,
மனோவியாகூலம், மனோபயம், முதலியவைகளை நிசேஷமாய் நீக்குவதி
னாலும், மனதுக்கிசைந்த ரூபவதியான ஸ்திரீகளுடன் சயனிப்பதினு
லும், சுத்தமான காற்றுள்ள விடங்களில் மாலை நேரங்களில் உலாவி
வருவதினாலும், சிங்காரத் தோட்டங்களில் (Park) வசிப்பதினாலும்,
நல்ல சிநேகிதர்களுடன் சல்லாபமாய் சம்பாஷிப்பதினாலும், வீணை,
சுரபத்து, பிடில், ஹார்மோனியம், முதலிய நல்ல வாத்தியங்களை
வாசித்தல் அல்லது கேட்பதில் மனதைச் செலுத்துவதினாலும், ஜாலங்
கள், செப்பிடு வித்தைகள் முதலிய விநோத வேடிக்கைகளில் மன
தைச் செலுத்துவதினாலும், இருதயம் இயற்கையான வலுவடைந்து
தாதுவிர்த்தியும் போகசக்தியுமுண்டாகும்.

## இரைப்பையின் பலஹீனத்தினாலுண்டான தாதுநஷ்டம்.

இரைப்பையைப்பற்றிய விபரங்களும், இரைப்பை பலஹீனப்படு
வதற்கான காரணங்களும், இரைப்பையின் பலஹீனத்தினால் உண்
டாகும் தாதுநஷ்டத்தின் லக்ஷணங்களும் முறையே 32, 33, 34, 35,
36-வது பக்கங்களில் விபரமாய்க் கூறியிருக்கிறோம். இரைப்பை பல
ஹீனத்தினால் தீபனசக்தி குறைந்து, அஜீரணமுண்டாகி, ஆத்மசக்தி
குன்றி, உடல் வற்றி, உதிரம்குறைந்து,சுக்கிலக்ஷீணமுண்டாகி, தாது
விர்த்தியும் போகசக்தியும் குறைந்துபோம். இரைப்பை பலஹீனப்
படுவதினால், அஜீரணரோகம் (Dyspepsia-டிஸ்பெப்ஷியா) உண்டா
கும். இதுவே அக்னிமந்தம், எரிகுன்மம், பித்தவாயு, உஷ்ணவாயு



குன்மம், குன்மச்சூலை, மந்தாக்கினி எனப் பலநாமம் பெறும். இந்த
ரோகம் 36-வதுபக்கத்தில் கண்டிருக்கிறகாரணங்களினாலும்,அளவுக்கு
மிஞ்சி புசித்தல், அபக்குவபதார்த்தங்கள், பதார்த்தங்களைச் செவ்வை
யாய் மென்று புசிக்காமல்போகுதல், தேகாப்பியாசமின்றி, சோம்பலாய்
இருக்குதல், அதிக உழைப்பு, அதிகவாசிப்பு, ஆழ்ந்தயோஜனை, மனோ
வியாகூலம், துர்ப்பீலம், சுருட்டும் மூக்குத்தூளும் அதிமாய் உபயோகப்
படுத்துதல் இரைப்பை, யகிர்தகண்டம், கணையம் முதலிய வுறுப்புகள்
வியாதிப்படுதல், ஆகிய இதுபோன்ற இன்னும் அநேக காரணங்களி
னாலும் இந்த வியாதி உண்டாகிறது.

இந்த ரோகம் பிரகிருதி வித்தியாசத்தினால், குணத்திலும் உக்கி
ரத்திலும் வித்தியாசப்படுவதுண்டு. ஆனாலும் முக்கிய லக்ஷணங்கள்
எவையெனில், மந்தப்பசி, ஈரக்குழியில் வேதனை, வாயுவிர்த்தி, வயிற்
றுப்பீசம், வயிற்றில் இரைச்சல், குமட்டல், வாந்தி, புளித்த ஏப்பம்,
பலபந்தமும் பேதியும் மாறிமாறிக் காணுதல், இருதயத்துடிப்பு, இடுப்பு
வலி, வாய்நாற்றம், தலைபாரம், நாக்கின்மேல் மாவுபடிந்திருக்குதல்,
கைகால்களில் வேதனை, புணர்ச்சியில் வெறுப்பு, துரிதஸ்கலிதம்
ஆகியவைகளாம். இந்த ரோகத்திற்குக் கொடுக்கத்தக்க அநேகவித
அவுஷதங்களிருந்தபோதிலும், அடியிற்கண்ட அவுஷதங்களிலொன்
றைக் கொடுத்து ஜீரண சக்தியை விருத்திசெய்துகொண்டு பின்பு
இரத்தக்குறைவினால் உண்டான தாது நஷ்டத்திற்குச் சொல்லியிருக்
கும் அவுஷதங்களிலொன்றைக் கொடுக்கவேண்டியது.

சுக்கு,திப்பிலி, மிளகு,ஓமம், சயிந்தியலவணம், இவற்றின்சூரணம்
வகைக்குப் பலம் 1, சீரகச்சூரணம் பலம் 2, இவைகளைக் கலந்து
கொண்டு வேளையொன்றுக்கு ஒரு விராகனிடை வீதம், தினம் 2-3
வேளை கொடுக்கலாம். அல்லது, திப்பிலி, அதிமதுரம், அரத்தை, வால்
மிளகு இவைகளின் சூரணம் வகைக்கு பலம் 1, கடுக்காய் $\frac{1}{2}$, ஜாதிக்
காய் $\frac{1}{4}$, கற்பூரம் $\frac{1}{8}$-இச்சூரணங்களைக் கலந்துகொண்டு வேளையொன்
றுக்கு $\frac{1}{2}$-விராகனிடை வீதம் தினம் ஒன்றுக்கு 2-3-வேளை கொடுக்க
லாம். அல்லது, பிரண்டை ரசம் படி 1, இஞ்சிரசம் படி $\frac{1}{4}$, வெல்லம்
பலம் 10, கலந்து பாகு காய்ச்சி அதில், சுக்கு, திப்பிலி, மிளகு, ஓமம்,

வெள்ளுள்ளி, பஞ்சலவுணம் வகைக்குப் பலம் 1, கடுக்காய், தானிக் காய், நெல்லிமுள்ளி, சீரகம் வகைக்குப் பலம் 2, இவைகளின் சூரணங்களைக் கொட்டிக் கிண்டித் தேவையான தேன்விட்டுப் பிசைந்து வேளைக்கு $\frac{1}{2}$-1-விராகனிடை வீதம் காலை மாலை இருவேளையும் கொடுக்கலாம். இன்னும் அடியிற்கண்ட இங்கிலீஷ் மருந்துகளிலொன்றைக் கொடுப்பதினாலும் குணமுண்டாகும். (Take of Bicarbonate of Potassium 1 dr, Tincture Gentionæ Co 3 dr, Infusun calambae 6 oz, Make a mixture-Dose $1\frac{1}{2}$ oz. Three times a day—or. Take of steel drops 15 Minims, Tincture quassia $2\frac{1}{2}$ dr, Aqua Cinnamomi 3 oz. Make a mixture Dose, 1 oz Three times a day—or. Take of dilute Nitric acid 1 dr, dilute Hydrochloric acid 1 dr, Tincture Zingiberis 1 dr, Aqua distilled 8 ozs, Make a mixture. Dose Two Table-Spoonfuls Three times a day.)

இரைப்பை பலஹீனத்தினால் அஜீரணம் மேலிட்டு, அஜீரணபேதி (Diarrhœa-டையரியா) காண்பதுமுண்டு. இதுவே அதிசாரம், உஷ்ண பேதி, கழிச்சல், சாம அதிசாரம், சாம அஜீரணம், மலக்கழிச்சல், பேதி எனப் பலநாமம் பெறும். இந்தரோகம் அநேகவித காரணங்களால் பிறக்கின்றது. அதிக உணவு, பக்குவமாகாத போஜனம், அசுத்த ஜலபானம், சாக்கடை முதலிய துர்நாற்றத்தைச் சுவாசித்தல், மழை காற்று வெயில் முதலியவைகளிலடிபடுதல் முதலியவைகளே முக்கிய காரணங்களாகும்.

அஜீரண பேதியில் மலம் குழம்பாயாவது, நீராயாவது, நுரையாயாவது, மாவுக் கரைத்ததுபோல் வெள்ளையாயாவது இருக்கும். வயிறு இரைந்து உப்பி பேதியாகும். வயிற்றில் நோவும் இருக்கும். புளித்த ஏப்பமும் குடலில் தாபிதமும் இராது. இதற்கு அடியில் கண்ட அவுஷதங்களிலொன்றைக் கொடுப்பதினால் பேதி நின்று, ஜீரணசக்தியதிகரிக்கும். அதன்பிறகு இரத்தக் குறைவினால் காணும் தாதுநஷ்டத்திற்குச் சொல்லியிருக்கும் அவுஷதங்களிலொன்றைக் கொடுப்பதினால் தாதுவிருத்தியும் போகசக்தியுமுண்டாகும்.



சிகிச்சை.—அபக்குவ போஜனத்தினால்பேதிகண்டால், கடுக்காய், கடுக்காய் கஷாயம், கடுக்காய்ப்பிஞ்சு, ஜாலப்கலவைச் சூரணம் (Compound Powder of Jalaph) நிலாவாரைச் சூரணம் அல்லது கஷாயம், ஆமணக்கெண்ணை முதலியவைகளிலொன்றைக் கொடுத்துக் குடலைச் சுத்தப்படுத்தவேண்டியது. காசுக்கட்டித்தூள் $\frac{3}{4}$-விராகனிடை கருவாப்பட்டைத்தூள் $\frac{1}{2}$-விராகனிடை, அபினி $1\frac{1}{2}$-நெல்லெடை, இம் மூன்றையும் கலந்துகொண்டு மூன்றிலொருபங்கு கொடுத்து தேன் அல்லது வெல்லத்தில் கலந்து தினம் 3-முறை கொடுக்கலாம் அல்லது, அபினி $1\frac{1}{2}$-உளுந்து நிறை, சுக்குத்தூள் $\frac{1}{2}$-விராகனிடை, வெல்லம் தேவையானது சேர்த்து 3-மாத்திரை செய்து தினம் 3-4-ஆவர்த்தி கொடுக்கலாம். மாம்பருப்பு, மாதுளம்பழத் தோல், சுண்டைக்காய் வற்றல், கருவேப்பிலை, ஓமம், நெல்லிமுள்ளி, வறுத்த வெந்தயம், இவற்றின் சூரணங்களைச் சமனாய்ச் சேர்த்து 1-விராகனிடைப் பிரமாணம் வெண்ணெயிற் குழைத்து, தினம் 3-4 தடவை கொடுக்கலாம். அல்லது, அபினி 3, சுக்கு $3\frac{1}{2}$, திப்பிலி 4, சீரகம் $4\frac{1}{2}$, மிளகு 5, இவற்றின் தூள்களைப் பங்குக் கணக்காய் கல்வத்திலிட்டு, விஷ்ணுக் கிராந்திகஷாயத்தால் 12-மணிநேரம் அரைத்து, பச்சைப்பயறுபோலும், மிளகுபோலும் உருட்டி நிழலில்உலர்த்திக்கொண்டு, சிறுவர்களுக்குச் சிறியகுளிகையில் 1-ம், பெரியவர்களுக்குப் பெரிய குளிகையில் 1-ம், தேனில் அனுபானம் செய்து கொடுக்கலாம். இன்னும் பூரணாதி லேகியம், வசம்புக் கஷாயம், வெள்ளைக்கொய்யாவேரின் பட்டைக் கஷாயம், மாசிக்காய்த்தூள், வில்வப்பழச்சதைக்கஷாயம் முதலியவைகளிலொன்றைக் கொடுக்கலாம். இன்னும் அடியிற் கண்ட இங்கிலீஷ் மருந்துகளிலொன்றைக் கொடுப்பதினாலும் குணமுண்டாகும். (Take of Tincture Zingiber 1 Dr, Sprits ammonia aromatic 1 Dr, Sprits aether Nitrous 1 Dr, Brandy 1 oz, Mix, Dose - one tea - spoonful in a glass of water, every two hours. For a child six months old, 3 or 4 drops; One year old, 6 Or 7 drops, two years old, 10 or 12 drops, in a little water,—or, Take of Prepard Chalk 1 Dr, Sprits ammonia aromatic

2 Dr, Tincture opium 40 minims, Champhor mixture 8 oz, Make a mixture. Dose one oz Three times a day.)

### குண்டிக்காய்களின் துர்பலத்தினுல் காணும் தாது நஷ்டம்.

குண்டிக்காய்களைப்பற்றிய விவரங்களும் அவைகள் துர்பலப்படுவதின் காரணங்களும், குண்டிக்காயின் துர்பலத்தினுல் உண்டாகும் தாது நஷ்டத்தின் லக்ஷணங்களும் முறையே 38, 39-வது பக்கங்களில் விபரமாய்க் கூறியிருக்கிறோம்.

சிகிச்சை.—இதற்குப் பிரதமத்தில் குண்டிக்காய் துர்ப்பலப்படுவதற்கான காரணங்களைக் கண்டறிந்து நீக்கவேண்டியது பிறகு அவைகள் வலுவடைந்து, தாதுவிர்த்தியும் போகசக்தியும் அதிகரிக்கும்படியான அவுஷதங்களிலொன்றைக் கொடுக்கவேண்டியது. பிஸ்தாப்பருப்பு, பிந்தஃபருப்பு, பாதாம்பருப்பு, மேற்றோல் நீக்கிய கொப்பரைத்தேங்காய் ஆகிய வைகளுடன் சீனிசர்க்கரை கூட்டி, அடிக்கடி அதிகமாய்ச் சாப்பிட்டு வருவதினுலும், சீமைக்காண்டா மிருக இரத்தம், பூமாதளம்பூ, பூங்காவி, கருவேலம்பிசின், இவற்றின் சூரணம் வகைக்கு ½-விராகனிடை, இவைகளை ஒன்ருய்ச் சேர்த்து இசுபகோல் விரை ஊறவைத்த ஜலத்தினுல் அரைத்துக் கலக்கிச் சாப்பிடுவதினுலும், ஆட்டின் குண்டிக்காய்களுடன் திராக்ஷ ரசம் கூட்டி வேகவைத்துச் சாப்பிடுவதினுலும், ஆட்டின் கரீல், தலை, இவற்றின் இறைச்சியில் புளிகூட்டிப் பக்குவம் செய்து சாப்பிடுவதினுலும், கொடி முந்திரிக்கொடியை கத்தியினுல் அநேகவிடங்களில் கீறிவிட அவற்றிலிருந்து வெளிப்படும் ஜலத்துடன் சிறிது உப்புசேர்த்து 9-நாள் வரையில் சாப்பிடுவதினுலும், சந்தனம், ரோஜாப்பூ, கருவேலம்பிசின், உப்பு இவைகளைச் சேர்த்தாகிலும், தனியாயாகிலும், சுத்த ஜலம் விட்டரைத்து குண்டிக்காய்களின் மேல் பற்றுப் போடுவதினுலும், காடி, ரோஜாப்பூ எண்ணெய் ஆகியவைகளிலொன்றை முதுகில் தடவுவதினுலும், அலிவிவிரை, சந்நராஷ்டகம், லவங்கப்பட்டை, பருப்புக்கீரைவிரை, அரிசித்திப்பிலி, சிறுநாகப்பூ, மேற்றோல் போக்கினசுக்கு, பஹமனேசுருஃ, பஹமனேசுபேத், வெங்காயவிரை; மஞ்சள் முள்ளங்கிவிரை, சீமைநாயுருவிரை, தூதரிசுருஃ,



சுதரிசுபேத், பேரீச்சம்பழவிதை, கழுகின் எள்ளு, மேற்றோல் போக்கின கொப்பரைத்தேங்காய், பிஸ்தாப் பருப்பு, பிந்தஃபருப்பு, கசகசா, தேவதாருவிரைப் பருப்பு, இவைகளைத் தனித்தனி இடித்து வஸ்திர காயஞ்செய்த சூரணம் வகைக்குப் பலம் 1, அக்ரோட்பருப்பு வீசை 1½, இவைக பாதம்பருப்பு வகைக்குப்பலம் 2, கெட்டித்தேன் ளில் பருப்பினங்களின் தோலைப்போக்கி, தனித்தனியாய் அரைத்துச் சூரணங்களோடு சேர்த்துக்கொண்டு, தேனைக்காய்ச்சி நுரைநீக்கி யிறக்கிச் சூரணத்தைக் கொட்டிக் கிண்டி வைத்துக்கொண்டு, வேளையொன்றுக்கு 1-தோலா வீதம் தினம் காலை மாலை இருவேளையும் சாப்பிட்டு இரவு சீனுகற்கண்டு சேர்த்துக் காய்ச்சிய பசும்பால் சாப்பிட்டுவருவதினுல், குண்டிக்காய்களின் வறட்சிதணிந்து, வலுவடைந்து தாதுவிர்த்தியும், போகசக்தியும் சந்தானசித்தியுமுண்டாகும். சுக்கிலம் அதிகமாய்ச் சுரக்கும்,

### நுரையீரல் பலஹீனப்படுவதினுல் உண்டாகும் தாதுநஷ்டம்.

நுரையீரலைப்பற்றிய விபரங்களும், நுரையீரல் பலஹீனப்படுவதற்கான காரணங்களும், நுரையீரல் பலஹீனப்படுவதினுல் உண்டாகும் தாதுநஷ்டத்தின் லக்ஷணங்களும், முறையே, 30, 31, 32 - வது பக்கங்களில் விபரமாய்க் கூறியிருக்கிறோம்.

சிகிச்சை.—இதற்குப் பிரதமத்தில் இரைப்பை பலஹீனத்திற்குச் சொல்லியிருக்கும் அவுஷதங்களிலொன்றைக் கொடுத்து ஜீரண சக்தியை சீர்படுத்திக்கொண்டு அதன்பிறகு ஈரலுக்கு வலுவைக் கொடுக்கக்கூடிய அவுஷதங்களைக் கொடுக்கவேண்டியது. ஏனெனில் நமது தேகத்தில் எத்தனையோ நுண்ணிய வுறுப்புகளிருப்பினும், அவ்வுறுப்புகளுக்கெல்லாம் இரைப்பையே ஆதாரமாயிருக்கின்றது. நாம் உட்கொள்ளும் எவ்வித ஆகாரமும், முதல் முதல் இரைப்பைக்குட் செல்ல அதனை இரைப்பை பக்குவப்படுத்தி அந்தந்த உறுப்புகளுக்கு வேண்டிய போஷணையைச் செய்கிறது. ஆகையால் ஈரல் பலஹீனப்பட்டால் இரைப்பைக்கும் பலஹீனமுண்டாகுமென்று நாம் சொல்ல வேண்டியதில்லை. இதுபோலவே இரைப்பைக்குப் பலஹீனமுண்டா

ஞல் தேகத்திலுள்ள சர்வ வுறுப்புகளுக்கும் சோர்வு உண்டாகுமென் பதற்கையமில்லை. ஆகையால் எவ்வித ரோகங்களாயினும் பிரதமத்தில் இரைப்பையின் சுக்ஸ்திதியைப்பற்றி கவனிக்கவேண்டியது மிகவும் அவசியமென்பதைப்பற்றி நாம் அதிகம் எழுதவேண்டியதில்லை.

நரையீரலுக்கு வலிவைக்கொடுக்கும் பதார்த்தங்களாவன:—இலவங்கப்பட்டை, லவங்கம், மாதுளங்கனி, சாதிக்காய், திராக்ஷைப்பழம், கோரைக்கிழங்கு, எலம், காசினிவிரை, ஜரிஷ்க், பெருலவங்கப்பட்டை, பல்ஸான், ரூமிமஸ்தகி, பாதுரஞ்சுபோயா, ரோஜாப்பூ, பிஸ்தாக்கொட்டை, கிச்சிலிக்கிழங்கு, அசாரூன், அகிற்கட்டை முதலியவைகளாம். இவ்வஸ்துக்களை ஆகாரங்களாகவும் அவுஷதங்களாகவும் பக்குவம் செய்து சாப்பிட்டு வருவதினால், ஈரல் இயற்கை வலுவடைந்து தாதுவிர்த்தியும் போகசக்தியு முண்டாகும்; இன்னும், பிஸ்தாப்பருப்பு பலம் 5, கோதுமைநொய் பலம் 20, கசகசா பலம் 20, பாதம்பருப்பு பலம் 10-இவைகளைத் தண்ணீர் விட்டு மைபோலரைத்து ஷை தண்ணீரிலேயே கலக்கி வடிகட்டி அதோடு $1\frac{1}{2}$-வீசை சீனிசர்க்கரையைச் சேர்த்துக் கரைத்துக் காய்ச்சி மெழுகு பதத்தில், வேண்டுமான நெய்விட்டு இறக்கி, குங்குமப்பூ, விராகனிடை 1, கஸ்தூரி விராகனிடை $\frac{1}{2}$, பன்னீரிலரைத்துப்போட்டுக் கிண்டிவைத்துக்கொண்டு வேளைக்கு தோலா 3-வீதம் சாப்பிட்டுவர, நரையீரல், இருதயம், இரைப்பை, மூளை முதலியவைகளுக்கு வலுவும், இரத்தம், இந்திரியம், சந்தானம், ஆகியவை விருத்தியும், தேகபலமும் போகசக்தியுமுண்டாகும்.

## முஷ்டி மைதுனத்தினால் உண்டாகும் தாதுநஷ்டம்.

முஷ்டி மைதுனம் என்னும் மகாகொடிய பழக்கத்தைப்பற்றியும், முஷ்டி மைதுனத்தினால் இன்னின்ன ரோகங்கள் உண்டாகுமென்பதைப்பற்றியும், முறையே 88, 89, 90, 91-வது பக்கங்களில் விபரமாய்க் கூறியிருக்கிறோம். இக்கொடிய பழக்கமுள்ளவர்கள் மீண்டும் இல்லற இன்பத்தை அனுபவிப்பது மிகவும் துர்லபமாயினும் இக்கொடியபழக்கமுள்ளவர்கள், அதனை அடியோடு அகற்றிவிட்டு அடியிற்



கண்ட அவுஷதங்களிலொன்றைச் சாப்பிட்டு வருவதுடன், அடியிற் கூறியிருக்கும் மேற்பூச்சு மருந்துகளிலொன்றைப் பூசிவருவார்களா னல், கோசம் வலுத்து, நரம்புகளில் முறுக்கேறி, சோர்வு நீங்கி, இரத்த வோட்டம் வுண்டாகி, தாதுவிருத்தியும் போகசக்தியுமுண்டாகும்.

(1) முருங்கைவேர்ச்சார் படி 1, பசுவின் பால் படி 1, முருங்கைப்பூ படி 1, கருங்குருவை அவல் படி 1, ஆலம்விழுதுச் சூரணம் படி $\frac{1}{4}$, சீனி வீசை 1, நெய் வீசை $\frac{3}{4}$, தேன் வீசை $\frac{1}{2}$, அபின் தோலா $2\frac{1}{2}$, சாதிக்காய் தோலா $1\frac{1}{2}$, குங்குமப்பூ தோலா $\frac{1}{2}$, முருங்கைப்பூவை நிழலிலுலர்த்தி நெய்யில் வறுத்துக்கொள்க. அவலையும் அவ்வண்ணமே செய்க, பின்பு பாலையும் சாரையும் கலந்து அதில் ஷை சரக்குகளை அரைத்துப்போட்டு அடுப்பேற்றிக்கிண்டி எரித்து மெழுகு பதத்தில் மீதிநெய்யையும் தேனையும் விட்டுக் கிளறி பீங்கான் பாத்திரத்தில் வைத்துக்கொண்டு, வேளையொன்றுக்குத் தோலா 1-2-வீதம் காலை மாலை இருவேளையும் உட்கொள்ள, விந்து அதிகம் ஊறும், விந்து கட்டும், போகசக்தி, உற்சாகம், மனோதைரியம் முதலியன உண்டாகும். கோசம் உறுதிப்பட்டு, கோச எழுச்சி அதிகப்படும்.

(2) நல்ல துளையிடாத ஆணிமுத்து இஷ்டமானதை ஒருசிறு கலயத்திலிட்டு அதன்மேல் நான்கங்குலம் நிற்கும்படி பசும்பால் விட்டு, மூடி சீலைமண் செய்து கரி நெருப்பில் வைத்துப் பால் சுண்டுகிற வரையில் ஊதியெடுத்து, ஆறினபின் கழுவி பின் பன்னீர்விட்டரைத் துலர்த்திய முத்துச்சுண்ணம் விராகனிடை $\frac{1}{2}$, நற்பவளம் தேவையானதைத் துண்டுசெய்து எலுமிச்சம் பழச்சாற்றில் ஊறவிட்டெடுத்து முன் போல் ஒரு கலசத்திலிட்டு பால்விடாமல் சீலைமண் செய்து ஜாமநேரம் கரியோட்டில் வைத்து ஊதி எடுத்து முன்போலரைத்துலர்த்திய பவளச் சுண்ணம் விராகனிடை 1, தங்கரேக்கு விராகனிடை $\frac{1}{4}$, முருங்கைவிரை, ஆவாரன் விரை, மகிழம் விரை, நெருஞ்சி விரை, நீர்முள்ளி விரை, பருத்திவிரைப்பருப்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, சோம்பு வகைக்கு விராகனிடை 1, அபின் விராகனிடை $\frac{1}{2}$, இவைகளைச் சேர்த்து, மைபோல் தேன் விட்டரைத்து வேளைக்குச் சுண்டைக்காய் பிரமாணம் காலை மாலை இருவேளையும் சாப்பிட்டு, ஆவின் பாலில்

முருங்கைப் பூவைப் போட்டுக் காய்ச்சிச் சாப்பிட்டுவர, எவ்வகையான தாதுநஷ்டமும் தீரும். மகா மேன்மையான குணத்தைச் செய்யும். அனுபோகத்திலறியவும்.

(3) பாதாம்பருப்பு, பிஸ்தாப்பருப்பு, அக்ரோட் பருப்பு, சில்கூஜாப் பருப்பு, பருத்திவிரைப் பருப்பு, சாரப்பருப்பு, கசகசா, கழுகின எள்ளு இவற்றுள் மேற்றோல் நீக்கவேண்டியவைகளின் தோலை நீக்கி வகைக்குப் பலம் 1, மஞ்சள் முள்ளங்கிவிரை, முள்ளங்கிவிரை, முருங்கைவிரைப்பருப்பு, சிறுகாஞ்சோறி விரை, நாயுருவிரை, ஆவாரைவிரை, வெட்பாலையரிசி, கோதுமைநொய், வெங்காயவிரை, சந்தனவிரை வகைக்குப் பலம் 1½, சங்கராஷ்டகம், பூமி சருக்கரைக் கிழங்கு, பஹமனேசுபேத், பஹமனேசுருஂ, தாதரிசுபேத், தாதரிசுருஂ, சாலாமிஸ்ரி இவைகளின் சூரணம் வகைக்குத் தோலா 1, சீனிச்சருக்கரை பலம் 20, தேன் பலம் 5, இவைகளில் பருப்பினங்களையும், வித்தினங்களையும், தனித்தனியாக மிகவும் மெல்லிதாய் தண்ணீர்விட்டு வெண்ணெய்போல் அரைக்கவேண்டியது. அரைத்ததைத் தண்ணீரில் கலக்கி துணியில் வடிகட்டினால் திப்பி நிற்காதிருக்கவேண்டும். இவ்விதம் அரைத்து எல்லாம் ஒன்றாய்ச் சேர்த்துக் கொஞ்சம் தண்ணீர்விட்டு அதில் சருக்கரையையும் தேனையும் விட்டு அடுப்பேற்றிப் பாகுகாய்ச்சி, சங்கராஷ்டமுதலிய சூரணங்களைத் தூவிக் கிண்டிவைத்துக்கொண்டு, வேளையொன்றுக்குத் தோலா 1-1½-வீதம், காலைமாலை இருவேளையும் சாப்பிட்டுவர, மூஷ்டி மைதுனத்தினால் நேர்ந்த நரம்புத் தளர்ச்சிகளைப் போக்கும். மூத்திரக் குண்டிக்காய்களுக்கு இயற்கையான உஷ்ணத்தைக் கொடுத்துப் பலப்படுத்தும். போக சக்தியையும், விந்து விளைவையும் உண்டாக்கும், இருதயம் மூளை முதலியவைகளுக்குப் பலத்தைக் கொடுக்கும். தேகபுஷ்டி, தேகபலம், போக இந்திரியங்களின் வன்மை, மனதிற்கு ஆனந்தம் முதலியவைகளையுண்டாக்கும், விந்துவை சமாசப்படுத்தும்.

(4) தேத்தான்கொட்டை, முருங்கைவிரை, ஷை பட்டை, ஷை பிசின், அதிமதுரம், திப்பிலி, கருவேலம் பிசின், துத்திவிரை, வெண் சந்தனம், சுரைவிரைப்பருப்பு, தேங்காய், சீனி, இவை சமன்சேர்த்து



தண்ணீர்விட்டரின் கிழங்குச் சார்விட்டரைத்து இராத்திரியில் போஜனத்தின்பின் ஒரு விராகனிடை வீதம், சாப்பிட்டுப் பின் முருங்கைப் பிஞ்சும் கற்கண்டும் சேர்த்துக் காய்ச்சிய பசும்பால் சாப்பிட்டுவர எவ்வகையான தாதுநஷ்டமும் தீர்ந்து விந்துகட்டி மணிபோலாகும். போகம் நீக்கவும், குளிர்ச்சி அதிகரித்ததினால் உண்டான தாதுநஷ்டத்திற்குச் சுரைவிரையை நீக்கி கோஷ்டம் சேர்த்துக் கொள்ளவும்.

(5) உள்நரம்பு மேற்றோல் முதலியன போக்கிய ஆறுசேர்* மஞ்சள் முள்ளங்கியைப் பசும்பால் விட்டரைத்து, மூன்றுசேர் பசுவின் நெய்யில் நன்றாய்வறுத்து எடுத்து, அதோடு சாரப்பருப்பு பலம் 3, மேற்றோல் நீக்கிய கொப்பரைத் தேங்காய், பாதாம்பருப்பு இவை வகைக்குப் பலம் 2, அரைத்துச்சேர்த்து மூன்றுசேர் சர்க்கரையைப் பாகுகாய்ச்சி அதில் போட்டுக்கிண்டிவைத்துக்கொண்டு வேளை யொன்றுக்கு ஒரு தோலாவீதம், காலைமாலை இருவேளையும் சாப்பிட்டுவர கோசம் வலுவடைந்து, குண்டிக்காய், மூளை, இருதயம், இரைப்பை, ஈரல் முதலிய உறுப்புகளுக்குப் பலமேறி' தேகபலம், போகபலம், மனோபலம், வீரிய விர்த்தி முதலியன பெருகும். சத்தான சித்தி யுண்டாகும்.

## கோச போஷணி.

(1) நாபி, புனுகு, சவுக்காரம், படிக்காரம், வெண்காரம், அதிமதுரம், அகிற்கட்டை, திப்பிலி, நன்னாரிவேர், மதனகாமப்பூ இவைகளைச் சமனிடையாய்க்கூட்டி, சங்கன்பழச்சாற்றாலாட்டி, இரும்புடப்பியில் வைத்துக்கொண்டு தேவையானபோது, இலேசாக ஆண்குறியிற் பூசிவர கோசம் வலுவடைந்து தளர்ச்சி மாறும்.

(2) மாதுளன் பழத்தோல் பலம் 4, காற்படி ஜலத்திலிட்டுக் காய்ச்சி நான்கு பலம் கஷாயம் வடித்து, நல்லெண்ணை பலம் 2, லவங்கப்பட்டை, சிறுநாவற்பூ, நாயுருவிவிரை, முள்ளங்கிவிரை வெங்காயவிரை, அக்கிராகாரம், கோஷ்டம், வெள்ளை அலரி (அரளிப்பூச்செடி) வேர்ப்பட்டை, செவ்வலரி வேர்ப்பட்டை, வகைக்கு தோலா ½-வீதம்

* இதற்கு இந்துஸ்தானியில் காஜர் என்றும், பாரசில் காஜிரிஎன்றும், இங்கிலீஷில் காராட் என்றும், பிரஞ்சில் கர்ரோத என்றும், தமிழில் மஞ்சள் முள்ளங்கி என்றும் பேர்.

கூட்டிக்காய்ச்சிவடித்து பதினைந்து தினத்திற்குக் கோசத்தின் மீது பூசிவர சோர்வு நீங்கி வலிவு உண்டாகும்.

(3) உலர்ந்த வெள்ளலரிவேர்பட்டை, வெள்ளைக்குன்றிமணிப் பருப்பு, வகைக்குப்பலம் $1\frac{1}{2}$, நேர்வாளப்பருப்பு, கோஷ்டம் வகைக்கு தோலா 1-இவைகளைச் சேர்த்தரைத்து, நான்குபடி எருமைப்பாலிலிட்டுக்காய்ச்சிப் பிரைகுத்தி காலையில் கடைந்தெடுத்த வெண்ணெயை யுருக்கி, நெய்யாக்கி வைத்துக்கொள்க. (மோர் கொடியவிஷமாகையால் உடனே பூமியில் கவிழ்த்து விடவும்) மேற்படி நெய்யில் ஒரு குன்றிமணி இடை எடுத்து வெற்றிலையிற்றடவி காலையில்மட்டும் சாப்பிட்டு வருவதோடுங்கூட,கோசத்திலும் பூசி வெற்றிலையை அதன்மேற் சுற்றி பட்டி கட்டி வரவேண்டும். இவ்விதம் இரண்டுவாரம் செய்துவர எவ்வகைக் காரணத்தாலுண்டான கோசமெலிவும் சோர்வும் நீங்கும்.

(4) புனுகு, ஜவ்வாது, அம்பர் இவை வகைக்கு 3 - குன்றிமணியெடையெடுத்து, கருஊமத்தன் இலைரசத்தில் மத்தித்து தடவி, அதன்மேல் சிற்றாமணக்கிலையை வைத்துப் பட்டி கட்டவும். இவ்விதம், இரண்டு வாரம் செய்துவர; எவ்வித சோர்வும் நீங்கி, கோசம் விம்மி, லேபனசக்தி, போகசக்தி முதலியன உண்டாகும்.

(5) அக்கிராகாரம், விராகனிடை $1\frac{1}{2}$, லவங்கம் சடாமாஞ்சில், சம்பங்கிவேர், பருப்புக்கீரை விரை, சீமை நன்னாரிவேர், மரமஞ்சள், அரிசித்திப்பிலி, சீமை யோமம், சொரியோமம், நிலக்கடம்பு, சுக்கு, தாளிசப்பத்திரி, குந்திரிகம், ரூமிமஸ்தகி, வகைக்கு விராகனிடை $\frac{3}{4}$, சீமை சாமந்திப்பூ தோலா 1, கசப்பு வாதுமைப்பருப்பு தோலா 2, சித்தாமணக்குப் பருப்பு தோலா 3, சீமைக்கடுகு தோலா 4, காட்டு எள்ளெண்ணெய்படி $\frac{1}{4}$, சரக்குகளை யெல்லாம் ஒன்றாயிடித்து, நான்குபடி ஜலத்திலிட்டுச் அடுப்பிலேற்றி அரைப்படியாகச் சுண்டக்காய்ச்சி வடிகட்டி எண்ணெயுடன் சேர்த்து, நீர்வற்றக்காய்ச்சி புட்டியில் விட்டு வைத்துக்கொண்டு, கோசத்தின்மேல் பூசிவர, நரம்புத்தளர்ச்சி, ஆண்குறி சோர்வு நீங்கும், சிலருக்கு ஆண்குறி யொருபக்கமாய் வளைந்திருப்பதுண்டு, அவ்வித வியாதியும் இத்தைலத்தினால் நீங்கும்.

(6) வெள்ளைக் குன்றிமணியின் பருப்பு, பாலப்பழவிதையின்



பருப்பு, கிராம்பு வகைக்கு தோலா 5, இம்மூன்றையும் அடிகூர்மையுள்ள பழய சோடா புட்டியில் போட்டு. புட்டியின் வாய்க்குக் கார்க்குக்குப் பதிலாக ஒரு அங்குலம் வெளியே நீண்டிருக்கும்படி, குதிரை மயிரால் அடைத்துத் தேவையான களிமண்ணுடன் இலவம்பஞ்சு கூட்டி, இடித்துப் பிசைந்து புட்டியின் வாயைநீக்கி மற்றப் பாகமெல்லாம் இரண்டங்குல கனத்தில் பூசி, 5-6-நாள் வரையில் உலர்த்தி, ஆறு குடம் தண்ணீர் பிடிக்கக்கூடிய ஓர் மண்பானையின் மத்தியில் டை புட்டியின் வாய் நுழையக்கூடியதாய் வட்டமான துவாரமிட்டு, அதாவது குதிரை துவாரத்தில் புட்டியைத் தலைகீழாய்க் கவிழ்ந்து, பானையடியிலுள்ள மயிரால் அடைத்துள்ள புட்டியின் வாய்ப்புறம் டை புட் துவாரத்தின் வழியாய் வெளியே நீண்டிருக்கும்படி செய்து, வேறொரு, புட்டியின் வாய் கொள்ளத்தக்கதான வாய் அகலமுள்ள கோதுமை டியைச் சொருகிக் காற்று சிறிதும் உள்ளே செல்லாதபடி, மாவினால் நன்றாய் அடைத்து, அடியிலிருக்கும் புட்டிக்குக் கீழே ஒரு பாத்திரத்தில் குளிர்ந்த தண்ணிர் வைத்து, பானைக்குள்ளிருக்கும் களி மண் பூசியுள்ள புட்டியைச் சுற்றிலும் காட்டு எருக்கள் போட்டு எரித்து, தீயடங்கினபின் பார்க்க அடியிலிருக்கும் புட்டியில் தைலம் இறங்கியிருக்கும். இத்தயிலத்தை ஒரு ஊசியினால் தொட்டு ஒரு வெற்றிலையில் தடவி, வெற்றிலையோடு சேர்த்துச் சாப்பிட்டுக் காய்ச்சிய பசுவின் பால் பருகவும். இவ்விதம் காலை மாலை இருவேளையுமாகப் புதிய வியாதிக்கு 21-நாளும், நீடித்த வியாதிக்கு 44-நாளும் சாப்பிடவேண்டும். இத்தைலத்தில் சிறிதெடுத்து கோசத்தின் மேற் பூசி வர எவ்வகையான, நரம்புத்தளர்ச்சியும் நீங்கி போக சக்தியும், சந்தான சித்தியுமுண்டாகும். இத்தைலத்தை ஸ்திரீகள் மேற் சொல்லியபடி வெற்றிலையிற்றடவி சாப்பிட்டுக் காய்ச்சிய பசுவின் பாலில் கால்ரூபாயிடை நாகப்பூவும் கொஞ்சம் சீனியும் சேர்த்துக் கலக்கிச் சாப்பிட்டு வருவார்களானால் பெண்மலடு நீங்கி புத்திர சந்தானமுண்டாகும்.

(7) யானை தந்தத்தின் தூள், அக்கிராகாரப்பட்டை, குங்குமப்பூ, எருக்கன் இலைச்சார் வகைக்குப் பலம் 1, இந்நான்கு மருந்துகளையும்

ஒன்றாய்ச் சேர்த்தரைத்து அதற்குச் சமனிடை நல்லெண்ணெயும் ஒரு பலம் புலிக்கொழுப்பும் சேர்த்து ஓர் பாத்திரத்திலிட்டு அடுப்பி லேற்றிக் காய்ச்சி மருந்துகள் சுண்டி எண்ணெயில் புகைச்சலுண்டா குந்தருணம், கீழேயிறக்கி ஆறினபின் புட்டியிலிட்டு மூடிவைத்துக் கொண்டு இரவு படுக்கைக்குப் போகுமுன் 44-தினங்களுக்குக் கோசத் தில் பூசிவர, கோசம் வலுவடைந்து நரம்புகள் முறுக்கேறி, போக சக்தியும் சந்தான சித்தியுமுண்டாகும்.

(8) ஒருபடி பசும்பாலில் அறுபது வெள்ளெருக்கம் பூவைப் போட்டுக் காய்ச்சி மேற்படி பூக்குழைந்தபின்பு எடுத்துவிட்டு, பிறகு பாலைச் சிவக்கக் காய்ச்சிப் பிரைகுத்தி கடைந்தெடுத்த வெண்ணை, புனுகு, கோரோசனை இவைகளையோர் நிறையாய் மத்தித்து கோசத் திற் பூசிவர எவ்விதமான நரம்புத் தளர்ச்சியும் நீங்கும். புணர்ச்சியில் இன்பம் அதிகரிக்கும். தேகபலமுடையவர்கள் இதைப் பூசிப் புணர்ந் தால் விந்திறங்காது.

## மூளை பலஹீனத்தினால் காணும் தாதுநஷ்டம்.

மூளையைப்பற்றிய விபரங்களும், மூளை பலஹீனப்படுவதற்கான காரணங்களும் மூளை பலஹீனத்தினாலுண்டாகும் தாது நஷ்டத்தின் லக்ஷணங்களும், முறையே 21, 22, 23, 24-வது பக்கங்களில் விபர மாய்க் கூறியிருக்கிறோம். மூளையே பஞ்சேந்திரியங்களுக்கும். ஆதார மாயும், தேகத்திலுள்ள சர்வ நரம்புகளுக்கும் பிறப்பிடமாயும், புத்தி, பகுத்தறிவு, பயம், கிலேசம், கோபம், சந்தோஷம் முதலியவைளுக்கு மிகவும் முக்கியமாயும் இருக்கிறது. மூளையே தேகத்திலுள்ளி சர்வ உறுப்புகளிலும் உத்கிருஷ்டமானது, ஆகையால் மூளை பலஹீனப்பட் டவர்கள் தக்ஷணமே அடியிற்கண்ட மருந்துகளிலொன்றைச் சாப் பிட்டு, பின்பு இரத்தக்குறைவினால் காணும் தாதுநஷ்டத்திற்குச் சொல்லியிருக்கும் அவுஷதங்களிலொன்றைச் சாப்பிட்டுதேகதிடத்தை யுண்டுபண்ணிக் கொள்ளவேண்டியது.

சிகிச்சை.— இயற்கைக்கு அதிகமான உஷ்ணத்தினால் மூளை பலஹீனப்பட்டவர்கள். நெய், நெல்லிமுள்ளி, பிஹியின்பூ, பன்னீர், துளையிடாத நல்லமுத்து, சேப்புப்பூ, சேப்புப்பழம், ரோஜாப்பூ, அம்



இயற்கைக்கு அதிகமான
ருத்பூ, அம்ருத்பழம் முதலியவைகளையும், சுக்கு, சடாமஞ்சி,
குளிர்ச்சியினால் மூளை பலஹீனப்பட்டவர்கள், காடைகளின் மாமிசம்,
வெள்ளாட்டுப்பால், பக்ஷிகளின் தலை மூளை, அகர்கட்டை,
சேவலின் மாமிசம், குந்திரிகம், கோரைக்கிழங்கு,அகில், ஆகாரங்களாகவும்
அம்பர், இலவங்கம், கஸ்தூரி முதலியவைகளையும் இயற்கை
அவுஷதங்களாகவும் செய்து சாப்பிட்டு வருவதினால் மூளை
வலுவடைந்து தாதுவிர்த்தியும் போகசக்தியும் முண்டாகும்.

பன்னிரண்டுஇராப்பகல் ஜலத்

(1) தேவையான சாலாமிஸ்ரியை ஒவ்வொன்றிலும் 10-12 தில் ஊறவைத்தெடுத்து, இரும்புக் கதிரினால், அவைகளினின்று இடங்களில் குத்தி கையினால் நன்றாய் அழுத்த துடைத்து வழுவழுப்பான ஜலம் வெளிப்படும். அந்த ஜலத்தைத் எடுத்துப் பிழிய, விட்டு முன்போலவே ஜலத்தில் ஊறப்போட்டு அதைத் முன் போலவே அவைகளினின்று ஜலம் வெளிப்படும். மறுநாள் துடைத்து விட்டு ஜலத்தில் ஊறப்போட்டு முன்போலவே வழுவழுப்பான ஜலம் எடுத்துப்பிழியவும். இப்படியாக அதினின்று பின்பு நன் வெளிப்படுவது நிற்கிறவரையில் செய்யவேண்டியது. கெட்டித்தேனைக்காய்ச்சி ஞய்த்துடைத்துவிட்டு, அதற்கிரண்டு பங்கு மூன்று தினத்திற்குவைத்து நுரை நீக்கி சுத்திசெய்து அதிற் போட்டு சிறு தீயாக விடவும். நான்காம் நாள் அடுப்பேற்றி பொங்கவிடாது திரும்பவும் $\frac{3}{4}$-மணி நேரம் எரித்து, இறக்கி மூன்றுநாள் வைத்திருந்து இவ்வித அடுப்பிலேற்றிமுன்போலவே எரித்து இறக்கவேண்டியது, பாகுபதம் வந்த மாக அந்தத்தேன் பாகுபதமாகிறவரையில் செய்து இருவேளை பின்பு பத்திரப்படுத்தி 40-நாள் சென்றபிறகு காலைமாலை ஊறுக்குமிழி யும் தோலா 1—2 வீதம் உபயோகித்துவரச் சுக்கிலம் ஆகியவைகளை யைப்போல் சுரக்கும். போகசக்தி, தேகபலம், காமம் முதலிய அதிகப்படுத்தும். மூத்திரக்குண்டிக்காய்கள், இடுப்பு, முதுகு பூரணசக்தியை வைகளுக்கு அதிகபலத்தை யுண்டாக்கும். மூளைக்குப் யுண்டுபண்ணி மனதிற்கு ஆனந்தத்தைக் கொடுக்கும்.

63927

மேற்றோல் நடு

(2) நன்றாய்த் தேறின மஞ்சள் [illegible] கியின் சுத்திசெய்தது பலம் 24, சதையுள்ள நரம்பு. முதலியன நீக்கி நன்றாய்ச்சுத்திசெய்தது பலம் 24, சதையுள்ள

LB

திம், பருமனுமானதாய்ப் பொறுக்கி யெடுத்த பேரீச்சங்காய்பலம் 12, வறுத்த பொட்டுக்கடலைமா, கோதுமை நொய்வகைக்கு பலம் 1½ *பூராசர்க்கரை பலம் 24, கெட்டித்தேன் பலம் 12, முட்டை மஞ்சள் கரு 20, பிஸ்தாப்பருப்பு பாதாம்பருப்பு, அக்ரோட்பருப்பு, கொப்பரைத்தேங்காய் இவற்றின் மேற்றோல் நீக்கினது வகைக்குப் பலம் 1, சிறுநெருஞ்சிமுள்ளு, லவங்கப்பட்டை, மேற்றோல் நீக்கின சுக்கு, பேரரத்தை இவைகளின் சூரணம் வகைக்குப் பலம் ¼, குங்குமப்பூ, கஸ்தூரி வகைக்கு விராகனிடை ¼, முள்ளங்கிக் கிழங்கையும் பேரீச்சங் காயையும், பசும்பாலில் வேகவைத்து நன்றாய்க் குழைந்தபின் எடுத்து மாஉரலிலிட்டு மெழுகுபோலிடித்துக் கொள்ளவும். கடலைமா, கோதுமைநொய் இவ்விரண்டையும் கொஞ்சம் நெய் வார்த்துத் தனித்தனியாக வறுத்துக்கொள்ளவும். தோலோடு முழு முட்டைகளைத் தண்ணீரிலிட்டு வேகவைத்து மஞ்சட் கருவை எடுத்துக்கொள்ளவும். பருப்பினங்களை நன்றாய் அரைத்து மாவுடன் கலந்துகொள்ளவும். சருக்கரையுடன் ஜலமும் தேனும் சேர்த்துச் சற்றுக் காய்ச்சி வடிகட்டிப் பின்பு அடுப்பேற்றி பாகுபதத்தில் முன் கிழங்கையும், பேரீச்சங் காய்களையும் அதிலிட்டு மூன்று கொதிவந்தபின் கீழிறக்கி, முட்டைக் கருக்களைச் சேர்த்து நன்றாய் கீழ்மேலாகப் புரட்டி, பருப்பினங்களையும், சூரணத்தையும் சேர்த்து, குங்குமப்பூ கஸ்தூரி, இவ்விரண்டையும் நன்றாய்ப் பொடிசெய்து சேர்த்துப் புரட்டியிறக்கிக் கொள்ளவும். காலை, மாலை, இருவேளையும் தோலா 1-1½ வீதம் உபயோகித்துவர, தேகத்தின் சூடு குளிர்ச்சி, முதலியவைகளை சமப்படுத்தும், மனதிற்கு சந்தோஷத்தை யுண்டாக்கும். இடுப்புநோய், மூளை, மூத்திரக்குண்டிக்காய் பீஜம், முதலிய வீறுப்புகளின் பல பலஹீனத்தைப்போக்கும், விந்து ஊற்றைப்போல் சுரக்கும், சகிக்கக் கூடாதபோக சக்தியுண்டாகும்.

(3) நாலுபலம் பனைவெல்லத்தை இரண்டுபடி பனைப்பதினியில் கரைத்துப் பாகுகாய்ச்சி, அதில் தேங்காய்ப்பால், இளநீர், கருப்பஞ்சாறு, பசும்பால், நெய் வகைக்குப்படி 1-இவைகளை ஒன்றாய்க்கலந்து

*இதுவே அஷ்டகிராம் சர்க்கரை, அல்லது கலாத்து சர்க்கரை என்று வழங்குகிறது



காய்ச்சி நெய்யை வடித்துவிட்டு, ஆலம்வித்து, நாயுருவிவித்து, பருத்தி விரைபருப்பு, ஆவாரன்வித்து, முருங்கைவித்து, பூனைக்காலிவித்து, சீந்திச்சருக்கரை, கிராம்பு, சாதிக்காய், சாதிப்பத்திரி, ஏலம், மிளகு, வால்மிளகு, லவங்கப்பத்திரி, குரோசாணி ஓமம், கோஷ்டம், சடாமாஞ்சி, வாலுளுவையரிசி, சிறு நாகப்பூ, குங்குமப்பூ, சுக்கு, திப்பிலி, மிளகு, கடுக்காய், தானிக்காய் நெல்லிமுள்ளி, தாளிசபத்திரி, சீரகம், வெந்தயம், நிலப்பனங்கிழங்கு, பூமி சர்க்கரைக்கிழங்கு, வெட்டிவேர், விலாமிச்சன்வேர், திராக்ஷப்பழம், பேரிச்சம்பழம், சாரப்பருப்பு, ஓமம், கசகசாவகைக்கு விராகனிடை 3, சுத்திசெய்த கஞ்சா பலம் 1½-இவைகளை இடித்துச்சூரணம் செய்து, தூவிக்கிண்டி மெழுகுபதத்திலிறக்கி, ஆற்றித்தேன்படி 1, வேகவைத்தகோழிமுட்டை மஞ்சட்கரு 5, சீனிச்சருக்கரை பலம் 5; இவைகளைச் சேர்த்துப்பிசைந்துகொண்டு. காலை மாலை இருவேளையும், சுண்டைக்காய் பிரமாணம் சாப்பிட்டு வர, மேகம், அதிசாரம், சுரம், வாயுதிரும், மூளைக்குவலிவு உண்டாகும். நீர்த்துப் போனவிந்துகெட்டியாகும், வீரிய விர்த்தியும்தேககாந்தியுமுண்டாகும்.

(4) அபின், மதனகாமேஸ்வரப்பூ, கிராம்பு, ஜாதிக்காய், மராட்டிமொக்கு, தங்கபஸ்பம், சாம்பிராணிப்பதங்கம், முருங்கைவித்து, ஆலம்வித்து, அரசம்வித்து, அத்திவித்து, அதிமதுரம் இவைகளை யோர் நிறையாய் முருங்கைப் பூச்சாற்றாலரைத்து சுண்டைக்காய் பிரமாணம், மாத்திரைசெய்து, பசும்பாலில் முருங்கைப் பூவைப்போட்டுக் காய்ச்சி வடித்து அதில் ஒரு மாத்திரையை யுரைத்து ஒரு மண்டலம் புளிநீக்கிப்புசிக்க, தேகம் வலுத்து, மூளை, குண்டிக்காய், இரைப்பை முதலியவுறுப்புகள் வலுவடைந்து துரிதஸ்கலிதத்தை நிவர்த்திசெய்யும் விந்துவைக் கெட்டிப்படுத்தி போகசக்தியை யதிகப்படுத்தும்.

(5) துளையிடாத நல்முத்து விராகனிடை ½, தங்கம் விராகனிடை ¼, நற்பவளம் விராகனிடை 1, முருங்கைவித்து, ஆவாரன்வித்து, மகிழம்வித்து, நெருஞ்சிவித்து, நீர்முள்ளிவித்து, பருத்தி விரைப்பருப்பு, ஜாதிக்காய், ஜாதிப்பத்திரி, கிராம்பு வகைக்கு விராகனிடை 3, அபின் விராகனிடை ½ இவைகளைத் தேன் விட்டரைத்து சுண்டைக்காய் பிரமாணம் மாத்திரைசெய்து சாப்பிட்டு பசும்பாலில் முருங்கைப்பூவைப்

போட்டுக்காய்ச்சி ஒருமண்டலம் சாப்பிட்டு வர, மூளை வலுவடைந்து ஞாபகசக்தி யதிகரித்து, தேகக்கட்டுண்டாகி வீரியவிர்த்தியுண்டாகும்.

(6) அளவுக்கு மிஞ்சிய சம்போகத்தினாலுண்டான தாதுநஷ்டத்திற்கு, டிஞ்சர் ஆவ் காந்தரிடிஸ் [Tincture of Cantharidis] முப்பது துளி, டிஞ்சர் பெர்ரி பெர்குளோரிடி (Tincture ferri perechloridi) முப்பது துளி, டிஞ்சர் ஆவ் நக்ஸ்வாமிகா (Tincture of nux vomica) முப்பதுளி இம்மூன்றையும் 3-அவுன்ஸ் சுத்தஜலத்துடன் கூட்டி, வேளையொன்றுக்கு ஒரு அவுன்ஸ்வீதம், ஆகாரம் செய்து ஒருமணி நேரத்திற்குப் பிறகு சப்பிட்டு வர வீரியவிர்த்தியும் போகசக்தியுமுண்ண்டாகும்.

(7) தங்கபஸ்பத்தை அடிக்கடி சாப்பிட்டுவருவதினால் புருஷர்களுக்கு தாதுவிர்த்தியுண்டாவது மன்றி, ஸ்திரீகளுக்கும் சூதகபந்தம் நீக்கி சம்போக இச்சையுண்டாகும். கோசத்தளர்ச்சிக்கு இது மிகவும் நல்லமருந்து. தங்க உப்பு அதாவது கோல்டு குளோரிடம், (Gold Chloridum) $\frac{1}{16}$ கிரேயினை அதாவது ஒரு நெல்லெடையில் 16-ல் ஒரு பாகத்தைத் தண்ணீரில் கலந்து சாப்பிட வீர்யவிர்த்தி, போகசக்தி, சந்தானசித்தி, ஞாபகசக்தி முதலியன வுண்டாகும். தங்க உப்பு கொடிய விஷமாகையால் அளவிற்கதிகமாய்ச் சாப்பிட்டுவிட்டால் கோழி முட்டையின் வெள்ளைக்கரு, பசும்பால் முதலியவற்றை முறிவாகக் கொடுக்கவேண்டியது.

(8) நிலப்பனங்கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு இவற்றைப் பச்சையாக எடுத்து, அவற்றோடு முள்ளில்லாத இலவமரத்துப்பிசின், நெருஞ்சிவித்து, நீர்முள்ளிவித்து, பூனைக்காலிவித்து, சருக்கரை இவைகளைச் சமனிடையாய்ச் சேர்த்து நசுக்கிப் பசும்பாலிற் கூட்டிக்காய்ச்சி, இரவுபடுக்கைக்குப் போகுமுன் சாப்பிட்டுவர, சுக்கிலவிர்த்தி, போகசக்தி, ஞாபகசக்தி, சந்தானசித்தி முதலியனவுண்டாகும்.

## குறிப்பு.

தேகதிடமும் தாதுபுஷ்டியுமில்லாதவர்கள் போகசக்தியைக் குறைக்கும் அடியிற்கண்டவஸ்துக்களை ஒருபோதும் உண்ணலாகாது.



அவைகளாவன,—சதாபிலை, அதன்விரை, புளிப்புமாதுளம் பழம், பேதிக்கிழங்கு, கர்ப்பூரம், இஸ்பகோல் விரை, குரோசானீயோமம், பொதினாயிலை, சீரகம், கம்பிளிபூச்சிசெடி விரை, பேரிக்காய், மிஷ்ட், மிஷ்ட், காசினிவிரை, அதிகக்குளிர்ச்சியாகிய ஜலம், காடி ஜலம், கொள்ளு, எலுமிச்சம்பழம், புளிப்புவஸ்துக்கள், அதிக சூடாகிய ரொட்டி இனங்கள் முதலியவைகளாம். அதவா இவ்வஸ்துக்களை அவசியம் சாப்பிடவேண்டுமானால் அவைகளுக்குத்தக்கமாற்று சேர்த்து சாப்பிடவேண்டும். அப்படிக்கு மாற்று சேர்த்தும் தொடர்ச்சியாய்ச் சாப்பிடலாகாதென்பதை ஒருபோதும் மறக்கலாகாது.



சம்போக சந்தோஷமளிக்கப் பேர்பெற்ற

# மன்மதரஞ்சன் மாத்திரை

நாம் அனேக ஆயுர்வேத சாஸ்திரங்களையும், ஆங்கிலேய சாஸ்திரங்களையும் ஆராய்ச்சிசெய்து, அரும்பிரயாசையுடன் கண்டுபிடித்ததுமான "மன்மதரஞ்சன் மாத்திரையை" சாப்பிட்டு வருவதினால் பால்ய போகத்தாலும், மிதமிஞ்சிய அதிக போகத்தாலும், திரேக சுபாவமறிந்து போகிக்காததாலும், முஷ்டி மைதுனத்தினாலும், அபரிமிதமான மதுபானத்தினாலும், நெடுநாள் வியாதியினாலும் உண்டான மேகச்சூடு, கண்ணெரிவு, சொப்பன ஸ்கலிதம், துரிதஸ்கலிதம், இருதயத்துடிப்பு, அதிதாகம், அசதி, துர்பலம், பசிமந்தம், இடுப்பு வலி, புணர்ச்சிக்குப் பின் ஆயாசம் காணுதல் முதலிய துர்க்குணங்களைப் போக்கி, மனோற்சாகம், ஞாபகசக்தி, போகசக்தி, சந்தானசித்தி, வீரியவிர்த்தி, இந்திரியக்கட்டு, தேகபலம், சரீராரோக்கியம் முதலியவைகளை யுண்டாக்கி, தீர்க்கமாயும் தீவிரமாயும் தாது புஷ்டியை யுண்டாக்கும். பரீக்ஷித்துப்பார்க்கவும். இதற்கு வேறு பத்தியமே கிடையாது. புஷ்டியான ஆகாரம் சாப்பிடுவது அவசியம். இது கோனன்ட் என்ற ஓர் அமெரிக்க டாக்டர் கையாடிவந்த அருமையான முறை 36-மாத்திரைகள் அடங்கிய புட்டி 1-க்கு விலை ரூபா 2. இந்தியா, பர்மா, சிலோன் முதலிய விடங்களுக்கு வி. பீ. சார்ஜ் 1-முதல் 6-புட்டிகள் வரையில் அனுப்ப அணா 4. பினாங்கு, சிங்கப்பூர் முதலிய அன்னிய நாடுகளுக்கு தபால் சார்ஜ் உள்பட முன்பணம் 3-ஷில்லிங், 8-பென்சு, வேண்டியவர்கள் அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதியனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.



மானேஜர்.

**என். ஆர். டிஸ்பென்ஸரி, கும்பகோணம்.**

## அங்கவிபாக அட்டவணை.

## INDEX OF THE ANATOMY


| | | | |
|---|---|---|---|
| அண்ட கவசம் ... | 54 | ஊன் ... | 11 |
| அண்டம் ... | 54 | எலும்புகள் | 2 to 14 |
| அபானம் ... | 34 | எலும்புக்கூடு ... | 14 |
| அல்குல் ... | 61 | ஐமன் ஜவ்வு (Hyman)... | 61 |
| அறிவுக் கருவிகள் ... | 24 | ஐம்புலன்கள் ... | 24 |
| அன்னவாகி ... | 37 | கடிதடம் ... | 61 |
| அன்னாசயம் ... | 37 | கணையம் ... | 35 |
| ஆக்கிராண நரம்புகள் ... | 25 | கண் ... | 24 |
| ஆசனம் ... | 34 | கண்குழிகள் ... | 10 |
| ஆண்குறி ... | 51,52 | கண்டம் ... | 9 |
| இஸ்கியம் ... | 4 | கண்ணீர்க் கோளம் ... | 10 |
| இடுப்பு முள்ளெலும்புகள் | 11 | கண்மணி ... | 26 |
| இடுப்பெலும்பு ... | 4 | கண்ரெப்பை ... | 49 |
| இடைக்குழி ... | 4 | கபாலம் ... | 5 |
| இதயம் ... | 28 | கருக்குழி ... | 63 |
| இந்திரிய கமலம் ... | 55 | கருக்கூடுகள் ... | 65 |
| இந்திரிய பாத்திரம் ... | 55 | கருப்பக்கோளரை ... | 63 |
| இந்திரியம் ... | 58 | கருப்பாஸயம் ... | 63 |
| இரசாயனி ... | 33 | கருப்பிண்டம் ... | 184 |
| இரத்தம் ... | 40 | கருப்பை ... | 63 |
| இருதய கோசம் ... | 28 | கல்லீரல் ... | 34 |
| இருதயம் ... | 28 | கவாடம் ... | 28 |
| இரேதஸ் ... | 56 | கழுத்து முள்ளெலும்புகள் | 11 |
| இரைக்குழல் ... | 32,37 | காது ... | 27 |
| இலியம் ... | 4 | காமநீர் ... | 56 |
| இரைப்பை ... | 32,37 | கால் ... | 3 |
| இறைச்சி ... | 14 | கிருஷ்ணமண்டலம் ... | 26 |
| ஈரல் ... | 34 | குடல்கள் ... | 33 |
| உதடுகள் ... | 24 | குண்டிக்காய் ... | 38 |
| உதிரம் ... | 40 | குதம் ... | 34 |
| உபஸ்தம் ... | 61 | குய்யம் ... | 61 |
| உமிழ் நீர்க்கோளம் ... | 32,37 | குரல்வளை ... | 37 |

| | |
|---|---|
| குருத்தெலும்பு ... | 10 |
| கூபகக்குழி ... | 4 |
| கூபகம் ... | 4 |
| கை ... | 5 |
| கைக்குளசு ... | 5 |
| கோசம் ... | 52 |
| ஜடரம் ... | 28 |
| சதை ... | 14 |
| சருமம் ... | 47 |
| ஜலத்துவாரம் ... | 33 |
| சிசினம் ... | 51,52 |
| சிரசு ... | 5 |
| சிரவங்கள் ... | 28 |
| சிறிய மூளை ... | 21 |
| சிறு குடல் ... | 33 |
| சினைப்பாதை ... | 60,66 |
| சினைப்பைகள் ... | 65 |
| சுகநீர்க் கோளம் ... | 54 |
| சுக்கில மண்டலம் ... | 26 |
| சுக்கிலம் ... | 56 |
| சுக்கிலாசயம் ... | 55 |
| சுவாசக்குழல் ... | 31,36 |
| சுவாசப்பை ... | 31 |
| செவுராட்டி ... | 35 |
| ஸ்திரீ பீஜங்கள் ... | 45 |
| ஸ்திரீயின் ஜனனேந்திரியங்கள் ... | 60 |
| ஸ்வேத கோளங்கள் ... | 48 |
| ஞானேந்திரியங்கள் ... | 24 |
| தசை ... | 14 |
| தந்துகி (Capillaris) ... | 19,44 |
| தாது ... | 56 |
| திரிகஸ்தான எலும்பு ... | 4 |
| தீனிப்பை ... | 37 |
| துணைக்குக்ஷி ... | 32 |
| தொனித் தந்திகள் ... | 9 |
| தோலி ... | 47 |
| தோல் ... | 47 |

| | |
|---|---|
| நாக்கு ... | 8 |
| நாக்கெலும்பு ... | 9 |
| நாசி ... | 10,25 |
| நாடிகள் ... | 15 |
| நாதக்குமிழ்கள் ... | 66 |
| நாதக்குழல் ... | 66 |
| நாதம் ... | 67 |
| நாதவாகி ... | 66 |
| நாதாசயங்கள் ... | 65 |
| நாளங்கள் ... | 19 |
| நிணக்கோளங்கள் ... | 48 |
| நிணநரம்புகள் ... | 19 |
| நிதம்பங்கள் ... | 60,62 |
| நீர்த்தாரை ... | 53 |
| நுரையீரல் ... | 30 |
| பஞ்சேந்திரியங்கள் ... | 24 |
| பற்கள் ... | 6 |
| பவனவாய் ... | 35 |
| பாதத்தின் எலும்புகள் ... | 4 |
| பான்கிரியஸ் (Pancreas) | 35 |
| பித்தப்பை ... | 34 |
| பீஜக்கொடி ... | 54 |
| பீஜப்பை ... | 54 |
| பீஜம் ... | 54 |
| பீலிகம் ... | 54 |
| புப்புஸம் ... | 30 |
| புருஷ ஜனனேந்திரியங்கள் | 51 |
| புலால் ... | 14 |
| பெரிய மூளை ... | 21 |
| பெருங்குடல் ... | 33 |
| பெருநாடி ... | 15 |
| பேசி ... | 14 |
| பொய்க்குழி ... | 5 |
| போர்ஸெட் ... | 62 |
| மணிக்கட்டு ... | 5 |
| மண்ணீரல் ... | 35 |
| மத ஜலம் ... | 56 |
| மலக்குடல் ... | 34 |





| | |
|---|---|
| மலத்துவாரம் ... | 34 |
| மாமிசம் ... | 14 |
| மார்பெலும்புகள் ... | 11 |
| முகுளம் ... | 21 |
| முட்டைப் பைகள் ... | 65 |
| முதுகு முள்ளெலும்புகள் | 11 |
| முள்ளந்தண்டு ... | 10 |
| மூக்கு ... | 10 |
| மூத்திரக் குண்டிக்காய் ... | 30 |
| மூத்திரதாரை ... | 63 |
| மூத்திர துவாரம் ... | 53 |
| மூத்திரப்பை ... | 54 |
| மூளை ... | 21 |
| மூளைக்கொடி ... | 11 |
| மெய்க்குழி ... | 5 |
| யகிர்தகண்டக்குழல் ... | 34 |
| யோனித்துவாரம் ... | 60 |
| யோனிலிங்கம் ... | 63 |

| | |
|---|---|
| யோனிவாய் ... | 60 |
| ரத்தாசயத்தின் விபரம் ... | 28 |
| ரத்தாசயம் ... | 28 |
| ரூப உற்பத்தி சவ்வு ... | 26 |
| ரோமங்கள் ... | 62 |
| லிங்கம் ... | 52 |
| லிங்க கவசம் ... | 52 |
| வயறு ... | 32 |
| வாசனை நரம்பு ... | 25 |
| வாய் ... | 24 |
| விதை | 24,32,54 |
| வித்து ... | 54 |
| விந்து ... | 56 |
| விந்துக் களஞ்சியம் ... | 55 |
| விருஷணம் ... | 54 |
| வீணைதண்டு ... | 52 |
| வீரியம் ... | 56 |
| வெள்ளீரல் ... | 30 |


---

# விஷய அட்டவணை

## அ


அகாலப் பிரஸவம் 204, அகாலப்பிரஸவம் உண்டாவதின் காரணங்கள் 205, அக்கினிமந்தம் 36-288, அங்கசோதனை 3, அங்கவிபாகம் 3, அங்காதிபாதம் 3, அசீரணபேதி 290, அசீரணம் 288, அசுபாவமலடு 91, அஸ்த உதயம் 225, அஸ்தப்பிரயோகம் 88, அஸ்ருக்தரரோகம் 79, அட்டை 239, அணுதரிசனி 58-92, அதிசாரம் 36-290, அபதானகவாதம் 36, அயகாந்த செந்தூரம் 286, அயசெந்தூரம் 286, அரவம் தீண்டல் 254, அரையாப்புக்கட்டி 168, அலஸிரோகம் 170, அல்பஜுரம் 235, அழகும் ஆயுளும் பலமுமுள்ள பாலகர்களை அடையும் வழிகள் 140, அழிகர்ப்பம் 204, அழிகர்ப்பலக்ஷணம் 206, அழுக்கு 232, அளவுக்கு மிஞ்சிய சம்போகத்தால் ஆண் தன்மை குறையும் விதம் 93, அளவுக்கு மிஞ்சின சம்போகத்தினால் விளையும் கேடு 126, அளவுக்கு மிஞ்சின போஜனம் 276, அறிவுக்கருவிகள் 24.

ஆ

ஆகாரத்தின் பிரயோஜனம் 275, ஆகாரம் 275, ஆகாரம் செய்யும் போது கவனிக்கவேண்டிய விஷயங்கள் 276, ஆசன உதயம் 224, ஆண்குறி 52, ஆண்குறி அசுபாவ எழுச்சி 53, ஆண்குறி சுபாவ எழுச்சி 52, ஆண்குறியில் விம்மலுண்டாகும் விதம் 52, ஆண்குறியின் பிரயோஜனம் 53, ஆண்பெண் சிசு உற்பத்தி விபரம் 134, ஆண்மலடு 91, ஆண்மலடு உண்டாவதின் காரணங்கள் 92, ஆண்மை குறைந்து போகுதல் 92, ஆமணக்கு இலை 254, ஆமணக்கெண்ணெய் 244, ஆளி விரை 253, ஆளிவிரைபோல் டீஸ் 253.

இ

இந்திரியத்தை இறங்கவிடாமல் மேலுக்கேற்றுவதினால் உண்டாகும் ரோகங்கள் 128, இந்திரியத்தைத் தடுப்பதினால் விளையும் கெடுதி (வெண்பா) 128, இந்திரிய நஷ்டமுடையவர்களுக்குக் காணும் வியாதிகள் 183, இந்திரிய நஷ்டமுடையவர்கள் அநுசரிக்கவேண்டிய விதிகள் 84, இந்திரிய நஷ்டம் 82, இந்திரிய நஷ்டம் இன்ன உறுப்புகளின் அசௌகர்யத்தால் விளைந்ததென்பது 85, இந்திரிய நஷ்டம் உஷ்ணத்தினால் காணுவது 83, இந்திரிய நஷ்டம் வாதபித்த சிலேஷ்பங்களினால் உண்டானது 85, இரசம் 32, இரட்டைப்பிரசவம் 226, இரத்த ஓட்டம் 44, இரத்தக் குறைவினா லுண்டான சூதக பந்தம் 71, இரத்தக் குறைவினால் இன்னின்ன ரோகங்கள் உண்டாகுமென்பது 46, இரத்தக்குறைவினா லுண்டான தாதுநஷ்டத்திற்குச் சிகிச்சை 285, இரத்தக்குறைவினா லுண்டான தாது நஷ்டம் 285, இரத்தத்திலுள்ள ஜலம் 42, இரத்தத்தின் தொழில் 42, இருதயத்தில் உயிர் உண்டாவது 29, இருதயத்தின் தொழில் 29, இருதயத்தின் பலஹீனத்தினா லுண்டான தாதுநஷ்டத்திற்குச் சிகிச்சை 287, இருதயத்தின் பலஹீனத்தினாலுண்டான தாது நஷ்டம் 30-287, இருதயம் பலஹீனப்படுவதின் காரணங்கள் 30, இரேதஸ் 56, இரைப்பை 32, இரைப்பை பலஹீனத்தினா லுண்டான தாதுநஷ்டத்திற்குச் சிகிச்சை 288, இரைப்பை பலஹீனத்தினாலுண்டான தாது நஷ்டம் 36-288, இல்லறவாசிகளின் பெருமை 125, இவ்வித மாதர் போகம் கூடாதென்பது 131;



ஈ

ஈரலின் தொழில் 31, ஈரலின் பலஹீனத்தினா லுண்டாகும் ரோகங்கள் 31, ஈரலின் பலஹீனத்தினா லுண்டான தாதுநஷ்டத்திற்குச் சிகிச்சை 293, ஈரலின் பலஹீனத்தினாலுண்டான தாது நஷ்டம் 31-293, ஈரல் இரைப்பையோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பது 31.

உ

உடற்கூறு சாஸ்திரம் 3, உடற்கூறு தத்துவம் 3, உடற்கூற்றில
கணம் 3, உதய ஜலம் 183, உபதம்ஸ ரோகம் 170, உபாத்தியாயர்
களுக்கோர் உபதேசம் 86, உஷ்ணவாயு 288, உருசி 9, உருவம் 26.

ஊ

ஊன் 14-277, ஊன் உண்டல் 277, ஊன் உண்பதினால் உண்டாகும் கேடு 277-278, ஊன்விலக்கல் 278.

ஏ

ஏகாங்கிகள் பல கொடிய வியாதிகளுக் குள்ளாகிறார்களென்பது 124, ஏகாந்தமினிதோ இல்வாழ்க்கை இனிதோ 125.

ஐ

ஐம்புலன்களின் விபரம் 24-25-26-27, ஐம்புலன்கள் 24.

க

கஷ்டப் பிரசவம் 223, கண் 24, கந்தம் 25, கபட ஸ்திரீகளின் புணர்ச்சி என் கூடாதென்பது 132, கரசுரதம் 88, கரு 66, கருக்குழியில் பாசிபற்றியிருப்பதாலுண்டாகும் பெண்மலடு 103, கருக்குழியிற் கிருமி நிற்பதனாலுண்டாகும் பெண்மலடு 103, கருத்தரிக்கும் விபரம் 177, கருத்தரித்த 3-வது வாரத்தில் பிண்டத்தின் நிலமை 184, கருத்தரித்த 7-வது வாரத்தில் பிண்டத்தின் நிலமை 185, கருத்தரித்த 3-வது மாதத்தில் பிண்டத்தின் நிலமை 185, கருத்தரித்த 4-வது மாதத்தில் பிண்டத்தின் நிலமை 186, கருத்தரித்த 5-வது மாதத்தில் சிசுவின்

நிலமை 186, கருத்தரித்த 6-வது மாதத்தில் சிசுவின் நிலமை 186,
கருத்தரித்த 7-வது மாதத்தில் சிசுவின் நிலமை 187, கருத்தரித்த
8-வது மாதத்தில் சிசுவின் நிலமை 187, கருத்தரித்த 9-வது மாதத்
தில் சிசுவின் நிலமை 187, கருப்பற்றியபின் கருப்பையின் நிலமை
181, கருப்பை அகம் புறமாகுதல் 234, கருப்பை இரைப்பையோடு எவ்
விதம் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பது 64, கருப்பை விந்துவைக்
கிரக்கிறதென்பது 62, கருப்பையானது துருத்திக்குச் சமானமென்பது
64, கருப்பையானது பிரஜா விருத்தியை யுண்டுபண்ணும் ஒரு நிலத்
துக்குச் சமானமென்பது 65, கருப்பையானது மலக்குடலுக்கும் மூத்தி
ரப்பைக்கு மிடையில் அமைக்கப்பட்டிருப்பதின் காரணமாவது 63,
கருப்பையானது ரப்பர்போன்ற ஜவ்வுகளால் அமைக்கப்பட்டிருப்ப
தேன் 63, கருப்பையில் இரண்டு மூன்று குழந்தைகள் உண்டாகும்
விதம் 188, கருப்பையில் குளிர்ச்சி யதிகரித்துண்டாகும் சூதகபந்தத்
தின் லக்ஷணம் 72, கருப்பையில் குளிர்ச்சி யதிகரிப்பதினுலுண்டாகும்
பெண் மலடு 100, கருப்பையில் கொழுப்பு அதிகரிப்பதினுலுண்டாகும்
பெண்மலடு 102-103, கருப்பையில் சதை வளர்ந்திருப்பதினுலுண்டா
கும் பெண்மலடு 103, கருப்பையில் சிசு மரித்த லக்ஷணம் 227, கருப்பை
யில் சிலேஷ்ம சத்து அதிகரித்துண்டாகும் சூதக பந்தத்தின் லக்ஷ
ணம் 74, கருப்பையில் சிலேஷ்ம மதிகரிப்பதினுலுண்டாகும் பெண்
மலடு 102, கருப்பையில் சூடதிகரிப்பதினுலுண்டாகும் பெண்மலடு
99, கருப்பையில் சூடு அதிகரிப்பதினுலுண்டாகும் சூதக பந்தத்தின்
லக்ஷணம் 72, கருப்பையில் சோரி கட்டியிருப்பதினுலுண்டாகும்
பெண் மலடு 103, கருப்பையில் பித்த சத்து அதிகரித்துண்டாகும்
சூதகபந்தத்தின் லக்ஷணம் 74, கருப்பையில் பித்தமதிகரிப்பதினு
லுண்டாகும் பெண் மலடு 101, கருப்பையில் வாதசத்து அதிகரித்
துண்டாகும் சூதக பந்தத்தின் லக்ஷணம் 73, கருப்பையில் வாதமதி
கரிப்பதினுலுண்டாகும் பெண் மலடு 100, கருப்பையில் விஷக்காற்று
உண்டாவதினுலுண்டாகும் பெண்மலடு 102, கருப்பையில் வீக்க
முண்டாவதினுல் காணும் சூதகபந்தத்தின் லக்ஷணம் 71, கருப்பையின்
சொற்ப விகற்பத்தையும் இரைப்பை அறிகிறதென்பது 64, கருப்பை



யின் பிரயோஜனம் 65, கர்ப்பங் கரைந்து போகுதல் 204, கர்ப்பு விரா
வம் 204, கர்ப்ப ஸ்திரீகள் கவனிக்கவேண்டிய விஷயங்கள் 209, கர்ப்ப
ஸ்திரீகள் கிரகணகாலத்தில் எப்படி வைக்கப்படுகிறார்களென்பது 147,
கர்ப்பத்திலிருக்கும் சிசு ஆணோபெண்ணோ வென்றறியும் வகை 193,
கர்ப்பந்தரித்த குறிகள் 179, கர்ப்ப பாதம் 204, கர்ப்பப்பரிக்ஷை
கள் 180, கர்ப்பபிரம்ஸம் 82, கர்ப்பமும் பொய்கர்ப்பமும் 180,
கர்ப்பமும் பொய்கர்ப்பமும் கண்டறியும்விதம் 180, கர்ப்பமேகம் 81,
கர்ப்பவதிகளின் இருமல் 195, கர்ப்பவதிகளின் குலையெரிவு 201,
கர்ப்பவதிகளின் நீர் அடைப்பு 200, கர்ப்பவதிகளின் பிரஸவ
காலம் 191, கர்ப்பவதிகளின் மூர்ச்சை 196, கர்பவதிகளின் காலை
வாந்தி 194, கர்ப்பவதிகளின் ஸ்தனமெரிவு 203, கர்ப்பவதிகளுக்கான
ஆகாரவினங்கள் 212, கர்ப்பவதிகளுக்குக்காணும் தலைவலி 20:, கர்ப்ப
வதிகளுக்குண்டாகும் நீர்க்கடுப்பு 199, கர்ப்பவதிகளுக்குக்காணும் மல
பந்தம் 197, கர்ப்பவதிகளுக்குக் காணும் வயிற்றுப்போக்கு 198,
கர்ப்பவதிகளுக்குண்டாகும் கால்வீக்கம் 199, கர்ப்பவதிகளுக்குண்டா
கும் ரோகங்கள் 194, கர்ப்பவதி பயப்படுவதினுலுண்டாகும் கெடுதி
கள் 145-146, கர்ப்பவதி மன ஏக்கமுற்றிருப்பதால் உண்டாகும்
கெடுதிகள் 146-147, கர்ப்பவதி யொன்றின்மேல் அதிகப் பிரியப்
படுவதினுலுண்டாகும் பயன் 147, கர்ப்ப விச்சியுதி 204, கர்ப்பாசயத்தி
லிருக்கும் சிசுவின்நிலமை 188, கன்னிகைகளோடு சோரப்புணர்ச்சி
யேன் கூடாதென்பது 132.

கா

காப்பி 89-274, காமத்துவஜபங்கம் 92, காமநீர் 56, காமம் எவ்
வித முண்டாகிறதென்பது 22.

கி

கிரமநாடி 43, கிரமப்பிரஸவம் 215, கிழவிகளுடன் ஏன் சம்
போகம் செய்யலாகாதென்பது 133.

கு

குஷ்டநோய்க்கிருமிகள் 284, குண்டிக்காய் தூர்பலத்தினுலுண்
டான தாது நஷ்டத்திற்குச் சிகிச்சை 292, குண்டிக்காய் தூர்பலப்படுவ

தினால் உண்டாகும் தாதுநஷ்டத்தின் லக்ஷணம் 39, குண்டிக்காய் மெலிவடைவதற்கான காரணங்கள் 39, குத்து வலியோடு கூடிய சூதகம் 76, குய்யரோகம் 170, குழந்தைகளின் ஆகாரம் 251 குழந்தைக்குப் பால் புகட்டும் கிரமம் 249, குளவி 264, குளிர்ந்த ஜலஸ்நானத்தின் பிரயோஜனம் 275, குளிர்ந்த ஜலத்தில் ஸ்நானம் செய்யும்விதம் 275, குளிர் காய்ச்சல் 235, குறடு 223 - 229, குறிப்பு 204-240.

கை

கைமுஷ்டி 88, கைமுஷ்டியினால் உண்டாகும் வியாதிகள் 90, கைமுஷ்டியைப் பற்றி டாக்டர் கொனண்ட் சொல்லுகிறதாவது 89, கைமுஷ்டியைப்பற்றி டாக்டர் கோப்லாண்ட் சொல்லுகிறதாவது 89, கைமுஷ்டியைப்பற்றி டாக்டர் டேவிஸ் சொல்லுகிறதாவது 89.

கொ

கொருக்கு 170, கொழுப்பு அதிகரிப்பதினாலுண்டாகும் ஆண் மலடு 93, கொழுப்பு அதிகரிப்பதினாலுண்டாகும் பெண் மலடு 102.

கோ

கோசபோக்ஷணி 297, கோசம் 52, கோசலக்ஷணம் 52.

ச

சங்கரதம் 119, சந்துவாதம் 167, சந்துவாயு 167, சப்தவேணு 43, சம்போக சங்கிரகம் 151, சம்போகஞ் செய்யத்தகாத காலங்கள் 130, சம்போகத்திற்கிடையில் வேண்டிய காலத்தின் அளவு 128, சம்போகத்திற்குப்பின் சாப்பிடக்கூடிய பதார்த்தங்கள் 157, சம்போகத்தினால் தீரும் வியாதிகள் 120-124, சம்போகத்தின் பிரயோஜனம் 120, சம்போகத்தை எப்பொழுது நிறுத்தவேண்டுமென்பது 123 சம்போகத்தை முற்றிலும் விலக்குவதினாலுண்டாகும் தீங்கு 123, சம்போகம் 119, சம்போகம் இன்னின்னருக்கு அடுத்தடுத்துக் கூடாதென்பது 130, சம்போகம் ஒருபோதும் கூடாதவர்கள் 130, சம்போகம் செய்யத்தகாத ஸ்திரீகள் 131, சரீரக்கூறுபாடு 3, சருமம் 47, சர்ப்பக்கடி 254, சர்ப்பபாதை விலக்கலும் சத்துருபக்ஷி விருத்தியும் 260.



சா

சாப்பிட்டவுடன் எவ்வித முயற்சியும் என் கூடாதென்பது 36, சாப்பிட்டவுடன் சம்போகம் என் செய்யலாகாதென்பது 36, சாரீரம் 3, சாரீரவியாபார சாஸ்திரம் 3.

சி

சிஸனம் 52, சிசுபரிபாலனம் 242, சிசுவின் ஜீவசக்தி அடங்கியிருப்பது 243, சிசுவைத் திருப்புதல் 225, சிலேஷ்ம இந்திரிய ஒழுக்கு 85, சில்விஷம் 264, சினைக்குழல் கிழிந்து போவதினால் உண்டான பெண்மலடு 99. பெண்மலடு 99, சினைப்பை கிழிந்ததினால் உண்டான பெண்மலடு 99.

சீ

ஜீரணத்தின் ஏற்பாடு 35, ஜீரணமும் ஜீரண உறுப்புகளும் 32, சீழ்மேகத்தின் லக்ஷணம் 161, சீழ்மேகம் 161.

சு

சுகநீர் 54, சுகநீர்க்கோளம் 54, சுகாதாரமார்க்கங்கள் 265, சுக்கில உற் உற்பத்தியைப்பற்றி அநேகருடைய அபிப்பிராயங்கள் 56, சுக்கில உற் பத்தி விபரம் 56, சுக்கிலக்கிருமிகள் 59, சுக்கிலக்கருவிகளில் குளிர்ச்சி யதிகரிப்பதினால் உண்டாகும் கெடுதி 84, சுக்கில க்ஷீணம் 82, சுக்கி லத்தின் தன்மை 58, சுக்கில நஷ்டம் 82, சுக்கிலம் 56, சுக்கிலம் சிரசி ஒண்டாகிறதென்பது 57, சுஷ்கநாடியின் இலக்ஷணம் 43, சுபாவ மலடு 91, சுரதம் 119, சுவப்பன ஸ்கலிதம் 82, சுவை 24.

சூ

சூடு அதிகரிப்பதினால் இந்திரிய நஷ்டமுண்டாகுமென்பது 83, சூதக இரத்தத்தின் அளவு 68, சூதக இரத்தத்தின் தன்மை 68, சூதக இரத்தத்தின் நிறம் 68, சூதகக்கட்டு 70, சூதக ஜன்னி 75, சூதகத் தைப்பற்றி டாக்டர் அட்சிஸன் சொல்லுகிறதாவது 69, சூதகச்சூலை 76, சூதகபந்தத்தின் காரணங்கள் 71, சூதகபந்த ரோகங்கள் 70, சூத கப்பெருக்கு 79, சூதகப்பெருக்கு உண்டாவதின் காரணங்கள் 79, சூதகப்பெருக்கைப்பற்றி சிலருடைய கொள்கை 79, சூதகம் 67, சூதகம் காணும் காலக்கிரமம் 68, சூதகம் முதல்முதல் காணுவதும் முடி

வாய் நிற்பதுவும் இன்னீ வயதிலென்பது 67-68, சூதகம் வெளிப்பட்டுக்கொண்டிருக்கும்போது சம்போகம் ஏன் கூடாதென்பது 131, சூலேக்கட்டு 167, சூலேவாயு 167.

சை

சையோகத்தின் பிரயோஜனம் 120, சையோகம் 119.

ஸ்

ஸ்தன தாபிதம் 238, ஸ்திரீகளுக்குச் சூதகம் உண்டாவதேன் 68, 69, ஸ்திரீ பீஜங்களுக்கும் புருஷ பீஜங்களுக்கும் இடையிலுள்ள வித்தியாசங்கள் 66, ஸ்திரீகள் ஏககாலத்தில் அடுத்தடுத்து சம்போகம் செய்தாலும் புருஷர்களேப்போல் சோர்வடையாமலிருப்பதின் காரணம் 67, ஸ்நானம் 274, ஸ்நானம் செய்யும்போது கவனிக்கவேண்டிய சில முக்கியவிஷயங்கள் 274, ஸ்பரிச நரம்புகள் 24.

ஞா

ஞாபக ஸக்தி 22, ஞானப்பற்கள் 8, ஞானேந்திரியங்கள் 24.

த

தண்ணீர் 272, தந்திமேகம் 161, தலேநோய் 124, தலேபாரம் 124, தலேமுழுக்கு 67,

தா

தாது 56, தாதுக்ஷீணம் 82, தாது நஷ்டத்திற்குச் சிகிச்சைகள் 255, தாது நஷ்டம் 82, தாது நஷ்டம் அளவுக்கு மிஞ்சின சம்போகத்தினுலுண்டானது 127, தாதுநஷ்டம் ஆண்குறி நரம்புத் தளர்ச்சியினுல் உண்டானது 93, தாதுநஷ்டம் இடையில் வெகு நாள் சம்போகத்தை விலக்கியதனுல் உண்டானது 123-124, தாதுநஷ்டம் இந்திரிய நஷ்டத்தினுல் உண்டானது 82-126, தாதுநஷ்டம் இரத்தக்குறைவினுல் உண்டானது 46, 285, தாது நஷ்டம் இருதயத்தின் பலஹீனத்தினுலுண்டானது 30, 287, தாதுநஷ்டம் இரைப்பையின் பலஹீனத்தினுலுண்டானது 36-288, தாது நஷ்டம் ஈரல் பலஹீனத்தினு லுண்டானது 31, தாதுநஷ்டம் குண்டிக்ககாய்களின் துர்பலத்தினு லுண்டானது 39, தாதுநஷ்டம் குளிர்ச்சியினுல் சுக்கிலம் உறைந்துண்டா



னது 84, தாதுநஷ்டம் சிலேஷ்ம இந்திரிய ஒழுக்கினுலுண்டானது 85, தாதுநஷ்டம் சுவப்பன ஸ்கலிதத்தினு லுண்டானது 83, தாதுநஷ்டம் பித்த இந்திரிய ஒழுக்கினுலுண்டானது 85, தாதுநஷ்டம் பிரமேக வியாதியினு லுண்டானது 161, தாதுநஷ்டம் மனோவிகற்பத்தினுலுண்டானது 94, தாதுநஷ்டம் மூளே பலஹீனத்தினு லுண்டானது 23, தாதுநஷ்டம் வாத இந்திரிய ஒழுக்கினு லுண்டானது 85, தாதுவின் விபரம் 56, தாமதப்பிரஸவம் 222, தாயும் பிள்ளேயும் 150, தாய்மார்களுக்கு ஓர்எச்சரிக்கை 245.

தி

திணேபோன்ற வியர்க்குரு ஜுரத்தின் இலக்ஷணம் 235.

தீ

தீவிரநாடி 43, தீவிரநாடியின் இலக்ஷணம் 43.

து

துரித ஸ்கலிதத்தினுலுண்டான தாதுநஷ்டம் 82.

தே

தேக காங்கை 49-50, தேகத்தில் அளவுக்கு மிஞ்சி கொழுப்பு அதிகரிப்பதினுலுண்டாகும் ஆண் மலடு 93, தேகத்தின் மற்ற பாகங்களேப் போலவே ஆண்குறி பீஜம் முதலிய இடங்களேயும், சுத்தமாய் வைக்கவேண்டுமென்பது 50-51, தேகமுயற்சி இன்னின்ன காலங்களில் செய்யவேண்டுமென்பது 282, தேகமுயற்சி 281, தேகமுயற்சி செய்யும்போது கவனிக்கவேண்டிய விஷயங்கள் 282, தேள்கொட்டலுக்கு சிகிச்சை 263, தேள்கொட்டல் 262, தேனீ 264.

தொ

தொப்புள் கொடி 183, தொற்றுவியாதி 273, தொற்றுவியாதி பரவும்விதம் 273, தொற்றுவியாதியை உண்டுபண்ணும் கிருமிகள் 283.

தோ

தோலி 47, தோலின் விபரம் 47, தோல் 47.

ந

நஞ்சு 182, நஞ்சு உதயம் 217, நஞ்சுக்கொடி 183, நஞ்சு தங்குதல் 229, நஞ்சுப்பிடித்தம் 229, நமது சிறிய சத்துருக்கள் 283, நபும்ஸகம் 92.

பும்ஸகம் உண்டாவதின் காரணங்கள் 92-93-94, நம்மவர்களின் தற்கால கொள்கையும் முற்காலக் கொள்கையும் 134.

நா

நாடி 43, நாடிகள் 15 நாதக்குமிழ்கள் 66, நாதக்குழல்கள் 66, நாதம் 66, நாதாசயங்கள் 65, நாபிக்கொடி 183, நாபிக்கொடி பிரசன்னம் 225.

நி

நித்திரை 270, நித்திரை அதிகம் செய்யவேண்டியவர்கள் 271, நித்திரைக்குரிய காலம் 270, நித்திரையின் அளவு 270-271,

நீ

நீர்த்தாரை 53, நீர்த்தாரையின் லக்ஷணம் 54, நீர்வண்டு 264.

நெ

நெடுநாள் சம்போகத்தை நீக்கியதினால் உண்டான ஆண்மலடு 93, நெடுநாள் சம்போகத்தை நீக்கிவைப்பதினால் உண்டாகும்கேடு 124.

ப

பசி 9, பசியாயிருக்கையில் ஏன் சம்போகம் செய்யலாகாதென்பது 36, பஞ்சேந்திரியங்கள் 24, பரஸ்திரீ கமனமும் பல ஆபாசரோகமும் 161, பரஸ்திரீ கமனம் 157, பரிகாசப்பக்ஷி 261, பறங்கிப்புண் 170, பறங்கிரோகம் 172, பனிக்குடம் 184, பனி நீர் 183.

பா

பாண்டுரோகம் 41, பாத உதயம் 225, பாம்புக்கடி 254, பார்வை தெரிதல் 26, பாலில்லாக் குழந்தைகளைக் காப்பாற்றும் விதம் 249, பால் சுரப்பதற்கான முறைகள் 254, பால்ய விவாகம் 110-111, பால் வற்றுவதற்கான முறைகள் 253.

பி.

பிண்டம் 184, பிதாமார்களுக்கோர் விண்ணப்பம் 85, பித்த இந்திரிய ஒழுக்கு 85, பித்த நீர் 34, பிரஷ்டை 67, பிரஸவகால சமையங்கள் 214, பிரஸவகாலம் 191, பிரசவித்திற்குப்பின் சூதகம் வெளிப்பட்டுக் கொண்டிருக்கிற ஸ்திரீகளுடன் ஏன் சம்போகம் செய்யலாகா



தென்பது 131, பிரஸவ நிர்வாகத்தைப்பற்றிய பொதுநிபந்தனைகள் 217, பிரஸவநோய் 215, பிரஸவப்பெரும்பாடு 231, பிரஸவப்பைத்தியம் 237, பிரஸவம் 214, பிரஸவவலிப்பு 236, பிரஸவித்தஸ்திரீயைக் காப்பாற்றும் கிரமம் 240, பிரசூதவேதனை 189, பிரதரரோகம் 79 பிரமியம் 161, பிரமேகக்கட்டி 168, பிரமேகத்திரக்ஷி 168, பிரமேக ரோகம் 161, பிரமேக வாதம் 167, பிராணமோசமான மூர்ச்சை 136.

பீ

பீஜத்தின் ஏற்பாடு 54, பீஜத்தின் பிரயோஜனம் 55, பீஜப்பை 54, பீஜப்பை இதரபாகங்களிலுள்ள சருமங்களைக்காட்டிலும் ஓர் அரிய சக்தியோடு அமைக்கப்பட்டிருக்கிறதென்பது 54, பீஜம் 54.

பு

புணர்ச்சி 119, புணர்ச்சி இன்னின்ன குறிகளுக்குப்பின் நிறுத்த வேண்டுமென்பது 123, புணர்ச்சி இன்னின்னாருக்குக் கூடாதென்பது 130, புணர்ச்சிகளுக்கிடையில் வேண்டிய காலத்தின் அளவு 128, புணர்ச்சிகாலத்தில் உண்டான மனோபயத்தின் பயன் 145, புணர்ச்சிக்குப்பின் சாப்பிடக்கூடிய பதார்த்தங்கள் 157, புணர்ச்சி குரியகாலம் 36, புணர்ச்சிக்குத் தகாத காலங்கள் 130, புணர்ச்சி சாப்பிட்டவுடன் ஏன் கூடாதென்பது 36, புருஷர்கள் சம்போகத்திற்குப்பின் ஏன் சோர்வடைகிறார்களென்பது 67, புலால் மறுப்பு 277, புள்ளிவண்டு 264

பெ

பெண்குறியின் பேதத்தினாலும்தாது விருத்தியும் தாது நஷ்டமும் உண்டாகுமென்பது 83, பெண்மலடு 97, பெண்மலடு உண்டாவதின் காரணங்கள் 98-99, பெண்மலடு ரோகலக்ஷணங்களைப் பற்றி ஆயுர்வேதத்தில் சொல்லியிருப்பதாவது 102, பெரும்பாடு 79, பெரும்பாடு உண்டாவதின் காரணங்கள் 79.

பொ.

பொய்கர்ப்பத்தைக் கண்டறியும்விதம் 181, பொய்கர்ப்பம் 180, பொய்நோய் 215, பொரிவண்டு 54, பொரிவண்டுகடித்தல் 264.

போ

போக இச்சை யெவ்விதம் உண்டாகிறதென்பது 22, போகசக்தி நஷ்டமடைந்தவர்களின் பரிதாபநிலை 90, போகசக்தியைக் குறைக்கும் கிரியைகள் 305, போகத்திற்குப் போதிய பருவம் 121, போகத்தின் பிரயோஜனம் 119, போகம் 119, போகம் யாவருக்கும் அவசிய மென்பது 119, போகிக்கவேண்டும்போது போகிக்காததினால் உண்டாகும் தீங்கு 124, போஜனத்தின அளவு 276, போஜனம் 275, போஜனம் செய்யும்போது கவனிக்கவேண்டிய விஷயங்கள் 2‹6.

ம

மதஜலம் 56, மலடு 9.-97, மலடு உண்டாவதின் காரணங்கள் 92-98, மனதிற்கு நேரிடும் அகஸ்மாத்தான விஷயங்களினால் இயற்கைக்கு அதிகமான பலம் உண்டாகிவிடுமென்பது 95, மனோசக்தி 96.

மா

மாதர்களின் பரிதாப நிலை 114, மாதவிடாய் 67, மாதவிடாய் காண வேண்டிய காலம் 68, மாதாந்தர ஸ்நானத்திற்குப் பின் ஸ்திரீகள் செய்ய வேண்டியதாவது 142, மாதாந்தர ருது 67.

மி

மிதமிஞ்சின புணர்ச்சியினால் ஆத்மாவின் தத்துவம் குறையு மென்பது 126, மிதமிஞ்சின புணர்ச்சியினால் உண்டாகும் வியாதிகள் 127, மிதமிஞ்சின புணர்ச்சியினால் ஜீவாக்கினி குறையு மென்பது 126, மிதமிஞ்சின புணர்ச்சியினால் சுக்கிலத்தின் தத்துவம் குறையு மென்பது 127.

மு

முஷ்டிமைதுனத்தினால் இன்னின்ன வியாதி உண்டாகு மென்பது 90, முஷ்டிமைதுனத்தினு லுண்டான தாதுநஷ்டத்திற்கு சிகிச்சை 295, முஷ்டிமைதுனத்தினால் உண்டாகும் தாதுநஷ்டம் 90, முஷ்டிமைதுனத்தைப்பற்றி டாடர் கோப்லாண்ட் சொல்லுகிறதாவது 89, முஷ்டிமைதுனத்தைப்பற்றி டாக்டர் கோனண்ட் சொல்லுகிறதாவது 89, முஷ்டிமைதுனத்தைப்பற்றி டாக்டர் டேவிஸ் சொல்லுகிறதாவது 89, முஷ்டிமைதுனம் 88, முடக்கு வாதம் 167,



முப்பது வயதுவரையில் ருதுவாகாத ஸ்திரீகள் 69, மூலைக்காம்பு விரணம் 239.

மூ

மூத்திர குண்டிக்காய் 38, மூத்திர குண்டிக்காய்களின் பிரயோஜனம் 38, மூத்திர குண்டிக்காய்கள் துர்பலமடைவதினால் உண்டாகும் தாது நஷ்டம் 39, மூத்திர குண்டிக்காய்கள் மெலிவடைவதற்கான காரணங்கள் 39, மூளை ஆண்குறியோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பது 22, மூளை இருதயத்தோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறது 22, மூளை தேகத்தோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பது 21, மூளை நரம்புகளோடு எவ்விதம் சம்பந்தப்பட்டிருக்கிறதென்பது 22-23, மூளை பலஹீனத்தினாலுண்டான தாது நஷ்டத்திற்கு சிகிச்சை 301, மூளை பலஹீனத்தினாலுண்டான தாதுநஷ்டம் 23, மூளை பலஹீனப்படுவதற்கான காரணங்கள் 23, மூளையை மற்ற உறுப்புகளைவிட ஜாக்கிரதையோடு ஏன் காப்பாற்றி வரவேண்டுமென்பது 21-22.

மெ

மெய்நோய் 215, மெய்நோய்க்கும் பொய்நோய்க்கும் இடையிலுள்ள சில வித்தியாசங்கள் 215.

மே

மேக காங்கை 161, மேகச்சூடு 161, மேகச்சிரங்கு 172, மேகச்சொறி 172, மேகப்படை 172, மேகப்பிடிப்பு 167, மேகப்புண் 170, மேகவாதம் 167, மேகவாயு 167, மேகவிரணம் 170.

ர

ரசாயனி 33, ரத்த அணுக்கள் 41, ரத்த ஓட்டம் 44, ரத்தம் 40.

ரு

ருசி 8-32, ருசி உண்டாகும் விதம் 24, ருதுவர்த்தனகாரி 200.

ரூ

ரூப உற்பத்தி சவ்வு 26, ரூபம் 26, ரூபம் உண்டாகும் விதம் 26

லி

லிகிதபக்ஷி 260, லிகிதபக்ஷி பாம்பை யடிக்கும் விதம் 260.

வ

வஸ்திரம் 279, வண்டு கடி 265, வம்க்ஷணஸ்தான வித்திரதி 168

வா

வாசனை 25, வாசனையை யறியும் விதம் 25, வாத இந்திரிய
ஒழுக்கு 84, வாதச்சூலை 167, வாதரோகம் 167.

வி

விகாரமான சூதகம் 78, விஷத்திற்கு மெய்யான மந்திரம் 257, விஷ
பேதிக்கிருமிகள் 184, விஷஜ்வரரோகம் 273, விடபக்கிழிவு 234,
விதவைகளின் பரிதாபம் 112, விதவைகளின் விகாரம் 112, விந்தில்
குளிர்ச்சி யதிகரிப்பதினாலுண்டாகும் தாதுநஷ்டம் 84, விந்தில் சூடதி
கரிப்பதினாலுண்டாகும் தாதுநஷ்டம் 83, விந்தில் சிலேஷ்மம் அதி
கரிப்பதினாலுண்டாகும் தாதுநஷ்டம் 85, விந்தில் பித்தம் அதிகரிப்ப
தினால் உண்டாகும் தாதுநஷ்டம் 85, விந்தில் வாதம் அதிகரிப்பதினா
லுண்டாகும் தாதுநஷ்டம் 85, விந்தின் சக்தி குறைந்துண்டான ஆண்
மலடு 93, விந்தின் பெருமை 59, விந்து 56, விந்து உற்பத்தியாகும்
விதத்தைப்பற்றி பலருடைய அபிப்பிராயம் 56-57, விந்துக்கிருமி
59, விந்துக்குழல்கள் துண்டிக்கப்படுவதினால் புத்திர சம்பத்துண்டாகா
தென்பது 58, விந்து ஸ்கலித அளவு 58, விந்து நஷ்டம் 82, விந்து
முக்கியமாய் மூளையில் உண்டாகிறதென்பதற்குப் பல திருஷ்டாந்தங்
கள் 57, விந்து வாகியின் லக்ஷணம் 56, விந்துவானது தேகபலமும்
மனோபலம் முதலியவைகளுக்கு ஆதாரமென்பது 126, விந்துவின்
சுபாவலக்ஷணப் பரிக்ஷை 58, விந்துவை அடக்குவதினா லுண்டாகும்
அபாயங்கள் 127, விந்துவைப் பீச்சாங்குழலால் கருப்பைக்குள் செலுத்
தினும் கருத்தரிக்குமென்பது 178, விவாகஞ் செய்யத்தகாத குடும்
பங்கள் 118, விவாகமும் தேசாச்சாரமும் 109, விவாகம் 105, விவா
கம் குடித்தன விஷயத்திற்காகமட்டும் ஏற்பட்டதல்ல வென்பது 105.

வீ.

வீட்டுதூரம் 67, வீட்டுவிலக்கம் 67, வீரிய நஷ்டம் 82, வீரியம் 56.

வெ.

வெகுகாலம் போகத்தை நீக்கிவிட்டதினால் கோசம் தளர்ந்துண்
டான தாதுநஷ்டம் 93, வெட்டை 161, வெள்ளை 161.



உயர்ந்த மருந்துகள்! குறைந்த விலைகள்!!



பால சஞ்சீவி மாத்திரை:—இது குழந்தைகளுக்
குக் காணுகிற, ஜலுப்பு, ஜுரம், நீர்க்கோர்வை, மார்ச்
சளி, இருமல், இழுப்பு, மூச்சுமுட்டல், தோஷம், வயி
ற்று உப்புசம், பெருமூச்சு, கண்சொருகல், மலபந்தம்,
மூலையுண்ணுமை முதலியவைகளைப் போக்குவதில் கைகண்
ட சஞ்சீவி! 50-மாத்திரை கொண்ட சீசா 1-க்கு விலை
அணா 8. இந்தியாவுக்கும், பர்மாவுக்கும் 1-முதல் 6-சீசாக்
கள் வரையிலும் வி. பி. செலவு அணா 4-பிரத்தியேகம்.



காலரா கண்டனம் அல்லது விஷபேதிக்கு
விலையுயர்ந்த மருந்து.—அஜீர்ணபேதி, விஷ
பேதி முதலியவைகளுக்கு இது ஓர் அரிய சஞ்
சீவி! மற்றெல்லா மருந்துகளைக் காட்டிலும்
உடனே குணம் தரக்கூடியது, ஒவ்வொரு வீட்
டிலும் ஒவ்வொரு புட்டி இருக்கவேண்டியது
அவசியம். புட்டி 1-க்கு விலை ரூபா 1. டஜன் 1-க்கு, ரூபா 10-0-0.



பாலசஞ்சீவி எண்ணெய்.—இது குழந்தைகளுக்
குக் காணும் மாந்தம், இசிவு, ஜுரம், வயிற்றுவலி, வயிற்
றுப்பொருமல், வாயுக்கட்டி, குலைக்கட்டி, மலச்சிக்கல்,
கணச்சூடு முதலியவைகளைப் போக்கி ஆரோக்கியத்தைக்
கொடுக்கும். உபயோகிக்கும் விபரம் மருந்துடன் அனுப்
பப்படும். புட்டி 1-க்கு ரூ. 2. ஒன்றுமுதல் இரண்டு புட்டி
கள் வரையில் அனுப்ப இந்தியா, பர்மா, முதலிய விடங்
களுக்குத் தபால் சார்ஜ் அணா 4. பிரத்தியேகம்.



அமிர்தாமலக தைலம்.—இதைப் பழைய ஜுர
ங்கள், பித்தாதிகம், உடம்பெரிவு, கண்கூசல், உஷ்
ணம், ஞாபகமறதி, மண்டையிடி, தலைநோய், ஒற்றைத்
தலைநோய், மேகம், வாந்தி, அரோசகம், கிறுகிறுப்பு,
இரத்தசோகை, மூலம், பவுத்திரம், வெள்ளை, பெரு
ம்பாடு, உதிரச்சிக்கல், யோனி ஸ்ராவம், கரு வழிவு,
காதுநோய், காதில் சீழ்வடிதல், பீனசம் முதலிய
ரோகங்களுக்கு வாரம் இருமுறை ஸ்நானம் செய்வதி
னால் சுகுணமாகும். 16-அவுன்ஸ் கொண்ட டின்
1-க்கு விலை ரூ. 2. இந்தியா, பர்மா, சிலோன் முத
லிய விடங்களுக்குப் தபால் சார்ஜ் அணா 6. பினாங்கு, சிங்கப்பூர்
முதலிய அயல் நாட்டார்கள் தபால் சார்ஜ் உள்பட டின் ஒன்றுக்கு
4-ஷில்லிங் முன் பணமாக அனுப்பவேண்டும்.

விலாசம்:—என். ஆர். டிஸ்பென்ஸரி, கும்பகோணம்.

16/5/95



## உயர்ந்த மருந்துகள் ! குறைந்த விலைகள் !!



நயன காந்தாமிர்தம் :—கண்நோய், கண்குற்றல், கண்கூசல், கண்ணில் நீர்வடிதல், கண்மூங்கல், அந்திமாலை, மாமிசம் வளர்தல், பூவிழுந்திருத்தல், கண்ணிமை, புருவம், விழி இவைகளின் குற்றல், வலி முதலிய நேத்திர ரோகங்களுக்கு இந்த மாத்திரையை 10-நாள் உபயோகிப்பதினால் பூர்ண சுகத்தைக் கொடுக்கும். 4-மாத்திரை கொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2. இந்தியா, பர்மா முதலிய விடங்களுக்கு 1-முதல் 6-சீசாக்கள் வரையிலும் அனுப்ப வி.பி. செலவு அணா 4 பிரத்தியேகம்.



தந்தகாந்திச் சூரணம், அல்லது பல்லிறுகும் பற்போடி :—இந்தப் பல்பொடியை உபயோகிப்பதால், தந்தசூலை, பற்கூச்சம், பல்லசைவு, இரத்தம் வருதல், சீழ்வடிதல், வாய்ப்புண் முதலிய தந்தரோகங்கள் எல்லாம் நீங்கும். பல்லை நன்றாகச் சுத்தம்செய்யும், பல்காவியேறாது. உபயோகித்தால் இதன் குணம் தெரியும், 3-மாதம் உபயோகிக்கக்கூடிய டின் 1-க்கு அணா 4, டஜன் 1-க்கு ரூ. 2-8-0 இந்தியா, பர்மா முதலிய விடங்களுக்கு 1-முதல் 6-டின்கள் வரையில் அனுப்ப வி. பி. சிலவு அணா 4-பிரத்தியேகம்.



*தலைவலித்திராவகம்.—இதை மண்டையிடி, கபால வாயு, ஒற்றைத்தலைவலி, இரண்டுபக்கம் தலைவலி, பித்தத் தலைவலி, உஷ்ணத்தினால் உண்டாகும் தலைவலி, இன்னும் எக்காரணத்தினால் உண்டான தலைவலியா யிருப்பினும் இம்மருந்தைத் தடவுவதினால் ஐந்து நிமிஷத்திற்குள் சுகுணமாகும். புட்டி 1-க்கு அணா-6. டஜன் 1-க்கு ரூ. 4.

*சர்வப்படை சம்ஹாரி:—இடுப்பு, தொடையின் இடுக்கு முதலிய இடங்களில் உண்டாகி அசாத நமச்சலைத் தந்து, வெகுசீக்கிரத்தில் மற்ற இடங்களில் படரும் மேகப்படை, சொறி சிரங்கு, தடிப்புப்படை, தேமல் முதலியவைகளை அடியோடு குணப் படுத்தும். சீசா 1-க்கு விலை அணா 4. 1 டஜன் ரூ 2-8-0.

*கர்ணாரட்சணி:—காதில் சீழ் வடித்தல், வலி, குத்தல், குடைச்சல், காதடைப்பு, இரைச்சல், செவிடு இவைகளைக் குணமாக்கும். செவி நன்றாய்க் கேட்கும். சீசா 1-க்கு விலை அணா 8.

*இந்த அடையாளமுள்ள மருந்துகள் 1 முதல் 6-புட்டிகள் வரையில் அனுப்ப இந்தியா, பர்மா முதலிய விடங்களுக்குத் தபால் சார்ஜ் அணா 3.

---

விலாஸம்.—மானேஜர், என். ஆர். டிஸ்பென்ஸரி, தும்பகோணம்.

68927